உ

# மெய்கண்ட நூல்கள்

## ( உரைநடை )


ஆசிரியர்:

கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L.,

அட்வகேட்,

தாகூர் சட்ட விரிவுரையாளர்,

திருநெல்வேலி.



பதிப்பாளர்:

கீ. நாராயணசாமி முதலியார் அவர்கள்,

(Retired Dpty. Registrar of Co-operative Societies)

தலைவர்,

தொண்டை நன்னாட்டுச் சைவ சித்தாந்தக் கழகம்,

காஞ்சீபுரம்.

காஞ்சீபுரம்

குமரன் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1938

விலை ரூ. 1-12-0

தொண்டை நன்னாட்டுச்
சைவ சித்தாந்த கழகத்திற்காக
காஞ்சீபுரம்
"குமரன் அச்சகத்தில்"
பிரசுரிக்கப்பட்டது.
பிரதிகள்: 1000.

# பதிப்புரை.

சைவ சித்தாந்தத்தின் உண்மைகளை ஆராய்ச்சி முறையில் அங்கை நெல்லிக்கனியென விளக்குவன சித்தாந்த சாத்திரம் எனப்படும் மெய்கண்ட நூல்கள் பதினான்குமே. அவை நம் தாய்மொழியாகிய தமிழ் நூல்களாகவே இருப்பினும், தமிழை மிகப் பயிலப்பெறாத இந்நாளில், அவற்றின் கருத்துக்கள் பெரும்பாலார்க்கு அறிதற்கரியனவாயிருக்கின்றன. ஆதலின், அந்நூல்களை உரை நடையாக எழுதி வெளியிடுதல் நலமாகுமென்று யான் கருதினேன். என் கருத்தைச் சென்னை சைவ சித்தாந்த சமாஜத்தின் அமைச்சர் சைவத் திருவாளர் M. பாலசுப்பிரமணிய முதலியார் B.A., B.L. அவர்கள் ஆமோதித்தார்கள்.

அக்கருத்தை முற்றுவிக்க இறைவன் திருவுளம் பற்றினன்போலும் என்னுமாறு திருநெல்வேலி உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M.A. M.L., அவர்களைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது யானும் உயர்திரு. பாலசுப்பிரமணிய முதலியாரும் அவர்களுக்கு எங்கள் கருத்தைத் தெரிவித்து அதனை எழுதித்தரும்படி வேண்டினோம். அவர்கள் அதற்கிசைந்து இந்நூலை எழுதித்தந்தார்கள்.

யான் சின்னாட்களாகக் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள தொண்டை நன்னாட்டுச் சைவசித்தாந்தக் கழகத்தில் தலைமை ஏற்று அதனை நடத்தித் தொண்டாற்றி வரும் பேறு பெற்றுள்ளேனாதலின், அக்கழகத்தின் சார்பில் இதனை வெளியிடக் கருதி அவ்வாறே செய்ய, இறைவன் திருவருளால் இந்நூல் விரைவில் வெளிவருவதாயிற்று.

இதனை எழுதித்தந்த திருமிகு பிள்ளையவர்களது கலைத் துறைவன்மையும், தமிழும் சைவமும் தழைத்தினி தோங்கச் செய்தலை தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ள மனப்பான்மையும் உலகமறிந்தவையாகலின், அவற்றைப் பற்றி யான் புகழ்ந்தெடுத்துரைப்பது மிகையாகும். அவர் கட்கு இத்தகைய செயலைச் செய்தற்கண் மனவெழுச்சியுளதா தல் இயல்பே. எனினும் எங்கள் சொல்லை ஏற்றுக் கூடிய வரையில் இந்நூலை நன்கு எழுதித்தந்த டீ. உயர்திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு இக்கழகம் என்றும் மறவா நன்றியறியுங் கடப்பாடுடையது.

இந்நூலை அச்சிடுங்கால், தமது பல வேலைகளுக்கிடை யில் கிடைத்த நேரங்களில் அச்சுப்பிழைகளை ஆராய்ந்து திருத்தித்தந்த, சித்தாந்த சாத்திரப் பயிற்சியும் தமிழ் சைவங்களின் வளர்ச்சியில் ஆர்வமும் மிக்கவராகிய காஞ்சி புரம் மெய்கண்டார் கழகச் செயலாளரும் காஞ்சிபுரம் பச்சை யப்பன் உயர்நிலைப்பள்ளி ஆசிரியருமான திருமிகு. க. வச்சிர வேலு முதலியார் B.A. L.T., அவர்களுக்கு இக்கழகத்தின் நன்றி உரியதாகின்றது.

இந்நூல் இனிது வெளிவருமாறு செய்வித்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளை எண்ணி இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

கீ. நாராயணசாமி முதலியார்,

தலைவர்,

தொண்டை

நன்னாட்டுக்கழகம்.

மெய்கண்டான் யாண்டு எகஅ

(வெகுதானிய) மார்கழி

"காவிரி அகம்"

காஞ்சிபுரம்.

# முன்னுரை

பண்டைத் தமிழ் நன்மக்களது கடவுட் கொள்கையினை முற்றிலும் அறிந்துகொள்ளுவதற்குப் போதிய நூல்கள் கிடைத்தில எனினும், அது இத்தகையதென்று உய்த்துணர் தற்கு வேண்டுங் குறிப்புக்கள் இன்றும் உள்ளன. கடவுள், உயிர், மெய் என்ற மூன்று சொற்கள் இலக்கண நூலுள்ளும் இனிது வழங்குதலை நோக்குமிடத்து, இம்மூன்றினியல்பினை நம் முன்னோர் நன்கறிந்தவரென்பது புலனாம். கடவுள் என்ற சொல் பேரறிவுப் பெரும்பொருளையும், உயிர் என்னுஞ் சொல், சிற்றறிவுடையன பலவற்றையும், மெய் என்பது உடம்பையும் உணர்த்தும். உடம்பு அறிவிலாப்பிண்டமாய உலகத்தின் பகுதியேயாம்.

உடம்பும் உலகமும் முப்பத்தாறு முதற்பொருள்களால் ஆயவை யென்பதை நமது முன்னோர் உணர்ந்திருந்தனர். "முத்தர்த முத்தி முதல் முப்பத்தாறே" என்றதும் அது. அம்முப்பத்தாறும் உடம்பினுள் அடங்குதலின் உடம்பைக் குறிக்கும் மெய்யென்ற சொல்லை அம்முதற் பொருள்களுக் கும் வழங்கவே, மெய்யென்னும் பொருளுடைய தத்துவம் என்ற சொல்லை அம்முப்பத்தாறையுங் குறிக்க வடநூலார் பயன் படுத்தினர். ஆதலின் தத்துவம் முப்பத்தாறு என்று பேசுதல் மரபாயிற்று. முப்பத்தாறு தத்துவத்தின் தொகுதியே உலகம் ஆகலின் கடவுள், உயிர், மெய் எனினும், கடவுள், உயிர், உலகம் எனினும் ஒக்கும்.

என்றுமுள்ள முப்பொருளைக் குறிக்கும் கடவுள், உயிர், மெய்யென்ற பழந்தமிழ் வாய்பாடு பிற்காலத்தே சிறிது மாற்ற முற்றது. இம்முப்பொருள்களின் தொடர்பை விளக்கத்

கருதிய பெரியார், கடவுள் உயிர்க்குயிராய் உயிர் தோறும் பதிந்து அவற்றை இயக்கு முதல்வனாதலின் அவனைப் பதி யென்று வழங்கினர். உயிர்கள் சிற்றறிவுடையனவாய் ஒரு தலைவனை உடைமையால் அவைகள் மனிதன் நடத்தும் மாக்கள்போல்வன. அம்மாக்களுட் சிறந்தவை பசுக்களாதலின், அன்னோர் உயிர்களைப் பசு என்ற மரபுச் சொல்லால் வழங்க லாயினர். 'ஏழையரிருகாற் பசுக்கள்' என்றதுமது. உயிர் கள் கடவுளை அறிய வொட்டாமல் அவற்றின் அறிவினை மறைக்கும் மலமும், வினையும், சடவுலக மூலமாகிய மாயை யும் நீரினை மறைக்கும் பாசம் போலுதலின் அவைகள் பாச மெனப்பட்டன.

வையகத்துருவினர் மலரா அறிவினைப்
புலனிரை மறைத்த புணர்ப்பது போலக்
குளிர்கொண்டுறையுந் தெளிநீர் வாவியைப்
பாசடை மறைக்குங் கூடற் பெருமான். (கல் 9)

என்ற கல்லாடச் செய்யுட் பகுதியுள் இக்கருத்து அமைந்திருத்தல் காண்க. ஆகவே, கடவுள், உயிர், உலகம் என்ற வாய்பாட்டிற்குப் பதிலாகப் பதி, பசு, பாசம் என்ற வாய்பாடு வழக்கிலமைந்தது. வடநூலார் பதியென்பது தலைவனையும் பசுவென்பது மும்மலப் பிணிப்புற்ற உயிர்களை யும், பாசமென்பது உயிரினைப் பிணித்த மும்மலத்தையு முணர்த்துமென்ப. இவ்வாய்பாட்டினை இறை, உயிர், தளை யென வடநூற்போக்கிற்கு ஏற்பச் செந்தமிழ் மொழியா லுணர்த்துதலுமுண்டு.

மாய், ஆ என்ற இருசொற்கள் சேர்ந்து மாயா என்றும், அது எல்லாச் சடப்பொருள்களும் ஒடுங்குதற்கும் மீட்டுந்

தோன்றுதற்கும் அடிப்படையான சடமூலமெனப் பொருள் படும்.

மாய்தல் என்பது மறைதல், அழிதல், ஒடுங்குதல் என்ற பொருளுடைமையால், எல்லாம் ஒடுங்குதற்கு இடமாவது எதுவோ, அது மாயையெனப்பட்டதென்பாருமுளர். எவ்வாறாயினும் அச்சொல் தமிழென்பது தெளிக. கடவுள், உயிர், மாயா அல்லது மாயை என்ற வாய்பாடுங் கொள்ளற்பாலதே.

கடவுளைச் சிவமென்ற பெயராற் சிறப்பாக வழங்குதல் தமிழர் மரபு. சிவமென்ற சொல் வடமொழியிற் புகுந்தபின் சிவனது தொடர்பைக் குறிப்பதற்குச் சைவம் என்ற சொல் எழுந்தது. சைவம் என்ற சொல்லை, 'சை' என்பதனடியாகப் பிறந்த தமிழ்மொழியாகக் கொள்ளுவாருமுளர். சை = செல்வம். சைவன் = செல்வன் "செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே", என்பதனுள் அக்கருத்து விளங்குதல் காண்க.

சித்து என்ற சொல், சிற்று, என்பதன் மருஉவாகும். சிறு என்பதனடியாய்ப் பிறந்த அம்மொழி, நுட்பமானது என்ற பொருளுடையது. சிற்றம்பலம் என்றவிடத்தும் அப்பொருள் போந்தமை காண்க. அற்றம் என்ற சொல் முடிபினைபுணர்த்தும். அது அந்தமென மருவிப்பின் அந்தமென்றாயிற்று. சித்து, அந்தம் என்ற இரண்டு சொற்களும் புணருங்கால் ஒசை நயத்தின் பொருட்டுச் சித்தாந்தமென்றாயின.

சிவநெறிச் சார்பான நுட்பமான முடிபுகளையுடைய தெதுவோ அது சைவசித்தாந்தமெனப்படும். இங்ஙனம்

பொருள்கோடல் தமிழ்முறை. 'சித்த', 'அந்தம்' என்பவற்றை வட சொற்களாகக் கொள்ளுமிடத்து, சித்தாந்தம் என்பது முடிந்த முடிபெனப்பொருள்படும். பிற சமயங்களின் முடிபுகளுக்கு மேற்பட்ட முடிபாயுள்ளது சித்தாந்தம் எனப்படும். வேதாகமப் பொருளொருமை காண்பார், வேதத்தின் முடிபு வேதாந்தம்; வேதாந்தத்தின் முடிபு சித்தாந்தமாதலின் "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்" என்றார். சைவசித்தாந்தமென்னுஞ் சொற்றொடர் திருமூலமா முனிவர் திருமந்திர நூலுட்டெளிவாகக் காணப்படுகின்றது.

கற்பன கற்றுக்கலை மன்னுமெய்யோக
முற்பத ஞானமுறை முறை நண்ணியே
தொற்பதமே வித்துரி சற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவ சித்தாந்தரே,

பட்டினத்தடிகள் பதினோராந் திருமுறையுள் "சைவ சித்தாந்தத் தெய்வ ஆகமத்தை", என்றது காண்க. சைவ சித்தாந்தக் கொள்கைகள் தொல்காப்பியம், திருவள்ளுவர், சங்க இலக்கியங்கள் என்பவற்றுட் குறிப்பாகவும், பன்னிரு திருமுறைகளில் வெளிப்படையாகவும் அறியக்கிடப்பன. அவற்றைப் பிற்காலத்தில் செவ்விதிற்றொகுத்தும் வகுத்தும் விரித்தும் நூன்முறையாக அறிவுறுத்தும் பனுவல்கள் பலவாயினும் அவற்றுட் சிறந்தவை, மெய்கண்ட நூல்கள் பதினான்குமேயாம். அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, கொடிக்கவி, போற்றிப்பஃறொடை, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் என்பன.

உந்திகளிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

இவற்றுள் திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் செந்தமிழ் அருள் நூல்களை ஆதாரமாகக் கொண்டு சிறந்த சிவானுபவப் பயனைப் பிளிர்வன. தமிழரது சிவநெறிக்கும் வடநூற் சார்பால் எழுந்த ஏனைய சமயங்களுக்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு எடுத்துக்காட்டி முன்னையதன் உயர்வை நிலை நாட்டற்பொருட்டு இயற்றப்பட்ட நூல்களுள் தலை சிறந்தது சிவஞானபோதம். அதன் பொருளை விரிக்குமுகத்தான் பிறசமயக் கொள்கைகளைக் கூறி மறுத்தற்குரியவற்றை மறுக்கும் புறப்பகுதியாய பரபக்கமும், சித்தாந்த உண்மை தெரிக்கும் அகப்பகுதியாய சுபக்கமும் ஆக இரு பகுதியுடையதாய் இயற்றப்பட்டது சிவஞான சித்தியார். பரமாசாரியராகிய மெய்கண்ட தேவ நாயனாரை வழிபட்டு வினாவுமுகத்தான், சித்தாந்த நுட்பங்களை விரித்து உணர்த்துவது இருபாவிருபஃது என்னும் நூலாகும். முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பையும், உயிர், பதி, என்பவற்றின் தன்மையையும், திருக்கூத்தின் பொருளையும், ஐந்தெழுத்துண்மை கூத்தப்பெருமான் திருவடியில் இலங்குமுறையையுஞ் சுருக்கமாகவுந் தெளிவாகவும் ஒவ்வொரு வாக்கியத்தால் உணர்த்தும் நூல் உண்மைவிளக்க மெனப்படும். சிவப்பிரகாசம் உயிர்களின் பெத்தமுத்தி நிலைகளை விளக்குமுகத்தான் சைவசித்தாந்த உண்மைகளைத் தொகுத்துத் திரட்டுவது. திருவள்ளுவர் நூல்போலக் குறள் வெண்பாவினால் அமைந்து மெய்யுணர்ச்சியைப் பத்து அதிகாரத்தால் இனிது

விளக்கும் வீட்டின்பால் வடிவாயது திருவருட்பயன். காட்சி, காட்டுவது, காண்பான் என்பவற்றின் நுண்ணிய இயல்பைக் கேள்வி வாயிலாக உணர்த்துவது வினாவெண்பா. கூத்தப் பெருமானைக் குறையிரக்கு முகத்தான் அனுபவப்பயனைத் தெரிவிக்கும் நூல் போற்றிப் பஃறொடையாகும். தில்லையிற்கொடியேற்று முகத்தான் ஞான தீக்கைச் சிறப் புணர்த்தும் நூல் கொடிக்கவியெனப்படும். குருவடிவாய் இறைவன்பால் நெஞ்சைத் தூதுவிடுக்கும் வாயிலாக ஞான நெறியின் முறையைத் தெரிவிப்பது நெஞ்சுவிடுதூது. சைவசித்தாந்தத்துட் பேசப்படும் தசகாரியமாகிய பத்தும் உண்மைநெறிவிளக்கத்துள் தெள்ளிதின் ஓதப்படும். மாயா வாத மதத்தையும் சிவஞானசித்தியார் பரபக்கத்துட் கூறப் படாதனவாகிய அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள், என்பவற்றையும் எடுத்தோதி மறுத்து, அவற்றிற்கும் சைவ சித்தாந்தத்திற்குமுள்ள வேறுபாட்டை நுண்ணிதின் உணர்த்தும் இறுதி நூல் சங்கற்பநிராகரணமாகும்.

மேற்கூறிய ஒவ்வொரு நூலிலும் பல உண்மைகள் பலவாறாக ஓதப்பட்டிருத்தலின், சைவசித்தாந்தக் கருத்துக் களை முற்றிலும் அறியவேண்டுவார் பதினான்கு மெய்கண்ட நூல்களையுங் கற்றுணர்தல் அவசியமாகும். அவை இலக்கண இலக்கிய நயஞ்செறிந்த செய்யுள் வடிவாயிருத்தலின் அவற் றின் பொருளை எளிதாக யாவர்க்கும் இனிதுவிளக்கும் உரை நடை நூலாக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலுள் முதற்கண், திருவுந்தியார் முதலியவற்றுட் போந்த அகப் பகுதிக் கருத்துக்களும் இறுதியாகச் சிவஞான சித்தியார் பரபக்கம் சங்கற்ப நிராகரணம் என்பவற்றுட் பேசப்படும் பிறசமய மதமறுப்புக்களும் எடுத்தியம்பப்படுவன. சிவ

ஞான சித்தியார் சுபக்கத்தாள் தத்துவக் கருத்துக்களைத் தெரிக்குந் தமிழ்ச்சொற்றொடர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுட் போந்த குறைகளை அறிஞர் நிரப்புவாராக.

இந்நூலினை அச்சியற்றுவிக்கும் பெருமை தொண்டை நன்னாட்டுச் சைவசித்தாந்தக் கழகத்தலைவராகிய சைவத் திருவாளர் கி. நாராயணசாமி முதலியார் (Retired Deputy Registrar of Co-operative Societies and Special Magistrate) அவர்களுக்கே உரியது. சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதில் தலை நின்று அவர்கள் செய்யும் நன்முயற்சிகள் யாவும் தழைத்தோங்குவனவாகுக. கைம்மாறு கருதாது அவர்கள் அளிக்கும் பெருநன்றிக்குத் தமிழுலகம் என்றுங்கடமைப்பட்டுள்ளது.

இந்நூலினை மூலத்தோடு ஒத்துப்பார்த்து ஒழுங்கு செய்வதற்குப் பெருந்துணை புரிந்தவர் தற்காலத்தில் சைவ வானில் இணையற்ற இளங்கதிரவனாயிலங்குந் தமிழன்னையின் தவப்புதல்வராகிய காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளிக் கணித ஆங்கிலப் பேராசிரியர் திருவாளர் க. வச்சிர வேலு முதலியார் (வயிரவேலவனார்) அவர்கள் ஆவர். அவர்களது செந்தமிழ்ச்சிவத்தொண்டு நீடூழி நிலைபெறும் பொருட்டு இறைவன் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

**கா. சுப்பிரமணிய பிள்ளை.**

| | மெய்கண்ட நூல்கள் | ஆசிரியர் |
|---|---|---|
| க | திருவுந்தியார் | ... திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார் |
| உ | திருக்களிற்றுப்படியார் | ... திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் |
| ங | சிவஞான போதம் | ... திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவ நாயனார் |
| ச | சிவஞான சித்தியார் | ... திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார் |
| ரு | இருபா விருபஃது | ... ஷை |
| சா | உண்மை விளக்கம் | ... திருவதிகை மனவாசகங் கடந்தார் |
| எ | சிவப்பிரகாசம் | ... கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் |
| அ | திருவருட் பயன் | ... ஷை |
| கூ | வினா வெண்பா | ... ஷை |
| கo | போற்றிப் பஃறொடை | ... ஷை |
| கக | கொடிக் கவி | ... ஷை |
| கஉ | நெஞ்சுவிடு தூது | ... ஷை |
| கங | உண்மைநெறி விளக்கம் | ... ஷை |
| கச | சங்கற்ப நிராகரணம் | ஷை |

# பொருளடக்கம்


திருவுந்தியார் 1-9

சிவபெருமான் அறிவாசானாய் வருதல் 3,4

யோக சமாதி 4

பாவனைநிலை 4

திருவருள் வழிநிற்றல் 4-6

திருச்சிலம்போசை 5

அகண்ட வழிபாடு 7

உண்மைத்துறவிகள் 7

சிற்றின்பம பேரின்பமாதல் 8

சிறந்த யோகம் 8

சுட்டற்றநிலை 8

வாசனாமலம் ஒழித்தல் 9

பேரின்ப நுகர்ச்சி 9

நூலாசிரியர் பெயர் 9

திருக்களிற்றுப்படியார 13-34

சத்தி, சிவம் என்ற இரு தன்மை 15

அறிவாசான் ,,

ஆளுடைய தேவநாயனார் ,,

அருள் வீழ்ச்சி 16

சிவனடம் ,,

மெல்வினை வல்வினை ,,

சிறுத்தொண்டர், 16,17

சண்டேசுரர் 17

அரிவாட்டாய நாயனார் 17

ஆதாரயோகம் நிராதார யோகம் 17,19

திருவள்ளுவர் கூறும ஞான முறை 20

ஞானநெறி 21,26,27

திருவருள் நெறி 22,23

வாசனை நீக்கம் 24,25

திருக்குறிப்புத்தொண்டர், ஏயர்கோன் கலிக்காமர், மூர்த்தி நாயனார், மூர்க்க நாயனார், கண்ணப்பர், சேந்தனார் 24

திருஞானசம்பந்தப் பெருமான் 25

சிவபோகம 25

சிவதன்மம் 26

பரமாசாரியர் நால்வர் 26,28

சிவஞான யோகம் 28,29

ஐந்தொழிலில் இறைவன சத்தி நிலை 30

அத்துவிதக் கலப்பு 31

இறைவனது ஆசிரிய திருமேனி 32, 33

ஆளுடையான் 33

ஆசிரிய வாழ்த்து 34

சிவஞானபோதம்

மங்கல வாழ்த்து முதலாசிரியரும பொல்லாரும 37

அவையடக்கம், நல்வினையுந் தீவினையும உணர்ந்தார் இயல்பு 37

பிரமாண இயல 38-51

முதற் சூத்திரம்-பதியுண்மை 38-41

முதல் அதிகரணம்

அவன், அவள், அது வெனு முலகம முத்தொழிற்படும் 34-39

இரண்டாம் அதிகரணம் 39,41
உள்ளதே தோன்றும்
உள்ளது இல்லதாகாது
காரணநிலை, காரியநிலை 39
செய்வானின்றிச் செயலில்லை 39-40
இறைவன் தொடக்குறாது ஐந்தொழில் செய்வன் 40-41
மூன்றும் அதிகரணம்
ஒடுக்குங் கடவுள் ஒருவனே 41

இரண்டாஞ் சூத்திரம்
மறுபிறவி வரும் வகை 42,44
முதல் அதிகரணம்
ஒன்றாய் வேறாயுடனாய் நிற்றல் 43,44
நானே உலகமாயினேன் என்பதன் கருத்து 44
இரண்டாம் அதிகரணம்
இறைவன் கட்டளையால் வினை நுகர்ச்சி 44,45
மூன்றும் அதிகரணம்
உயிர்களுக்குப் பிறப்பிறப்பு மாறிமாறி வருதல் 45,46
நான்காம் அதிகரணம்
சிவஞ் சத்திகளின் தொடர்பு 46

மூன்றுஞ் சூத்திரம்
உயிருண்மை 46,51
முதல் அதிகரணம்
இல்லையென்றலின் உயிருண்டு 47
இரண்டாம் அதிகரணம்
உடம்புக்கு வேறாக உயிருண்டு 47, 48
மூன்றும் அதிகரணம்
ஐம்பொறி யறிவுக்கு வேறாக உயிருண்டு 48
நான்காம் அதிகரணம்
கனவு உடலுக்கு வேறாக உயிருண்டு 49
ஐந்தாம் அதிகரணம்
பிராணனுக்கு வேறாக உயிருண்டு 49
ஆறும் அதிகரணம்
கடவுளுக்கு வேறாக உயிருண்டு 50
ஏழாம் அதிகரணம்
கருவிகளின் கூட்டத்திற்கு வேறாக உயிருண்டு 50,51
இலக்கண இயல் 51,60
நான்காஞ் சூத்திரம்
உயிரின் பொது இலக்கணம் 51-55
முதல் அதிகரணம்
உயிர் அகக்கருவிகளில் ஒன்றன்று, அவை அதற்கு அமைச்சர் போல்வன — 52
அகக்கருவிகளை அகர உகர மகர நாத விந்துக்கள் செலுத்துதல் 53
இரண்டாம் அதிகரணம்
ஆணவ மலம் உயிரின் அறிவை மறைப்பது 52,54

மூன்றும் அதிகரணம்
உயிர்களின் உணர்ச்சி நிலைகள் 54,55
ஐந்தாஞ் சூத்திரம்
கட்டுநிலையில் உயிர்க்கு இறைவன் உதவி 55,57
முதல் அதிகரணம்
ஐம்பொறிகள் உயிராற் பொருள்களை யறியும் 56
இரண்டாம் அதிகரணம்
உயிர்கள் கடவுளருளாற் பொருள்களை அறியும் 57
ஆறாஞ் சூத்திரம்
சத்து அசத்து இலக்கணம் 57-60
முதல் அதிகரணம்
சுட்டியறியப்படும் பொருள்கள் யாவும் அசத்து 58
இரண்டாம் அதிகரணம்
கருவிகளாலறியப்படாது பதியறிவாலறியப்படுவது சத்தாகிய சிவம் 58-60
சாதனவியல் 60-71
ஏழாஞ் சூத்திரம்
உயிரின் சிறப்பிலக்கணம் 60-63
முதல் அதிகரணம்
சிவத்தின் முன் அசத்து விளங்கித் தோன்றாது 61
இரண்டாம் அதிகரணம்
அசத்துக்கு அறிவில்லை 61
மூன்றும் அதிகரணம்
சத்தையும் அசத்தையும் அறியும் உயிர் சதசத்து; அது சார்ந்ததன் வண்ணமாம் படிகம் போல்வது 62,63
எட்டாஞ் சூத்திரம்
கடவுள் குருவாய்வந்து ஞானமுணர்த்தல் 63-67
முதல் அதிகரணம்
சரியை, கிரியை, யோகப் பயன் ஞானம் 63,64
இரண்டாம் அதிகரணம்
இறைவனே பதியறிவு தரும் ஆசான் 64,65
மூன்றும் அதிகரணம்
ஐம்பொறியறிவால் உயிர் தன்னையறியாது 65,66
நான்காம் அதிகரணம்
ஐம்பொறிகட்கு வேறாகத் தன்னைக்காணும் உயிர்கட்கு இறைவன் திருவடியே தாரகம் 66,67
ஒன்பதாஞ் சூத்திரம்
உயிரினைப் புனிதமாக்கல் 67-71
முதல் அதிகரணம்
முதல்வனை ஞானக்கண்ணாற் பார்த்தல் 68
இரண்டாம் அதிகரணம்
அசத்தை அசத்தென்று கண்டபோது சிவஞானம் விளங்கும் 68,69

மூன்றாம் அதிகரணம்
சிவஞானம் நிலைபெற முத்தித் திருவைந்தெழுத்தை நினைத்தல் 70,71
பயனியல் 72,80
பத்தாஞ் சூத்திரம்
பாசநீக்கம் 72-74
முதல் அதிகரணம்
இறைவனோடு அத்துவிதமாய் நிற்றல் 72
இரண்டாம் அதிகரணம்
இறைபணி வழுவாமை 73,74
பதினொராஞ் சூத்திரம்
சிவானந்தப்பேறு 75-77
முதல் அதிகரணம்
முதல்வன் உயிரின் பொருட்டுப் பொருள்களை அறிதல் 75
இரண்டாம் அதிகரணம்
அயரா அன்பு செய்து சிவன் கழலடைதல் 76,77
பன்னிரண்டாஞ் சூத்திரம்
ஞானிகள் உலகில் அறிவு செல்லுங் காலை சிவனை வழிபடு முறை 77-80
முதல் அதிகரணம்
மும்மலங்களைக் களைதல் 78
இரண்டாம் அதிகரணம்
சிவனடியாரோடிணங்குதல் 78
மூன்றாம் அதிகரணம்
திருக்கோயிலினும் சிவ வேடத்திலும் சிவன் விளங்குதல் 78,79
நான்காம் அதிகரணம்
அவற்றிற் சிவனை வழிபடுதல் 79,80

## சிவஞான சித்தியார்
## சுபக்கம் 83-177

பாயிரம் 83
காப்பு-கணபதி தியானம் 83
மங்கல வாழ்த்து
சிவபெருமான் தன்மை 84
முன்னூல் 84
கேட்போர் 85
அவையடக்கம் 85
அளவை 85-87
முதற் சூத்திரம் 87.105
முதல் அதிகரணம் 87-94
உலகாயத மறுப்பு 88
புத்தமத மறுப்பு 89
அணுவாத மறுப்பு 90
உயிர்கடவுளன்றெனல்
முக்காரணம் 91
நால்வகைச் சொல் 92,93
ஐங்கலைத்தமிழ்ப்பெயர் 93
தமிழ் மண்டிலம் 94
இரண்டாம் அதிகரணம் 95-102
குயவன் உவமை 95
உயிரின் உணர்ச்சிநிலையைந்து 95
இறைவன் தொழில்நிலை.
வளர்ச்சி = அதிகாரம்; காப்பு = போகம்; ஒடுக்கம் = லயம் 95

முத்தொழிற் காரணம் 96
ஐந்தொழில் விளக்கம் 97
இறைவன் உருவஇயல் 97,98
உருவங்கொளக்காரணம் 99-104
(அத்துவா)பெருவழிகள் ஆறி
னுள் மந்திரச் சிறப்பு 102
மூன்றும் அதிகாரணம் 102
இறைவன்சத்தி அதிகாரக் கட
வுளரை இயக்குதல் 102
சிவசத்தியியல்பு, விழைவு=
இச்சை, அறிவு=ஞானம்
செயல்=கிரியை 103
ஒடுக்கமுதல் - லயதத்துவம்
அருட்சிவமுதல்-சதாசிவ
தத்துவம், அராகமுதல் - ஈசுர
தத்துவம், தூயபுலம் - சுத்த
வித்தை 104
சிவஞ்சத்தித்தொடர்பு 105
இரண்டாஞ் சூத்திரம் 105
அத்துவித இயல்பு 105
முதல் அதிகாரணம் 106
ஒன்றென்பதன் பொருள் 106
இரண்டாம் அதிகாரணம் 107
இருவினையியல்பு 107-108
வினைகள் பிறவிக்கு வித்தா
தல் 109
எதிர்வினை-ஆகாமியம் 109
வினைவிளைவு 110,111
சமயத்திற்கு அடிப்படையான
ஒழுக்கம் 111
எத்தெய்வவழி 112
பரட்டிற்கும் பயன்அளிப்பது
சிவனே ,,
இறையன்பின் சிறப்பு 113-114
அச்சுமாறிப் பிறத்தல் 114-117
மலம் என்பதன் கருத்து 115
மூலவினை தொடக்கமில்காலம்
(-அநாதியே) உண்மை 115,116
மூன்றும் அதிகாரணம்
மாயையினியல்பு 118
முறைமுதல் - நியதி தத்துவம்,
கலைமுதல்-கலா தத்துவம், புல
முதல் - வித்தியா தத்துவம்,
அவாமுதல்-அராக தத்துவம்
தோன்றல்முதல்-புருடதத்
துவம் 119
மூலப்பகுதி - மூலப்பிரகிருதி,
பண்புமுதல்-குணதத்துவம்
மெய்ப்பண்பு-சத்துவகுணம்
செயற்பண்பு-இராசத குணம்
தாழ்பண்பு - தமோகுணம்
தெளிமுதல் - புத்தி தத்துவம் 120
வினைமுதன்மை-ஆங்கார தத்
துவம் அறிவுப்பொறி -
ஞானேந்திரியம், வினைப்
பொறி-கன்மேந்திரியம், எண்
ணுடல்-புரியட்டகம் 121
தன்மாத்திரை, பூதம் 122

ஐம்பூத அடையாளங்கள், காரணேசுரர், பெருமுதல்வன் - மகேசுரன் 123
அறிசார்பின - சைதன்னியங்கள், இயக்கு-பிரேரகம் 123
நுகர்நோக்கு-போகசயித்திருகாண்டம், நுகர்ச்சி-போக்கியகாண்டம் சிவமுதல்-சிவதத்துவம், அறிமுதல் - வித்தியாதத்துவம், உயிர்முதல்-ஆன்மதத்துவம், அணுபக்கம், சம்புபக்கம் 124
நான்காம் அதிகரணம் 124
தத்துவத்தெய்வங்கள் ஒலி - நாதம், வட்டம் - விந்து 125
சிவத்திருமேனி ஒன்பது சத்தித்திருமேனி ஏழு 125
தத்துவஇயல்பு 126
ஆணவமல இயல்பு 126-128
மக்கட்பிறவி நோக்கம் 129
வழிபடாதவர் இழிவு 130
மூன்றாஞ் சூத்திரம் 130,131
நான்காஞ் சூத்திரம் அந்தக்கரணவியல்பு 131
முதல் அதிகரணம் நால்வகை அகக்கருவிகளை இயக்கும் எழுத்துக்களும் முதல்வரும் 132
இரண்டாம் அதிகரணம் 133
உயிர்கருவிகளையியக்குதல் 133
உயிர்யாது என்ற ஆராய்ச்சி 134-139
மூன்றாம் அதிகரணம் 139
ஐந்து உணர்ச்சிநிலை யியல்பு 140
தூயநிலை-சுத்தாவத்தை
கலப்புநிலை-சகலாவத்தை
தனிநிலை-கேவலாவத்தை 141
ஐந்தாஞ்சூத்திரம் 141
உயிர்கள் ஐம்பொறிகளால் அறிவதும் இறைவன் உயிர்க்கு அறிவிப்பதும் 141-144
ஆறாஞ்சூத்திரம் 144
சிவத்தினியல்பு 144
முதல் அதிகரணம் 144
சுட்டுப்பொருளியல்பு
இரண்டாம் அதிகரணம்
இல்பொருளியல்பு 145
மூன்றாம் அதிகரணம்
சத்தினியல்பு 145
கடவுள்பாவனையைக் கடந்தவர் 145
உயிரறிவால் முதல்வன் அறியப்படாதவன் 146
ஏழாஞ்சூத்திரம் 126-147
உயிரின்சிறப்பிலக்கணம் 147
எட்டாஞ்சூத்திரம் 147
இறைவன் அறிவாசானாய் வருதற்கு மன்னவன் தன்மகனை வேடரிற்பிரித்தலுவமை 148
முதல் அதிகரணம் 148
மூவகையுயிர்க்கு இறைவன் அருளுமுறை 148
தீக்கைவகைகள் 149,150

ஆறுவழிச்சுத்தி 150,151
இரண்டாம் அதிகாரணம் 151
சமயப்படிகள், மெய்ச்சமய
இயல்பு 152
முதனூல்களியல்பு 153
சிவன்கருணை 154
நால்வகை வழி 154,155
ஞானபூசையியல் 156
சிவஞானிகட்கு ஒன்றிதற்
சிறப்பு 157

ஞானத்தால் வீடு
கேட்டல், சிந்தித்தல், தெளி
தல் 158
ஞானநிட்டையியல்பு 159,160
மூன்றும் அதிகரணம் இறை
ஞானச்சிறப்பு 160
நான்காம் அதிகரணம் முத்தி
நின்று மீளாமை 161
இறைவனில் உயிர்அடங்கு
மியல்பு 161,162
வாசனைமல (கட்டெச்சம்)
இயல்பு 162

ஒன்பதாஞ் சூத்திரம்

வாசனைமலம் நீக்கும்வழி 162
முதல் அதிகாரணம் 163
உலகஅறிவு-பாசஞானம், உயி
ரறிவு-பசுஞானம் 163
இவைமுத்திதராமை 164
இரண்டாம் அதிகாரணம் 165
திருவடி நீழலிற்புகுமியல்பு
165

மூன்றும் அதிகாரணம்
கருடபாவனை 165
ஞானிகளின் அகப்பூசை 166
நால்வகைநெறியினர்க்கு இறை
வன் புலனாகுமுறை 167

பத்தாஞ்சூத்திரம் 167
இறைவனோடு கலந்துநிற்கு
முறை 167,168
முதல் அதிகாரணம்
யான் எனது என்னுஞ் செருக்
கறுதல் 168
இரண்டாம் அதிகரணம் 168
இறைஞானத்தால் ஐம்பொறி
யைவெல்லுதல் 168,169
இறைஞானம்பெற்றார் சிறப்பு
169

பதினொன்றாஞ் சூத்திரம் 170

இறைகண்டு காட்டல் ,,
முதல் அதிகாரணம் 172
எப்போதும் இறையின் உதவி
யின்றி உயிர்அறியாமை 172
இரண்டாம் அதிகாரணம்
சிவன் சீவன்வேறுபாடு
173, 174

பன்னிரண்டாஞ் சூத்திரம்

சிவஞானிகளின் சிவத்
தன்மை 175
திருக்கோயிலின்பயன் 176
இறைவன் ஆசான்மூலம் அரு
ளல் 177

இருபாவிருபஃது 181-196

அறிவின்மை தோன்றக்காரணம் பற்றியவினா. 181

"இருநிலனாய்த் தீயாகி," தகுதி தகுதியின்மை 182

"காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே," "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும்," உயிர் அறிவுப் பொருளா? 183

ஆணவகாரியம் மாயாகாரியம் வினைப்பாசம் 184

மலஇயல்பு 185

சற்காரியவாதம் 186

அவத்தையியல்பு 187

இருவினையியல்பு 191,192

வினையொழிப்பு 193

இறைவன் பேருதவி; ஆசான் சிறப்பு 192-196

உண்மை விளக்கம் 199-207

நூற்பொருளடக்கம் 199

ஐம்பூதவிளக்கம் 200

ஐம்புலன், ஐம்பொறி 201

முதல்களின் இயல்பு 202

உயிரியல்பு, இறையியல்பு 203

ஐந்தெழுத்து விளக்கம் 204

திருக்கூத்தினியல்பு 204,205

முத்தியைந்தெழுத்து 205

உயிர் சிவத்தொடு கலத்தல், முத்தியில்மும்முதல், வாசனை நீக்கம் 207

சிவப்பிரகாசம் 211-244

குருசந்தானம் சித்தாந்த இயல்பு 211

தீக்கையியல்பு 212

நூன்மரபு 212,213

அவையடக்கம் 213

பொதுஅதிகாரம்

முதற்சூத்திரம் 213

பதிஇலக்கணம் 213,214

இறைவனது சார்பிலக்கணம்

இறையுருவியல்பு 214

இறைதொழிலும் காரணமும்

இரண்டாஞ்சூத்திரம் 216

பசுவிலக்கணம் 216

பாசவிலக்கணம் 216

ஆணவ இலக்கணம் 216

சுத்ததத்துவத் தோற்றம் 217

தூய்தன்மாயை - அசுத்த மாயை இயல்பு 217,218

அசுத்தமாயா தத்துவங்களின் தோற்றம் 219

கன்மமல விளக்கம் 220,221

உயிரின்மூன்றுநிலை விளக்கம் 221

ஆணவமுண்மை 222

நால்வகைச்சொல் 223

தத்துவ இயல்பு 224-226

பிறப்பியல்பு 227

அருள்வீழ்ச்சிவகை 228

முத்திவகை 228

உண்மையதிகாரம் 229

உயிரறிவியல்பு 229-232

உணர்வெல்லையியல்பு
(=உணர்ச்சிநிலை) 232,233
உணர்த்துமுறை 233,234
ஞான வாய்மை 234,235
ஞானத்நால் வரும் பயன் 235-241
அஞ்செழுத்தருணிலை 241,242
அணைந்தோர் தன்மை 242-244

திருவருட் பயன் 247-263

பதிமுது நிலை 247,248
உயிரவை நிலை 248-250
இருண்மலநிலை 250-252
அருளதுநிலை 252-254
அருளுருநிலை 254,255
அறியுநெறி 255-257
உயிர்விளக்கம் 257-259
இன்புறுநிலை 259,260
ஐந்தெழுத்தருணிலை 260-262
அணைந்தோர் தன்மை 262-263

வினாவெண்பா 267-270

இருள் மலத்தைப்பற்றி 267
வினைவீடுபற்றி 270
சிற்றறிவைப்பற்றி 268
அத்துவித இயல்பு பற்றி 269

போற்றிப்பஃறொடை 273-280

கடவுளியல்புமுத்தொழிற் பெருநெறி 273
மாயைப்படைப்பியல்பு 274
கருவிற்காப்பு 274
பெற்றோர்க்கன்பு விளைத்துக் காத்தல் 274,275
உடம்பில் தத்துவப்பிணைப்பு 275,276
இருவினைப்பயன் துய்த்தல் 276
நமன் தண்டம் 277
இருவினையொப்பு 277
பக்குவ காலத்தருளும் முறை 278
ஞானப்பேறு 279
சமயச்சார்பில் விலக்கற்பாலன 280

கொடிக்கவி 203-284

கொடியேற்று நோக்கம் 283
சிவமந்திர வியல்பு 283,284

நெஞ்சுவிடு தூது 287-297

இறைவன் பெருமை 287
பந்த இயல்பு 288
திருவள்ளுவர் போதனை 289
இறைமாண்பு 289, 290
நன்மை வெறுப்பு 290
ஆனந்தவாறு 290, 291
இறைநாடு, ஊர் 291
இறைவன் குதிரை யியல்பு 292
" கொடி, கட்டளை 293
இறைவன் குருவாய் வந்தருளு முறை, உபதேசம் 294
பாணபத்திரர்க் கருளுதல் 295
நெஞ்சறிவுறுத்தல் 296
தார் வாங்க நெஞ்சைத் தூது அனுப்புதல் 297

உண்மைநெறி—விளக்கம் 301-302.

முதல் வடிவு-தத்துவரூபம் 301
முதற்காட்சி—
தத்துவதரிசனம் 301
முதல்நீக்கம்-தத்துவசத்தி 301
உயிர்வடிவு—ஆன்மரூபம் 301
உயிர்க்காட்சி—
ஆன்மதரிசனம் 301
உயிர்விளக்கம்—
ஆன்மசுத்தி 301
சிவவடிவு—சிவரூபம் 301
சிவக்காட்சி—சிவதரிசனம் 302
சிவப்பற்று—சிவயோகம் 302
சிவநுகர்ச்சி—சிவபோகம் 302

சிவஞான சித்தியார்
பரபக்கம் 305.-

மெய்கண்டார் துதி 305
நூல் நோக்கம் 306
லோகாயதக்கொள்கை 306-310
உலகாயத மதமறுப்பு 310-318
புத்த சமயம் 318
சௌத்திராந்திகன்
மதம் 319-326
,, மறுப்பு 326-342
யோகாசாரன்மதம் 342
,, மறுதலை 343
மாத்தியமிகன்மதம் 343
,, மறுப்பு 344
வைபாடிகன்மதம் 344
,, மறுப்பு 345
நிகண்டவாதிமதம் 345-347
,, மறுதலை 347-350
ஆசீவகன்மதம் 350-352
,, மறுதலை 352-354
பட்டாசாரியன் மதம் 354-356
,, மறுதலை 356-360
பிரபாகரன் மதம் 360
,, மறுதலை 360-361
நிரீச்சுர சாங்கியம் 361
,, மறுதலை 362-363
பாஞ்சராத்திரிமதம் 363-364
,, மறுப்பு 364-370
பார்க்கரியன்மதம் 370
,, மத மறுதலை 370-372
சத்தப்பிரமவாதிமதம் 372
,, மறுதலை 372-374
சங்கற்ப நிராகரணம் 377-422
நூல்வரலாறு 377-388
மாயாவாதிமதம் 378-383
,, மறுப்பு 383-397
ஐக்கியவாதி சங்கற்பம்
,, மறுப்பு 398-300
பாடாணவாதிசங்கற்பம் 400
,, மறுப்பு 400-401
பேதவாதிசங்கற்பம் 401
,, மறுப்பு 401
சிவசமவாதிசங்கற்பம் 402
,, மறுப்பு 402,406
சிவசங்கிராந்தவாதம் 406
,, மறுப்பு 410-411
சுத்தசைவம் 411-412
,, மறுப்பு 412-414
நிமித்தகாரண பரிணாமவாதம்
414-416
,, நிராகரணம்
416-422

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்கைலாச சந்தான குரவர்களின் தோத்திரங்கள்

## பரஞ்சோதி முனிவர்

அருட்குமுக ரெழிற்கயிலை முழுக்காவ லந்திபிரா
னடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சநற்குமர முனிவனிரு
திருத்தாள் போற்றி
இருட்டுமலத் தகல்சத்ய ஞானதரி சனிசரண
விணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருஞ்சில குருபரன்கான்
மலர்கள் போற்றி.

## மெய்கண்ட தேவர்

அல்லாத பரசமய வலைகைத் தேர்வின்.
டகலவகல் புனற்பெண்ணை யயல்சூழ் வெண்ணைப்
பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற்
புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
நிற்குநிலை யிதுவெனமெய்க் நெறிதேர்ந் தியாரும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
மெய்கண்டான் சரணமுடி மீது கொள்வாம்.
சிறிய வாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிவெலா மகப்படுத் தவற்றி
னெறியெலாம் விளக்கியசிவ ஞானபோ தத்தைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம்.

## அருணந்தி சிவாசாரியார்

முப்பொருளி னியல்பு மொழியவொணா துவலாது
முறைமெய்வே றாய்ச்
செப்புசிவா கமங்களின்றன் பொருண்மை பெறவுணர்த்து
திறமுன் னூலை
ஒப்புவிரி யாப்பதனாற் சித்தியெனும் வழிநூலா
யொளிர்பிற் காலத்
தப்புவியோர் தெளிந்துய்ய மொழிந்தவரு ணந்திசிவ
னிணைத்தாள் போற்றி.

---

## மறைஞானசம்பந்த சிவாசாரியர்

திருவளருஞ் சாமமறை திகழ பராசரன் மரபோன்
விரசுநர்பான் மறையுணர்வு விரிந்தோரிரப் புணர்த்துவோன
மருதமொடு கடந்தையையாண் மறைஞான சம்பந்த
குருமணி தன் மருமலர்த்தாள் குறித்துருகிப் பரசிடுவாம்

---

## உமாபதி சிவாசாரியர்

அடியார்க் கெளிய னெனத்தில்லை
யண்ண லருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி யப்பொழுதே
உடலுங் கரையுற் றடைந்திடவா
னுயர்தீக் கையினை யருளுக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரிணை கழல்போற்றி.

மெய்கண்ட நூல்கள்

# திருவுந்தியார்

௨

# திருவுந்தியார்

இயல்பாகவே மலமற்றதாய், யாரும் அறிதற்கரிய தொரு பரம்பொருளாகிய சிவபெருமான், தவமுதிர்ச்சியால் பக்குவமடைந்த உயிர்களுக்கு அருள் புரியும்பொருட்டு ஆசிரியனாய்த் திருமேனி கொண்டெழுந்தருளி வந்து பர ஞானத்தைக் கொடுத்து அவைகளைத் தன் தன்மை எய்தும் படி செய்தருளுவன்.

திருவடிப்பேரறிவு பெற்ற பின்னும் நெடுநாட் பழகிய பழக்கத்தால் ஏற்படும் மல வாசனையை, ஒப்பற்ற திருவருள் வயமாய் நின்று ஒழிக்கப் பழகுதல் வேண்டும்.

ஆசிரியனாய் வந்த கடவுள் நல்கிய ஞானத்தைக் கொண்டு, நிட்டைநிலை கைகூடப் பெற்றவர் மீண்டும் பிறவார் என்றறிக.

சிவானந்தமானது எவ்வாறிருந்ததென்று சொல்ல முடியாது; அது சுட்டறிவினால் அறியத்தக்கதன்று.

ஒரே பரம்பொருளாகிய பெருமான் பல்லுயிருக்கும் உயிராய் நின்றும் ஐந்தொழில் நடாத்தியும் தலைவனாய் நிற்கின்றனன். அவனே நமது ஆண்டவன்.

நம் செயலென்பதும் நாமென்பதும் அற்றபின் எல்லாச் செயலும் இறைவன் செயலென்பது விளங்கும். அவன் தன்னையே நமக்குத் தந்தானென்று மகிழ்வோமாக.

உள்ளம் உருகின்றான் அவர் உடனிற்பது விளங்கும்; அல்லாத இடத்து அவரைத் தெளிந்தறிதல் இயலாது; அவர் கரணங்கடந்த மேலான ஞானச் செல்வரென்றறிக.

சுட்டியறியும் ஆறு ஆதாரங்களில் அவனை வழிபட்டு யோக சமாதி யடைந்தபின் சுட்டற்ற மேலிடத்தே செல்க; அதுதான் பாசமற்ற பெருமானுக்கு இடம் என்று அறிக.

நினைத்தபோது தோன்றியும் நினையாதபோது தோன்றா மலும் இறைவன் இருக்கப்பெறும் நிலை, மேலான ஞானநிலை யன்று. அது பாவனை நிலை. அந்நிலைக்கு அப்பாற்பட்டவன் கடவுள் என்றறிக.

ஐந்தெழுத்தின் வைத்து இறைவனை வழிபடும் ஞான முறையைப் பின்பற்றித் தனது அறிவைச் சிவஞானத்தோடு இரண்டறத் தொடர்பு படுத்தித் தூய அறிவுடைய முதல் வனைக் காண்க.

உலக அறிவோடு கலந்தும் கலவாது நின்ற கடவுள், ஆராய்ச்சியறிவிற்குப் புலனாகான்; சுட்டறிவால் பாராமல் திருவருட் கண்ணால் அவனைப் பார்த்தல் வேண்டும்.

மூலையாகிய உடம்பினிலிருந்தவரை அருள் வெளியா கிய முற்றத்தில் விட்டவர் எப்பொருளினும் பெரிய இறைவ ரென்றுணர்க. தவத்திற்குத்தக்க பயனளிக்கும் தலைவர் இவரே என்றுணர்க.

போக்குவரவின்றி ஒழிவற நிறைந்த ஞானமாகிய ஊரினையடைந்து, ஆராய்ச்சி ஒழிந்து நிற்கும் நிலையில் சிவம் விளங்கும். அந்நிலையில் ஆராய்ச்சி நிகழ இடம் இல்லை.

பாசத்தோடு கூடியிருந்த காலத்தில் மறைந்து கிடந்த அருட்சத்தியை, உன்னை ஆட்கொள்ளும்படி செய்யும் தீக்கை யினாலே, ஆசிரியர் விளக்கியவுடன் அச்சத்தியோடு உடனாய் நின்று அருள் வழி ஒழுகுக.

எல்லாவகை உலகப் பற்றுக்களையும் அறுக்கவல்ல திருவருட்பற்றினைப் பற்றினால், அத்திருவருள் பிறபற்றுக்களை ஒழிக்கும். அங்ஙனம் பற்றொழியாது பாவிப்பதனால் இறைவன் வெளிப்படான்.

உலகப் பற்றிலழுந்தாது மெய்ப்பொருளை உணர்கின்ற யோகிகள், தொங்குகின்ற மணியின் நாவைப்போல ஒன்றினும் பற்றாமல் அசைவற நிற்பர்.

உள்ளத்துள்ளே இறைவரை நினைந்து அசைவற நிற்கும் யோகிகட்குத் திருச்சிலம்போசையாகிய நாத தத்துவம் தோன்றும். அதன் வழியே சென்று ஐந்தொழிலை நடாத்தும் இறைவனைக் கண்டு வணங்குக. அங்கிருந்து பிறழாமல் நேர்பட ஒழுகுக.

இறைவன் அருளை மறவாது நிற்பின், மயக்கமும் திரிபுணர்ச்சியும் தொலையும். அவ்வருளைப் பற்றி நிற்பதொன்றே ஈண்டுச் செயற்பாலது.

அங்ஙனம் அருள் வழி உறைத்து நிற்பின் ஒப்பற்ற அருட்சத்தியின் கணவராகிய பெருமான் தன்னைக் கருதுமுன் சுட்டறிவு ஒழியும்படி அறிவிற் பதிந்து நிற்பன். அவன் பிற வழியால் நினைத்துப் பெற முடியாதவன் என்று அறிக.

ஆணவத்தோடு கூடிய நிலையாகிய இரவும், மாயையுடன் கூடிய நிலையாகிய பகலும் இல்லாத தூய ஞானத்தோடு கூடிய இன்ப வழியிலே இடைவிடாது, வினைக்கு அஞ்சி விரைந்து சென்று பொருந்துக.

தன்னியல்பில், இறைவன், நூல்களால் பேசப்படும் பொருள்களும் பேசப்படாத பொருள்களும் அல்லாதவனு யிருந்தும், உயிர்களின் பொருட்டு அவையாய் நிற்கின்றான்; அதற்குக் காரணம்அவன் கருணையாகிய சத்தியோடு கூடி யிருத்தல் ஆகும்.

வெளிச்செல்லும் மூச்சுக்காற்றினை உள்ளே சென்று அடங்கும்படியாக மாற்றி, புறத்தே செல்லுங் கருத்தினைக் கருத்துக்குக் கருத்தாகிய கடவுள் பால் பதிவிப்பதே ஆற்றல் என்றறிக. பிற செயல்கள் துன்பந்தருவன ஆகும்.

சிவபெருமானாகிய கள்ளரோடு உடம்பாகிய வீட்டை யுடைய உயிர் கலந்து விட்டால் அதிலுள்ள சரக்காகிய வினை களெல்லாம் அறவே ஒழியும். வீடும் எளிதாம் என்றறிக.

ஐம்பூதமும் மதியும் கதிரவனும் உயிரும் ஆகிய திரு மேனிகள் எட்டுங் கொண்டாராகிய இறைவர் திருவடியை இடைவிடாது தொட்டுக்கொண்டே நின்றவர் உலகத்தை விட்டார் ஆவர். விட்ட இடத்தே அவர் திருவடியே வீடா மென்றறிக.

தன்னுணர்ச்சியும் கருவிகளினுணர்ச்சியும் திருவரு ளிலே அடங்கி ஒத்தநிலை ஏற்படுதலே வீடடைதற்கு ஒத்த நிலை என உணர்க. ஒவ்வாத நிலை வீட்டு நெறிக்குப் பொருந்தாத நிலை என்றுணர்க.

அகவழிபாடும் புறவழிபாடும் ஒழிந்த அகண்ட வழிபாட்டிலே உலவாத இன்பம் உண்டென்றறிக. அங்கிலையிலே பந்தம் முளையாது.

தன்னுணர்ச்சி நழுவிப் போதற்குரிய ஞானநெறி நின்றவர்க்குத் துன்பம் அகன்றொழியும். அல்லாதவர்க்குத் துன்பம் அகலாது.

எவற்றிற்கும் வித்தாகிய திருவருளை நாடிப் பெற்றுப் பாசமுளையைக் கை விட்டவர்கள் பேரன்பு மிகுந்தவர்களாவார்கள். பேரன்பைப் பெற்றபின் பெறுதற்குரியது யாது?

சிவனைக் கூடுகின்ற இடம் இன்னதென்று குறித்துச் சொல்ல முடியாது. அறிவாசான் உணர்த்த உணரும் ஞானமே அவனுக்கு எல்லை. அவ்வெல்லையைக் கூடினால் யான் எனதென்னும் செருக்கு அறும்.

இல்லறத்திலிருக்கினும் துறவறத்திற் புகுந்து அலைந்து திரியினும் ஞானமாகிய வாளினை உயிரின் பாதுகாப்புக்குத் துணையாகக் கைக்கொள்க. அங்ஙனங் கொள்ளாவிடின் வீடடைய முடியாது.

வீட்டினை நேராக அடைதற்குப் பயன்படாத வழி கூறும் பிற சமயங்களிற் புகுந்து நின்று உயிர்க்குறுதியை இழத்தல் கூடாது. பிறசமய உரைகளை மெய்யென்று நம்புதல் கூடாது.

உலக உணர்ச்சியும் தன்னுணர்ச்சியும் கடந்த தொண்டர்க்கு நனவிலேயே தூய மேல் நிலை உணர்ச்சி நிகழும். அவர்களே உண்மைத் துறவிகள் என்றறிக.

அத்தகைய ஞானிகட்கு ஊழினால் எய்தும் சிற்றின்பம் திருவருட் கண்ணால் உணரப்படுவதாகலின் பேரின்பமாகவே முடியும். ஆதலால் மேல் வினையின் காரியமாக வரும் உடம்பெடுத்தல் நிகழாது.

அவர் பேரின்பமான பெருந்தலைவியோடு கூடி ஒப்பற்ற இன்பத்தை நுகர்ந்துகொண்டிருத்தலினாலே, அ த ன் க ண் விளங்கும் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பிற இன்பத்தை உணரார் என்றறிக.

பேய்க்கோட்பட்ட பெண்டிர்போல உயிரையும், பேய் போல நாயகனை கடவுளையும் கண்டறிந்தோர்களே கடவுளைக் கண்டவராவர். அங்ஙனம் தன்னை மறந்து திருவருட் பதிவுறுதவர்கள் குருடர்களே.

உடம்பினுள் பிராணனும் நாத கலையுங் கூடிச் சுழுமுனை வழியே உச்சியிற் சென்று சேரப்பெற்று அருள் வழியில் நிலைபுறுவோரே நாலாம் நிலையாகிய வீட்டினை எய்துவர். அவ்வருள் வெளியே நாதனுக்கு இடமென்றறிக.

சென்ற வழியெல்லாம் சிவன் வழி என்ற உணர்ச்சியோடு தன்செயலற்று நிற்கவேண்டும்.

பொன்னினாலமைந்த கொழுவைக்கொண்டு வரகு விளையும் நிலத்தில் உழுவதால் பயனென்? அக்கொழுப்போல் வதாய திருவருளின் தன்மையறிந்து உலக வாழ்விலே ஈடு படாமல் சுட்டற்ற நிலையில் நிற்கவேண்டும்.

சுட்டியறியாது பொருள்களையெல்லாம் ஒருங்கேயறியும் பேரறிவுடைய பெருமான் உயிரோடு கலந்து நின்று உதவுகிறானென்பதையறிந்து, அவனைச் சுட்டற்ற நிலை நின்று அறிய வேண்டுமெனவுணர்க.

இறைவன் உயிரோடு கலந்தது தனது அருள் மிகுதி யால் என்க. தன்னியல்பின் அவன் உயிரின் வேறானவனாத லின், உயிர் இறைவனாய் விடுமென்ற கருத்தை விட்டொழிக. உயிர் முத்தியை யடைந்தாலும் உயிரேயென்றறி.

முத்தி பெறுவதற்குரிய முதன்மையுடைய உயிரின் பால் ஆணவமான மயக்கக் கொடி படர்ந்து, உடம்பாகிய பழம் பழுத்துப் பிறவி ஏற்பட்டது. அது முத்திக்குப் பகையாகலின், அப்பழத்தைத் துகர்தற்கிடமில்லாதபடி திருவருளிலே உறைத்து நிற்க.

எல்லாவகைப் படைப்பையுமுள்ளடக்கிய மாயையினைப் பற்றி நில்லாதே. அதற்கு மேலான பூரணப் பொருளாகிய சிவமே பற்றத்தக்கது.

உடம்பினுள் வாழும்போதே இறைஞானத்தின் பயனான பேரின்பத்தை நுகராது, உடம்பால் வரும் மயக்க மிக்க சிற்றின்பத்தை உண்டவர்கள் பயன்படாத உயிர்களென உணர்க.

திருவடி சென்னிமேற் சூட்டி மெய்ஞ்ஞானம் நல்கியும், உள்ளத்தாமரையில் ஞானபூசையேற்றும் என்னை ஆட் கொள்ள வந்தவர் தமது திருவருட் சத்தியோடு வாழ்க.

— உலகினர் யாவர்க்கும் பாசநீக்கத்தைச் செய்யவல்ல உய்யவந்த தேவநாயனாரது நூலினை உணர்ந்தார் உண்மை உணர்ந்தாராவர்.

திருவுந்தியார் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# திருக்களிற்றுப்படியார்

# திருக்களிற்றுப்படியார்

சத்தி, சிவம் என இரு தன்மையுடைய ஒருவரே உலகுக்குத் தாயுந் தந்தையுமாவர், அவர் தமது அருட் சத்தியுடன் றோன்றிப் பக்குவப்பட்ட உயிர்கட்கு அருள் புரிவர். எல்லாவுலகங்களுக்கும் அப்பாற்பட்டவராதலின் உயிர்களெல்லாம் தமது முயற்சியாலே அறியக்கூடாதவர். அப்பாற்பட்டாலும் உலகங்களிற் கலந்து அவற்றிற்றுடக்குறாது நிற்பர்.

தம்மை யுய்விப்பான் எழுந்தருளிய அறிவாசான் சொல் வழி நின்று, தம்மறிவிலே சிவம் விளங்குவதையுணர்ந்தவர் தலைவனையும் தம்மையுமுணர்வர். அவர் தம்மை மறந்து தலைவனோடு பொருந்தி நிற்பின், தலைவன் தன்மையையடைவர்.

ஒரு பேராசிரியர் தன் பால் ஞான நூல் கேட்கவந்த மாணவர்களை நோக்கி, 'எனது பசுபோதங்கெட்டுச் சிவாநுபூதி நிலையில் நான் தெரிந்தபடி செருக்கற்ற நீங்கள் கேட்பீர்களாக' என்று உபதேசஞ்செய்த நூலினைக் கேட்ட எனது ஆசிரியர் எனக்குச் சொன்னபடியே நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ அதனைக் கேட்பாயாக. (திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்பால் உபதேசம் பெற்ற ஆளுடைய தேவ நாயனார் தமக்கு உபதேசித்ததை இந்நூலாசிரியர் தமது மாணவருக்கு அறிவுறுத்துவதாகக் குறிப்பிக்கின்றார்.)

பரஞானமாகிய அருள் வெளியிலே நின்று பக்குவம் அடைந்த உயிர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் கூத்தப்பிரான், என்னைப் பந்தப்படுத்தும் ஆணவமாகிய மூலமலம்

என்னை விட்டொழியும்படி, அநாதியே உயிர்க்குயிராய் நின்று உண்மை அறிவித்தருளி, பக்குவ காலத்திலே ஆசிரியனுய்த் திருவுருக் கொண்டெழுந்தருளிவந்து ஆட்கொண்டனன். மாணவனே, நீ இதை அறிவாயாக.

அருள் வடிவுடைய மாதொரு பாகன் அன்பர்க்குத் தோன்றி மெய்யினை அறிவுறுத்தாவிடின், சிறந்த சமய நூல்கள் எவ்வாறு உளவாகும், ஆறு வகைப்பட்ட சமய ஒழுக்கங்கள் எவ்வாறு தோன்றும்? அவற்றின் பயனுன யோக முயற்சியும் ஞானமும் எங்ஙனம் விளையும்? இறைவன் இங்ஙனம் வந்து உணர்த்தாதவிடத்து அவன் பேரியல்பை யார் தாஞக அறிய முடியும்?

மெய்ந்நூல் கற்ருர்க்கு ஆசிரியன் அறிவுரை மாத்திரத்திலே உளதாகும் பெரும்பயன் விளையுமோ? கடல் நீர் குடித்தவர்க்கு விடாய் தணியாது. முகில் நீரை மொண்டு மழையாக நன்னீர் பொழிந்தால், அஃதே பயன்படும். அதுபோல அனுபவப் பயனை அறிவாசான் விளக்கின லொழிய அறிய முடியாது.

மலமெல்லாம் நாற்றமுடையவாயினும் புனிதமமைந்த பசுவின் மலமாகிய சாணம் பிற மலங்களனைத்தையும் நீக்கும். அதுபோல ஆசிரியனும் மக்களுள் ஒருவன் எனினும், சிவன் அவனை நிலைக்களமாகக் கொள்ளுதலினால், அவன் பிறவியை ஒழிக்க வல்லவன் ஆவன் என்றறிக.

ஆசிரியனுய் வந்த கடவுள் நல்கிய ஞானத்தைக்கொண்டு நிட்டைநிலை கைகூடப்பெற்றவர், இறைவனை உலகிற்கு அப்பாற்பட்டவன் என்று கூருமல், உலகெங்கணும், உயிர்கள்

யாவற்றினும் அவன் கலந்து நிற்கும் நிலையை அனுபவத்தாற் கண்டவராவர்.

மெய்யுணர்வுடையோர் இறைவனை அகண்டமாகக் கண்டு வழிபடுவார் என்பது கருத்து.

அயனரி முதலிய தலைவர்களுக்கும் இறைவன்றன்மை தெரிந்ததில்லை. அவனை அனுபவத்தாலுணர்ந்தவர்க்குந் தம்து அனுபவம் எவ்வாறெனத் திட்பமாகக் கூறமுடியாது. வினவுவார்க்கு அது அநுபவித்தவாறு இருந்தது என்பதே அவர்களால் கூறமுடியும்.

சார்ந்த பொருளில் அதுவதுவாய் நிற்குந் தன்மை உயிர்க்குளது. அத்தகைய உயிர் முடிபாகச் சாரும் தன்மையின் வைத்து இறைவன் தன்மை துணியப்படுவதன்றி உலகி லுள்ள பிறபொருளில் வைத்தும் அவனை அறியமுடியாது. ஏனெனின், எப்பொருளும் இறைவனுக்கு உவமையாவ தில்லை. முடிபாகச் சாருந் தன்மை தவமிக்கோர்பால் காணப்படும்.

ஆற்று நீர் கடல் நீரோடு கலந்தபின், மீண்டும் ஆற்றிலே எதிர்த்து வரின் அது கடல் நீரின் தன்மையுடையதாம். அது போலச் சிவானுபூதிமான்கள் உடலிலே தங்கினும், புலன் வசப்படார்; சிவன் வசப்பட்டிருப்பர். அன்னோர் வாயிலாக இன்றவன் நமது மலங்களைக் களைந்தொழிப்பன்.

சிவஞானிகளுக்குக் கரணங்களெல்லாம் சிவகரணமாய்த் திரிபுற்றமை, பாலைநிலம் நெய்தலாகும்படி திருஞானசம்பந்தப் பெருமான் பாடியதும், அப்பர்பிரான் பாம்புவிடம் நீங்கும் படி பாடியதும், முதலைவாய்ப் பாலனைச் சுந்தரமூர்த்தி நாயனார் அழைத்ததும்பற்றி யுணர்ந்துகொள்க.

இறைவன் குருவாகி யெழுந்தருளியாட்கொள்ளு முன்னமேயே அருள் வீழ்ச்சியினால் பக்குவமிக்க உயிர்கள், இறைவன் திருவருட் கடைக்கண் பாலித்து ஆண்டபின்னர், சிவமாந்தன்மையைத்தாமே மெல்ல மெல்ல எய்திவிடுவர். அது தூக்கமிக்காரைப் படுக்கையில் விட்டபின், உறக்கத்தை மற்றவர்கள் அவர்களுக்குக் கொடுப்பதில்லாமல் அவர்களே நன்றாகத் தூங்கிவிடுவதைப்போலும்.

தன்னுணர்ச்சியோடு ஆராய்ந்து தெளியமுயன்றால், இறைவன் முன்னிற்கமாட்டான். உள்ளமலங்களெல்லாம் ஒடுங்கி அழியும்படி தம்மை மறந்து அன்புசெயின் உள்ளம் உருகும்படியாக இறைவன் உடன் கலப்பன்.

பயன்கருதாது கைக்கொள்ளும் சிவனறமாகிய சரியை கிரியைகளில் நின்றுதல், நல்ல சிவயோகத்தினாலாதல், நல்ல சிவஞானத்தினாலாதல், யானென்னுந் தன்னுணர்ச்சி கெடும்படியாக யாராவது அன்புசெயின் யாருங்காண முடியாத பெருமான் வெளிப்பட்டுத் தோன்றுவன்.

சிவனறமென்பது, மெல்வினையும் நிலவுலகத்தார் ஆற்றுதற்கரிய வல்வினையும் என இருவகைப்படும். பிறவிக்கு ஏதுவாய வினைநீங்கும்படி, அவ்விரண்டனுள் உனக்குப் பொருந்தியதொன்றை நீ கடைப்பிடிக்க.

முதல்வனை வழிபடற்குத் துணையாவன இயற்றுவதும், பல்வகையாக அவனை வழிபடுவதும் எளிதாகச் செய்யக் கூடியவை என்னும் காரணத்தால், அவற்றை மெல்வினையென யாம் செப்பியதென்றறிக.

வரங்களைத்தரும் வயிரவ வேடங்கொண்டு வந்த பெருமானுக்குச் சிறுத்தொண்டர், தமது கரங்களினாலே கறியாக்

கும் பொருட்டுச்செய்த கொடுவினையாய பிள்ளைக் கொலை முதலியவற்றையே வல்வினையென்றேம்.

பாவமென்றும் பழியென்றும் பாராதே, அந்தணனாகிய தந்தையின் தாளினைச் சண்டேசுரர் சேதித்தபோது இறைவன் தானாகின்ற தன்மையை அவர்க்களித்தான்.

வயலிலே கமரிற் சிந்திப்போன கட்டளைப் பொருளாகிய செந்நெலரிசி, செங்கீரை, மாவடு என்பனவற்றைச் சிந்திய விடத்திலேயே இறைவன் அமுது கொண்டருளும் பொருட்டுத்தனது ஊட்டியையரிந்த அரிவாட்டாய நாயனார், பெருமானுக்கு அமுதும்ஊட்டித் தமது பிறவியையும் அறுத்தனர். அவரை வல்வினைக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவதொழிய வேறு எவ்வாறு அவர் பெருமையை எடுத்துப் பேசுவது?

தாம் அளவற்ற பேரன்பினாலே செய்யுஞ் செய்கையைச் சிவன் பொருட்டுச் செய்புமுகத்தானே தம்மையும் அவனுக்கே மெள்ளக்கொடுத்துத் தற்போதமிழந்தவர்களே வல்வினையாளர். தன்னுணர்ச்சியற்றுத் தன் செயலைச் சிவன் செயலாக்கிவிடவே, கொடுவினையாகத் தோன்றுஞ் செயல் பெரும் புண்ணியமாயிற்று. கடன் கொடுத்தவர்க்கே, கடனாளி தன் வேலையை உரியதாக்கிவிட்டால், கடனுந்தீர்ந்து தன் நிலத்தையும் பெற்றவனாதல்போலத் தன்செயலை இறைவனுக்கு உரியதாக்கிவிட்டால், கொடுவினையாகிய பாவமும் நீங்கிப் புண்ணியமும் உள்ளதாகும்.

ஆதாரயோகமென்றும் நிராதாரயோகமென்றும் யோகம் இருவகைப்படும். அவை இரண்டும் மேலான நிலையாகிய திருவடியின்கண் சேர்ப்பிக்கும். ஆதாரயோகம் திருவுருவ வழிபாடாகும். அதாவது, உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களிலே

பெருமானின் பல்வகைத் திருமேனிகளை நினைந்து பேரன்பால் வழிபட்டு ஒற்றுமையுறுதல். நிராதாரயோகம் அகண்டமான பெருமானை அருள் வெளியிலே நினைந்து அவனோடு ஒன்றுதலாகும்.

உடம்பினுள் ஆறு ஆதாரத்திலொன்றில் இறைவனது திருமேனியை ஆசிரியன் காட்டிய முறையிற் கற்பித்து அதனை எண்ண எண்ணத் தன்னுணர்ச்சியானது கற்பித்த நுண்ணிய வடிவத்தில் மறைந்தொழிய அவ்வடிவொன்றுமே தோன்றும். பின்னர் அவ்வடிவுதானாகவே தோன்றப் பெறுதலாகிய யோகமே ஆதார யோகமாம்.

நினைப்பிற் கொண்டதொரு இறைவடிவத்னைக் கோடி பங்கில் ஒன்றாக நுண்ணியதாக எண்ணி நினைந்தால், நினைக்கின்றவனும் அத்துணை நுண்ணிய நிலையடைவன். பின்னர் நினைப்பான், நினைபொருளென்ற உணர்ச்சியும், செய்வது இன்னது என்ற உணர்ச்சியும் ஒழியவே நினைத்த ஒருபொருளே முழுதுமாயிருக்கும்.

ஓங்காரமாய ஐந்தெழுத்தே உமையொருபாகனாகிய பெருமானைக்காட்டவல்லதாகலின், அவ்வைந்தெழுத்து ஆறு ஆதாரங்கட்கு அடிப்படையாய் நிற்கிற முறையையறிந்து, அம்மந்திரத்தின் நுண்பொருளை அறியப்புகுந்து, தன்னுணர்வு கெட்டால் உமை மணவாளன், மலமகல வந்தருளுவன்.

கற்பனை கடந்த பொருளாய் எல்லாப் பொருளிலுங் கலந்துங்கலவாது, உயிரின் உய்திக்குமாறாய பொருளை அகற்றி, தன்னைநீங்காது உடன் நிற்கும் அருட்சத்தியோடு கூடிய பெருமானோடு வேற்றுமையற நிற்றல் நிராதாரயோகமாகும்.

ஞானக்கண்கொண்டு இறைவனைக் காண்கின்றயோகி களே, அவனைச்சுட்டிறந்த நிலையிற் காண்கின்றார்கள். தான் அவனெனவேறு படுத்தறியாது அவனைக் காண்கின்றவர்களே உள்ளபடி அவனைக் கண்டோராவர்.

நிராதாரயோகம் நிலைபெறும்படி பேசாமையாகிய மௌனம் கைக்கொள்ளலாம். மௌனமாயிருக்கின்ற முறையை ஆசிரியன்பாற் பெற்றறிந்து அம்முறையாலே மனமான்து புலன்களிற் செல்லாமையைத் தலைப்பட்டவர்க்கு இறைவன் பிறவியை அறுத்தருள்வன். மௌனமாய் நினைவு இறைவன்பாலொன்றுபடும்வண்ணம் யோகத்திருப்பவருடைய உள்ளத்தினின்றும் அவன் புறத்தே செல்லானென அறிக.

ஓடியாடாதே அசைவின்றி முதல்வனை அறிகின்ற அறிவினைத்தலைப்பட்டு, அவனைத் தேடுதலில்லாது, நின்ற இடத்தே சிவம் வெளிப்படும். உலகிற்பொருந்தி விரும்பிய பொருள்களையெல்லாம் பல்வகையாகத் தேடுவதுபோலத் தேடுமிடத்தே சிவம் விளங்காது.

பற்றுக்களில் விடுதற்கரிய பாசப்பற்றினைத் துடைத் தொழிக்கும் ஒப்பற்ற கருணைப்பரம்பொருளையறிந்து பற்றி, அதனைப் பிரிந்து தன்னை வேறாகப்பார்க்கின்ற பற்றையும் அறவே கைவிட்டால், அந்நிலையிலேயே சிவம் தானேவிளங்கும். இதனை நன்றாக உணர்வாயாக.

உலகப் பொருள் எதனையும் அறிந்து பற்றாதே. உலகப் பொருள்களின் வேறாக நின்னைக் கண்டபோது எழும் நான் பிரமமென்னு மயக்கத்திலழுந்தாதே. கடவுளையும் ஆராய்ந்து அறிந்து விடலாமென்று எண்ணாதே. எவற்றிற்கும் பொது

வாய் நிற்குந் திருவருளோடு ஒன்றினில். காலங்களைக் கடந்ததாய்க் காலவடிவமான பெருமானோடு கால மூன்றினையும் அவனுக்கு வேறென்றறிந்து நிற்க.

தனது அறிவையே அறிந்துபற்றி நிற்பின், அது அசத்துப் பொருள்களிற் பற்றிப் பலவகைப்பட்டு ஒருமைப்புறுமையின், அறிவுக்கறிவாய இறை ஞானத்திற்றன்னறிவு அடங்கப்பெற்று அப்பேரறிவின் கண் உளதாம் சிவானந்தத்தை நுகர்ந்து, தொங்குகின்ற மணியின் நாவேபோல், உலகப் பற்றின்றி வாழ்பவர்களே மனிதருள் துறந்தவராவர்.

உலகப் பற்றுக்கு ஆதாரமாய சுட்டறிவினை விளக்கும் நால்வகைச் சொற்கள் காரணமாக வரும் ஓசைகளெல்லாம் அற்றால், நாத கலையாய முதல்வனது திருச்சிலம்பொலி கேட்கும். அதன்றன்மையைப்புணர்ந்து சென்றால், அது முடிந்த விடத்தே சத்தியொடு கூடிய சிவம் விளங்கும்.

ஆசிரியர் திருவள்ளுவனார் 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்' என்றருளிச் செய்தமையால், சிவ ஞா ன த் தை க் கூடி நிற்றலே சிவ நினைவாம். அச்சிவத்தை நினைக்கிறோமென்ற தன்னுணர்ச்சி கெட்டுவிடின் அதுவே நிட்டை கூடலாம். அந்நிட்டை கைகூடப் பெற்றால், பிறவிக்கு ஏதுவாய வினைப்பற்று ஏற்படாது.

பண்டு தொட்டு உன்னைக் கவர்ந்து மேற்செல்லும் ஐம்புலனைப்பற்றி அவற்றோடு அலமராதே. அவற்றின் வேறாக நீ நின்றபடி நின்றால், நீ பற்ற நினைப்பதன்முன், அருட்சத்தி உன்னைவிரைந்து பற்றவே, முதல்வனும் தன்னுணர்ச்சி கெடும்படியாகத் தோன்றி முன் நிற்பன்.

உயிரறிவினாற்றேடிப் பெறுதல் கூடுமென்ற கருத்தோடு சென்றால், இறைவன் தோன்றானாதலின், அது கூடாதென்பதே முடியும். அவனையறிதலே யியலாதென்ற கருத்தினைப் பற்றின் அவனை அருளாலறியும் முயற்சியின்மையின், அது கை கூடாதென்பதே முடியும். ஆதலின், உண்டு இல்லையென்ற இருகருத்துமின்றி இறை ஞானத்தால் அவனைக் கூட விரும்பிய விடத்தே அவன் உன்னோடுடனாய்த் தோன்றி யாட்கொள்ளுவன்.

உயிர்க்கு ஐந்துடம்பாயமைந்த அசுத்தமாயை முதல் நிலமீறாகவுள்ள முப்பத்தொரு முதலும், அறிவின் மூலமாய நால்வகைச் சொற்கேதுவாய தூய முதல் சுத்த தத்துவம் நான்கும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையான நாததத்துவமாகிய சிவ முதலும், ஆகிய முப்பத்தாறும் உயிரின் வேறாய சடமெனவும், இவை தோன்றி யொடுங்கு முறையீதெனவு முணர்ந்தால், அவ்வுணர்ச்சியுடையோரே பிறவியறுக்கும் வகையறிந்தவராவர்.

அளவற்ற சமயக் கோட்பாடுகளையும் அன்னோர் கூறும் உண்மைகளையும் ஆராய்ந்து பார்த்து நேரம் போக்காது, உலகப் பொருள்களிற் செலுத்தும் சித்தமாகிய தூதுவனைத் தொலைத்து ஞானத்தை நாடிச்சென்றால் ஆராய்ச்சியைக் கடந்த அருட் சத்தி கூறனாகிய முதல்வனைக் கண்டு கும்பிடலாம்.

சித்த விகாரக் கலக்கமொழிந்த பெரியார்க்கு உடல் நீங்குங் காலத்தே யாதொரு கலக்கமுமில்லை. உடலோடுள்ள போதே பற்றுவிட்டமையாற் செத்தாற் போன்ற நிலையடைதலின், சும்மாவிருத்தலாகிய சாதன நெறியும் ஏற்பட்டுச்

சொல்லிலடங்காத ஞானநெறியிற் செல்லுதற்கும் அது துணையாமென அறிக.

ஆசிரியர் திருவள்ளுவனார் விரும்புமிடத்துப் பிறவாமையை விரும்புக, என்று கட்டளையிட்டமையால், அஃது ஒன்றுமே விரும்பற்பாலது. பிற எவையும் விரும்பத்தக்கனவல்ல. அப்பிறவாமை அவாவின்மையை விரும்பின் தானே வந்தெய்து மென்றமையால் நாம் வேண்டத்தக்க முதல்வனிடத்தே அவாவறுத்தலை வேண்டுக.

பாதுகாப்பான திருவடி ஞானத்தைப் பெற்ற இடத்தே அதன் கண் நிலைபெறவேண்டும். சற்று அதனை விட்டு உலகை நோக்கின், அந்தக்கரணத் தொடர்பும், பிராண வாயுத் தொடர்பும் ஏற்படும். அன்றியும் இறைவனது முழுத் தன்மையை அனுபவியாமையும் ஏற்படும். அதனால் உடம்பு நீங்காமையும் உண்டாகும்.

பிறிதோருடம்பு வந்துற்றபோது இருவினைகளுஞ் சென்று பற்றும். அவற்றால் உடம்பு பெற்ற ஞானி தீங்கடைவனேயென்னில், அருட்சத்தி கூறனைய பெருமான் அவனைக் கைவிடமாட்டான். விட்ட குறையை முடித்து வீட்டை விப்பான்.

எஞ்ஞான்றும் எல்லாம் சிவனுடைமையாதலினால் எஞ்ஞான்றும் இருப்பதாய உயிரைத் தொடக்கமற்ற காலம் வருத்திய துயரத்தை எவ்விடத்திலும் நீக்கிக் காப்பது அருளன்னையுடன் கூடிய அப்பனது கடனாகும்.

உயிரின் கண்ணே சிவவடிவமாகிய ஞானத்தைக் கண்டு வணங்கிச் சிவபெருமானுக்கு அன்பு நீரால் திருமஞ்சன

மாட்டித் தன்னை அவனுக்கு வாடாத ஒரு மலராகச் சாத்தி வழிபட்டால் உடல் மீண்டும் எடுத்தலாகிய பிறவியறும்.

தன்னைப் பெறுவதைப் பார்க்கிலும் சிறந்த பேறு இல்லையென்ப. எப்பொழுதும் தன்னைப் பெற்றவன் யார் என்றால், பாசத்தை அறிந்ததுபோலச் சிவத்தைத் தன்னறிவின் கண்ணே கண்டு, பற்றிய பாசப்பிணிப்பற்று இறைவனோடு கலந்து அகண்டமாய் நிற்கப் பெற்றவனே யென வுணர்க.

எல்லாப் பொருளையும் பற்றித் தம் வயமிழந்தால் துன்பமாம், தம் வயமுடைமையாலின்பமாம் என்ற கருத்தை யாராய்ந்து நின் வசமாயிருப்பின், திருவருட்சத்தி மயமாய் நிற்கும் பெருமான், உன்னுடனேயிருந்து உனக்கின்பமளிப்பன்.

அந்தக்கரணத் தொடர்பு அற்றவரே பிறவியற்று முடிவாகிய இறப்பெய்தினவர்கள். தன்னைச் சேர்ந்த திருவருட்சத்தி வழி நிற்பவரே யோகத்திற்றுறைபோகிய மேலோர். எல்லா வகையாலும் நிரம்பாத் தன்மையுடைய கரணங்களிற் கட்டுண்டு திருவருள் வயம் நில்லாதவர் அக்கரணங்கள் செல்லும் வழியெல்லாஞ் செல்வர்.

கண் போன்ற புறக்கருவிகளாலும், மனம் போன்ற அகக்கருவிகளாலும் அறிதற்கரிய கடவுளை மனமுங் கண்ணுங் களிகூரும்படி காணப்பெற்று,பெரிய ஆலமரத்தைத் தன்னகத் தடக்கிநிற்கும் வித்தேபோல அவரைப் பேறறிஞராய சிவனடியார்கள் தங்கள் அறிவகத் தடக்கிநிற்குந் தன்மையர் என அறிக.

வானகமும் மண்ணகமுமாய எல்லா விடமும் நிறைந்த பெரும்பொருளாகிய கடவுளுக்கு அவையெல்லாம் இருக்கை

யாம். அதுபோல அடியார் நெஞ்சகமும் அவருக்கு இடமாம். ஆயினும் பிறவிடங்களில் அப்பொருள் நன்கு விளங்காது அடியாருள்ளத்தே விளங்குதலின், அவர்கள் கூட்டுறவே பண்டை மல வாசனையை நீக்குதற்குத் தக்க வழியாம்.

கல்லிலே முட்டப்புகுந்த திருக்குறிப்புத் தொண்டரும், கமரில் இறை நிவேதனப்பொருள் நழுவினமைக்காகத் தமது ஊட்டியை அறுப்பான் புக்க அரிவட்டாய நாயனாரும், வாளினால் வயிற்றைப் பிளந்திறந்த ஏயர்கோன் கலிக்காமரும், சந்தனச்சாணையினில் முழங்கையைத் தேய்த்த மூர்த்தி நாயனாரும், சூதாடுவதால் இறைபணிக்குப் பொருள் தேடிய மூர்க்க நாயனாரும் சிவனடிக் கீழொருமைப்பட்ட கருத்தினாலன்றோ உலகவாதனையை ஒழித்தார்கள்; உலக நெறியிலே சென்றல்லவே.

அகம் புறம் என்ற நினைப்பு ஒழிய, எங்கும் அகண்டமாய் நிற்கும் பெருமானை வழிபடப் பழகியவிடத்தே அவர் தமது அருட்சத்தியோடு உன்மாட்டுத்தோன்றி யருள் புரிவர். ஆதலால் அறிவு நெறி அல்லது அன்பு நெறி என்ற இரண்டில் ஒன்றைக் கடைப்பிடிக்கவேண்டும்.

கண்ணப்பர தன்மைப்போன்றதொரு அன்பில்லையென்று மணிவாசகனார் அருளியபடியால், கண்ணப்பர்க்கீடாகவே சொல்லத் தகும் அவரன்பினைக் கண்ணப்பரும் காளத்தியப்பருமே அறிவாரன்றி அது பிறரறியுந் தரத்ததன்று.

துணியில் முடிந்த நிவேதனத்தை அவிழ்த்து அதிலிருந்த மலர்ந்தகளியைத் தாழ்மை மிக்க மெய்யன்புடன் சேந்தனார் விரிசடை வேந்தனார்க்குப் படைக்க அது அப்பெருமானார்க்கு இன்னமுதமாயினது காண்க.

திருஞானசம்பந்தப் பெருமான், உமையம்மையார் சிவஞானத்தைத் தனது நகிலிற் சுரந்த பாலொடு கலந்துகொடுத்திட அதனைப் பருகினரென்று கேட்டவளவிலேயே மங்கையர்க்கரசியாராகிய பாண்டிமா தேவியார் திருநகில் சுரந்தனர். அவரது தாழ்மன நிலையும் மெய்யன்பின் மிகுதியும் இருந்தவாறு காண்க.

இறைவனை உள்ளன்போடு அன்பே அன்பேயென அழைத்துருகித் தன்னுணர்ச்சியிழக்கும் பேரன்பே பெரும் பயன். பிறபுனிதநீர் முழுக்கு, கடவுள் நினைவு, மலர் தூவிப் போற்றல் எல்லாம் நேரே வீட்டிற்கு வாயிலாகா.

எல்லா அறிவு நூல்களின் கருத்தையும் யானறிந்த அளவு பார்க்குமிடத்து மலவாசனையை யொழிப்பதற்கு அன்பு செய்தலே தக்க உபாயமாம். குற்றமற்றதாக அவற்றாற் கண்ட நெறியிதுவே.

வித்தும் முளையும் போலச் சிவஞானமும் அதன் பயனாய சிவபோகமுமாம். வித்திடத்து முளையைக் காணாமையால் வித்தைக் கைவிடுவார்போல ஞானத்தின் பயனுணராதவர் ஞானத்தைப் பெறமுயலார். ஞானத்தைப் பெற்றவர்கள் அந்நெறியிற் பயின்றொழுகாமையால் சிவபோகத்தை யிழத்தல் கூடும்.

சிவமென்பது அத்துவிதமாய் உயிரறிவிற் கலந்து நிற்றலால் அந்நிலை ஒன்று என்று சொல்லக் கூடாதது; இரண்டென்றுஞ் சொல்லக் கூடாதது. தோன்றாமையால் உளதென்று சொல்ல வொண்ணாதது. ஞானிகளுக்கு அநுபவப் பொருளாதலின் இல்லாததன்று. நன்மை தீமை முதலியன நிகழ்தல் அவன் கட்டளையாதலால், அவன் செயலை நல்ல

தெனவும் தீயதெனவுங்கூற உயிர்களுக்கு இயலாததாகும். அது பாசத்தோடு நின்றநிலை அன்று. பசுவுமன்று. பசு போதமுமன்று. ஆதியுமன்று. அந்தமுமன்று.

பொறியடக்கத்தோடு இறைவன் திருவருளை எதிர்பார்த் திருக்கும் அமையம் பார்த்து, இறைவன் உயிரைச் சும்மா இருக்கும் நிலையிற்செலுத்துவன். ஆங்குப் பெறும் சிவஞானத் தின்முன் அவாவினை வளர்க்கும் ஆணவமலம் நிலைபெறு தொழியும்.

காலம், இடம், திசை, இருக்கை என்பவற்றைப்பற்றிய நியமங்கள் ஞானநெறி நின்று இறைவனது கலப்பை உடைய உயிர்க்கு இல்லையாம்.

செயற்கரியவற்றைச் செய்து பெறுதற்கரிய பேறாகிய வீட்டினைச் சிலர் தலைப்பட்டார். நாம் ஒன்றுஞ் செய்யா திருத்தலாகிய ஒன்றைச் செய்து அதனைப் பெறக்கூடுமாயி னும், அச்செய்யாமையைத்தானும் யாம் கடைப்பிடியாதிருத் தல் எத்துணைத்தவறு?

சிவதன்மம் முதலிய நெறிகளில் ஏதாவது ஒரு நெறி யில் நிற்றல், அல்லது சும்மாவிருந்து இறையருள் நோக்குதல், அல்லது உயர்ஞான ஒழுக்கமாகிய பரம்பொருளையே பார்த் திருத்தல் ஆகிய இவற்றுள் ஒன்றுஞ் செய்யாது மக்கள் உண்டு உடலை மட்டும் ஓம்பியிருப்பதாற் பயனென்? ---

வீட்டுநெறியில் நின்று செயலற்றிருந்தாலென்? உலக வழியிலேநின்று புண்ணிய பாவங்களைச் செய்தாலென்? ஞான மாகிய வாளினை உள்ளத்தே துணையாகக்கொண்டு நில்லா விடின் தக்கன்செய்த பெருவேள்வியேபோல நின்செயல் தீய பயன்விளைத்தல் கூடும்.

சிவன் இறைமையன்றி வேறு இறைமைப் பொருள் இல்லையென்றும், எனதறிவுஞ் சிவனுடைமையே யென்றும் என் செயலும் அவனது செயலாகின்றதென்றும் கொண்டு தன்செயலற்றிடின் சிவமாதல் கூடும்.

இற்றைய ஞான்று இச்சிவமுதனெறியிலன்றி, ஒப்பற்ற ஞானத்தை மொழிந்து அருட்சத்தியுடன் இறைவன் திரு நடம்புரிந்தது பிறசமயத்திலும் இல்லை. இச்சமயத்திற் போல எலும்பு உயிராகும்படி அடியார் பாடியதும் பிற எச் சமயத்திலுங் கேட்டதில்லை.

உலகெலாம் அறிந்தும் அறிவித்தும் அதன்கண் துடக் குறாதுநிற்கும் அருட்சத்தியோடு கூடியபெருமானைத் தமது அறிவிற்பெற்ற பெரியோர்கள் சுட்டற்ற விரிந்த அறிவுடைய ராய்ச் சிவபோகத்திலழுந்தி, அதனாலுண்டாம் பேரானந் தத்தை விழுங்கி, ஊழினால் உலகம் தோன்றினும் அதனை அழுந்தி அறியாதுநிற்பர்.

தத்துவங்களாகிய இருக்கையும், உயிராகிய இருப்போ னும் ஆகிய இரு வகையிலுங் கலந்து நிறைந்து நின்ற பெருமானை அறிவாசான் நல்கிய திருஞானத்தாலறிந்து, உயிராகிய அறிவுடைப் பொருளை முதல்வனாகிய பேரறி வனிடத்தே செலுத்தி உயர்ஞானச் செல்வராய்த் திகழ்வர் மலம் நீங்கிய பெரியோரென வுணர்க.

ஞானிகள் ஒடுங்க உலகமொடுங்கும்; அவர்கள் உலகை நோக்கின் உலகம் உணர்ச்சியுடையதாகும். அவர்கள் சினந்தால் செல்வமும் புகழும் கல்வியும் தங்கா.

உயிரறிவாலறியப்படாத மேலான அருட் சத்தியுடன் கூடிய பெருமான் ஞானிகட்கு நனவிலே புலனும் வண்ணம்

கலந்து தோன்றி, தனது செயல்களை அவர்கள் வாயிலாகச் செய்வித்து, அவர்களுடையனவாகத் தோற்றுவிப்பன்.

புகலிவேந்தர் பொருட்டுத் திருக்கொள்ளம்பூதூரிலே ஓடத்தைச் செல்வித்தும், சிவிகை, குறையாத பொன் முடிச்சு, பொற்றாளம் முதலியன நல்கியும், ஆண் பனையைப் பெண் பனையாக்கியும், திருப்பாடலால் மறைக்காட்டில் கதவ மடைப்பித்தும், பாலையை நெய்தலாக்கியும், ஏட்டினை ஆற்றி னெதிரே செல்வித்தும், தீயில் ஏட்டினைக் காத்தும், பாண்டிய னுக்கு வெப்புநோய் தீர்த்தும், எலும்புக்குயிர் கொடுத்தும், இறைவன் தன் செயல்களை அவர் செயலாக்கினன்.

கொல்லவந்த யானையாலும், நீற்றறையிலும், நஞ்சாலும் நேரக்கூடிய கொலையைத் தவிர்த்தும், கல்லே தெப்பமாகக் கடல் நீந்திக் கரையேறியும், திருமறைக்காட்டில் திருக்கதவு திறப்பித்தும் திருவாமூர் அடிகள் அருட்செயல் செய்தமை காண்க.

பெண்டிர் வேட்கை விட்டவர்க்கே வீடு நல்குவதாக அருள் நூலுள் மொழிந்த பெருமானைத் தான் விரும்பிய மாதின்பால் தூது விடுக்கும் வன்றொண்டர் செயலை என் னென்று சொல்வது?

திருவாதவூரடிகளாகிய தேன் போன்ற இனிய தன் மையார், பரிமேல் வந்த பரமானந்தக் கடவுள்மீது திருவாச கம் திருவாய் மலர்ந்து, மயக்கந் தரும் பிறவி வாசனையை எமக்குத் தொலைத்தருளினர்.

சிவனையறிந்து கூடிய யோகத்தால் இம்மை மறுமை அச்சங்கள் தீர்ந்த அடியார் எக்காலத்திலும் எவ்விடத்திலுஞ் செல்லும் பேராற்றல் பெற்றியங்குதலால், சிவயோகமே

யோகங்கள் பலவற்றினுஞ் சிறந்தது. பிறவகை யோகங்கள் பிறவியைத் தொலைக்கப் பயன்படா.

மனிதர்பால் மன்னன் அருள் செய்தல் எவ்வாறோ, அவ்வாறே உயிர்களிடத்து ஈசனருளுமாம். அதாவது தகுதியறிந்து பயனளித்தல். எல்லாவுயிரும் ஈசனுடைய அடிமைகளேயாயினும், யோகிகளும் ஞானிகளுமே சிறந்த ஒப்பற்ற அடியாராவர்.

சிவஞானம் பெற்ற யோகிகள் உடம்போடிருக்குங்காலை, சிற்றின்பத்தை ஊழ்வலியால் நுகர நேர்ந்தாலும், அதனைப் பேரின்பமாகக் கருதுவாராதலின், அதனால் பிறவிக்கு வித்தாய் வரும் வினையாதுமில்லை. சிற்றின்பத்தொடர்பானுளவாம் மாய்வுந்தேய்வுமில்லை.

திருப்பாற்கடலில் உண்டான அமுதத்தை உண்டவர்களே அதன் சுவையைக் கண்டு சாவு நீங்கினவராவர். அதுபோலப் பேரின்ப வடிவமான பெரிய சத்தியோடு ஒப்பற்ற இன்பமுடையானைக் கண்டவர்களே பேரின்ப நுகர்ந்து பிறவியறுத்தவராவர்.

நமது கையினால் நாம் செய்யுங் காரியங்களெல்லாம் செய்தல்போல, உமையம்மையால் உலகமெல்லாம் உண்டாக்கிக் காப்பவன் முதல்வன். அவ்வருட்சத்தி நடுவே சிவம் நிற்றலின், அருட்சத்தியின் செயலெல்லாம் சிவன் செயலாகவே கருதுக.

பொன்னின் மாற்றானது பொன்னாலாய பணியினும் பொற்கட்டியினும் ஒரு தன்மையதாயிருப்பதுபோல, அப்பனும் அம்மையுமாம். அம்மை எவ்வடிவமாயிருக்கின்றாளோ, அவ்வாறே இறைவனும் அவளுடன் கலந்திருப்பன். அதாவது

ஐந்தொழிலியற்றுதற்பொருட்டுச் சத்தி வெவ்வேறு வடிவங் கொள்ளினும், சிவபெருமான் ஒருதன்மையாக அவளுடன் கலந்திருப்பன் என்பதே கருத்து.

நுண்ணிய ஐந்தொழிலிலே இறைவர் சத்தியோடு ஒத்து நிற்பர். பருவுடம்புளதாகற்பொருட்டுச் சத்தி கூறனுகவு மிருப்பர். அதிகாரிகளாய ஐவரை அதிட்டித்து எவ்விடத்தும் அம்மை செயற்குத்தலைமைபூண்டிருப்பர். ஒடுக்கத்திலே நாத தத்துவ முடிவிலேயும் சத்தியோடிருப்பர். நாலாந்தொழி லாகிய மறைப்பாற்றற்கண்ணும் சத்தியோடியைந்து நிற்பர். உலகங்கடந்த அருள்வெளியிலே பராசத்தியோடிருப்பர். சத்தியை உள்ளடக்கித் தனியேயுமிருப்பர்.

பலவேறு முரண்பட்டனவாகத் தோன்றுங்கொள்கை யுடையநூல்கள் ஒருங்கு ஒத்து ஒன்றைத் துணிந்தியம்ப மாட்டா. அவற்றைப் பின்பற்றி யொழுகு மக்கட்கு, யான் ஏதாவது சொல்லக்கூடுமா? ஏதாவது சொன்னல் அது அவர்கள் உள்ளத்தில் ஏறுமா?

எக்காரணத்தாலும் எல்லா உலகிலுமுள்ள எல்லா வகைப் பொருள்களும், மாதொரு பாகனுரது அடையாளங் களே ஆகும். ஆதல்பற்றி, ஒற்றுமைப் படுத்தியும், அவற் றின் வேருதல்பற்றி வேற்றுமைப் படுத்தியும், இரு தன்மை யும் இருத்தல்பற்றி இடைநிகர்த்தாயும் பேசுக. எவ்வாறு பேசினும் உண்மை நோக்கிப் பொருந்துமாறறிக.

யாவற்றையும் படைப்பான், நிலம், நீர், நெருப்பு, கால், வான், மதி, ஞாயிறு, உயிர், ஆகியவற்றைத் திருமேனியாக் கொண்டானும், உயிர்களைக் காக்க, மன்றினில் நடம்புரிந் தானும், மாதொடுமாத்திரம் கூடி ஒடுங்குங் காலத்து ஆடின

னும் ஆகிய பெருமானது தன்மையை, அவன்றன்னைத் தோற்றுவியாது உலகந் தோன்ற நின்றதுபோலத் தன்னுணர்ச்சி தோன்றப் பெறாது அவனோடு அத்துவிதமாய் நின்ற பெரியோரன்றிப் பிறர் அறியார்.

சிவத்தோடத்துவிதமாய்ச் சிவநினைவொன்றேயுடையரா யிருப்பதன்றி, இவ்வுலகில் சிவத்தைத் தன்னின் வேறென் றுணர்வாரும் அறிவு கெட்டுச்சிவம் அடையப் பெறுவாரும் வீட்டினராதலுண்டோ?

சிவமும் உயிரும் வேறென்றும், உயிரே சிவமன்றிச் சிவமென ஒன்று வேறில்லை என்றும், நான் சிவமேயாய் விட்டேனென்றும், தம்மை யுணர்ந்த அறிவர்கள் வேற்றுமை யாகவும் ஒருமையாகவும் பேசுவாரோ? பேசாரென அறிக.

எல்லாம் முடிவுற்ற காலத்திலே, ஒரே முதற்பொரு ளாய்ப் படைப்புக் காப்புக் காலத்திலே சத்திசிவமென இரண்டாய் ஒவ்வொரு படைப்புத் தோறும் மாறுது தோன் றும் எண்வகை வடிவனும் தன்றன்மையால் வேருய்த் தலை வனுதலின் உடனுயிருந்தலைத் தனது கடனுகக் கொண்டான் கடவுளென்றறிக.

உன்வயிற்றிலே கிடந்த புழுப்படுந் துன்பமெல்லாம், உன்னுடைய துன்பமென்று சொல்லமாட்டாய், நீ அவற்றை நுகராமையால். அவ்வாறே சிவன்பால் நின்ற மன்னுயிர் கள் தோன்றுவது மழிவதுமாய செய்கை வகைகளால் அவை துன்புறுமேயன்றி அவன் துன்புருனென அறிக.

நிலமுதலியசடவுலகெல்லாம் அவனே அறிவால் நிறைந்து நிற்பவன். அவனே உயிர்களறிவுக்கறிவாய்நிற்பவன். அவனே ஆண் பெண் அலியென்ற முத்திறப்படைப்பிற்குமாதியாய்

நிற்பவன். இத்தனைவகையாக நின்றும் உயிர்களால் காணப்படாமல் நிற்பவனும் அவனே.

இன்று நீ என்னை உடம்பு வழியாகப்பார்த்தும் அதனின் வேறாகக்கண்டதுண்டோ? அவ்வாறே நானும் உன்னைக்கண்டேனோ? இல்லையே. அங்ஙனமாயின் மாயைப் பெருமறைப்பிற்கப்பாற்பட்ட இறைவனை அவன் காட்டுவித்தாலன்றிக் காண்பார் யார்?

கடலிலே அலைகளால் அலைப்புறுது ஆடும்படி நின்றவர்க்கும் கடலின் ஆழத்தையும் அகலத்தையும் அளத்தலரிது. அதுபோல முதல்வன் அன்பரை ஆண்டவிடத்தும் அம்முதல்வன் உயிரின் கருத்தால் அளவிடப்படுதற்கு அரியன் என்றுணர்க.

சிவனெனவே தேறினன்யான் என்று மணிவாசகர் அவனிமீதுவந்த பெருமானைக்கூறினாரல்லரோ எனின், கடல் நீரின்கண் உப்பானது நிறைந்து உருக்கொண்டமைபோல இறைவனும் ஆசிரியனாக அருளாலே திருமேனி கொண்டான் என்றறிக.

இறைவன் தனது திருவருளால் ஆசிரிய வடிவங் கொண்டு நிற்கின்றானென்றறிக. இறைவன் அருளுருக் கொண்டு ஆசிரியனை அதிட்டியாவிடத்தே, ஆசிரியனாகிய உயிர் யாதொருபயனையும் நல்காது. மரம் பலனளிப்பதன்றி மரத்தைப்பற்றிய புல்லுரி, மரத்தின் பலத்தைக்கொடுக்க வல்லதோ?

வீடுபெறுதற்குரிய உயிரென்னுங் கொடிமீதே, ஆணவமான கொடிபடர்ந்து உடம்பென்னும் பழம்பழுத்தது. அவ்வாணவக்கொடியை அருளென்னுங் கத்தியினால் அறுக்கவே

முத்தியெனும்பழம் பழுத்தற்குரிய சிவமாகிய ஒருதனிக் கொடி விளங்கித்தோன்றும்.

இறைவன், ஆசிரியன்றிருமேனியின்பால் அருட்சத்தியோடுந்தோன்றி, குற்றமற்ற அருள்வெளியிலுள்ள பரமானந்தத்தை நல்கும்வடிவுடனிருந்து, எனது விலங்காகிய ஆணவத்தைத்தொலைத்துத் தன்பொன்னடியை என்புன்றலைமேல் வைத்தனன்.

இறைவர் என்குற்றமாய பாசங்களை யறுத்து, என்னை ஆட்கொண்டு, என் நினைவுடன் நினைவாய்நின்று நினைவுமுற்றிய இடத்திலே பேரானந்தமயமாய் நிற்பர்; நான் வேறு எதனைக்காண்கினும் அக்காட்சிப் பொருளிலேயும் நிற்கின்றார்.

திருவியலூரினைஉடைய சிவயோகியாகிய ஆளுடையானென்னுந் திருநாமமுடையான், எம்போலியரையும் ஆட்கொள்ளும் கருணைஉடையவன். அடியாரைக்காப்பாற்றுந் தலைவன். இப்போது பிறவியில் உழலும் எனது வேகத்தை மாற்றித்திருவடியின்கீழ் என்னைவைத்தான்.

பலவகைத் திண்ணிய நிறப்பொருள்களைக்கலந்து தன்னொளி விளங்காதிருக்கும் படிகம்போல மாயைப் படைப்புக்களிலே பொருந்தி அலமராவண்ணம், பக்குவகாலத்தே தன் திருவடிகளைத் தந்து என் பிறவிவேரை அறவேகெடுத்தார்க்கு நான் அடிமையாயிருத்தலன்றி வேறு யான் செய்யும் கைம்மாறு யாது?

இப்போதே இறைவன் வீட்டினை அளிப்பினும், நான் அதனை விரும்பி நினைந்தபோதே ஆனந்தமளித்திடினும்,

அடியார் தலைவனுக்குந் தலைவிக்கும் நான் எப்போதும் அடிமையாயிருத்தலையன்றி வேறறியேன்.

என்னை எப்போதும் உடைமையாகவுடைய பெருமான் வந்து என்னுடன் கலந்து என்னறிவளவில் என்னைத்தன்னடிமையாகக்கொண்டமையால், என்னை நான் அறியப்பெற்றேன். தம்மையறிந்த பேரன்பர்க்கு அடிமையாய் அவர் கூட்டத்திற் சேர்ந்து ஒழுகப்பெற்றேன்.

என் உள்ளத்திலும் என் சென்னியிலும் திருவடி வைத்து ஆட்கொள்ளவந்த பெருமானை, மீண்டும் பிறவாத நிலைதந்தவனை அவனது திருவருட்சத்தியுடன் எப்போதும் எவ்விடத்தும் அவன் வாழ்ந்தருள்க என்று வாழ்த்துதலன்றி வேறு எதுசொல்லி அவனை நான் இப்போது வாழ்த்த முடியும்?

திருக்களிற்றுப்படியார் முற்றிற்று.



மெய்கண்ட நூல்கள்

# சிவஞான போதம்

# சிவஞான போதம்

**மங்கல வாழ்த்து**

கல்லால் நிழல்மலைவு
இல்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

உரை:- *ஆதியில் அருள் வடிவாகிய கல்லாலமர நிழலின் கண் எழுந்தருளியிருந்து, நான்குமுனிவர்க்கு மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர், மேன்மேலருள் செய்தற்பொருட்டு, சுயம்புமூர்த்தியாகிய பிள்ளையாரது அறிவாற்றல், செயலாற்றல் என்ற இரண்டு திருவடிகளை மெய்யன்பர் தலைமேற் கொள்வர்.*

*அவையடக்கம்*

தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை யெமையிகழார் — தம்மை
யுணராா் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்.

உரை:- (*உடைமைப் பொருளாகிய*) *தம்மியல்பினை உணர்ந்து தம்மை உடையானாகிய தலைவனை உணர்ந்தவர்கள், தமக்கு உடைமையாக எம்மை உடையவர்களாதலின், எம்மை அன்பாற் பாராட்டுவரேயன்றி இகழமாட்டார். தம்மை உணராதவர்கள் தலைவனையும் உணராதவர்களே. அவர்கள் ஒருங்கு சேர்ந்து தம்முள் ஒற்றுமைப்படமாட்டா ராகலான், அவர்களது புறங்கூற்று மொழியை யாம் பொருளாகக்கொள்ளாம்.*

# பொதுவதிகாரம்

## பிரமாணவியல்

### முதற் சூத்திரம்

அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்(து) உளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

இச்சூத்திரம், ஒடுங்குதற்குக் காரணமாயுள்ள முதற் கடவுளையே இவ்வுலகம் தனது தலைவனாக வுடையது என்பதை உணர்த்துகிறது.

உரை:- அவன், அவள், அது என்று பகுக்கப்படும் உலகத் தொகுதி தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல், ஆகியமூன்று தொழிலுடைமையால், அதுஒருவனால் தோற்றுவிக்கப்பட்டு உள்ளதேயாம். அது தான் ஒடுங்குதற்குக் காரணமான கடவுளாலேயே தோன்றுவது. உயிர்களின் ஆணவமலம்தீர்ந்து ஒடுங்காமையால், அது ஒடுங்கியதோடு நில்லாது மீளவும் உண்டாகும். அதற்கு ஒடுக்கமாய் முடிவைச் செய்யும் அந்தக் கடவுளே ஆதியுமாகின்றான் என அளவை நூலறிந்தோர் கூறுவர்.

### முதல் அதிகரணம்

உள்ளதாய்க் காணப்படும் உலகின் கண்ணே, அவன் அவள் அது எனும் வகையுள் அடங்கும் ஒவ்வொரு பொருளிலும் தோற்றமும் ஒடுக்கமும் நிகழக் காண்டலின், அப் பொருள்களின் தொகுதியாகிய உலகும் தோற்றம் நிலை முடிவு என்னும் முத்தொழிற் படுவது என அறிக.

தனித் தனிப் பொருள்கள் தோன்றி நின்று ஒடுங்குவது போல, உலகம் முழுவதும் ஒரு காலத்தில் தோன்றி நின்று ஒடுங்கும். ஒரு வகைப் பயிர் அல்லது ஒருவகைப் பூச்சிகள் ஒரு காலத்தில் ஒருங்கே தோன்றி நிலை பெற்று ஒருங்கே அழியப் பார்க்கின்றோம். இதிலிருந்து உலகமும் அவ்வாறாகும் என்பது ஊகித்தறியப்படும்.

## இரண்டாம் அதிகரணம்

இல்லாதது எக்காலத்தும் தோன்றுவதில்லை. உள்ள பொருளே தோன்றும். உலகம் தோற்றம் உடையதாதலினால், அது உள் பொருளாகும். உள் பொருள் காரணநிலை, காரிய நிலை என இரண்டு நிலைமையை யுடையது. காரண நிலையில் அது புலனாகாமல் நுட்பமாய் இருக்கும். காரிய நிலையில் அது வெளிப்பட்டுத் தோன்றும். ஒரு பொருள் காரண நிலையிலிருந்து காரிய நிலைக்கு வருவதே அதன் தோற்றம் எனப்படும்; காரிய நிலையிலிருந்து காரண நிலைக்கு மீள்வது அதன் ஒடுக்கம் எனப்படும். ஒடுங்கிய பொருள் தோன்றும் போது ஒடுங்கியவாறே மீளத்தோன்றும். நெல்வித்திலிருந்து நெற்பயிர் முளைப்பதேயன்றிக் கரும்பு உண்டாவதில்லை. உலகம் மாயையில் ஒடுங்கி அதிலிருந்து மீளத் தோன்றும். அஃது ஒடுங்குவதெதற்காகவெனில் உயிர்களின் வினைகள் பக்குவப்படுதற்பொருட்டு என்க. மீளத் தோன்றுவானேனெனில் உயிர்களின் அறிவை மறைக்கும் ஆணவ மலம் நீங்குதற்குரிய பக்குவமடைதற் பொருட்டெனஅறிக.

உலகம் சடமாதலின் அதனைத் தோற்றுவிக்கும் பொருட்டும் ஒடுக்குதற்பொருட்டும் அறிவுடை முதல்வன் ஒருவன் வேண்டும். உலகம் தான் ஒடுங்கிய பொருளினின்

றும் ஒடுங்கியவாறே தோன்றுதல் வேண்டுமாகலின், அதனை ஒடுக்கிய கடவுளே அதன் தோற்றத்திற்கும் காரணன் ஆவன். உலகம் ஒடுங்கியது காத்தற் கடவுளாகிய வாசுதேவ னில் என்றுரைப்பின், நில முதல் மூலப்பகுதிவரையுள்ள இருபத்துநான்கு தத்துவங்களே அக்கடவுளால் ஒடுங்குதல் கூடும். இருபத்துநான்காந் தத்துவத்திற்கு மேற்பட்ட தத்துவ புவனங்களை யொடுக்குங் கடவுள் வேறேயுளன். அவன் இருபத்தைந்தாம் தத்துவத்தை யொடுக்கும்போது அத்தத்துவக் கடவுளையும் அவனுக்குக் கீழ்ப்பட்ட அயனை யும் ஒடுக்குவன். மேலும், வாசுதேவனே மூலப் பிரகிருதி யென்பார்க்கு மூலப்பிரகிருதியாகிய தத்துவம் ஒடுங்குங்கால், வாசுதேவனும் ஒடுங்குமென்பது போதரும். சடமாய உலகம், மாயையிலொடுங்கித் தோன்றுதலின், மாயை உலகிற்கு வித்துப் போல்வது. அம்மாயை அசேதனமாதலின், அதற்கு ஆதாரமாய இறைவனது சத்தியினாலேயே அது தொழிற் படும். நிலத்தின் தட்ப வெப்பத்திற்கேற்றவாறே வித்து முளைத்துவரும். மாயையாகிய வித்திற்கு இறைவன் ஆற்றல் நிலம்போல ஆதரவாயுள்ளது. மாயை தொழிற்படுதல், உயிர்கள் உடம்பெடுத் தியங்குதற் பொருட்டென்பது தெளிவு. உயிர்களை யெல்லாம் ஒப்பநோக்கும் முதல்வன் எல்லா உயிர்களுக்கும் ஒரு தன்மையான வாழ்வை நல்க வேண்டும். அவ்வாறின்மை கண்கூடாதலின், அதற்குக் காரணம் உயிர்களின் வினையாகும். குளவியாதற்குரிய புழுவிற்கு அவ்வுருவைக் குளவி கொடுத்தாற்போல, உயிர் களின் வினைக்கேற்ற வடிவத்தை இறைவன் கொடுப்பன்.

இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்துங்காலை, உருவம் வேண்டுவானல்லன். உருவம் தோன்றியழியும்

தன்மை உடையது. உடலையியக்கும் உயிர்க்கு உருவம் வேறு வேண்டாமைபோல, உலகத்தை இயக்கும் இறைவனுக்கு உருவம் வேண்டுவதில்லை. உடலின் பகுதிகள் உயிர்க்குக் கருவிகளாதலால், உயிர் உடலிற் கட்டுண்டு நிற்கும். இறைவன் அத்தகைய கருவிகளின்றியே எண்ண மாத்திரத்தால், ஆக்கியளித்தழிப்போனாதலின், உலகத்திலே கட்டுப்படாது நிற்பன். இறைவன் உலகத்தை அனுபவியாதலின் ஒருவன் தான் கண்ட கனவை நனவிலே நினைத்துப் பார்க்குங்கால், அதன்கண் அவன் தொடக்குறாமை போல இறைவன் உலகத்திலே தொடக்குறான்.

## மூன்றும் அதிகரணம்

பொருள்களைச் சுட்டியறியும் இயல்புடைய உயிர்த்தொகுதி, சுட்டாது அறியும் இயல்புடைய ஒடுக்குங் கடவுள் கட்டளைப்படி நிற்றலன்றித் தம் வயமாய் நில்லாமையாலும், ஏனைக்கடவுளர் உயிர்த்தொகுதியுள் அடங்குதலாலும் ஒடுக்குங் கடவுள் ஒருவனே உலகிற்கு முதல்வன் ஆவான் என்றறிக. உயிர், உலகம் என்பவற்றுள் ஒன்றுமாகாத ஒரு பரம்பொருளால், உயிர்கள் உடம்பொடு தோன்றி, நின்று, ஒடுங்குதலால் அந்த முடிவான பொருளே உலகிற்கு முதலாகும். உயிர்கள் பலவும் பரம்பொருளினின்று இயற்கையில் வேறுபட்டனவாமாகலான், முத்தி நிலையினும் அவை அப்பொருட்கு அடிமையாவனவே. சுட்டியுணரப்படாத பரம்பொருள் பேராற்றலுடைமையின், அஃதொன்றே உலகை ஒடுக்கவுந் தோற்றுவிக்கவும் வல்லதாம். இரண்டாவது மிகையாகும். ஆதலால் முழுமுதற் கடவுள் இருவரென்று கொள்ளுதற்கிடமின்மை தெளிக.

## இரண்டாஞ் சூத்திரம்

அவையே தானே ஆய் இரு வினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்கும் அன்றே.

இச்சூத்திரம் மறு பிறவி வரும் வகையை உணர்த்து கிறது.

உரை:- சங்கார காரணனாகிய முதல்வன் உடலிலேயுயிர் கலந்திருப்பதுபோல, உயிர்களிற் கலந்து அவையேயாயும், பொருட்டன்மையால் அவற்றின் வேறாகியும், கண்ணும் உயிரி னறிவும் ஒரு பொருளை ஒருங்குகாணுதல் போல, உயிர்க்குயி ராயிருந்து உயிரோடு உடன் அறிதல்பற்றி உடனாயும் இருக் கின்றான். அப்படி நின்று, உயிர்கள் இருவினையினாலே இறப்பும் பிறப்பும் புரியும்படி, அவ்விரு வினைகளைச் செலுத்துவதாகிய ஆணையென்னுந் தனது அறிவாற்றலோடு (சிற்சத்தியோடு) பிரிவின்றி விளங்குவன்.

இதனுள் முதல்வனது பொது இலக்கணம் கூறுமுகத் தானே, அவனது சத்தியும், வினையும், மாயையுமுண்மை குறிக்கப்பட்டது. சத்தி, அவனுக்குக் குணமும், மாயை உடைமையுமாம். இருவினை கூறவே, அவற்றிற்குப் பற்றுக் கோடாய மாயையுங் கூறியவாறாயிற்று. உலகமாகிய காரியத் திற்குச் சத்தி மூலமாகிய துணைக்காரணம். இருவினை அவன் சத்திவழி நிற்பதாகிய இடையாய துணைக்காரணம். மாயை முதற் காரணம், இறைவன் நிமித்த காரணம்.

### முதல் அதிகரணம்

இறைவன் உயிர்களின் அறிவில் இரண்டறக் கலந்தும், தன்மையால் அவற்றின் வேறாகியும், அவற்றைத் தொழிற்

படுத்துதற் கண் உடனும் நிற்கின்றான். முதல்வன் உயிர்களிலிரண்டறக்கலந்து நிற்றலை வடநூலார் 'அத்துவிதம்' என்னும் சொல்லாற் குறிப்பர்.

இறைவன் உலகத்தோடு அத்துவிதமாய் இருக்கிறான் என்று சொன்னவளவிலேயே அச்சொல் இரண்டில்லாமை யென்று பொருள்பட்டு ஒருமையை புணர்த்துமென்றால், ஒருமையைச் சுட்டி அறிவதாகிய பொருள் வேறாக இருத்தலால், அத்துவிதமென்றசொல் ஏகத்துவத்தை புணர்த்தாமல் இரண்டு பொருள்களின் அந்நியம் இன்மையை உணர்த்துவதாயிற்று.

நரம்பு முதலியவற்றாற் கட்டிய உடம்பையும் ஐம்பொறி முதலிய கருவிகளையும் உடைய உயிரை உடம்பிற்கு இட்ட பெயரால் அழைத்தவுடன், அது ஏன் என்று பதில்விடுக்கும். அதற்குக்காரணம் உயிர் உடம்பிலே பேதமில்லாமற் கலந்திருப்பதே. அதுபோல, இறைவன் உயிர்களோடு வேற்றுமை தோன்றாதவாறு கலந்திருப்பன். ஆயினும், அவன் உயிராகமாட்டான். உயிர்களும் அவனாகமாட்டா. அவன் உயிராகியும், உயிரின் வேறாகியுமிருப்பன்.

உபநிடத முதலியவற்றுள் ஒன்று என்றது ஒருபொருளைக் குறித்தேயாம். அதன் கருத்து, கடவுள் ஒருவரே யென்பது. இதனையறியாமல் ஒன்றென்று சொல்லுகின்ற உயிர் பாசத்தோடுள்ளது. ஆதலால் அது பதியாகமாட்டாது. கடவுளையன்றி ஒன்றில்லை யென்றது, அகரவுயிரின் தொடர்பில்லாமல் பிறவெழுத்துக்கள் தோன்றுதல் இல்லையென்றாற் போல என்க. இந்த முறைபற்றியே ஞானநூலானது, கடவுள் இல்லையாயின் ஒருபொருளும் இல்லையென்றது.

பண்ணில் ஓசையடங்குவது போலவும், பழத்திலே சிறப்பாகக் கருதப்படுஞ்சுவை அடங்குவதுபோலவும், உலகெங்கும் வியாபகமாயிருக்கிற இறைவனது திருவருள் உயிர்களில் இரண்டறக்கலந்து நிற்பதால், அரியமறைகள் ஒன்றென்று சொல்லாது கடவுள் அத்துவிதம் என்றியம்புவன.

இங்குக்கூறிய உவமைகள் திருவருள் வியாபகத்துள் உயிர்கள் அடங்கி நிற்கும் முறைமையே குறிப்பன.

சிவப்பு மெழுகோடு சேர்த்து அணைக்கப்பட்ட கற்பொடியானது உருகி யொருங்குசேர்ந்து நின்றாற்போல, இறைவன் உயிர்களினின்று பிரிவிலனாகநிற்றலால், அவனே பக்குவப்பட்ட உயிர்களுக்கு உலகமாய்த்தோற்றுவன். வாமதேவமுனிவர் முதலாயினோர் 'யானே உலகெலாமாயினேன்' என்று கூறியது உலகமாகத்தோன்றும் சிவத்தோடு தாங்கள் கலப்புற்றிருத்தலால் என்க. இம்முத்திக்காலத்தே இறைவன் எனது அறிவின்கண்மன்னியபடியால், அவன் உலகமாதல்போல, அவனோடுகலந்த நானும் உலகமாயினேன் என்றியம்புவேன். (மெய்கண்டார் திருவாக்கு)

## இரண்டாம் அதிகரணம்

உயிர்களால் பல பிறவிகளில் ஈட்டப்பட்ட புண்ணிய பாவங்கள், இறைவனது கட்டளைப்படியே, அவற்றின் நுகர்ச்சிக் குரியனவாம்.

ஓர் ஊரைக் காவல் செய்யும் அரசன் அவனது அதிகாரத்தை ஊர்காப்பாளரென்னும் அதிகாரிகளிடம்வைத்து அவர்வாயிலாக நடாத்துதல்போல, முதல்வனும் தனது கட்டளையை இருவினையிலேவைத்து அவற்றாற் பயன்நுகர்வித்தல் நிகழும் எனஅறிக.

சஞ்சிதமாய் உள்ளவினையே உடம்பைத் தோற்றுவிக்க, அந்த உடம்பில் உயிர் பொருந்தி வினைப்பயனையனுபவிக்கும். முன்வினைப்பயனை அனுபவிக்கு முறையிலேயே வரும்பிறவிக்குரிய வினை எற்படும். கருணையாளனாகிய கடவுள், முயற்சியின்பயனை விளைக்கும் நிலம்போல, வினைசெய்வார்க்கு அவர் வினைப்பயனைக் கூட்டுவிப்பன். வினைப்பயன் தானே சென்று செய்தவனையடையாது.

காந்தத்திற்கு நேராக இரும்பைப்பிடித்துக் காந்தத்தை அதுபற்றச்செய்தல்போல, உயிர்களுக்குத் தவறாமல் வினைப் பயன்களை நுகர்விக்கும் முதல்வனால், வினைசெய்வோர் வினை செய்தற்குரிய உடம்பினைப் போய்ப்பொருந்தி வினைப்பயனை நுகர்வர். அல்லாக்கால் மலத்திற்கிடக்குங் கட்டுக்காலத்தில், வேறே எவர் வினைப்பயன்களை அறிந்து உயிர்களுக்குச் சேர்ப்பிப்பார்?

பொன்னொளியைச் செய்கின்ற சூரியனால், தாமரையினிடத்தே விரிதலும் குவிதலுமுண்டாம். அதுபோல, முதல்வனால் மும்மலங்கள் தத்தஞ்செயல்களைச் செய்வன. நெல்லினுக்கு உமியும், செம்பிலே களிம்பும், ஆராயுமிடத்து இடையே புதிதாய்ச் சேர்ந்தனவல்ல; பழமையாக அவற்றுடன் உள்ளனவே. அதுபோல மாயையும், ஆணவமும், வினையும் அநாதியே உள்ளன.

## மூன்றும் அதிகரணம்

முதல்வன் ஆணைப்படி இருவினைப் பயனை நுகர்தற்குரிய உயிர்கள் இறந்து பிறந்து அலமரும். ஒடுங்கினது தோன்றுமென்பது பற்றி, இறந்த உயிர்கள் மீளப் பிறக்குமென்று கோடல் பொருத்தமே.

கண் செவி முதலியனவுடைய பருவுடம்பு அழிய, முன் உள்ளதாகிய நுண்ணுடம்பு, பூதசார உடம்பாகப் பரிண மிக்க, உயிர் அதனோடு விண்ணுலகம், நரகம் முதலிய இடங் கட்குச் சென்று, வினைப்பயன்களை நுகர்ந்து, பின்னர் நனவினைக்கனவில் மறந்தாற்போல அறிவு மயங்கி மனம் முன்பற்றிய இடத்தே தள்ளக் கருவிலே போய்ப்பதியும்.

பாம்பு தோலுரித்துப் புதிய தோல் போர்த்தலும், நனவு நீங்கிக் கனவுக்குரிய உடம்பிற் சேர்தலும், வேறுட லில் யோகிகள் புகுந்து மீளுதலும் ஆகிய உவமைகளே உயிர் தூலவுடம்பை விட்டுப் போதலுக்குப் பெரிதும் வழங் குவன. குடத்திலுள்ள ஆகாயம், வெளியாகாயத்தோடு கலப்பது போன்றதொரு கூத்தாட்டம் அது என்பது சூக் கும உடம்பு நீங்கிப்போகும் விதத்திற்கே உரியதாகும்.

## நான்காம் அதிகரணம்

முதல்வன் தனது ஞானசத்தியோடு பிரிவில்லாது நிற்பன். முதல்வனுக்கும் சத்திக்கும் உள்ள தொடர்பு குணிக்கும் குணத்திற்கும் உள்ள தொடர்பே ஆகும். சிவத் தின் வியாபகத் தன்மையே சத்தி எனப்படும்.

முதல்வன் கதிரவனும் ஒளியும்போலச் சிவமுஞ்சத்தியு மாய் வியாபித்திருப்பன் எனக்கொள்க. பொருள்களெல் லாம் அவனதுடைமை; உயிராகிய நாம் அவன் அடிமை யாவோம்.

## மூன்றும் சூத்திரம்

உளது இலது என்றலின் எனதுஉடலென்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா.

இச்சூத்திரம் உயிருண்மையை உணர்த்துகிறது.

உரை:—நான் இதுவல்ல, அதுவல்ல, என்று கூறுவ தொன்று உண்டாகலானும், எனது உடல் என உடலைக்கூறுவ தொன்று உண்டாகலானும், ஐம்பொறியினையும் அவற்றின் நீக்கத்தையும் அறியும் அறிவுடையதொன்று இருத்தலானும், துயின்றபோது, உணவும், செயலும், இல்லாததொன்று இருத்தலானும், ஒன்றை உணரச் செய்யுங்காலை, உணர்வ தொன்றிருத்தலானும், மாயையாலாகிய கருவியாகிய உடம்பி னுள், உயிரென்பது உடம்பின் வேறுயுள்ளது.

## முதல் அதிகரணம்

ஆன்மா இல்லையென்று கூறுவார், உடல், பொறி, மனம் முதலியவற்றை முறையே இஃது உயிர் அன்று இஃது உயிர் அன்று எனக் கழித்து, ஒன்றும் ஆன்மாவன்றாதலின் ஆன்மா சூனியமென்பர். அங்ஙனம் கூறுவதோர் அறிவுண்மையின் அவ்வறிவுடையதொன்றே ஆன்மாவென அறிக.

உடல், பொறி முதலிய கருவிகளனைத்தையும் இது நான் அன்று; எனக் கழித்தவிடத்தே நுண்ணிய ஐந் தெழுத்து வடிவாய் அறியுமறிவொன்று நிலைபெற்றுள்ளது. அதுவே நீயென அறிக. மலத்தாற் பிணிப்புண்ட இந்நிலை யிலே, உன்னொடு சார்ந்து நின்று எல்லாப் பொருளையும் கண்ணாடிபோலக் காட்டுவதாகிய மாயை நீயல்ல; அறிவில்லாத மாயை நீயாகமாட்டாய். மாயையாலறியும் அறிவிற்கு அப்பாற்பட்ட மேலான சிவமும் நீ ஆகமாட்டாய். நீ மாயைக்கும் சிவத்துக்கும் வேறாகிய தனிப் பொருள்.

## இரண்டாம் அதிகரணம்

உடம்பைத் தானாகக் கூறாது, என்னுடையது என்று அதனை உடைமைப் பொருளாகக் கூறும் வழக்கமிருத்தலின்,

அங்ஙனம் கூறும் உயிர் ஒன்று உடம்பிற்கு வேருக உளது.

மக்கள் எனது என்று சொல்லுகின்ற இயற்கைபற்றி உடம்பின் பகுதியல்லாத பதி, மனை முதலியவற்றையும் முதலில் உயிரென மயங்குவர். பின் அவற்றைத் தமக்கு வேருகக் காண்பர். அதுபோல, கை, கால், உடம்பு, பாச அறிவு முதலியவற்றை தம்முடையனவென்று கருதி உயிரென மயங்குவர். ஆய்ந்து பார்க்கின் அவையும் உயிரின் வேறனவை யென்று தோன்றும்.

## மூன்றும் அதிகரணம்

ஐம்பொறிகளாலறியப்படுவனவாகிய ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றமென்ற ஐம்பூத நுட்பங்களுள், ஒரு பொறி யறிந்ததைப் பிறிதொரு பொறி அறியமாட்டாமையின், ஐம்பொறியையுங் கருவியாகக்கொண்டு, ஐந்து பயனையும் அறியவல்லது ஒன்றிருத்தலின், அதுவே அவற்றிற்கு வேருக உள்ள உயிர் என அறிக.

காது கேட்பதைக் கண் கேளாது. கண் பார்ப்பதைக் காது பாராது. உயிரானது காதாற் கேட்டும் கண்ணுற் கண்டும் பயன் பெறுகின்றது என்பது கருத்து.

உடலிலே நிலைபெற்று, தம்முள் ஒன்று அறிவதை மற்றென்றறியாத நிலையை யுடையனவாய்த் தம்முள் மாறுபட்ட, ஒலி முதலிய ஐம்புலன்களை ஐந்தெழுத்தாற் செலுத்தப் பட்டு ஆராய்ந்தறிகின்ற ஐம்பொறிகளை, இப்பொறி காணும், இப்பொறி கேட்குமென அறிவதொன்று இருப்பதால் அது நீயென்று அறிக. ஐம்பொறிகளாகிய அவைகள் தனித்தனி தமக்குரியவற்றை அறிவதன்றி அறிகின்றேமென்றுணர மாட்டாவாகலின்; நீ அவற்றுள் ஒன்ருகமாட்டாய். நீ அவற்றின் வேறே என்றாராய்ந்தறிக.

பொறிகள் தம்மை அறியமாட்டா. உயிர் பொறிகளை யும் அறியும், தன்னையும் அறியும்.

## நான்காம் அதிகரணம்

தூக்கத்தில் கனவு கண்டாற் கண்டேனென்றும், காணு விடத்து அதனைக் காணவில்லையென்றும் நனவில் அறிந்து நிற்பது ஒன்றிருத்தலின், அதுவே கனவு உடலுக்கு வேறாகிய உயிர் என அறிக.

பருவுடம்பிலே நின்று இயங்குதலையுடைய ஐம்பொறி கள் ஒடுங்கிக் கிடப்ப, அவ்வுடலின் அடங்கி வருத்தமில் லாது செவ்வையாகவேறாகப் போய், நீ நுண்ணுடம்புடன் வேறு வகையாகக் கண்டுங்கேட்டும் உண்டும் உற்றும் உயிர்த் தும் விளையாடி, கனவு முடிந்தவுடன், பருவுடம்பிற்கு மீண்டு நனவு உணர்ச்சியுடன் செல்லுதலால், கனவிற்குரிய அந் நுண்ணுடம்பு நீ ஆகமாட்டாய்.

## ஐந்தாம் அதிகரணம்

துயிலுமிடத்துப் பிராணவாயு சரித்தும், உணவு, தொழில் முதலியன இல்லாதிருத்தலின், பிராணனுக்கு வேறாக உயிர் உண்டென அறிக.

பொருள்களைப் பார்த்தறிவதற்கு நிலைக்களமாகிய இவ் வுடலின் கண்ணே, பொருள்களைக் காட்டுவனவாகிய கருவி கள் தொழிற்படாது ஒடுங்கியபோது (துயிலும்போது) உடம்பிலே, நுகர்ச்சியுஞ் செயலும் இல்லாதிருக்கவும், பிராணவாயு இயங்குதலால், கருவிகளாற் பார்த்தறியும் உயிர் பிராணவாயுவுக்கு வேறாக உண்டு. அவ்வுயிர் ஒடுங்காமல் உடலிற் பொருந்தியிருப்பின், உடம்பு நுகர்ச்சியும் இயக்க மும் உடையதாம்; இதனை ஆய்ந்தறிக.

## ஆறும் அதிகரணம்

இயற்கையாகவே முற்றுணர்வுடைய கடவுளுக்கும், அக் கடவுள் உணர்த்தினாலன்றி யுணராத உயிர்க்கும் வேறுபாடுண்மையின், கடவுளின் வேறாக அவனால் அறிவிக்கப் படும் உயிர் உளதென அறிக.

பொருள்களை ஐம்பொறிகளாலும் ஒருங்கே அறியாது ஒன்றையே ஒரு காலத்து அறிந்தும், அறியப்படுவதாயும், முன் அறிந்ததனை மறந்து அறியாதும், அறிந்ததை இடைவிடாமலறியுமாற்றலின்றி விட்டுவிட்டு ஐந்து அவத்தைப் பட்டு அடங்கி மீள அறிந்தும் வருவதெது? அது பேரறிவுப் பொருளாகாது. மனவொருமைப் பட்டு ஆராயின், எதனை அறிகின்றதோ அதன் வயப்பட்டு நின்று அதனைத் தானெனக் கருதுந் தன்மையுடையது உயிரென்பது விளங்கும்.

## ஏழாம் அதிகரணம்

எல்லாக் கருவிகளும் கூடிய கூட்டம் உயிர் ஆகாது. அக்கூட்ட முழுவதும் மாயையாகிய சடப்பொருளாலாயது. அச்சடப்பொருள்கட்கு வெவ்வேறு பெயர் உள்ளன. அவை யொன்றும் ஆன்மாவைச் சுட்டுமாறில்லை. அவைகளாலாய உடம்பு ஆன்மா இயங்குமிடம். ஆதலின் அக்கூட்டத்திற்கு வேறாக உயிர் உளது என அறிக.

ஆராயுமிடத்து, கலை முதல் நிலம் ஈறாகவுள்ள தத்துவங்களெல்லாம், மாயையினாலாயவையாதலின், நிலையாதனவாகும். அவை தோக்கபோது விளங்கும் ஞானத்தினியல்பை அசையாமல் கருத்தொடுங்கி முதலில் அதன்றன்மையறிந்து, பின் அவற்றின் பயனை ஆராயின், கண்ணுக்கு விளக்குப்

போல அவைகள் உயிர்க்குப் பொருள்களை விளக்கும். தூல, காரண, பரமாகிய உடம்புகளாகும். உயிர்தான் அவ்வுடம் பின் வேறுவதே.

---

# இலக்கண இயல்

## நான்காஞ் சூத்திரம்

அந்தக்கரணம் அவற்றின் ஒன்று அன்று அவை
சந்தித்த(து) ஆன்மாச் சகசமலத்(து) உணராது
அமைச்(சு) அர(சு) ஏய்ப்ப நின்(று)அஞ்சு அவத்தைத்தே.

இச்சூத்திரம் உயிரின் பொது இலக்கணம் உணர்த்து கிறது.

உரை:— உயிர் அகக் கருவிகளாகிய மனம், புத்தி, அகங் காரம், சித்தம் என்னும் அவைகளில் ஒன்று அன்று; அரச னுக்கு அமைச்சன்போல அவற்றைத் துணையாகக் கொண் டுள்ளது உயிர். தன்னோடு எப்போதும் உள்ள ஆணவமலத்தி னாற் பொருள்களை உயிர் தானே அறியமாட்டாது. உயிரா னது அமைச்சரோடு கூடி நின்று தொழில் நடாத்தும் அரசன்போல, அந்தக் கரணங்களோடு கூடி நின்று ஐந்தவத் தைப்படுகின்றது.

### முதல் அதிகரணம்

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் அகக் கருவிகள் அவற்றிற்குக்கீழ் உள்ள பொறிகளை நோக்க மிகுதி

யாக அறியுந்தன்மையுடையன வெனினும், உயிர்க்கு அறிதற் கருவிகளாய்ச் சடமாயிருத்தலின், உயிர் அவற்றுள் ஒன் றன்று.

மனமுதலிய அகக்கருவிகளால் உணரப்படுபவை, ஐம் பொறிகள் முதற்கண் உணரும் புறப்பொருள்களே. உயிரால் உணரப்படுவது புத்திதத்துவத்திற் ரேன்றிய தொன்றே. அது கடலலைபோல வந்துதோன்றும். மன முதலியவை, பொறிகளுக்கு வேருயினாற்போல, உயிரும் மனம்முதலியவற்றிற்கு வேருகும்.

கடல் அலைபோலத் தோன்றுதலாவது, பொறியுணர்வு முதலிலே தோன்றி, அதன்பின்னர் மனவுணர்வு தோன்றி, அதுபோய்ப் புத்தியைஅடைய, அங்கே இன்பதுன்ப மயக்க வுணர்ச்சி உயிர்க்குத்தோன்றுதல்.

புருடதத்துவமாய் நின்றஉயிர் மனவுணர்வாற் பொருள் களைக்காணுமிடத்துச் சித்தத்தைச் சேர்ந்துநின்று இதுயாது என நினைந்தும், மனத்தைச்சேர்த்து நின்றுபற்றியும், பின் னர் ஆங்காரத்தைச் சார்ந்துநின்று இது இன்னதென அறி வேனென்றெழுந்து தெளிவுபிறவாது புத்தியினாலே இன்ன தென்று தீர்மானித்தும் வெவ்வேறு வகையில் அறிதலால் இந்த நால்வகை அந்தக்கரணங்களுக்கும் வேருவன் புருடன். அஃது எதுபோலுமெனின் கதிரவன் முதலியவற்ரேடுகூடி, நாள், நாழிகை முதலிய பாகுபாடு செய்தற்கேதுவாய காலதத்துவம், கதிரவன் முதலிய பொருள்களின் வேருதல் போல என்க.

ஐம்பொறிகளுக்குப்போலவே, அந்தக்கரணங்கள் ஒவ் வொன்றிற்கும் வெவ்வேறு தொழில்கள் உள்ளன. அந்தக்

கரணங்களோடு கூடி நின்று அத்தொழில்களனைத்துஞ் செய்வது உயிர். ஒரோவொன்றேசெய்வன அந்தக்கரணம் என அறிக.

அகக்கருவிகள் தொழிற்படுமிடத்து அகாரம் அகங்காரத்தைச்செலுத்தும். உகாரம் புத்தியைச் செலுத்தும். மகாரம் மனத்தைச் செலுத்தும். விந்து சித்தத்தைச் செலுத்தும். நாதம் புருடனாகிய உயிரைச் செலுத்தும். இவ்வெழுத்துக்களைப் பிரிப்பின்றிப் பார்த்தகாலை, அவைபிரணவமாகிய ஓங்காரமாம். இவற்றால், கடலில் அலையெழுந்து வீழ்ந்து மீண்டெழுதல்போல, அறிவு நிகழும்: நினைப்பு மறப்பு மாறிமாறிவரும் என்பது கருத்து.

அகக்கருவியறிவுக்குக் காரணமாகிய ஓங்காரத்திலே பொருந்திய விந்துவுக்கும் நாதத்துக்கும் அதிதெய்வத்தை ஆராயின் முறையே மகேசுரனும் சதாசிவனுமாவர். அகர உகர மகரத்திற்கு அதிதெய்வங்கள், முறையே சுத்தவித்தையிலுள்ள அயன், அரி, அரன் என்பவர்களாவர்.

## இரண்டாம் அதிகரணம்

உயிரானது தன்னோடு எப்போதுங்கூடியுள்ள ஆணவமலத்தினால் கருவிகளின் துணையின்றிப் பொருள்களை அறியும் அறிவில்லாததாகும்.

ஆணவமலமானது, உயிரின் அறிவு இல்லையெனும்படி மறைத்துக்கொண்டு நிற்பது ஆகும்.

மூலமலமானது உயிரினறிவை மறைக்கின்றதேயன்றி, அதனைச் சூனியமாக்கவில்லை. உயிர்க்கு அறிவை மறைப்பது மாயையன்று. உயிரினறிவிற்கு விளக்குப்போலப்

பொருள்களைக்காட்டுவது மாயையின் செய்தி; அவ்வறிவைத் தடுத்து நிற்றல் ஆணவமலத்தின் செய்தி. ஆதலால், மாயை வேறு; ஆணவமலம் வேறு.

உயிரின் அறிவைச் சார்ந்து அநாதியே அதனை மறைக்கும் ஆணவமலம், தன்வண்ணமாய்ச் சார்ந்து கேடில்லாமல் இருக்கும் நெருப்பினைத் தனக்குள் மறைத்து ஒன்றாய் நிற்கும் விறகுபோலாம்.

## மூன்றும் அதிகரணம்

உயிர் ஆணவமலத்தில் மறைந்துநின்ற நிலையிலே தத்துவங்களோடு கூடியகாலை, அருவமாகிய தத்துவ வடிவினதாய் நிற்றலின், அத்தத்துவங்களின் தொழிற்பாட்டிற்கேற்றபடி, வெவ்வேறு உணர்ச்சி நிலைகளை அடைகிறது. அவை, நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் எனஐந்தாம்.

நனவில் அறிவுப்பொறியைந்தும், வினைப்பொறியைந்தும், அவற்றிற்குப் புலனுவன பத்தும், அந்தக்கரணம் நான்கும், புருடனும் பத்துவாயுக்களும் ஆகிய முப்பத்தைந்து கருவிகள் தொழிற்படும். நனவு நிகழுமிடம் புருவநடு. கனவிலே, அறிவுப்பொறிகளும் வினைப்பொறிகளும் தொழிற்படாமையின், தொழிற்படுங் கருவிகள் இருபத்தைந்தாம். கனவிற்கிடம் கழுத்து. உறக்கநிலையிலே, இருவகைப்பொறிகளும், அவற்றிற்குப் புலனுவனவும், பிராணன் ஒழிந்த பிற வாயுக்களும், அந்தக்கரணங்களும் சத்திமடங்கவே, சித்தம் உடம்பிற்குக் காவலாய் நிற்பப் பிராணவாயுவும் புருடனுமே தொழிற்படும். சித்தம் இதயத்திற் பொருந்தியிருத்தலால், இதயமே உறக்கத்திற்கிடமாம். சித்தத்தின் செயலும் அற்ற இடம் பேருறக்கம். இதற்குத்தானம் உந்தி. ஆங்காரத்

தால் செல்லும் பிராணனுமடங்கிய நிலை உயிர்ப்படக்கம். இது மூலாதாரத்தில் நிகழ்வது.

நெற்றியிலே நனவு நிலையுற்ற உயிரானது நனவிலேயே ஐந்து அவத்தையடையும்.

பொருள்களை நுகருமிடத்தே அவை நிகழ்வன. ஒன்றினையறியுங்கால், அதனைவிட்டு விட்டறிவதல்லது, இடையீறாது அறிவதில்லை. விட்டுவிட்டறிதற்கேற்ப இயக்குங் கருவிகளுள் ஒன்றோ, பலவோ செயற்படுதலால், இவ்வவத்தைகள் ஏற்படுகின்றன. இயக்குங் கருவிகளாகிய சுத்த தத்துவங்கள் ஐந்தாகலின், விடயநுகர்ச்சிக்கட்படுமவத்தையும் ஐந்தாயின.

உயிர், ஆணவ மலத்தோடுமாத்திரம் கலந்துநிற்கும் நிலை கேவலமெனப்படும். மாயாகாரியமாய கருவிகளோடு கூடிய நிலை சகலமெனப்படும். மலத்தின் நீங்கிய நிலை சுத்தமெனப்படும். கேவலநிலையிலே உயிர்கள் ஆணவமல மறைப்பால் யாதும் உணரா. சகல நிலையிலே உயிர்கள் உலகத்தையறியும். சுத்த நிலையிலே அவை கடவுளையுந் தம்மையு மறியும்.

## ஐந்தாஞ் சூத்திரம்

விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்(கு)
அளந்தறிந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்
காந்தங் கண்ட பசாசத் தவையே

இச்சூத்திரம் கட்டுநிலையில் இறைவன் உயிர்க்குச் செய்யும் உதவியை உணர்த்துகிறது.

உரை:- மேலே கூறிய உயிராலே, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்துபொறிகளும் தத்தம் விடயங்களை அளவிட்டறிந்தாலும் தம்மையுந் தம்மைச் செலுத்தும் உயிரையும் அறியமாட்டா. அப்பொறிகள்போல, உயிர்களும் தம்மையும் தமது அறிவிற்கு விளக்கந் தருபவனாகிய தனி முதல்வனது திருவருட் சத்தியையும் அறியமாட்டா. உயிர்கள் முதல்வனால் அறிதல், காந்தத்தின் முன்வைத்த இரும்பு போல முதல்வன் சந்நிதி மாத்திரையில் நிகழும். ஆதலால், முதல்வன் விகாரப்படான்.

## முதல் அதிகரணம்

ஐம்பொறிகள் உயிராற் பொருள்களை யறியும்; அவற்றினோடு உயிர் ஒற்றுமைப்பட்டு அறிந்தாலன்றி, அவை ஒரு பொருளையும் உணரமாட்டா ஆகலின் என்க.

அரசன் செங்கோல் மண்டபத்திலிருந்து ஏவலாளரைக் காரியங்களிற் செலுத்தி ஆளுதல்போல, உயிரானது ஐம்பொறிகளைச் செலுத்தி ஆண்டு நெறியிலே நிற்பதாகலின், ஐம்பொறிகள் உயிரை அறியமாட்டா; ஐம்பொறி வாயிலாகப் பொருள்களை யறிந்தாலன்றித் தானாக உயிர் பொருள்களை யறியாது. உயிர் ஒற்றுமைப்பட்டாலல்லாமல், கண்பாராது, காது கேளாது. ஆதலால் ஐம்பொறிகளும் உயிரும் தம்முள் இன்றியமையா.

## இரண்டாம் அதிகரணம்

உயிரும், தனது தலைவனாகிய கடவுளினாலே பொருள்களை அறியும். உயிரால் பொருள்களை அறியும் இந்திரியங்

கள் தம்மையும் உயிரையும் அறியாமைபோல, உயிரும் தன்னையும் தனது முதல்வனையும் அறியாமல் நிற்கும்.

பேரின்ப நிலையருளும் சிவபெருமான் திருமுன்பே உலகம் தொழிற்படுகின்றது. முற்றுணர்வுடைய முதல்வன் தனக்குக் கண்போலப் பொருள்களை விளக்கி நிற்ப, உயிரானது தனது வினைக்கீடாகப் பொருள்களை அறிந்தனுபவிக்கும். அப்படி இறைவன் அறிவித்து நின்றபொழுதும், சுட்டுப் பொருளாகிய அசத்துப்பொருள்களைத் தூய தன்மையனாகிய அவன் அநுபவியான்.

கதிரவனுடைய ஒளியிலே அடங்கித் தோன்றாது நிற்பனவாய், அவனுடைய ஒளியை இன்றியமையாத கோள்கள்போல, மெய்ப்பொருளாகிய இறைவனுதவியால், உயிர் கண்டுங் கேட்டும் உண்டும் முகர்ந்தும் தொட்டுமுணரப்படும் பொருள்களைத் தெரிந்து, வேறாதலும் ஒன்றாதலுமின்றி இறைவனோடு உடனாய் நிலைபெறும் என அறிக.

ஈசன்பால் உயிர்களை உய்விக்கும் இரக்கம் உண்டு. அது அவனது சத்தியாகும். அச்சத்தி அவனையின்றியமையாது. அவனும் அச்சத்தியையின்றியமையான். சத்தியும் சிவமும், குணமுங் குணியும் ஆக, கதிரவனும் ஒளியும் போலப் பொருந்தி நிற்றல் ஞானக் கண்ணுடையார் அறிவுக்குப் புலனாம்.

## ஆறும் சூத்திரம்

உண்ணுரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே.

இச்சூத்திரம் நிலைப்பொருள் இது, நிலையாதபொருள் இது என உணர்த்துகிறது.

உரை:-இறைவன் அறியப்படு மியல்பினனெனின் உலகப் பொருள்போல நிலையிலாப் பொருளாவன். அவன் எவ்வாற்றாலும் அறியப் படாதவனெனின், அவன்சூனியமாவன். ஆதலின் இரண்டு தன்மையுமின்றி உயிரறிவாலறியப் படாமையும், பதியறிவால் அறியப்படுதலுமாகிய இரண்டு வகையானும் இறைவன் சித்தாகிய சத்தாய் உள்ளவனெனக் கூறுவர் மெய்யில் நிலைபெற்று உயர்ந்தோர்.

## முதல் அதிகரணம்

இவ்வுலகில் சுட்டியறியப்பட்ட பொருள்கள் யாவும், உள்ளதென்ற உணர்ச்சிக்கு மாத்திரமன்றி இல்லது என்ற உணர்ச்சிக்கும் இடந்தருதலின், அவை நில்லாதன எனப் படும்.

ஆராயுமிடத்து, மாயா கருவியின் உதவியால் அறியப் பட்டனவெல்லாம் நிலையாதன வாகும்.

நிலையாமைக்கு உவமைகளாவன, நீரிலே எழுதிய எழுத்தும், நிகழும்போதே மறைகின்ற கனவும், கானலும் என்பன.

## இரண்டாம் அதிகரணம்

கருவிகளால் அறியப்படும் இயல்பும், ஒருவாற்றானும் அறியப்படாத இயல்புமின்றிப் பாசஞானத்தையும் பசு ஞானத்தையும் கடந்ததாய்ப் பதிஞானத்தால் நேரே யறிந்தனுபவிக்கற்பாலதாய் நிற்கும் அப்பரமபொருள் நிலைப் பொருளாயுள்ள சிவமென்று பெரியோரால் அறியப்படுந் தன்மைத்து.

பரம்பொருள், கருதப்பட்ட சத்துப் பொருளும் அசத்துப்பொருளும் அன்று என்னில், சத்து மசத்து மாகாத பொருள், யாது காரணம்பற்றி உண்டென்றறிவது எனில், கருவிகளின் உதவியால் அறியப்பட்டதும் ஒருவாற்றானும் அறியப்படாத சூனியமும் ஆகிய இரண்டும் அசத்தேயாதலால், சுட்டறிவினால் அறியப்படாத சத்தென்ற மெய்ப்பொருள், உயிர் அத்துவிதமாய் நின்றறியத்தக்க சிவனது திருவருளாலே அறியப்படுவதாம்.

உலகில் அறியப்படுபவைகளெல்லாம் நிலையாப் பொருள் ஆதலின், அறிவில்லாத அவற்றுள் ஒன்றும் ஒரு முதல்வனை அறியமாட்டாது. அப்பொருள்களை யறியும் உயிர்தானும் முதல்வனை அறியமாட்டாது. ஆராய்ந்து பார்ப்பின், அப்பொருள்களைப்போல் அவனை அறியக்கூடுமாயின் அவன் உயிரின் வேறாவன். உண்மைபுணர்ந்தோன், இறையருளில் அடங்கி நின்று இறையறிவோடு கூடிய தன்னறிவால் அறிதலால் அத்தனி முதற்பொருளை அதனின் வேறாக நின்று அறிவானல்லன்.

கடவுள், மனமுதலிய கருவிகளோடு பாவிக்கப்படுவதானால், அது சுட்டியறியப்படும் அசத்தாகும். அப்பாவனையைக் கடந்ததென்றால், கருவிகள் நீங்கியவழிப் பாவனையென்பது பெயர்மாத்திரமன்றி, உண்மையிலில்லையாம். சொல்லொண்ணாததாகப் பாவிக்கப்படுவதென்னில், அது சூனியமாம். கிடையாத பொருளைக் கிடைத்ததாகப் பாவிப்பது போலப் பாவனை செய்தலென்னின், அதுபோலிப்பாவனையாம். ஆதலால் இறையருள் வழிநின்று நினைக்கப்படுவது பரம்பொருள். அது சூனியமன்று.

யோகியர் கூறும் பாவனையால் இறைவனை அறிதல் கூடாதென்றவாறு.

இறைவன், தன்னை உயிர் அறியும்படி அதனின் வேறாக நிற்பானல்லன். உயிரறிவுக்கு அப்பாற்பட்டு நுட்பமாய் அதன்கட்கலந்திருத்தலின், உயிரால் தனது அறிவின் கண்ணே அவன் அறியப்படான். உயிராற் பொருள்களை யறிகிற கண், சத்தாகிய உயிரினை அறியாமைபோல, தனக்குப் பொருள்களை விளக்குவானாகி நின்ற முதல்வனை உயிரினறிவு கண்டறிந்து உயிர்க்குக் காட்டமாட்டாது.

சிவம் இன்னதென்றறியப்படாமையால் 'அது'வென்று சொல்லப்படும் ஒருபொருளன்று, அச்சிவத்தை யன்றி, அதனை அது என்று ஊகித்து அறிகின்ற அறிவுப்பொருள் அதற்கு வேறேயுளது. உலகப்பொருள் போலச் சுட்டியறியும்படி வேறாக நில்லாது உயிரின் அறிவின் கண் கலந்து முதல்வன் நிற்றலின், அவனை அறிகின்ற அறிவுப் பொருளாய உயிரும் கலப்புப்பற்றிச்சிவமாம் என்று சொல்லுமாறு உளதாம்.

# சாதனவியல்

## ஏழாஞ் சூத்திரம்

யாவையுஞ் சூனியம் சத்(து)எதிர் ஆகலின்
சத்தே அறியா(து) அசத்தில(து) அறியா(து)
இருதிறன் அறிவுள(து) இரண்டலா ஆன்மா

இச்சூத்திரம் முத்திபெறுதற்கு உரிய உயிரின் சிறப்பிலக்கணம் உணர்த்துகிறது.

உரை:— சிவசத்தின் முன்னர், அசத்தாகிய நிலையிலாப் பொருளெல்லாம் பாழேயாகலான், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து அனுபவியாது; பாசம் அறிவில்லாத சடமாகலின் சத்தாகிய சிவத்தை அறிந்து அனுபவியாது. ஆதலால், சத்தேயாகவும் அசத்தேயாகவுமில்லாத உயிர் இரண்டையும் அறிந்து அனுபவிக்க வல்லது ஆதலின் உயிர் சதசத்தாகும்.

## முதல் அதிகரணம

சுட்டாது அறியுஞ் சிவத்தின்முன் சுட்டியறியப்படும் நிலையிலாப் பொருட்டொகுதி விளங்கித் தோன்றாது.

பசுபாசங்கள் தனக்கு வேறாகாது தன்னுள் அடங்கி நிற்றலையுடைய அரனுக்குச் சுட்டியறியக்கிடப்பது யாதுமில்லை. அவ்வாறு அன்னியமில்லாத முதல்வன் அசத்துப் பொருளை யறிவானாயின், தனக்குவேறாக அவற்றைச் சுட்டி யறியான். கதிரவன்முன் இருள் மடங்குதல்போல, முதல்வன்முன், அவனது வியாபக அறிவுக்கு இயையாத அசத்துலகம் விளங்கி நில்லாமை அறிக.

## இரண்டாம் அதிகரணம்

தத்துவ வடிவாகிய உலகினுக்கு அறிவு இல்லை. கானலைத் தண்ணீரென்றெண்ணி, அதன்பாற்செல்லும் அறிவிலானுக்கு, அவன் அதையணைந்த காலை அக்கானல் நீரானது பொய்யாகும்; அதுபோல நேர்பட்ட குருமொழியை ஆய்ந்தறிவாரில்லாதபோது, உலகப் பொருள்கள் நிலைத்தனவாயும் அறிவுடையனவாயும் தோன்றும். ஆய்வாருள்ளபோது அவர்க்கு அவ்வ அசத்தாயும் அசித்தாயும் விளங்குமென்றறிக.

## மூன்றும் அதிகரணம்

சத்தும் அசத்தும் ஒன்றை ஒன்று உணராதாகவே, அவ்விரண்டனையும் அறியுந்தன்மையதாய், அறிவிக்க அறிவதாய் அவ்விரண்டினும் நிலைபெற்ற அனுபவ அறிவுள்ளதாயது எதுவோ, அதுவே சதசத்தாய உயிர்.

நுணுகிய நூல்களை ஆராய்கின்ற உயிரானது சத்தையும் அசத்தையும் தான் அறிதலால், அது அறியப்பட்ட இரண்டினும் வேறாதலால் அறியப்பட்ட சத்துமாகாது; அசத்துமாகாது. அதன் உண்மைத்தன்மை, சத்தோடும் அசத்தோடும் கணிக்கப்படத் தக்கதாய் மூன்றாவதொரு பொருளாய் நில்லாது, சூனியப் பொருளாகவும் நில்லாது, இரண்டினுஞ் சார்ந்ததன் வண்ணமாய்ப் பூவிலே வாசம் அடங்கித் தோன்றுமாறுபோல, இரண்டினையும் அறியுங்கால், அவற்றின் சார்பாயறியப்படுவதா யிருத்தலாகும்.

அறிவை விளக்குங்கருவி யில்வழி அறியாமை அடைந்தும், நோய்க்கு மருந்து போல்வதாகிய அறியாமைக்கு மருந்தாகிய விளக்குமுள்வழி அறிந்தும், இங்ஙனம் மாறிமாறி உணர்ந்து வருகின்ற உயிர் ஒரு தன்மையாயறியும் சத்தாக மாட்டாது. சொல்லப் புகில் உயிர்செய்த வினைகளின் பயனை உயிரே அறிந்து அனுபவிப்பதன்றி அசத்தாய பாசம் அறிந்து அனுபவியாமையால், உயிர் அசத்தும் அன்று. அஃது இரண்டினும் வேறு.

மயக்கமாகிய அறியாமை, அறிதற்கருவி யில்வழி மேற்பட்டும், அஃதுள்வழி நீங்கியும் நிலைபேறில்லாததாக விருப்பதால், அது உயிர்க்குயிராயுள்ள முதல்வனது மெய்ஞ்ஞானத்தைப்பற்றாது. கடலிலே உப்பானது நீரிற்பற்றுவதே யல்

லாமல், அதற்கு இடங்கொடுக்கும் ஆகாயத்திற் பற்றுமை போல, மயக்கமானது உயிரைப்பற்றுமே யொழிய முதல் வனைப் பற்றாது.

## எட்டாஞ் சூத்திரம்

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்(டு)
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

இது சிவஞானத்தினை உணரு முறைமையினை யுணர்த் திற்று.

உரை:— பல்பிறவிகளிலே செய்த பெருந்தவத்தினால் ஒருபிறவியிலே உயிர்க்குயிராய பரம்பொருள் உயிர்க்குக் குருவாய்த்தோன்றி உயிரை நோக்கி 'நீ நின்பெருந்தகைமை யறியாது மயங்கி இடர்ப்பட்டாய், நின் பெருந்தகைமை இத் தகையது' என்றறிவுறுப்ப உயிரானது ஐம்புல வேடர் கூட் டுறவினை விட்டுநீங்கி இறைவனோடத்துவிதமாய் நிற்கும் நிலை யினை யுணர்ந்து அம்முதல்வன் திருவடிகளை யணையும்.

### முதல் அதிகரணம்

உயிர்களுக்குப் பலபிறவிகளில் சரியை கிரியை யோக நெறிகளில் நிற்றலாகிய தவத்தின் பயனாக வீட்டு நெறிக்கு இன்றியமையாத சிவஞானத்தை இறைவன் கொடுத்தருள் வன்.

சரியை, கிரியை, யோகம் என்னுந் தவத்தை ஆற்றிய வர்கள் ஒருதலையாகத் தவப்பயனடைதற்குரிய உயருலகினை யடைந்து தவப்பயனை நுகர்ந்தபின், உலகத்திலுள்ள பற்றி னைப் பிறவியெடுத்து ஒழித்தற் பொருட்டு, தவஞ்செய்தற் குரிய நல்ல இனத்திலே வந்துபிறந்து சிவஞானம் நண்ணு

வதைக் கற்றறிந்தவர் ஆராய்ச்சி தெரிந்து கூறும். உலகத்திற் பிறந்து அறுப்பதாகியபற்று இல்லாத விடத்து, தவலோகத்தில் நின்றவாறே ஞானமடைவர்.

உலகவின்பங்கருதிச் செய்யப்படும் நல்வினையின் பயனானது, பசிக்கு உணவுபோலும். உண்டவுணவு அற்றவுடன், மீட்டும் பசியுண்டாம்; அதுபோல, அந்நல்வினையானது நிலைத்த இன்பத்தைக் கொடாது. உலகப்பயன் கருதாது, வீடுகருதிச் செய்யுஞ் சரியை, கிரியை, யோக மென்பன இருவினையொப்பினை உயிர்க்கு உண்டாக்கி, ஞானத்திற்கு வழிதிறக்கும். இருவினை யொப்பாவது நல்வினையுந் தீவினையும் உலக இன்பதுன்பத்தைப் பயத்தலால், அவையிரண்டின் பயனிலும் ஒத்த முறையில் விருப்பமில்லாமையாகும்.

## இரண்டாம் அதிகரணம்

ஞானத்தை விரும்பும் உயிர்களுக்குப் பருவம் வந்தபோது, உள் நின்று உணர்த்தி வந்த முதல்வனே, ஞானகுருவின் அறிவில் வேறறக் கலந்து நின்று சிவஞானத்தை உணர்த்தியருளுவன்.

விஞ்ஞான கலர்க்கு உண்மையறிவு, இறைவன் உள் நின்றுணர்த்தத் தானே உண்டாகும். பிரளயாகலருக்கு அவ்வாறின்றித் தனது தெய்வ வடிவையே குரு வடிவாகக் கொண்டு முன்னின்று ஞானத்தை உணர்த்துவன். அறியாமையுடைய சகலர்க்கு அவர் வடிவுபோலும் வடிவுடைய குருவாகி வந்து அவ்வடிவின் பின்னாக மறைந்து நின்று உண்மையறிவை நல்குவன்.

விஞ்ஞான கலர் விஞ்ஞானத்தாற் கலையற்றவர். பிரளயாகலர் — பிரளயத்தாற் கலையற்றவர். சகலர்—கலையோடு

கூடினவர். இவர்கள் முறையே ஒருமல, இருமல, மும்மல முடையவர்.

உயிர்கள் தமக்கு உரிய படிமுறையில் வைத்து முதல்வன் அறிவிக்க அறியுமியல்பின. முதல்வன் உபதேசமொழி முதலியவற்றை வேண்டி நின்ற பிரளயாகலருக்கும் சகலர்க்கும் இன்றியமையாத அவைகள் முன்னிலையிலும், பின்னிலையிலும் நிகழும். அவற்றை இன்றியமையாது வேண்டாத விஞ்ஞானகலர்க்கு இறைவனால் உள்நின்று ஆட்கொள்ளப் பட்ட நிகழ்ச்சியளவிலேயே வீடுபயக்கு முணர்வு உண்டாம்.

ஒரு நங்கைக்கு (ப் பிள்ளையைக் காணுமுன்) சுரக்காத முலைப்பாலும் கண்ணீரும் பிள்ளையைக் கண்டவுடனே தோன்றுகின்றன. அவ்வாறே நீரில் மறைந்த நிழல்போல, உயிர்களோடு கலந்து புலப்படாது நின்ற முதல்வன், குரு வடிவமாய் உருவெடுத்துத் தோன்றுவிடின், சகலர்க்குச் சிவஞானம் உளதாகாது. தோன்றுமிடத்து உளதாம்.

## மூன்றும் அதிகரணம்

பளிங்கிற் பொருந்திய நிறங்கள் தமது இயல்பினைக் காட்டுவனவன்றிப் படிக வொளியைக் காட்டாமைபோல, ஐம்பொறி யறிவுகள் தமக்குப் புலனாய விடயங்களையே உயிர்க்குக் காட்டி நிற்றலால், உயிர்கள் ஐம்பொறி யறிவு களால் திரிபுணர்ச்சியுடையனவாய்த் தம்மை அறியமாட்டா.

பளிங்கானது தன்னாற் சாரப்பட்ட பல நிறங்களையே காட்டி நிற்பது போல, சார்ந்த பொறிகளின் தன்மையையே தன் மாட்டுக் காட்டும் தனது பொது வியல்பை நினைந்து பல் நிறங்கள் படிகத்திற்கு வேறு என்றறியுமாறு போல,

பொதுவியல்பைக் காட்டும் பொறிகளைத் தன்னின் வேறென அறிந்து, அப் பொதுவியல்பு நிலையாதொழியுமாறு, தனது சிறப்பியல்பை யுணர்ந்தோன் (அசத்தாகிய பொறிகளுக்கு) வேறாகிய மெய்ப்பொருளாகிய தெய்வத்தின் அடிமையாவன்.

## நான்காம் அதிகரணம்

ஒருவன் ஏறியிருந்து ஆடுகின்ற ஊஞ்சல், அது தொங்க விட்டுள்ள கயிறு இற்று விழ நேரின், உற்றுழி யுதவுந் தாங் போல அதற்குத் தாரகமாக உதவுவது நிலனேயாதல்போல, தவமுற்றிய உயிரானது தன்னை ஐம்பொறிகளுக்கு வேறாக வுணரவே தாரகமாகிய தமது தலைவனது திருவடியை அடையும்.

அணையை உயர்த்திக்கட்டித் தடை செய்தலினால் தேக்கி நின்ற ஆற்று நீர் போலப் பாச ஞானங்களால் வியாபகம் தடைபட்டு நின்ற உயிரானது, தடை நீங்கிய காலத்தே கடலின்கட் சென்றடங்கி மீண்டு பிரிந்து வாராத ஆற்று நீர் போல, தனக்குத் தடை செய்கின்ற பொறியுணர்வு நீங்கிய வழி, கேடில்லாத சிவபெருமான் திருவடிகளை யடைந்து, அத்திருவடி நிறைவேயாய் அதன் கண் அடங்கிய பின்பு மீளுதல் செய்யாது.

ஐம்பொறி யுணர்வு உள்பட, எவ்வகை யுணர்வும் இறைவனே என்றால், அவனைப் போயடைய விரும்புவார் யாரும் இல்லை. உயிருணர்வோடு இறைவன் தொடர்பில்லானென்னில், அவன் முழு முதல்வன் ஆகான். கண்போலப் பிற பொறிகள் புலன்களை அறிந்து பற்றுவன அல்ல. அது போலப் பொறியுணர்வும் உயிருணர்வும் ஒரு தன்மையன வல்ல. கண்ணில்லாதவர் கண்பெற்றவிடத்தே அவர்க்குப்

பிற பொறிகளினும் கண்ணுக்குள்ள மேம்பாடு தோன்றும். அதுபோலப் பாசம் நீங்கியவிடத்தே உயிரின் வியாபக அறிவு பொறியுணர்வுகளினும் மேம்பட்டதென உயிர்க்குத் தோன்றும்.

பொறியுணர்வு பற்றியதை யறியும்; உயிருணர்வு வியாபித்தறியும். பிற அவயங்கள் பொறியுணர்வுக்கும், கண் உயிருணர்வுக்கும் உவமையாயின.

ஐம் பொறிகள்போல, அளவுபட்ட விளக்கம் உடையவனுகாய் என்று அறிவுறுக்கப்பட்ட முடிந்த உபதேசம் பெற்று, ஐம்பொறிகளை விட்டுச் சிவனை அடைகின்ற சகலனுகிய ஆன்மா ஐம்பொறிகளோடு இருத்தல்பற்றிச் சிவனை விட்டு நீங்கமாட்டான். நீர்மேலே பரந்த பாசியைப்போல, நீங்கக்கூடிய ஆணவமலம், வினை முதலியன வாசனை வயமாக வந்து கூடுமாயின், தன்னை நீங்காத முதல்வனை நினைந்து அவ்வற்றை விட்டு விலகுவான்.

## ஒன்பதாஞ் சூத்திரம்

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதிவிதி யெண்ணும் அஞ்செழுத்தே.

இச்சூத்திரம் வாசனு மலம் தாக்காது, உயிரினைப் புனிதமாக்குவதை உணர்த்துகிறது.

உரை:- குறைவான அறிவாகிய பாச ஞானத்தாலறியப் படாத முதல்வனை அவனது திருவடி ஞானமாகிய கண்ணி

ஞல், அறிவின் கண்ணே ஆய்ந்தறிக. ஒருவரும் ஏறிச் செலுத்தாத விரைவுடைய பேய்த்தேராகிய கானல் போலப் பாசக்கூட்டம் நீங்கியொழிய இறை ஞானமானது, பிறவித் துயராகிய வெப்பத்திற்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். அக்காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்குந் திருவைந்தெழுத்தை விதிப்படி தியானிக்க.

## முதல் அதிகரணம்

முதல்வன் பாச பசு ஞானங்களுக்கு அப்பாற்பட்டுப் பதி யறிவாலே அறியத் தக்கவஞ யிருத்தலால் அவனை ஞானக் கண்ணுலே காண்க.

பாசங்களுள் ஒன்றலன் ஆன்மா வென்பதறிந்து, இறையறிவு பெற்ற காலத்தே அவன் வியாபகத்தில் அடங்கிய ஆன்மாவை இறையறிவாற் காணப் பெறுதல் கூடும். அவ்வாறின்றி வேறு வகையில், உயிரின் உண்மை யியல்பை அறிய முடியாது.

உயிரால் காட்டப்பட்டு ஒன்றைக் காண்கின்ற கண்ணனது தன்னை யறியமாட்டாது. அது தனக்குப் பொருள்களைக் காட்டுவதாய உயிரையும் அறியமாட்டாது. அது போல, முதல்வன் காட்ட ஒன்றைக் காண்பதாய உயிர் தன்னையுமறியாது, தலைவனையுமறியாது. உயிரின் தேர்ச்சி யறிவின்கண் உடனுய் நிற்கும் மறைபொருளாகிய முதல்வனை அவ்வறிவிலே நாடித் தெளிவாயாக.

## இரண்டாம் அதிகரணம்

படிகத்தின்பாலுள்ள நிற வேற்றுமைகளே, படிகத்தின் குணமல்லவென்று கழித்தவிடத்து, எஞ்சி நிற்பது படிக

வியல்பாதல் போல, நிலையான பொருளையறியும் ஞானத்தை மறைத்து நிற்கும் அசத்துப் பொருள்களினுணர்வை நிலை யிலாததெனு ஆசிரிய மொழியில் உறைத்து நின்று கண்டு கழித்தவிடத்தே, தோன்றி விளங்குவது சிவஞானத்தின் வடிவ மென்றறியற்பாலது.

குணரூபமாக அறியப்படும் அசுத்த மாயாகாரியங்களை யும் மலகன்ம காரிய வடிவா யறியப்படும் கலப்புப் பிரபஞ்சத் தையும், நிலையில்லாத இன்ப வடிவாய் விளங்குஞ் சுத்தப் பிரபஞ்சத்தையுங் கடந்தவனும், உயிரினுணர்வுக்கு மேற் பட்டவனும் நின்ற, சிவஞானத்தாலன்றிப் பிறவாற்றாலறியப் படாத முதல்வன், ஆகாய முதலியவற்றை அசத்தென நீக்கியவிடத்து, இன்னதென்றறியவாராத சூனியப் பொருள் போலத் தோன்றி, உயிரின் அகண்ட அறிவின்கண் நீங்காது நிலை பெறும் பேரறிவாய்த் தோன்றுவான்.

சுட்டியறியப்படும் பொருளை அசத்தென்று சுட்டி யறிந்து கழிக்கவே, முடிவாய்ச் செப்பமாயுள்ளது சத்தாகிய சிவமே யென்றறிக. சுட்டுப் பொருளோடு சார்ந்தறிந்து வந்த உயிர், அதனின் வேறான சத்தாகமாட்டாது. உயிர் சத்துப் பொருளுக்கு அடிமையாய் அதனைச் சேர்ந்தால் சுட்டுணர்வு உயிரை விட்டொழியும்.

சுட்டறிவாற் கண்ட பொருள் ஒவ்வொன்றையும் இது சத்தன்று, இது சத்தன்று எனக் கழித்து உயிரறிவின் கண்ணே சுட்டுணர்வில்லாது நின்ற கடவுளை ஆராய்ந்து அத்துவிதமாய் அவனைப் பாவித்துணர்ந்தால் அப்பாவனையில் விளங்கித் தோன்று முதல்வனுல் சுட்டுணர்வு ஒழியுமுறை, கருட தியானத்தால் விடம் நீங்குவதுபோலாமென்க.

ஆதி பௌதிக கருடன், ஆதி தைவிக கருடன், ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். அவற்றுள் உலகத்திற் காணப்படுங் கருடன் ஆதி பௌதிக கருடன். அதற்கு அதி தெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானஞ் செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதி தைவிக கருடன். அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவ சத்தி ஆத்தியான்மிக கருடன். அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அகங்கிய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைந்து நிற்றல். அங்ஙனம் நின்று அம் மந்திரக் கண் கொண்டு பார்க்கவே, அஃது விடவேகத்தை மாற்றுதல் ஒரு தலை.

## மூன்றும் அதிகரணம்

பதியை ஞானக் கண்ணால் நாடிய பின்னர் அவ்விடத்து முத்தி பஞ்சாக்கரத்தை அதன்பொருள் அறிவில் விளங்கும் படி அறிவிலே கணித்தல் வேண்டும். ஏனெனில், வேப்பங் கனியைத் தின்று சுவைகண்ட புழு, கரும்பைத் தின்ற போதும், பழக்கத்தினாலே முன் தின்ற வேம்பை நோக்கி நிற்குமாறுபோல, பக்குவமடைந்த ஆன்மாக்களுக்குச் சிவ ஞானம் விளங்கிய காலையும், வாசனை வயத்தால், அவை பண்டைச் சிற்றுணர்வை நோக்கி நிற்கும்; அவ்வாசனையை நீக்குவதற்கு என்க.

உயிர் சிவனுக்கு உடைமைப் பொருளாதலை ஐந் தெழுத்து ஓது முறையினால் அறிந்து இதயத்திலே அஞ் செழுத்தினலமைந்த முதல்வன் திருமேனியில் கொல்லாமை

பொறியடக்கம், பொறுமை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எண் மலர்தூவி வழிபட்டு அஞ்செழுத்தினுல் குண்டலித் தானமாகிய உந்தியிலே ஞான அனலை யெழுப்பி, அதன்கண் ஓமஞ் செய்து புருவ நடுவில் அஞ்செழுத்தில் சிகர யகர வகரங்கள் நிற்கு முறைமையை நினைப்பின் இறைவன் விளங்கித் தோன்றுவன். உயிரும் அவனுக்கு அடிமையாய் விளங்கும்.

சாதாரணமாய்க் காணப்படாத இராகு கேதுக்களைக் கிரகண காலத்தில் சந்திரனிலும் சூரியனிலுங் கண்டாற் போல, உள்ளத்தின் கண் அஞ்செழுத்து முறையில் வைத்துச்சிவனைச் சிந்தித்தால், கடைந்த காலை விறகிற்றோன்றும் நெருப்புப்போல, அவன் தோன்றி அறிவுக் கறிவாய் விளங்கி நிற்பன். அப்பொழுது உயிர் தானும் நெருப்பைச் சேர்ந்த இரும்புபோலப் பெருமானுக்கு அடிமையாகும். ஆதலால் திருவஞ்செழுத்தை விதிப்படி எண்ணுக.

தியானிக்குமிடத்து, மண்முதல்பிரகிருதி வரையி லுள்ள தத்துவங்கள் உந்தி நின்று மேலெழுந்ததண்டு; வித்தியா தத்துவமேழும், சுத்த வித்தையும் எட்டிதழ்த் தாமரைப் பூ; அதன் கேசரங்கள் அவற்றிற்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுர தத்துவமும் சதாசிவ தத்துவமும்; சத்தி தத்துவம் தாமரைப் பொகுட்டு; சிவ தத்துவம் அப் பொகுட்டிலுள்ள வித்து வடிவமாம் எனவும், அம் முப்பத்தாறு தத்துவங்களாலாகிய இருக்கையிலே, அச் சிவனது சத்தி நிலை பெறும்; எனவும் அறிந்து வணங்குக.

# பயனியல்

## பத்தாஞ் சூத்திரம்

அவனே தானே ஆகிய அந்நெறி
ஏக னாகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை யின்றே.

*இச்சூத்திரம் முற்றிலும் பாச நீக்கம் பண்ணும்வகை யுணர்த்துகிறது.*

**உரை:—** *உயிர்கள் கட்டுற்ற காலத்திலே, இறைவன் உயிரோடு அத்துவிதமாய்க் கலந்து நின்ற அம்முறையே, உயிர் முதல்வனோடு ஒற்றித்து நின்று தானென வேறு காணப்படுமாறில்லாமல், இறைவன் கட்டளையில் வழுவாது நிற்கவே, ஆணவமலம், மாயை என்பவற்றோடு, கொடிய வினையும் இல்லையாய் ஒழியும்.*

### முதல் அதிகரணம்

*உயிர் தானென வேறு காணப்படாது முதல்வனோடு ஒற்றுமைப் படுதலாலேயே, யான் எனது எனப் பகுத் துணரும் திரிபுணர்ச்சிக்குக் காரணமாய மலம் நீங்கி அம் முதல்வனது திருவடியை அணையும். ஆதலான், அவ்வாறு ஒற்றித்து நிற்றல் வேண்டும். யானென்றும், அவனென்றும் பகுத்துணர்வார்க்கு, நானே என்பார்க்குப் போல, உயி ருணர்வு முனைத்துத் தோன்றுமாதலின், நான் என்று ஒரு முதல் காணப்படுமாறின்றித் தான் இறைபுணர்வு மயமாய், 'நான்' என்பதொன்றில்லை, எல்லாம் இறைவனேயென்று தெளிவடைவாரை இறைவன் தனது திருவடி வியாபகத்துள்*

அடங்கி நிற்குமாறு வைத்து, அவர்களுக்குத் தானே முழுவதுமாய் விளங்குவன்.

## இரண்டாம் அதிகரணம்

இறைவன் அருள் வழி நின்றே செய்வனவெல்லாம் உயிர் செய்யுமானல், திரிபுணர்ச்சிக்குக் காரணமாகிய மாயா காரியங்களும் வினையும், ஏகனாகி நிற்பதற்குத் தடையாய் வந்து தாக்கமாட்டாவாதலின், அவன் அருட் கட்டளையின் கண், தவறாது சலிப்பின்றி நிலை பெறுக என்றவாறு.

இந்திரியங்களாகிய பொறிகள் மாயாகாரியமாவனவே யன்றி, யாம் அல்ல. அவைமுதல்வனால் தொழிற்படுவன வன்றி, நமது வசமாயுள்ளன அல்ல. அவை தொழிற்படு தற்கு வாயிலாகிய விடயங்களும் மாயாகாரியமாவனவன்றி நாமல்ல. அவ்விடயங்கள் செயற்படுதலும் முதல்வனலன்றி நம்வசமாக அன்று. அவைபோல நாமும் சிவனது உடைமைப் பொருளே. நாம் அறிவதும் செய்வதும் இறைவன் அருள் விளக்கத்தினலே ஆம் என்று உணர்ந்தால் இவ்வடிமைத் திற முடையார் எவ்வுடம்பில் நின்று எவ்வினைகளைச் செய்தாலும் வினையாலாகிய பந்தம் அவர்களுக்கு இல்லை. பிராரத்த வினையும், இறைவன் திருமுன் உடல் அனுபவமாகவே கழியும். எதிர் வினையாகிய ஆகாமியத்திற்கு அது வித்தாகமாட்டாது.

அடைக்கலமெனச் சார்ந்தவரை அவர்க்கு வரும் இடர்களை நீக்கிக் காத்தல் தலைமைக்குணமுடையவர் கடன் ஆகலால், முதல்வன் தன்னையடைந்தவர்களைச் சிறப்பாகப் பாது காப்பானாகியும், அதுபற்றி ஒருபாற் சார்வு இல்லாதவனே யாவன். தன்னைச்சார்ந்து தன் அடித்தொழில் செய்வாரைத் தன்போல, வரும்வினைத் தொடர்பிலராக்கி, பிறர்க்கு அவ

ரவர் வினையினை விளைப்பன். நுணுகிவந்து பொருந்தும் பிராரத்த வினையும் உயிர்ச்சார்பின்றி ஒழியும்.

பெருங்காயம்வைத்தெடுத்த பாத்திரத்திற் காயவாசனை மெலிதாய்த் தோன்றுதல்போல, சிவஞானியிடம், வாசனையால், தன்னுணர்வு தோன்றிப் பிராரத்தமும் அதற்கு வாயிலாகிய மாயாகாரியங்களும் வந்து மூளுமாயினும், (பிறர்க்கு அப்பிராரத்தத்தோடு கூடிவருவதாய) ஆகாமியம், தனக்கு வாயிலாகிய மாயாகாரியங்களோடு கெட்டொழியும், அதுமேற் பிறவிக்கு வித்தாகாது. ஞானியாகிய அவன் சிவமாய சத்தேயாய் நிற்றலால் தன்னைப்பிறழவிடாத அச்சாகிய சத்தையே அறிந்து நிற்பன்.

மிகுந்த தீயினால் வேவாத அனற்கட்டுடைய நல்ல மந்திர வலியுடையோரைப் போலவும், செவ்விதாகச் செலுத்துதல் அறிந்து குதிரைமேலேறி அதன் வேகத்தாற் கீழே விழாது அதனைச் செலுத்துவோர்போலவும், ஐம்புலனில் அகப்படாமைக்குரிய சூழ்ச்சியறிந்து முதல்வன் திருவடியை உணரவல்லார், பிராரத்தத்தால், ஐவகைவிடயங்களிற் சென்றாலும், தமது அருட்டிறமையினீங்கிக் கட்டுப்படமாட்டார்.

தான் சதசத்தென உண்மைபுணர்ந்தவன் சத்தாகிய முதல்வனது அருள்வழியே நின்று எவற்றையும் பார்ப்பின் பாசமாகிய அசத்து அவனுக்கு இன்பஞ் செய்யாது. ஆகவே, சிற்றமிருந்து எரிகின்ற தீமுன் இருள்போலச் சத்தாகிய திருவருள்முன், அசத்து தனது வலிமடங்கிவிடும். ஆதலின் சத்தை அணைந்தவர் அவ்விடத்தே அசத்தைச் சாரமாட்டார்.

---

# பதினோராஞ் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே

இச்சூத்திரம் பரமசிவனால் விளையுஞ் சிவானந்தானுபவ முணர்த்துகிறது.

உரை:—காட்டக் காணும் இயல்புடைய கண்ணுக்கு உருவத்தைக்காட்டித் தானும் காண்கின்ற உயிர்போல, உயிர் பொருள்களை அறியும்படி முதல்வன் இயைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலால் அவ்வுபகாரத்தை மறவாது கடைப்பிடித்துச்செய்யும் அன்பாலே முதல்வன் திருவடியாகிய சிவானந்த அனுபவத்தை உயிர் எய்தும்.

## முதல் அதிகரணம்

முதல்வன் அறிவு உயிரோடு விரவிநின்று உயிரறிவொடு கூடச்சென்று பொருளினுங் கலந்தாலன்றி ஒன்றையும் உயிர் அறியாதாகலான் முதல்வனும், உயிர்களால் உணரப்படும் பொருள்களை உடன்நின்று அறிவன்.

ஆன்மாவானது பொருள்களையறியுங்கால், ஐம்பொறி போல அதுவதுவாய்ச் செறிந்து அறியுந்தன்மைத்தாதலான், ஐம்புலன்களையும் ஒருங்கே உணரமாட்டாது. அவ்வைந்தினையும் ஒவ்வொன்றாக அறிந்தனுபவிக்கும். ஆனால், என்றும் ஒரு பெற்றித்தாய சிவம், எல்லா உயிர்களுடைய எல்லாப் பொருள்களையும் பேரறிவுகையான் ஒருங்கே உணர்ந்து அவ்வுயிர்களுடன் நின்று சிறப்பு வகையாக அறியும்.

உயிரானது ஒன்றாகிய முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு நின்று அவனது இரண்டு திருவடிகளையும் அறியவே அம்

முதல்வன் பரபோகமாய் விளைகின்ற பொலிவுடையனுதலாலும் உயிரறிவின்கண்ணே ஒற்றுமைப்பட்டுப் பொருந்தினவனுதலாலும் கருதுவார், கருதுகின்றதன்னை, அவரறிவோடு கூடிநின்று அறிவான்.

## இரண்டாம் அதிகரணம்.

இறைவன் உயிரோடு பிரிப்பின்றி நின்று செய்வோர் செய்வனவற்றை அறிந்து செய்திக்குத்தக்க பயனைப் பெறுவித்தலால், அவனைப் புத்தியினுல் மறவாதேதத்த அவனது திருவடியை உயிர் அணையும்.

கதிரவன் எல்லார்க்கும் ஒப்பவிளங்கினுலும், காட்சியில்லார்க்கு இரவிலுள்ள இருட்டுப்போல்வதாம். அதுபோல, பாசமுடையவர்களுக்கு இ றை வ ன் இருளிடத்தனுவான். (மலரும் பருவத்துத்) தாமரையைக் கதிரவன் அலர்த்துவது போல, பேரன்பால் தன்னை உணர்வார்க்கு நேரான தனது திருவருட் பார்வையால் இறைவன் பாசத்தை நீக்குவன். ஆதலால் சீவன் முத்தரும் பிறரும் ஒரு தன்மையரல்லர்.

இரவில் நிலைபெறும் இருளைப் பிறையானது நாள் தோறுஞ் சிறிது சிறிதாக ஓட்டுகிறதுபோல, உயிர்பாற் பேரன்புடைய முதல்வன், உயிர்களின் பாசந்தைச் சிறிது சிறிதாக நீக்கி, காந்தம் இரும்பைத் தன்பால் வலிந்து இழுத்துத் தன்வசமாக்கிக் கொள்ளுதல்போல, உயிரின் மலம் நீங்க நீங்கத் தனது அருட்சத்தியைப் பதிவித்து உயிரைத் தன்கண் வலித்துக்கொண்டு தன்வசமாக்கிவருஞ். செய்கையில் முதல்வன் சலிப்பில்லாதவன். அவன் அதைத்தன் சந்நிதிமாத்திரையிற் செய்தலின் விகாரப்படுவானல்லன்.

உயிர்கள் ஒருபொருளாகிய இறைவனிற் கலக்குங்காலை, கெட்டொழியுமாயின், அவை இறைவனை ஒன்றமாட்டா.

கெடுதலில்லாதிருப்பின், உயிரும் இறைவனும் இருவேறு பொருளாய் நிற்றலாமேயன்றி ஒன்றுவதில்லை. மலம் கெடப் பெற்று, நீரிற் கரைந்த உப்புப்போல உயிர் இறைவனிற் கலந்து அவனுக்கு அடிமையாம். பின் கவர்ச்சியாகிய மீளு தல் இல்லை.

கதிரவனொளி, தன்முன் உள்ள மேகபடலத்துட் புகுந்து மறைந்து, அம்மேகபடலஞ் சிறிது நீங்கியவழி ஒரு புடையாய்த் தோன்றி நிலவி, பின்மேக படலம் முழுவதும் நீங்கியபோது எங்கும் பரவிய தன்மைபோல, உயிரும் தனது அறிவு மலத்திலே மறையப்பெற்றுக் கேவல நிலையிற் கிடந்து, பின்கருவிகளோடு கூடியகாலை ஒருபுடை அறிவு விளங்கப்பெற்று உலகப் பொருள்களை நுகர்ந்து, பின் முதலவனருளால் மலத்தைப் பற்றறக்களைந்து வியாபக அறிவுடன் அவனது திருவடியை அணையும்.

---

## பன்னிரண்டாஞ் சூத்திரம்

---

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேய(ம்) மலிந்தவர் வேடமு(ம்)
ஆலயந் தானும் அரன்எனத் தொழுமே.

இச்சூத்திரம் - சீவன் முத்தர்க்குப் புறத்தே அறிவு இச்சை செயல்கள் செல்லுங்கால், அவை எவற்றைப் பற்று மென்பதை விளக்கும்.

உரை:- சீவன் முத்தன் செந்தாமரை மலர்போல விரிந்து விளங்கிய முதல்வனது வலிய திருவடிகளை அணைய வொட்டாது மறத்தலைச் செய்விக்கும் மும்மல அழுக்கை

ஞான நீராற் கழுவி, மறவா அன்பு செய்யும் அறிஞரோடு கலந்து மலமயக்கம் நீங்க, அன்புமிக்க அவரது திரு வேடத்தையும் சிவன் கோயிலையும் முதல்வ னெனவே கண்டு வழிபடுவன்.

## முதல் அதிகரணம்

வாசனை பற்றிவரும் மும்மலங்களும் மெய்புணர்வைக் கீழ்ப்படுத்தி மாயா வுணர்வை மேற்படுத்தும் ஆதலால் மெய் யுணர்ச்சிக்குத் தடையாக வரும் அவற்றை நீக்குக.

நல்வினை தீவினைகளுக்குப் பயனும் காரணமாயும் பொருந்துகின்ற கன்ம மலமும், நில முதல் அசுத்தமாயை முடிவாகக் காணப்படுகின்ற மாயா மலமும், தற்போதத்திற் கேதுவாய் நிற்கும் ஆணவமும் ஆகிய இம்மூன்று மலங் களும் மெய்புணர்வுடைய சிவஞானிக்குத் தடையாமாதலின், அவைகளைக் களைதல் வேண்டும்.

## இரண்டாம் அதிகரணம்

அணைந்தோராகிய சீவன்முத்தரோடிணங்குக. ஏனையோர் உலகப் பொருளுணர்ச்சியாய திரிபுணர்ச்சிக்குக் காரணர் ஆவர்.

தமது மெய்யியல்பை மறக்கச் செய்து, மலங்களாய பிறவியில் வீழ்த்தும் அன்பிலாரொடு பழகிய பழக்கம் அறு மாறு, அன்பர் கூட்டத்திற் பெருவிருப்புடையராய், அதன் சார்பாக விளங்குஞ் சிவஞானத்தால் முதல்வனை உணரும் மெய்த் தவத்தினரைப் பிராரத்த வினைகள்—பொருந்த மாட்டா.

## மூன்றாம் அதிகரணம்

முதல்வன் சிவனன்பர்திருவேடத்திலும் திருக்கோயிலி லும் மாத்திரமே, (தயிரின் நெய்போல) விளங்கி நின்று,

ஏனைய இடங்களிற் பாலில் நெய்போல வெளிப்படாது நிற்ற லால் அவைகளைப் பரமேசுரனெனக் கண்டு வழிபடுக.

பரம்பொருள் தன்னை உலகினர் அறிதற்பொருட்டுத் தனது திருவேடத்தை அடியார்களுக்குக் கொடுத்து அவர் கள் தன்னைச் சிவோகம் பாவனையால் உணரவே, தன் வியா பகத்துள் அவர்களை இருத்தி வைப்பதால், தன்னை அகண்ட மாக உணரும் பேரன்பரிடத்தே தயிரில் நெய்போல விளங்கு வான்; பாசமுடையாரிடத்தே முதல்வன் விளங்காது நிற்பன்.

விறகினிடத்தே கடைந்த காலைத் தோன்றியும் அல்லாக் கால் தோன்றாமலும் தன்மையால் விறகிற்கு வேறாயுள்ள நெருப்புப்போல காணப்பட்ட திருவடிவத்தின்கட் கலந்து அதுவாகியும், அதுவல்லாமல் வேறாயும் நிற்கு முதல்வன் ஞானிகள் அல்லாத பிறர்க்கு அவரால் அறியப்பட்டதொரு மந்திர உன்றப்பால் விளங்கித் தோன்றுவன். (அஃதில் வழி விளங்கான்.) அவ்வடிவையே அவனாகக் காணும் மெய்ந் தவ முடையார்க்கு (மந்திர முதலியவற்றின் உதவியில்லா மலே) அவ்வண்ணம் அவன் விளங்கித் தோன்றுவான், என அறிக.

## நான்காம் அதிகரணம்

உடம்புள், நரம்பு, நாடி முதலிய கருவிகளில் அது அதுவாய் நிற்கும் உயிர் அவையாகாமல், அவற்றின் வேறாய் நிற்றல் போல, முதல்வனும் கலப்பால் எப்பொருளாகியும், பொருட்டன்மையால் அவை அல்லனாகியும் நிற்றலால், அவ் வாறு முதல்வன் நிற்கும் இடங்களாகிய திருவேடத்தையும் திருக்கோயிலையும் வழிபடுக.

முதல்வன் நிற்கு நிலையறியப் பெற்றவர்கட்கு அதுஇது என்ற வேறு பாட்டு நிலையும் அது என்ற வேறு பாடில்லா

நிலையும் அதுவாகிய இது என்ற குண குணி நிலையும் உடையன் அல்லாமல், அறிவொளிபோல், அம்மூன்றற்கும் பொதுவாய் அத்துவித நிலையில் நிற்கின்றான் ஆதலால் எல்லாப் பொருளும் அவன் வடிவமேயாயினும், அவற்றுள்ளும் அன்பு மிகுதியாய் விளையுமிடத்தே, ஞானிகள் 'வழிபடுதல் வேண்டும்.

பிராரத்த வினை தாக்குமளவும், நிலையிலாப் பொருளுணர்ச்சி உளதாமாதலால், பிராரத்த வாசனை நீங்கினால் அன்றி மெய்யுணர்வு மேற்படாது. அவ்வாசனை கழிதற் பொருட்டு மெய்யுணர்வுடையாரை நாடி வழிபடவே மெய்யுணர்வு மேம்படும். ஆகையால், அவரை அன்பால் வழிபடுக என்றவாறு.

தன்னுண்மையை அறியமாட்டாது குருடாய்க் கிடந்த உயிர்க்குப் பலவாற்றானும் அதனைத் தெரிவித்து, அவ்வுயிரைத்தான் ஆகும் வண்ணஞ் செய்தருளியவனை அவ்வுபகாரத்தின் பின்னர் மறத்தல் (பரிகாரமில்லாத) குற்றமாவதோடு, முதல்வன் அப்படி உயிரைத் தானாகவே செய்தாலும், முதல்வனுதவியை இன்றியமையாத அடிமையாகிய உயிர் அவனுக்கு எக்காலத்தும் அடிமையேயாதலால், அப்பெரியோனை வழிபடுதலே உயிர்க்கு வலிமையெளிப்பதாகும்.

ஒருமலம் இருமலம் உடையார்க்கு, முறையே அறிவின்கண் நின்று நேரே திருவருட் பார்வையால் நோக்குவதாலும், நேரே தேவ வடிவோடு வந்து பார்த்தலாலும் சொல்லுதலாலும், பிறவிக்கேதுவாய பசுத்துவம் நீங்கும்; சிவத்துவம் உண்டாம். மூன்று மலமுடையார்க்கு இவ்வுலகில் அனுபவமுடைய தேசிகரால், அவை நிகழும். இந்நூல் மும்மலமுடைய் சகலர்க்கே பக்குவமுறுமிக் காலத்துஉரியதாகும்.

சிவஞான போதம் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# சிவஞான சித்தியார்

6

# சிவஞான சித்தியார்

சுபக்கம்

## பாயிரம்

### காப்பு

ஒருகோட்ட னிருசெவியன் மும்மதத்த
　　ஞல்வாயைங் கரத்த ஞறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
　　றருமொருவா ரணத்தின் றுள்க
ளுருகோட்டன் பொடும்வணங்கி யோவாதே
　　யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமுமொன்
　　றேவென்னச் செய்யுந் தேவே.

ஒரு கொம்பையும், இரண்டு செவிகளையும், மும்மதங்களையும், நாலுகின்ற (தொங்குகின்ற) வாயையும், ஐந்து கரங்களையும் உடையவரும் கங்கையும் வளைந்த அழகிய பிறையும் அணிந்த தாழ்ந்த சடையையுடைய சிவபிரான் புதல்வரும் ஆகிய ஆனைமுகக் கடவுளது திருவடிகளை உருக்க மிக்க அன்போடு இடையறாது வழிபட்டு இரவும் பகலும் தியானிப்போருடைய அறிவின் கண்ணதாகிய மும்மலக் குற்றத்தை அவை நீக்கும்; அதுவன்றியும் அவை அயன் அரி முதலியோர் வாழ்வும் ஒரு பொருளன்றென வெறுப்பச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வையும் தரும்.

## மங்கல வாழ்த்து

### சிவபெருமான்

அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய் வேறுங்
குறியது வுடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந்தங்
கறிவினி லருளான் மன்னி யம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாதுநின்ற சிவனடி சென்னி வைப்பாம்.

*அறுவகைப்பட்ட புறச்சமயத்தார் ஆராய்ச்சி செய்து முடிவாகக்கொண்ட வெவ்வேறு பொருள்களாகியும்; அகச் சமயத்தார்க்குப் புறச்சமயத்தார் கொள்கைக்கு வேறுகிய நிலையுடைய ஐந்தொழில் செய்யும் பதியாகியும், சித்தாந்த சைவர்க்கு வேதாகமக் கருத்திற்கு அப்பாற் பட்டதாயும் நின்று, உயிர்களின் அறிவின் கண்ணே திருவருளாலே கலந்து அறிவைப் பிறப்பிக்கும் அம்மையப்பனுய், எங்கும் நிறைந்து எக்காலத்தும் வியாபகனுய் விளங்குஞ் சிவபிரானது திருவடிகளைத் தலைமேற் கொள்ளுவாம்.*

### முன்னூல்

என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித்தத்தே
தன்னைவைத் தருளினுலே தாளிணை தலைமேற் சூட்டு [னூல்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டா
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றும்.

*பிறவிக்கடலிலழுந்துகின்ற என்னை, அதன்கண் அழுந்தா வண்ணம் கருணைக்கையா லெடுத்து, என் அறிவின் கண்ணே சிவ சொரூபத்தை விளக்குதற்கு எழுந்தருளி வந்து, திருவடிகளை எனது சிரமேற் சூட்டியருளிய திரு வெண்ணெய் நல்லூரில் வீற்றிருக்கும் மெய்கண்ட தேவ*

நாயனார் அருளிச்செய்த சிவஞான போத நூலை எமது தலை மேற்கொண்டு சைவ சித்தாந்த உண்மைகளை விளக்குவாம்.

## கேட்போர்

முற்பிறவிகளிலே சிவபெருமானைக் குறித்துப் பயன் கருதாது செய்த தவத்தொடு பிறந்து அப்பெருமான்பால் அன்பு செய்கின்ற அடியவர்களுக்கு நூல் வேண்டியதில்லை. அவர்களுக்கு உரிய ஞானத்தை இறைவனே கொடுத்துச் சிவகதியினிற் சேர்த்தருள்வன். நூலினால் உண்மையறிந்து வீடுபெற விரும்புவார்க்கு இறைவன் திருவடித் தாமரைகளைச் சேரும் வகையினை இந்நூலுள் கூறுகின்றாம்.

## அவையடக்கம்

மறைகளினாலும், பிரமனாலும், திருமாலாலும், மன மொழிகளாலும், பிறஎவ்வகைப் பிரமாணங்களாலும் அறியப் படாத முதல்வனது இயல்பை யான் சொல்லப்புகுதற் கேது வாகிய எனது ஆசை சான்றோரால் இகழ்ந்து நகையாடுதற் குரியது.

இறைவனியல்பு அத்தகைய பெருமையதெனினும், அவனைச்சிவநூலுட்கூறிய உண்மைகளை அனுபவத்தாலறிந்த ஆசிரியர் அருளிச்செய்யும் உபதேசத்தாற் கேட்டறியலாம்; அதற்கனுகூலமான அளவையாற் சிந்தித்தும் அறியலாம்; சிந்தித்ததனைத் தன்னறிவின் கண்ணே சிவஞானத்தான் மாசறத்தெளிந்தும் அறியலாம்; அதனாற் பாசநீக்கம் எய்தி நிட்டை கூடிச் சிவானுபூதியும் பெறலாம்.

## அளவை

பொருள்களின் உண்மையையும் தன்மையையும் அறி தற்குக் கருவியாயுள்ளனவற்றை அளவையென்றல் மரபு.

அளந்தறிதற்குத் துணைசெய்வது அளவை எனப்படும். பிரமாணம் என்பதும் அதுவே. காண்டல், கருதல், உரை என மூன்று பகுதியாக அளவை பகுக்கப்படும். இல்லாமை, குறிப்பு, உவமை என்று மூன்றுவகையை அவற்றோடுகூட்டி அளவை ஆறென்றும், ஒழிபு, நிகழ்ச்சி, ஐதிகம், இயல்பு என்பவற்றையுஞ் சேர்த்து அளவை பத்தென்றும் கூறுப. அவையும் அவற்றிற்கு மேலுங் கூறுவனவும் ஆகியவெல்லாம் காண்டல், கருதல், உரை என்ற மூன்றினுள் அடங்கும். இவற்றை வடநூலார் அனுபவம், யுக்தி, சுருதி யென்பர். சுருதி, யுக்தி, அனுபவம் என வரிசை கூறுவதே அவர்முறை.

மேற்கூறிய மூன்றனுள் பொதுவுணர்வை முதலிற் பெற்று, ஐயந்திரிபறப் பொருள்களை நேரே அறிவதாகிய உயிரினது அறிவாற்றலே காட்சியளவை யெனப்படும். அங்ஙனம் நேரே அறியப்படாமல் மறைந்து நின்றபொருளை, அதனைவிட்டு நீங்காது எப்போதும் உடன் நிகழும் ஏதுவைக் கொண்டு அறியும் உயிரின் அறிவாற்றல் கருதல் அளவை எனப்படும். இவ்வாறு அறியப்படாததை அனுபூதிமான் களது சொற்களின் வைத்தறியும் உயிரின் அறிவாற்றல் உரையளவை எனப்படும்.

காட்சி வேற்றுமையிலாதது வேற்றுமையுடையது என இருவகைப்படும். பொருளுண்மை மாத்திரையே காட்டுவது முன்னது. ஒவ்வொன்றின் பெயர், இனம், பண்பு, தொழில், உடைப்பொருள் எனபவற்றை உணர்த்துவது பின்னது. இதுவோ அதுவோ வென்று ஒன்றை ஐயுறுதல் ஐயக்காட்சி; ஒன்றை மற்றொன்றாக உணர்தல் திரிபுக் காட்சி. இன்ப துன்பங்களை யுணர்த்துவது தன வேதனைக் காட்சி யெனவும் யோகத்தால் மலசத்தி நீங்கப்பெற்று,

முக்கால வியல்பையும் மூவிடத்துப் பொருளையும் அறிதற் கேதுவாயது யோகக்காட்சி யெனவுங் கூறப்படும். பிற விரிப் பிற் பெருகும்.

# சிவஞான சித்தியார்.

---

## சுபக்கம்

## முதற் சூத்திரம்

---

உலகம் அவன், அவள், அது என்னும் மூவேறு பகுப் புடையது. அப்பகுப்புக்கள் முறையாகத் தோன்றி நிற்க வேண்டிய காலி எல்லையுள் நின்று ஒடுங்குவனவாதலின், அவற்றைத் தோற்றுவிப்பானொரு முதல்வன் இன்றியமை யாதுவேண்டப்படும். தோற்றுவிப்பவனே ஒடுக்கு மிறுதிக் கடவுளாயுமிருப்பன். அவன் இத் தோற்ற ஒடுக்கங்களாற் றடக்குறுது எஞ்ஞான்றும் பேரறிவு வடிவாக நிலைபெற்று நிற்பன்.

### முதல் அதிகரணம்

உலகம் தோற்ற வொடுக்கமில்லாது எக்காலத்தும் நிலை பெற்றிருப்பதென்னின், அது காட்சி அளவைக்குப் பொருந்துமாறில்லை. ஐம்பூதங்களாலாய பொருள்களெல் லாம் தோன்றி மறைவது வெளிப்படையாகலின், அவற்றின் தொகுதியாய உலகமும் அவ்வாறே யாமெனவறிக.

தோன்றி மறைதல் உலகத்தின் இயற்கையாமெனின், தோன்றுதலு மறைதலும் மாறுபட்ட தன்மையனவாதலான்,

அவ்விரு வேறு தன்மைத்தாய செயலினை இயற்கையென்றல் தவறு. இயற்கையாயுள்ள பூதங்கள் தாமே தோன்றி மறையு மென்னில், அறிவில் பொருளாய அவை அறிவுடைப் பொருளால் இயக்கப்பட்டு இயங்குமேயன்றித் தாமே இயங்கா.

இனி, நான்கு பூதங்களுள் நீரானது பிறபூதங்களை யாக்கும்; காற்று பிறவற்றை நிலைநிறுத்தும்; நெருப்பு பிற வற்றை யழிக்கும், தானுமழிவெய்தும்; நிலம் பிறபூதங்களி னின்று நுகரப்படும் பயனைவிளைவிக்கும்; ஆதலால், இவற் றைச் செயற்படுத்த ஒருமுதல்வன் வேண்டப்படானென் னில் அதுபொருந்தாது; எல்லாவற்றையும் நிலைநிறுத்துவது காற்றானல் நீரினையும் காற்றே நிலைநிறுத்துமென்பது முடியும். அங்ஙனமாயின் நீர் காற்றையுளதாக்கவில்லை என்பது பெறப் படும். அன்றியும் அனல் மற்றைய பூதங்களை அழிக்குமே னில், அதுகாற்றையும் அழிக்கவேண்டும். அப்பொழுது காற்று அதனை நிலைநிறுத்துமென்பது பொருந்தாது, அவ்வாறே பிறபூதங்களுள் ஒவ்வொன்றும் மற்றவற்றை யெல் லாம் தொழிற்படுத்துமென்பது தவறாய் முடியும். அவற்றின் மாறுபாட்டை ஒழித்து அறிவில்லாத அவற்றை இயைவித் துத் தொழிற்படுத்துவதற்கு, அறிவுடைய ஒருவன் வேண் டும். உதாரணமாக, நீரும் நெருப்பும் தம்முள்மாறுபட்ட தன்மையுடையன. அவை இரண்டும் நேரே சேர்ந்த விடத்தே ஒன்றை ஒன்று அழிக்கும்; அறிவுடை ஒருவன் நீரை ஒரு பாத்திரத்தில் விட்டு நெருப்பின்மேல் வைத்தால், இரண்டும் மாறுபாடின்றித் தொழிற்படும். மேலும் பூதங் கள் தனித்தனி முத்தொழிற்படுதலாலே அவை ஒன்றனை ஒன்று தொழிற்படுத்தும் ஆற்றல் உடையன அல்ல.

ஆகவே முத்தொழிற்படாத முதல்வனே அவற்றை முத்தொழிற்படுத்தவல்லன்.

இனி, முற்கணத்திற் றோன்றியழியும் பொருளின் சார்பிலே, பிற்கணத்திற் பிறபொருள்கள் தோன்றும். இவ்வாறே எப்பொருளுஞ் சார்பிற்றோன்றுவதன்றி, முதல்வனை வேண்டாவெனில், தோற்றங்கூறுவது உள்பொருட்கோ இல்பொருட்கோ என்பதை ஆயவேண்டும். இல்பொருள் என்றுந்தோன்றாது. உள்பொருள் தோன்றுவான் ஏன் என்னில், தோற்றமில்லாதபோது அது நுட்பமாய காரணவடிவாயிருக்கும். காரணவடிவினின்றும் காரியம் வெளிப்படலே தோற்றமெனப்படும். மண்ணிலிருந்து அதிலில்லாத ஆடை முதலியன தோன்றா; அதில் நுட்ப நிலையில் உள்ள குடம் முதலியன தோன்றும். எனவே காரணமும் காரியமும் உள்பொருளே. வெளிப்படாது காரணத்துள் அடங்கி நின்ற காரியப்பொருளை வெளிப்படுத்துவதே இறைவன் அதனைத் தோற்றுவித்தலாகும்.

உடம்பு தோன்றியழிவதேயன்றி உலகந் தோன்றியழியக்காரணமில்லை என்னில், ஐம்பூதகாரியமாதலின், அதுவும் தோன்றி நின்றழிவதே.

உலகமுற்றிலுமழியாது ஓரிடம் அழியப் பிறிதோரிடம் நிற்குமென்னில், உலகமுழுவதும் அழிவதை யாரும் பார்த்தல் இயலாது. ஒருங்கே கார்காலத்தில் ஒருவகை வித்துகள் முளைகளாகத் தோன்றி வளர்வதும் வேனிற்காலத்திலே அழிவதுங் காண்டல்போல, உலகமும் ஒருகாலத்தில் ஒடுங்குமென அறிக.

தோற்றக்கேடுகட்குக் காலமே முதன்மையாகக்கொள்கின்றோமெனின், காலம் அறிவில்லாததாகலின், அது வினை

முதல் (கருத்தா) ஆகாது. காலத்தின்படி செயல்கள் நிகழ்கின்றனவெனில் அறிவுடைக் கடவுள் ஏவலால் அவை நிகழ்கின்றன. காலம் அவனுக்குத் துணைக்காரணமாமென்றறிக.

உலகம் ஐம்பூதங்களினுட்பமாக அழிவெய்தும்; கட்புலனாகாத பரமாணுக்களே அவற்றின நுட்பம்; அவைகளே உயிர்களின் வினைகாரணமாக உலகமாய்த் தோன்றி நின்றழியுமென்னில், வினையும் அணுவுஞ் சடமேயாதலால், தோற்ற ஒடுக்கங்கள் அவற்றாலாவனவல்ல. மேலும், அணுக்களும், நுட்பமாக ஆராயுமிடத்து, வெவ்வேறு தன்மையன வாய்ப் பகுப்புடையன. ஆதலால், அவைகளும வடிவிழந்து அழிவனவே. ஆகவே அணுக்கள் உலகத்தின் முடிந்த மூலமல்ல. அங்ஙனமாயின் உலகம் முடிவாக எதன்கணின்று தோன்றுமென்னின் மாயையினின்று தோன்றும். மாயையே உலக முதற்காரணமாகும. அஃதே உருவப் பகுப்புக்கள் அற்றதாய்ச் சடப்பொருள்வற்றிற்கும் மூலமாய் யாவுந்தோன்றுதற்கு இடனுமென்றுணர்க. ஆதல் பற்றியே அறிஞர், தோற்றமும, நிலையும், இறுதியும் மாயையினின்று நிகழ்வன எனக் கூறினர். வித்தின்கண் மரத்தின் கிளை, இலை முதலிய உறுப்புக்கள் நுட்பமாயமைந் திருப்பதினாலேயே, மரம் வளருங்காலத்தே அவை புறத்தே வெளிப்பட்டுத் தோன்றுகின்றன. இல்லாவிடிற்றோன்றா. அதேபோல, மாயையுமாம். மாயையே எல்லாவற்றையும் நுட்பமாகத் தன்னகத்தே கொண்டுள்ள உலக மூலமென அறிக.

மாயையிலே எல்லாம் ஒடுங்குமெனின், அஃது எங்ஙனம்? மரத்தினின்று இலைகள் உதிர்ந்தபின், அவைகள் மீள மரத்திற் போய்ச் சேர்வதில்லையே யென்று வினவிற்

கூறுதும். அத்தன்மைய இலைகள் உண்டாவதற் கேதுவாய காரணப்பொருளில் அவை அழிந்து அடங்கும். அக் காரணப்பொருள் காரியமாப் பரிணமிக்குங்காலே, இலை வடிவாய் வெளிப்பட்டுத் தோன்றும். காரணவடிவாய் மறைந் திருக்கும் உலகே காரிய வடிவாய் வெளிப்படும். உல கிற்கு முதற்காரணமாய மாயை என்றும் உள்ளது. காரிய வெளிப்பாடு ஒரு முதல்வனால் கால எல்லைநிலைமைத்தலின்; உலகம் ஆதியும் அந்தமுமுடையதென்ப. பூதப்பொருள்கள் யாவுஞ் சடமாகலின் அவற்றைத் தோற்றுவிப்பான் அறி வுடைய முதல்வன் ஒருவன்வேண்டும் என்பதாகும்; உயி ரானது அறிவுடைய பொருளாதலின் உயிரினை அம்முதல்வ னென்றுமோவெனின், உடம்பு முதலிய கருவிகளைப் பெற்று லன்றி ஒன்றை அறியுமாற்றல் உயிர்க்கில்லை. ஆதலின உயிர்க்கு அவற்றைத் தருவதாய உயிரின்வேறாய் ஒருவினை முதல் (கருத்தா) வேண்டும். மாயை சடசத்தியாகலின் அது தானே உயிர்க்கு உடம்பு முதலிய கருவிகளைத் தரமாட்டாது என்றறிக.

உலகத்திலே ஒவ்வொரு செயலுக்கும் காரணம் மூன் றுள்ளன என்பதைக் கண்கூடாக அறியலாம். மட்கலங் களுக்கு முதற்காரணம் மண்; துணைக்காரணம் திரிகை முத லாயின; நிமித்த காரணம் குயவன். அதுபோலச் சடஉலகை முண்டாதற்கு மாயை முதற்காரணம். இறைவனது ஆற்றல் துணைக்காரணம். இறைவன் நிமித்தகாரணம் எனக் கொள்க.

சைவத்திலே உலகமுதற்காரணம் தூயமாயை, தூய் தல்மாயை, மூலப்பகுதி மாயை யெனமூன்றுவகையாகப் பேசப்படும். சிவபெருமானது திருமுன்பாக, அவனது

ஆற்றலால், தூயமாயையின் கீழாக அடங்கித் தூய்தல் மாயை யும், அதினின்று மூலப்பகுதியும் தோன்றும். உலகைப் பொருளுலக மென்றும், சொல்லுலக மென்றும், பகுக்குங் காலை, பொருளுலகமென்பதற் கடிப்படை தூய்மாயை யிற்றோன்றிய ஐந்து முதல்களும், தூய்தல் மாயையிற்றோன் றிய ஆறு முதல்களும் மூலப்பகுதியிற் றோன்றிய இருபத்து நான்கு முதல்களுமாம்.

சொல் என்பது கருத்துணர்த்தும் ஒலிக்கு அடிப்படை யான தூயமாயைப் பகுதியென்பதே அறிவ னாற்றருத்து. அது நால்வகைப்படும். அவை நட்டம், தொகை, வகை, விரி என்பன. வடமொழியிலே அவைமுறையே, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி யெனப்படும். இதுதிநின்றதை இருவகையாக்கி, ஐவகை பேசப்படுதலுமுண்டு. பிறர் செவிக் குப் புலனுவதை வெளிப்படையென்ப. நட்டம் என் பது அழிவில்லாததாய்த் தொகை, வகை, விரி என்பவை தோன்றி ஒடுங்குதற்கு அடிப்படையாயது. அது இறைவ னது திருவருளாற்றலோடு நேராய தொடர்புடையதாய் இருப்பதால், அதனை உள்ளபடி காணப்பெற்றார்க்கு அது நீங்காத அறிவு, இன்பம், முதன்மை என்பவற்றைத் தரவல் லது; அதனையே ஒலிமுடிவான வீடென்பர். அதனைக்கடந்து விடின், முதல்வனோடு இரண்டறக்கலப்பதே கைவரும். நட்டத்தின் வடிவை ஒலிப்பிழம்பென்ப.

தொகை (பைசந்தி) யென்பது, மயில் முட்டையிலுள்ள நீரானது பலநிறந் தோன்றுவதற்கேதுவாய் அந்நிறங்களைக் காட்டாது அவற்றை அடக்கி நிற்பதுபோல, கீழ்வரும் வகைக்கு ஆதியாய்ப் பொருள்களைப் பொதுவாயறியும் பொது உணர்விற் கேதுவாயுள்ளது.

வகை (மத்திமை) யென்பது செவிப்புலனுகாது உள்ளே உணரப்படுஞ் சுட்டுணர்விற்கேதுவாய் உயிர்ப்புக்கா (பிராண வாயு)வின் கலப்பின்றி மக்கள் வெவ்வேறு மொழிகளில் நினைப்பதற்கேதுவாயுள்ளது.

விரி(வைகரி) என்பது தன்செவிக்கும் பிறர்செவிக்கும் புலனுவதாய்ச் சிறப்புணர்விற்கேதுவாய் உயிர்ப்புக்காலுடன் கலந்து வெவ்வேறெழுத்தொலியாய் வெளிப் படுவதாகும். தன்செவிக்குமாத்திரங் கேட்பதை விரியெனவும், பிறர் செவிக்குங்கேட்பதை வெளிப்படை யெனவும் கூறுதலும் உண்டு. சொல்நான்கும் தமிழ்மண்டில மெனப்படும் சுத்த தத்துவங்களிலே ஐந்து கலைகளைப்பற்றி நிற்பன. இவை தூயமாயையின் திரிபு அல்ல; துணி கூடார மாறுற்போன்ற அதன் படிப்படியாய விரிவே.

சொல்லைச்சுத்தப்பிரமமென்பர் சிலர். அது உண்மையிற் சுத்த மாயாவடிவே. நுட்பம், தொகை, வகை, விரி, வெளிப் படையெனச் சொல்லைந்து. நீத்தல் (நிவிர்த்தி) பதிவு (பிர திட்டை) புலமை (வித்யா) அமைதி (சாந்தி) அமைதிமேல் (சாந்தியதீதை) எனத்தூயமாயாவட்டங்கள் (சுத்தமாயாகலை கள்) ஐந்து. இவற்றுள் நீத்தற்கலையைப்பற்றி வெளிப்படைச் சொல்லும், பதிவுக்கலையைப்பற்றி விரியும், புலக்கலையைப் பற்றி வகையும், அமைதிக்கலையைப்பற்றித் தொகையும், அமைதிமேற்கலையைப்பற்றி நுட்பமும் நிற்கும். குறித்த சொல்வகைகள் மூலமாக உயிர்க்கு அறிவு விளங்கும். அறிவினை விளக்குங்கருவியே சொல்லென அறிக. ஐவகைச் சொல்லும் படிப்படியாக நுட்பமானவை. சொல்லின் சார் பில்லாவிடின் மூவகையுயிர்க்கும் சுட்டறிவு விளங்குமாறில்லை. சொல்லைத் தன்னின் வேறாகக்காணப்பெற்று இறைவன் நல்

கும் பேரறிவைப் பெறக்கூடுமாயின், உயிர்கள் முடிந்த வீட்டின்பத்தை எய்துதல்கூடும்.

தூயமாயை, மேற்கூறிய சொல்லிற்கு மாத்திரமன்றி மந்திரமுதல்வர், மந்திரப்பெருந்தலைவர், சிவனருளுருவினர் முதலிய, தமிழ் மண்டிலம் எனப்படும் சுத்ததத்துவத்தில் வாழ்பவர்கள் யாவர்க்கும் பயன்படும் எழுத்து, சொல், சொற்றொடர், உடம்பு, உறைபுள், நுகர்பொருள் முதலிய யாவற்றிற்கும் முதற்காரணமாமென அறிக.

பொருள்கள் தோன்று முறையைப்பார்க்கில், மிகவும் நுண்ணிய அருவப்பொருளினின்று நுண்ணிய உருவப் பொருள்கள் தோன்றும். அவைகளினின்று பருப்பொருள்கள் தோன்றும். அவைகளெல்லாம் பலதிறப்பட்டு முதலாகவும் உறுப்பாகவும் வெளிப்படும். அவைகள் தம்முள் வளர்ந்துந் தேய்ந்தும் திரிபுற்றும் இரண்டறக்கலப்புற்றும் விளங்கும். இவற்றை இயைத்து இயக்கு முதல்வன் தன்னியல்பால் வேறாய் நிற்பினும், இவற்றொடுகலந்து ஒன்றாகியும், தன் முன்னிலையிலிவற்றை யியக்குதலான் உடனாகியும் நிற்பன்.

அருவத்தில் நின்று உருவந்தோன்றாது, இயற்கையினின்று செயற்கைவராது என்னில், இந்தடையெழுப்பு மாயாவாதிகள், அருவமாகிய வானினின்று உருவமாய பிற பூதங்கள் தோன்றுமென்றும், இயற்கையாயுள்ள வானகத்தே செயற்கையாய மின்னல், இடிமுதலிய தோற்றங்கள் உண்டாவனவென்றுங் கூறுவராதலின் இத்தடை அவர்கொள்கையாலேயே மறுக்கப்பட்டொழிதலறிக.

## இரண்டாம் அதிகரணம்

குயவன் நமது கண்ணெதிரே மண்ணில் நின்று குட முதலிய பல கலங்களையுமுண்டாக்குதல்போல, முதல்வனும் கருதிய வடிவங்களையெல்லாம் உண்டாக்குவனென்றால், குயவன்றன்மையறியற்பாலது; முதல்வன் எங்கே நின்று உலகத்தை யுளதாக்குவனோ? முதல்வன்றன்மை எத்தகைத்தோ? என்று வினவுவையாயிற் கூறுதும்:- காணப்படும் உலகைப்பற்றிப் பேசுகிற முறையாகக் காணப்படாத முதல்வன்றன்மையைக் கூறுதல் அரிது. அவன் நிலையை ஓர் உதாரணத்தால் விளக்குதும். காலமென்னு முதலானது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று பகுப்பாய் நின்று உலகம் எழும் தோன்றி நின்றழிதற்கேதுவாய்த் தனக்கு ஆதாரந்தோன்றாது நிற்றல்போல, முதல்வனும் எப்பொருட்குந் தானே யாதாரமாய் நின்று தனக்கு ஆதாரம் யாதும் வேண்டாது உலகைத் தொழிற்படுத்துவனென அறிக.

குயவன் ஊதியத்தின் பொருட்டுத் தான் வனையுங்கலங்களிற் பற்று வைத்திருப்பதுபோல, முதல்வனும் உலகைத் தொழிற்படுத்துவதால் உலகப்பற்றில் கட்டுண்டிருப்பனோ எனில், அவன் தன் பயன் கருதாமையின், ஐந்தொழிலியற்றுங்கால் அவ்வாறு அவன் கட்டுண்டிருப்பவன் அல்லன் என்றறிக. உயிரின் கண், நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படக்கம் என்னும் உணர்ச்சி நிலைகள் ஏற்படுதல் போல, இறைவன் கண் எல்லா உலகமும் உதித்தொடுங்குவதற்கேதுவாய, வளர்ச்சி, காப்பு, ஒடுக்கம் என்ற நிலைகள்உள்ளன. ஆயின், உயிர் அவத்தைகளால் துடக்குறும். முதல்வன் அவற்றால் துடக்குறான். எப்படிஎன்னில் நாம் கற்ற நூலின்

சொல்லும் பொருளும் நமது அறிவின் அமைந்து தோன்றுங்கால் அறிவானது அவற்றால் தடக்குறாமை போல என்க.

உயிரோடுங் கூடிய உலகம் இறைவனால் ஒடுங்கியபின் மீளத்தோன்றுவதேனெனில், உயிர்களின் ஆணவமலம் பரிபாக மடைதற் பொருட்டு அது மீண்டும் உளதாம். கட்டு கழலும் எல்லைவரை, அது நிலைபெறாமல் இடையிலே ஒடுங்குவதேதனால் எனின், உயிர்கள் பிறப்புஇறப்பின் இளைப்பு நீங்குதற் பொருட்டேயாம். உலக ஒடுக்கத்தின் கண், காரியப் பொருள்கள் அழிந்து காரணம் அழியாது நிற்றலின், அக்காரணத்தினின்று காரியமாய உலகத்தை முதல்வன் மீளத்தோற்றுவிப்பான்.

இறைவன் முத்தொழிலை இடையறாது செய்வதால், திரிபுறுவானென்னின், அவை நிகழு மாற்றை அறியின் அவ்வாறு கருத இடமில்லை. கதிரவன் முன்பு, தாமரை அலரவும், காந்தக்கல் நெருப்பினைக் கக்கவும், நீர்வற்றவும் காண்கின்றோம் அல்லவா? அதுபோல இறைவன்திரு முன்பு, உலகம் முத்தொழிற் படுமென்றோர்க.

முத்தொழிற்குங் கடவுளர் மூவரென உலகங் கூறவும், ஒருவனே அவற்றைச் செய்வானென்பது எவ்வாறெனில், படைப்புக் கடவுளும், காத்தற் கடவுளும் ஒரு கடவுளது ஏவலாலே தத்தந்தொழில் செய்யும் ஆற்றலைப் பெற்றுடையர். இறைவனது ஆற்றல் அவர்களிடத்திற் பதிந்தே அவர் தொழில்களை நடத்துவிக்கின்றது. ஒடுக்கக் கடவுளாகிய பலரும் இறுதி ஒடுக்கஞ் செய்பவனாகிய ஒருவன் அருளைப் பெற்றவர்களே.

எல்லாம் ஒடுங்குங் காலத்தில் ஒடுக்குபவன் ஒருவனே யுளன். மற்றிருவருமிரார். ஏனெனில், இருவருந் தத்தம் தொழில் செய்வதில் உறுதியாய் நின்றால், இறுதி நேரிடாது. ஆதலால், முதல்வன் அவ்விருவரையும் பிறரையுமொடுக்குவன். ஒடுக்கவே, முதல்வன் தவிரப் பிற யாவும் ஒடுங்குதலால், அவற்றை மீளத் தோற்றுவிப்பவனும், அம்முதல்வனே. ஆதலாற் காப்பவனும் அவனே யென அறிக.

முத்தொழிலும் இறைவன் இயற்றுவதற்குக் காரணம் யாதோவெனில், அவை முதல்வன் திருவிளையாட்டென்பதும் உண்டு. அத்தொழில்களை அவன் எளிதாகச் செய்வன் என்பது, அதற்குக் கருத்து. உயிர்கட்கு இருவகை இன்பமளிக்கவும், மும்மலங்களைத் துடைக்கவும், முதல்வன் அருள் கூர்ந்தமையே மெய்க்காரணமாகும். தோற்றுவிப்பது உயிர்கள் வினையை நுகர்ந்து கழித்திடுதற்பொருட்டு; வினையை நுகர்வித்தலே காப்பு; உயிர்கள் இளைப்பாறுதற்பொருட்டு ஒடுக்கம் நிகழும்; அவற்றிற்கு இருவினையொப்புளதாக்கி மலத்தை முதிர்வித்தல் மறைப்பு; கட்டொழித்து வீடு நல்கல் அருளல்; ஆய்ந்துபார்க்கின், கட்டும் வீடும் அருளேயாமென்பது விளங்கும்.

இறைவன் வடிவம் அருவமோ, அருவுருவமோ, உருவமோ, எனக்குணர்த்தல் வேண்டுமென்னில், கூறுதும். ஒருவனுய முதல்வனுக்கு மூவகை வடிவங்களும் உள்ளன. இறைவனுக்கு உருவமுண்டெனில், நமக்கு உருவம் வகுப்ப ஒருவன் இருப்பதுபோல, அவனுக்கும் உருவம் உண்டாக்க ஒருவன் வேண்டுமெனில், அவன் தன் விருப்பப்படி உருவங் கொள்ளுநவன் ஆகலின் வேண்டாவென்க. யோகசித்தர்கள் நினைத்த உருவங் கொள்ளுதலின் இறைவனைப்போல அவர்க

ளும் தம் வயமுடையவரே என்னில், அவர்கள் இறைவன் திருவருளால் தமக்கு ஒரு வடிவம் உடையராய்நின்றே பிறி தொரு வடிவங் கொள்வர்; ஆதலால் அவர்கள் இறைவனைப் போலத் தம்வயமுடையவர் அல்லர்.

அவர்கள் வடிவம் மாயா வடிவம். எல்லா வடிவங்களும் மாயா காரியமே. உயிர்க்கு விளக்கம் எய்த மாயா வடிவம் வேண்டப் படுதல்போல, முதல்வனுக்கு மாயா வடிவம் வேண்டியதில்லை. மாயா வடிவம் மலங்காரணமாக வருவ தோர் வடிவம். யோகிகள் முதலிய உயிர்களெல்லாம் ஆணவ மலத்தோடு கூடிய சிற்றறிவினர். இறைவன் ஆணவம் அற்ற அறிவிலே தங்கி நின்று உணர்த்துந் தொழிலுடை யோனும் எல்லா அறிவும், எல்லாச் செயலும், எல்லா முதன் மையுமுடையனுதலாலே, மலத்தாக்குரிய மாயா வடிவங் கொண்டு ஒன்றை அறிவானல்லன். தனது பேராற்றலி னாலே எல்லாம் அறிவன்; அவன் வடிவம் சிவசத்தியே. அது நமது மாயா வடிவம்போல்வதோ எனில், மாயாவடிவங் கள் நில்லாது அழிதல்போலச் சிவசத்தி அழிவும் மாற்ற மும் உடையதன்று. ஆதலால் சத்தி வடிவை மாயா வடிவிற்கு ஒப்பிடுதல் தவறு.

இறைவன் அருவத் திருமேனியே உடையனென்னில், அருவம், உருவம் என்று பேசுவது சடப் பொருட்கே. ஆறு பேருவழியையுங் கடந்த முதல்வனியல்பினை அவ்வற்றுட்படும் சடப் பொருள்களோடு ஒப்பனைவைத்துப் பேசுதல் பொருந்தாது. உலகப் பொருள்கள் அருவம், அரு வுருவம், உருவம் என மூவகைப்படும். உருவப் பொருள் அருவமான இடத்து வேறு பெயர் பெறும். அருவப்பொரு ளும் அனையதே. இறைவனே அருவமென்னில் சடமாய அரு

வப் பொருள்களுள் ஒன்றாக அவன் கருதப்படுவான். அது தவறு. இறைவன் கட்டும் வீடும் உடைய உயிரினியல்பும் உலகத்தின் இயல்பும் உடையனல்லன். முதலும் முடிவு மில்லாதவன். ஆதலால் நம் சுட்டறிவின் பாலனவாய அளவைகளால் அவன் அளந்தறியப்படான். நமது அறிவிற்குப் புலனாகும் முத்திறவடிவங்களுள், அவனை இன்ன வடிவமுடையன், இன்னதாகான் என்று அறுதியிட்டுக் கூறுதல் நமக்கியலாததே. இயலாததாகவே அதைப்பற்றிய வினாவுமில்லை; விடையுமில்லை.

இறைவன் சுட்டிறந்தவன், முதனடுவிறுதியில்லாதவன், முற்றறிவு முற்றுச் செயலுடையான், விருப்பு வெறுப் பிலாதான், உயிர்க்குயிராய் நிற்பவன், பிறரால் அறிவரியன், கருதியதொரு திருமேனியைக் கொள்ளமுடியாத குறை விலன், ஆதலால் தானினைந்ததொரு திருமேனியை அருளி னாலே தனதாகக் கொண்டருளுவனென அறிக.

உயிர் உடம்பை யியக்குதல்போல முதல்வன் உலகை யியக்குதல் கூடுமாதலின், முதல்வனுக்கு வடிவம் வேண்டா மென்னில், உருவெடுத்த உயிர்கட்குத் தோன்றியருளுதற் பொருட்டு அவன் திருமேனிகொள்ளுதல் வேண்டும். அருவ மாய மாயையை உண்ணின்றியக்கி அதற்குருவுகொடுத்த இடத்தே, அவ்வுரு, அவனது திருமேனி யெனப்படும். மறைப்புத் தொழில் அவனது ஊனநடனமெனப்படும். சத்தியுஞ் சிவமுமாய் நின்றே இருவகையாக உலகை இயக்கு தலால், அவன் ஆண் பெண் வடிவுடையனாகவுங் கருதப் படுவான்.

அன்பர் நினைந்த வடிவொடுதோன்றி அவர்க்கு மறை நூலென்னும் அருட்பனுவல்களை யுணர்த்தாவிடின், உயிர்கள்

மெய்புணர்ந்து கதியடையமாட்டா. திருமால் முதலிய தேவர்களுக்கும் மக்கட்கும், நாகர்முதலியோர்க்கும் ஆசிரிய பரம்பரை ஏற்படமாட்டா.

இறைவன் திருமேனி கொள்ளாவிடத்து ஆதிப்படைப்புத்தொழிலும், அன்பர்க்கருளுதலும், கலையறிவளித்தலும், இருவகை இன்புமிகுதலும், ஒடுக்கஞ் செய்தலும் ஆசிரிய வழிமுறையும் நிகழமாட்டா.

அருள்பற்றியே இறைவன் திருமேனிகொள்ளுதலின் அவனது உறுப்புக்களெல்லாம் அருள்மயமே. செயல்களும் குணங்களும் அருளே. துணைஉறுப்புக்கள் முதலிய எல்லாம் அருளே. உருக்கொண்டமையால் இறைவன் அளவிட்படுவான்போல் தோன்றினும் உண்மையாக அவன் சுட்டிறந்த முதல்வனே.

அவன் வடிவங்கள் போகமீதற்பொருட்டும், வினையினையொழித்தற் பொருட்டும், வீடு அருளுதற் பொருட்டுங் கொள்ளப்படுமாதலின், அவைமூவகைப்படு மென்ப. இவ்வுண்மையறியாதார், வினையால் உருவெடுத்த தேவருள் ஒருவனுக முதல்வனை யெண்ணியிடர்ப்படுவர். அவர் அரனது திருவருளுருவம் உலகிற்கப்பாற்பட்டதென்பதை யுணரார். அவனது அருள்வெளிக்குள் உலகம் தோன்றி ஒடுங்குமென்பதையும் உணரார். உலகை யியக்குவான் அதனோடு இரண்டறக்கலந்து நிற்கும் அவன் நிலையையும் உணரார். இறைவன் தேவர் மூவராயும் நின்றமையும் அறியார். அவன் சிவமுஞ் சத்தியுமாய் நிற்பதைத் தனது மங்கை பாக வடிவிற் காட்டியதையும் அறியார். அயனரி அடிமுடி தேட நின்று அளவிறந்ததன்மை யுணர்த்தியதையுமறியார்.

அவர் அவன் உருவிற்பட்ட அடி, யாவர்மேலும் பட்டதென்ற வரலாற்றினுண்மையுணரார். முதல்வி திருக்கண் புதைத்தபோது இருளும், நெற்றிக்கண் திறந்தபோது ஒளியும், எங்கும் பரவினமையால், உலகின்கணுள்ள ஒளிகளெல்லாம் இறைவன் திருமேனி ஒளியென உணரார். இறைவன் யோகத்தமர்ந்தபோது, காமன் தன் தொழில் நடாத்தியும், விண்ணவர் முதலிய உயிர்கள் இன்பநுகர்ச்சி யிழந்தமையும், காமனை யெரித்து மலைமகளை மணந்த ஞான்று உயிர்கள் இன்பமெய்தினமையும் உணரார்.

அவர் ஒன்றோடொன்று ஒவ்வாத பல வேடங்களையும் ஒருமுதல்வனே மேற்கொண்டு செயலியற்றுதலால் அவன் உலகப்பொருள்களுளொன்றெனப்படாது அவற்றின் வேறாய பெற்றியனென்பதை அறியார். வேடங்கொள்வது அருட்டொழிலென்பதறியார். உணராமையின் அவர்கள் முதல்வன் திருவுருக்கோடல்பற்றிக் குறைகூறுவர்.

இறைவற்கு உருவமுளதாகவே, அவ்வுருவமொடுங்குமிடத்துள்ள அருவமும் அவன் திருமேனியே. இரண்டிற்குமிடையேயுள்ள அருவுருவத் திருமேனியும் அவனுக்குண்மைபெற்றாம். மூவகைத் திருமேனியும் நமது கருமேனிகழிக்கவந்த கருணையின் வடிவுகளே.

அத்துவாக்களை இறைவன் திருமேனி யென நூல்கள் கூறுவதற் கேது என்னை யெனில், அவற்றுள் நிறைந்து கலந்து அவையாய் நிற்றலானும், அறிவுள்ளது மில்லதுமாய உலகமனைத்தையும் உடன் நின்று செலுத்துதலானும், அவை யல்லனும், அவற்றை அவன் திருமேனி யென நூல்கள் இயம்பும்.

பெருவழிகள் ஆறனுள் மந்திரத்தை இறைவனுக்குச் சிறப்புத் திருமேனி யென்பதெற்றாலெனின், மந்திரங்கள் தூய மாயையி லெழுவன, தூயமாயை சிவசத்தியின் நேராய சார்புடையது, சிவசத்தி மந்திரத் தலைவர்களை நிலைக்கள மாகக் கொண்டு, மந்திரம் பயில்வார்க்கு இருவகை யின்பங் களையும் உதவும்; இக் காரணம்பற்றி மந்திரங்கள் இறை வனுக்குச் சிறந்த வடிவமாயின. மந்திரங்களுட் சிறந்த பஞ்சப் பிரம மந்திரங்கள் மிகச் சிறப்பாய வடிவங்களெனப் படும். அவை பிற மந்திரங்கட்கு முற்பட்டன; அவற் றிற்கு அடிப்படையுமாவன; அழிவற்ற ஆதி சத்திக்குத் திருமேனியாவன. இங்ஙன மந்திர முதலியன இறைவனுக் குத் திருமேனி யெனப்படினும் அவை உபசாரமே யென அறிக.

## மூன்றும் அதிகரணம்.

அயன் முதலிய கடவுளர் உருவையும் இறைவனுருவோ டொப்ப நூல்கள் இயம்புவதேதனாலெனின், முதல்வனது சத்திகள் அக்கடவுளர் மாட்டுப் பதியப்பெற்றமையால் அங் ஙனம் அவை கூறும். படைப்பு முதலிய தொழில்கட்கு அவர்கள் தாமே தலைவரெனின், முதல்வனொருவன் அவரின் வேறாக வேண்டப்படானென்பது முடியும்; பல தெய்வக் கோட்பாடு தவறாகலின், ஐந்தொழிற்குந் தலைவனாய ஒரு வனே அக்கடவுள் வாயிலாக ஒவ்வொரு தொழிலையும் இயற்று விப்பனெனக் கொள்க. சத்திகள் பலவாமோ எனின், அரசனது ஆட்சி ஆற்றல் ஒன்றே, அமைச்சர், படைத்தலை வர், நடுவர், பாடிகாவலர் முதலாயினர் பால் நின்று செய்யுந் தொழில் வேறுபாட்டாற் பலவகைத்தாய்ப் பல்பெயர் பெற்

றமை போல, இறைவனது சத்தி ஒன்றே தொழில் வேறு பாட்டாற் பல திருப்பெயரோடு திகழ்ந்து பயனளிப்பதென அறிக.

சிவசத்தியின் வடிவம் யாதெனில், சுட்டிறந்தறிதலா கிய இறைவனது பேரறிவே. அதுவே பராசத்தி யெனப் படும். அதுவே மூவகை மாயையினும் பொருந்தி ஐந் தொழிற்கும் வித்தாயகாலே, ஆதிசத்தியெனப்படும். இதனைப் பராசத்தியின் கூறென்பர். அறிவின்கண், விழைவு, செயல் களுமுளவோவென்றால், அறிவு எவ்வாறுளதோ அவ்வாறே விழைவு செயல்களும் நிகழுமாதலின், அவையெல்லாம் இறைவனது தடையில்லாப் பேரறிவில் அடங்கியனவே.

ஒரு சத்தியே விழைவு, அறிவு, செயலென முத்திறப் பட்டு நிற்கும். உயிர்கட்கு மலத்தை நீக்கிச் சிவமாந் தன்மை யளிக்கும் இறைவனது கருணையே விழைவு எனப்படும். உயிர்கட்குரிய நன்மைகளெல்லாம் விரும்பி அறிதலே அறிவு. அவற்றை அறிந்தவாறே செய்விக்கும் ஆற்றலே செயல். விழைவு, அறிவு, செயல், என்பன உயிர்க்கு முள்ளனவாத லால், சிவனுஞ் சீவனு மொப்பரென்றுமோவெனில், உயிர் களின் முத்திறவாற்றல்களை மலமானது மறைக்கும்; முதல் வன் உயிர்களின் வினைக்கு ஏற்பப் பயனளிப்ப, அதனால், உயிர் பொருள்களையறிந்து நுகரும்; வினையால் வருவதாய உலக நலனும், வினைக்கழிவின் வரும் வீடும் இறைவன்பால் உயிர்கள் பெறுந் தன்மையன. ஆதலால் சீவன் சிவனின் வேறெனவறிக.

இறைவனது விழைவானது எக்காலத்தும் ஒரு தன் மையாயிருக்கும். ஓரோர்கால் அவனது அறிவாற்றல் மாத்

திரம் பொதுவாக நிகழும். செயலாற்றல் மாத்திரம் பொது வாக நிகழும். இவை இரண்டும் ஒத்தும் நிகழும். ஒன் றினுமற்றொன்று சிறப்பாகவும் நிகழும். இறைவன் சிவ முதலின் கண் தனது அறிவாற்றலை மட்டும் பொதுமையால் நிகழ்த்துவன். அருள் முதலின் (சத்தி தத்துவத்தின்) கண் அவனது செயலாற்றல் பொதுமையால் நிகழும். இந்த இரண்டு முதலும் ஒடுக்க முதல் எனப்படும். அருட்சிவ முதலிலே இறைவனது அறிவுஞ் செயலும் ஒத்து நிகழ்ந்து படைப்பனவற்றிற்கெல்லாம் பாதுகாப்பாய் விளங்கும். இது காப்பு முதல் எனப்படும். அரசு முதலிலே இறைவனது செயல் சிறப்பாக மிகுதிப்படும். தூயபுலத்திலே இறைவ னது அறிவாற்றல் சிறப்பாக மிகுதிப்படும்.. அரசு முதலிலே தூயமாயா உலகத்தோற்றத்தின் பொருட்டுச் செயல் நிகழும். தூய புலத்திலே கீழுள்ள தத்துவங்களிலுள்ளார்க்கு அறிவு விளங்குவதற் கேதுவாய இயக்கம் நிகழ்தற்பாலதாகலின், ஆண்டு அறிவு சிறந்திலங்கும். இந்த இரண்டு முதலும் வளர்ச்சி முதல் எனப் பேசப்படும். இங்குக் கூறிய ஐந்து முதல்களும் தூய மாயையின் படிப்படியான விரிவாய் முதல் வனது சொந்த வடிவமெனப்படும். அவன் நேரே நிலைக் களமாகக் கொள்ளுதற்குரிய இடங்கள் அவையே என உணர்க. அவை கால தத்துவத்திற் கப்பாற்பட்டவை. முன் பின்னாக இவற்றைப் பேசுவது அவற்றின் தொழிலின் பகுதியை வைத்தென்க.

ஒருவனே இராமன், இராவணன் முதலிய பலவேடங் கள் பூண்டமைபோல, இறைவன் பல வடிவுகளைத் தாங்கி நின்றாலும், அவற்றாற் றன் தன்மையில் வேறுபாடிலன். பல வடிவுகட்குங் காரணம் அவனது ஆற்றலாய சிவசத்தியே.

சத்தியும் சிவமும் மரமும் வயிரமும்போல இருவகையாக இயைந்து நிற்கும். பொன்னிறம், கருநிற முதலியவைகளைச் சார்ந்த பளிங்கானது அவற்றின் தன்மை உடையதாய்த் தோன்றுமாறுபோல, சத்தி வேற்றுமைகளெல்லாவற்றோடு மியைந்த முதல்வனும் அவ்வேறு பாடுகளினியல்புடையோனாய்த் தோன்றினும் உண்மையில் ஒரு தன்மையனாகவே நிற்பான். அருட் சத்தி வாயிலாகவே அவன் தோன்றுவன்; வேறாகத் தோன்றான்.

இறைவன் சத்தியுஞ் சிவமுமாய இருவேறு தன்மைப் பட்டு நிற்பதனாலே, இவ்வுலகமெல்லாம் ஒருபுடையொத்து ஒருபுடையொவ்வாத ஆணும் பெண்ணுமாகவும், குணமுங் குணியுமாகவும் அமைந்துள்ளன. உலக வாழ்க்கையெல்லாம் சத்தி சிவத்தினோடியைந்ததனால் வந்த ஆக்கமே. இதனை யறியாதார் அருட்சிவத்திற்கறிகுறியாகிய பீடமும் இலிங்கமு மாய திருவடிவத்தின் றன்மையுணரார்.

உலகின் வேறாக முதல்வனைக் கருதுமிடத்து, அவன் உருவனுமல்லன், அருவனுமல்லன்; அறிவுடையது, இல்லது எனப்படும் உலகப்பொருள் யாதுமல்லன். படைப்பு முதலிய தொழில்களொன்று மியற்றாதவன். தவம், யோகம், போகம் முதலிய ஒன்றும் மேற்கொள்ள வேண்டியவனு மல்லன். இவற்றை உயிர்களின் பொருட்டுப் பொருந்தினும் அவற்றைத் தன்பொருட்டு வேண்டாத் தனித்தன்மையன். குணங்குறிகளில்லாதவன். இயல்பாகவே கட்டற்றவன். ஒருவனே யாயுள்ளான். இன்பவடிவன் என்றறிக.

## இரண்டாஞ் சூத்திரம்

இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்து மிடத்து உயிர்களோடு (கலந்தும்) உடனாகியும் வேறாயு முள்ளான்

அவன் ஒன்றினுங் கலவாது நின்ற தனிநிலையிற் சிவன் எனப் படுவன். உயிர்களோடு கலந்த நிலையிற் சத்தி எனப்படுவன். ஐந்தொழிலியற்றுங்கால் பதியெனப் பெயர் பெறுவன். உடலில் உயிர்போலக் கலந்தும், உலகின் வேறாய கதிரவன் போல வேறாகியும், அறிவுங் கண்ணொளியும் போல உடனாகி யும் இறைவன் திகழ்கின்றான். அவனது கலப்பு நிலையையே வடநூலார் அத்துவிதமென்பர். தமிழிலே, அகரம் பிற எல்லா எழுத்தொலிகளோடும் நுட்பமாய்க் கலந்துள்ள நிலையே அதற்கு உதாரணமாக எடுத்துப் பேசப்படும்.

இறைவன் உயிர்க்குயிராய் அறிவினை விளக்குவதினால் கலப்புநிலை யுற்றோனாகியும், உயிர்கள் வினைக்கீடாகப் போக்கு வரவு செய்விக்குந் தனது அறிவாற்றலின் தொடர்பால், உயிர்களுடனிற்குந் தலைவனும், உயிர், தளை யென்பவற்றின் றன்மை தனக்கெய்துதலின்றித் தான் என்றுமொரு தன்மை யனும் குற்றமற்ற பேரறிவினனும், எவ்விடத்துமுள்ள தனி முதலாயும், இலங்குகின்றான்.

## முதல் அதிகரணம்

மறைகளெல்லாம் பொருள் ஒன்றென்று முழங்கவும், பரம்பொருள் உயிர்களோடு இரண்டறக்கலந்து நின்ற தென்று மொழிந்து பல பொருளுண்மை செப்புதல், மறைக்கருத்திற்கு மாறாகுமன்றோ எனின், அவை பொருள் ஒன்றென்றது கடவுள் ஒன்றென்ற கருத்துப்பற்றியே. ஒலி புலனாகாத அகரம் எல்லா எழுத்தொலிகளோடுங் கலந்து நின்றாற்போலக் கடவுளும் உயிர்களில் விரவி நிற்கின்றா னென்க. உடம்பினையும் பிறகருவிகளையும் உயிரானது சேர்ந்து நின்றியக்கினாலும், தன்மையால் அது அவற்றின்றி

வேறுதல்போல, முதல்வனும் உயிர்களின் வேறுவன். உயிர்கள் அவன் ஆகமாட்டா. அவன் உயிர்கள் ஆகமாட்டான்.

## இரண்டாம் அதிகரணம்

உயிர்கள் இருவினைப் பயனாகிய இன்ப துன்பங்களை நுகர்தற்பொருட்டு இவ்வுலகிற் பிறவியெடுத்தலும், மேல் கீழுலகங்களுக்குச் செல்லுதற்பொருட்டு இறத்தலும், மீள இவ்வுலகத்திற் பிறத்தலும் உடையன. வினைப்பயனாகிய உடம்பும், இன்பதுன்பங்களும் சடமாகலின், அவைதாமே உயிர்களை வந்து அடையமாட்டா. ஆதலால் அவற்றை இறைவனே தருவன். நோய்க்கு மருந்து கொடுக்கும் மருத்துவன் போலவும், குற்றத்துக்கு ஒறுத்தல் செய்யும் அரசன் போலவும், முதல்வன் நிகழ்கின்றானென அறிக.

இன்ப துன்பங்கள் நமக்கு இயல்பாயுள்ளனவாமன்றி, அவற்றிற்குக் காரணம் இருவினைகளல்லவெனின், இன்பத்தை அல்லது துன்பத்தை நாடுதலாகிய ஒருதன்மையே நமக்கு இருப்பின், அது நம்மியல்பு என்பது பொருந்தும். அவ்வாறன்றி மாறுபட்ட இருதன்மை இயல்பாகாது. நீருக்கு இயற்கையில் இல்லாத மணமும் வெப்பமும், முறையே மலரின்சார்பாலும், நெருப்பின் சார்பாலும் ஏற்படுவதுபோல, ஓரியல்புடைய ஒன்றிற்குப் பிறவற்றின்சார்பால், மாறுபட்ட தன்மைகள் வந்து எய்துமெனின், இருதன்மையுடைமை இயற்கையன்றென்பதே முடிந்தது. இன்ப துன்பத்திற்கேதுவாய செயல்நிலையே இருவினையென்றோதியவாறு காண்க.

இன்ப துன்பங்களை உடல் வாயிலாக நுகரவல்லது உயிரேயன்றி உடலன்றாகலின், அவற்றிற்குக் காரணம்

உயிரின் செயலே யாதல்வேண்டும். இன்பம் துன்பம் என நுகர்ச்சி இருவகையாதலின் வினையும் இரண்டாயிற்று. இப்பிறப்பிலே முயற்சி செய்து பொருளீட்டி, இன்பம் நுகர்தலையும், முயற்சியில்லாதவர்கள் பொருள் வருவாயில்லாது இடர்ப்படுதலையுங் காண்கின்றோம். ஆதலின், இப்பிறப்பிற் செய்யுஞ் செயலே இன்பதுன்பத்திற்குக் காரணமாமன்றி, காணப்படாத இருவினையே அவற்றிற்குக் காரணமென்றல் பொருந்தாதெனின், பொருளும் இன்பமும் வேண்டி முயல்வார்க்கு முயற்சிப் பயன் கைவராது தளர்ச்சியேற்படுதலும், தளர்வின்றி முயன்றகாலையும், அம் முயற்சிக்குத் துணையாய பொருள் கிடையாது போதலும், பிற இடையூறுகள் நேர்தலும், காண்கின்றோமே; முயற்சி செய்யாதார் செல்வராய் வீற்றிருத்தலையும் அறிகின்றோமே; இவற்றிற்குக் காரணம், முன்னை இருவினையென உய்த்துணர்தலே பொருந்துவதாகும். செல்வ வறுமைகளும் பிணி மூப்பு சாக்காடுகளும் அடைதற்கு முதற் காரணமாய முன்னையிருவினை கருவினுள் நுட்பமாய் அமைந்துகிடப்பன. அவ்வினை வெளிப்படையாய்த் தோன்றுவதற்கு, எடுத்த பிறப்பிற் செய்யு முயற்சி துணைக்காரணமாகும். ஈண்டுச் செய்யுஞ் செயல்கள் இனியெடுக்கும் பிறவியில் நுகர்வனவற்றிற்கு வித்தாகுமென அறிக.

உடலின் செய்தியால் வினை ஏற்படுமென்ற இடத்து அவ்வுடல் ஏற்படுதற்குக் காரணம் யாதெனின், முன்னுடம்பின் வினையாமென்க. வித்தில் மரமும், மரத்தில் வித்துந் தோன்றுதல்போல, ஒன்றிற்கொன்று தொடர்புடையதாய்த் தொன்றுதொட்டு, அவை தோன்றி வருகின்றன.

முன் செய்த வினையின் பயனை இப்பிறப்பிலே செய்யு முயற்சியைத் துணைக் காரணமாகக் கொண்டு நுகர்ந்தபின்,

அம்முயற்சி வரும் பிறவிக்கு வித்தாதல் யாங்ஙனமெனின், அது தனக்காயினும் பிறர்க்காயினும், ஆற்றிய இன்ப துன்பச் செயல் வடிவாயிருத்தற்பாலது ஆகலின் என்க. வினை யாதுஞ் செய்யாதார்க்கு வரக்கடவதொன்றுமில்லையாலோ வெனின், அடக்கமாகவோ, தெளிவாகவோ, இயற்றுஞ் செய லில்லாது நுகர்ச்சியில்லையாதலின், நுகர்ச்சியுள்ளவரையிலும் முயற்சி நிகழும். நிகழவே, வினையும் உளதாமென்க. முயற்சி செய்யாதோர்க்கும் பயன் விளைகின்றதேயென்னில் முயற்சியின் எளிமையே அஃதின்மையென்ப. மரம் முதலிய வைகளும் நீரையிழுத்தல் முதலிய நுண்ணிய முயற்சியின்றி வாழ்வதில்லை.

உலகத்தில் விளைந்த கனி முதலிய உணவுப் பொருள் கள் இப்போது உணவுமாய்ப்பின் விளைவிற்கு வித்துமாயிருத் தல் போல, தன்னுணர்வாற் செய்யுஞ் செயல்களெல்லாம், இப்பிறப்பில் இன்பதுன்ப நுகர்ச்சிக்குத் துணையாவதோடு, வரும் பிறப்பிற் செய்யும் நல்வினை தீவினைகட்கு வித்தாய்க் கருத்தாற் செய்யப்படும் எதிர்வினையைப் பயக்கும்.

மனமொழி மெய்களால் உயிர்களுக்குறுதியானவற் றைச் செய்தலே நன்மை. அவற்றைச் செய்யாமையும், அவற்றிற்கு மறுதலையாயவற்றைச் செய்தலுமே தீமை. நன்மை தீமைகளின் பயனைத் தருபவன் இறைவனே. வினை களை இறைவன் ஏற்றுப் பயனளித்தற்குக் காரணம் உயிர்கள் வீடுபேறடைதற்பொருட்டு அவன் கொண்ட கருணையே. அறங்கள் செய்வார்க்கருளும், மறங்கள் செய்வார்க்கு ஒறுப் பும் இறைவன் வகுத்தனன். அவன் ஒறுப்பதும் கருணையே.

முறை தவறுகச் செய்தவற்றின் பொருட்டுச் செய்தாரைத் தண்டித்து அச்சம் விளைத்து அறஞ் செய்யுமுறையை இறைவன் அவர்க்குணர்த்துவன். இறைவனது ஒடுக்கம், மறைப்பு, ஆகியதொழில்களும், அருள்மயமே.

பெற்றோர், தம்புதல்வர் தஞ்சொல் வழி நில்லாதவிடத்து, அவரை அச்சுறுத்தி வளாரினலடித்துத் தீயவிலங்குமிடுவர். பார்ப்பவர்களுக்கு அச்செயல் இரக்கத்தினை விளைக்கும். அவ்வாறே முதல்வனது ஒறுத்தற் செயல்களுமாமென அறிக.

செயல்களே தத்தம் பயனைத் தருவன, பயன் தருதற்கு முதல்வன் ஒருவன் வேண்டப்படான் என்னில், செய்த செயல்கள் முற்றிலும் அழிந்தொழியக் காண்கின்றேம். அவை பயனை எவ்வாறு விளைத்தல் கூடும்? வயலிலிட்ட தழையும் உண்ணும் மருந்தும் உருமாற்றமடைந்து பயனளித்தல்போல, வினைகளும் கெட்டுப் பயன்றருமெனில், தழை மருந்து முதலியன அவை நின்ற இடத்தே கெட்டுப் பயன்றருவன. உணவு முதலியன வயிற்றிலே முழுவதும் அற்றொழிந்தால், மிஞ்சுவது மலமன்றி வேறன்று. வினையோ ஒருடலிற் செய்யப்பட்டாலும் மற்றோருடம்பிற் சென்று பயன் தருவது. ஆதலால், தழைமருந்து முதலியன தக்க உவமையாகா.

வினையைச் செய்தவர் மனத்திலே அது தங்கிப் பயன்றருமெனில், மேல், கீழ், நடு என்னு மூவிடத்திலுமுள்ள பொருளின் நுகர்ச்சியை, மன நினைவு எவ்வாறு பயக்கும்? மனத்தால் அவற்றை நினைத்தின்புறுதல், மாயமாய இந்திர சாலமாமேயன்றி மெய்ந்நுகர்ச்சியாகாது.

ஒரு பொருளை யீவோனும் ஏற்போனும் அப்பொருளும் ஆகிய எல்லாம் அழிந்தபின், ஈதலாகிய செய்கை தானே பயன்றருமென்றல் யாங்ஙனம் பொருந்தும்? முதல்வன் பலனளிப்பது யாங்ஙனமெனில், உலகில் நிகழுஞ் செயல்கள் அவன் கட்டளைப்படி நிகழ்வன. தன்னுணர்ச்சி முனைப்பால் நாஞ்செய்யுஞ் செயல்களும் அவனது ஏவல்வழிப்படும் வினையே. அவன் நமது முயற்சியின் குறைவு நிறைவுகளையறிந்து அவற்றிற்கேற்ற பயனையளிப்பன். உயிர்கள் வினை செய்வதற்கு உடல், அகக்கருவி, காலம், செயப்படு பொருள், இதற்கிது பயனாகவேண்டுமென்னுமுறை, செயல் என்னுமிவை வேண்டப்படும். அவைதாமே உயிரை அடையா. இவற்றின் துணையின்றி எத்தொழிலும் செய்யமாட்டாத உயிர் இவற்றை யமைத்துக்கொள்ள வல்லதன்று. ஆதலின் முதல்வனே இவற்றை உயிரோடிணைத்துச் செயல் செய்விப்பன். செயற்பயன் செயலாலமைதலின் முதல்வனே பயன்றருவனென அறிக.

நற்பழக்கம், அன்பு, அருள், தூய்மை, வகைதெரிவு, உறவினர்க்குதவி, நற்குணம், பொறியடக்கம், ஈகை, பெரியார் வழிபாடு, பணிவு, வாய்மை, பிறன்மனைவிழையாத் துறவு, அடக்கம், பகுத்தறிவு, தக்காரை நன்குமதித்தல், முதலிய அறங்கள் வாய்க்கப்பெற்றால் அருளாளனாகிய முதல்வன் பணிகள் அறங்களாய் முடியும்.

மேற்கூறிய அறங்களோடு விரும்பிய ஒரு தெய்வத்தை மனத்தினால் நினைந்து வாயினால் வாழ்த்தி மந்திரங்கள் சொல்லிக் கையினாற் பல்வகை நன்மலர் தூவிப்போற்றிச் சினத்திற்கேதுவாகிய அறியாமையை அகற்றி வாழ்கின்ற செயலாகிய அறமானது ஏற்படுமானால், அனைய அற

வாழ்க்கையுடைய யாவர்க்குஞ் செய்யுஞ் செயல்களுக்குத் துணையாக அவர் வழுத்துந் தெய்வம் எங்கு முன்னிற்கும்.

எத்தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வத்தோடு வேறறநின்று உமையொருபாகனார் அருள் புரிவர். ஏனென்றால், அவையொழிந்த பிறதெய்வங்கள், உயிர்களாதலின், வினைசெய்து துன்பப்படுதலும், பிறவியெடுத்தலுமுடையன. அத்தன்மைகளில்லாத முதல்வனொருவனே செயற்றிறன் அறிந்து பயனளிக்கவல்லான்.

இம்மையிலே, பெற்றோர், உயர்ந்தோர் முதலியோர்க்கு நாம் வழிபாடியற்றின், மறுமையிற் பயன்றருவாரவரல்லர், அவர்களின் வேறாயகடவுளே. அதுபோலவே, பிற எத்தெய்வத்தை வழிபட்டாலும் சிவனே பயனளிப்பன் என்றறிக. அவ்வாறாயின் வழிபட்ட தேவரே எதிர்நின்று வழிபட்டார்க்கு அருள் செய்வரென நூல்களுட் கேட்கப்படுவது யாதுகாரணம்பற்றி யெனின், அரசன் ஆணைவழி நின்று அமைச்சர் முதலிய தலைவர்கள் குடிகட்கு உதவிபுரிதல்போல, இறைவன் ஏவல்வழி நின்று அவ்வவ்விடங்களிலுள்ள தெய்வங்கள் தத்தம் ஆட்சித்திறன் செலுத்துவராதலின் அவர்கள் செய்யும் அருளும் இறைவனது திருவருளே என உய்த்துணர்க. எல்லா வழிபாடுகளையும் ஏற்றுக்கொண்டு அருள் செய்பவன் சிவபெருமான் ஒருவனே யாதலின், அவன் திருவடியை வழிபடுதலே ஒப்பற்ற பேரறமாம். அவன் திருவடியை மறந்து செய்யும் அறங்களெல்லாம் வீண்செயல்களாகுமாதலால், இறைவனது கட்டளைவழி நிற்றலே அறம். பற்றற்ற அருட்கடலாகிய அவனை வழிபடு முறையினைக் கைக்கொள்ளுக. அப்பெருமான் நிற்பதும் இயங்குவதுமாய இருவகை வடிவங்களிலும் நின்று உயிர்கள் செய்யும் வழி

பாட்டினையேற்று அவர்களுக்கு அருள் புரிவன். அப்பெருமானை மனத்தகத்தே உறுதியாக நினைந்து வழிபடின், அது பூரணமான வழிபாடாகும். நாடோறும் அவனுக்கு அன்பு செய்து வழிபடுக. பரம்பொருளாகிய அவனைச் சிந்தை செய்க.

முதல்வன் திருவடிப்பேரன்பர் செய்யுஞ் செயல்கள் மறச்செய்கையாகத் தோன்றினும் அவைகள் உண்மையில் அறச்செய்கைகளே. அவன் திருவடிக்கன்பிலாதார் செய்யுஞ் செயல்கள் புண்ணியமாகத் தோன்றினும், அவைபாவமாக முடிதல்கூடும். தக்கனது பெருவேள்வி தீமையாயும் சண்டேசுர நாயனார் இழைத்த கொடுஞ்செயல் நன்மையாயு முடிந்தமை காண்க.

மறைகளெனப்படுவன ஈசனது கட்டளையே; அக் கட்டளைப்படி நடவாதாரை ஒறுத்தற்பொருட்டு அமைக்கப் பட்ட சிறைக்களமே நரகம். கட்டளைப்படி நடப்போர் தங்குதற் கமைத்த பெரும் பதிகளே விண்ணுலகங்கள். உடலெடுத்த எல்லா உயிர்கட்கும் இன்ப துன்பங்கள் இறைவன் கட்டளைப்படியே பொருந்துவன. அரசன் செயலின் வைத்து இறை செயலை அறிக. அரசன் செய்வதும் ஈசன் அருள் வழியே யாதலின், உலகில் பெரும்பாவஞ் செய்து தக்க தண்டனை யுற்றோர் மறுமையில் நரக மெய்தார். தண்டனையாற் றிருத்தம் ஏற்படக் கூடுமாதலின், தண்டனைப் பட்டோர் தூயராவர். அருளினால் இறைவன் காட்டிய நெறி நிற்பார்க்கு, மயக்கத்திற் கேதுவாய மலநோயை இறைவன் ஒழித்தலால், இறைவனுக்கு மருத்துவனென்ற திருப்பெயர் உண்டு. நல்வினை தீர விண்ணுலகப்பேறும், தீவினை தீர நரகத் துன்பமும் அவன் அளிப்பன்.

மருத்துவன் கூறிய நூன்முறைப்படி ஒருவன் ஒழுகுவனுயின், பிணிகள் எய்தமாட்டா. அம்முறையிற் றப்பினுல், பிணிகள் நேர்ந்து துன்பம் விளைக்கும். அப் பிணிகள் தீர மருத்துவன் மருந்தினைக் கொடுப்பான். நூன் முறையிற் றப்பாத விடத்தும் பண்டை வினையால் வரும் நோயினையும், அவன் மருந்து உண்பித்துத் தீர்ப்பன். இங்ஙனமே இறைவனும் தன் கட்டளைவழி நில்லாமையால் உளதாந் தீமையைத் தீவினைப்பயனுகர்ச்சியாற் றீர்ப்பன். இம்மையில் அவன் கட்டளைவழி நின்றாலும், முன் வினைப்பயனுப் நுகரக் கிடப்பனவற்றை யொழித்தற்குரிய வழிபாட்டு முயற்சியிற் செலுத்தியும் அவன் அவற்றைத்தீர்ப்பன்.

உலகத்திலே சில நோய்களால் ஏற்பட்ட ஊனத்தை மருத்துவன் விரைந்து அறுத்துக் கீறித் தீர்ப்பன். வேறு சில நோய்களின் கெடுதியைப் பாலோடும் கற்கண்டோடும் கலந்த மருந்தினை உண்பித்துத் தீர்ப்பன். இறைவனும் அவ்வாறே இன்பதுன்பங்களாய மருந்தை ஊட்டி வினை நோயைத் தீர்ப்பன். இறைவன் புசிப்பிக்கும் வினைப்பயன்களை உயிர் நுகருமுறை எவ்வாறெனிற் கூறுதும்; ஐம்பூதங்களாலாகிய இவ் வுடம்பு கழிந்த உடனே உயிர்கள் தமது நுண்ணுடம்பாகிய எண்ணுடலே இரு வினைப்பயன் நுகர்தற்குரிய உணர்ச்சியுடம்பாகத் திரியப்பெற்று, துறக்க இன்பத்தினையும் நிரயத் துன்பத்தினையும் நுகர்ந்த பின்பு, குற்றமற்ற நுண்ணுடம்போடு மீண்டுமிவ்வுலகிற் கருப்பையிற் சேர்ந்து எஞ்சிய வினைப்பயனை நுகர்தற்குத் தொடங்கும். வினைகளின் வெவ்வேறு தன்மைக்கேற்ப, ஒரு பூத உடம்பை நீத்த உடனே உயிரானது சுவர்க்க நரகம் புகாமல், மீட்டு மொரு கருப்பையிற் சென்று பிறத்தலுங்

கூடும். அவ்வாறன்றி ஒருடம்பையு மெடாது கல்லைப் போலக் கிடந்து, சில காலம் கழித்து நரகம் புகுதற்குரிய உணர்ச்சியுடம்பை யெடுத்தலுங் கூடும்.

இம் மாற்றங்கள் எவ்வாறு நிகழுமெனில், பாம்பு சட்டை கழற்றுவதுபோல, உடலை விட்டு ஓரிடத்தில் உயிர்கள் நிலைபெறுதலும், முட்டையை விட்டுக் குஞ்சு பறந்தோடுவதுபோல ஓரிடம் விட்டு வானூடு சென்று பிறிதோரிடம் சேறலும், கூடுவிட்டுக் கூடுபாய்தல்போல ஒருடம்பு விட்டுப் பிறிதோருடம் பெடுத்தலும் நிகழற் பாலன. இங்ஙனஞ் செய்வதால், உயிர்கள் தம்மின் வேருவதில்லை. அறிவு மாறப்பெறுமே யெனின், நனவிலுள்ள உணர்வு மாறியே கனவின் உணர்ச்சியை உயிர் தலைப்படுதல் போலும் அஃதெனை ஓர்க.

அறச்செயல், பாவச்செயல் என்னு மிருவகைச் செயலுக்கும் முதற்காரணமாய மூலவினை மும்மலங்களிலொன்ருக உயிர்கட் குள்ளது. அது நன்மை தீமையாகிய காரண வேதுவானும் உய்த்துணரப்படும். அம் மூலவினை செயலாய் வெளிப்பட்டாலன்றிப் பயன்றராமையின், அது இருவினையின் வேருக வைத்தெண்ணப்பட வில்லை. மூல வினையே காமியமல மெனப்படும். கான்மிய மென்பது காமியமாயிற்றென்ப.

மலம் என்பது உயிரைக் கட்டுப்படுத்துவது. இருவகைச் செயலும் இன்பதுன்ப நுகர்ச்சியில் உயிர்களைக் கட்டுப்படுத்துதலால், அவற்றிற்கேதுவாய மூலவினை மலமெனப்பட்டது.

மூல வினை தோடக்கமில் காலமாக உயிரைச் சார்ந்துள்ளது. அதனினின்று இருவகைச்செயல்கள் தோன்றி

யழிய அவற்றின் பயனும் நுகரப்பட்டுக் கழிதலால், வினைக்கு ஆதியந்த முண்டென்பர். அங்ஙனமாயினும், மீட்டு மீட்டுஞ் செய்யப்பட்டுப் பயன் தருதலால் அதன் ஈறின்மை புலனாதல் காண்க. மூல வினையானது ஆணவத் தோடு கலப்புற்று மாயாவடிவங்களிற் பொருந்தி, உயிரைக் கட்டுப் படுத்திப் பல்வேறு பிறவிகளீன்று, உயிர்கட்குப் புலனாகாது முதல்வன் கட்டளைக் கீழடங்கி யியலும்.

உயிர்கள் வினைக்கீடாக வெவ்வேறு பிறவி யெடுக்குங் காலை, நுண்ணுடம்பு திரிபெய்தப் பெறும். அதனை அச்சு மாறிப் பிறத்தலென்ப. ஒருசாரார் நிற்பனவும் நடப்பனவு மாய உயிர்கள் அவ்வப் பிறவியிலே மீட்டு மீட்டும் பிறக்குமே யன்றி அச்சுமாறிப் பிறத்தலில்லை யென்பர். அது பொருந்து மாறில்லை. மக்கள்யாக்கை விட்டு விண்ணுலகின்பம் நுகரச் செல்வார், மக்கள்வடிவுகொண்டு அவற்றை நுகர்வதில்லை, தேவவடிவெடுத்தே நுகர்வர்; அங்கும் அச்சு மாற்றமுள்ளது. மனிதவடிவாய் விண்ணுலகின்பம் நுகர்வரெனின்; அவ்வுலக மும் மக்களுலகமே. தேவரானோர் மீண்டு இவ்வுலகிற் பிறக்குங்காலை மக்கள் வடிவெடுப்பதன்றித் தேவராய்ப் பிறப்பதில்லை.

தோற்றத்தில் அச்சு மாறுதற்குக் கம்பளிப்பூச்சு வண் டாக மாறுவதையும், புழுவானது குளவியாக மாறுவதையும் காட்டாகக் கூறலாம். இதிகாச புராணங்களுள், அகலிகை கல்லானமையும், திருமால் பிறவி எடுத்தமையும், சிலந்திப் பூச்சி செங்கட்சோழனானமையும், எலி மாபலிப் பெருமன்ன னாயினமையும் உதாரணமாகப் பேசப்படும். அவை சிறப்புக் காரணமாய் வெஞ்சொல்லாலும் அருட் பேற்றினாலும் ஆயினவெனின், எல்லா உயிர்களும் தத்தம் வினைக் கேற்ற

வாறு முதல்வன்து ஒறுப்பிற்கும் அருளிற்கு முரியவாதல் தேர்க. வடிவமாற்றம் உயிர்கட்கு இறைவனு லமைவன வாகும். பருவுடம்பின் மாற்றத்திற்குக் காரணம் நுண்ணுடம்பின்கண் ஏற்படும்.

ஒரு தன்மைத்தாய நுண்ணுடம்பு பல்வேறுவகையாதல் யாங்ஙனமெனில், ஒரு தன்மைத்தாய பொன்னே, ஆரம், சங்கிலி முதலிய பல்வேறு வடிவுடைய அணிகளாக ஆக்கப்படுதல்போல என்க.

நுண்ணுடம்பினின்று பருவுடம்பு தோன்றுவது எப்படியெனில், பொன் பணியாவதுபோலத் தோற்ற வேறுபாட்டினலன்று; வித்துமரமாறுற்போல, ஒன்று திரிந்து பிறிதொன்ருய்த் தோன்றுவது போலவுமன்று; மதியின் கலைகள் மறைந்து ஒவ்வொன்ருய்த் தோன்றுவது போலவுமன்று; மரத்தின் மேற்பகுதிகள் அற்றொழிந்தபின், மரவேரினின்று பிறிதொருமரம் உண்டாதல் போல நுண்ணுடம்பிலே சத்திவடிவமாயிருந்த பரு உடம்பு வெளிப்படு மென்க.

வித்தினின்று மரமுண்டாதல் போல, வினைகாரணமாக, நுண்ணுடம்பினின்று பருவுடம்பு வெளிப்படும். மரமழிந்தால் வித்து அழியும். பருவுடல் அழிந்தாலும் நுண்ணுடம்பு அழிவதில்லை. மதியின் கலைகள் பதினறுள், அவற்றிற்குக் காரணமாய கலை அழிவதில்லை. அதுபோல நுண்ணுடல் அழிதலில்லை.

பருவுடம்பிற்கு நுண்ணுடம்பு முதற் காரணம். அதற்கு முதற்காரணம் மூலப்பகுதி. அதற்கு முதற் காரணம் தூய்தல்மாயை. அதற்கு மேலாகக் குண்டலி சத்தி யெனப்படுந் தூயமாயை உள்ளது. உயிர் சிவத்தி

னைச் சார்ந்தபோது இவற்றின் தொடர்பனைத்தும் அறவே யொழிந்துவிடும்.

## மூன்றும் அதிகரணம்

இறைவன் உயிர்க்கு உடல், மனம், உலகம், நுகர் பொருள் எல்லாமுதவி மலங்களையொழித்து வீடருள்வ னென்பது கூறப்பட்டது. உடல் முதலியன மாயையினு லாவன. மாயையும் ஒரு மலமாகக் கூறப்பட்டுள்ளது. மூல மாகிய ஆணவத்தைப் பிறிதொரு மலத்தால் இறைவன் நீக்கு வனென்பது எவ்வாறு பொருந்துமெனின், ஆடையின் அழுக்கைச் சாணி, உவர்மண் முதலியவற்றின் கலப்பால் நீக்குதல்போல இறைவன் மாயையினுலே உயிரைப்பற்றிய மலத்தை யொழிப்பனென அறிக.

மாயையென்பது யாதெனில், அது என்றுமுள்ளதாய், அருவமாய், பொருட்டன்மையால் ஒன்றாய், உலகத்திற்கு வித்தாய், அறிவிலதாய், எங்கும் பரந்ததாய், இறைவனுக்கு ஒரு சடசத்தியாய் உடம்பு முதலியவற்றிற்கு முதற்காரண மாய் நின்று உயிர்க்கு ஒரு கட்டாய், உயிரின் மெய்யியல்புக்கு மாறுபட்ட உணர்ச்சியைக் கொடுப்பதால் மயக்கமுஞ் செய்வ தாயுமுள்ளது. மயக்கஞ் செய்யாதது தூய மாயையென அறிக. ஒடுக்கம்நிகழ்ந்தபோது உயிர்கள் தங்குமிடமாயது மாயையே.

---

அம் மாயையினின்று கால முதல் தோன்றும். காலமா னது முதல்வன் கட்டளையால் முத்திறப்பட்டுச் சென்ற கால எல்லையையும், நிகழ்காலப் பயனையும், எதிர்காலப் புதுமையை யும் பொருத்துவிப்பதாய், உலகு, உடல் ஆகியவற்றின் முத் தொழிலை வரையறைப்படுத்தி நிற்பது.

முறைமுதல் என்பது காலத்திற்குப் பின், மாயையிற் றோன்றி, அவரவர் செய்த வினையை அவரவரே நுகருமாறு செய்விக்கும்.

அதற்குப் பின் மாயையினின்று கலை முதல் தோன்றி ஆணவ இருளைச் சிறிது ஒதுக்கி, உயிரின் செயலாற்றலைப் பொதுவகையாக விளக்கும். கலையில் புலமுதல் தோன்றி அறிவினைப் பொதுவாக விளக்கும். புலத்தில் அவாமுதல் தோன்றி உயிரின் விழைவாற்றலைப் பொதுவாக விளக்கும்.

ஈண்டுக் கூறிய காலம், முறை, கலை, புலம், அவா என்னும் ஐந்தும் பற்றி நின்ற உயிர் தோன்றல் (புருடன்) எனப்படும். உலக நுகர்ச்சியில் நோக்கமாய் நிற்கு நிலையே தோன்றல்முதல் எனக் கொள்ளுக. இது உண்மையில் ஒரு முதல் அன்று.

கால முதலிய ஐம்முதலையும் பஞ்சகஞ்சுகம் என்பர். ஐயுடை என்பது தமிழ்.

கலை முதலினின்று மூலப் பகுதி தோன்றும். அம் மூலப் பகுதியில் மூவகைப் பண்பும் அடக்கமாய்த் தோன்றாது நிற்கும். அவை வெளிப்படையாய்த் தோன்றுங்கால் பண்புமுதல் உளதாம். ஒவ்வொரு பண்பும் முத்திறப்படும். அப்பண்புமுதலிற்றோன்றுந் தத்துவங்களும் பண்பு வடிவா யிருக்கும். அவையெல்லாம் உயிர்க்குப் பொருள் நுகர்வுக் கருவியாய்க் கட்டுக்களாய் நிற்பன. உயிர் அவற்றைச் சார்ந்து பண்பு வடிவாயிருக்கும். உயிர்களிடத்தே முப் பண்புகளுள் ஒன்றிரண்டு மிகுந்தும், பிற குறைந்துமிருக்கும்.

மூலப்பகுதியின் சார்பால் உயிர் திரிபுணர்ச்சி யுடைய தாம். அதுவே உலகப் பொருளிற் பற்று வைத்தற்கேது

வாகிய மெய்புணர்வின்மையைத் தருதலால் அது அவிச்சை யைத் தருவதாக நூல்கள் கூறும்.

பண்பு முதலினின்று மெய்ப்பண்பு, செயற்பண்பு, தாழ் பண்பு என்ற மூன்றும் உளவாகும். இவை முறையே சாத்துவிகம், இராசதம் தாமதமெனவும் படும். மெய்ப் பண்பிலே விளக்கமும் மென்மையும் அடங்கும். செயற் பண்பிலே விரைவும் தாக்கும் அடங்கும்; தாழ் பண்பிலே செருக்கும் தகாதன விழைதலும் அடங்கும். மெய்ப்பண்பு அறிவினை விளக்கும்; செயற் பண்பு நுகர்ச்சிகளிற் செலுத் தும்; தாழ் பண்பு மடி விளைக்கும். இவற்றின் விரிவே பிற குணங்களெல்லாமென அறிக. பெரியாரைப் பேணல், பணிவு, இனியவை கூறல், பொறை, உறுதி, இரக்கம், உயர் குண நாட்டமுதலியன முதற்பண்பிலடங்கும். வீரம், மானம், நுகர்ச்சி, விருப்பம் முதலியன இரண்டாவதனுள் அடங்கும். ஊக்கமின்மை, பேருறக்கம், களவு முதலியன மூன்றாவதனுள் அடங்கும்.

முப்பண்பில் மெய்ப்பண்பு மிகுந்து தெளிமுதல் தோன்றும். தெளி முதலானது உயிர்களின் நற்செயல், தீச்செயல் சார்தற்கிடமாய், ஒரு பொருளை இன்னதென்று துணிதற்கருவியாய், முக்குணச் சார்பால், இன்ப துன்ப மயக்கத் தோற்றம் புலப்படுவதாய், உயிர்களின் அறிவு தொழில்கட்கு ஆதாரவாய் நிற்பது. அதுவே பலவுகையான பாவகங்கட்கும் இடமாம். அவற்றை ஐம்பதெனவும், அறுநூற்றுப் பன்னிரண்டெனவும் கணக்கிடுதலுமுண்டு. அவற்றைச் சிவஞான பாடியத்துட் காண்க. "அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டுஇங்கு அறிவின்றி" என்ற மணி வாசகமும் அது.

தெளிமுதலினின்றும் வினைமுதன்மை யுண்டாகும்; அது அகந்தைக்கு வித்தாயுள்ளது, பிராணனை இயக்குவது, இச்சை வடிவாயது, பொறிகட்குப் புலனாய பொருளை யான் என்றும் எனதென்றுங் கருதுதற்கேதுவாய்த் தெளி முதலோடிணைந்து நிற்பது. வினை முதன்மை முப்பண்பில் இரண்டாவதாகிய செயற்பண்பு மிகுந்தது. அது தெளிவு, செலவு, தாழ்வு என்று முத்திறப்படும். இவற்றை முறையே தைசதம், வைகாரிகம், பூதாதி என வடநூலார் கூறுவர். தெளிவில் நின்று மனமும், அறிவுப்பொறி ஐந்துந் தோன்றும். செலவில் நின்று வினைப்பொறியைந்துந் தோன்றும். தாழ்வி னின்று தன்னளவு (தன்மாத்திரை) எனப்படும் பூதநுட்ப மைந்துந்தோன்றும். இவையைந்தும், மனம், தெளிமுதல், வினைமுதன்மை என்னும் அகக்கருவி மூன்றுங்கூடி, எண் ணுடல் என்னும் நுண்ணுடம்பாகும். மனமானது, எதிர்ப் பட்டதைப்பற்றும். அதன் பகுதியாய சித்தம், பற்றியதை யாதென ஆராயும். நினைவாற்றலைச் சித்தத்தின் குணம் என்ப. மனம் ஐயநிலையில் நிற்கும். ஆங்காரம் துணிவே னென்றெழும். புத்தி துணியும்.

அறிவுப்பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் உறுப்புக்களை இடமாகக் கொள்வன. அவை ஐம் பூதங்களினிடமாய் நின்று, பூதஇயல்புகளை யறியும். அவற் றிற்குப் புலனும் பூதகுணங்கள், ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்பன.

வினைப்பொறிகள் என்பன, சொல், கால், கை, கழிவிடம் மகிழிடம் என்னும் ஐந்தையுமிடமாக உடையன. இவற்றிற் குச் சொல்லுதல், செல்லுதல், இடுதல், கழித்தல், மகிழ்வித் தல் என்பன தொழில். சொற்பொறி வானிடமாய் நின்று

சொல்விக்கும். செல்பொறி காற்றிடமாய் நின்று செலுத்தும். கைப்பொறி அனலிடமாய் நின்று இடுதல் ஏற்றலைச்செய்யும். கழித்தற்பொறி நீரிடமாய் நின்று அழுக்குகளைக் கழிவிக்கும். இறுதிப்பொறிமுதற்பூதத்தைப் பற்றி மகிழ்வு விளைக்கும்.

அறிவுப்பொறியும் வினைப்பொறியும், புறக்கருவிகள்; மனம், வினைமுதன்மை, தெளிமுதல் என்பன உட்கருவி. கலை, புலம், அவா என்பன உட்கருவிக்குள்ளீடுகள். இவை யனைத்தும் மாயையின் வயிற்றிற்றோன்றி யுயிரைக் கட்டுப் படுத்தி நிற்பன.

பூதநுட்பங்கள், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றபெயருடையன. இவை பொருள்களை யறியுமாறு பொறிகட்கு ஊக்கந்தருவன. பூதநுட்பங்களாய தன்மாத் திரைகளும், பூதகுணங்களும் பெயரொற்றுமையுடையன எனினும், தன்மையால் வேற்றன உணர்க. பூதநுட்பங்களி னின்று ஐம்பூதங்கள் தோன்றும். ஐம்பூதங்களுள் வான் எல்லாவற்றிற்கும் இடங்கொடுக்கும். காற்றானது எங்கு மியங்குவதாய்ப் பொருள்களைத் திரட்டுந்தன்மையது. நெருப்பானது, சுடுதலோடு பொருள்களை இணைக்குந் தன்மையுமுடையது. நீரானது தண்மையோடு பதமாக்குந் தன்மையுமுடையது. மண் திண்மையோடு தாங்கும் பொறையுமுடையது. உலகப்பொருள்கள் ஐம்பூதக் கலப்பா லுண்டாய் விளங்குகின்றன. ஐம்பூதங்களின் தனிவடிவம் வேறாகக்கூறப்படும். மண் நாற்கோண வடிவுடையது; புனல் பிறைவடிவுடையது; அனல் முக்கோண வடிவுடை யது; கால் அறுகோண வடிவுடையது; வான் வட்டவடிவுடை யது. இவற்றின் நிறம், முறையே, பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைநிறம். இவற்றிற்கு வித்தான எழுத்

தொலிகள் முறையே லகாரம், வகாரம், ரகாரம், யகாரம், அகாரம், என்பன. இறுதி நின்றதை ஹகாரமென்பாரு முளர்.

இவற்றிற்கு அடையாளங்களான முறையே வச்சிரப் படை அல்லது குலிசம், தாமரை, குறுக்கு என்னுஞ் சுவத்திகம், அறுபுள்ளி, வெண்டுளி (அமுதவிந்து) என்பன. இவைகட்குத் தலைவர்கள் முறையே மலரோன், மாலவன், உருத்திரன், பெருமுதல்வன், அருட்சிவன் என்பவர்கள். அவர்கள் தொழில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. தூயமாயையின் பகுதிகளாய்த் தத்துவங்களை உள்ளடக்கிய ஐந்து கலைகட்கும் இவ்வாறே தலைவர்களும் அடையாளங்களும், எழுத்துக்களும் கூறப்படுவதால், கலைத்தலைவர்களே ஐம்பூதத்திற்கும் இயக்குந் தலைவர்களாய் உள்ளாரென்பதும், ஐங்கலையோடு ஐம்பூதங்கட்குத் தொடர்புண்மையும் ஊகிக்கப்படும்.

முப்பத்தாறு தத்துவங்களும் அறிவில்லாத மாயா காரியங்களேயாம். தூயமுதல்களாகிய ஐந்தும் இறைவனது அறிவாற்றலின் நேராய சார்புடைமையால், அறிசார்பின எனப்படும். புருடதத்துவமென்பது உயிர்ச்சார்புடைமையால் அறிவுள்ளது மில்லது மெனப்படும் சித்தசித்தாம். ஏனை முப்பது முதலும் சடமேயென அறிக. உயிர்களை இயக்குந் தலைவர்கள் தூயமாயா உலகங்களிலுள்ளவர்கள். உயிர்கட்குப் போக நோக்கந்தரும் தத்துவங்கள் தூய்தல் மாயையிற் றோன்றினவை. உயிர்கட்கு நுகர்ச்சி மூலப்பகுதியின் கீழுள்ள முதல்களால் அமைவன. ஆதலால், தூயமாயையி லுண்டாய முதல்களின் தொகுதி இயக்கு எனவும், தூய்தல்

மாயை முதல்களின் தொகுதி 'நுகர்நோக்கு' எனவும், மூலப் பகுதி முதல்கள் 'நுகர்ச்சி' எனவும் கூறப்படுதற்குரியன.

தூயமாயா தத்துவங்கள் சிவமுதல் எனவும், தூய்தல் மாயாதத்துவங்கள் அறிமுதல் எனவும், மூலப்பகுதித் தத்து வங்கள் உயிர்முதல் எனவும் பெயர்பெறுதற்குரியன.

அருவம், உருவம், அருவுருவமாய எல்லாப் பொருள் களும் முதல்களினுலாகிய வடிவங்களாம். முதல்கள் பரியன நுண்ணியன, மிக நுண்ணியன என முத்திறப்படும். முதல் களை நிலைக்களமாகக் கொண்ட அணுபக்கத் தெய்வங்களும் சிவ பக்கத் தெய்வங்களும் அவ்வம் முதல்களின் பெயராற் பேசப்படும். ஆதலால் எல்லாவற்றையும் முதல்களின் வைத்தறிக. நிலமுதல் மூலப் பகுதி யீருகிய இருபத்து நான்கு முதல்களும் உயிர் முதல்வனுகிய கறைமிடற்றிறை யால் ஒடுக்கமெய்தும். மூலப்பகுதியின்மேலுள்ள ஆறு முதல்களும் அறிமுதற்றலைவராய அனந்தரால் ஒடுங்கும். சிவமுதற்றலைவரால் தூயபுலம் (சுத்த வித்தை), அரசுமுதல், அருட்சிவமுதல் என்னுந் தூய முதல்கள் ஒடுங்கும். அருண் முதலும் சிவ முதலுமாகிய இரு முதல்கள் தூய சிவனுல் ஒடுங்கும். தோற்றமும் இம்முறையே யாமென அறிக. தூய சிவனுரே மாறின்றி வைகு முதல்வர்.

## நான்காம் அதிகரணம்

அகச் சமயம் ஆறினுக்கும் வேருய சமயங்களிற்கூறப் படும் தெய்வங்களெல்லாம் மண்முதல் தூய்தல் மாயை, வரையுள்ள முதல்களில் நிலை பெறுவனவாகும். கடவுள், உயிர், இருள், வினை, இரு மாயை என்பவற்றை ஒப்புக் கொண்டுள்ள அகச் சமயங்களாறும் கூறுந் தெய்வங்கள்

இறைவனது ஒடுக்கம், காப்பு, வளர்ச்சி என்ற நிலைகளின் பாற் படுமாகலின், தூய முதல்களிடத்தவாம். சித்தாந்த சைவர் கூறும் கடவுள் எல்லாத் தத்துவங்களையுங் கடந்த தூய சிவமென உணர்க. அத்தூய சிவன் ஒருவனே, ஒன்பது வகையாக நடிப்பன். சிவம், அருள் (சத்தி), ஒலி, வட்டம், அருட்சிவம், பெருமுதல்வன், முதல்வன், மாலவன், மலரோன் என்னும் திருமேனிகள் ஒன்பதும் ஒன்றிலி ருந்து ஒன்றாக முறையே தோன்றும். முதல் நான்கும் இறைவனது தோன்றாத் திருமேனிகள். நடு நின்றது பிழம்பாய இறை வடிவம். இறுதியில் நின்ற நான்கும் உருவத் திருமேனிகள். தூய உலகங்களில் இவ் வொன்ப தும் இறைவன் திருமேனிகளே. தூய்தல் மாயா உலகங் களிலே, பெருமான் அனந்தர் வாயிலாக உருவத் திருமேனி கொள்ளுவன். மூலப்பகுதிச் சார்பாய உலகங்களிலே, கறை மிடற்றண்ணலை அவன் நிலைக்களமாகக் கொண்டு உருவத் திருமேனி கொள்ளுவனென அறிக.

அருள், வட்டம், என்பன சத்தித் தன்மையன. இவற் றோடு அருட்சிவ முதல்வி, பெருமுதல்வி, உமை, திரு, வாணி ஆகிய சத்தி வேறுபாடுகள் ஏழும் ஒரே சிவசத்தி யின் திருமேனிகளே.

சிவசத்தி, எல்லா முதல்களினும் பொருந்தியிருக்கும். அச்சத்தியை இறைவன் நிலைக்களமாகக் கொண்டிருப்பன். ஆதலால் இறைவனது திருமேனிகளெல்லாம் சத்தியின் சார்பாற்றோன்றினும், இருவருக்கும் பொதுவாயுள்ளனவே. சத்தி மரம்போல்வதெனின், சிவம் அம்மரத்தின் வைரம் போலும். சிவனுக்குச் சத்தி அவன் விரும்பியவாறே எல்லாம்

ஆகு மாதலின், சத்தியை அவனுக்கு மனைவியென்று செப்பும் வழக்கு உளதாயிற்று.

சிவ முதலில் நின்று அருண் முதல் தோன்றும். அதன் கணின்று அருட் சிவமுதல் தோன்றும். ஆதலால் சிவம் சத்தியைப் பெற்றும், சத்தி சிவத்தைப் பெற்றும், இருவருங் கலந்து உலகுமுயிருமாகிய எல்லாவற்றையும் பெற்றும், சிவபிரான் மணமிலா இளைஞனே; அருண் முதல்வி மணமிலா மங்கையே. தவத்திற் சிறந்த பேரறிஞர் இவ் வுண்மையை ஓர்வர்.

உடம்பு, கருவிகள், உலகம், நுகர் பொருள் என்பன முதல்களாலாயினவேயென்றும், உயிர்க்குக் கட்டு, வீடு என்னு மிருவகையிலும் முதல்கள் கலப்புறுகின்றன என்றும், முதல்களின் கலப்பு உயிர்க்கன்றி முதல்வனுக் கில்லையென்றும் அறிந்து முதல்களை யுட்படுத்தி மேற்பட்ட நீப்புக் கலை முதலிய கலைகளைத் தூயதாக்குமிடத்தே, முதல் களின் தொடர்பறுக்கப்பெற்று, அவற்றைக் கடந்த பரம் பொருளை ஐயந்திரிபறத் தெரிந்தோனே சிவஞ் சத்தியைப் பற்றிய உண்மையை அறியவல்லவன் ஆவன்.

உயிர்கட்கு எல்லா வகையிலும் முதல்கள் வந்து பொருந்திய தெதற்கெனின், மூல வினையின் செயற்பாடு களையெல்லாம் நுகர்வித்தொழித்து, அவ்வினையை முதிர்வித் துப் பற்றைக் கழித்தற் பொருட்டும், அதனை யொழிப்ப தோடு மூலமலமாகிய ஆணவத்தைப் போக்குதற்பொருட்டும் என அறிக.

ஆணவமலமென்பது யாதெனில், செம்பிற் களிம்பு போல, உயிர்களோடு தொடக்கமில் காலங் கலந்துள்ளதாய்,

பொருட்டன்மையால் ஒன்றேயாய்ப், பலப்ல திறல்களுடைய தாய், உயிரினறிவையுந் தொழிலையு மறைப்பதாய், மாயா காரியங்களோடு கூடிய உயிர்கட்கு நுகர்ச்சி விருப்பம் நிகழ்தற்கேதுவாய் நின்று அறியாமையைப் பயப்பது.

ஆணவமென அறிவை மறைப்பது வேறொன்றில்லை, மாயையே அங்ஙனஞ் செய்வது என்றால், உயிர்களின் அறிவு விழைவு செயல்களை மாயையானது விளக்குமேயன்றி மறைப்பதில்லை. உலகு, உடல், கருவிகள் முதலியன மாயையினுதிப்பன. மாயைப்படைப்புகளோடு உயிர்கூடாதவிடத்து அதன் அறிவினை மறைப்பது ஆணவமென அறிக.

கதிரவனை முகில் மறைத்தாற்போல உயிரினறிவினை மாயை மறைக்குமென்றும், முகில் விலகியவுடன் கதிரவனொளி இலங்குதல்போல மாயை ஒழியவே, உயிரினறிவு விளங்குமென்றுங் கூறுதல் பொருந்தாது. அது உண்மையானால் மாயைச்சார்பால் உயிரினறிவு செயல்களொழிதல் வேண்டும். அவ்வாறில்லாது, மாயைப்படைப்பாய உடல் முதலியவற்றின் சார்பால் அறிவு செயல்களின் விளக்கமும், அவைநீங்கினால் அவற்றின் மறைப்பும் ஏற்படுதலால், மாயை விளக்குங் கருவியேயன்றி மறைக்குங் கருவியாகாது.

ஆணவமானது உயிருடன் கலந்து உயிரறிவை மறைந்தலால், உயிரின் குணம்போல்வதொன்று; அது இருள் போல்வது. மாயை அவ்விருளை அகற்றும் விளக்குப் போல்வது. ஆதலால் ஒளியுமிருளும்போல் தம்முள் மாறுபட்ட அவ்விரண்டும் வெவ்வேறென அறிக.

ஆணவம் உயிரின் இயற்கைக்குணம் என்றால் உயிர் சடப்பொருளாகும். குருடனுக்குக் கண்தெரியாமை கண்ணின் குணமாகுமா? ஆகாது. கண்ணின் ஒளிக்குணத்தை மறைக்கும் படலம்போல உயிரின் அறிவுக் குணத்தை மறைப்பதாய் அறியாமையைத் தன்குணமாக உடைய ஆணவமென்பது சடமாய், உயிரின்வேறாயுள்ளதென அறிக.

நெல்லுக்கு முளைக்குமாற்றல், தவிடு, உமி என்பன சேர்ந்தாற்போல மும்மலங்களும் உயிரோடு பிணைந்து நின்று அதற்கு மயக்கம் விளைத்து அதன் உண்மை வடிவத்தை மறைத்து நுகர்ச்சியையும், நுகர்ச்சிப் பொருளையும், நுகருந் தன்மையையும் நல்கும். வினை, உயிர்க்கு இன்பதுன்பங்களைத் தோற்றுவித்தலால் முளைத்தற் சத்திபோன்றது. மாயை இன்ப துன்ப மீபுமுடல், கரணமுதலியன அளிப்பது; அது தவிடுபோல்வது. ஆணவம் உமிபோல்வது. அது இன்ப துன்பங்களை உயிர் நுகருமாறு நிலைபெறுத்துவது. உடல் கரணமுதலிய மாயைப்படைப்புக்களை மாயேய மலமென்றும், மும்மலமுந் தத்தம் தொழிலைச் செய்யும்படி, உயிர் பக்குவப் படும்வரை மறைத்தற்றொழிலைச் செய்யுஞ் சிவசத்தியை மறைப்பு மலமென்றும் கொண்டு மலமைந்து என்றுங் கூறுப.

ஐம்மலங்களாற் கட்டுண்ட உயிர் பிறப் பிறப்பெடுத்து, கொள்ளிவட்டமும், காற்றாடியும்போலத் துறக்கம், நானிலம், நிரயம் என்னு மூன்றிடங்கட்கும் போக்கு வரவு செய்யும். முட்டை, வியர்வை, வித்து, கருப்பை என்னும் நால்வகைத் தோற்றத்தினையுடைய எண்பத்து நான்கு நூறாயிரப் பிறப்பு வகைகளிலும் உழன்று மக்கட் பிறப்புடையனாதல், கடலைக் கையால் நீந்திக் கரையெய்தினாற்போலும். மக்களாய்ப் பிறந்

தும் உறுதிப்பொருளை யுணர்த்தும் நூல்கள் பயிலாத நாக ரிகமில்லாத நாடுகளிற் பிறவாமல், தவத்திற்குரிய நாடுகளிற் பிறத்தல் பெருந்தவப்பயனாகும். அங்ஙனம் பிறந்தாலும் தவஞ்செய்யுங் குடியிற் பிறத்தல் அரியதாகும். அவ்வா றாயினபின்னும், புறச்சமயம் புகாது மெய்ந்நெறி நிற்கப் பெறுதல் அரிதாகும். | மேலும், ஆற்றல், கல்வி, செல்வம், குலம், அதிகாரமென்னும் வாழ்வுபற்றி வருஞ் செருக்கும் வறுமைபற்றி வருஞ் சிறுமையுமில்லாது, தாழ்வெனுந் தன் மையோடு சிவநெறிசாரும் நல்வினையுடைமை மிகஅரிது. சிவநெறி ஒழுகிப் பயன்கருதாத அறிவோடு இறைவனை வழுத்துவோர் அவனருள் பெற்றோராவர்.

மக்கட் பிறவியை இறைவன் வகுத்தது மனமொழி மெய்களால் அவன் பணியாற்றுதற் பொருட்டே. வானுலகி னரும் மண்மிசைவந்து அரனை வழிபடாநிற்பவும், வழிபடு தற்கென மக்கள் யாக்கையெய்திய மடவோர் தங்கடமை யாது முணரார். அங்ஙன முணராமை அவர்களின் தீவினைப் பயனே.| மக்கள் உடம்பானது, கருப்பத்திலே அழிவதாயும், பிறந்தவுடன் அழிவதாயும், பிறந்து சிறிது வளர்ந்து அழிவ தாயும், வளர்ச்சி முற்றியபின் அழிவதாயும், நரைத்து அழிவ தாயும் உள்ளதாகலின், அதன் நிலையாமையை உணர்ந்து அஃது உள்ளபோதே அதுகொண்டு உய்திகூடுதற்கு முயல வேண்டும்.

ஒருபொருளை நுகருங்கால் நமது அறிவு மற்றொன்றை அறிவதில்லை. ஒன்றினையறியுங்காலும் அதனை இடைவிடா தறியமுடியாது. இடைவிட்டு அறியுந் தன்மையது. தூக்கம் மயக்கம் முதலியன வந்தபோது, அறிவு முற்றிலும் அடங்கி விடுகின்றது. துன்பமிக்க இவ்வாழ்க்கையானது இருப்பது

போலத் தோன்றிக் கனவுபோல மறைந்தொழியும். செல்வச் செருக்கினாற் பெரியவர் என்று பேசப்படுவோர் பிணத் தோடொப்பர். அவர்க்கும் பிணத்திற்கும். சந்தனப்பூச்சு, பூமாலை சூடுகை, பொன்னுடைதரித்தல், பரிசனத்தொடர்பு, கொட்டுமுழக்கம், சிவிகையேற்றம், அறிவொழிந்து பேச்சின்றிக் கிடத்தல் என்பன பொதுவாதல் காண்க.

பிணத்தினை யொத்து வாழ்வார் பின்னே நடைப் பிணங்கள்போல, தமது உடலையும், உயிரையும், உள்ளத்தை யும் வருத்தித்திரிபவர்கள், உடல் முதலியன வெல்லாம் கணப்பொழுதிற்றோன்றி மறையுந்தன்மையன வென்றறிந்து இறைவனை ஒருபொழுதாவது அன்போடு வணங்குவார்களா யின், அவர்களுக்கு அவன், வானவர் என்றும் வணங்கும்படி யான உயர்பதம் அளிப்பன்.

## மூன்றாஞ் சூத்திரம்

உடலின் வேறாக உயிரென்பது ஒன்றுண்டு. அஃது உடம்பிற் பொருந்தி யான் எனதென்னுஞ் செருக்குடைய தாகும். ஐம்பொறிகள் உயிரல்ல. அவை அறியுமெனினும், உயிரைப்போல விழைவு செயலுடையன அல்ல. பிராணன் உயிரன்று, அஃது இன்பதுன்பங்களை நுகராமையின். நன விலுங் கனவிலும், உயிரொன்றே பயில்வதால் கனவில் மாத்திரம் பயிலும் நுண்ணுடம்பு உயிரன்று உயிர் ஐவகை உணர்ச்சி நிலைகளுடையன. ஆதலின், அவையில்லாத கட வுள் உயிரன்று. கருவிகளனைத்தும் நீங்கிய மேல்நிலையிலும் உயிருண்டு. ஆதலாற் கருவிகளின் கூட்டம் உயிரன்று.

உடலிற்கு வேறாக உயிர் உண்டென்று கொள்வானேன், உடம்பே பொருள்களையறியும் என்னுமோவெனின், உடல்

பிணமானபோது, அஃது எதனையும் அறியக் காண்கிலேமே. பிணமாயபோது பிரிந்துபோவது உயிரெனஅறிக. பிராணவாயு நீங்கினமையால் உடல் பிணமாயிற்றெனின், பிராணவாயு தூக்கத்தில் நீங்காதிருந்தும், அஃது ஒன்றையு மறியக் கண்டிலம். பிராணவாயு கருவிகளைக் கொண்டு அறியும். தூக்கத்தில் ஐம்பொறிகளுதவியின்மையால் அஃது அறிதல் இல்லையெனின், பிராணவாயு அவற்றின் வாயிலாக அறிந்துகொண்டிருக்கும்போது, அவை ஒடுங்கக் காரண மில்லை. ஆதலால் கருவிகளை அடக்குமுயிர் வேறு உள தென அறிக.

உடலினின்று பொருள்களை அறிவது ஐம்பொறிக ளென்னில், அவைகளும் உயிர் தூங்கும்போது அறிவதில்லை. ஐம்பொறிகள் ஒடுங்கி நிற்றலே தெரியாமைக்குக் காரண மெனில், ஐம்பொறிகளுள் ஒன்று எதையாவது அழுந்தி அறியுங்காலை, மற்றப் பொறிகள் தத்தம் புலனை அறிவ தில்லை. மேலும், ஒரு பொறி அறிந்ததை மற்றொன்று அறியக் கூடவில்லை. ஆதலால், ஐந்து பொறிகளையுங் கொண்டு பொருள்களை அறியுமுயிர் வேறுளதென்க.

## நான்காஞ் சூத்திரம்

அந்தக் கரணங்கள் பொருள்களையறியுமென்னில், ஐம் பொறிகள் போல அவைகளுள்ளும் ஒன்று செய்வது மற் றொன்று செய்யலாகாமையின், அவற்றின் வேறாய், யான் எனது என்னுமுணர்ச்சி உடையதாய், அந்தக் கரணங்களை அறிந்தடக்குவதாய்க் கனவில் அவற்றை உட்கருவியாகக் கொண்டும், நனவில் அவற்றைப் புறக்கருவிகளிற் செலுத்தி யும் நிற்கும் உயிர் வேறுளதென அறிக.

## முதல் அதிகரணம்

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் ஆய்கருவி, தெளிகருவி, செயற்கருவி, நினைகருவி ஆகிய நான்கும் உயிரோடு ஒற்றித்து நின்று உயிரேயாய்த் தோன்றினும், அவை உயிரல்லவென்றும், கண்ணுக்கு விளக்குப்போல அவை உயிர்க்குக் கருவியேயாமென்றும் அறிந்து உயிரின் உண்மைத் தன்மை உணர்ந்தோர், தம்மையுணர்ந்தோராவர். தம்மையுணர்தல் பசு ஞானமெனப்படும். அதற்கு மேலாயது சிவஞானம்.

அந்தக் கரணங்களாற் பெறப்படும் அறிவானது சுட்டுணர் வெனப்படும். தூய முதல்களிலெழும் நுட்ப எழுத்துக்களால் சுட்டறிவு விளங்கற்பாலது. அவைகள் அந்தக் கரணங்களோடும் உயிரின் தோன்றல் நிலையாய புருட தத்துவத்தோடுந் தொடர்புடையன. சிவ முதல் தோன்றல் முதலைச் செலுத்தும்; நினை கருவியை அருண் முதலும் செயற்கருவியை அகாரமும், தெளிகருவியை உகாரமும், ஆய் கருவியை மகாரமும் செலுத்தும். சிவமுதல், அருண் முதல், அகரம், உகரம், மகாரம் ஆகிய ஐந்துஞ்சேர்ந்து ஓங்காரமாம். சுட்டுணர்வு தோன்றி யொடுங்குவதை நோக்கின், கடலில் அலையெழுந்து அடங்குவதை ஒக்கும். அகாரம், உகாரம், மகாரம், அருண்முதல், சிவமுதல் என்பவற்றிற்கு முறையே அயன், அரி, அரன், முதல்வன், அருட்சிவன் என்பவர்கள் தலைவர்கள். அகக் கருவிகள், எழுத்துக்கள், தலைவர்கள் ஆகிய முத்திறத்தைவரோடும் உயிர் பொருந்திய வழி அது பொருள்களை யறிந்து பயனுறும். அங்ஙனம் பொருந்தாவழி, உயிர் அறிவில்லாதது போன்று கிடக்கும். இதனை இடைபிங்கலையிற் செல்லும் காற்றினை அடக்கித் தேர்ந்த யோகிகள் நன்கறிவர்.

அகக் கருவி, எழுத்து, தலைவர் என்னு மூவகையுங் கூடிய கூட்டமே உயிர் என்னில், கூட்டமென்பது ஒரு பொருளாயில்லாதலே, கூடிய பல் பொருள்கள் உளவென்பதும், உயிர் இல்லையென்பதும் முடியும். அவையே ஆன்மாவெனில், அவற்றை அறிபவன் யார்? அவற்றை அறிவோன் அவற்றின் வேறாய உயிரென அறிக.

## இரண்டாமதிகரணம்

ஒரு பரம்பொருளே எண்ணிறந்த வடிவுகளாய்த் திரிபுற்று நிற்ப, அவைகளெல்லாம் அறிவு, விழைவு, செயல்களுடையனவாய் அப்பரம்பொருளோடு தீயுஞ் சூடும் போலக் குண குணித் தன்மையுடையனவாய் நிற்பன; அவையே உயிரெனப் படுமெனின், கருவிகளுதவியின்றித் தானே பொருள்களை அறியக்கூடிய கடவுளின் பகுதியாய உயிர்களும் தாமே அறியும் வன்மையுடையனவாயிருத்தல் வேண்டும். அங்ஙனமின்றி உயிர் அகக்கருவி, புறக்கருவிகளைப் பொருந்தி நின்றே அறிதலைச் செய்கின்றது. ஆகவே, உயிர்கள் கடவுளின் பகுதியாகமாட்டா.

இனி, உயிர் அறிவு மாத்திரையாய் நிற்பது எனில், உடலின் கண்ணே அறிவு, விழைவு, செயல்கள் நிகழமாட்டா. உயிரின் நேர் முன்பாக உடலின்கண் கருவிகள் தொழிற்படுமெனில், பிணத்தின் கண்ணும், தூக்கமெய்திய உடலின் கண்ணும் அறிகருவிகள் தொழிற்படாமைக் கேது என்னை? அவைகள் ஒடுங்கினமையே ஏது என்னில், உயிரின் சந்நிதியில் உடல் இருக்கும்போது அவை ஒடுங்குதற்குக் காரணமில்லை. இதனாற் சந்நிதியென்ற கொள்கை தவறு. சந்நிதியென்பது ஒருவகைப் பண்பு. அஃது இரும்பை யிழுக்குங் காந்தத்தின்! குணம் போல்வதெனின், காந்தத்தின் முன்

இழுத்தலாகிய ஒரு குணமே கண்டோம். அதுபோல, உயிரின்முன் உடம்பிற்கும் ஒரு செயலே நிகழவேண்டும். அவ்வாறின்றி, நினைத்தல், மறத்தல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றல் என்னு மாறுபட்ட தொழில்கள் நிகழ்தற்கேதுவென்னை? அவையனைத்தும் சந்நிதியென்ற ஒரு பண்பின் பயன்றோ? அத்தகைய பண்புடைய உயிரைக் குணம் யாதுமில்லாது அறிவு மாத்திரையாய் நிற்பதென்றல் பொருந்துமாறில்லை.

இனி, உயிர் நுண்ணிய உருவப் பொருள் என்பையாயின், அஃது உடம்பினுள் எங்கேயாவது கண்ணுக்குப் புலனாதல் வேண்டும். அஃது உடம்பாய்த் திரிபுற்று நிற்குமென்னில், அஃது அழிவெய்தும் பூதத்தோடு ஒன்றாதல் வேண்டும். கருவினுள் அஃது எவ்வாறு உடம்பின் மூலத்தின் வேறாகப் புகுவதென்பதுங் காட்டவேண்டும். உயிர் கட்புலனாகாதெனின், உருவமென்ற கொள்கை தவறாகும்.

மேலும் உயிர் நுண்ணிய உருவுடையதாகலிற் கட்புலனாகாதெனின், அது நுண்ணுடம்பாகும். அந் நுண்ணுடம்பு சடமாகிய மனமுதலிய அகக் கருவிகளாலும் பூத நுட்பங்களாலு மாயது. உயிரானது நுண்ணுடம்பினுள், அதி நுட்பமாக நிற்பதெனில், அது கலை முதலிய முதல்களாலாய பரவுடம்பாய்ச் சடமாகும். அப் பர வுடம்பு அழிவுடையதாகலின் அது உயிராதல் யாங்ஙனம்? இனி உயிர் அருவுருவப்பொருளென்னில் அருவாயுமுருவாயும் ஒரே காலத்தில் ஒரு பொருள் எவ்வாறிருத்தல் கூடும்? விறகில் நெருப்புப் போல எனின், அது கடைந்தபோது உருவாய் வெளிப்படுதலின், அது தக்க உவமையாகாது. மதியின் வடிவு போல உயிர் அருவுருவாமென்னில், மதிபோல உயிர் கட்புலனாதல்

வேண்டும். மதி முற்றிலும் மறைந்து சிறிது சிறிதாகத் தோன்றுதல்போல, உயிர் அருவாய்க் கருவிற் பதிந்து உடம்பாக வளர்ந்து தோன்றுமெனில், சித்தாகிய உயிர் அசித்தாகிய உடம்பாதல் எப்படி?

இனி, உயிரானது ஆகாயம்போல அருவாய் விகாரமற்று நிற்பது என்னில், அங்ஙனம் அது நிற்பின், உடம்பினை இயக்கி, ஆடுதல், ஓடுதல், நிற்றல், இருத்தல், கிடத்தல், புரளுதல் முதலிய பல்வேறு செயல்களைச் செய்விப்பது யாது?

இனி உயிர்க்குத் தானே அறியும் அறிவில்லை. மனத்தோடு கூடித்தான் அறியுமென்னில், உயிர் சடப்பொருளாகும். சடப்பொருள் பிறிதொரு சடத்தைக் கூடினால் அறியுந் தன்மையடையுமோ? உயிரைச் சித்தசித்து என்னில் ஒருபொருளே அறிவுடையதாயும் அறிவிலதாயுமிருத்தல் கூடுமென்றல் தவறு. அசித்தினைச் சேராத சித்து என்று உயிரைக் கூறவும் இடமில்லை. அசித்தாகிய கருவிகளைப் பொருந்தாமல் உயிர் எதனையும் அறியாது.

இனி உயிர் பரமாணு அளவிற்றாய் உடம்பினுள் நிற்பது எனில், அஃது உண்மையாயின் உடம்பில் உயிர் தங்கமாட்டாது. உடம்பிலுள்ள பல்கோடி துளைகளுள் ஒன்றின் வழியாக அது ஓடிப்போய்விடும். உடம்பில் அது கட்டுப்பட்டு நிற்பதெப்படி? அது, பூத அணுக்களிலொன்றுமன்று. அஃது அத்துணைச் சிறியதாயின், உடற்பொறையைத் தாங்குவதெப்படி? அணுவினும் நுட்பப் பொருளிருப்பதால், அணு ஒடுங்குவதுபோல உயிரும் ஒடுங்கியழிவதாகும்.

உயிரானது, உடம்பில் நெஞ்சின்கண் நுட்பமாக நிற்ப, விளக்கொளிபோல அதன் அறிவானது எங்கும் பரவுமென்ற மிருதிநூலார் கொள்கையைத் தழுவினால், உயிர்க்கு உரு உண்டென்ற கொள்கைபோல அஃதுந் தவறாகும். உயிரானது உடம்பெங்கும் வியாபகமாயிருந்தாலன்றி, உடம்பு முழுவது முணர்ச்சி உடையதாகாது. விளக்கின் ஒளிபோல உயிர் பரவி நிற்குமென்னில், விளக்கினொளி விளக்கின் நுண்வடிவே. அவ்வாறே உயிரினறிவுமாமெனில், உயிர் ஓரிடத்தில்மாத்திரம் நிலைத்திருப்பதென்று கொள்ள இடமில்லை. விளக்கின் சூடு போல்வது உயிரின் உணர்ச்சி யெனில், விளக்கின் சுடரோ, தொட்டவரைச் சுடும்; அதன் ஒளி பரவுமிடத்தெல்லாம் அஃது ஒத்த முறையிற் சூடுதருவதில்லை. உயிரின் உணர்ச்சி உடம்பெங்கும் ஒத்தமுறையிற் பரவியிருத்தலால், விளக்கின் சூடு உயிரின் அறிவிற்கு உவமையாகாது. விளக்கை ஓரிடத்தில் வைத்தால் அதற்கு நெருக்கமான இடமெங்கும் அதன் ஒளி ஒருதன்மையாய்ப் பரவும். உயிரின் அறிவு, ஐம்புலன்களிடத்தினும் ஒருதன்மையாக நிகழ்வதில்லை. இக்காரணத்தாலும் விளக்கொளி தக்க உவமையாகாதென அறிக.

இனி, உடம்பளவில் உயிர் நிறைந்து நின்று பொருள்களை உணருமெனில், உறக்கம் நேரிடக்காரணமில்லை. ஐம்பொறியினும் ஒருங்கே அறிவு நிகழ்தல் வேண்டும். மேலும் பெரிய உடல், சிறிய உடல் என்பவைகளுக்குத் தக்கவாறு உயிரினறிவு பெருகுதலும் சுருங்குதலு முடையதாகவேண்டும். உடலுறுப்பினைக்குறைப்பின் அறிவுங் குறைந்து, உடம்பு மாய, அறிவு மாய்ந்துபோம். ஆதலால் இக்கொள்கை தவறு.

இனி உயிர் கடவுளைப்போல, எங்கும் பரவி நின்று பொருள்களை யறியுமென்னில், உயிர்க்கு உணர்ச்சி நிலை

மாற்றங்களாய அவத்தைகள் ஏற்பட வேண்டியதில்லை; போக்கு வரவிற்கிடமில்லை; ஐம்புலனும் ஒருங்கே அறியாது ஒவ்வொன்றாய் அறிதற்குங் காரணமில்லை; எங்கும் பரவிய உயிர் ஒருடம்பில் அடங்கி நிற்றல் இயலாது.

உயிரின் குற்றமற்ற அறிவை மாயாகாரியங்கள் தடை செய்து நிற்றலின், உயிர் அவத்தைகளுறுவதாயிற்று என்னில், உடம்பின்கணுற்ற புறக்கருவிகளும் அகக்கருவிகளும் உயிரினறிவை விளக்குவனவேயன்றித் தடுப்பனவல்ல. உயிரின் தூயஅறிவினை மாயை மறைக்குமெனின், அம் மறைப்பு எக்காலத்தும் நிகழ்வதாகும். நிகழின், வீடு என்பது இல்லையாய்முடியும். வீடடைந்தபின், மாயை மறையாதெனின், உடம்பொடுகூடாத கேவலநிலையிலும் மறைப்பு இல்லையாதல் வேண்டும். அங்ஙனமின்றிக் கேவல நிலையில் மறைப்பு இருத்தலின் அக்கொள்கை தவறானதென்றறிக. உயிரின் வியாபகம் சடப்பொருளினிறைவு போல்வதன்று. அது முதல்வனது தடக்கற்ற நுட்பவியாபகம் போல்வது மன்று. சார்ந்ததன் வண்ணமாய்ப் பற்றிய பொருள்களிற் றங்கும் வியாபகமுடையதாய், ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு அழியாத அறிவு, விழைவு, செயல்களுடையதாய் நிற்பது உயிரென அறிக.

ஆணவமலத்தான்மட்டும் மறைப்புண்டு கிடக்கும் உயிரானது, தூய்தல் மாயையின் பகுதியைப் பொருந்தியவுடன், அறிவிச்சை செயல்கள் பொதுவாக விளங்கப்பெறும். பின் அது கலை, புலம், அவா என்பவைகளின் சார்புற்றுச் செயல், அறிவு, விருப்பம் வெவ்வேறு விளங்கப்பெறும். பின் அகக்கருவிகளை உள்ளடக்கிய முக்குணச் சார்புற்று நிற்கும். இவை முறையே மாயாவுடம்பு, கலையுடம்பு, குணவுடம்பு

என ஓதப்பெறும். பின், உயிர் நுண்ணுடம்பாய எண்ணுடல் (புரியட்டகம்) பெற்று, பருவுடம்பு பெற்று அதன் பண்ணமாய் நின்று நனவுமுதலிய ஐவகைபுணர்ச்சி நிலைகளை உரிய காலங்களிலுறுவதாய்ப் போக்கு வரவு செய்து நல்வினை தீவினைப்பயன்களை நுகர்ந்து நிற்கும். இதுகாறுங் கூறிய ஐயுடம்பு முறையே இன்பப்போர்வை, புலப்போர்வை, அகப்போர்வை, உயிர்ப்போர்வை, சோற்றுப் போர்வை யெனப்படும். இவ்வைந்தினும் அகமும் புறமும் போக்கு வரவு செய்து, உயிர் அவ்வவ்வுடம்பின் றன்மையதாய் நிலவும்.

இவற்றை உயிர் நடத்து முறைமை, தோற் பாவையுட் புகுந்து அதனை ஆட்டுதல்போலவும், மரப்பாவையை நாரினு லியக்குவது போலவும், தேரினைப் பாரின்மீது பாகன் செலுத்துவதுபோலவும், கூடுவிட்டுக் கூடு பாய்தல் போலவும், வேடம் பூண்டு நடிப்பதுபோலவுமாம்.

உடல், பொறி, உயிர்க்கால், அகக்கருவி என்பவற்றையும், அவற்றைக் கொண்டுணரும் திரிபுணர்ச்சியையும், தன்னோடு வேற்றுமையிலவாகக் கருதி யான் என்றும், எனதென்றும் அவற்றைப் பாராட்டுமியல்பு உயிர்க்குண்டு. என்னூர், என் வீடு எனப்படும் புறப்பொருள்கள் உயிரின் வேறாதல் போலவும், உடம்பின் பகுதியாய நகம், உரோம முதலியன வேறாதல் போலவும், உடல், பொறி முதலியனவும் உயிரின் வேறெனஅறிக. பொன், அணி, ஆடை, மாலை முதலியன அணியப்பட்டபோது யான் எனது என்றற் குரியவாய், களையப்பட்டபோது அவை அணிந்தவனின் வேறாதல் போல, உடல், பொறி முதலியனவும் வேறாதலின் அவற்றை யான் அல்லேனெனப் பிரித்தறிக. உயிரை

யும் எனது என்றுரைக்கும் வழக்குக் கேது என்னை எனில், உயிரினைத் தனியே கண்டு அறியாமையின் அவ்வாறு செப்புதல் வழக்காயிற்று. மேலும், எனது உயிர் என்றபோது, உயிர் என்ற சொல் உயிரைக் குறியாது அதனோடியைபுடைய பிறிதொன்றைக் குறித்தலுமுண்டு. புத்தியை மனமென்றும், மனத்தைப் புத்தியென்றும், சித்தத்தை உயிரென்றும், உயிரைச் சித்தமென்றும், சிவனைச் சீவனென்றும், சீவனைச் சிவனென்றுங் கூறுமுபசார வழக்குண்மையுணர்க. புத்தி, உடல், சித்தம் முதலியவற்றை உயிர் வேறறப் பொருந்தி நின்று பொருள்களை அறிதல்பற்றி, அவற்றையுமான்மா என்று நூல்கள் கூறும். அது சுடரின் பெயராகிய விளக்கென்பது தகழிக்கும் ஆனாற் போல என்க.

உணர்வுந் தொழிலுமுடைய நனவு நிலை நின்று, கனவு நிலை வந்து நீங்கியபோது அதனைப் பிறர்க்கெடுத்துரைத்தும், சுழுத்தியாகிய துயில் பெற்று விழித்தபின் சுழுத்தி நிலை யுணர்ந்தும், புசிப்பும் தொழிலும் அற்ற துரிய நிலையிலும் அதற்கு மேல் நிலையிலுஞ் சென்று மீண்ட காலை அவற்றின் எதிர் மறையாய நிலைகளின் வைத்து அவற்றை யுணர்ந்தும் நிலவுகின்ற உயிர், அந்நிலைகட்கேதுவாய மாயைக் கருவிகளின் வேறுமெனவுணர்க. அரசன் அமைச்சரோடு கலந்து ஆளுதல்போல, உயிர் மாயைக் கருவிகளைப் பற்றி நின்று பொருள்களையறிவதாய், ஆணவ மலத்தில் மறைந்து அருவமாய் நிற்பதெனை அறிக.

## மூன்றும் அதிகரணம்

அமைச்சர், படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு உலாப்போந்த அரசன் மீண்டு மாளிகையிற் புகும்போது,

வாயில்கள்தோறும் அவரவர்கட்கு விடை கொடுத்துக் காவலும் வைத்துவிட்டு அந்தப்புரத்தினிற்றனியே செல்லுதல் போல, உயிரும் படிப்படியாகக் கருவிகளினீங்கி உடலுக்குக் காவலாகப் பிராணனை நிறுத்திவிட்டுத் தான் அவத்தை நிலைகளை யடையும்.

புருவ நடுவில் நனவு நிலை அடையுங்கால் முப்பத்தைந்து கருவிகளும், கழுத்திற் கனவு நிலையடையுங்கால் இருபத்தைந்து கருவிகளும், குருதியகமாய நெஞ்சத்தில் உறக்க நிலையடையுங்கால் மூன்று கருவிகளும், உந்தியிலே பேருறக்க நிலையடையுங்கால் இரண்டு கருவிகளும், மூலாதாரத்தில் உயிர்ப்படங்கு நிலையடையுங்கால் ஒரு கருவியும் தொழிற்படும்.

நனவிலே அறிவுப் பொறியைந்தும் வினைப்பொறியைந்தும் காலினம் (வாயுக்கள்) பத்தும், ஐம்பொறிக்குப் புலனாகும் ஓசை முதலிய ஐந்தும், வினைப் பொறித் தொழிலாகிய உரை முதலிய ஐந்தும், அகக்கருவிகள் நான்கும் தோன்றல் முதலும் நிகழும். கனவில் பொறிகள் பத்தும் அடங்கியுள்ளன. சுழுத்தியில் நினைகருவி, உயிர்க்கால், தோன்றல் முதல் என்பனவே யுள்ளன. பேருறக்கத்தில் உயிர்க்காலும் தோன்றல் முதலுமே தொழிற்படும். உயிர்ப் படங்கு நிலையில் உயிர்க்காலும் அடங்கும். எஞ்சிய ஒன்றே யுளது.

இவ்வவத்தைகள் மேல்நோக்கித் தோன்றுமுறையும் கீழ் நோக்கி யொடுங்கு முறையுமென இருவகை யுடையன. முன்னது பிறப்பறுதற்கேதுவாகும். பின்னது பிறப்புண்டாதற்கேதுவாகும். யோக நிலையிலும் இதுபோல இருவகையுண்டு. நனவு நிகழும் புருவ நடுவின் கண்,

ஐந்தவத்தையும் உள்ளன. அது நனவில் நிகழுஞ் செயல்களை ஆய்ந்து பார்க்கின் நுட்பமாக விளங்கும். சுத்த நிலையிலுள்ள அறிஞர்க்கும் அவ்விடத்திலே வீடு பேற்றிற் கேதுவாக ஐந்தவத்தை நிகழும்.

சுத்த நிலையில் தூயமாயை முதல்களுள், நனவிலே ஐந்தும், கனவிலே தூய புல மொழிந்த நான்கும், சுழுத்தியில் சிவம், அருள், அருட்சிவமென்ற மூன்றும், பேருறக்கத்திலே சிவமும், அருளும், அதற்குமேல் நிலையில், சிவமுத லொன்றும் இயக்கு கருவிகளாய் நிற்கும். உயிரானது தனி நிலை, கலப்பு நிலை, தூய நிலை என மூன்று பெருநிலையுறும். மாயைப் படைப்புகளோடு கூடாநிலை, அவற்றோடு கூடிய நிலை, ஆணவ வலி அடங்கியநிலை யென்பன அவை.

தனி நிலையில், உயிரானது ஆணவ மலத்தோடுமாத்திரங் கூடி நின்று தோற்றக் கேடுகளிலதாய், அறிவு இச்சை செயல்கள் விளங்கப் பெறுமையாற் போகத்தில் நோக்கிலதாய், சுட்டு நிலையடையாது பரப்புடையதாயிருப்பது.

கலப்பு நிலையில், உயிர் அறிவு, இச்சை, செயல் விளங்கப்பெற்று, விருப்பு வெறுப்புடையதாய்ப் பிறப்பிறப்புடைத்தாய், வியாபகமின்றிக் கண்டிதப்பட்டுச் சார்ந்ததின் வண்ணமாயிருக்கும்.

இருவினையொப்பும், கட்டுமுதிர்வும், அருள் வீழ்ச்சியும் ஏற்பட்டுக் குருவருள் பெற்று ஞான நெறி நின்று மும்மல நீக்கமெய்திச் சிற்றறிவொழிந்து சிவஞானம் வளரப்பெற்று முதல்வன் திருவடி அடைதலே தூய நிலையாகும்.

## ஐந்தாஞ் சூத்திரம்

ஐம்பொறி, அகக்கருவிகள் முதலியன தத்தம் புலன் (அறியவேண்டிய விடயங்) களை உயிர் தம்மோடு கலப்புற்று

நிற்பதாலறிகின்றன. அவை தம்மையும் தம்மைச் சார்ந்து செலுத்தும் உயிரையும் அறியமாட்டா. அதுபோல எவ்விடத்தும் அறிவாய் நிறைந்த இறைவன் திருவருளால் உயிர்கள் வினைப்பயன்களையறிந்து நுகரும். எனினும், தம்மையும் தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையுமறிய மாட்டா. சிவனே எல்லாவற்றையும் அறிந்தும் அறிவித்தும் நிற்பன்.

இறைவனே உயிர்க்கு அறிவிப்பானெனில், எல்லார்க்கும் அறிவு ஓரளவிற்றாக இல்லாமல், ஏற்றத்தாழ்வு ஏற்படக்காரணமென்னை யெனில், அவ்வவர்வினை வேறு பாடே யென்றுணர்க. தாமரையின் அலர்ச்சிக்குக் காரணம் தாமரையேயாயினும் கதிரவனெழுச்சியும் வேண்டும். பயிர் செய்யுந் தொழிலால் விளை பொருள்கள் விளைந்தாலும், அத்தொழிற்கு வேறாக நிலமும் இன்றியமையாததே. உயிர் ஒன்றை யறிதற்கு முதல்வன் துணையும் வினையின் துணையும் வேண்டப்படும். வினையும் உயிரினறிவும் போதாவோ? முதல்வனது துணையும் வேண்டுமோ வென்னில், உயிரானது ஒவ்வொன்றை ஒவ்வொரு கருவியின் துணைகொண்டே யறிதலாலும், அறிந்தவற்றை மறத்தலாலும், ஒருவன் அறிவிக்க அறிதலாலும், பொருள்களை யறிகின்ற தன்னைத்தான் அறியாமையினாலும், முதல்வன்போலத் தானே யறியும் இயற்கை யறிவுடையதன்று. அது அறிவிக்க அறியுந்தன்மைத்து.

அகக்கருவி, புறக்கருவி, புலன்கள் ஆகிய கீழ்முதல்களாலும், கலை முதலிய அறிமுதல்களாலும், காலத்தாலும், ஊழினாலும், தன் உடம்பாலும், காண்டல் கருதல் உரை யென்னுமளவைகளாலும், அளவையுணர்ச்சிக் கேதுவாய தூய மாயையிலெழும் நால்வகைச் சொல்லாலும், உயிரின்

அறிவு விளங்கப்பெறும். இவைகளினுதவியில்லாவிடத்து உயிர் அருவமாய் ஒன்றையு முணரா நிலை யெய்தும். இவை யனைத்தையும் வகுத்து உயிரோடிணைத்து அறிவளிப்பவன் முதல்வனுதலால், உயிர்கள் முதல்வனையின்றி யொன்றையு மறியாவென வுணர்க. இக்கருவிகள் யாது மின்றித்தானே யறியுமாற்றலுடைய முதல்வன் அருவனும், உயிர்களெல்லா வற்றிற்கு முயிராய், தனிநிலையில் நுண்ணிய ஐந்தொழில் செய்தும், கூட்டு நிலையில் நனவிலே மிக நுண்ணிய ஐந்தொழிலியற்றியும், வெளிப்படையான ஐந்தொழில் நிகழ்த்தியும் இவற்றால் துடக்குறுது வேருய் நிற்பன். மாயா காரியமெல்லா மறியும் இறைவனறிவு உயிர்களுக்கு உணர்ச்சி விளக்கு முகத்தாற் பயன் படுவதேயன்றி அவனுக்குப் பயன் படுவதில்லை. அவன் பாசத்தைத் துய்ப்ப தில்லை; அறிவிலாப் பொருளை இறைவன் பொருந்தானுதலி னென்க. இறைவன் உலகெலா மறிந்து நிற்றல் உயிர்கட்கு நுண்ணிய ஐந்தொழில் நிகழ்த்தற் கேதுவாகும். நனவிலே உயிரினை ஐந்து உணர்ச்சி நிலையுறுவித்தல் மிக நுண்ணிய ஐந்தொழிலாகும்.

இறைவன், உலகைத் தனது உருவத்திருமேனியாகவும், பிறப்பு வகைகளெல்லாம் உறுப்புக்களாகவும், தனது அறிவு, விழைவு, செயல், உட்கருவிகளாகவுங் கொண்டு எண்ணிலா உயிர்களினறிவுக்கறிவாய் நின்றுணர்த்தி ஐந்தொழிலாகிய நாடகத்தை நடிப்பன்.

இங்ஙனம், உயிர்கட்கு ஐம்பொறி வாயிலாக எய்துஞ் சுட்டறிவை நிகழ்வித்து உலகப்பொருளின் நுகர்ச்சி நல்கிப் பிறவியிலுழல்வித்துப் பக்குவம் வரும்படி செய்து, பின்னர் விரிந்த அறிவையுங் கொடுத்து வீடளிப்பன் முதல்வனென

அறிக. இவற்றைச் செய்தற்குக் காரணமாய இறைவனது திருவருளே அவனது சத்தி. சத்தியின்றிச் சிவமில்லை. சிவமின்றிச் சத்தியில்லை. கதிரவனும் கதிரும்போல் சிவமும் சத்தியும் ஒற்றுமையையுடையன என அறிக.

## ஆறாஞ் சூத்திரம்

இறைவன் உயிர்களால் அறியப்படும் பொருளோ, ஒருவகையானு மறியப்படாத பொருளோ என்றால், சுட்டியறியப்படும் பொருள் சடமாயழிந்து போம் பொருளாம்; ஒருவாற்றானும் அறியப்படாத பொருள் இல் பொருளாம்; ஆதலால், இறைவன் சுட்டியறியப் படுபவனுமல்லன், அறியப் படாதவனுமல்லன்; அவன் அறிவுடைய நிலைப்பொருள். சிவஞானப் பயிற்சியால் அறியப்படுஞ் சிவம், நிலையிலாப் பொருள்களை அறியும் சுட்டுணர்வுகளால் அறியப்பட முடியாது.

### முதல் அதிகரணம்

சுட்டறிவானது தோன்றியழிவது; ஒன்றை விட டொன்றைப்பற்றி நிற்பது; உலகம், நுகர்பொருள், உடம்பு முதலியவற்றோடு தொடர்புற்றது; அவற்றின் மயமாய் நின்று அவற்றை யுணர்வது; மும்மலக்கலப்புற்றது; பொருள்களை யறியாத விடத்து ஒடுங்கி யொழிவது. சுட்டியறியப் பட்ட பொருளெல்லாம் நிலையில்லாதன. ஆதலால், சுட்டறிவினால் இறைவனை யுணரமுடியாது. மண்ணுலகில் வாழ்வும், இந்திரன், மால், அயன் முதலியோர் வாழ்வும், ஐம்பூதங்களாலாய பல்வேறு உருவெடுத்து வாழும் வாழ்வும் உள்ளது போலத் தோன்றி நிலையாமையால், இந்திர சாலமும், கனவும் பேய்த்தேரும்போல அவை அசத்தெனப்படும்.

## இரண்டாம் அதிகரணம்

உணரப்படாத பொருள், தோற்றக்கேடில்லாது சத்தென நிற்றலாற்போந்த பயன் யாதுமில்லை. அது நம்மையும் வந்து பொருந்தாது; நாம் அதனைப் பொருந்தலும் இயலாது; அது நிலையான நன்மையுந்தராது. ஏனெனில், ஆகாயப் பூமாலையும், ஆமை மயிர்க்கம்பளமும் போல அது இல் பொருளுக்கு ஒப்பாவதே.

## மூன்றும் அதிகரணம்

பிரமம் சத்துமன்று, அசத்துமன்று, சதசத்துமன்று என்றால், அது இன்னதென்று சொல்லொணாத பொருள் என்பது முடியும். அத்தகைய பொருள் உண்டோ, இல்லையோ என்று கேட்டார்க்கு, அது உண்டென்றால், அது சத்தென்பது முடியும். இல்பொருளாயின், அதனைப்பற்றிப் பேச்சில்லை; நாத்திக முடிவு ஏற்படும். அது உள் பொருளாயின், அறியப்படவேண்டுமே யென்னில், சுட்டியறிதற் கேதுவாய மன, மொழி, மெய்களை அது கடந்த மெய்ப் பொருளாதலின், அதனையறிய வல்லவன், அருளால் அப் பொருளோடு ஒற்றித்து நின்று அதனை யறிவன், அது அவ்வறிவேயாய் வேறுமாய் உடனுமாய் நிற்கும்.

அது பாவிக்கப் படுவதன்று. பாவனை யென்பது கருவிகளோடு செய்யப்படுதலின், அது சுட்டறிவின் பாற்படும். கருவிகளின்றிப் பாவிப்பின், கேவலநிலை வந்தெய்தும். இரண்டுவழியுமின்றிப் பாவித்தல், இயலாது. எய்தாத பரம் பொருளைத் தன்னில்வைத்துப் பாவித்தால், அதுபரம் பொருளைப் பாவிப்பதாகாது. பயனுமில்லை. பாவனையின்றி இறையோடு ஒற்றித்து நின்று அவனருளாற் காண்டலே

பயன்படும் பாவனையாகும். அது முதல்வனறிவால் உயிர் அவனைக் காண்பதாகும்.

முதல்வன் வேறாக முன்னிலைப்படுத்தி அறியப்படா வண்ணம் உயிர்க்குயிராய் நிற்றலானும், உயிரினதறிவிற் பொருந்தி நிற்பதுபற்றியும், அங்ஙனம் நின்று உயிர் கருது வதை யெல்லாம் இறைவனே உணர்த்துதலானும், யான் என தென்ற செருக்கறுக்கப்பெற்று, அறிவானும், அறிபொரு ளும், அறிவுமெனப்பகுத்தறிதல் கூடாமையானும், உயிரி னறிவால் முதல்வன் அறியப்படாதவன்.

ஒன்று உண்டு என்ற விடத்து, உளதென்றுரைப்பவன் ஒருவன் உண்மையால், அவனின் வேறும்முதல்வன் உண்மை பெற்றும். உயிரறிவு உண்டு, இறையறிவு உண்டு. பின்னது முன்னதைவிட்டு நீங்குவதில்லை, ஆதலால் உடனாதல் பெற் றும்; நீரில் நிழல்போல இறையறிவும் உயிரினறிவும் கலந்து நிற்றலாலே, உயிரே சிவமாமென்னும்படி, முதல்வன் அதனோடொன்றாதலாய நிலைபெற்றும்; வேறா யுடனா யொன் றாய்நிற்பதே அத்துவித நிலையென்பது, சைவசித்தாந்த முடிவு.

---

## ஏழாஞ் சூத்திரம்

மெய்ப்பொருளாகிய சிவம் விரிந்த பேரறிவுடையதாக லின், எல்லாவற்றையு மொருங்கேயறிந்து நிற்பதன்றி ஒன் றினைச் சுட்டியறியாது. அசத்தினைப் பொருந்தி அங்ஙனம் பகுத்தறியுமென்னில், சத்தின்முன் அசத்து முனைத்து நில்லாதாகலின், சத்து அசத்தைப் பொருந்தாது. சத்தின் முன் அசத்து அறியுமென்னில், பகலவன் முன் இருள் போலச் சத்தின் முன் அசத்து நில்லாமையோடு, தான் பிறி

தொன்றை யுணர்த்துதற்குக் கருவியாகுமேயன்றி, அசத்து தானாக ஒன்றை யுணருமாற்ற லில்லாதது.

சத்து மெய். அசத்து நிலையாமையாற் பொய்யெனப்படும். சத்தினையும் அசத்தினையும் பகுத்தறிவது உயிரே. பொருட் டன்மையால் உயிரானது மெய்ப்பொருளினும் பொய்ப் பொருளினும் வேறாய் அவ்விரண்டன்கண்ணும் அது வதுவாய்ப் பூவிலேமணமடங்கித் தோன்றுமாறுபோல, தனித்தறியப்படாது, அவ்விரண்டனையுமறியுங்கா லறியப் படுவதாகிய சதசத்து ஆம் என அறிக.

உண்மை யறிவினைத் திருமேனியாகவுடைய முதல்வன் பால் அசத்தாகிய பாசம் நில்லாது. ஆதலால் முதல்வன்பா லறியாமை இன்று; அதனாற் குற்றம் யாதுமில்லை. அசத் தாகிய பாசம் உயிரை அநாதியேபற்றி நின்று குற்றமுறு விக்கும். சத்தாகிய சிவம் உள்ளபோதே, சதசத்தாகிய உயிரு முள்ளது; அசத்துமுள்ளது. கடலிலே, இடம், நீர், உப்பு என மூன்று உள்ளன; உப்பு நீரையே சார்ந்திருத்தல்போல அசத்து உயிரையே சார்ந்திருக்குமென அறிக.

உயிரானது இறைவன் அறிவிக்க அறிதலானும், அழி வில்லாத தாகலானும், சித்து என்றுஞ் சத்து என்றுஞ் சொல் லப்படுதற்குரியது. முதல்வன் இயற்கையாகத்தானே எல் லாம் அறிகின்ற, பாசம் நீங்கிய வாலறிவனாகிய மெய்ப்பொரு ளாதலின், உயிர்க்குள்ள பாசத்தை அருளினாலே நீக்குவன். நீக்கியபின் தானே உயிர்க்குத் துணையாக நிற்பன்.

---

## எட்டாஞ் சூத்திரம்

ஓர் அரசனுடைய புதல்வன், அறியாச் சிறுபருவத்தே வேடர்கள் வசப்பட்டு அவருடன் தங்கி வளர்ந்து அவ்

வாசனையுந் தன்னையுமறியாது மயங்கி நிற்பன். அவ்வரசன் அவனைக்கண்டு நீ என்மகன் என்று கூறி அவரினின்றும் பிரித்துப் பெருந்தகைமையோடு தன்றன்மையனாகும் வண்ணஞ் செய்து போற்றுமாறுபோல, நெருங்கிய ஐம்பொறி வேடர் சூழ்ச்சியிலகப்பட்டுத் தன்னையும் தனக்கு மெய்த் துணையாய முதல்வனையு மறியாது துயருறுகின்ற உயிரை ஆட்கொள்ளும் பொருட்டு இறைவன் ஆசிரியனாக எழுந் தருளி வந்து அவ்வேடரினின்று அதனைப் பிரித்து அவரைச் சார்தற்குக் காரணமாயிருந்த மலத்தைக் கெடுத்துத் தன் வண்ணமாக்கித் தனது திருவடிக்கீழ் வைத்து வாழ்விப்பன்.

## முதல் அதிகரணம்

எண்ணிலடங்காதனவாய உயிர்கள் மூவகைப்படும். ஆணவமலமாத்திர முடையவர்கள் விஞ்ஞான கலர்; ஆணவ மலமுங்கன்மமலமு முடையவர்கள்பிரளயாகலர்; அவ்விரண்ட னோடு மாயாமலமுமுடையவர்கள் சகலர். முதல் வகையா ருட் பக்குவப்பட்ட உயிர்கட்கு இறைவன் உண்ணின்று தன்னறிவு நல்குவன். இரண்டாவது வகையார்க்கு இறைவன் நேர் நின்று உண்மைபுணர்த்தி மலம் நீக்குவன். இவ்விரு வகையாரும் விரைவு, மிக விரைவு, என்னும் அருள்வீழ்ச்சி யுடையர். மும்மலத்தார்க்கு இருவினையொப்பு வந்து மிக மென்மை, மென்மை, விரைவு, மிக விரைவு என்னும் நாற்றிற அருள் வீழ்ச்சியுள் ஒன்று ஏற்பட்டகாலை இறைவன் மானுட ஆசிரியனை நிலைக்களமாகக் கொண்டு, மலம் நீக்கித் தன்னறி வளிப்பன். உயிர்கட்குக் கட்டுமுதிர்வாகிய மலபரிபாகம் பலவகைப்படுதலின், ஆசிரியன் மலநீக்கத்தின்பொருட்டுச் செய்யுந் தீக்கையும் பலவகைப்படும். நோக்காலும், தொடுத

லாலும், சொல்லாலும், பாவனையாலும், ஞானநூற் போதனை யாலும், யோக முறையாலும், ஓமச் சடங்குகளாலும், சாம் பவி முதலிய முத்திரைகளாலும், தீக்கை செய்யப்படும். ஓமத்தாற் செய்யப்படுவது ஒளத்திரியெனப்படும். அது அறிசார்பு, (ஞானவதி) செயற்சார்பு (கிரியாவதி) என இரு வகைப்படும். புறத்தே அழலோம்புதற்குரியன வகுத்துச் செய்வது பின்னையது; அகத்தே அவற்றைப் பாவித்துச் செய்வது முன்னையது. இன்னும், இத்தீக்கை, வித்திலி (நிர்ப் பீசம்) வித்துளி (சபீசம்) யென இருவகைப்படும். தீக்கைக்குப் பின் வழுவின்றிச் சமய முறைகளைத் தழுவி நடத்தற்கு ஆற்றலும் பொழுதும் வாயாத, பாலர், இளைஞர், முதியர், பெண்டிர், பதைப்புடையார், நோயினர் முதலியோர்க்குச் சமய முறைகளையொழித்துச் செய்யப்படும் வித்திலி தீக்கை ஆட்சியுரிமையிலாதது எனப்படும். மூவகைத் தீக்கை களுள், சமயம் புகுதலுஞ் சிறப்புமாகிய முதலிரண்டும் இவ்வாறே செய்யப்படும். இவை செய்யப் பெற்றோர் நாட் கடன் மாத்திரமே இயன்றவாறு செய்தற்குரியர்; இவற் றைச் சார்ந்த தீக்கைத் துறை (நிருவாண தீக்கை) உடனே வீடு பயப்பதும், உடல் முடிவில் வீடு பயப்பதுமென இருவகைப்படும். அவற்றை வட நூலார் சத்தியோ நிருவாணமென்றும், அசத்தியோ நிருவாணமென்றுங் கூறுவர்.

வித்துளி தீக்கையென்பது ஓதியுணர்ந்து ஒழுக்கநெறி தவறாத உத்தமர்கட்கு நாட்கடன், சிறப்புவிழா, விருப்பு விழா முதலியன இயற்றும் உரிமையையளித்துச் செய்யப் படுவது; இத்தீக்கை பெற்றோர் துணையாசிரியராகவும் முதலாசிரியராகவும் சடங்கு நிகழ்த்தற்பாலர். இத்தீக்கை

துறவறத்தார்க்குக் குடுமி களைந்து செய்யப்படின், சிவ தருமிணி (சிவநலன்) என்பப்படும். இல்லறத்தார்க்குக் குடுமி களையாது செய்யப்படின் உலக தருமிணி (உலக நலன்) எனப்படும். இத்தீக்கையுடன் திருநீராட்டுப் பெற்றோர், ஆசிரியராவர். இவை முறையே, பூதச் சார்பு, துறவுச் சார்பு (நைட்டிகதீக்கை, பௌதிக தீக்கை) யெனப்படும்.

அறிவுச் சார்பு, செயற் சார்பு என்னும் இருவகைத் தீக்கையுள் ஒரு வகையால், இறைவன் பக்குவப்பட்ட வுயிர்க்கு அறுவழித் தொடர்பொழித்துக் கட்டறுத்துச் சிவம் விளங்குவதற்கேதுவாய மெய்யறிவு உதிப்பித்துப் பிறவியை அறுப்பன். ஆறுவழியாவன மறைமொழி, சொற் பகுதி, எழுத்தொலி, உலகம், முதல்கள், கலைகள் என்பன. இவற்றுள் மறைமொழி சொற்பகுதியினும், சொற் பகுதி எழுத்தினும் அடங்கும். உலகம் முதலில் அடங்கும். எழுத்தும் முதலும் கலையிலடங்கும். கலை, சிவசத்தியிலொ டுங்கும். சத்தி சிவத்தொடுங்கும். ஆறு வழிகளுள் முதல் ஐந் தும் கலையிலடங்கு முறைமையாவது:- மந்திரங்கள் இரண்டும், பதம் இருபத்தெட்டும், இறுதி யெழுத்தொன்றும், நூற் றெட்டுப் புவனமும், முதற்றத்துவமும் நீத்தற்கலையி லடங்கும். அதற்குத் தலைவர் அயனார். வேறு மந்திரம் இரண்டும், பதம் இருபத்தொன்றும், எழுத்து இருபத்து நான்கும், புவனம் ஐம்பத்தாறும், தத்துவங்கள் இருபத்து மூன்றும் பதிவு கலையுளடங்கும். அதற்குத் திருமால் தலைவர். அடுத்த இரு மந்திரமும், பதம் இருபதும், எழுத்து ஏழும், புவனம் இருபத்தேழும், வித்தியாதத்துவமேழும் புலக்கலையுளடங்கும். அதற்குத் தலைவர் அரனார். மேலுள்ள மந்திரம் இரண்டும், பதங்கள் பதினொன்றும், எழுத்து

மூன்றும் புவனம் பதினெட்டும், தத்துவ மூன்றும் அமைதிக்குளடங்கும். இதற்குத் தலைவர் பெருமுதல்வர். எஞ்சிய மந்திர மூன்றும், பதம் ஒன்றும், எழுத்துப் பதினு லும், புவனம் பதினைந்தும், தத்துவ மிரண்டும் அமைதி மேற் கலையுளடங்கும். அதற்குத் தலைவர் அருட்சிவனார். மந்திரம் ஐம்முக ஆறாறப்பு, பதம் எண்பத்தொன்று, எழுத்து ஐம்பத்தொன்று, புவனம் இருநூற்றிருபத்துநாலு, முதல்கள் முப்பத்தாறு, கலை ஐந்து எனத் தொகை கண்டு கொள்க. அத்துவ சுத்தியின் இன்றியமையாமை யாதெ னின், அத்துவாக்கள் வினைகட்கு ஆதாரமாயுள்ளன; அவற் றைச் சுத்தி செய்தலாற் பிறவியறுமென்க. மனமொழி மெய் களால் உயிர்கள் இயற்றி ஈட்டும் வினைகட்குப் பற்றுக்கோடா யுள்ள ஆறுவழிகளிலே, அவ்வினைகள் நுகர்தற்குரிய தகுதி வந்தபோது நுகர்வித்தொழித்து, இருண் மலத்தை முதிர் வித்துச் சிவஞானம் பெறுதற்குரிய அரியநிலை அடைந்த போது, இறைவன், ஆசிரியனாய்த் தோன்றித் தனது செய லாற்றலால் மாயைப் படைப்பாய ஆறுவழிக் கட்டுகளிலுள்ள எஞ்சிய வினைகளைத் தீர்த்துக் கட்டுக்களைத் தொலைத்து, ஊழ்வினை எடுத்த வுடம்பால் நுகரவைத்து, ஞானத்தால் அறியாமைக் கட்டையும் அதன் சார்பாய் நிகழும் ஆகாமிய மலத்தையு மொழிப்பன்.

## இரண்டாம் அதிகரணம்

புறச்சமய நெறிகளில் ஒழுகியபின் அகச்சமயம் புகுந்து ஒழுக்க நூல் கூறுகின்ற வழியில் நின்று, கல்வி நிலை, இல்லற முதலிய அறத்துறைகளிற் பயின்று செயற்கரிய பல தவங்களியற்றிக் கலைகள் பல கற்று, அறிவு நூல்களை யோதி, இறைவனருள் பெற்ற அன்பர் வரலாறுகளை

புணர்ந்து, ஞான நூன் முடிவுகளை யாய்ந்து தெரிந்து மேற் சென்றுற் சைவசித்தாந்த நெறியினை, மக்கள் தலைப்படுவர். அதனையடைந்து சார்பு, செபல், ஒருமை, என்னுஞ் செந் நெறிகளில் ஒழுகிப் பின் இறைவன் நல்குகின்ற பேரறிவால் அவனது திருவடியைச் சேர்வார்கள்.

உலகத்திலே பலசமயத்தாரும் பலவகை வீட்டின்ப மெடுத்துப்பேசுவர். இம்மைக்கண் பதினாறாண்டெய்திய அழகுமிக்க மகளிரை மணத்தலே முத்தியென்றும், விண் ணுலகபோகமே முத்தியென்றும், ஐவகைக் கந்தங்கள் கெடு தலே முத்தியென்றும், எண்குணமடைதலே முத்தியென்றும் உயிரின் வேறாக உலகத்தைப் பிரித்தறிதலே முத்தியென் றும், தன்னையறிவதே முத்தியென்றும், சிவவடிவம் பெறு தலே முத்தியென்றுங்கூறுப. சித்தாந்த சைவத்திற்கூறும் வீடாவது எல்லாப் பதங்களையுங் கடந்த சிவபெருமா னது திருவடியை அடைவதாகிய பேரின்பமே என் றறிக.

உலகத்திலே பேசப்படுஞ் சமயங்களும் அவற்றின் கொள்கைகளை புணர்த்தும் நூல்களும் ஒன்றோடொன்று மாறுபட்டனவாயுள்ளன. இவற்றுட் சிறந்த சமயம் யாது? சிறந்த நூல் யாது? எனவினவின், இது ஆகும், அது ஆகாது என்னும் பிணக்கில்லாமல், எல்லாக் கொள்கையும் தத்தமக் குரிய இடத்தில் முறையாகத் தன்னகத்தே நிற்கப்பெற் றிலங்குவது எச்சமயம், அச்சமயமே சமயம். அச்சமயக் கொள்கைகளைக்கூறும் நூலே மெய்ந்நூல். இச்சமயக் கொள்கைகள் யாவும், மறை, அறிவனூல் என்ற பொதுச் சிறப்பாய நூல்களுளடங்கி நிற்பன. அந்நூலிருவகையும்

இறைவனது அறிவு, சொல் என்னுமாற்றல்களாகிய இரண்டு திருவாக்கிலடங்கும்.

அம்முதனூல்கள் எல்லாவற்றையுங் கூறுதலினாலே அவற்றின் பொருளையளந்தறிதல் அரிது. பக்குவம் எய்திய உயிர்கள் அவற்றின் பொருளைத் திருவருளால் தாமறிந்த அளவு தத்தங்கொள்கைகட்கேற்ற வினாவிடையோடு பிறர்க்குரைப்பர்.

ஒழுக்கநூல், அன்பர் சரிதையாய புராணம், சாத்திரங்கள், உபாகமங்கள் முதலியன அவற்றின் வழி நூல்கள். ஆறங்கமுதலியன சார்பு நூல்கள். இவையெல்லாம் முதனூற் கருத்திற்கு வேறாகப் புதிதாகப் பகரக்கிடப்பது யாதுமில்லை. இதனை யாய்ந்துணராதார்க்கு உண்மை தெரிவிக்கும் வகையிலது.

முதனூல்கள் மறைகளெனவும், சிவநூலெனவும் இரு வகைப்படும். பிறநூல்களெல்லாம் இவற்றின் பொருளை விரித்துணர்த்தும் நூல்களாம். இவைகளே ஆதிநூல்கள். இவை அநாதியாகிய முதல்வனால் அடியார்க்கு அருளப் பெற்ற நூல்கள். மறை பொது நூலாகும். சிவநூல் அருமை மிகுந்த சிறப்பு நூலாகும். பொது நூலானது உலகர்பொருட்டு உரைக்கப்பட்டது. சிவநூல் திருவருள் வீழ்ச்சியுடையார் பொருட்டியற்றப் பெற்றது. மறைநூலுள் நுட்பமாய்க்கிடக்கும் பொருளையும் அதன் முடிவிலுள்ள குற்றமற்ற கருத்துக்களையும் விளக்குநூல் சிவநூல். பிற நூல்கள் சிவநூலுக்கு எதிரான பூர்வபக்க நூல்களாகும். சிவநூல்களே சித்தாந்த நூல்களாம்.

சிவபெருமான் ஆசிரியனாய் எழுந்தருளித் திருவருட் பார்வை நல்கிப் பிறப்பு ஒன்றிலேயே உயிர்களின் மும்மல

அழுக்கை நீக்கி, ஞானக்கடலில் மூழ்குவித்துப் பேரின்பம் பொழிந்து மேல்வரும் பிறப்பை யறுத்து ஈண்டே வீட்டின்ப நுகர்ச்சியாக்கி முடிந்த நிலையாய திருவருட் பேற்றினைத் தந்தருளுவனென சித்தாந்த நூலிலே பெரியோர் உறுதி கூறியிருப்பவும் அதனை உற்றுநோக்கி உறுபயன் கொள்ளாது, உலகரெல்லாம் மூர்க்கத்தன்மையராய்ப் பித்து மிஞ்சிப் பேசும் பிதற்றுரைகளை கூறிப் பாவமாகிய பெருங்குழியில் வீழ்ந்திடுவர். இதுஎன்ன மயக்கமே!

எல்லா அறிவும் எல்லா முதன்மையும் எல்லா அருட்செயலும் இயல்பாகவுடையவனே இறைவனாவான். மறைகளாலும் சிவநூல்களாலும் சிவபெருமானது முற்றறிவு விளங்கும். நூல்வழி நிற்போர்க்கும் நில்லாதோர்க்கும் அவரவர் வினைக்குத் தக்கவாறு இன்ப துன்பமாகிய பயன்களைக் கொடுத்தலால் அவனது முதன்மை விளங்கும். இருவினைப் பயன்களை நுகர்வித்துப் பாசமறுத்து வீடுநல்கும் பேரருட் செயலினாலே அவனது பேரருளுடைமை விளங்கும். ஆதலால் சிவபெருமானே நமது தலைவன்.

சிவ பெருமானை யடையும் வழிகள் நால்வகைப்படும். பணிநெறி (தாதமார்க்கம்), புதல்வநெறி (புத்திர மார்க்கம்), நட்புநெறி (சகமார்க்கம்) காதல்நெறி (சன்மார்க்கம்) அல்லது நன்னெறி என்பன அவை. அவற்றிற்குப்பயன் இறைவனுலகிலிருத்தல், அவனுடனிருத்தல், அவன் வடிவம்பெறல், அவனோடு இரண்டறக்கலத்தல். அவற்றுள் முதல் மூன்றும் பதமுத்தி; நாலாவது பரமுத்தி.

சிவபெருமான் திருக்கோயிலில் திருமெழுக்குச் செய்து; திருவலகிட்டு, மலர்கொய்து, மாலை, கண்ணி முதலியன தொடுத்துச் சாத்தி இறைவனைப் புகழ்ந்துபாடித் திரு

விளக்கிட்டுப் பூங்காவுகள் வைத்துப் பேணித் திருவேடத் தாரைக் கண்டால் அவர்கள் விரும்பும் பணியை யியற்றி முதல்வனையும் அடியாரையும் வழிபடுதல் சரியைத் தொண் டாகும். இவ்வாறு முதல்வன் திருவுள்ளத்திற்கு உவப்பாய பணிகள் இயற்றலே பணிநெறியாகும். இந் நெறிநிற்பார் சிவனுலகத்தே வீற்றிருக்கப்பெறுவர்.

நாண்மலர், நறும்புகை, நல்விளக்கு, திருமஞ்சன முத லிய பூசனைப்பொருளைத்தேடி யமைத்துக்கொண்டு, ஐவகைச் சுத்திசெய்து, இறைவனுக்கு இடம், வடிவு, வடிவுமுதல் என்பன நினைந்து ஏற்படுத்தி அன்பினால் மலர்தூவிப் போற்றி அழலோம்பி, நாடோறு முதல்வனை வழிபடுவது புதல்வநெறியாகும். இந்நெறி நிற்போர், இறைவனரு கிருக்கும் பதவி பெறுவர்.

ஐம்பொறிகளைப் புலன்வழிச் செல்லாது தடுத்து இரு வகை மூச்சையுமடக்கி, முக்கோணம், நாற்கோண முதலிய வடிவங்களை யுடைய மூலாதார முதலிய ஆறு ஆதாரங்களின் முறைமையை யறிந்து அவற்றிற்குத் தலைவராகிய கடவு ளரை முறையாக நினைந்து பிரமரந்திரமென்னும் தலை நடு முடிவை யெய்தி, அதன்கணுள்ள தாமரைமொட்டை அலர் வித்து அங்கு விளங்கு மதிமண்டலத்தினை இளகப்பண்ணி அதன்கண்உள்ள அமுதத்தை உடல்முழுவதும் நிரப்பி முழுச்சோதியாகிய இறைவன் வடிவை இடைவிடாது நினைந் திருப்பதே யோகவழியாய நட்புநெறியாகும். அட்டாங்க யோக மியற்றி இறைவனை இவ்வாறு வழிபடுபவர் அவனது திருவுருவத்தை அடைவர்.

பல்வகைக் கலைகள், புராணங்கள், மறைகள், நூல்கள், சமய முறைகள், கொள்கைகளெல்லாவற்றையு மாராய்ந்து

கழித்து, முப்பொருளின் உண்மை யிலக்கணத்தைக் காட்ட வல்ல சிவஞானத்தை நாடி, அதனைப் பெற்று, அறிவு, அறிவோன், அறியும் பொருளென வேறுபடுத்துணராது சிவனொடிரண்டறக் கலந்து மெய்யன்பினால் அவனை வழிபடு வது நன்னெறியாகும். அந்நெறியின் பயன் பரமுத்தி யாகும்.

சிவஞான நூலினை ஓதுதல், அதனைப் பிறர்க்கு ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், கேட்ட பொருளை நினைதல் ஆகிய ஐந்தும் இறைவனது திருவடியை அடைவிக்கும் உயர்ந்த ஞான பூசையாகும். இதுவே ஞான வேள்வி யெனப்படும். குற்றமில்லாத எரியோம்புதல் முதலியன நல்வினையாகும். அது கன்ம வேள்வியெனப்படும். பொறி யடக்கம் தவவேள்வியாகும். உருவெண்ணுதல் செபவேள்வி. திருவடியை நினைத்தல் தியான வேள்வி. இவை ஒன்றாக் கொன்று உயர்வானவை. ஞான வேள்வியே பிற யாவற்றி னுஞ் சிறந்தது. வீடெய்த விரும்புவோர் ஞானத்தா லிறைவனை வழுத்துவர். நூலின் சார்பாக, கேட்டல், சிந்தித்தல் என்பன நிகழும். அவற்றிற்குமேல் தெளிதலும் நிட்டை கூடுதலும் ஆம். இவை நான்கும் நால்வகை ஞான நெறியாகும். நிட்டை கைவந்தோர் பிறவாது வீடெய்துவர். இந்நிலையில் நிற்கும் ஏனையோர் மேலான பதமுத்தியைப் பெறுவர். அவர் மீண்டும் உலகில் நற்சார்பில் வந்துதித்து அறிவனால் மெய்யுணர்வு பெற்று நிட்டை கூடி வீடெய்துவர். கொடை, வேள்வி, புனிதநீர்முழுக்கு, நால்வகை ஒழுக்க நிலை, தவம், புண்ணியச் சடங்குகள், நோன்புகள், நல்வினை கள், யோக முறைகள் இவற்றைப் பயின்றோர், விண்ணுல கெலாம் பெற்றுப் பயன் நுகர்ந்தபின், மீண்டு மிவ்வுலகிற்

பிறப்பர். இறைவனது சார்பு செயல் ஒருமை நெறிகளில் நின்றோர் பத முத்திகளைப் பெற்று உலகமொடுங்கும்போது இறைவன் முன்னின்று ஞானத்தை நல்காணுபின், மீட்டும் பிறந்து ஞான நெறியடைந்தே வீடெய்துவர். இறைவன் ஆண்டே முன்னிற்பின், பிறவாதே ஞானம் பெற்று வீடடைவர்.

சிவஞான நெறி நிற்பார் கையிற் கொடுக்குங் கொடையானது எள்ளளவேயானாலும், நிலமும்மலையும்போல அது விளங்குவதோடு, பிறவிக் கடலில் அழுந்தாவண்ணம் உய்வித்து மேலான இன்பங்களை நுகர்வித்துக் கட்டறுப்பதற்குரிய நற்றவப் பிறப்பிற் சாரும்படி செய்து, சார்பு, செயல், ஒருமையின் மேற்பட்ட புதுமை மாறாதமெய்யுணர்வினைக் கொடுத்து, இறைவன் திருவடித் தாமரைகளை நணுகுவிக்கும்.

மறைகள், புராணங்கள், சிவநூல்களெல்லாம், ஞானம் பெறாது வீடடைதல் இல்லையென அறுதியிட்டு உரைப்பதால், அக்கருத்திற்கு மாறாக யாதுங்கூறுபவர் பயனல்லன வற்றைக் கூறுபவராவர். அறியாமையால் நேரிடுவதுகட்டு; அக்கட்டை நீக்குவது மெய்யுணர்வே. பகலவன் முன்இருள் போல, அறியாமை நீங்கவே கட்டு அற்றொழியும். பிறநெறியினர் கூறும் ஞானவகைகள் பாச பசுஞானங்களாதலின், வீடெய்துவிக்க மாட்டா. முதல்வன் திருவடி ஞானமொன்றே கட்டு நீங்குவதற்கேதுவாய ஞானமென்றறிக.

சூரியகாந்தக் கல்லிடத்தே கதிரவனது செவ்வொளி பொருந்தியவுடன் நெருப்பு எழுவதுபோல, உயர்ந்த அறிவனாகிய ஆசான் மெய்யுணர்வு அளித்தற்பொருட்டு, உயிர்க்குத் தோன்றிய காலத்தே, அவ்வுயிர்க்கு அவன் அறிவுரை கேட்குமறிவு விளங்கித் தோன்றும். தோன்றவே, சிவ

பெருமானது மெய்ந்நிலை பொதுவாகத்தோன்றும். அவன் உயிர்க்குயிராய் நிற்றலின், உயிராகிய தனது மெய்ந்நிலையுந் தோன்றும். அவன் அண்டத்திற் கண்டமாய் அணுவுக்கு அணுவாய் எங்கும் நிறைந்தவனாதலின், அவன் கலந்து நிற்கு முலகமுந் தோன்றும். இப்பொதுத் தோற்றம், கேட்டல் ஞானத்தின் அனுபவமென்ப.

உயர்ந்த தகுதியெய்தி நாலாவதாய அருட்பதிவுடை யார் கேட்டலறிவுபெற்று அது முதிர்ந்தவுடன், குருவின் அருளால் அறிந்ததை நினைவில் வைத்து நிட்டைகூட விழைந்து உலகத்திலே யாவரும் புகழ்கின்ற உடல் முத்தி யுறுவர். மேலும் அவர் விருப்பு வெறுப்பின்றி ஓடுஞ்செம் பொன்னு மொக்கவே நோக்குபவராய் முதல்வனோடொன்றி யிருப்பர். அவர்கள் அவனைச் சுட்டற்ற நிலையிலே பற்றியும் அவன் இவரோடு அத்துவிதமாய்க் கலந்தும் நிற்றலால், அவர்கள் தன்னுணர்ச்சி கெட்டுச் சிவத்தோற்றமே நுகர்வர். இது சிந்தித்தலின் பயன்.

திருவருளினாலே அறியாமை, சுட்டறிவு என்னுங் கட்டு களின் நீங்கி, அறிவின் கண்ணே யாவற்றையு மறிவித்து நிற்கு முதல்வனைச் சுட்டிறந்த முறையிலறிந்து அவ்வறிவின் கண்ணே அழுத்தமுற்று அகக்கருவிகளோடு கூடாமல்,உறுதி யாக அன்பு செய்திருப்பின், அப்படிச் செய்வார்க்குத் தம் மோடும் உலகோடும் பிரியாது நின்றபெருமான், அவற்றோடு ஒன்றியும் ஒன்றாது நிற்கும் தனது தனிநிலையினியல்பு விளங்கும்படி தோன்றுவனென அறிக. இது தெளிதலின் அனுபவப் பயன்.

புண்ணியமானது மேல்நிலைக்குச் சென்று இன்பம் பெறுதற்கேதுவாகும். பாவமானது கீழ்நிலை நின்று துன்ப

முறுதற்கேதுவாகும். புண்ணிய முதல்வனாகிய கடவுளை ஞானநெறியிற் பூசித்த நற்றவத்தின் பயனாகப்பெற்ற ஞானத் தெளிவுணர்ச்சியினால் இருவினையின் நீங்கி மூவுலகின் தொடர்பு அற்று இவ்வுலகத்தின் கண்ணேயே வீட்டின்பம் பெறுகின்ற ஞானி, கதிரவன் எத்திசையிலுதித்தாலுங் கவலையில்லை யென்ற நிலையுடையனாய், இறைவனது பூரண நிறைவிற் கலந்து, உடம்பு நீங்கியபோது எங்கணும் நிறைந்த அறிவொடு இறைவன்போல் நிற்பன் என அறிக.

இவ்வுலகத்திலே ஞானநிட்டை பெற்றவர்க்கு நன்மை, தீமை, உலகநாட்டம், சமயநியமம், தவம், நோன்பு, ஒழுக்கநிலை, நினைவு மறப்பு, மனமயக்கம், வேடம், புலன்களின் தொடர்பு, அக்கருவித் தொடர்பு, குணம், குறி, குலம் என்னுமிவை யாவுமில்லனவாயொழியும். அவர், பிள்ளைகள், பேயர், பித்தர் போன்ற இயல்புடையராய் ஆடல்பாடல் முதலியன இயற்றினும் இயற்றுவர்.

அவர், நாடு, ஊர், காலம், திசை, இருக்கை முதலியவற்றைக்கருதாது செயற்கரியசெயலை எளிதாகச்செய்து மனக் கலக்க மிலராவர். உலாவுதல், நிற்றல், உறக்கம், விழிப்பு, உணவுகோடல், உண்ணாமை, இருத்தல், கிடத்தல், அழுக்குடைமை, தூய்மையுடைமை, வறுமை, செல்வம், துன்பம் இன்பம், புணர்ப்பு, வெகுளி, இவைகளை யெல்லாம் அடைந்தாலும், இவற்றால் யாதொரு திரிபுமுறாது இறைவனது திருவடியை விட்டகலமாட்டார். இறைவனது நிறைவில் அடங்கி நிற்றலாகிய நிட்டையிலே அரிதாய், உலகம் தோன்றுவதற்கேதுவாய சுட்டுணர்வு தோன்றின், இறைவன் எல்லா இடத்திலும், எப்பொருளும் இறைவனிடத்திலும் பொருந்தி நின்ற நிலையை யறிந்து அந்தக்கரணங்களை அடக்கிக் கருவி

னருளால் உள்ளத்தின்கண் ஓரிடத்தை நினைந்து, அதன்கண் இறைவனோடு கலப்புற்று, அக்கலப்பினாலே உயிரின் கருவிகள் சிவமயமாயிருக்கப்பெற்று நனவிலேயே உயர்ந்த மேனிலையை (சாக்கிராதீதத்தை) க்கூடமுயலுக. அப்பொழுது சிவநுகர்ச்சி சித்திக்கும்.

நனவிலேயே அத்தகைய மேனிலை நிற்போர் எல்லாத் தொடர்பும்விட்ட பெருந்தவத்தினராவர். இவர்களது அரும் பெறல் நிலையை என்னென்று சொல்வது; இம்மையிலேயே பற்றற்றுச் சிவத்தோடு கலந்து நிற்பவராதலின், அவர் பிறர் வணங்குதற் குரிய சிவமேயாவர். அவர் அரசாட்சி செய்யினும், மகளிரோடு இன்புற்றுவதியினும், அகப்பற்று நீங்கின வரேயாவர். இவ்வதீத நிலையில் நில்லாதவர் புறப்பற்றொழித் தாலும், அகப்பற் றொழித்தவராகமாட்டார். ஆகாமையின் அவர்கள் வினையுடையராய்ப் பிறப்பிற்புகுதல் கூடும்.

## மூன்றும் அதிகரணம்

கருவிகள் நீங்கப்பெற்றார் அகக்கருவி புறக்கருவிகளின் துணையொழிதலின் ஒன்றையும் அறியமுடியாதெனில், இறைவனைக்காணாதார் அவைகள் நீங்கிய அளவில் ஒன்றையுங் காணார். ஆனால் இறைவனைக் கண்டவர்கள், இறைஞானத்தின் உதவிகொண்டு எல்லாவற்றையு மறிவார்கள். இறைஞானம் எத்தகையதெனில் அது அநுபவமுடையோர்க்கே விளங்கும். அதனைப் பிறர் அறியாமை, கன்னி காமவின்ப மறியாமைபோலும். மணந்தவர் இருவர் புணர்ந்தெய்திய இன்பம் வாயினாற் சொல்லமுடியாது. நுகர்ந்தவரேயறிவர். உடம்பு முதலியகருவிகள் கொண்டு பொருள்களை உணர்பவர், அக்கருவிகளால் உயிரின் மெய்த்தன்மை யறியவல்ல ரல்லர்.

அவர்கள் உயிர்க்குயிராய சிவனை எவ்வாறுணர்வர். அவர் உணர்ந்திலாதாரே. அவர் உணர்ந்ததாகக் கூறுவது கற்பனையே. உயிரையும் முதல்வனையும் திருவருள் பெற்றவரே சுட்டிறந்தறிதல்கூடும். அங்ஙனமறியாரேல், பிறப்பு நீங்காது. ஆணவமும் அறாது.

## நான்காம் அதிகரணம்

தன்னை யடுத்த பல நிறங்களையும் காட்டும் பளிங்கு போல, உயிரானது தான் சார்ந்த பல புலன்களின் தன்மையைக் காட்டுமியல்பினை ஆய்ந்தறிந்து, இத்தன்மைகள் தனது உண்மையான இயல்பு அல்லவென்றறிந்து அவற்றைக் கழித்து, தனது சிறப்புத்தன்மையை இறைவன் திருவருளாலறிந்து, பொய்யு மெய்யுமுணர்ந்தகாலை, அவ்வுயிர் தன்கண்ணேயுள்ள சிவத்தினோடும் பொருந்தி நிற்கும். மீட்டும் ஐம்புலன்களின்பால் அது செல்லாது. அது முன்னே ஓரளவிற்செல்லும் ஆற்று நீரானது, அளவுகடந்த கடலோடு கலந்து அதன் தன்மையெய்தியபின், மீளஆற்று நீராகாமை போலாம் என்க.

உயிர், உடம்பு, கரணம் முதலிய எல்லாவற்றிலும் சிவமே தெளிவாகக்கலந்து விளங்குமென்னில், நாம் அவனைத் தேடி அடையவேண்டியதில்லை. எல்லாவற்றிலுங் கலவாது வேறாய் இறைவன் நிற்பன் என்னில், எல்லாவற்றையுஞ் செலுத்துவதாகிய இறைமை அவனுக்கு இல்லையென்பது முடியும். உடம்பிலுயிர்போல இறைவன் உயிர்க்குயிராய் நிற்பன். உடம்பிலே கண் பொருள்களைக் காண்பதுபோலப் பிறஉறுப்புக்கள் பொருளைக் காணமாட்டா. உயிரானது இந் நூலுட்கூறிய தத்துவங்களின் வைத்தறிவது; தத்துவங்கள்

ஒன்றையுந் தாமாக அறியா. கருவிவாயிலாகப் பொருள்களை யறியும்வரை உயிர் இறைவனையும் தன்னையுங் காணுமையாற் குருடுபோல்வது. உயிர் இறைஞானம் பெற்றபோது அது ஒளி பெற்ற கண்போல்வது. படலம் நீங்கப்பெற்று ஒளியெய்திய கண்ணானது தன்னொளியையும் தன்னோடு கலந்துள்ள உயிரறிவையும் பெற்றாற்போல், உயிர் தன்னையும் தன் அறிவினூடே அகண்டமாய் விளங்கு முதல்வனையும் பெறும்.

பாசிநிறைந்த பொய்கையிற் கல்லினைவிட்டெறிந்தால், அதுபட்டபோது நீங்கி, விட்டபொழுது பரந்து நீரை மூடிக்கொள்ளும். குற்றமுள்ள ஆணவம், கன்மம், மாயை என்பனயாவும், இறைவனது திருவடியை உணரும்போது நீங்கும், உணராதபோது அணுகும். அன்போடு முதல்வன் திருவடியினைப் பிரியாது, அதீதநிலையில் நிற்கமுயல்வோர் அந்நிலையிற் பொருந்திக் கலங்காது நின்றிடுவர். உலகப் பற்றுக்காரணமாகக் கருவிகளினும் சிவத்தினுமாக அங்குமிங்கு மலைகின்றவர்கள் பாசத்தை அறவே அறுக்கு முறையை மேற்கூறுதும்.

## ஒன்பதாஞ் சூத்திரம்

உலகறிவாலும் உயிரறிவாலும் அறியக்கூடாத கடவுளை அவன் அருளேஞ் சிவஞானத்தாலே அறிவின்கண் வைத்தாராய்ந்து, அவன் திருவடி நிழலை நீங்காது மாற்றம் இன்றி நிற்கப்பெறுதபொழுது, ஆசைதரும் உலகம் தோன்றும். அதுகானற்றேர்போல நிலையா இயல்பிற்றெனக்கண்டு கழிக்க வேண்டும். அப்போது தான்பற்றிய உயர்நிலையை மீளவும் எய்தலாம். உலக நிலையாமை உணர்வதுடன், மெய்யுணர்வு நல்குந் திருவைந்தெழுத்தை முறையாக நினைந்தெண்ணுக.

அப்போது இறைவன் உள்ளத்தே தபுகுந்து வாசனுமலம் நீங்கும்படி அருள்செய்வன்.

## முதல் அதிகரணம்

உலகறிவென்பது நால்வகைச் சொற்களும் அவற்றினடியாய்ப் பிறந்த அறிவு நூல், ஒழுக்க நூல், வரலாற்று நூல், கலை ஞானங்கள் முதலியனவும் பற்றிய அறிவும், மூச்சு மந்திரமாகிய அசபையைப் பற்றிய அறிவும், நாத முதல் நிலமீருகவுள்ள தத்துவக் கூட்டத்தைப் பற்றிய அறிவுமாம். இவைகளெல்லாம் உயிர்க்குக் கீழ்ப்பட்டன வென்றறிந்து உயிரின் பெருமையுணர்தல், பசு ஞானமாய உயிரறிவு எனப்படும். இவ்வுணர்ச்சியை மாத்திரம் கருதி நான் பிரமமென்றெழுவது தவறு; எனெனில், உயிர் பிரமமல்ல; உயிர் உடலிற் கட்டுண்டு அறிவிக்க அறிந்து ஐம்பொறிகள் வாயிலாகப் பொருள்களை ஒவ்வொன்ருயுணரும். பிரமமாகிய சிவம் தானே யாவற்றையு மொருங்கே யுணரும் முற்றறிவுடையது என அறிக. கரணங்கள் கெட்டொழிவதே முத்தியென்ருல், அவை கிளைத்துத் தோன்ருக் காலத்து உயிர் முத்தியடைந்ததாகவேண்டும். முட்டையினும், கருப்பையினும், மரத்தினும், வியர்வை தோன்றும் நமது உறுப்பினும் உயிர் பொருந்தியிருக்குங் காலே, உயிர்கள் முத்தியுற்றதாதல் வேண்டும்.

உச்சிப்போதில் ஒருவனது நிழலானது அவனதடியின் கீழடங்கி நிற்றல் போலப் பொருள்களிற் பற்று விட்டுத் தன் கண் ஒன்றி நிற்கும் சமாதியே முத்தியென்னில், மரணம், உறக்கம், மயக்கம், உயிர்ப்படக்கம், காற்று நிறுத்தம் (வாயுத்தம்பனை,) நஞ்சுணவு கோடல் முதலியன நேர்ந்தவிடத்தும், முத்தியுறுதல்வேண்டும். அவை முத்தி நிலை

யாகாமையின், கரணக்கேடு, தற்சமாதியென்பன வீடாகா. அவையாவும் பசுஞானப் பயனேயாம். மலத்தோடு கூடிய நிலைகளே அவைகள். முப்புரமெரித்த முதல்வன் திருவடியைச் சுட்டிறந்த அறிவாற் பற்றி, உயிரைப் பற்றிய மிகுந்த இருண்மல அழுக்கைத் தொலைப்பாயாக.

அங்ஙனம் முதல்வனைப் பற்றி நில்லாவிடத்து மலம் நீங்காது. தனது மெய்யியல்பை உயிர் அறிவது திருவடி ஞானத்தாலாதலின், அது கலவாத சமாதியாற் பயனில்லை. உயிரின் நினைவும் சொல்லும் உடல் முயற்சியும் என்றும் எட்டாத நிலையினன் இறைவன் ஆதலாலும், திருவடியென் பது மாசற்ற முற்றறிவாதலானும், தோல், உதிரம், தசை, மேதை, எலும்பு, மச்சை, வெண்ணீர் என்பவற்றுள் யான் யாதோ, அல்லது ஐம்பொறிக் கூட்டமோ யான்? என்ற ஐயப்பாட்டையொழித்து உயிர்க்கு அதனியல்பையும் தன்னை யுங் காட்டுவது திருவடி ஞானமாதலாலும், அத்தகைய அறிவாற் சிவனை அடைக எனப் பேரறிஞர் கூறுவாராயினர்.

பொருள்களைக் கண்டிடுங் கண்ணானது தன்னியல்பை யறியாது; தனக்கு முதலாயுள்ள அகக்கருவிகளையுமறியாது. அகக்கருவிகளும் தம்மையறியமாட்டா, தம்மைச் செலுத்து முயிரையுமறியமாட்டா. உயிர்தானும் தன்னையுமறியாது, தன் உயிராயுள்ள கடவுளையும் அறியாது. சிவபெருமான் இயற்கையிலே எல்லாவற்றையுமறிந்து உயிரறிவின் கண்ணே நின்று தன்னைக் காட்டி, தன்னுளடங்கி நிற்கும் உயிரையுங் காட்டிக் கரணங்களின் உதவி வேண்டாது நிற்பன் ஆதலின், அவனை உயிரின் கண்ணே கண்டு அவனது பேரறிவைத் தலைப்படின், பாசம் நீங்கும். வாசனையாற் பாசம் பற்று

மாயின், அவனது திருவடியில் இடைவிடாது அறிவை நிறுத்துக.

## இரண்டாம் அதிகரணம்

இறைவன் திருவடியிற் குடிகொண்டு உறுதியாய் நின்று, சமண் முதலியோர் கூறும் எண்குணம், எண் பெருஞ்சித்தி, அயன் பதவி முதலிய விண் பதவிகளையெல்லாம் வெறுத்து, அறுவகை வழிகளோடு தொடர்புற்ற மேலாகவும் கீழாகவு முள்ள நெறிகளெல்லாம் நிலையாதனவென ஒதுக்கி, இறைவனையே நினைந்திருந்தால், மேல், கீழ் என்று வரையறுக்கப் படாத் தன்மையனும், யாதொரு பற்றுமிலனும், தான் அறிவித்தாலன்றிப் பிறர் தன்னை யறியாப் பெற்றியனுமுள்ள பெருமான், நேராக அறிவின் கண்ணே தோன்றி அளவற்ற பேரன்பு மீதூரும்படி செய்து அதன் வழியாக உட்புகுந்து எங்கும் நிறைந்த பேரின்பத்தை நல்குவன்.

## மூன்றும் அதிகரணம்

காணப்பட்ட பொருள்களனைத்தும் நான் அல்லேன் என்று உலகப் பொருள்களின் விலகி, காணப்படாத பரம் பொருளும் நான் அல்லேனென உணர்ந்து, அப் பரம் பொருள் தன்னிற் கலந்திருப்பதை உருகிப் பணிந்த உளத் தொடு கண்டு, அக்கலப்புக் காரணமாகத் தன்னை அவனாகப் பாவித்த இடத்தே, அவன் தன்னின் வேறாகாது தோன்று வன். கருட பாவனையால் விடம் நீங்குவதுபோல, இப் பாவனையால் மலம் அகலும்; புனிதமுண்டாம். ஆதலின், இப் பாவகத்தைத் தான் பாவிக்கும்படி பண்டை மறைகள் விதித்ததுமென வுணர்க.

திருவைந் தெழுத்தாராய்ச்சியால் சிவன் ஆண்டவனாக வும், உயிர் அவனது உடைமையாகவும் நிற்கு நிலையையும்

அஞ்செழுத்து அவன் திருவடிவமாயமைந்திருப்பதையு மறிந்து அஞ்செழுத்தால் உடலுறுதல், கைதொடுதல் என்னுமுறைகளைச் செய்து அஞ்செழுத்தால் அகமலரின் கண்ணே இறைவனை வழிபட்டு, குண்டலியிருக்கும் உந்தியில் அஞ்செழுத்தால் வேள்வி இயற்றி யோகத்தாலன்றி யணைதற்கரிய புருவ நடுவில் சிவனை நினைந்து அஞ்செழுத்தை வீடடைவார் எண்ணவேண்டிய முறைப்படி எண்ணுக, அப்போது ஞாயிறு திங்களைக் கவர்ந்த பாம்புகளைப்போல் உயிரின் கண் முதல்வன் தோன்றுவன். உட்பூசை முறையாவது, இதயத்தாமரை, உந்தியில் நின்று மேலெழுந்த எண் விரலளவு நீள்முள்ள தண்டினையுடையதாகவும், அத்தண்டின் அடி நிலமுதலாகவும், எஞ்சிய பகுதி இருபத்து மூன்று முதலாகவும், தூய்தன் மாயை முதலாகக் கீழ்ப்பட்ட முதல்கள் எழும், தூய புலமான சுத்த தத்துவமும் தாமரையின் எட்டிதழ்களாகவும்; அவ்விதழ்களில் பிரணவம், வித்தெழுத்து, அஞ்செழுத்து உட்பட உள்ள எட்டு எழுத்துக்களை (ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம) யுடையதாகவும், அரசு முதலும் அருட்சிவ முதலும் தாமரைப் பூந் தாதுக்களாகவும், இவற்றிற்குள்ளாய பொகுட்டும் விதைகளும் விந்து நாத தத்துவங்களாகவும் அமைந்த தாமரை இருக்கையின் மீது சிவசத்தியை வடிவாகவும் சிவத்தை வடிவத் தலைவனாகவும் கருதி வழி படுதல் என்க.

---

இந்த உட்பூசையை வீட்டிற்குத் துணை செய்வதாகப் பெரியோர் பேசுவர். அது உயிர்ப் புனிதமாகிய ஆன்ம சத்தியாதலின், சந்தனம், மலர், நறும்புகை, விளக்கு, திருமஞ்சனம், திருவமுது முதலிய எல்லாம் மனத்தாற் பாவித்து அகத்தே சிவனை வழிபட்டு நினைக்க நினைக்கக்

கண்ணாடியை மாசுபோக விளக்கியவிடத்து ஒளி மிகுதல் போல," உயிரின் கண்ணே சிவம் மேவிட்டு விளங்கும். மலம் அற்றொழியும். உட் பூசை செய்வதுடன், அறிவு புறத்தே செல்லுதல்பற்றிப் புறப் பூசை செய்யவிரும்பின் மலர் மரங்களினின்றுதிர்ந்த பூக்களினாலே, ஞானத்தினால் உள்ளத்தே இறைவனைப் பூசித்த முறையே புறத்தேயும் ஒரு குறியின்கண் அவனை நினைந்து வழிபட்டு, அகம், புறம் என்ற வேறுபாடின்றி இறைபணி செய்து, இருவினைப் பயன்கள் தம்மை வாதித்தற்கிடமில்லையெனத் தேர்ந்து நிற்றலே மெய்யடியாரது செயலாகும்.

இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான் ஆதலால், அகத்தேயோ புறத்தேயோ வழிபடினும், விறகில் தீப்போலவும், பாலில் நெய் போலவும், பழத்திற் சுவை போலவும், எள்ளிலெண்ணெய் போலவும், முறையே சரியையாளர், கிரியையாளர், யோகிகள், ஞானிகளுக்கு, இறை அருள் புரிகின்றான். எனினும், அறிவின் கண்ணே திருவடி ஞானத்தால் அவனை வழி படுவார்க்கு இறைவன் நன்கு விளங்கித் தீயானது இரும்பைத் தன் வண்ணமாக்குதல் போல, அவர்களைத் தன் வண்ணமாக்கித் தன் விரிந்த பேரானந்த வடிவு முழுவதையும் அவர்கள் மாட்டுப் பதிய வைப்பன்.

## பத்தாஞ் சூத்திரம்

இறைவன் உயிரோடு கலந்து நின்ற முறைமைபோல, உயிரானது இறைவனோடு கலந்து நின்று ஒற்றுமைப்படவே யானெனதென்னுஞ் செருக்ககற்றும். அதனால், உயிரின் செய்தியைச் சிவன் தனது செய்தியாகவும், அவ்வுயிர்க்குச் செய்வதையெல்லாம், தனக்குச் செய்ததாகவும் ஏற்று,

உயிர் பிறப்பறும்படி நிற்பன். அதனால் அவ்வுயிர் பிறர்க்குச் செய்யும் நன்மை தீமைகள் பிறருடைய வினைப்பயன் நுகர்ச்சிக்குத் துணைக் காரணமாவதல்லது, அவ்வுயிரை வாதியா. இறைவன்பாலுள்ள அன்பு மேலீட்டினால் அவ்வுயிர் செய்யுஞ் செய்தி பிறர்க்குத் தீங்காகத்தோன்றினும், அதனை இறைவன் தனது பணியாய புண்ணியமாக்கிவிடுவன். ஆதலால் பிறவி வருதற்கேதுவாய வினைக்குற்றமும் ஆணவக் குற்றமு மகலும்.

## முதல் அதிகரணம்

யான் செய்தேன், பிறர் செய்தார், யான் என்னது, என்னுஞ் செருக்கு விளைதற்கேதுவாகிய பாசக் கோணலை அறிவுத் தீயால் வெதுப்பி நேராக்கி முதல்வன் திருவருள் வழியிற் செவ்விதாக உயிர் நிற்குமிடத்தே, முதல்வன் நேராக வெளிப்பட்டு அவ்வுயிர்க்குத் தன்னிலை விளக்கி முன் நிற்பன். அப்போது வினையானது ஒளித்தோடும். நான் செய்தேன் என்னும் உணர்ச்சியுடையோர்க்கு இறைவன் வினைநுகர்ச்சியைக் கொடுப்பன். அதனால் ஆகாமியம் ஏறும். கருவிகரணச் சார்பில்லாத சிவஞானம் உதித்தாலன்றி யான் எனதென்னுஞ் செருக்கொழியாது.

## இரண்டாம் அதிகரணம்

ஐம்பொறிகள் உயிரினைப் பற்றி நின்று உயிரின் வசமாக நில்லாமல், தம்முடைய வசமாக உயிரினை இழுப்பதற்குக் காரணம் அவற்றை இயக்கு முதல்வனது ஆணைவழி அவை நிற்றலே யாம் என்பதையுணர்ந்து, அவைகட்கும் தனக்கும் முதல்வனாய பெருமானது தாள்களைத் தொழுது; அவனது திருவருளாலே பொறிகளின் வலியைத் தொலைத்துத் துன்பமின்றி யிருத்தல் கூடும். அங்ஙனஞ் செய்தபோதும்

வழக்கத்தினால் பொறிகளின் செயல்கள் ஒரோ வழி நிகழு மாயின், அவற்றை இறைவன் செயலாகக் கருதி அவனது பணியில் வழுவாது ஒழுகின், வினைகள் மேற்பட்டிடா. ஆதலின், பொறிகளுக்கு ஆளாகிப் பாசத்தில் மீளாமை நேரும். சிவ ஞானத்தினாலே, தன்னை அடைந்த உயிர்களை இறைவன் தன்றன்மையராக்கி, அவர்கள் செய்யும் வினை காரணமாகப் பிறர் அவர்கட்குச் செய்யும் வினையின்பயன்களை நன்மையாக அவர்கள் நுகருமாறு செய்தொழித்து வினைப் பயன்கள் அவர்களை அணுகாதவாறு அருள் கூர்ந்து காத்திடு வன். உலகில் தமது செயலெல்லாம் இறைவன் கட்டளையே யென்றும் இறைவனே உள் நின்று செய்தும் செய்வித்தும் ஆட்கொள்வதால் தமக்கெனச் செயலில்லை, எல்லாம் இறைவன் செயலே என்றும் நினைவார்க்கு வினைகளெல்லாம் நீங்கி யொழியும்.

தவஞ் செய்வான், புண்ணியப்பகுதிகளுள்ள நாடுகளிற் புகுந்தும்; திரிந்தும், காடுகளிலலைந்து காய், கனி, சருகு களைத் தின்றும், மலைக் குகைகளிற் புகுந்து யோகத் தமர்ந் தும், பசி, நீர் வேட்கை முதலியன இல்லாது, நெடுங்காலம் உயிர் வாழப்பெற்றும், இறைவனது திருவடி ஞானம் பெறுத வர்கள், பிறப்பிற்கு மீள்வர். இறைவனோடு ஏகனாகி நிற்கும் ஞானம் பெற்றவர்கள், மங்கையரின்பத்தில் ஈடுபட்டு நிற்பி னும், பிறர் எய்துதற்கரிய வீட்டினைத் தலைப்பட்டுக் கூத்தப் பெருமானது திருவடியின்கீழ் வணங்கி வாழ்வர். அனலைக் கட்டவல்லாரை நெருப்புச் சுடாது; மருந்தாலும் மந்திரத் தாலும் உடம்பினை வலிதாக்கிக்கொண்டவர்கள் மேனிமீது நஞ்சு ஏறாது; அவற்றைப்போலப் பொறிகள் தம் வசமாகப் பெற்ற சிவஞானிகள் எவ்வினை செய்தாலும் வினைப்பயன்கள்

மேலைக்கு வித்தாக ஏறமாட்டா. முற் செய் வினைப் பயனானது, காயம்வைத்தெடுத்த கலன் வாசனை உடையதாயும் வனைதற்றொழில் முடிந்த குயவன் சக்கரம் வறிதே சுழல்வதாயுமிருப்பதுபோல, எடுத்த உடம்பினை வாசனையளவாகத் தாக்கிச் சத்தி கெட்டொழியும். எல்லா வகைப் பாசமும் எடுத்த உடம்போடு மாய்ந்தொழியும்.

## பதினொன்றாஞ் சூத்திரம்

காட்டினாற் காணுந் தன்மையுடைய கண்ணுக்கு உயிர் பொருள்களைக் காட்டித் தானுங் காணுமாறுபோல இறைவன் பொருள்களை உயிர்க்குக் காட்டுவான், தானும் அவற்றைக் காண்பன். இங்ஙனம் கண்டு காட்டும் பேருதவியை யாய்ந்தறிந்து இறைவனிடத்து மறவா அன்பு செய்தால் அப்படிச் செய்பவர்கள் காயம் நீங்கியபின் பெறுதற்குரிய வீட்டினைக் காயம் நீங்குமுன்னேயெய்தி இம்மையே யெல்லாப் பாசங் களுந் தொழியப் பெற்று மாறுத சிவ நுகர்ச்சியுடையோராய் சிவன் மலரடிக்கீழிருத்தல் கூடும். எல்லாவற்றினு மேலாகிய திருவடி ஞானத்தாலே சிவத்தைக்கண்டு அன்பு செய்யப் பெற்றோர் அச்சிவபரம்பொருளையே உணர்ந்து நிற்பர். வினையின் வாசனை தாக்குதற்குரிய பிற பொருள்களை அவர்கள் நோக்கார். பிற பொருள்களைப் பார்த்தற்கேதுவாகிய ஞானம், பலவகைப்பட்ட அளவை ஞானமாய்ச் சுட்டறிவின்பாற் படுமாதலின்; அது அஞ்ஞான வகையாகவே கருதப்படும். பேச்சையும் பேசப்படும் பொருளையும்பற்றிய அறிவு, நால்வகைச் சொற்களினடியாய்ப் பிறந்த ஐயஅறிவாகும். ஐயம் நீங்குதற்பொருட்டு அறிவிது, அறிவோனிவன், அறியப்படும் பொருளீதெனப் பகுத்தறியும் ஞானம் நினைவின்பாற்படும் பாவனை ஞானமே

யன்றி அனுபூதி ஞானம் அன்று. திருஞானம் என்பது இவற்றையெல்லாங் கடந்த சிவஞானம். உயிர் உள்ள போதே வீட்டினையும் பெரியோர், இறைவனையே நோக்கி யிருப்பர்.

உயிரானது, வினைக்கேற்பத் தொன்று தொட்டு அளவற்ற காலம், உடம்பெடுத்தும், விட்டும், திரிந்தும் வருதலால் அருள் பெறுமுன், உடல் நிலைபேறுடையதன்று; முதல்வனது அருளைப் பெற்றபின் அழியாத உடல்பெற்று உயிர் நிலவுமென்னில், அங்ஙனம் உடலோடு கூடிநிற்கும்நிலை பதமுத்தியேயாம், பரமுத்தி அன்று. உடலோடு கூடிய நிலை துன்பத்தொடு மிடைந்த நிலையேயாம்; உடம்புண்டானால் வினையுண்டு; வினையுண்டானால் ஆணவமலவாசனையுண்டு. மேலும் உடம்பானது மூலமலத்தை ஒழித்தற்குரிய மருந்து; மூலமலமொழியவே மருந்தாய உடலும் ஒழியும் ஆதலால் உருவத்தோடிருத்தல் முத்தியன்று.

அறிதற்கரிய சிவனடிப் பேரறிவைப்பெற்றபோதே சிவம் விளங்கும்; உயிர்க்கு வீட்டின்பம் உளதாம் எனினும் மூலமலமானது மருந்தினாற்றடைப்பட்ட விடம்போலவும், ஒளிமுன் இருள்போலவும் தேற்றாம்வித்தாற் றெளிக்கப்பட்ட நீருள் அடங்கிக்கிடக்கும் மாசுபோலவும், சத்திகெட்டு உடம்பு உள்ளவரையுளதாம்; உடம்பு ஒழியவே, தானும் கழிந்தொழியும்.

ஆணவமலமானது தொடக்கம் இல்லாதது, அது அழியுமாயின், உயிருமழியுமென்னில், செம்பிலேயுள்ள களிம்பு இரதகுளிகையால் நீங்கியபின் செம்பு பொன்னாய் விளங்குவதேயன்றிக் களிம்போடு கழிந்தொழிவதில்லை.

ஆதலால், அக்கொள்கை பொருந்துமாறில்லை. இனி; திருவடி ஞானம்பெற்று மலம் நீங்கித் தூயனாயிருத்தலேமுத்தி, திருவடியைப் பூணவேண்டியதில்லை யெனில், கதிரவ னொளியைக் கண்பொருந்தினாலன்றி அதற்கு இருள் நீங்காதவாறுபோல இறைவனடியில் உயிர்பொருந்தினாலன்றி மலம் நீங்காது எனஅறிக. (இறையடியிற்பொருந்தலாவது சுட்டிறந்த அறிவால் இறைவன்பால் அயரா அன்பு செய்த லாகும்)

நெல்லினுக்குத் தவிடு, உமி, முளைகள் கூடவே தோன்றி னாலும், அவைநீங்கியபின், அரிசி நிலைபெறுதல்போல, மும் மலமுநீங்கப்பெற்ற உயிர் நிலைபெறுமென்றறிக. தவிடு, உமி முதலியவைகள் அரிசியின் அடங்கி நிற்பதாகக் கருதுதல் தவறு. அவ்வரிசியில் நின்று நெல்தோன்றுதற்கிடமில்லை. தவிடுமிகள் மெல்ல மெல்லமுற்றினும் அரிசியினின்று நீங்கி யொழிதல்போல, உயிரினின்று மும்மலங்களும் முற் றிலும் நீங்கியொழியும். ஆனால், முத்தியடையாத உயிர்களை அவைகலந்து நிற்றலால், அவை நித்தப்பொருள் என்பதற்கு இழுக்கில்லை.

## முதல் அதிகரணம்

கட்டு நிலையினும் வீட்டு நிலையினும் இறைவனது திரு வடியின் சார்பில்லாது உயிர்கள் அறிவுஞ் செயலும் உடை யன அல்ல. எழுத்துக்களிலெல்லாம் அகரங்கலந்திருத்தல் போல, உயிர்கட்கு அறிவு செயல்கள் விளங்குதற் பொருட்டு முதல்வன் கலந்து நிற்பன். அவனலன்றி உயிர்கள் படைப் பினைப் பெறமாட்டா. இறைவன் உயிர்களை நிலைக்களமாகக் கொண்டு அவை செல்லும்நெறெல்லாமறிந்து செலுத்தி, உயிர்கள் அறியும் பொருள்கள் எல்லாவற்றினும் நிறைந்து

நிற்பனுதலாலே, அவனின் நீங்கித் தனித்து நிலவுதல் எவ் விடத்தினும் உயிர்கட்கில்லையென அறிக.

## இரண்டாம் அதிகரணம்

இறைவன் எங்கும் நிறைந்து நின்றுனாகில், எல்லாரும் அவனைக் காண வேண்டுமேயென்றால்; கதிரவன் ஒளி உல கெங்கும் பரவியிருந்தாலும், குருடர் அவ்வொளியைக் காணார். திருவருட் கண்ணிலார்க்கு முதல்வன் ஒளியாய்த் திகழ்ந்தும் இருளாய்த் தோன்றுவன். சேற்றிலெழுந்த தாமரையை விரியும் பருவத்தே கதிரவன் மலர்வித்தாற் போல, நல்லுயிர்கட்கு அவன் ஞானக்கண்ணைக் கொடுத்து உயிரின் அறிவுக்கறிவாய்த் தோன்றி விளங்குவன்.

வெயிலில் வருந்துவோர் சென்றணையும் மர நிழல்போல இறைவன் நிற்பன், பக்குவப்பட்ட உயிர்கள் ஞானத்தால் அவனை அடையும் என்னில், உயிர்கட்குத்தாமாக இறை வனைக்கூடுதற்குரிய முதன்மையும் இறைவனுக்குத் தன் வயமின்மையும் கூறியதாக முடியும். ஆதலின் அங்ஙனங் கருதுதல் தவறு.

உயிர் கெட்டுச் சிவத்தோடு சிவமாய் அடைதலே முத்தி யென்னில்; உயிர் கெட்டபின் அது சிவத்தை அடைதல் எப்படி? இறைவனை யணைந்தபின் உயிர் கெட்டதென்னில், முத்தியினைப் பெற்றதார்? அணைந்து கெடுவதே முத்தி யெனில், நித்தப்பொருளாய உயிர் கெடுவதெப்படி? நீரோடு நீர் சேர்ந்தாற்போல, உயிர் முதல்வனோடு கலக்கும் என்னில், முதல்வனும் உயிரும் ஒரு தன்மையரல்லராதலின், அவ் வுவமை பொருந்தாது. செம்பு, இரத குளிகையினுற் பொன்னாய்ப் பொன்னோடு சேர்தல்போல முத்தியிற் சிவத்

தொடு உயிர் கலக்குமென்னில், இறைவன் குளிகை போல் வானேயன்றிப் பொன்போல்வானல்லன். குளிகையுடன் பொன் சேர்வதில்லை யாதலின், அவ்வுவமை பொருந்துவ தெப்படி? இறைவன் படைப்பு முதலிய எத்தொழிலும் இயற்றவல்ல அதிகாரமுடையன், உயிர் சிவனடிப்பேரின்பம் ஒன்றே பெறுதற்குரியது.

சிவன், சீவன் என்ற இரண்டும் அறிவுடைப் பொருளே யென்னில், சிவன் அருளை உடைய சித்து, சீவன் அருளைச் சேருஞ்சித்து, சிவன் படைப்பு ஒடுக்க முதலியன இயற்றும் சித்து, சீவன் அவற்றிற் படியுஞ்சித்து, சிவன் தானே அறியுஞ்சித்து, சீவன் சிவனறிவிக்க அறியுஞ்சித்து; ஆதலினால் இரண்டும் அணைந்தாலும் ஒன்றாகாமல் வேறறக்கலந்து நிற்கும். உயிர் புத்திதத்துவத்தைச் சேர்ந்து பொருள்களை யறியுமிடத்து, புத்தியாகிய சடமும், சித்தெனப் பேசப் படும். இறைவனை நோக்க உயிர் அசித்துப் போல்வ தொன்றே.

காந்தமானது இரும்பினைத் தன்பால் இழுத்துக்கொள் ளுதல்போல இறைவன் உயிரைத் தன்வசப் படுத்திக்கொள் வன். தீயானது இரும்பைச் செந்நிற மாக்குதல்போலச் சீவனைச் சிவன் தன்வண்ணமாக்குவன். அனல் இரும்பின்கட் கலந்துள்ள கறையை எரித்தொழித்தாற்போல இறைவன் உயிரின் பாசத்தை யொழிப்பன். உப்பானது நீரிற் கலந்த போது நீர்க்குந் தன் சுவை கொடுத்தாற்போல; இறைவன் மலம் நீங்கிய உயிரின்கண் தனது எண் குணத்தையும் பதிப் பித்தருளுவன். குளிகையானது பொன்னுக்குந் தன்மையைத் தன்னகத்தே அடக்கி நிற்பதுபோல, இறைவன் உயிரைத் தன்னடிக் கீழடக்கி மேற்பட்ட நிறைவை யுடையவன்.

அவன் ஐந்தொழிலும் தானே இயற்றுவானாய், மலம் நீங்கிய உயிர்க்குக் கரும்பு, தேன், பால், கனியமுது, கற்கண்டு, சர்க்கரை யெல்லாங் கலந்த கலவைபோல இன்பம் ஈந்தருளுவன் என அறிக.

## பன்னிரண்டாஞ் சூத்திரம்.

சிவஞான நெறிநிற்கும் அன்பர் இறைவனது திருவடிக் கமலங்களைச் சேரவொட்டாமல் மறுதி விளக்கும் மும் மலங்களையும் பற்றறக் களைந்து கடவுளன்பரோடு நெருங்கிப் பயின்று அவர்களது திருவேடங்களையும் திருக்கோயில்களையுஞ் சிவனெனவே கைதொழுது போற்றிச் சிவானந்தத்தாலாடிப்பாடி உலகத்தில் யாவர்க்கும் எளியோமல்லேம், மேலாய பதவியை யடைந்தோமென்ற மகிழ்ச்சியுடன் கடவுளின் அடியார்க் கடியராய்த் திரிந்திடுவர். ஈசனுக்கு அன்பில்லாதவர், அவனது அடியார்க் கன்பில்லாதவராவர். அவர் எவ்வுயிர்க்கும் அன்பில்லாதவரும் ஆவர். ஆகவே தமக்கும் அன்பில்லாதவரே. அறிவிலாப் பிணங்களை யொத்த அவர்களைப்பற்றிப் பேசுவதால் யாது பயன்? அவர்களோடு நாம் இணங்கினல் பிறப்பு இறப்புக்குக்காரணமாய் நம்மை அவற்றில் வீடுபடச் செய்வர். ஆதலால் அவரது நட்பைக் கைவிட்டுக் கடவுளடியாரை யடைந்து அவர் பணியை நம் பணியாகச் செய்து அவரது உயர்வினை புணர்த்தும் நயமொழிகளைப் பேசி இறைவனது திருவருளுணர்த்தும் வழியில் நின்று அவனை வழிபடுதலாற் பெறும் பேரின் பத்தாற் கைகொட்டிக் கூத்தாடித் திரிதலே நன்று.

உயிர்களால் அறியப்படாத முதல்வன் அவைகள் தன்னை யறியும்பொருட்டு அன்பர்க்குத் தன் வேடத்தைக் கொடுத்து; அவர்களுடைய உயிர்க்குயிராய் நின்று அவர்களுக்கு மெய்யறிவு நல்கி அவர்களுடன் கலந்திருத்தலாலே அவர்களுடைய திருவேடம் சிவபெருமானது திருவடிவமேயாம். அவர்கள் சிவோகம்பாவனை செய்தலால்; அவர்கள் சிவனு மாவர். இருதயத்திலே அவர்கள் சிவனைப் பூசித்தலினாலேயும் அவர்கள் சிவ நிலையினராவர். தன்னுணர்ச்சிகெட்டு முதல்வன் றன்மை பெற்று நிற்றலாற் சிவமேயாவர். பாசப் பற்றுடையாரது தொடர்பு நீங்குதற் பொருட்டு, அவ்வன்பரையே தொழுதல் வேண்டும்.

திருக்கோயிலி னுள்ளிருக்குந் திருவடிவங்களைச் சிவனெனவே எண்ணி வழிபடுஞ் சார்பு நெறியினர்க்குச் சிவன் அங்கே வீற்றிருந்து வெளிப்படாது அருள் செய்வன். மந்திரத்தினாலே இறைவன் திருவுருக்கொண்டான் என்று எண்ணி வழிபடும் பூசனையாளர்க்கும், அகத்துறையும் முதல்வன் புறத்தே திருவடிவத்திலும் வீற்றிருந்து பூசை கொள்கின்றானெனக் கருதும் ஒருமையாளர்க்கும் விறகினைக் கடைந்த காலைத்தோன்றும் தீயைப்போல அவ்வப்போது தோன்றி யருள் புரிவன்.

ஓரிடத்தைக் குறியாது எங்கும் நிறைந்த இறைவனை அன்பால் வழிபடும் ஞானிகட்கு (அறிவர்க்கு) இளங் கன்றிற்கு ஆவின்மடியிற் சுரக்கும் பால்போல இறைவன் வெளிப்பட்டு அருள் செய்வன். சார்பு, செயல், ஒருமை; அறிவு என்னும் நான்கும் இறைவன் பணியாகும். ஞானி நான்கிற்குமுரியன். யோகி மூன்றினுக்கும்; கிரியையாளன் இரண்டினுக்கும், சரியை யாளன் சார்பு ஒன்றிற்கும் உரியன்.

யாவர்க்கும் அறிவனாய ஆசிரியனே தலைவனாவான். அவனையே இறைவனாக வழிபடுக. மந்திரங்களாலும், மருந்துகளாலும், கைவந்த யோகத்தினாலும், இரத குளிகைகளாலும், இன்னும் அறிவு நூல்களிலே சொன்ன முறைகளாலும், அருள்நூல், கலைநூல் முதலிய நூல் ஞானமும், முக்கால அறிவும், எண் பெருஞ்சித்தித் தேர்வும் எய்துதல் கூடும். இவை ஆசிரியனுதவியின்றியுங் கை வரும், இறைவனது திருவடி சேர்தற்குரிய உயர் ஞானமானது அறிவாசிரியனுதவியின்றி எய்தமுடியாது. மற்றொன்றாலும் அது வாராது. திருவடி ஞானம் பெற்றார்க்கு இறையருளாற் பிற ஞானங்களும் எளிதாகக் கைகூடும். அருட்குருவே எப்பொருளுங் கடந்து நிற்கும் மேலான சிவத்தின் வடிவம், ஐந்தொழிலியற்றும் முதல்வனின் வடிவம், உயர் ஞான வடிவம் முதலிய இறைவனது திருமேனிகளும் ஆவனென்று கருதி வழிபடின், இறைவன் அவனிடமாக நின்று, கோழி, ஆமை, மீன் என்பன முறையே முட்டையைத் தொட்டும், நினைந்தும், பார்த்தும் தன்றன்மையாகச் செய்யுமாறுபோல, உயிர்கட்கு ஏற்றவாறு தொட்டும், நினைந்தும், பார்த்தும் அவைகளைச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வுடையவனாகச் செய்வனென அறிக.

சிவஞான சித்தியார் சுபக்கம் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# இருபாவிருபஃது

௨

# இருபாவிருபஃது

இந்நூல் அருணந்தி சிவாசாரிய சுவாமிகளால் தமது அறிவாசானாகிய மெய்கண்டாரை வழுத்து முகத்தான் சித்தாந்த நூல் உண்மைகளை விளக்கி இயற்றப்பெற்றது.

நெற்றிக்கண்ணும், நீலகண்டமும் உடைய கடவுளே மண்ணுலகிலுள்ள மக்களின் பாசநீக்கத்தின் பொருட்டுத் திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டாராகத் தோன்றி யருளினாரென ஒருபொழுது நினைப்பவர்கள் தமது அறிவின் கண்ணே இறைவனது அத்துவிதக்கலப்பினைத் தெள்ளிதிற் கண்டவராவர்.

நிலவுலகின் கண்ணே தோன்றிய அருட்கதிரவன் தானென்னத்திகழ்ந்த மெய்கண்ட தேவப் பெருந்தகை யோய்! அறியாமை யென்னுஞ் சிறையிலழுந்துவேனாகிய என்னை, நிலையான பேரின்பத்தின்கண் இருத்திய பெருமானே! உன்னிடம் வினாக்கள் கேட்பதைத் எனது நீங்காத் தன்மையாகவுடையேன். அடியேனது அறிவினைவிட்டு நீங்காத நிலைமை உனக்கு எக்காலத்தும் இருந்தும், எனக்கு அறிவின்மை எவ்வாறு தோன்றிற்று? எனக்கு ஆணவமலம் நீங்காத காலத்து, அறிவின்மை உளதாமெனின், ஆணவ மலத்தோடொற்றித்து நின்ற நிலையில், நீ என்னைப் பிரிந்திருந்தா யென்பதைத்தானே அஃதுணர்த்தும்? பிரியாது என்னோடுகூடிநின்றனையாயின், அது வியப்பினும் வியப்பான தெய்வச்செய்கையே; அங்ஙனமாயின் நீ பொய்ப்பொரு

ருக்குப் பகைவனுகாய். எனவே, தூயவன், பாசமற்றவன், அறிவின்றலைவன், வீடருள்பவன், மேலோர்க்கு மேலோன் என்னும் பெயர்கள் நினக்கு உள்ளனவாகா.

நீ எனக்கு வேருக நின்று என்னை அறிவிப்பின், உனக்கு எங்கும் நிறைந்த தன்மையுமின்றி, எனக்கு உன்னேடு இரண்டறக் கலத்தலாகிய முத்தியும் இல்லையாய் முடியுமே? 'இருநிலனுய்த்தீயாகி' என்ற நினது பெருநிலை கூறுந் திருத்தாண்டகப் பொருள், உனக்குப் பொருந்துமாறி யாங்ஙனம்? அடியேனை அறிவிக்குங்காலை, வேருய் நிற்பையோ? உடனுய் நிற்பையோ? என்பதை எனக்கு அறிவுறுத்தி யருள்க. அடியேன்வினுவுக்குக் கோபங் கொள்ளாதே. எனது அறிவு சிற்றறிவு ஆதலின், அவ் வாறு வினவினேன்.

ஆசானுயெழுந்தருளுமிடத்து, தகுதி, தகுதியின்மை என்பவற்றிற்குரிய அடையாளங்கண்டு அருள்புரிவை யெனின், அடியேன் தகுதியிலேனுயின், நீ அருளும் மெய் யுணர்வைப் பெறமாட்டேனுவேன். தகுதி மிகுதி வேண்டு மெனில் நின்னுற் சிறப்பாக வருகின்ற பயன்யாது மில்லை. தகுதியின் பயனுக நீ வருவாயென்னில், தகுதி யென்பது சடப்பொருள், அது உன்னை எவ்வாறு கொணர வல்லது? நீ ஒப்பற்றவனென்பது எங்ஙனம் பொருந்தும்?

தகுதி யென்பது யார்க்கு வேண்டும்? மும்மலமும் சடமாதலின், அவை தகுதியடைதலில்லை; உயிரானது எடுத்த உடல்தோறும் இளமையு மூப்பு மாறி மாறி உடையதாகும். அதற்கு உடலின் வேருகத் தகுதி எவ்வாறுளதாம்? குற்ற மற்ற நினக்குத் தகுதியென்பது புதிதாக ஏற்படவேண்டிய தில்லை.

என்க்கு மெய்புணர்வுண்டாதற்குரிய மலநீக்கமே தகுதி யெனப்படுமெனில், நீ பாச நீக்கஞ் செய்வதில் ஒப்பற்றவ னென்பது எவ்வாறு? பாசங்களை அடியேன் நீக்கித் தகுதி யடைந்தாலும், பாசங்கள் தாமே நீங்கினும் இறைவனாகிய நீ அதன் பொருட்டு வேண்டப்படாய். மேலும், விகார மற்ற நீ பாசம்நீக்குவான்புக்கு விகாரமுறுவாயல்லை. ஆதலால் எனக்கு இவ்வினாக்கட்கு விடைபகருமுகத்தான், உண்மை உரைத்தல்வேண்டும் என்ற என்க்கு நினது விடை,

"காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே" என்னு மாண்புரையின் பொருளறிந்திலைபோலும்; பாண்டியன் மெய்புணர்வு பெறும்வண்ணம் திருஞான சம்பந்தப் பெரு மான் அருளிச்செய்த 'ஆட்பாலவர்க்கருளும்' என்பதன் பொருளை ஆராய்ந்தறிக என்பதே.

அறிதல், அ றி யா மை என்ற இருதன்மையையும் பொருந்தும் அடியேன் என்னை அறிவுப் பொருளென்று கூறுவேனோ? அறியாமைப் பொருளென்று கூறுவேனோ? நீ கூறும் விடைக்கு அடியேன் மாறு கூறாவகை, என்க்கு அதனை மொழியவேண்டும்.

முதலு மீறுமில்லா முழுப்பொருளே, கட்டு என் பது எப்படி எனக்கு ஏற்பட்டதென்று அறிவித்தருளல் வேண்டும்.

மும்மலங்களின் குணங்குறிகளை வெவ்வேறாகக் கூறு மிடத்து, தன்னைவேறுபடுத்துத் தன்னயம் நாடலும், வேண்டுமென்றொன்றை நினைத்தலும்; ஒன்றைப்பெறவிரும் பும் வேட்கையும், ஒன்றைப் பெறாமையால் வருஞ்சினமும், தன்னைப் பெரிதாக மதிப்பதால் உளதாகும் செருக்கும்,

பிறவுயிர்களைக் கொல்லுதலும், தான் துன்புறுதலும், விரும்பியதாய சிறியதொன்று பெற்றகாலைப் பெருமகிழ் வெய்துதலும்ஆகிய எட்டியல்பும், ஆணவத்தின் காரியமா மென்றனை.

திரிபுணர்ச்சியும், பொய்ம்மொழிதலும், மறதியும், மூர்ச்சித்தலும், கண்டபொருளைப் பற்றுதலும், கேடுவிளைத் தலும், பொறுமையும், அச்சமுமாகிய ஏழிற்குங் காரணமே மாயாமலமென்றனை.

இருத்தல், கிடத்தல், செய்தல், விடுதல், பிறரை இகழ் தல், பொருந்துதல் என்ற ஆறியல்பும் வினைப்பாசத்திற் குரியனவென்றனை.

ஈண்டுக்குறித்த மும்மல காரியங்களும் ஒழியாது நிற்ப வும், நீ உன் வயப்படும்படி என்னை நின்றன்மையனாக்கி, என் விருப்பத்தின் வழியென்பது உன்வழியன்றி வேறில்லை யாம் வண்ணம், ஊரும், பேரும், உருவும் உடையனாய் வந்து, எனக்கு இனி, ஊரும் பேரும் உருவுமிலாவகை பிறப்பறுத் தனை. மெய்யர் மெய்ய! மெய்கண்ட தேவ! மும்மலங்களை யுஞ் சடமென்றருளிச் செய்தனை, அங்ஙனமாயின், சடமெனத் தெளிந்த பொருள்கள் உயிரோடு கலந்து உயிரினைத் தொழிற்படுத்துவதெப்படி? சடமாய குடம், ஆடை முதலியன அங்ஙனம் செயல் விளைக்கக் கண்டிலமே. மலமானது, அத்தகைய பொருள்கள் போலாது, விடம் போன்றது, விடமானது ஏறிய உடம்பிலே மாற்றங்களை விளைத்து அறிவை அழித்து மேலிடுதல் காண்கவென்னில், விடம் தனது தொழிலைச் செய்துவிட்டு அகன்றொழிதல் போல, மலமும் அகன்றொழிதல்வேண்டும். விடம் ஒரு

குணமுடையதானால், மலங்கள் பல்குணமுடையன. மேலும், மலம் சடமானால், தானே என்னை வந்தடையாது. எனக்குக் கேடு செய்யு மலத்தை நானே உண்டாக்கிக்கொள்ள மாட்டேன், நீ இயல்பாகவே பாசங்களினீங்கினவனாகலின், நீ மலத்தை எனக்குப் பொருத்தமாட்டாய். எனக்கு மலம் இயல்பாய தன்மையெனின், இயல்பை மாற்ற முடியாதாகையால், மலம் என்றும் நீங்குமாறில்லை. ஆதலால், இவ்வையப் பாடுகளைத் தெளிவாகத் தீர்த்தருளல் வேண்டும்.

இருளாகிய மலமானது நின்னருளாகிய ஒளி முன் நில்லாது. அடியேனுக்குத் தானே அறியும் அறிவில்லை. அடியேன் இருளைப் பற்றிக்கொண்டதெப்படி? மருள் என்னும் பண்பாடும் வண்டு சூழும், மலர் மாலையுடைய மன்னவனே! எனது ஐயப்பாடு நீங்கு முறையை நின் மனத்தே கருதுக.

அடியேனுக்குச் சிவகதி யளித்தற் பொருட்டுத் திருவெண்ணெய் நல்லூரிலே தானுந் தன்றையனுமாய் என்னுள் புகுந்து என் நெஞ்சத்திலிருந்த இருளை நீக்கி, அளவிலடங்காத உனது காட்சியை நல்கி, என்னியல்பையும் எனக்குக் காட்டினை. எனக்கு ஏற்பட்ட நுணுக்கத்தையும் விரிவையும் கூறப்புகின், பாதாளமுதல் மேலாக உள்ள அருள் வெளியின் வரம்புவரை, நூல்களில் நுணுக்கமாய்க் கற்றறிந்தவாறே, விரிவாய் எங்கும் யானே வியாபித்து நிற்பதையறிந்தேன். அப்பெற்றியனை யான், பொறிகட்குப் புலனாயுள்ள பொறிகள்தோறும், பொறியாய சிறுவாயில் வழியாக எவ்வாறறிந்து பற்றுவனாயினேன்? மேலும், உணர்ச்சியின் ஏற்றத் தாழ்வு காரணமாய் வரும் ஐந்து அவத்தையும் எவ்வாறு அடையலாயினேன்? யான் எவ்வாறு

பிறந்திறந்து புவனங்கடோறும் போக்கு வரவு புரிபவனுயி னேன்? இவற்றைத் திருவுள்ளத்திற் கொண்டு, அடியேன் எங்கும் விரிந்திருப்பதும், இவ்வுடம்பிலே இப்போது பொருந்தி நிற்பதும், இருவினைக் கேற்பச் செல்லும் புவனங் கட்குச் செல்வதும், ஆகிய இம்மூன்றனுள், ஒன்றுதான் எனது மெய்யியல்பாயிருத்தற்பாலது. அது யாதெனக் காட்டியருளல் வேண்டும்.

'என்றைக்கும் இல்லாதது இல்லாததே; உள்ளதுதான் உள்ளது' என்பதே உண்மையான முடிவாயின், ஒரு தன்மைத் தாய உயிரானது ஒருகாற் சிறுத்தும் ஒருகாற் பெருத்தும் வருதல் பொருந்தாதன்றே? சார்புபற்றி அவ்வா றாம்; யானையாயிருந்த உயிர் எறும்பானுற் போலும் எனில், அது உயிரின் தனியாயஅறிவுத் தன்மையை விளக்காது; உடம்போடு பட்ட வாழ்க்கை நிலையைக் குறிக்கும்.

உடம்பிடத்தே வாழ்க்கை எய்துவது உயிரின் றன்மையே, உடம்பினியல்பன்று; எடுத்த உடம்பிற் கேற்றவாறு பெருத்துஞ் சிறுத்தும் அறியவல்லது உயிரெ னின், பெரிய உடம்பெடுத்தபோது தன்னறிவு பெரிதா யிருந்ததென்று, சிறிய உடம்பெடுக்குங் காலை, உயிர் அறிவ தில்லை. அங்ஙனம் அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய் விளங்குஞ்சுதந்திரம் உனக்கன்றி—எனக்கில்லை. ஆதலால், எனது உண்மையியல்பைத் தெளிவாக எனக்கு அறிவுறுத்தியருள்க.

ஐந்தவத்தையுள், முதல் அவ்த்தைக் கண் நின்றகாலை; அதன்கணின்ற அறிவோடு ஒழிந்த நான்கவத்தையும்

ஒவ்வொன்றாகப் பொருந்தி மீளுமாறில்லை. மெய்கண்ட தேவ, எவ்வாறு எனது அனுபவத்தில் அவற்றைக் கண்டறிந்து தெளிவது?

துயரந்தீர்க்கும் அண்ணலாய உருத்திரமூர்த்தியே! உயிர்கள் தலைவனே! பாவியேனாகிய என்னையும் ஆட்கொள்ளு தற்பொருட்டு ஒருருவங்கொண்டு தனதுண்மை யறியப் பிடாது திருவெண்ணெய் நல்லூரி லெழுந்தருளிய மெய்கண்ட தேவ! என்ன ஏதுக்கொண்டுயானென ஒரு முதல் உண்டென்று யான் தெரிந்தது? அவத்தைபுறுதலால், அவத்தை யுறும் முதல் யானென அறிந்தேனென்னில், அவத்தையை அறிந்தவாறே, அதனினீங்கி இருக்கவேண்டிய முறைப்படி இருந்திலேன். அவத்தையினீக்கம் கால முதலிய கருவி களினாலெனின், பிறப்பும் காப்பும் எனக்கு அயனாலும் மாலா லும் ஏற்படுதல் யாங்ஙனம்? கால முதலிய கருவிகளினாலெல் லாம் ஆவதெனில், அயனரிகள் என்னை வந்தடைய மாட் டாரே; கருவிகளுள் ஒரு கருவி மற்றொரு கருவியை உணர மாட்டாது, கருவிகள் அறிவுடையனவல்ல. அறிவுடைய உயிரால் அவை தொழிற்படுவன வென்னில், உயிரின் அறிவு அவற்றை எவ்வாறு கூடுகின்றதென்பதை யான் அறி கின்றிலேனே. கருவிகளெல்லாம் கூடிய விடத்தும், எல்லா வற்றையும் அவை கொண்டு ஒருசேர அறியாமல், ஒவ் வொன்றாய்ப் பொருள்களை அறிவேன். கருவிகள் நீங்கு வதையும் அறிகிலேன், நீங்குங்கால், நீக்கத்திற்கு முன்னுள்ள எனதுணர்வு நில்லாமையின், உன்னாற் பொருள்களை அறி கின்றேனெனின், நீ எனக்குக் கருவியாவாய். அப்போது உனக்கு என்ன பெருமையுளது? யானே பெரியோனாய் உன்னைத்தலைவனாகப் பெற்றிலேனாதல் வேண்டும்.

இன்னும் அடியேன் கூறுவதைக் கேட்டருள்க. உனது திருமுன்பே என்போதம் ஒழிதலின், என்னை யான் காணுமா றில்லை. யானென்றொரு முதலில்லாது உன்னைக் காணு மாறும் இல்லை, தன்னுணர்ச்சியறப்பெறாது, உன்னையும் என்னையுமொருங்கே அறியுமாறுமில்லை. இங்ஙனமாயின், என் அருந்துணையே! விண்ணவர் முதல்வ! அருட்பெருங் கடலே! என் கண்ணே! என்னை நான் எவ்வாறு கண்ட தென்று எனக்கு விளக்கியருளல் வேண்டும்.

அருட்கடலமுதே! திருவெண்ணெய் நல்லூரிற்றோன் றிய கரும்பே! எனது கண்ணே! எடுத்த உடலைத்தே மூலா தாரத்திலே யான் ஒடுங்கியபோது, உடலின் எக்கருவி கொண்டு யான் என்னைக் காண்பது கூடும்? எதனை யான் அப்போது பொருந்தியுள்ளேன்? எனக்கு உரைத்தருள வேண்டும்.

பெண்ணையாற்றின் புனல் பாயும் வயல் சூழ்ந்த வெண்ணெய்ப்பதியதிப! எனது ஐம்பொறி யறிவையும் நின் வசமாக்கொண்டு, என் வினையை வேரறத் தொலைத்த மெய்கண்ட தேவே! வினைப்பாசமற்ற பெரியோய்! நீலகண்ட! குற்றமற்ற என் அறிவே! பண்டை மும்மலமொழித்த குருவே!

இருவினையொப்பு எனக்கு ஏற்பட்டவிடத்து நீ எனது பாசங்களைக் களைந்து திருவருளின் வாயிலாக என்னுள்ளத் திற் புகுந்தனை யென்னில், உன்னை என்றும் நீங்காமல் உன்னுடனிற்கும் பேரின்பப் பெருநிலையை அடியேன் உடையனாதல் வேண்டும். இப்போது புகுந்தனையாயின், முன்னே என்னுள்ளத்தே நீ நிற்கவில்லையா? மும்மலங்களைப் பொருந்தியதனால், உயிர்களாகிய எம்முள்ளத்தே நீ நிற்க

வில்லை யென்றால், மலம்நீங்கி யோடுதலும், நினது செம்மலர்த்தாள் சேர்தலும், இல்லாது, அடியேன் சார்ந்தவற்றைப் பற்றி அவற்றி னீங்காது நிற்பேறுதல் வேண்டும். அதுவே முடிவு. இவ்வுடலெடுத்தற் கேதுவாகிய வினையினையே நுகர்வினையாகப் பெறுவதன்றி, முன் ஈட்டி நின்ற வினையும் ஈட்டும் எதிர்வினையும் இலவாமெனின், மாயையாலாகிய இவ்வுடம்பிலே அதன் காரணமாய மாயையுளது. உடம்பின் வினையுமுளது. இரண்டுமுளவாகவே மூலமலமுமொழியாது. ஆகவே வினையும் மேன்மேலீட்டப்படும். அதன் பயனாக மாயையினாய உடம்பெடுத்தலாகிய பிறப்பும் நீங்காது. இங்ஙனம், எடுத்த உடலின்கண் நுகரற்பொருட்டு வினை எஞ்சி இருப்பின், இருவினையும் துலையொத்தல் யாங்ஙனம்? அங்ஙனம் ஒப்பு ஏற்படாவிடத்து நின்னைப் பெறுவது இல்லையென்ற பண்டை அறமொழி, எவ்வாறு பொருந்தும்? ஆதலால், நீ எனது உளத்து நின்றனையென்று மொழிகேனோ? நின்றிலையென்பேனோ? அல்லது ஒழிந்தவாகக் கூறப்படும் பாசங்கள் ஒழியவில்லையென்கேனோ? இவற்றுள் எதனை நான் கொள்ளுதற்கு உரியேனென நீ எனக்கு உரைத்தருளல் வேண்டும்.

திருவெண்ணெய் நல்லூரில் வீற்றிருக்கும் மெய் கண்ட தேவே!

எனது அறிவு நின்னால் விளங்குமாயின், மலத்தோடு கூடி நான் மயங்கி நிற்கக் காரணமென்னை? தலைவனாகிய உன்பால் வந்த யான், மலத்தினைப் பற்றுவது இயலாது. மலத்திலே வந்து கட்டுப்பட்டால், மலத்தையும் உன்னையும் ஒரே காலத்திற் பற்றமாட்டேன். அங்ஙனமிருக்க; யான்

பாசத்தையும்; பதியாய நின்னையும் அறிவேனென்பது எப்படி?

எங்கும் பரவியுள்ள இருட் போர்வையை நீக்கித் தாமரையை அலர்த்துங் கதிரவனைப்போல அறியாமையாகிய போர்வையை நீக்கி அடியேன் உள்ளக் கமலத்தை மலர்வித்துப் பண்டையறிவினை யருளுமாறு, நானிலத்தே தோன்றிய ஞானச் செங்கதிராய மெய்கண்ட தேவே! சொற்கப்பாற்பட்ட பெரியபொருளே! குற்றமில்லாத அமுதே! குணப் பெருங்குன்றே! நீ என்னை ஒருபோது கூடியிருத்தலும், ஒருகாற் கூடியிராமையும் எங்ஙனம் நிகழும்? நான் உன்னை நினைக்கும்போது என்னுடன் கூடியும், உன்னை நினையாதபோது என்னுடன் கூடாமலும் இருப்பதே நின் இயற்கையெனில், எனது விருப்பப்படி நீ நடப்போனாய், நீ தன் வயம் உடையையல்லை; எங்கும் நிறைந்திராது போக்கு வரவு உடையை யென்பது முடியுமன்றோ?

எண்டோளும் முக்கண்ணும் உடையையாய், எங்கும் நிறைந்த நின்னை அடியேன் வந்து கூடுதலும், மீளுதலு முடையேனெனின், தமது களைப்பு நீக்க ஒரு மரத்தின் அழகிய நிழலிலே தங்கி மீண்டும் தமது வழியே போவாரைப் போல உயிர்களும், அங்ஙனம் தங்கிப் போவாரைப் பற்றி யாதுங் கருதாத மர நிழலைப்போல உனது தன்மையும் ஆம். அங்ஙனமன்றி, அடியேன் நினைக்குங் காலை விளங்கியும், நினையாக்காலை விளங்காமலும், நீ இருப்பாயென்னில், கட்டற்ற இந்நிலையிலே அடியேனுக்கிரங்கி நின்னை வெளிப்படுத்திய பின்னும், நீ ஒளித்தல் கூடுமா? கூடுமென்னில், நீ பேரருளுடையாயென்பது மாறுபடும்; உன்னைப் பெற்றவர்கள் மீண்டும் பிறப்பரென்பதற்கிடமுளதாம். ஆனால்

நின்னைப் பெற்று முத்தி யெய்தினோர் உலகிலே மீளப் பிறப்பரென்ற சொல், அருள்நூற்கண் இல்லை. ஆதலால், 'உன்னிலுன்னும், உன்னுவிடில் விட்டிடும்' என்பதன் பொருளை மயக்கமற, யான் எதிர் சொற் கூறாதபடி தெளிவாக விளக்கி யருளவேண்டும்.

கரணங்களையெல்லாம் கடந்தவனே! எனக்கு மிகச் சிறந்த கருணையோய்! மெய்த்தேவே! யான் பிறந்தபோது உடனுய உடம்பினையான் பற்றி நிற்கவும், அதனை அங்ஙனம் பற்றாது இருக்கும்படி நீ என்னை அதன் நிலையாமையைக் காட்டி யறிவுறுத்தினமையின், இடையன் வெட்டிய மரத்தின் றன்மையை யான் பெற்றாற்போலும். வெட்டிய மரமானது பச்சையாயிருந்தும், வேரின் தொடர்பற்றதானாற் போல, உடம்பிலிருப்பதால் அதன் சார்பும், ஞானம் பெற்றமையால், அதன் தொடர்பின்மையும் எனக்கு ஏற்பட்டுள்ளன.

சிவபெருமானே! திருவருட்டுறையிலே வீற்றிருக்கும் வீட்டின்பச் சுவை தந்த தலைவ! நின்னை வேறாகக் கருதியிருந்த எனக்கு வேறின்மை கைவரும்படி செய்த மெய்கண்ட தேவே! அடியேன் அற்றது பாசம்; அடியேன் பெற்றது நின் திருவடியே. இருவினை யென்பவை யாவை? மனம், மொழி, மெய் என்ற மூன்றினுற் செய்யப்படும் இன்பச் செயல், துன்பச் செயலே அவையாமெனில், அவை தோன்றிய உடனே அழிவன. தினையளவுகூட, அவை திண்மையாய் நிலைப்பதில்லை. அவற்றிற்குக் காரணமாய மனம், மொழி, மெய் என்பன சடம். அவற்றின் காரியமும் சடமேயாதலின், அவை யென்னையடைந்து துன்புறுத்துதற்கு வழி யாது? அவை சடமாயினும், செய்கின்ற அடியேன் அறிவுடையேனாதலின், அவை என் தொடர்பால் என்னை வருத்து

மென்னின், யான் செய்த செயல் மீண்டு வாராது, இயமன் என்னை வருத்துவது எதனுல்? அடியேன் வினையைச் செய்ய அவற்றினைப்பற்றி வருந்துகின்றேனெனின், நீ என்னைச் செய்விக்கின்றுயென்பதில்லையாகும். வினைக்குத் தக்கபடியே நீ என்னைச் செய்விக்கிருயென்னில், செயற்பயனை நீயே இங்கே புசிப்பிக்கின்றாய். அங்ஙனமாயின், யமனுக்கு என்னிடம் வர என்ன வழக்கு உளது? ஒப்பற்ற நீரே எனக்கு வினைப்பயனை ஊட்டப் போதுமாயின், நீரும் இயமனுமாகிய இருவர் வேண்டியதில்லை. என்னைக் கடத்தற்கரிய துன்பத்துக்குள்ளாக்கிய வினையும் வினைக்கட்டும், எவ்வாறு நாயினேற்குளவாமென்பதைத் தெளிவாக அருள வேண்டும்.

மானைத் தரித்த செங்கையுடன் மதில்புடை சூழ்ந்த திருவெண்ணெய்நல்லூரில் வாழும் அரசே! முன் செய் தொழிந்த வினை, தானே என்னை வந்து பொருந்துமோ? அல்லது யான் அதனைப் போய்ப் பொருந்துவேனே? குற்ற மற்ற நீ அவ்வினைப் பயனைக் கூட்டுவிக்கமாட்டாயன்றே? நீ தான் கூட்டுவிப்பையாயின், உன்னுடைய அருள் எனக்குத் துணையாதலின்றி எதற்கு இருக்கிறது?

தெளியாது அலைவுடைய மனத்தோடு அடியேன் யாதுரைப்பினும், அமைதியாக அருள்புரிதல் பெரியோர் கடனுகும். கண்ணினுள் மணியே! கருத்தினுட் கருத்தே! திரு வெண்ணெய் நல்லூர்த் தலைவ! மெய்கண்டதேவே! உன்னைக் கலந்து பேரின்பம் நுகர்வது எனது சிறப்பியல்பாமென்னில், நின் மெய்யியல்பு, எனது சொல்லிற்கும், மனத்திற்கும் எட்டாததன்றே? தோல், உதிரம், தசை, கொழுப்பு, எலும்பு மூளை, வெண்ணீர் என்ற எழுவகைத் தாதுவினலாயதாய்,

கண்ணிரண்டு, மூக்குத் துளை யிரண்டு, காதிரண்டு, குறி யொன்றாகிய சிறுதுவாரம் ஏழும், வாயும், குதமுமாகிய பெருந்துவாரமிரண்டுமாக ஒன்பது வாயிலையுடைய உடம் பிலே என்னை அடக்கிவைத்து அவ்வுடம்பைச் சிலகாலம் வரை யான் நீங்காமல் நிறுத்தியும், அதன்கணின்று என்னை நீங்குங் காலத்து நீக்கியும், எனது அறிவு, இச்சை, செயல்களை எழுப்பியியக்கும் நினது அருஞ்செயல் மிக்க வியப்பைத் தரு கின்றது.

மனம், மொழி, மெய்களால் ஆற்றப்படும் நல்லனவும் தீயனவும் ஆகிய எல்லாவற்றின் நன்மையுந் தீமையும் அறிந்து, நீதி தவறாது, வினைக்குத் தக்க பயன்களை ஏற்றத் தாழ்வில்லாமல் நுகரும்படி இடமும் காலமும் மயக்கமற வகுத்து, நடுநின்று, அவற்றை நுகர்விப்பாயாகலின், நீ நடுவன் என்றலே தக்கதாம். நீதியுடைய பெரியோர் செயல் மயக்கம் விளைத்தற்கிடனாகாதே. சிறியோர் செயலல்லவோ மய்க்கம் விளைப்பது. மந்திரம், சொல், எழுத்து, உலகம், முதல், கலை என்ற ஆறு வழியாலும் நிரம்பி மிகுந்த வினை களை நீ நினது அருட் தீயால் தூய்மை செய்தனையே. இரு வினை யொப்பிலே அடியேனுக்கு ஒழிந்த வினையாது? இங் குளதாம் வினைகளின் பயன்களை யாரை நுகரச் செய்வது?

வினைகள் சுத்திசெய் தொழிவுற்ற பின்னும், நுகரக் கிடத்தல் தகாதே. நீதியைக் காப்பாற்றுதல் நின் பெருங் கடனன்றோ? வினையெல்லாம் ஒழிந்தபின், துன்பமுறுதற் கேதுவாய உடம்பினுள் என்னை இருத்தி, உடம்பினை யொழி யாமைக் கேதுவாய நின்னருட் செயலின் றன்மையை எனக்கு நன்கு விளங்கச் சொல்லுவாயாக.

உயர்வுமிக்க திருவெண்ணெய் நல்லூரிலே வதியுந் தண்டேன் ததும்புங் கொன்றை மாலை யணிந்த எந்தலைவனே! நினது திருவருள் நோக்கினாற் செயலற்ற உயிர்களைப் பொருந்தி அவரது சிறந்த தொண்டைக் கொள்ளும் நின் சூழ்ச்சியும், ஏனையோர்க்கு அவரோடு நின்றும், ஒளித்திருக்கும் கரவுமாகிய நின் செயல்களை எனக்கு விளக்குக.

துன்பத்திற் கேதுவாய உடம்பை எடுத்த காரணம் அறியாது, யான் உலக மன்னனெனக் கருதிப் பொய்யை மெய்யெனப் பேசி, உலகத்தே நிலையில்லாதவற்றைப் பூண்பதே கடனாக நாடி தன்னை நாடாத என்னுள்ளே புகுந்து, என் செயலுக்கெல்லாம் ஒத்துநின்று என்பின் வந்தருளி, என்னையுந் தன்னையும் அறியாவகை செய்யும் யான் எனது என்னுஞ் செருக்கொடு யான் செல்வதையும் பார்த்திருந்து, உயர்திணை அஃறிணையாய எல்லா வகையான வுடம்புமெடுத்த காலை என்னுடன் சென்று, நான்புகுமிடங்களிற் புகுந்து, போமிடங்கட்குப்போய், மிகுந்த நுகர்ச்சிகளை வினைக்கேற்ப நுகர்வித்து, எனக்குப் பணியாள்போல உதவி, என்னைப் பிரியாதே, ஓடிச்சென்று மீள்கவென வேடிக்கை பார்த்து, என் போக்கிலே நின்றான் எனது தந்தை.

அவன் மிக்க பேரருளுடையனாதலின் திருவருட்டுறைக்கு எழுந்தருளி மெய்ப்பொருளை மிகக் கொடுத்து, நிலையாதனவற்றை எனக்குப் பகையெனக் கண்டு கொள்ளும்படி கற்பித்து, கடல் சூழ்ந்த உலகம் அறியும்படியாக மெய்கண்ட தேவன் எனப் பெயர் பரப்பி, தன்னுள் என்னை யடக்கித் தான் முற்பட்டு, தானுந்தன தருளுமாய்த் தோன்றி என் உணர்ச்சி யொழியும்படி செய்து, தன்னியல்பையும் என்னியல்பையும் எனக்குக் காட்டி, தான் வினையில்லாது

போக்கு வரவற்று நிற்பதாய நிலைமையையும், 'அவனருள் வழி நின்று யான் செயலின்றிப் போதலையுங் காட்டி, எமது பெருமான் அறிவித்து நின்றதைப் பார்க்குமிடத்து, எனக்குத்தானே அது பெருவியப்பைத் தராநின்றது.'

நல்வினை தீவினை என்னும் கடலிடை நின்று அதன்கணழுந்துவேனை அழுந்தா வண்ணம், பெருங்கடலிலெழுந்த விடத்தை முற்காலத்துண்ட பெருமான், திருவெண்ணெய் நல்லூர்த் திருவெண்காட்டுப் பெருமானெனத் திருமேனி கொண்டு வந்து, எடுத்தாண்டான்.

உற்றார், பெற்றார், முதலாயினார்பாலெழும் அகப்பற்றும், புறப்பொருள்களின் மாட்டு எழும் புறப்பற்றும் அற்றவர்க்கு வேறுதலை அற்றவனும், அங்ஙனம் பற்றறுக்கப் பெறாதார்க்கு வேறாய் நிற்பவனும், முடிவுமுதலும் இல்லாதவனுமிருக்கும் பெருமான், திருமேனி கொண்டெழுந்தருளி வந்து, குரங்குபோலலையு மனத்தையுடைய கொடியேன் உலகிலே பரந்து திரியுஞ் செயலை யொழித்து, என்து மனத்தைக் குவியச் செய்து, அந்நிலையிலே நிலை நிற்கச் செய்து, என்னைப் பற்றி நின்று, எனக்குத் தனி நிலை, கலப்பு நிலைகளாய அவத்தைகளை அறுத்து, என்னுள்ளத்தே நீங்காது மீளாது ஒரு படித்தாய் நின்ற நிலையிலே, பொருளால் ஒன்றாகாமலும், கலப்பால், இரண்டெனப் பிரிக்கப்படாமலும், ஒன்றுமிரண்டு மின்றாகாமலும், சூனியமாகாமலும், தனது தனிப்பெருமை எனக்கு நல்காணுயினும், எனக்குண்டான பெருமை முழுவதும் எனக்குத் தந்தது மாத்திரமன்றி, என் அறிவு கெட்டொழியாமையின், என்னை எனக்கே கொடுத்துப் பேரின்பப் பெருங்கடலுள்ளே நிற்பித்து ஒரு காலத்தினும் உலவாத நலமளித்து என்றும் எனதுள்ளும்

புறம்பும் நீக்கமின்றி நின்ற அருள் வண்மை காட்டித் திருவடிக் கமலங்களை யீந்தருளிய மன்னனாகிய எந்தலைவன், புனல் நிறைந்த பெண்ணையாற்றினாற் சூழப்பெற்ற திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமானாகிய மெய்கண்ட தேவனாவன்; அவன் பெருமை மிக்கோன்; அருளுக்குக் கோயிலானவன்; நம்மைப் பொருந்திய பாசத்தின் வேரைக் களைய வல்லவன்; உலகிலுள்ள உயிர்க்கெல்லாம் ஒப்பற்ற ஞானக் கண்ணாகத் திகழ்பவனென அறிக.

---

இருபாவிருபஃது முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# உண்மை விளக்கம்

மெய்கண்டதேவ நாயனரது மாணக்கராகிய

## திருவதிகை மனவாசகங்கடந்தார்

அருளிச்செய்த

# உண்மை விளக்கம்

சிவாகம நூற்பொருளை விளக்கும்பொருட்டு விநாயகப் பெருமான் துணைசெய்யவேண்டுமென்பான் இந்நூற்காப்பு, முதற்கண் கூறப்பட்டது.

இரண்டாவது, ஆசிரிய வணக்கம் இயம்பப்படுகின்றது. நிலையாமை யுணர்த்திப் பொய்ப் பொருளின் தொடர்பறுத்து, (அறிவிலே) பேரின்பப் பொருளாம் மெய்யினைக் காட்டிய மெய்கண்டதேவே! உன்க்கு விண்ணப்பம். பொய்ப் பொருளை யுணர்த்தாத மெய்யனே! திருவெண்ணெய்நல்லூரில் வீற்றிருக்கும் பேரறிஞ! தூய கேள்வி வடிவாய எனது விண்ணப்பத்தைக் கேட்டருள்க.

முப்பத்தாறு தத்துவம் யாவை? ஆணவ மென்பதி யாது? வினையென்பதியாது? நான் யார்? நீ யார்? இறைவன் திருநடனத்தை யுணர்த்தும் அஞ்செழுத்து யாது? குருவே! இவற்றை எனக்குக் கூறியருள்க, என்ற மாணவருக்கு, ஆசிரியர் இன்பமடையக் கருதும் மாணவனே! இவற்றை உள்ளபடி, இறைவன் திருவருளால் இயம்பிய அருள் நூற்குப் பொருத்தமாகக் கூறுவேனென்று கூறுவதாவது;-

நிலமுதலானது நாற்கோண வடிவாயுள்ளது. நீர் முத லானது பாதிமதி போல்வது. நெருப்பு முதலானது முக் கோண வடிவானது. காற்று முதலானது அறுகோண வடிவாயுள்ளது. வான்முதலானது வட்ட வடிவாயிருக்கும். உயிர் பொருந்தும் உடம்பானது இப் பூதங்களின் கலப்பால் உருவெடுப்பது.

மண்முதலானது பொன்னிறமாயிருக்கும். நீர் முதல் வெண்ணிறமாயிருக்கும்; நெருப்பு முதல் செந்நிறமுடை யது; காற்றானது, கருப்பு நிறமாயிருக்கும்; வான் முதல் புகை நிறமுடையது. இவற்றை முறையே வித்தெழுத் துக்களாலாய லகரம், வகரம், ரகரம், யகரம், அகரம் என் பன நன்கு பொருந்தி நிற்குமென அறிக. இவற்றிற்கு முறையே அடையாளங்களாவன:— வச்சிராயுதம், தாம ரைப்பூ, குறுக்கு என்னுஞ் சுவத்திகம், அறுபுள்ளி, அமுத வட்டம் என அருள் நூல் கூறும். இவற்றிற்கு அதி தெய்வங்கள், அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன். படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளுதல் என்பன இவர்கட்குரிய சிறப்புத் தொழில்கள்.

மண்ணானது, திண்மைக் குணத்தைக் கொடுப்பதுடன் பிற பொருள்களைத் தாங்கும் ஆற்றலுடையது. நீரானது, குளிர்ச்சியைக் கொடுப்பதுடன், பொருள்களை மென்மைத் தன்மை யுடைய தாக்கும். நெருப்பானது, சூடு தருவது டன், பொருள்களை ஒன்றாக இணைப்பது. காற்றானது விரிந்து பரவி அசைவதுடன், நுண் பொருள்களைத் திரட்டு மியல்புடையது. வானானது எங்கும் நிறைந்து எப்போ தும் பிற பொருள்களுக்கு இடங்கொடுத்து நிற்பது.

இவை மா பூதங்கள். இவற்றிற்கு நுட்பமா யடிப்படையாயுள்ளன ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பனவே. இவை ஆசை விளைப்பன. இவை தன் மாத்திரையெனப்படும். அறிவுப் பொறிகள் ஐம்பூதங்களிடமாக நின்று, ஓசை முதலிய பூதப் புலன்களை யறியும். அறிவுப் பொறிகட்கு இடங்களாவன, செவி, தோல், கண், நாக்கு, மூக்கு, என்பன. செவியானது வானிடமாக நின்று ஒலியைப் பொருந்தும். தோலானது காற்றினிடமாக நின்று ஊற்றினை (தொடுதலை) அறியும். கண்ணானது நெருப்பினிடமாக நின்று உருவத்தை யறியும். நாக்கு நீரிடமாக நின்று சுவையை அறியும். மூக்கு மண்ணிடமாய் நின்று மணத்தை யறியும். ஐம்பொறிகளை வென்றவர்களே பேரின்ப வீடுறுவர்.

வினைப் பொறிகள், வாய், கால், கை, குதம், குறி என்பவற்றினிடமாக நின்று சொல்லுதல் முதலிய தொழில்களுக்குக் காரணமாகும். இவற்றின் பெயரே வினைப்பொறிகளுக்கும் ஆயின. [வாயில் எழுஞ் சொல்லானது வானையிடமாகக்கொண்டு பேசும். காற்றை இடமாகக் கொண்டு காலானது செல்லும். நெருப்பை இடமாப் பொருந்தி, கை இடுதலு மேற்றலுஞ் செய்யும். நீரிடமாகப் பொருந்தி குதமானது மலசலங்களைக் கழிக்கும். குறியானது, நிலத்தத்துவத்தை இடமாகக்கொண்டு, விந்துவைப் பிரித்து இன்பஞ் செய்விக்கும்.

மனமும், புத்தியும், அகங்காரமும், சித்தமும் அகக்கருவிகளாம். மனம் பற்றியதைப் புத்தி தீர்மானிக்கும். அகங்காரமும், தீர்மானத்தைப் பலமுறை விரும்பி எழுந்திருக்கும். சித்தம் அதனை நினையும்.

இதுவரை கூறிய இருபத்துநாலு முதல்களும், உயிர் முதல்களெனப்படும். அறி முதல்களாவன, காலம், முறை, கலை, புலம், அவா, தோன்றல், தூய்தல் மாயை என்பன. இறந்தகாலத்தினெல்லையும், நிகழ்காலத்துப் பயனையும், எதிர் காலத்துப் புதுமையையும் கால தத்துவம் பயக்கும். முறை முதலானது முக்காலத்திலும் வினைப்பயன் நுகர்ச்சி வழியைத் தீர்மானிக்கும். கலையானது, ஆணவத்தைச் சிறிது நீக்கி, உயிரின் செயலாற்றலை யெழுப்பும். புலமுதல் அறிவை எழுப்பும். அவாமுதல் விருப்பத்தை யெழுப்பும். தோன்றல்முதல், புலன்களிலே அழுத்துவிக்கும். மாயையானது மாயா காரியங்களை நிலையானவையென்று பற்றச் செய்யும். ஆகவே அறிமுதல்கள் ஏழினியல்புங் கூறியவாறாயிற்று. தூய முதல்களாவன (சுத்த வித்தை.) தூயபுலம், அரசு முதல், அருட்சிவம், அருள், சிவம் என்பன. (தூயபுலம் இறைவனது அறிவாற்றலை மிகுதி காட்டுவது. அரசு முதல் இறைவனது செயலாற்றலை மிகுதியாகக் காட்டும். அருட்சிவ முதலில் இறைவனது அறிவுஞ் செயலும் ஒத்து நிற்பன. அருள் முதல் இறைவனது செயலாற்றலிற்கிடமாவது; சிவ முதல் அறிவாற்றலுக்கு இடமாவது.)

முப்பத்தாறு முதல்களினியல்பு இவ்வாறாக, ஆணவமென்பது அறியாமையை விளைத்து நிற்பது. மேல் வினையும் இன்ப துன்பங்களைக் கருதாது செய்யுஞ் செயலுக்கு ஏதுவாயது வினைப்பாசமென்றறிக.

முதல்களின் இயல்பும், ஆணவ வினைகளின் தன்மையும் அறிவிக்கப்பெற்ற மாணவன், ஆசிரியனை நோக்கி, இவற்றின் வேறாகாமலிருக்கும் என்னை யானறியும்படி காட்டியருள்க வென்று குறையிரந்தனன். ஆசிரியர் கூறுவார்:— முற்றறி

யுடைய முதல்வன் முன் அறிவிலாப் பொருளாகிய பாசம், முனைந்து நில்லாது. அறிவுடைப் பரம்பொருள் சடப் பொருளை ஆய்ந்து அறியவேண்டுவதில்லை. இவ்விரண்டை யும் பகுத்தறிவது உயிரென அறிக.

சடமாகிய முப்பத்தாறு முதல்களும் தம்மைத் தாமறிய மாட்டா. அது அறுச்சுவையும் தம்மையறியாவாறு போலென்க. அறுசுவை யுணவை ஒருவன் உண்டு அவற்றி னியல்பைக் கூறுவதுபோல, முப்பத்தாறு தத்துவங்களையும் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து அவற்றைப் பொருந்தி அவற்றி னியல்பையறியும் பொருள் உயிரென அறிக.

தன்னியல்பறிந்த மாணவர் ஆசிரியரை நோக்கி, நும தியல்பு யாதென்றருளிச் செய்க என்றனர். ஆசிரியர் கூறு வார், "கண்ணொளியொடு கலந்து பொருள்களைக் காட்டுங் கதிரவன்போல, உன் அறிவிலே பொருந்தி உனக்குப் பொருள்களை அறிவிப்பது நாம்; உயிரின் சார்பாலே பொருள் களை யுணரும் ஐம்பொறிகள் தாம் உயிரினாற் பொருள்களை அறிவதாக உணராமைபோல, உன்னுடைய அறிவிலே பொருந்தாமற் பொருந்தி உனக்குப் பொருள்களை யாம் அறிவிப்பதை நீ அறியாய்.

"அகர உயிரானது எழுத்துக்களெல்லாம் தோன்றுதற் குக் காரணமாய் நின்றாற் போல, நாமும் உயிர்க்குயிராகப் பொருந்தினோம். எல்லாவிடத்தும் நாம் நிறைந்து நின்று லொழிய உயிர் ஒன்றையும் அறிதலுமில்லை செய்தலுமில்லை" என்றார். பின்னர், ஆசிரியரை நோக்கி, மாணவர் கூறுவார்:- "பயன் கருதாத பெருந்தவமுடையார் காணும்படி நாத தத்துவ முடிவிலே அஞ்செழுத்தே திருமேனியாகக் கொண்டு நீர் நடித்தருள்வதெப்படி யென்றருளிச் செய்க" என்றார்.

ஆசிரியர் கூறுவார், பத்து என்ற எண்ணைக் குறிக்கும் யகரமானது ஐந்தெழுத்தினடுவே யுள்ளது. அது உயிரைக் குறிக்கும். உயிரின் கண் இறைவன் கலந்து பிறப்பறுத்தற் பொருட்டு ஆடல் புரிவதையே, சிவாயநம என்ற ஐந்தெழுத் துணர்த்தும்.

கூத்தப் பெருமானது திருவடியிலே நகரம் உள்ளது. உந்தியிலே மகரமுள்ளது. திருத்தோள்களிலே சிகரமும், திருமுகத்திலே வகரமும், திருமுடியிலே யகரமும் உள்ளன. உடுக்கு ஒலிக்குந் திருக்கையிலே சிகரமும், வீசுந் திருக் கையிலே வகரமும், அபயத்திருக்கையிலே யகரமும், நெருப் பேந்திய திருக்கரத்திலே நகரமும், முயலகனை மிதித்த திருவடியின் கண்ணே மகரமுமுள்ளன வென்பது ஒரு முறை.

ஓங்காரமே திருவாசியின் வடிவாகவுள்ளது. அவ் வோங்காரத்தை நீங்காத வைந்தெழுத்தே, அத்திருவாசியின் நிறைந்த ஒளியாகும். இதனைச் செருக்கற்றவரே அறிவர். அறிந்தார் பிறப்பற்றவராவர். படைப்பு, இறைவனது துடியின் கண் உண்டாவது; காப்பு, அபயத்திருக்கரத் துள்ளது. பிறிதொரு திருக்கையிலெடுத்த நெருப்பிலே ஒடுக்கம் உள்ளது. ஊன்றிய திருப்பாதத்திலே மறைப்பும் தூக்கிய திருவடியிலே அருளுதலும் உளவென அறிக.

எந்தையாராய் இறைவனது திருவடிகள், மாயைப் பாசத்தை உதறுவித்து, வல்வினைப் பாசத்தைச் சுட் டொழித்து, ஆணவ மலவலியை அறவே யொழியும்படி பொன்றுவித்து, திருவருளினையே உயிர்க்காதாரமாக்கி அன்பி னில் விளைந்த ஆனந்தத்திலே உயிரை அழுத்துந் தன்மை யன.

அருளே திருமேனியாகக் கொண்ட திருவம்பலத்தானுடைய திருக்கூத்தானது, ஞானவீட்டையே முடிவாக நாடிய பெருமுனிவர்களது மும்மலங்களையும் நீக்கி அவர்களுடைய தற்போதம் முடிந்தவிடத்தே நிலைபெற்று விளங்கும். அவர்கள் சிவானந்தத்தை முகந்து நுகருமாறு தனது அருட் திருக்கூத்தை இறைவன் செய்து காட்டி அருள்வன்.

சொல்லுக்கும் அறிவிற்கும் எட்டாத ஒரு முதல்வன் திட்பமிருந்த திருவைந்தெழுத்தால் அருட் திருமேனி கொண்டு பராசத்தியையே அம்பலமாகக் கொண்டு அருட் சத்தி காணும்படி ஆடும் திருக்கூத்தினை விரும்பிப் போற்றுவார்க்குப் பிறப்பு இல்லை.

இவ்வாறியம்பிய ஆசிரியரை மாணவர் நோக்கி "நாத முடிவிலுள்ள இறைவன் திருக்கூத்தினை நன்றாக உரைத்தருளினீர். ஐந்தெழுத்தின் உண்மைத் தன்மை யாது? ஐந்தெழுத்தும் எழுத்தாமாகில் அவை அழியுந் தன்மையன ஆகாவோ" என்றார். அப்போது ஆசிரியர் கூறுவார், மொழிகளிலே ஐந்தெழுத்தினை ஓதுங்கால் அதனைக் குறிக்கும் எழுத்துக்கள் அழிவெய்தும். அதன் பொருள் மாறாது நிற்கும். இறைவன், அருள், உயிர், மறைப்புச்சத்தி, மலம் என முறையே ஐந்தெழுத்திற்கும் பொருள் எனக் கொள்க. பக்குவப்பட்ட உயிர்கள் அருட்சத்தியின் துணைகொண்டு சிவத்தை அடைய விரும்புதலால் மறைப்புச் சத்தியைக் குறிக்கும் நகாரத்தைத் முதலில் வைத்து ஓதாமல் சிவத்தைக் குறிக்கும் சிகாரத்தை முதலில் வைத்து ஓதல் வேண்டும். அங்ஙனம் ஓதி நினைக்கில் ஆணவ இருள் நீங்கும்படி திருவருளானது உயிரைப் பொருந்தி, தனி நிலையையுங் கலப்பு

நிலைமையுங் கடந்த தூய நிலையை எய்துவித்து அதனைச் சிவத்தின்பாலுள்ள பேரின்பத்தின்பாற் சேர்ப்பிக்கும். ஐந்தெழுத்தே இறைவனது மறை, அருள்நூல், புராணம், ஆனந்த தாண்டவம், ஞான நிட்டையாற் பெறும் பரமுத்தி என்னும் இவற்றைக் குறிப்பதாகும்.

பரமுத்தி அடைந்தோர் பழத்திற் சுவையும், மலரில் மணமும், நெருப்பிற் சூடும், வீணையில் இன்னிசையும் போலச் சிவத்திற் கலந்திருப்பரென அருள் நூல்கள் இயம்பும்.

கட்டுற்ற நிலையில் தத்துவங்களெல்லாம் உயிரினிடத்தே வேறறக் கலந்து நின்றாற்போல, கட்டற்ற முத்தி நிலையில் உயிர்கள் சிவனிடத்தே இரண்டறப் பொருந்தி நிற்பனவென மெய்ந்நூல்கள் ஓதும். கதிரவன் முன்னிலையில் மதியின் ஒளி அடங்கி வேறு தோன்றாது நிற்றல்போல, தத்துவங் கடந்த முதல்வன் திருவடியில் உயிர் அடங்கிப் பேரின்ப உணர்ச்சியில் அழுந்துமென அறிக.

சிவத்தை உயிர் சென்றடையுமென்றால் அது பரம் பொருளின் நிறைவிற்கு மாறாகும். சிவன் சென்று உயிரைப் பொருந்துமென்னில், அங்ஙனம் பொருந்துவதன்முன் உயிரோடு கலவாது வேறாய் இருத்தல் வேண்டும். இவ் விரண்டுமன்றி எந்த முறையில் உயிரும் சிவமும் கலந்திருக்கும் என்னில், குருடனுக்குக் கண் திறக்குமுன் எங்குமுள்ள கதிரவன் ஒளி அவன் கண் திறந்தவுடன் அவனது கண்ணொளியொடு கலந்து நின்றாற் போல என்க.

முத்தியில் மும்முதலும் எவ்வாறுள்ளனவெனில், பேரின்பத்தைக் கொடுப்பது முதல்வன்; நுகர்வது உயிர்; நுகர்வதற்குத் துணை, மல சத்தி அடங்கி நிற்பது என

அறிக. உடம்போடு கூடியகாலே இப் பேரின்பம் அழியாது நிலைபெறுமாறு குரு லிங்க சங்கம வழிபாட்டைக் கடைப் பிடிக்க. அப்போது பிறவி ஏற்படாது. அவற்றில் ஈன்றணிய கன்றுடைய பசுப்போல மனமுருகி முழு அன்பு வைப்பவர்கள் மலத்தை முற்றிலும் ஒழித்திடுவர்.'

இங்ஙனம் செப்பியருளிய ஆசிரியரை நோக்கி மாணவர் கூறுவார் "அருட்கடலே! வற்றாத பிறவிக்கடலில் வீழ்ந்து அலையாமல் உமது திருவடியை அடைந்து வாழ்ந்தேன்" என்றார்.

உண்மைவிளக்கம் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# சிவப்பிரகாசம்

14

# சிவப்பிரகாசம்

இந்நூற் பாயிரத்துள் முதற்கண், காப்பும், கூத்தப் பெருமான், அம்மை, கணபதி, முருகர் என்போர்க்கு வணக்க முங் கூறப்பட்டன. பின்னர், சந்தானகுரவர் வணக்கங் கூறுஞ் செய்யுளிலே சீகண்டர், நந்திபெருமான், சனற் குமாரர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர் என் போர் உமாபதி சிவத்தின் முற்பட்ட கயிலாய பரம்பரைப் பரமாசாரியர்கள் என விதந்தோதப்பட்டனர். பின்னர், சிவப் பிரகாசநூலாசிரியரின் ஞானசாரியராய மறைஞான சம்பந் தருக்கு வணக்கந்தனியே கூறப்பட்டது. பராசர முனிவர் மரபில் வந்த சைவ சிகாமணியாராய்ப் பெண்ணாகடத் தலத்திற் பிறந்தவர் அவர் என்பது அறியலாகும்.

நூற் கருத்தினைத் தெரிக்குஞ் செய்யுளின்கண், சைவ சித்தாந்த உண்மையினியல்பு காணப்படும். புறச்சமயத் தவர்க்கு இருளாயும், அகச்சமயத்தவர்க்கு ஒளியாயும் காட்சி, கருதல், உரை என்னும் அளவைகளின் உண்மைக் கருத்தை விளக்குவதாய், 'பொன்னும் பணியும்போல வேற்றுமை யின்மையும், இருள்வெளிபோல முழுவேற்றுமையும், சொல் லும் பொருளும்போல ஒருபுடை ஒற்றுமை ஒருபுடை வேற்றுமையும் இல்லாமல், அருள்நூல் கூறிய அறநெறியின் பயனாய், உடலுமுயிரும், கண்ணொளியுங் கதிரொளியும், உயிரறிவுங் கண்ணொளியும்போல இரண்டறக் கலப்புரைக்

குஞ் சிறப்புடையதாய், வேதாந்தத் தெளிவாயுள்ளது சைவ சித்தாந்தமென்பது குறிக்கப்பட்டமை காண்க.

பின்னர், தீக்கையின் வகைகள் விளக்கப்பட்டன. உயிர்கள் மூவகைப்படுவர். மலமாத்திர முடையவர். அதனோடு வினையுமுடையவர்; அவற்றோடு மாயாமலமுமுடையர் என மூவகை காண்க. இறைவன் அவ்வவரை யாட்கொள்ளுதற் குரிய வடிவொடு தோன்றிப் பார்வையால், பரிசத்தால், உரையால், நினைப்பால், நூலுணர்த்து முறையால், யோகமுறையால், ஓமத்தால் பாச நீக்கம் நிகழ்த்துவன். ஓமத்தாற் செய்யப்படுந்தீக்கை, ஞானவதி, கிரியாவதி யென இரு வகைப்படும்.

சமயம், விசேடம், நிருவாணமென்ற மூவகைத் தீக்கைகளுள் சமயம் மந்திரத்திற்கும், விசேடம் பூசனைக்கும், யோகத்திற்கும் தகுதிதருவன. நிருவாணதீக்கை, ஆறத்துவாவின் சுத்தியால், மேலான அபரமுத்தி பரமுத்திகளை உயிர் பெறுதற்குரிய தகுதியைத் தரும். கிரியையென்று பேசப்படுவனயாவும் ஞானம் எய்துதற்குக் காரணமாகும். உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகமென்ற மூன்றிற்கும் இறைவனுலகி லிருத்தல், உடனிருத்தல், திருவடிவுபெறலென்ற நிலைகள்பயனும். ஞானமாவது, சிவாகம ஞானம், திருவருண் ஞானமென இருவகைப்படும். ஒன்று அபர ஞானம், மற்றொன்று பரஞானம்:—

சிவப்பிரகாச நூன்மரபு தெரிப்பார் கூறுவதாவது:— முதற் குரவராய மெய்கண்டார் சிவஞான போதம் இயற்றினர். அவர் ஞானப் புதல்வர் சிவஞானசித்தி விரித்தனர். அவர்களிருவர்களுடைய திருவடிகளை வணங்கி, அன்னோ

ளருளிச்செய்த உயர்நூலிரண்டினையும் விரும்பி நோக்கிக் கருத்தினுறைகின்ற திருவருளுடன், சிவநூலாகிய ஆகமத்தையுங் கலந்து பொதுவெனவும், உண்மை யெனவும் இருபகுதிப் படுத்து, நூறு விருத்தத்தால் குற்றமற்ற சிவப்பிரகாசமென்ற நூலியற்றுவேனாயினன் என்பது.

அவையடக்கங் கூறுவார் தெரிப்பது:— பழமை யானவை என்று சொல்லப்படும் எல்லா நூலும் முற்றிலும் நன்மையானவையல்ல. இன்று தோன்றிய நூல் என்று சொல்லப்படும் எதுவுந் தீயதாதலுமில்லை. மாசு பொதிந்த மணியைப் பார்த்தவுடன், மாசு, மணியின் குற்றமாகாதெனக் கொண்டு பொருணயங்கருதிச் சொற்குற்றமுதலியன பொறுப் பர், தலையாய தன்மையர். இடையாய தன்மையார், பழமையின் அழகினையாராய்ந்து அது புது நூலுட் காணப் படின் மகிழ்வர். குற்றம் குணமறியும் ஆற்றலில்லாதவர்கள் பலர் ஒரு நூலைப் புகழ்ந்தால், அதனைத் தாமும் போற்றுவர். பிறர் அதனை யிகழ்ந்துரைப்பதைக் கேட்பின், தாமுமதனை யிகழ்வர். இவர்கள் தமக்கென வொரு அறிவிலாராவர் என்பது.

## பொது அதிகாரம்

## முதற் சூத்திரம்

---

பதியிலக்கணம்:— சிவாகமம், வேதம், பிறமெய்க்கலை ஆகிய யாவற்றினுடைய கருத்தும், பதி, பசு, பாசம் என் னும் முப்பொருளை விளக்குதலே. பதியே மேலான பொருள். அது அருவம், உருவம், குணம், குறி யாது மின்றிக் குற்றமற்றதாய், ஒன்றேயாய், அழிவில்லாததாய்,

எல்லையற்ற உயிர்களுக்கறிவாகி, போக்குவரவிலதாய், அளவுட் படாததாய், அடைதற்கரிதாய், அடைதற்குரியதாய், சிறிய திற் சிறியதாய்ப் பெரியதிற் பெரியதாய் விளங்குவது. அதனைச் சிவம் என்பர் தெளிந்த அறிவினர்.

அச்சிவத்தின் பேராற்றலாய பராசத்தி, அன்பு, அறிவு, செயலென்னும் ஆற்றல்களை வெளிப்படுத்த, அவற்றைப் பொருந்தி இறைவன், குறித்தற்கரிய கருணையே திருமேனி யாகக் கொண்டு, வளர்தற்குரிய தூய மாயையாகிய குடிலையை மேவி, நாதம், விந்து முதலிய தத்துவங்களை உண்டாக்கிப், பல கலைகளையும் நவின்று, வினைக்கேதுவாய உடல், கருவி, உலகு, நுகர்பொருள் முதலியவற்றைச் செவ் விதின் உளவாக்கி, நிலைப்படுத்தி அவற்றை முடிவில் ஒடுக்கு வன். இவற்றின் பொருட்டு அவன் கொள்ளுந் திருமேனி அருவம், அருவுருவம், உருவம் என மூவகைப்படும்.

இறைவன், இது, அது என்று சுட்டியறியப்படாதானாக லானும், முதல் நடு இறுதியில்லான் ஆதலானும், குறைவற்ற ஞான நிறைவுடையோனாதலானும், தனதுண்மை பிறராலறிய வொண்ணாத் தன்மையனாதலானும், விருப்பு வெறுப்பில்லாத வனாதலானும், ஒப்பற்ற முதன்மையுடையானாதலானும், உயிர்க்குயிராய் நிற்றலானும், தான் கருதியதொரு வடிவத் தைத் தனதாகக் கொள்ளுவனென அறிக.

உலகமெல்லாம், ஒருவன், ஒருத்தி, ஒன்று என்ற மூவகைப்படத் தோன்றி, நிலை பெற்றுத், தத்தங் கால வெல்லையிலே ஒடுங்கும்; மீண்டும், உயிர்களின் மலங் காரண மாகத் தோன்றும். உயிர்கள் அச்சுமாறி உருவெடுத்துப் பிறத்தலு மிறத்தலுமுடையனவாகும். இவற்றை நோக்குங்

கால், இத்தொழில்களையியற்றுதல் அறிவில் பொருளாய மாயைக் கியலாமையாலும், உயிர்கள் தாமாக உடம்பெடுக்கு மாற்றலில்லாதனவாதலானும், வினையானது உயிர்களின் உடம்பைப் பொருந்தி நிற்றலானும், குற்றமற்ற பரம்பொரு ளாகிய இறைவனே எல்லாவற்றையும் படைப்பவன் என்பது தெளியப்படும்.

அயன் படைப்பவற்றை அரி காப்பன்; அவற்றை எமது கடவுளே முடிவாக ஒடுக்குவன்; ஆதலால் அவனே அயன் அரி முதலியோரை அவ்வவர் அதிகார நிலையில் நிறுத்துவன்.

அவராற்றுந் தொழிலாய படைப்புக் காப்பு என்ப வற்றை யியற்றுவிப்பன்; இவ்வாறு முத்தொழில் செய்யு முதல்வன் அவற்றால் விகாரப்பட மாட்டான். வானிலே எழும் ஞாயிற்றின் முன், தாமரை யொன்று பூக்கும்; மற் றொன்று மொட்டாக நிற்கும்; பிறிதொன்று வாடும். அவற் றால் கதிரவன் திரிபெய்தான். அதுபோல முதல்வனுமா மெனவறிக.

இத்தொழில்களை முதல்வன் திருவிளையாட்டாகக் கூறு வார். உயிர்களை இடர்க்கடலில் நின்றெடுத்துச் சிறந்த அருள் புரிதலே அத்தொழிற்குக் காரணமென்பர். உயிர்களை ஒடுக்குவது, அவைகட்குப் பிறப்பிறப்பினுறைய இளைப்பு நீக்கு தற் பொருட்டே. அவற்றைத் தோற்றுவித்தல், அவற்றின் மலம், வலியறுதற்குப் பக்குவப்படும் பொருட்டே; காத்தல், அவை நுகரத்தக்கவற்றை நுகர்வித்தற் பொருட்டே; மறைத்தல், நுகர்ச்சியில் நிலை நிறுத்தலாகும்; அருளல் அவைகட்குப் பிறவியறுத்துப் பேரின்ப நல்குதலேயாகும்.

இவ் ஐந்தொழிலும் இறைவன் திருவருட் செயலே. எல்லாம் அருளே யொழியப் பிறிதில்லை.

## இரண்டாஞ் சூத்திரம்

### பசுவிலக்கணம்

உயிர்க்கூட்டமானது எண்களிலடங்காததாய், அழிவில்லதாயுள்ளது. உயிர்கள் இருட்கட்டாகிய ஆணவத்திலழுந்தி, இருவினைகளின் றன்மைக் கேற்றவாறு இறைவன் கட்டளைப்படி, உயர்திணையாயும் அஃறிணையாயும் கருதப்படும் உடம்புகளெடுத்து, அவை வாயிலாக அளவற்ற நுகர்ச்சிகளையுடையனவாய், அவற்றை நுகருமாற்றானே மேலைக்குவித்தாய இருவினைகளைப் புரிந்து, பிறப்பிறப்பிற் சுழன்று, அநாதியே பொருந்திய ஆணவமலம் பக்குவப்படுங்காலம் வந்தபோது, முதல்வன் அருளால், பாச நீக்கம் பெற்றுத் தமது அறிவின்கண் விளங்கும் பதிஞானத்தின் உதவியால் இறைவன் திருவடியடையுந் தன்மையன.

### பாசவிலக்கணம்

ஆணவமலமென்பது பொருட்டன்மையால் ஒன்றேயாய் ஒவ்வொரு உயிரின்கண்ணும் நின்று ஒருகால் வெவ்வேறேயிலே நீங்கும் அளவற்ற சத்திகளுடையதாய், தன்னைக்காட்டும் இருளும் ஒளியென்னும்படி, மயக்கு விருளையுளதாக்கித் தன்னையும் காட்டாததாய்ச் செம்பினிற் களிம்புபோன்று உயிரைப்பற்றி நின்று, அழியாததாய், பாசங்கண் மூன்றினும் மூலமானதாய் உயிரின் அறிவை முற்றிலும் மறைக்கும்.

இந்த இருட்கட்டுக் கழலுதற்குரிய பருவம்வரை அது மறைத்தற்குத் துணையாய் நிற்பதாய இறைவனது மறைப்பாற்றலையும், மலமென்று கூறுப. அச்சிவசக்தி ஞானபக்குவமுற்ற உயிர்களை இறைவன் திருவடியை யெய்துவிக்கும் இரக்கமாகவுந் திகழுமென்றறிக.

உயிர்கள் நினைத்தற்கரிய பரமசிவனது பேரருளாகிய பராசக்தியாலே, தூயமாயையாகிய குடிலையினின்று சிவமுதலாகிய நாத தத்துவம் தோன்றும். அதன்கணின்று அருண்முதலாய விந்து தத்துவம் தோன்றும். அதன்கணின்று அருட்சிவ முதலாய சதாசிவ தத்துவந் தோன்றும். ஆண்டிருந்து அரசு முதலாகிய மகேசுர தத்துவந் தோன்றும். அதன்கணின்று தூயபுலமுதலாய சுத்தவித்தை தோன்றும். இந்த ஐந்து தத்துவத்தலைவர்கள் அவைகளிலே நிலைபெறுவர்.

இங்ஙனமே தூயமாயையினின்று ஒப்பற்ற வாக்காகிய நால்வகை மொழியுந்தோன்றுமென அருள்நூல் வல்லார் உரைப்பர்.

தூயமாயைக்குக் கீழுள்ள மாயை யெனப்படும் தூய்தன்மாயையானது, ஒன்றையொன்றுவ்வாத உடல்; கருவி, உலகம் நுகர்பொருள் என்னும் நால்வகைப்பட்டு வருவதாய், அழிவில்லாததாய், பொருட்டன்மையால் ஒன்றேயாய் எப்போதும் அருவாயிருப்பதாய் வினைகளொழியும் வரை உயிர்கட்குச் சூழ்நிலையாய், அறிவில்லதாய், நிலையாவதாய், தன்னிடத்துண்டாய தத்துவங்களெங்கும் பரவி, அவை விரிதற் கேதுவாய், அவை ஒடுங்குங்கால், தான் ஒடுங்காது நிலைபெற்று, ஒடுங்கு முயிர்கள் தங்கிடமாய்,

இறையருளால் தானும், மூவகைப் பாசங்களி னொன்றாய் மன்னியதாகும்.

இந்த அசுத்த மாயை யாதெனவினவின், இஃதே உலகிற்கு முதற் காரணம். இறைவனைத் தவிர வேறொன்றும் உலகிற்குக் காரணமில்லையெனின், அசித்தாய உலகம் சித்தாய முதல்வனிடத்துதியாது. மாயையினின்று உலகம் உண்டாவதாயின், முதல்வன் உலகிற்கு வினைமுதலாதல் எவ்வாறெனில், அசித்தாய் அருவாமாயுள்ள மாயை தானே உருவடையாது. இறைவனும் இந்த மாயையினின்றே உலகை உளதாக்குவன். மாயையின்றி உலகம் படையாமை முதல்வனுக்கு ஆற்றலின்மையை யுணர்த்துமெனின், மாயையும் நித்தப் பொருளாதலின், தன்றொழிலின் பொருட்டு அதைப் புதிதாக இறைவன் வேண்டிற்றிலன். அவன் அசித்தாய மாயையை தனது முதன்மையாலே விரித்தெவைபு மாக்குவன். மாயை புதிதாக அவனுக்கு முதன்மை கொடுக்கவில்லை.

இறைவன் உலகை ஒருபடித்தாய்ப் படையாமல், பறவை, விலங்கு, மக்கள் முதலிய பல்வேறு வகையாகப் படைப்பானே னென்னில், உயிர்களின் வினைக்கேற்றவாறு பல்வகைப் படைப்புக்கள் ஏற்பட்டன. வினைக்கேற்ப உடல் உளதாயின், இறைவன் ஒருவன், படைப்பின்பொருட்டு வேண்டப்படானென்னில், வினையென்பது அறிவில்லாதது. ஆதலால் தானே உடம்பைக் கொடுக்கவல்லதன்று. வினைப் பயனை நுகர்வது உயிராதலின், அவ்வுயிரே வினைக்கேற்ற உடம்பை எடுத்துக்கொள்ளுமென்னில், உடம்பொடு கூடினாலன்றி அறிவில்லாத உயிரும் சடத்தொகுதியான கருவி

களும் கூட்டுவாரொருவனின்றித் தாமே கூட இயலாமை தெளிவு.

துன்ப மிரும்படியாக உயிர்களுக்குக் கருவித் தொகுதிகளை இறைவன் அணைத்து வைத்தமை, வினைப் பயன்களை நுகர்வதற்கென்னில், வினையோ, மாயையோ, எது முற்பட்டு உயிரைச் சூழ்ந்ததென்னில், ஒரு வகைக் கட்டுமில்லாத உயிரை இவைகள் பற்றினால், இக்கேள்வி எழுதற்கு இடமுண்டு. உயிர் என்றுளதோ, அன்றே அதற்கு, ஆணவ மலம் உண்டு, ஆணவமலமுளதாகவே, நெல்லிற்குத் தவிடும் உமியும் போலக் கன்மமுமாயையும், அநாதியாக உள்ளன. இதுவே சைவநூற் கருத்து.

அசுத்த மாயையினின்று காலம், நியதி, கலை என்பனவும், கலையடியாக வித்தை, அராகம், முதலிய முதல்களும், அனந்த தேவரால் உளவாம். சீகண்ட ருத்திரரால் கலையினின்று மூலப்பகுதியுளதாய் அதுவே குண தத்துவமாய் விரியும். குணத்தில் நின்று புத்தி தத்துவமும், புத்தியினின்று அகங்காரமும் உதிப்பன. அகங்காரம், தெளிவு, செயல், தாழ்வு என மூவகைப்படும். தெளிவிலிருந்து, மனமும், ஐவகையறிவுப் பொறிகளும் தோன்றும். செயலினின்று, வினைப்பொறிகள் உளவாம். தாழ்வினின்று, தன் மாத்திரைகளும், தன் மாத்திரைகளினின்று, ஐம்பூதங்களுமுளவாம். ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னுங் குணங்கள் வான் முதலிய பூதங்களில், ஒவ்வொன்றாக மிகுதிப்பட்டுள்ளன. ஐம்பூதங்கட்குத் தெய்வங்கள்; அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன் என்பாரே. தோன்றிய முறையே தத்துவங்கள் ஒடுங்குவன.

கன்ம மலம் அல்லது வினைக்கட்டென்பது உயிரொடுக்கு முடம்பிற்கேதுவாய்ப், பல்வகை நுகர்ச்சிகளைச் சார்ந்துள்ளதாய், ஒரு நுகர்ச்சியின் முடிவையும், மற்றொரு நுகர்ச்சியின் தொடக்கத்தையும் உண்டாக்குவதாய், தொன்று தொட்டு வருவதாய், பல்வகைப்படுவதாய், படைப்புக் காலத்தே உயிர்கள்தோறும் பற்றி நிற்பதாய், மனமொழிமெய்களாலியற்றப்படுஞ்செயல்வடிவாய், உயிர்கள் உடம்பில் நிலைத்துள்ள காலத்தே புத்தி தத்துவத்தைச் சார்ந்திருப்பதாய், இன்பமுந் துன்பமுந் தோன்றுதற் கேதுவாய நன்மை தீமையாய், ஒடுங்குங் காலத்தே மாயையிற் பொருந்திக் கிடப்பதாயுள்ளது.

வினைப்பயன் வரும் வழிகள்:- இனம், வாழ்நாள், நுகர்ச்சிமுறை என்ற மூன்றுமாம். இவை உயிரிற் கலத்தல் தொன்று தொட்டு நிகழ்வது. ஒரு முறைபற்றியே வினைப் பயன் நுகரப்படுமாயினும், செய்த முறையிலே அவை பயன் றராமல், மாறியும் வந்து கூடும். வினைப்பயன்கள் தெய்வத்தால் வருதல், பிறரால் வருதல், தன்னால் வருதல் என மூத்திறப்பட்டு வரும். அறிவுடைப் பொருள்கள் வாயிலாகவும், அறிவிலாப் பொருள்கள் வாயிலாகவும் அவை வருவன. நன்மையும் தீமையுஞ் செய்யும் உயிர்க்கு அவை மேற்பிறவிக்கு வித்தாக அமையும். முன் செய்த வினையை இப்பிறப்பில் நுகர்ந்தால், மேற்பிறவிக்குக் காரணமாய வினை எவ்வினையென்னில், வினை நுகருங்காலுளவாகின்ற விருப்பு வெறுப்புக்களென அறிக. மேல்வரும் வினையும், மூலமாய வினைத் தொடர்ச்சியேயாமெனினும், யானெனதென்னு முணர்ச்சி முதிர்ந்து பயன் விளைக்குமென்ப.

உலகிலே வினைகள் அறிந்து செய்வினை, அறியாது செய் வினையென இருவகைப்படும். அவ்வினைகளால் இன்ப துன்பம் உளவாமாகலின், அவை காரணமாக நல்வினைப் பயன், தீவினைப்பயன் ஏற்படுதல் கூடும்.

நல்வினையும் தீவினையும் நினைவு, சொல், செயல் என்ற மூன்றின்கண்ணும் உளவாம். ஒருவினையால் மற்றொரு வினை யொழியாது. செய்த வினையின் பயனை நுகர்தலுந் தவிராது. ஒருவினையால் மற்றொரு வினையை நீக்கும் வழி சைவப் பொதுச் சிறப்பு நூல்களிலே சொல்லப்பட்டுள்ளன. அம்முறை நல்வினை செய்யில், தீவினை நீங்கும். இது விலைக்கு வாங்குந் தன்மையுமுடையது. அங்ஙனம் கழுவாய் செய்யாமல், இயற்கையாகச் செய்யப்படும் நல்வினையாற் றீவினை யொழிதலுமுண்டு. நான்முறை நடப்பதால், மிகுதி யான தீவினை யொழிந்து எஞ்சியது மேற்பிறவியொடு தொடர்புடையதாகும்.

மயக்கமாய பற்று மிகும்படி உயிர்களெல்லாவற்றோடும் உடன் நிற்கும் மூலமலமாகிய ஆணவமொன்று, அதனைப் பக்குவப் படுத்தற் பொருட்டுத் துணை செய்யும் இறைவனது மறைப்பாற்றல் ஒன்று, மாயை யொன்று, வினையொன்று, மாயாகாரியத்திரட்சி யொன்று, எனப் பாசம் ஐந்து என்பர். இவ்வைந்தும் நீங்காது இறைவன் றிருவருள் பெறுதலியலா தென்பர் அறிஞராயினோர்.

உயர்ந்துயர்ந்து செல்லும் உயிர்கள் பலவும் தனி நிலை, கூட்டுநிலை, தூய நிலை என்ற மூன்று நிலைகளை உடையன வாகும். கலை முதலிய தத்துவங்களொன்றும் பொருந்தா மல், அடையாளம், வடிவமியாதுமின்றி, ஆணவத்தோடு மாத் திரமுள்ளநிலை, தனிநிலை யென்னப்படும். இந்நிலையில் அறி

யுங்கருவிகளியர்து மின்மையால், ஒரு பொருளையு மறியக் கூடாமல் இருள் நிறைந்த இடத்திலே கண்ணனது அவ் விருண்மயமாய் நின்றாற்போல, ஆணவமயமாய் நின்று, அதனை விட்டு நீங்கு முறைமையில்லாமல், அழியாத விரிவுடைத்தாய் உயிர் நிற்கும்.

ஆணவ மலத்தினியல்பறியாத ஐக்கிய வாத சைவர் பாசுபதர் முதலாயினோர் கன்மம், மாயையென இருமலமே யுண்டென்பர். ஆணவப் பிணிப்பில்லாத தூய உயிர்க்கு மாயை, வினை யென்னும் பாசங்கள் பொருந்துவானேன்? மாயை முதலிற் பொருந்தியதா? வினைத்தன்மை முதலிற் பொருந்தியதா? என்ற வினாக்கள், விதை முந்தியதா? பனை முந்தியதா? என்ற வினாக்களை யொத்தனவாய் விடையிலவாய் நிலவும். தூய உயிரை இவைகள் பிணிக்குமாயின், முத்தி யென்று அருள் நூலாற், கூறப்படுவதியாது? அங்ஙனம் பாசம் பொருந்தப் பெறுதல் உயிரியல்பாமெனின், முடிவான விடுதலை இல்லையென்பதே முடிவாம்.

கலை முதலிய கருவிகளோடு சேர்ந்த காலை விளங்கும் உயிரினறிவு மாயையாலாய உலகினை யறிதலேயன்றித் தன்னை விளக்கு மியல்பிற்றன்று. கருவிகள் புணர்ந்த காலை அறிவு விளங்குமெனில், கருவிகளிலவாயகாலை அறிவு விளங் காமைக் கேது வென்னை? அறிவுப் பொருளாய உயிர்க்கு அறிவு விளங்காமைக் கேது வேண்டும். அவ்வேதுவே ஆணவ மலமென்பர் தெள்ளிய அறிஞர்.

ஆணவ மலமென்பதை உயிர் அறிதல் எவ்வாறெனின், கட்டுநிலையிலே உயிரினறிவானது தனக்கு வேறாய உலகத்தை புணர்வதாய் அதன் வழித்தாய் நிற்கும். திருவருட்

பதிவுற்ற காலத்தே இறைவனே யாவுமாய் நின்ற பழமையை உயிரறிந்து தன்னுணர்ச்சியிலதாய் நிலவும். கட்டு நிலையிலே தன்னோடு வேறின்றிக் கலந்துள்ள இறைவனது பேரறிவினை உயிர் உணராது. மாயை, கன்மம் என்பன இடையிடையே வந்து கூடும், நீங்கும். ஆணவ மலம் திருவருள் பெறுங் காலம்வரை நீங்காது. ஆதலால் ஆணவ வுண்மையைத் திருவருளினுதவியின்றி அறிய முடியாது.

ஆணவ மலத்தினை யொழித்தற் பொருட்டு, இறைவனருளால், கலை முதலிய மாயா காரியங்கள் உயிரைப் பொருந்தும். அதனால் அறிவு விளங்கும். அஃதெவ்வாறெனில் விளக்கொளியானது தகழி, நெய், திரி முதலிய பொருள்களை உடன்கொண்டு விளங்குதல் போலாம். உயிர்க்கு இவற்றைக் கூட்டி அறிவினை விளக்குகின்ற திருவருளை உயிர் அறியாவண்ணம் மறைப்பது, ஆணவமலம். ஆணவமும் மாயையும் இருளும் வெளியும் போலாம். தூய மாயையினின்று அறிவு விளக்கந்தருமியல்பிற்றாய், ஒளி வடிவாய், உயிரின் றன்மைக்கேற்ப, ஒரு சொல்லொலி எழுந்து பரவும். இது மூலாதாரத்திலெழுந்து மேற்செல்லும். அது சூக்குமையாம். அதன் கண்ணின்று பைசந்தியானது தோன்றி, சுழுத்தி யிடமாய சிந்தையைப் பொருந்தி, நிறங்கள் தோன்றப் பெறும்மயிருக்கும் மயில் முட்டையில் நீர் போல, எழுத்துக்களாய்ப் பிரிந்து தோன்றாமல், அடக்கமாயுள்ள உணர்வாய் நிற்கும். அதன் கண் நின்று மத்திமையென்னும் சொல்லானது பிராணவாயுவுடன் கலந்து உண்டாகக்கூடிய எழுத்தொலிகளை வரிசையாகப் பெற்றுச் செவிப் புலனாகாது உள்ளே உணர்தற் கேதுவாய ஒலியாய்க் கண்டத்திலே அடங்கி யொலிக்கும். சுழுமுனையில் உதானனும்

பிராணனுங் கூடிய விடத்து எழும் ஒலியாய்ச் செவிப்புலனு கும்படி நினைந்த பொருளைக் கூறுஞ் சொல், வைகரி யெனப் படும்.

இவ்வாறு நால்வகைச் சொற்களால் அறிவு விளங்கும். தூயதத்துவங்கள் ஐந்திலுமுள்ள ஐவர் இயக்கத்தால், உயிர் தன் வினைக்குத் தக்கவாறு அறியும் அறிவினையுடையதாகும்.

இனி, தூய்தன் மாயையிலுண்டாகுங் காலமும், நியதி யும் சுற்றெல்லைகள் போலப் பயிலும். கலையானது உயிரின்பா லுள்ள ஆணவ மலத்தைச் சற்று நீக்கிச் செயலாற்றலை யெழுப்பும்.

வித்தை என்னுந் தத்துவம், அறிவாற்றலை யெழுப்பும். பொறியர் லுணர்ந்ததைப் புத்தியானது வித்தை வாயிலாக உயிர்க்கு ஏற்பிக்கும். இத் தத்துவங்கள் தொழிற்படக் காரணம் அவற்றோடு கூடிய இறைவனது தூய சத்தியே.

அராக தத்துவமானது உயிர்களுக்கு அவைகளுடைய வினைக் கேற்றவாறு பெற்ற பொருள்களில் ஆசையைப் பெருக்கும். அரசன் கட்டளையானது ஒன்றைச் செய்தார்க்கு அதற்குரிய பலனை எய்துவித்தல்போல, நியதியானது உயிர் கள் செய்த வினைகளை வகுத்து அவரவர்க் குரியதாக்கும். காலமானது முத்திறப்பட்டு நுகர்ச்சியின் எல்லையையும், நுகர்ச்சிப் பயனையும், புது நுகர்ச்சியையும்—உயிர்க் குணர்த் தும். இத் தத்துவங்கள் இயங்குவதும் திருவருட் சத்தி யின் துணைகொண்டே யென வறிக.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவப் புணர்ப்பால் எய்தும் பயனை நுகரநிற்கும் உயிரின் நிலை, தோன்றல்முதல் அல்லது புருட தத்துவமெனப்படும்.

கலை முதலியவற்றின் சுத்தி கூறுமிடத்து இம்முதற்கும் சுத்தி கூறப்படும்; இது, கலை முதலியவைபோலத் தனித் தத்துவமன்று.

போகத்தைச் செய்யுங் கருவிகளின் தொடர்ச்சியைக் காட்டும் குணங்கள் அடங்கி விளங்காத மூலப் பகுதி, கலையி னின்று தோன்றும். அதனின்னுளதாய குண தத்துவம், சாத்துவிகம், இராசதம், தாமதமென மூவகைப்படும். ஒவ் வொன்றும் ஏனைய இருவகைக் குணங்களையுமுடைத்து.

நடுநிலையாக இருத்தல் சாத்துவிகத்தின் குணம். விரும் புதல் இராசதத்தின் குணம். வெறுத்தல் தமோகுணவியல்பு. அறிதல் சாத்துவிகத்தின் றொழில். முயலுதல் இராசதச் செயல். சோம்பல் தாமதத்தின் செயல். சாத்துவிகத்தில் நல்லதை விரும்பும் இராசதமும், அல்லதை விரும்பும் தாமதமு முண்டு. இராசதத்தில் பயன் கருதாமையாய சாத்துவிகமும், இடையூற்றை வெறுத்தலாய தாமதமு முண்டு. தாமதத்தில் வெறுக்கப்பட்டார்க்குத் தீங்கியற் றுமையும், அல்லன செய்தலும் உண்டு. அறிவுஞ் சாந்தமும், முதற்குண வியல்புகள். பரவுதலும் நெருக் குதலும் இரண்டாவதனியல்புகள். செருக்குந் தகாதன செய்தலும், மூன்றாவத னியல்புகள். இவைகள் அளவற் றுப் பல்வகையாய் விரிவன. முக்குணங்களும் அவற்றைச் சார்ந்த இயல்புகளும் உயிரிற் கலந்து நிற்பன. இம் முக் குணங்களுள், தாமதம், பொறிகட்குப் புலனுவனவற்றை உயிர்க்குக் கவர்தற் கேதுவாகும். இராசதம், போக நுகர்ச் சிக் கிடமாம். சாத்துவிகம் அதற்கு வேண்டப்படும் அறிவை விளக்கும். சாத்துவிக குணத்திற் பிறந்த புத்தி தத்துவ மானது புசித்தற்குரியவைகளைத் தீர்மானிக்கும். புத்தி

புலன்களோடு பல்வகையாக ஒற்றுமைப்பட்டு ஐம்பது வகைப் பாவகமும் இறையருளால் இயற்றும். இராசத மிருதியிலுதிக்கும் அகங்காரத் தத்துவமானது பிராண வாயுவை இயக்குவதாய், அகந்தைக் குறித்தாயுள்ளது. அது என்னைத் தவிர எனக்கு ஒப்பார் ஒருவரு மிவ்வுலகிலில்லை யென்ற உணர்ச்சியை உளதாக்கும். புலன்களை நுகரு மிடத்து அது விருப்ப வடிவாய் முற்பட்டு நிற்கும். மன மானது பற்றிய தொன்றை நினைத்து என்றும் நிலைப்படாது சென்றுகொண்டிருக்கும் இயல்பிற்று. ஆதலால் ஐயப்பாடு மனத்தின் றன்மை. சித்தமென்பது, நினைவு மாத்திரமே. அது மனத்தின் பகுதியாயடங்கும்.

செவி, மெய் (தோல்), கண், நா, மூக்கு என்னும் ஐம் பொறிகட்கும், முறையே ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற் றம் புலனுவன. வினைப்பொறியாய சொல், கால், கை, குதம், குறி என்னும் ஐந்திற்கும் சொல்லுதல், செல்லு தல், இடுதல், கழித்தல், மகிழ்தல் என்பன தொழிலாவன.

நுட்பமாய ஐம்பூதங்களாய தன்மாத்திரைக ளென்னப் படும் ஐந்தும், ஐம்பொறிகட்கு ஆதாரமாகவுள்ள ஐம்புலன் களை உயிர் நுகரும்படி, தம்முடைய வடிவில் அவற்றைக் கொண்டுள்ளன. வெளிப்படையான பூதங்களில் வான், பிற பூதங்கட்கு இடங்கொடுக்கும் தன்மையது. காற்றானது இயங்கிப் பிற பூதங்களைத் திரட்டும். தீயானது பிற பூதங் கட்கு வெப்பத்தைக் கொடுத்து, அவற்றைச் சூட்டா லொன்று படுத்தும். நீரானது குளிர்ந்து மென்மை கொடுக் கும். நிலம் வலிதாய்ப் பிறவற்றைத் தாங்கும்.

ஐந்து தூயதத்துவங்கள், ஏழு கலப்புத் தத்துவங்கள், இருபத்துநான்கு பிரகிருதி தத்துவங்கள் என்னும் முப்பத்

தாறு தத்துவங்களினிடையே மயங்கி, உயிர் பெரிய துய ரத்தை நீங்கரும். உடம்பு பிரிய நேருங் காலத்தே, பாம்பு சட்டை கழற்றுவது போலவும், முட்டையினின்று குஞ்சு புறம்போதல்போலவும், நனவிலுள்ள அறிவு கனக்காலத்து வேறுபட்டாற் போலவும், தூலவுடல் நீத்து, கலை முதலிய தத்துவங்களாலாய நுண்ணுடம்போடு சென்று, வினைப்பயன் களை நுகர்தற்குரிய உடம்புகளைப் பொருந்தி, மேல், கீழ் உலகங்களிலே அவற்றை நுகர்ந்து இறைவனருளால் மீண் டும் நிலவுலகடையும். உலகத்திலே எடுக்கும் உடம்பு, பூத பரிணமம்; நரகத்திலே எடுப்பது பூதவுடம்பு; சுவர்க்கத்தி லெடுப்பது பூதசாரம்.

முட்டையில் தோற்றம், வேர்வையிற் றோற்றம், வித்து வேர் முதலியவற்றிற் றோற்றம், கருப்பையிற் றோற்றம், என்ற நால்வகைத் தோற்றத்துள், தாவரம், ஊர்வன, நீர்வாழ் வன, விலங்கு, பறவை, மனிதர், தேவர், என்னும் எழு வகைப் பிறவியின்கண், தாவரம், பத்தொன்பது நூறாயிர யோனி பேதமும், ஊர்வன, பதினைந்து நூறாயிரப் பிறப்பு வேற்றுமைகளும், நீர்வாழ்வன, பறவை, விலங்கு ஆகிய மூன்றிலொவ்வொன்றும் பத்து நூறாயிரப் பிறப்பு விசேடங் களும், மனிதர், ஒன்பது நூறாயிர பேதமும், தேவர் பதி னொரு நூறாயிர பேதமு முடையன.

இத்தகைய பல பிறவிகளிலே இறைவன் றிருவருளாற் பிறந்திறந்து நல்வினை தீவினைகளைச் செய்து, அவற்றின் பயனை நுகரும் நிலை சகல நிலை யெனப்படும். நுகர்ந்தொழி யாது முற் பிறவிகளிலே ஈட்டப்பட்டு நுகரக் கிடப்பதாய இருவினைப் பயனாகிய இன்ப துன்பங்களை ஒரு காலத்திலே நுகர்தல் ஏற்பட்டு, முன் செய்த வினையின்கண்ணும் இனிச்

செய்யும் வினையின்கண்ணும், சமமாகிய வெறுப்பு பதிபுண்ணிய விளைவால் தோன்றும். அப்பொழுது உயிர்கள் உலக நெறியிலே உழன்றகாலை அவற்றை உய்விப்பான் சினங் கொண்ட இறைவனது மறைப்புச் சத்தியானது, உவப்புடைய அருட் சத்தியாய் விளங்க; உயிரின்கண் அருள் வீழ்ச்சி யேற்படும்.

அவ் வருள்வீழ்ச்சி நான்கு வகைப்படும். அவை மிகு மென்மை, மென்மை, விரைவு, மிகுவிரைவு என்பன. அவற்றினியல்புகளை அருணூல்கள் சரியை கிரியை யோகங்களை விரும்பியவர்க்குத் தெளிவாக உணர்த்தும். ஞானத்தை விரும்பிய நாலாம் அருள்வீழ்ச்சி யுடையார்க்கு இறைவன் குருவாய் வந்து மயக்க மிகுந்த தனிநிலை கலப்பு நிலைகள் ஏற்படாவண்ணஞ் செய்து, பாச நீக்கத்தைச் செய்வன். பாசம் நீக்கிய அந்நிலை சுத்தாவத்தை அல்லது தூயநிலை எனப்படும்.

முத்திகள் பல சமயத்தாரால் பலவகையாகக்கூறப்படும். பெண்டிர் போகந் துய்த்தலே முத்தியென்று உலகாயதனும், உருவ முதலிய ஐந்து கந்தங்களும் கெடுதலே முத்தியென்று சௌந்திராந்திகனும், மூவகைக் குணமும் அடங்குவதே முத்தியென நிகண்டவாதியும், செயலறுவதே முத்தியெனப் பிரபாகரனும் ஆணவங் கெடுவதே முத்தியெனப் பேதவாதிகளும், உடம்பு நித்தியமாகப் பெறுவதே முத்தியென உருவசிவசமவாதியும், பிரகிருதி புருடனின் வேறென அறிவதே முத்தியெனச் சாங்கியனும், உயிர் கெடுவதே முத்தியெனப் பாற்கரியனும், சித்திக ளடைவதே முத்தியெனச் சித்தரில் ஒரு சாராரும், கல்லுப் போற் கிடப்பதே முத்தியெனப் பாடாணவாதியும் கூறுவர். அவையெல்லாம், குற்

றம் நீங்காத முத்திகளே. மும் மலமும் நீங்கப்பெற்று உயிர் திருவருளோடு கலந்து எய்து முத்தியே சிறந்த முத்தியாம் என்க.

## உண்மை யதிகாரம்.

---

இதுவரை கூறப்பட்டது முப்பொருள்களின் பொது வியல்பு. இனி, உயிரறிவினியல்பு, உயிரிற் பொருந்திய ஐந்து உணர்வெல்லைகளினியல்பு, இறைவன் உயிரினை அறிவிக்கு முறை, சிவஞானத்தின் உண்மை, அந்த உயர்ந்த ஞானத்தின் பயன்கள், இறைவன் அஞ்செழுத்து, சிவத்தை அணைந்தோர்க ளியல்பு என்பவை திருவருட் டுணைகொண்டு கூறப்படும்.

உயிரறிவினியல்பு:— உயிரானது பருவுடலிலே நிலைபெற்று, பொறிகளின் வாயிலாக அவற்றிற்குப் புலனும் பொருளை யறிந்து, அறிந்ததன்கண் அழுந்தும்; அப்பொருளைத் தவிர, வேறொன்றையும் அது அறியாது. உயிர், கலப்பு நிலையில் படிப்படியாக அறியுந் தன்மையின் நீங்கி ஆணவ மலத்தின் மறைப்பின் அளவிற்கு ஏற்ப ஐவகை உணர்வெல்லைகளைப் பொருந்தும்.

இவற்றுள், கடைசி நிலை கரணங்களோடு கூடாத உயிர்ப் படக்கம் என நூல்கள் உணர்த்தும். உடம்பு, பொருள்களைத் தானே அறியமாட்டாது. அது அறிவில்லதாகலின், ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு புலனையறியு மியல்பிற்று. ஆதலின், ஐம்பொறியுமே அறியுமென்பது தவறு. மனம், முதலிய அகக் கருவிகள், தம்பாற் பொறிகளின் வழியாகப்

புகுந்தவற்றையே அறிகின்றன. பிராணவாயுவும் அறி வில்லாததே. ஆதலால், கட்புலனாகாத வினைப்பயனாலுண் டான உடம்பினுள்ளே பொருந்தி உயிரானது தனது அறிவி னாலே, இறைவன் அறிவிக்க அறியும்.

உயிர் இறைவனால் அறிவிக்கப் பெறாது, தானே அறியு மியல்பினது என்னில், அதற்குப் பொறி முதலிய வாயில் களின் உதவி தேவையில்லை. உயிர் அறியுந்தன்மையில்லாத தெனில், அதற்கு வாயில்கள் எதற்காக? அவைகள் அறிவைக் கொடுக்குமென்னில், அவை சடமாதலின், அறிவைக் கொடுக்கமாட்டா. இறைவன் உயிர்க்கு அறியுந் தன்மையை நல்குவனென்னில், உயிர் சடமா? சடத்திற்கு அறிவைக் கொடுத்தல் இயலுமா? உயிர் சடமுமன்று, சடத்திற்கு அறி வளித்தலுமியலாது.

உயிர் தன் அறிவினால், வாயில்களினுதவிகொண்டு அறிந்தனயாவும் நிலையில்லாதனவென்றறிக. இவற்றின் வேறாய நிலையுடைய முதற்பொருள் உயிரறிவினால் ஒருக்காலு மறியப்படாதாயின், அதனால் உயிருக்கு ஆவது ஒன்று மில்லையாம். உயிரின் பழமையான அறிவு, ஒன்றை வாயில் களால் முற்பட்டுப் பொருந்தி அதன் வண்ணமாய் நின்று, சுட்டியறியும். சுட்டறிவாலறிந்த பொருள்கள் நிலையிலா தனவே; நிலையுடைய பரம்பொருளானது உயிரின் சுட்டறி வினால் அறியவொண்ணாதது.

எந்த அறிவு, அசத்துப்பொருளை அறிந்தது எனில்; உயிரினறிவு, தானே அவ் அசத்தை புணராது. ஈசன் அசத்தையறியும் சுட்டறிவுடையனல்லன். அசித்துப் பொருளும் அசத்தை யறியமாட்டாது. உயிர் கருவிகளோடு பொருந்தினமாத்திரத்தில், தானே ஒன்றையறியாது. அசத்தி

ன்றிவு திருவருளிற் பொருந்காது. முற்றறிவுஞ் சுட்டறிவு மிறைவனுக்குண்டென்னில், அவையிரண்டும், ஒளியு மிருளும்போல் மாறுபாடுடையன, ஆதலின் அங்ஙனங் கோடல் தவறு. இறைவன் அறிவித்தவாறே அறியவல்ல ஆன்மவறிவானது ஆணவமலத்தாற் றடைப்பட்டு வாயில்களின் வழியாய்ச் சுட்டறிவாய் நிலையாதனவற்றை அறியும்.

சத்து இன்னதென்று அசத்து அறியமாட்டாது. அசத்தை அவ்வாறறிந்து அகனிநீங்கவேண்டிய அவசியம் சத்துக்கில்லை. சத்து இதுவென்றும் அசத்து இதுவென்றும் ஆய்ந்தறிகின்ற உயிரானது, இருளொடு சார்ந்து இருளையறிந்தும், ஒளியொடுசேர்ந்து ஒளியை அறிந்தும் அவையாகமாட்டாத கண்ணொளியினியல்புடையது. சத்தாகிய திருவருளோடு கூடி நின்று அசத்தை நீக்குந்தன்மை உயிர்க்கிருத்தலாலும், உயிர் இரண்டினையு மறிதலாலும், அது சதசத்தெனப்படும்.

பொருள்களை விளக்கும் ஞாயிறு, திங்கள், தீயென்பவை தாமே கண்ணுக்கு ஒளியைக் கொடுத்துப் பொருள்களைக் காட்டும் என்னில், பொருளை விளக்கும் ஒளி தோன்றுவதன் முன், கண்ணிற்கு இயற்கை ஒளி இல்லையென்றவாறாகும். விளக்குகின்ற ஒளி பொருந்திய பொருள்களைக் கண்ணொளியானது அவ்வொளியின் வேறாய் நின்றே காணும். ஆனால் பின்னையதின் உதவியின்றி முன்னையது ஒன்றையுங்காணாது. கண்ணொளி விளக்கொளியொடு கலந்தே பொருள்களைக் காணினும், இரண்டும் பொருட்டன்மையால் ஒன்றல்ல என்பது தெளிவு.

உயிர் உடம்பிலே ஓரிடத்திலிருந்துகொண்டு பொருள்களையறிதல், உடம்பெங்கும் நிறைந்தறிதல், எங்கும் நிறைந்த

உயிர் உடம்பிலும் இருந்தறிதல், முதல்வனுதவியின்றித் தானே தன்னறிவாற் பொருள்களையறிதல், அறிவில்லாத கருவிகள் அறிவை உயிர்க்குக் கொடுக்க அறிதல் என்ற கொள்கைகளைச் சிறந்த அறிஞர் எடுத்துப் பேசமாட்டார்கள்.

ஆய்ந்து பார்க்குமிடத்து, உயிர் பொருள்களை அறியுந் தன்மை, பளிங்கானது சார்ந்ததன் வண்ணமாதல் போலு மென்பது புலனும்.

கலப்பு நிலையிலே உயிர் எய்தும் ஐந்தவத்தை, கீழாலவத்தை யெனப்படும்.

உணர்வெல்லைகளினியல்பு

துரியாதீத நிலையில், உயிரானது எண்ணுதற்குரிய கருவிகள் யாதுமிலாது, புருடதத்துவமாய்க்கிடக்கும். துரிய நிலையில், அதனோடு பிராணவாயுமாத்திரம் பொருந்தி நிற்கும். சுழுத்திநிலையில், பிராணவாயுவொடு சித்தமும் பொருந்திநிற்கும். கனவு நிலையிலே, இவற்றோடு, ஐம்புலனும், ஐந்தொழிலும், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய மூன்றும் பொருந்தி நிற்கும். மற்றைய ஒன்பது வாயுக்களும் பொருந்தி நிற்கும் என்ப. நனவிலே, அறிவுப் பொறிகளும், வினைப் பொறிகளும், உடன் அணைந்து நிற்கும்.

இந்த முறையாக ஐந்தவத்தைகளிலுந் தொழிற்படுங் கருவிகளையெல்லாம் ஐந்து உடம்புகளிலும், மூலாதார முதலிய இடங்களிலும் தொழிற்படு முறைமையறிந்து, நிலையாதனவாய்ப் பிறவிக்குக் காரணமாயவற்றை ஒழிப்பதற்குரிய பயிற்சி செய்தால், திருவருளாற்புலனும் தூய உணர்ச்சி

யெல்லைகளாய ஐந்தவத்தைகளை உயிர் தலைப்படும். அவற்றை அனுபவத்தாலறிந்து கொள்ளுக. உயிர்ப்படக்கமாகிய துரியாதீதமானது, ஆணவத்தோடு மாத்திரங்கூடி நிற்குந் தனிநிலையின் தன்மையது. நனவானது கலப்பு நிலையின் றன்மையது. நனவிலே தனிநிலையுங் கூட்டு நிலையும் இல்லாத அதீத நிலை, உயிரின் தூயநிலை ஆகும்.

## உணர்த்துமுறை.

உயிரானது, ஐம்பொறிகளிலொன்றும், அதற்குச் சார்பாய ஐம்பூதங்களிலொன்றும், உட்கருவிகள் நான்கும், கலை முதலிய தத்துவங்கள் ஐந்தும் ஆகிய இவற்றைச் சார்ந்து ஒரு பொருளையறியும். இந்த முறையாலன்றி உயிர், ஒன்றையு மறியமாட்டாது. உயிரையின்றித் தத்துவக்கூட்டங்கள் தொழிற்படமாட்டா.

தனக்கென அறியுமாற்றலில்லாத உயிரானது, தத்துவங்களை அறிந்து சாரமாட்டாது. அறிவித்தாலும் அறியுந் தன்மையில்லாத தத்துவங்கள் உயிரை அறிந்து அதனைச் சாரமாட்டா. உயிரானது சார்ந்த தத்துவத்தின் தன்மையே தன் வடிவாகப் பெற்று நிற்கும். இறைவன் கருவிகளை உயிர்க்குக் கூட்டுஞ் செயலால், உயிர், இங்கு பேசப்படுந் தத்துவ சம்பந்தமான எல்லாவற்றையும் நுகரும்.

ஐம்பொறி வாயிலாக நுகரும் புலன்களை உயிரானது மனத்தைத் துணையாகக் கொண்டறியும். முதல்வனது பேரறிவைத் துணையாகக்கொண்டே உயிர் அவற்றை அறியுமென்னில், மனம்போல அது கருவியாமென்பது முடியும். அங்ஙனமாயின், முதன்மை உயிர்க்குக் கூறவேண்டியதிருக்கும். எங்கும் நிறைந்த இறையறிவு உயிரின்கட் பொருந்திப்

பொருள்களையறியுமென்னில், உயிர் அறியவேண்டியதற்குப் பதிலாக முதல்வன் அறிவனென்பதாம். அது ஒருவன்உண்ண வேண்டியதற்குப் பதிலாக, மற்றொருவன் உண்டானென் பதை யொக்கும். கதிரவன் இரவின் இருளை நீக்கிய அளவிலே இருளில் மறைந்திருந்த பொருள்களின் நிலையைக் கண்டு அவற்றை மனிதர் அடைவதுபோல, தனி நிலைக் கண் உள்ள அறியாமை திருவருளால், கலைமுதலிய கருவிகளினுதவி கொண்டு, நீங்கப் பெற்றபோது, உயிரானது மகிழ்ந்து, தனக்குள்ளே அறிவின்கண் மன்னுந் திருவருளையும் மறந்து பொருள்களையறியும்.

மனமுதலிய வாயில்கள், உயிரின் சார்பாற் பொருள் களையறியும். தாம் அறிவது உயிரினாலென்பது அவை அறியா. அவைபோல, உயிர்கள் பொருள்களை யறியுங்கால், தாம் அறிவது முதல்வனாலென்பதை அறிந்திடமாட்டா. உயிரின் பண்டை வினையினியல்பிற் கேற்றவாறு அதன் பயனை நுகரும் வண்ணம் முதல்வனே செய்வன். அதனால், அவன் குற்ற முறுவானல்லன்.

## ஞானவாய்மை

பொருள்களை விளக்கும் வாயில்கள் ஒன்றுமில்லையா யின், உயிர் எதனையும் அறியமுடியாது. ஆனால் இவ்வாயில் களைக் கொண்டு மெய்யறிவினைப்பெற முடியாது. முற் பிறவிகளிலே தேடிய நற்றவப் பயனாக; முதல்வன் அருட் டிருமேனி கொண்டெழுந்தருளி, இவ்வாயில்களாய கட்டினை நீக்கி, தன் செம்மலர்ச் சேவடி யடையுமாறு, உண்மை ஞானத்தை உதவியருளுவன்.

பளிங்குக்கு, இயற்கையாய் விரிந்த ஒளியையும், பல நிறங்களோடு பொருந்தி அவற்றின் றன்மையதாய் விளங்கு

மியல்பையும் ஈந்து பளிங்கின்றன்மையும் பன்னிறவியல்பும் இல்லாதக் கதிரவனொளிபோல, உலகிற் பயிலும் அறிவுள்ளது மில்லதுமாயவற்றின் றன்மை தன்மாட்டுப் பொருந்தப் பெறாது நிலைத்த இன்பத்தைப் பெறுதற்கு ஏதுவாய் யாண்டும் நிறைந்த இறை ஞானமே உண்மை ஞானமாமென்று நல்லோர் கூறுவர். உயிர் ஆணவமலப் பிணிப்புண்டு நிற்கும்போது மாயை, தூயமாயை, ஒழியா இருவினை என்பன ஆணவத்திற்குக் கருவியாய் நிற்றலின் அவையும் ஆணவம்போலப் பாசம் எனப்படும். உயிர் ஆணவம் நீங்கி அருளோடு நின்றவழி அவை பாசத் தன்மை நீங்கி அருள் மயமாய் நிற்கும்.

## ஞானத்தால் வரும்பயன்.

சிவஞானத்தைப் பெறுதலால் வரும் பயன்கள் படிப்படியாக எய்தற்குரிய பத்துச் செய்திகளெனப் பேசப்படும். முடிந்தபயன் வரம்பிலின்பமே. உயிர்க்காட்சி, உயிர்த்தூய்மை உயிரின்பேறு என்ற மூன்றும் பாசம் நீங்கும்படி ஞானத்தைப்பற்றுதல், தன் செயலறுதல், சிவரூபத்தினழுந்துதல் என்ற மூன்றினாலும் முறையே பெறப்படும்.

திருவருளுதவியின்றித் தானே இயற்கையாக எதனையாவது அறியும் அறிவு இல்லாதபோதிலும், உயிரானது தன்னறிவினாலே எல்லாவற்றையும் அறிந்ததாகக் கருதி, அவற்றின் பயன்களை ஒவ்வொன்றாக நுகரும். இது கட்டுற்ற காலத்தில் நிகழ்வது. கட்டு அறப்பெற்று மெய்யுணர்ச்சியடைந்தபோது தன்னுடைய அறிவானது இறைவன் அருளால் கருவிகள் வாயிலாகப் பொருள்களை அறியும் முறையையும், அம்முறையின் வைத்துத் தன்னுடைய இயல்பையும்

சிவஞானத்தோடு சார்ந்த வண்ணமாய் நின்று அறியும். அது உயிர்க்காட்சியெனக் கூறப்படும்.

தத்துவங்களின் தன்மைகளை அறிந்தாராயுங்காலை அவை தனக்கு வேறான சடப்பொருளென்னும் அறிவானது தோன்றும். அங்ஙனம் அறிதற்குத் துணை செய்வது உயிரின் அறிவினை விளக்கும் சிவஞானமே. இங்ஙனம் ஆராய்ந்தறியும் சுட்டறிவானது நீங்கும் வண்ணம் சிவஞானத்தோடு உயிர் அத்துவிதமாய் நின்றகாலை அது தூய்மையடைகின்றது. அப்போது தூய ஞானத்தின் ஒப்பற்ற முதல்வனுடையகாட்சி ஏற்படும்.

தூய சிவஞானத்திற்கு வேறாக அதன் முதல்வனைப் பற்றிப் பேசுவதெதனாலெனின் இறைவனது திருவருளே ஞானமாகும். எங்கு நிறைகின்ற கதிரவன் ஒளியானது கதிரவனையின்றி நில்லாமைபோலக் குற்றமற்ற முதல்வனையின்றி அருளும் நில்லாது. ஆகலின் முதல்வனைச் சிவனென்றும் அவனதருளைச் சத்தியென்றும் அறிக. இறைவனது தூய சத்தியானது அறிவுப்பிழம்பாகவுள்ளது. அது சிவபரம் பொருளுக்கு வேறாகத் தனித்து நில்லாது. எங்கும் நிறைந்த இருளை நீக்கிக்கதிரவனைக் காட்டும் அவனதுகதிரொளிபோலச் சத்தியானது உயிரை அளவிலாக் காலந்தொட்டுக் கட்டுப்படுத்தியுள்ள மும்மலங்களின் வலியை அழித்துச் சிவபெருமானை உயிரினுக்குக் காண்பிக்கும்.

வலிமையில்லாதவர்கள் வலிமைமிக்கபேயினால் பிடிபட்ட காலை அவர்களிடத்தே அப்பேயின் வலிய செயல்கள் காணப்படுதல்போல, எல்லாவற்றையும் அறிந்த இறைவனுடைய அருட் சத்தியானது உயிரின்கட் பதிந்தபோது,

அவ்வுயிரின்பால் இறைவனுடைய செயல்களனைத்தும் நடைபெறவேண்டுமாதலின் இறைவனது ஐந்தொழில்களையும் உயிர் ஆற்றவல்லதாகல் வேண்டுமென்று கூறுதல் பொருந்தாது. குருடராயும் ஊமையராயும் முடவராயும் இருப்பவர்களைப் பேய்பிடித்துக் கொண்டதனாலே அவர்கள் பார்க்கவும் பேசவும் நடக்கவும் செய்யவல்லவர்களாவார்களா? ஆகமாட்டார்களன்றோ! ஆதலால் பேய்ச்சார்பு சாரப்பட்டவனிடத்தே உள்ளவற்றை விளக்குமேயன்றிப் பேயின் தன்மையை முற்றிலும் அவனுக்குக் கொடுத்துவிடாது. அதுபோல உயிர்களிடத்துப் பொருந்திய திருவருளாகிய இறைஞானம் உயிர்களிடத்து உள்ளவற்றையே நன்கு விளக்கும். இறைவன் உயிரினைத் திருமேணியாகக் கொண்டு தானே தனதைந் தொழில்களையும் நடத்துவனென்றறிக. உயிர்க்கு ஐந்தொழில் செய்யும் ஆற்றல் எக்காலத்துமில்லை.

கலப்பு நிலையில் கலை முதலிய தத்துவங்கள் உயிரினைப் பொருந்துவதால் ஏற்படும் சுட்டறிவின் தன்மையை அறிந்து அச்சுட்டறிவிற்குக் காரணமாகிய பாசங்களை விட்டு நீங்கிய அருள் நிலையில், கருவிகளின் சார்பு ஏற்படாத வகையாக அவ்வருளில் அழுந்தி நிலைபெற்ற விடத்தே எங்கும் விரிந்த அறிவாகிய மேலானபயன்தோன்றும்.

அதனைப்பெற்றுச் சிவத்தை அடைபவர் சிவமேயாகி விடுவார்கள்; அவர் தமக்கு வேறாய பயன் தோன்றுவதற்கு இடம் இல்லை எனில்; அது பொருந்தாது.

சிவமாயவிடத்து உயிரென்பது இல்லையாய் முடியும். கட்டுற்ற நிலையில் உயிர்கள் தம்மைக் காணமாட்டா. தூய நிலையிலும் தமது விரிந்த அறிவைத் திருவருளினாற் காணாராயின் உயிர்கள் இறைவனது திருவடிப் பேரின்பமடை

வதற்கேதுவாகிய அறிவைப்பெறுதலுமின்று. அதனால் திரு வடிப்பேரின்பத்தை அடைதலுமின்று என்பது ஏற்படும். ஆதலால் உயிர் சிவமேயாகி விடுமென்பது பொருந்தாது.

தத்துவங்களாலாகிய கருவிகளோடு கூடாமலும் கருவிகள் யாதுமின்றி ஆணவங் காரணமாக எழுந்த அறியாமையெனப்படும் அதீத நிலையினை யடையாமலும் தன்னறிவின் கண் விளங்கிய உயர்ந்த சிவஞானத்தினாலே உயிர் தனை செயலற்று நின்ற விடத்தே தோன்றுந்தனிப் பரம் பொருளோடு அத்துவிதமாய் நிற்றலை நனவில் மேல்நிலையெனப்படும். அதனைச் சாக்கிராதீதமென்பர். உயிர்களைச் சார்ந்த கருவிகள் தாமே யொடுங்கமாட்டா. உயிரானது தன்னுடைய அறிவினாலே அவைகள் ஒடுங்கும் வழியறிந்து ஒடுக்கினால் அவை ஒடுங்குமென்னில், அவை ஒடுங்கிய காலை அவற்றை ஒடுக்கிய உயிரறிவு ஒடுங்காது நிலை பெறவேண்டும். ஆனால் கருவிகள் ஒடுங்கியவுடனே உயிரினறிவும் ஒடுங்கிக் கேவல நிலை ஏற்படுகின்றது. ஆதலால் உயிரின் அறிவுக்கு வேறாகிய திருவருளின் உதவி கொண்டு கரணங்களை ஒடுக்கலாமேயன்றி மற்றெவ்விதமும் அவற்றை ஒடுக்கமுடியாது. அவற்றின் வேறாகிய மெய்ப்பொருளாகிய சிவத்தை அறியவும் முடியாது.

உயிரைப்பற்றிய கருவிகள் புறப் பொருள்களிற்பற்றி அவற்றினறிவைக் கொடுக்குங்காலை அவற்றுள் ஒவ்வொன்றினையும் சார்ந்து அழுந்தி அறிதல் உயிரறிவின் இயற்கையாகும். அக் கருவிகளாற் பெறும் அறிவானது பகற்பொழுதிலே எரியும் விளக்குப்போல அடங்கி நிற்கும்படி பேரறிவு உதிக்குமாயின், பரம்பொருளையும் அடைதல் கூடும், மயக்கஞ் செய்யும் பிறவியை அறுத்தலுமாகும்.

முற்பிறப்பிலே செய்த பெருந்தவம் ஒருங்குதிரண்டு பயனளித்தமையாலே பாசங்கழலும் பருவமும், இருவினையொப்பும் அருள் வீழ்ச்சியும் ஒருங்கெய்தும். அப்பொழுது அறிவன் ஆகிய ஆசான் சிவத்தோடு ஒருமையுற்று அறிவுறுத்தியவற்றைக் கேட்டலும் சிந்தித்தலும் தெளிதலும் நிட்டை கூடுதலுமாய நான்குமடைந்தோர் வீடடைந்த தன்மையராவர்.

கருவிகள் வாயிலாகப்பெறும் விரிந்த உலகறிவாகிய பாச ஞானத்தினாலும், தத்துவங்களின் வேறாக உள்ள உயிரின் பேரியல்பை அறிந்துபோற்றும் பசு ஞானத்தாலும் முழுமுதற் கடவுளை அறியமுடியாது. சிவபெருமான் அருளுகின்ற சிவஞானத்தைப் பெற்று, அதன் ஒளி பெருகவே பண்டைச் சுட்டறிவாகிய சிற்றறிவு நீங்கப்பெற்று, திருவருளில் அழுந்தி, மறவா அன்பினால் மேலாகிய பரம்பொருளோடு இரண்டறக் கலந்து நிற்பது ஞான நிட்டை எனப்படும். அத்தகைய ஞான நிட்டையை அடைதல் அருமையாயின் திருவருட் டுணையினாலே கருவிகளின் இயல்பையும், அவற்றின் வாயிலாக அறியும் உயிரினியல்பையும், முதல்வன் அத்துவிதமாய் உயிரோடு கலந்து நிற்கும் முறையையும் அழுந்தி அறிந்து, அங்ஙனமறிந்த நிலையிற் பெயர்ந்திடாமல் இறைவன்பால் அன்பு செலுத்த, நிட்டை கூடுந்தன்மை உளதாகும்.

முதல்வனைப் பாவனையால் அடைய முடியாது. பாவனை செய்யவேண்டுமாயின் மன முதலிய கருவிகள் வேண்டும். இறைவன் கருவிகளுக் கெட்டாதவனாகையால் பாவனையாற் பயனில்லை. கருவிகளில்லாமற் பாவிக்கலாமென்னில் கருவிகள் நீங்கியவிடத்து அறியாமை வந்தடையும். பாவனையினால்

பாவிக்க முடியாதவன் இறைவனென்று பாவிக்கலாமென்னில் அத்தகைய பாவனைக்குப் பொருளாவதென்னை? இது வல்லன் அது வல்லன் என்பதனுல், எது அவனென்பது அறிய முடியுமா? திருவருள் ஞானம்பெற்றவர்கள் நேராக முதல்வனை அறிதலினுல் அவர்களுக்குப் பாவனை வேண்டியதில்லை.

அத்துவித நிலையென்பது எத்தகையதென்று ஆராய்வோம். ஒரு பொருளே முதல்வனும் உயிர்களுமாக இரண்டாகத்தோன்றி முத்தியில் ஒன்ருக ஆகிவிடுமென்னில் பொருள் ஒன்றேயென்பது முடியும். வெவ்வேருயிருந்த இருபொருளும் முடிவில் ஒருபொருளாகுமென்னில், இரண்டில் ஒன்று அழிந்ததென்பது முடியும். அது பொருந்தாமை தெளிவு. இருபொருளும் ஒன்ருவதில்லையெனில் அத்துவித நிலையென்பது கிடையாது. தீயோடு கலந்த இரும்பு தீயின் தன்மை யடைந்தாற் போல சிவத்தொடு கலந்த உயிர் சிவத்தின் குணங்களனைத்து முடையதாமென்னின், சிவனுக்குரிய ஐந்தொழிலும் உயிர்களிடத்தே காணப்பட வேண்டும். காணப்படாமையின், அவ்வுவமையும் பொருந்தாது. ஆதலால் சிவத்தொடு உயிர் அத்துவிதமாய் நிற்கும் நிலைக்கு, கேவல நிலையில் உயிர் ஆணவத்தோடு கலந்து நின்ற முறையே உவமை ஆகும்.

முத்தியிலே ஆணவமலமானது அழிந்தொழியுமென்னில் அதனை நித்தப் பொருளென்று நூல்கள் கூற வேண்டியதில்லை. நூல்கள் அதனை நித்தமென்பதால் அது அழிந்தொழியாதென்னில், ஞானம் பெறுவது ஒரு நாளும் இல்லையாகும். பின்னை எவ்வாறு ஆணவநீக்கம் ஏற்படுகின்றதெனில், ஒளியின் முன் இருள் மறைந்தடங்கி அழியாமை போல, ஆணவமும் திருவருளின் முன் வலியழிந்து வறிதே

நிற்கும். ஆணவத்தின் சத்தி அழிவதே அஃதழிவதாகக் கூறுதல் மரபு.

வினை ஒழிவது எவ்வாறெனில், எல்லையில்லாத பலபிறவி களைத்தரும் முன்வினை எனப்படும் சஞ்சித வினையானது நெருப்பிலிட்ட வித்துப்போல அறிவாசான் அருள் நோக் கால் ஒழிவதாகும். எடுத்த உடலின் இடமாக நுகரக் கிடந்த பிராரத்தவினையானது உடம்பு உள்ளளவும் நிலை பெற்றுத் தன்பயனைக் கொடுக்கும். பிராரத்த வினைப்பயனை நுகருங்கால் விருப்பு வெறுப்பு வடிவாக வரும் எதிர்வினை யாகிய ஆகாமியமானது இருளை நீக்குங் கதிரவனொளிபோன்ற ஞானத்தீயின் சார்பால் அழிந்தொழியும். மூலமலமும் வினையும் ஒழியவே மாயாமலம் எடுத்த உடம்போடு ஒழியு மென்பது தெளிவு.

## அஞ்செழுத்தருணிலை

மும்மலம் நீங்கிய காலையும் பண்டைப் பழக்கத்தால் அவற்றின் வாசனை தாக்குமாகையால், அவ்வாசனை தாக்கா மற்பொருட்டு இறைவன் திருநாமத்தை எண்ணுமுறைமை ஆயற்பாலது. கட்டு நீங்கிய பின்னரும் உலகியற் செயல் களிலே பழகுங் காலத்தே மலவாசனை தாக்காதிராது. காயம் வைத்த பாத்திரத்தில் அதன் வாசனை யிருப்பதுபோல எடுத்த உடம்பால் நுகர்தற்குரிய வினைமெல்லெனத்தாக்கும். அப்போது முதலும் முடிவும் இல்லாத திருவைந்தெழுத்தின் உண்மைப்பொருளை அறிவாசான் அறிவித்த முறையில் எண்ணுபவரை அவ்வாசனைகள் தாக்கமாட்டா; பிறழ்ந்த உணர்ச்சியுந் தரமாட்டா. திருவைந்தெழுத்தில் மறைப்புச் சத்தியும் மலமும் பின்னாகவும் சிவமும் அருளும் முன்னாக வும், உயிர் நடுவேயுமிருக்கின்ற முறைப்பும், மலமும் மறைப்புச்

சத்தியும் மேலிடுவதால் உயிர் அருளிலும் சிவத்திலும் விருப்பில்லாமல் பிறந்திறந்துழலும் வகையும் வீடுகாதலித்தவர்களுக்கு ஓதத்தகும்.

மலத்தினொடு சார்ந்த மறைப்புச் சத்தி மேலிடாத வண்ணம் சிவத்தையும் அருளையுங் குறிக்கும் எழுத்துக்களை முதற்கண்வைத்து எண்ணில், மறைப்புச் சத்தியானது மலத்தை நீக்கி அருட்சத்தியாய் விளங்கும். அவ்வருட்சத்தியே சிவத்தினை எய்துவிக்கும். அறிவு விரியப்பெற்ற உயிரானது அருளே பற்றுக்கோடாக நிலைநின்று அருளிலே அடங்கி அருண்மயமாய் நின்றவிடத்து சிவத்தினிற் கலக்கும். இதுவே திருவைந்தெழுத்தின் பெருமை.

## அணைந்தோர் தன்மை

திரிபுணர்ச்சியாகிய குற்றத்தை விளைக்கும் மாயாகாரியங்களை உணர்வு சேராமலும் சஞ்சித முதலிய மூவகை வினைகளும் மூவகையாக நீங்கும் வண்ணமும் மூலமலமாகிய ஆணவவலிமை ஒடும்படிக்கும், அறியப்படும் பரம்பொருளின் விரிந்த பேரறிவின் கண் அடங்கி, அத்துவிதமாய்ப் பண்டே கலந்துள்ள சிவத்தினொற்றுமைப் பெற்று, தமதறிவின் கண் பேரின்பம் தலைப்படப் பெற்று, பாசத்தடை யாதுமின்றி, நிட்டையில் நிலை பெற்றோரே முற்றிலுங் குற்றமற்றவராவர். அத்தன்மையோர்க்கு இன்னது செய்ய வேண்டும் என்ற குறிப்பு, அதற்குரிய இடம், காலம், திக்கு, இருக்கை முதலியனவும், சமயக்கொள்கை, சாதியாசாரம், விருப்பு வெறுப்பு, அடையாளங்கள், சிறப்புப்பொருந்திய விரதங்கள், பொறுமை, அடக்கம் முதலிய குணங்களை மேற்கொள்ளுதல், தவம், செபம், தியானம் முதலியவைகளெல்லாம், வேண்டும் வேண்டாம் என்ற முறையிற் கழிந்தொழியாமல், தூங்கினவன்

கையில் உள்ள பொருள் நழுவினதுபோல ஒழிந்துபோம். மெய்ப்பொருளுணர்ச்சி ஒன்று தவிர, ஏனையவெல்லாம் ஒழிந்துபோம் என்பது கருத்து.

அகவழிபாடு, புறவழிபாடு என்னும் இருவகை வழிபாடுகளையுங் கைவிட்டு, அறியாமையாகிய இருட் கடலில் மூழ்கி உலக நிகழ்ச்சிகளைக்கண்டு மகிழ்ந்து வாழ்கின்ற கீழ்மக்கள் போல, சிவஞானம் வளர்ந்தோங்கப் பெற்றுச் சிவத்தைக் கண்ட சிறப்புடையோரும் அகம் புறம் என்ற வேற்றுமையின்றி எங்கும் ஓர் தன்மையாய் விளங்கும் பேரின்ப நலந் துய்த்து மகிழ்ந்து வாழ்வர்.

பூதப்பொருள்களெல்லாம் வானைப் பொருந்தி நிற்ப, வானானது அவை எல்லாவற்றுள்ளும் கலந்து அவற்றைத் தன்னகத்து அடக்கி நிற்றல்போல, எல்லாப்பொருள்கட்கும் சார்பாகிய இறைஞானமாகிய திருவருள் எப்பொருள்களிலும் நிறைந்திருக்கையினாலே எந்தப் பொருள்களைக் காணினும் அவற்றை அத்திருவருளின் வடிவாகக் காணுமிடத்து, இறைவன் திருமேனியாக ஞானிகள் தம்மையுங் காண்பர்.

அதுவே அவர் செய்யும் யோகமாயின் அதன் முடிவு ஞானம் என்பதற்குத் தடை என்ன?

மண் முதலிய தத்துவங்களெல்லாம் தம்மின் வேறாகிய நிலையாப்பொருளெனக் கண்டு சிவஞானப் பார்வையில் அழுந்தி, அதன் துணைகொண்டு எவற்றையும் பார்த்து, திருவைந்தெழுத்தை வீட்டிற்குரிய முறையில் எண்ணி, இறைவன் யாண்டும் இரண்டறக் கலந்து நின்ற நிலைமையை நினைந்து அவனை வழுத்துதலே அவனுக்குரிய அறிவு வழி

பாடென அருணூல்களியம்பும். இதுவே ஞானிகள் செய்யுங்கிரியை.

தொண்டர்களும் பூசிக்கப்படும் வடிவங்களும் இறைவன் திருமேனியெனக் கருதி, விண்ணவருமறிதற்கரிய விழுப் பொருளை வணங்கி, இன்பக்கண்ணீர் உகுத்து, உரைதடு மாறி, மெய்ப்பொருளையே கண்டு மகிழ்ந்திருப்பர் சிவ ஞானக்கடலில் எழுந்த பேரின்பத்தை நுகரும் பெரியோர் என்க. இதுவே ஞானிகள் செய்யுஞ்சரியை.

உலகாயத முதல் சிவாத்துவிதம் வரையுள்ள சமயங் களிற் பயின்றோர் கொள்கைகளைச் சாராத மேலாகிய கோட் பாடுடையதாய் ஞானநூலின் முடிவின்கட் பெறப்படும் பொருளையுடையதாய், நிலைத்த இன்பமளிப்பதாய், உள்ளதே தோன்றுமென்னுங் குற்றமற்ற கருத்திற்கிணங்கியதாய், ஐயத்தையொழிப்பதாயுள்ள (சைவ சித்தாந்த) அறிவால், பாசத்தோடுள்ள கட்டு நிலையினியல்பையும் வீட்டினியல்பை யும் வரையறுத்துரைத்தனர் ஆசிரியர்.

உண்மை நூலின் விரிந்த பொருளைத் தெளிந்தறியு மிடத்தே, காரண காரிய முறைகளை உற்றுநோக்கி, நால்வகை உவமைகளின் வைத்துப் பொருளியல் புணர்ந்து, முன்பின் முரணில்லாது உண்மையைத் தேருந்தகுதியுடையவர்க்குத் திருவருட் பேற்றினைத் தீக்கையாலளித்து இச்சிவப்பிரகாச நூலினையும் இனிது எடுத்தியம்புதலாகும்.

சிவப்பிரகாசம் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# இருபாப் பயன்

# திருவருட் பயன்

நற்குஞ்சரக் கன்று நண்ணில் கலைஞானம்
சற்கும் சரக்(கு) அன்று காண்.

## 1. பதி முதுநிலை.

நுட்ப அகரமாகிய உயிரெழுத்து எல்லா எழுத்துக் களோடுங் கலந்து அவை தோன்றுதற்குக் காரணமாயிருக் தல்போல, ஒப்பற்ற முதல்வன் அறிவுவடிவமாய் எங்கும் நிறைந்து உலகந் தோன்றுதற்குக் காரணனாய் நிற்கின்றான்.

தனது நிலையினை உயிர்கள் பொருந்துமாறு செய்யவல்ல திருவருட் சத்தியோடு எமது முதல்வன் பிரிவின்றி யிருப்பவன்.

எல்லாவற்றையு முள்ளடக்கி அப்பாற்பட்டிருப்பதாற் பெருமைக்கும், எத்துணைய நுண்ணிய பொருள்களினுங் கலந்து விளங்குதலால் நுண்மைக்கும், தனக்கொரு பயன் கருதாது உயிர்கள்பால் என்றும் இரக்கமுடைமையால் பேரருட்கும், மனம், மொழி, மெய்கள் வாயிலாகவாதல், உயிரறிவினாலாதல், காணப்படாமையான், பேற்றினருமைக் கும், இறைவன் ஒப்பில்லாதவன்.

எல்லாவற்றையும் படைத்துக்காத்து, உயிர்கள் மறு பிறவிக்கேதுவாய மலமாகிய குற்றத்தோடு நிற்கும்படி அவற்றை ஒடுக்குபவனே அவற்றிற்கு நீங்காத புகலிடமா யுள்ளோன் ஆவன்.

முதல்வன் தத்துவத் தொடர்பான அருவமும் உருவ மும், உயிர்களின் அறிவுக்கறிவாய் விளங்கும் ஞானவடிவமு

முடையன். (சிவம், சத்தி, நாதம், விந்து, என்னும் அருவவடிவும், சதாசிவமென்னும் அருவுருவ வடிவும், மகேசன், உருத்திரன் மால், அயன், என்னும் உருவவடிவமும் இறைவன் உடையன். உயிர்கள்தொறும் அறிவுக்கறிவாய் விளங்குதலின், அறிவும் அவனுக்கு வடிவமாகக் கூறப்பட்டது.)

எல்லா உயிர்களும் அறிவிக்க அறியும் இயல்பினவாதலின், தமக்கு மேலான ஒருதலைவனை அவையுடையன. அத்தலைவனாகிய எங்கள் பெருமான் தனக்கு உணர்விக்கும் மேலானவனொருவனை உடையனல்லன்.

விண்ணவர் காணமுடியாத இறைவன் மெய்யடியவர்களறிவின்கண் நீங்காத பேரறிவாய் நின்று, அவர்களை விட்டகலான்.

எல்லா விடத்தினும் எல்லா உயிர்களிடத்தும், வெந்நீரிலுள்ள சூடுபோல இறைவன் ஒருவனே கலந்திருந்தாலும், அவற்றிலே அடக்குறாது தனியே நிற்குமியல்பினன் அவனென்றறிக.

தன்னையடையாதார்க்குச் சிறந்த பேரருளினை இறைவன் நல்கான். தன்னையடைந்தார்க்கு அவன் நன்மை யளிப்பன், அதனால், அடையாதாரிடம் பகைமை கொள்வானல்லன். அடைந்தார்க்கு இன்பம் ஈவதால், அவன்பெயர் சங்கரன்,

(சங்கரன்-சம் + கரன் — சுகம் செய்பவன்)

அறிவுக்கறிவாய் என்றும் பிறவிநோயைத் தீர்க்கும் மருந்தாக இறைவன் இருத்தலின், அவனை நினைக்கவேண்டும், நினைப்பின் நன்மையுண்டு, அதற்கு ஐயம் இல்லை.

## 2. உயிரவை நிலை

பல்லுயிர்களின் நிலை. பதி - ஒருவன். உயிர் - பல.

உயிர்கள் பிறந்த காலத்தினளவும், இனிப்பிறக்குங் காலத்தினளவும், இறைவன் திருவடி சார்தற்பொருட்டுத் துறந்தவர் தொகையும், துறப்பார் தொகையும், அளவில்லை யென்பதில் தம்முள் ஒப்புடையன.

உயிர்கள் மும்மலத்தர், இருமலத்தர், ஒருமலத்தரென மூவகைப்படுபவர்.

மூவகை உயிர்களும், மூலமலமாகிய ஆணவமுடையனரே; அவர்களுள் மாயையாகிய ஆணையுடைய மும்மலத்தர், தங்களை அநாதியே கலந்துள்ள ஆணவமல மிருப்பதையறியார்.

நனவிலே அறிந்தவற்றை உறுதியாக அறிவின்கட் பெறாது, கனவிலே அவற்றின் முறையை மறந்து மாறாகக் காணும் உயிர்களுக்கு நிலைத்த அறிவு இல்லை. எனவே அவை களுக்கு உறுதியான செயல் யாதுளது?

பொறி முதலிய கருவிகளின் உதவியின்றி ஒன்றையும் அறியப்பெறாத உயிர்க்கு அறிவு என்ற பெயர், மிகநன்றா யிருக்கிறது! (பொருத்தமில்லை யென்பது கருத்து)

ஒளியும் இருளும் உலகமும், விழித்த கண்ணில் விளக்க மில்லாதவிடத்து எவ்வாறு அறியப்படும்? அதுபோல, இறை யருளும், ஆணவமும், தத்துவங்களும் ஆணவத்தால் மூடப் பெற்ற உயிர்களுக்கு அறிவு விளங்காவிடத்து எவ்வாறு தோன்றும்?

என்றும் நிலைத்த பொருளாய முதல்வன், நிலையிலாப் பொருள்களைச் சாரமாட்டான். அவற்றைச் சுட்டியறிய மாட் டான். அசத்தாய உலகப்பொருள்கள், சத்தாய முதல்வனை அறியமாட்டா. இவ்விரண்டனையும் பகுத்தறியவல்ல உயிர் சதசத்தெனப்படும்.

உலகமானது இருளில் இருள்மயமாயும், ஒளியில் விளக்கமாயுங் காணப்படும் பொருள்களை யுடையது. இங்ஙனம் சார்ந்ததன்வண்ணமாயிருப்பது உயிர் என அறிக.

பகலிற் கண் விளங்கப்பெறாத கோட்டானுக்குக் கதிரவன் ஒளியும் மிகுந்த இருளாகவே யிருக்கும்; அதுபோல, ஆணவப் பிணிப்புடைய உயிர்களுக்குத் தம்மை அறிவிக்கும் முதல்வன் ஞானமானது தோன்றாது மறைந்திருக்கும்.

தொடக்கமற்ற நீண்டகாலம், பிறப்பிறப்பின் கண்ணுள்ள துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு அவற்றி லுழலும் உயிர்கள் ஐயோ! எப்பொழுது திருவருளைத் தெரியும்? எப்பொழுதுதான் அளவிலடங்காத தமது துன்பத்தைத் தெரிந்து அதனினீங்கும்?

## 3. இருண்மல நிலை

நெருங்கித் தொடர்ந்து வரும் பல்பிறவித்துன்பமும், பிறவி நீங்கப்பெறுமின்பமும், அதனைப் பெறுதற்குத் துணையாய முதல்வனும் இல்லை யென்பது, மூவகை யளவைகளாய எவ்வாற்றானும் பொருந்துமாறில்லை.

உலகத்திலேயுள்ள பொருள்களினுண்மையும் வேறுபாடும் அறியக்கூடாதபடி மறைத்து நிற்கும் பொருள் இருளைத்தவிர வேறியாது மில்லை. அதுபோல, மேற்கூறியவற்றை உயிர்கட்கு மறைத்து நிற்பது இருண்மலமாகிய ஆணவமன்றி வேறியாதுமில்லை.

இருளானது, தான்மறைந்த பொருளினுருவத்தைக் காட்டாதாயினும், தனது வடிவைக்காட்டும். இருண்மலமோ பொருளையுங் காட்டாது, தன்னையுங்காட்டாத் தன்மையது.

அநாதியே உயிர்களைப் பிணித்து, அவற்றின் உள்ளறிவோடு, உயிரின்கணடங்கி, இந்நாள்வரை நீங்காது நின்றது அந்த இருண்மலம்.

இந்த இருண்மலமாகிய மாது பல்லுயிர்களைப் புணர்ந்து நின்றும் தனது தலைவராய அவ்வுயிர்களுக்குங் கூடத் தோன்றாது மறைந்து நிற்குங் கற்பினையுடையாள்.

இருண் மலத்தைப்பற்றிப் பலவாறாகப்பேசிப் பயன் என்! அறியத்தக்கனவற்றை அறியமுடியாத தன்மை அந்த இருண்மலத்தால் வந்ததென்பது தெரிந்தாற்போதும்.

அறியாமை இல்லையெனில், துன்பம் இல்லை. அறியாமை உயிரின் இயல்பாயின், அவ்வறியாமையைப் போக்கும் பொருளுள்தாயின் அப்பொருள் அறியாமையை நீக்குங்கால், அவ்வறியாமையோடு உயிரும் அழிந்துபோம். இயல்பினை அழிக்குங்கால் இயல்பினையுடைய பொருளும் அழிந்துபோம் ஆதலின் இருண்மலம், உயிர்க்கு இயல்பாய தன்மை அன்று.

இருண்மலமாகிய குற்றமானது அநாதியன்று, ஒரு காலத்தில் உயிரைப் பிணித்தது என்னில், முன்னொரு பொழுதில்லாத இருண்மலம் இடையே உயிரைப் பிணித்த தற்கேது என்னை? அங்ஙனம் முன்னில்லாத மலம் ஒரு காலத்துப்பற்றுமாயின், முத்திநிலை ஒன்றெனப்பேச இடமில்லை. ஒருகாலத்திலே மலநீக்கமடைந்தாலும், மற்றொரு காலத்திலே ஆணவப்பிணியானது உயிரை வவ்வுமாதலின் என்க.

ஆணவ மலம், பொருள்களை மறைப்பினும், அவற்றைக் காட்டும் ஒளியை உயிர் ஒருசிறிதும், மாயையாற் பெறு

தாயின், அதனை ஆணவம் ஒருக்காலும் விட்டுநீங்காதென அறிக.

இராக்காலத்தேயுள்ள இருளைப் போக்குவதற்கு விளக்குப் பயன்படும். மாயாகாரியமாகிய உடலுலகு முதலியன, உயிர்களின் வினைக்கேற்ப உயிர்களைப் பொருந்தி, விடியும்வரை பயன்தரும் விளக்குப்போல, இறைஞானமாகிய கதிரவனொளி தோன்றும்வரை உயிர்களுக்குத் துணைபுரியும்.

## 4. அருளது நிலை.

உலகத்திலே ஒருவன் பெறவிரும்பும் பொருளினுஞ் சிறந்ததொன்று அவனுக்கில்லை. அதுபோல வீடுவிரும்புவார்க்கு அருளினும் பெரியதொரு பொருள் இல்லை. அருளே பெறுமவையாவற்றினுஞ் சிறந்த வீட்டினை நல்குமாதலின், அருளே பெறும்பொருள் யாவற்றினையும் பெறுவிக்கும் அடிப்படைப் பொருளாதலுங் கொள்க.

உலகச்செயலிற்கெல்லாம் கதிரவன் ஒளிவீசித் துணை நின்றாற்போல, அருளும் உயிர்கள் நுகர்தற்குரிய இருவினைப் பயனைத் துய்த்தற்கேதுவாக எங்கும் நிறைந்த பேரறிவுமயமாயிலங்கும்.

உடம்பானது சடமாதலின் ஒன்றையும் அறிய வல்லதன்று. தன்னைப் பொருந்துவனவற்றுள் யாதொன்றையும், உயிர்தானுக அறியமாட்டாது. ஆதலால் இறையருள் எவற்றையும் அறிந்தறிவித்தாலன்றி யார்தான், எதனை அறிதல் கூடும்?

உயிர்கள் அருளைப்பொருந்திப் பேரின்ப மடைதற்கு மாறாக, மயக்கமாகிய கடலுள் அழுந்துதல் பாற்கடலினுள்ள

மீன்கள் பாலைப்பருகாது அதனுள் வேறு இழிந்தபொருளைத் தின்னுவது போலாம்.

தோன்றாத் துணையாய் உடன் செல்வானை யறியாத வழிப்போக்கன் போலவும், உயிர் அறிவிப்பதை அறியா ஐம்பொறிகள் போலவும், உயிர் தன்னை அறிவிக்கும் இறை யறிவாய திருவருளை யறியமாட்டாது.

நமக்கு ஆதாரம் நிலமென்பதை மனதிற் கருதாது, நம்முடம்பே நமக்கு ஆதாரமானதென்று செல்வாரைப்போல உயிர்கள் தமக்கு ஆதாரமாய உயர்ந்த திருவருளை அறியா தியங்கும்.

மலை நின்று வீழ்ந்தோரும் ஆதாரமாகிய நிலத்தை யகன்று வீழ்ந்தோரும் வானத்தில் நின்று வீழ்ந்தோரும் உயர்ந்த இறை ஞானத்தை யிழந்தோரும், தமக்குக் கேடு சூழ்ந்தவராவர்.

பொய்ப் பொருட் பற்றில் தலை நின்ற உயிர்களின் முறைமை எவ்வாறிருக்கிறதென்னில், அது வெள்ளத்தில் நின்று நீர் பருகாது தாகத்தினால் வருந்துவதும், எங்கும் கதிரவனொளி பரவி விடிந்த பின்பு, இருள் இன்னும் எங்கும் உளதென்று உணர்வதும் போலாம்.

பரபரப்பினை அடக்கி அமைதியோடு கேளுங்கள். இன்னும் இது எப்படியிருக்கிறதென்னில், பாற்குடத்தின் மேலுள்ள பூனையானது, பாலை நுகரக் கருதாது, அருகிலோடும் கரப்பான் பூச்சியைப் பிடித்தருந்த முயலு முறைமைத் தாமென்க.

அநாதி தொடங்கி இதுவரை உடன் கலந்திருக்கும் அருளினொடு யாதொரு பழக்கமுமில்லாத அறிவிலியாய

உயிர்க்கு வீடு சேர்தலென்பது வேண்டாத தொன்று போலும்.

## 5. அருளுரு நிலை

கட்டுற்ற காலத்தே உயிர்க்குத் தோன்றாத் துணையாய் அறிவித்துதவிய அருண்முதல்வனே, கட்டு நீங்கும் காலத்தே காணப்படும் ஒரு வடிவத்தொடு கலந்து நின்று சிவஞானத்தைக் கொடுத்து உயிரை விட்டு நீங்காத தலைவனாய் விளங்குபவன்.

ஒரு வீட்டில் ஒருவருக்குள்ள பிணியை அவ்வீட்டிலுள்ளார் அன்றி உலகத்தவர் அறியாமை போல, உயிர்க்குள்ள மல நோயை உயிரிற் கலந்துள்ள இறையருளே யறியும். பிறரறியார்.

அருளுதல் தோன்றுவண்ணம், ஆசான் வடிவில் மறைந்து அருள் செய்யவந்த திருவருளை உலகில் யார் அறிய முடியும்?

பொய்யாம் உடலையும் இருண் மலத்தால் மறைந்த அறிவையும் உடையராய்ச் சிவஞானம் பெறுதற்குரிய முற்றவம் இல்லாதவர்கள் இறை ஞானத்தையும் அதுபற்றிய திருவடியினியல்பையும் சிறிதுங் காணமாட்டார்.

விலங்கு, பறவை முதலியவைகளைப் பிடித்தற்கு அவை போன்ற வடிவங்கள் அமைத்தாற்போல, இறைவனும், மக்களைப் பிடித்தற்குக் குரு வடிவாய மக்கட் சட்டை சாத்தி வருவதை உலகர் அறியார்.

எமக்கு இறைவனது குரு வடிவு யாது பயன்தரு மென்னில், எவனுக்கு எவை விளங்குகின்றனவோ, அவை

தமக்கு அருட்குரவனுற் கிடைத்தனவெனக் கருதின் முற் கூறிய சந்தேகத்தை நீ தவிர்த்துக் கொள்வாய்.

ஒருவன் உடம்பில் ஏறியவிடமானது கீரி தீண்டின மாத்திரத்தில், இறங்கியொழியாது. கீரியைப் பாவிப்பானது நினைவு வலியால் அது இறங்கியொழியும். அதுபோல, இருண் மலமானது, இறைவன் குரு வடிவாய்த் தோன்றி, அருள்புரிவதா லொழியுமேயன்றி இறைவன் அறிவுங் கறிவாய்த் தோன்றாது நிற்பதால், நமக்கு ஒழியாது.

ஒரு மலத்தார்க்கு ஆணவம் அகலுவதற்கு இறைவன் உள் நின்றே அருளை நல்குவன். இரு மலத்தார்க்கு நோரா கிய அருட் திருமேனி கொண்டு ஆணவந்தோடு வினைப் பாசத்தையும் ஒழிப்பன். மும்மலத்தார்க்குக் குரு வடிவாய் வந்து அருள் செய்வன்.

வீடு பேற்றிற்குரிய பெருநெறியை அருளவல்ல பேரறிவுடைய பெருமான் குருவாய் வராவிடில் சிற்றறிவுடைய உயிர்களுள் யார் அதனையறிய முடியும்?

சூரிய காந்தக் கல்லானது கதிரவன் கதிர் படாது நெருப்புமிழுமாயின், இறைவன் குருவாய் வரப் பெறாது சிவஞானத்தை உயிர் பெறுதல் கூடும்.

## 6. அறியுநெறி

அநாதியே தொடர்ந்து வருகிற இருவினைகளின் கண்ணும் ஒத்த உவர்ப்புத் தோன்றினமையால், அவற்றின் பயன் சமமாகக் கருதப்பட்டகாலே, இறைவனது திருவருட் சத்தி உயிரிற் பதிந்து அதனைப் பற்றிக்கொள்ளுதல் நிகழும்.

ஒருவனாகிய இறைவன், பலவாய உயிர்கள், இருண் மலம், வினை, இருவகை மாயை, ஆகிய ஆறு பொருள்களும் அநாதியே யுள்ளன.

நீ உய்தற்பொருட்டு, வினையைச் செய்வானும், வினையும் அதன் பயனும், அப்பயனை ஊட்டுவிப்பானும் உண்டென் றுணர்.

ஊன் உயிரின் சம்பந்தத்தால் வாழ்கின்ற ஒற்றுமை யுடையது. அதுபோல, ஊனொடுத்த உயிர் இறையறிவோடு ஒற்றுமைப் படுதலால் வாழுந் தரத்தது.

படிகமானது தனது நிறத்தையும் தன்னைச் சார்ந்த பல் நிறத்தையும் பெற்றுத் திகழ்வதற்குக் கதிரவன் கதிர்கள் காரணமானாற்போல, இறைவனது அறிவாற்றல் உயிர் தத்துவங்களிற் கட்டுப்படுதற்கும் அவற்றின் நீங்கி வீடடை தற்குங் காரணமாமென உய்த்துணர்க.

கண்ணிலே ஒளி இல்லாமற்போனால் கதிரவனொளி பொருந்திக் காட்டிய பொருளைக் கண் காணாமைபோல, இறைவனதறிவாற்றல் எங்கும் விளங்கினும், அது உயிரி னுள்ளாகக் கலந்து நின்றாலன்றி ஒன்றையும் உயிர் அறிய மாட்டாது.

உயிரின் சிறு செயலாற்றல் வழி ஐம்புலன்கள் தொழிற் படுதல் போல, உயிராகிய நினது செயலையும் இறைவன் செயல்வழி நிற்பதெனக் கருதுவாயாக.

இறை ஞானத்தைச் சிற்றறிவால் ஆராயாமலும், அதனைச் சுட்டியறிய முயலாமலும், உன் செயலாலே அதனை

முற்பட்டுப் பார்க்கத் துணியாமலும், இறையருள் காட்டியதை அதன் வழி நின்று காண்பாயாக.

இறை ஞானத்தாற் பெறற்பாலதாய பேரின்ப மொன்றையே நுகர விரும்பி, உன்னறிவு தோன்றாது அப் பேரறிவே விளங்கும் வண்ணம் அதன்கண் அடங்குக.

இறைஞானம் உனக்கு வெளிப்பட்ட முறையிலேயே நீ அதனை அகண்டமாகக் கண்டு அறியாமையிலழுந்தாது, அந் பேரறிவு உன்னை விழுங்கியபடியே, அதனுட் பட்டு விளங்குக.

## 7. உயிர் விளக்கம்

இதனையே ஆன்ம சுத்தியென்பர். முன் அதிகாரத்துள், ஆன்ம தரிசனங் கூறப்பட்டது.

வெயிலிற் சென்றோனுக்கு மரத்தின் தூய நிழலையடைய வேண்டுமென ஒருவருஞ் சொல்லவேண்டியதில்லை. அவனே அதனைச் சென்றடைவான். உலக பாசத்தை வெறுத்தவன் திருவருணிழலையடைதற்கு விரும்பிச் சென்று அதுவாய் நிற்கு முறை அது போல்வதாகும்.

பித்தங் கொண்ட நாவிற்குப் பால் கைக்கும், அதனைத் தவிர்ந்தபின், பால் தித்திக்கும். மலப்பிணிப்புள்ள காலை, மறைப்பாய் நின்ற இறைவனதாற்றல், மலம் நீங்கிய காலை இனிய அருளாய் விளங்கும்.

மலவிருளிற் கிடக்கும்போது உயிர்க்குப் பொருள்களை இறைஞானம் அறிவிக்கவும், அதனையறியாது உயிர் தானாக எல்லாவற்றையும் அறிவதாக வீணாக எண்ணிக் கொண்டிருக்கிற எண்ணம் எப்போது ஒழியும்?

பல பொருள்களும், மிகுந்த ஒளியின்கண் ஒருபடித் தாய் ஒளிமயமாக விளங்கும்; அவை இருளின் கண் ஒருபடித் தாய் மறைந்து கிடக்கும். ஆணவ விருளிற் கிடவாமல், அரு ளொளியிற் கலவாமல், கருவிகளாற் பொருளை அறிபவரே பல்வேறு வகைப்பட்ட உலகப் பொருளையறிவர்.

நன்மையாகிய அருளை நட்புக் கொண்டார்க்கல்லது, நமது பாரத்தை முழுதுஞ் சுமக்கும் இறைவனை இப் பொழுதே கிட்டுதல் கூடுமோ?

ஒருவன் வைத்த நிதியினைப் பிறனொருவன் வஞ்சித்துக் கவர வேண்டுமாயின், வைத்தவன் தூங்கவேண்டும், அல்லது நிதியினைக்காவாது எங்கேயாவது போயிருத்தல் வேண்டும். இரண்டிலொன்று செய்யாத காலை நிதியினைக் கவர இயலாது. அதுபோல, முதல்வனையறியாது வீட்டின்பமடைதல் இயலாது.

பளிங்குத் தூணானது தன்னொளி தோன்றுதவாறு, கதிரவனொளியைக் கவர்ந்து, அதனொளிப் பிழம்பாக விளங்கு தல் போல, உயிரானது அருளொளியைச் சார்ந்து அதன் வண்ணமாய் நிற்பின், அதனைப் பற்றிய மலவிருள் நிலைபெறு தொழியும்.

எரிகின்ற பந்தத்தின் உதவியாற் பொருள்களைக் காண் பார், இருளிலே அதனை முன்னே பிடித்துக்கொண்டு போகின்றமை போல, மெய்ப்பொருளாய திருவருளினை முன்னாகக் கொண்டு அதன் பின்னே நிற்பது அருட்டொடர் புடையாரது செயலாகும்.

ஐம்புலன்களின் பால் இறைவனை நாடிக்காணாது அகன்ற இடத்து, திருவருளினுதவியின்றி, அவனை யடைதற்கு

ஐம்புலன் எவ்வாறு திறனுடையனவாகும்? உயிர்கள் எவ்வாறு திறனுடையனவாகும்?

தானே தன்னை யீயும் இறைவனை உயிர் தன் வலியினாற் பெற முயலுதல் கூடுமா? அங்ஙனம் செய்தற்கு இவன் யார்? இவன் யாதொரு ஆற்றலு மில்லாதவனே.

## 8. இன்புறு நிலை

ஆன்மலாப மடைதல் இதனுட் கூறப்படும்.

மலபரிபாகம் வருங்காற்றோன்றும் ஞானச் சுடராகிய திருவருளின் பின்னே செல்வார் பேரின்பமடைவர்; அதனைப் பின்னிட்டுத்தாமுன்னாகச் செல்வார் அதனைப் பெறாது துன்புறுவர்.

பெண்கள் இருவர் போன்ற உயிர்க்கும் அருட்கும், புணர்ப்புள்தாதல் மாத்திரம் போதாது; முதல்வனை நாடுதற்றான் இன்பமுண்டு. ஒருவனு மொருத்தியும்போல, முதல்வனுமுயிருங் கலந்தாற்றான், இன்பம் ஏற்படும்.

இன்பத்தை இறைவன் தன்னை வந்தடைந்தார்க்கு நல்குவன். அவனே இன்பவடிவனாதலின், அவன் புதிதாய் நுகரக்கிடந்ததொரு இன்பம் யாதுமில்லை.

தாள்தலை என்ற சொற்கள் தம்மிற் புணர்ந்து தாடலையென நின்று ஒருமொழியாகாது ஈரெழுத்தின் ஒற்றுமைப் பாட்டைப்புணர்த்துமாறுபோல, உயிர் முதல்வனை வேறறக் கூடித் தான் அழியப்பெறாது இன்பம் நுகர்தலையே முதல்வனோடு ஒருமை அடைதலென்றறிக.

முதல்வனும் உயிரும் பொருட்டன்மையால் ஒன்றெனின், அவை தம்முட்பொருந்த வேண்டியதில்லை. இரு

வேறு பொருளாய் நிற்பின், இன்ப நுகர்ச்சியென்ற பேச்சிற் கிடமில்லை. ஆதலின், ஒருமைப்பட்டுக் கலப்பதால், இரண் டறுதலே முத்தியென்றறிக.

ஞான நிட்டை யுடையாரும், தெளிவுடையாரும், கேட்டல், சிந்தித்தலுடையாரும் பிறவியற்றவராவர்.

பேய்ப் பிடிபோல, இறைவனது தொடர்பு உனக்குண் டாம் வரை, நீ ஒன்றும் உன்னுணர்ச்சியாற் செய்யாது நிற்பாயாக. பின்னர், உன் செயல் இறை செயலாகுமென்க.

மெய்ப் பொருளாய முதல்வனை நிட்டையாலுற்றவர்கள் பேரின்பமாய பயனை உற்றவராவர். நிட்டையுடையார்க்குப் பிற செயல் எல்லாம் தூங்குவார் கைப் பொருள் போலத் தாமே அவரைவிட் டகன்றொழியும்.

உயிரு முதல்வனும் தம்மில் நெருங்கிக் கலப்புற்றமை யால், காண்பான், காட்சி, காண்பொருள் என்ற முத்தன்மை தோன்றாத இன்ப நிலையே உயர்நிலை. அதனைச் சொல்லால் எவ்வாறு கூறமுடியும்?

எல்லா வின்பங்களினுமேலாய இன்பமாய வீட்டின்ப முண்டாக வேண்டுமாயின், மறவாப் பேரன்பு நிலை ஏற்பட் டால் அந்த இன்பநிலை அதுவேயாய் அப்போதே தோன்றும்.

## 9. ஐந்தெழுத் தருணிலை—ஐந்தெழுத்தோதிப் பெருந் திருவருள் நிலை

சிறப்பாய சிவநூலும், பொதுவாகிய மறை நூலும் அவற்றைச் சார்ந்த பிறவும், முடிவாகத் திருவைந்தெழுத் தின் பெர்ருண் முறையையே தெரிவிக்க ஏற்பட்டன.

ஓங்காரத்துள், சிவம், சத்தி, இருண் மலம், சுத்த மாயை, உயிர், என்ற ஐந்தும் பொருந்தி நிற்கும்.

சிவாயநம என்ற திருவைந் தெழுத்துள், உயிர்க்கு ஒருபுறம் இறைவனது ஊன நடனத்தைக் குறிக்கும் நகர மகரங்களும் மற்றொரு புறம் அவனது ஞான நடனத்தைக் குறிக்கும் சிகர வகரங்களும், நடுவே, உயிரைக் குறிக்கும் யகரமும் உளவென அறிக.

மகரமும் நகரமும், உலகிலே பரந்து செல்லும்படி உயிரைச் செலுத்தி,—அப்பரந்த போக்கினின்று உயிரைத் திரும்ப விடமாட்டா. அத்தகைய பெரிய பிணிப்பு நீங்கப் பெற்று உயிர் சிவத்தை யடையும்.

மறைப்புச் சத்தியைக் குறிக்கும் நகரத்தையும், மலத்தைக்குறிக்கும் மகரத்தையும், முதலாக வைத்துத் திருவைந்தெழுத்தை யோதின், பிறவி நீங்குமோ? மாறிச் சிகரத்தையும் வகரத்தையும் முதலில் வைத்தோதாவிடின், அது நீங்காது.

ஆதாரங்கள் ஆறின் முறைக்கேற்ப நகரமகரங்களை முதலிலே வைத்தோதுவதால் பிறவியுளதாமென்பதைக் கருதாது, உலகப் பற்றுடைய உள்ளமானது அவ்வாறோதும்.

சிகர வகர முதலாக ஓதின், பிறவி நீங்கும், வீடுபேற்றினைக் கருதிய நீ ஓதவேண்டிய முறை அதுவே.

வகரமானது சிவத்தைக் காட்டி உயிரை உய்விக்கும். அது அருட் சத்தியாதலின், குற்றமற்ற இருவர் திருமேனியுமாமென்றறிக.

குற்றமற்ற மறைப்புச் சத்திக்கும் அருட் சத்திக்கும் நடுவே நில்லாது அருட் சத்திக்கும் சிவத்திற்கும் இடையே நிற்பதே வீடடைதற்குரிய முறையாகும்.

உயிர் அருளை விட்டு நீங்கி நில்லாதபடி வேண்டிய எல்லா உபாயங்களையும் அருணூல்கள் சிந்தித் துரைக்கும்.

## 10. அணைந்தோர்தன்மை

எங்கும் நிறைந்த இறைவனது ஞானத்தின்கண் தமது அறிவிச்சை செயல்கள் அடங்கப்பெற்றுத் தமது உயிரின் கண் இன்பந்திளைக்கும்வண்ணம் நிட்டையிலழுந்தியோர்க் குச் சொல்லென்பது யாதுளது?

இறைவனது ஐந்தொழிலையும் காரணேசுரர்களது தனித்தனித் தொழிலையும், மாயா சம்பந்தமான போகங்களை நுகர்கின்ற தொழிலையும், அன்னோர் சிறிதும் பொருந்தமாட் டார்.

எல்லாவற்றையும் அறியும் அறிவு தம்பால் வந்தெய் தினும், அவர்கள் இறையருளும் பேரின்பத்தை அறிந் தழுந்துதலன்றி வேறொன்றும் அறவே அறியமாட்டார்.

உலகப்பொருளின் வாசனை எதிர்ப்படுங்கால், அவர்கள் ஆமைதனது ஓட்டின்கீழ் உறுப்புக்களை யடக்கிக் கிடப்பது போல, ஐம்பொறிகளை யடக்கித் தமது இறைவனது பேரின்பத்துட்புகுவர், மீளப்புலன்களிற்றிரும்பார்.

இறைவனையகன்று அவனை அணைந்தோர் நிற்கமாட்டா ராகலின், அவன் எங்குமுள்ளனாகவே, அவர்களும் எங்கும் உளராய்ப் பேரறிவுடையராய்த் திகழ்வர்.

அகமும் புறமும் ஒருதன்மையாகக் காணவல்லார்க்கு எதனையும் இகழும்வகை தோன்றாது.

பயன்கருதித் தன்னுணர்ச்சியால் இயற்றுஞ் செயல்களுக்குப் பயன் உலகங்களில் வாழ்தலே. தன்னுணர்ச்சியற்றுச் செய்யும் நற்றவத்திற்கு வீட்டின்பமாய மெய்ப் பயன் உளதாம்.

அணைந்தோர் எடுத்த உடம்பால் நுகர்தற்குரிய வினைப் பயன் உடலாலே நுகரப்பட்டொழியும். உயிர்வருந்துவதில்லை. எடுத்த உடலாற் செய்யப்பட்டு மேலைக்கு வித்தாகக்கூடிய வினை உளவாமாயின், அவை மேலைக்கு வித்தாகா வண்ணம், திருவருளாகிய நெருப்பு அவற்றைச் சுட்டொழிக்கும்.

மிக்க பேரறிவுடைய ஞானிகளுக்குப் பழவினை, நுகர்வினை, வருவினை, என்ற மூவகைப்பட்டவினைகளும் தலையெடுக்கமாட்டா. அவர்களுக்கு வீட்டின்பம் இம்மையிலேயே கிடைத்தலால், மறுமையு மிம்மையேயாகும்.

சிவத்தினை அணைந்த பெரியோர், வஞ்சித்தலிற் றலைமை பெற்ற உயிர்கள் வருந்துவதைக்கண்டு, அவர்துயரத்தைத் தீர்த்தற்பொருட்டுத் தமது கருணைவெள்ளத்திலே மிருதியும் அலைந்து முயல்வர்.

திருவருட்பயன் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# வினா வெண்பா

உ

# வினா வெண்பா

விரிந்த ஒளியும் நிறைந்த இருளும் ஒரே இடத்திற் பொருந்துதல் அரிது. நிறைந்த இருளுடைய கொடியேன்பால் விரிந்த ஒளியையுடைய திருமருதூர்ச் சம்பந்த மாமுனிமேயே! நீ எவ்வாறு பொருந்தி நின்றாய்?

இருண்மலம் என்னை மூடித் தனிநிலையிலே அறிவு உள்ளடங்கி மறையும். கலை முதலிய தத்துவங்களோடு கூடிய கலப்பு நிலையிலே மாயையினலாகிய பொருள்களை நிலையெனப் பற்றும் மயக்கவுணர்வு உண்டாகும். அத் தத்துவக் கருவிகள் நீங்கி யொழிந்தால் இருள் நிலை ஏற்பட்டுவிடும். இவற்றில் உழல்கின்ற யான் உனது திருவருளால் யாது பெறுதற்குரியேன்?

உயிரின் சிற்றறிவு பேரறிவாகாது. சற்காரிய வாதமாய பொது அறிவைக்கொண்டு பார்க்குங்கால், இல்லாதது எப்போதும் இல்லாததே, முன் இல்லாதது பின் உள்ளதாகு மென்னில் அது சற்காரிய வாதத்திற்கு மாறாம். திருமருதூரிலுறையும் மறைஞானசம்பந்தா! அறிவு மலையே! எங்கள் ஆணவ விருளாகிய குற்றம் எங்களைத் துன்புறுத்தா வண்ணம் உயிர்க்கு எவ்வாறு சிவஞான முளதாமென்றறிவுறுத்துக.

கனவு காணுங்கால் அது கனவென்று தோன்றுவதில்லை. கனவிற்கண்டதை நனவிலுணரலாமென்னில் கனவிற்குக் கருவி வேறுதலின், கனவில் நிகழ்வதே நனவிப

நிகழ்வதாகாது. இந்த அவத்தைகளைத் திருவருளினால் அறியலாமென்னில் திருவருள் அவற்றைப் பொருந்தா. ஆதலின் தடாகம் பொருந்திய திருமருதூர்ச் சம்பந்தா! அடியேன் அவத்தைகளினியல்பைக் கண்டறிவதெப்படி யென்றறிவுறுத்துக.

திருமருதூர்ச் சம்பந்த மாமுனியே! எனது சிற்றறிவைக்கொண்டு அறியப்பட்டன வெல்லாம், நிலையாதன வென்னில் அவை உனது பேரறிவிற் பொருந்தா. பொறிகள், புலன்கள் எனப்படுகின்ற தத்துவங்கள் தாமே ஒன்றனையுமறிய மாட்டா. அங்ஙனமாயின் யார் பொருள்களி னுண்மையை அறிதல் கூடும்? உயிர்களாகிய யாம் அறிதல் கூடுமெனில், யாம் யார்?

உயிரின் சிற்றறிவு முன்னே யொழிந்தே பேரறிவுண்டா மென்னில், சிற்றறிவு சிதையவே அதனையுடைய உயிரும் இலதாகும். ஆகவே பேரறிவைப் பெறுவாரில்லை யென்பது முடியும். சிற்றறிவு நிலைபெறுமாயின் திருவருள் பொருந்தாது. மின்னுங் கார்மேகம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த அகன்ற விடத்தையுடைய திருமருதூர்ச் சம்பந்த மாமுனியே! யான் எதனைக்கொண்டு மெய்யினைக் காண்பேன்?

தடமருதச் சம்பந்த மாமுனியே! நினைதற்கரிய உன்னுடைய பேரறிவு மேற்பட்டு விளங்கிய விடத்தே மாயா கருவிகளைப் பொருந்தி யறிதல் அரிதாகும். என்னுடைய பசுஞானத்தினால் உண்மை யறியமுடியாது. அவ்வாறாயின் எப்படி அடியேன் அதனை யறிதல் கூடும்?

அருவம் உருவமாகாது. உருவம் அருவமாகாது. அருவும் உருவும் ஒரு பொருட்கண்ணே பொருந்த மாட்டா. உயர்ந்த

திருக்கடந்தைச் சம்பந்த மாமுனியே! நினைத்த வடிவங் கொள்ளவல்ல இறைவனது திருமேனியை ஆய்ந்து பார்க்கில் அது எத்தன்மையாயது என்று விளங்கவில்லை. அதனை எற்கறிவுறுத்துக.

இருமலமுடையார்க்கு மாயா மல மின்றெனில் மாயை யினாலாய உடல் இல்லை யென்பதாம், உடல் இல்லை யென்னில் வினைப்பயனை நுகர்வதெப்படி? ஒரு மலத்தார்க்கு உவமையாக யாரைச்சொல்லுதல் கூடும்? மும்மலத்தார் இறைவனோடொன்றுதலை நினையார். இது உண்மையன்றெனில் அவர் முத்தியைக் கூடுமாறுள்ள உபாயமுரைத்தருள்க.

ஒன்றுதானே தோற்றத்தில் இரண்டாய் நின்று பின் ஒன்றுமென்னில், ஒன்றே யுளது, மற்றொன்று அதனைப் பொருந்துவ தென்பதில்லை. உள்ள இரண்டு பொருள்கள் ஒருமைப்படும் என்னில், உயிர் முதல்வனோடு கலவாது தன் றன்மையோடு திகழும். நெருங்கிய பெரிய மாலையணிந்த சம் பந்த மாமுனியே! உயிராய யான் சிவமாய் ஓங்கித்திகழுமுறை எவ்வாறெனை அறிவுறுத்துக.

காண்பான், காட்டுவான், காணப்படும் பொருள் என்கிற மூவகை நினைவு நீங்கி மெய்ப் பொருளை அத்துவிதமாக அனுபவத்திற் காண்பார்கள் நன்முத்தி யெய்துவர். தண் கடந்தைச் சம்பந்த மாமுனிவா! பாசத்தை மெலிவிக்கும் நன் னெறியிலே வாராதவர்கள் இம்மூவகைப் பொருளினியல் பினைக் காணாதவர்களாவர்.

என்னோடு கலந்திருந்தும் தோன்றாது நின்றருளிய திருமருதூர்ச் சம்பந்த மாமுனியே! உயிரானது வினையைச் செய்வதும் வினைப்பயனை நுகர்வதும் எப்போதும் உடைத்தா

யிருக்கவும் அச்செயலும் பயனும் விட்டு, வீட்டைந்து பின்னர் அவ்வீட்டின் நீங்காவகை எவ்வாறு உளதாம் என்று அடியேனுக் கறிவித்தருள்க.

அருளால் உண்மை யுணர்வார்க்கு இறைவன் என்றும் நீங்காத இன்பப்பொருளாய்த் திகழ்வான். இவ்வினா வெண்பாவின் உண்மையை வினவித் தெளியாவிடத்து அது ஊமையன்கண்ட கனவின் றன்மையை அடைவிக்கும்.

வினா வெண்பா முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# போற்றிப் பஃறொடை

# பேரூற்றிப் பஃறொடை

மலரவனும், விண்ணவரும், விண்ணவர் கோமானும், திருமகள் வீற்றிருக்கப் பெற்ற அழகிய மார்பையுடைய திருமாலும், மறைகள், மறைகளின் முடிவான நூல்கள், இவை விளங்குதற்குக் காரணமாகிய விந்து, நாதம், நாதமுடிவாய சிவ தத்துவம், பொதுவாய ஓங்காரம், என்பவற்றிற்குரிய கடவுளரும், நமது அறிவின் எல்லையிற் சென்று தேடவும், அப்பாற்பட்டதாய், எல்லையற்றதாய் உள்ள பாதுகாப்பாய் விளங்கும் பேரறிவுப் பரம்பொருளை யாரும் தெளியும் வண்ணம், சிற்றம்பலத்துள் நிறைந்து நின்று, பிறவித் தொடர்பை யறுத்தற்கு இயற்றப்படுந் திருநடனச் சீர் நம்மைக் காப்பதாக.

எல்லையின்மையாற் குன்றுபடாத் பல்வேறு உயிர்களைப் படைத்துக் காத்தும், பிறப்பிறப்பிற் கிடந்துழலும் உயிர்கள் இளைப்பாறும் பொருட்டு அவற்றை ஒடுக்கியும், பழமையாக வருகின்ற முதல், இடை, கடை என்பவற்றிற் களவில்லாது செல்வதாய்ப் பெரு நெறியாய பெருமான் நம்மைக் காக்க.

நெல்லுக்குமி தவிடும், செம்பிற்குக் களிம்பும் போல, அநாதியே தொடர்ந்து வருந் தன்மையதாய், எல்லாப் பொருளும் தனக்கு ஒரு புடையொப்பாகக் கழியத் தான் என்றும் இருப்பதாய், வடிவிலாததாய், எல்லா உயிர்களையுங் கட்டுப்படுத்தி ஒளிமிக்க மணியை யுள்ளடக்கியிருக்கும் பெரும் பாம்பு போல, உயிர்களின் அறிவுக்கண்ணை மறைக்

குங் கொடுந் தொழிலுடைய ஆணவ மலத்தால் அறிவுடைச் செயலற்ற எல்லா உயிர்களுக்கும் உயிராயுட்கலந்து, குருடர்க்குக் கொடுத்த கோல்போல, வளமிக்க மாயையினை அவற்றினொடு சேர்ப்பித்து உடம்பு, உட் கருவி, உலக முதலியவற்றைக் கொடுத்து மனம், மொழி, மெய்களினலியற்றப்படும் இருவினைகளின் பயனை நியமித்து, அவற்றினை நுகர்விப்பான் பிறப்புளதாக்கி, பக்குவம் வந்த உயிர்களைத் தம் பாற் கொண்டு அவற்றினின்று மீட்பித்துத் தனது பேராற்றலினைக் காட்டும் பெருஞ் செயல் நம்மைக் காக்க.

உயிர்கள் எடுத்தற்குரிய பிறவியை அதன் வினைக் கேற்பத் தீர்மானித்து, தக்க தந்தை தாயர் போகந்துய்க்குங்கால், புல்லின் நுனியிற் காணப்படும் நீர்த்துளியளவுள்ள விந்திற் கலந்து கருவிற் புகுமிடத்தே தாய் வயிற்றிலுள்ள வெப்பாற் கெட்டுவிடாமலும், அங்கேயுள்ள பழும் புழுக்கள் தமது பசியின்பொருட்டு உயிர்த்துளியை விழுங்கிவிடாமலும் வெப்பமிக்க வயிற்றினிடமாய கருக்குழியிற் காவலிருந்தும், உயிர்களின் வினைக்குத் தக்கவாறுள்ள கை, கால் முதலிய எல்லா உறுப்புக்களும் குற்றமறத் தோற்றுவித்து, உடம்பினைத் திருந்தமுறுவித்துப் பின் யோகக் காட்சியினை உயிர்க்குக்கொடுத்து முன் புகுந்த வழியிலே மீண்டு உலகிற் பிறக்கும்படி செலுத்தி உடன் செல்கின்ற மெய்ப் பேராற்றல் நம்மைக் காக்க.

உலகிற் பிறந்தவுடனே மயக்கஞ் செய்யும் மாயையாகிய காற்றனது அறிவை மறைப்பதால், கருவிலுள்ள நல்ல அறிவினை யிழந்து நன்மை தீமை யறியா நிலையிற் கிடக்கும் பிள்ளையின் பசியை அறிவித்தற் பொருட்டு அதனை அழுவித்து அவ் வழுகுரலைக் கேட்டவுடன், பிள்ளை பெறுதலில் ஆவி

சோர்ந்து தளர்ந்த தாய், தன் வருத்தத்தை மறந்து பிள்ளையைக் காப்பாற்றுங்கவலையால் நடுங்கி, மனமுருகி முலைவழி யொழுகுந் தீம்பாலை அதற்கு ஊட்டி மகிழும் வண்ணம், அன்பாகிய பெருங்கயிற்றினாற் பல உயிரும் பாதுகாக்கப் படுமாறு, மகப்பெறுவார் உள்ளத்திற் பேரன்பினை யமைத்த ஒழுங்குத்தலைவன் நம்மைக் காக்க.

குற்றமற்ற பசுங் குழவிப் பருவத்திலும், பாலப் பருவத்திலும், பின்னும் நாளுக்குநாள் வளர்ந் தெழில்பெறும் உயிர்க்குப் பருவத்திற்குரிய எல்லா அறிவும் பொருந்துமாறு செய்து,பக்குவத்திற்கேற்றவாறு கருவிகளின் விளக்கத்தைப் படிப்படியாகக் கொடுத்து உடனின்றுதவும் செல்வனாய் நின்ற முறை நம்மைக் காக்க.

நீங்காது வருகின்ற இழிவுமிக்க தசையினாற் பொதிந்த புழுக் கூடாகிய பெரிய வீடாகிய உடம்பின்கண், உயிர்பற்றி நிற்பதற்குரிய ஐந்து கட்டுக்களாகிய ஐந்தவத்தை யிடங்களை வகுத்து, உடம் பெடுத்தற்கு முன்னுள்ள உயிரின் தனிநிலை ஒருவகை நீங்காதபடி வலிமிக்க ஆணவ மலத்தாற் சிறைப் படுத்தி, அறிவை மறைத்து, மூலாதாரமாகிய நுண்ணிய அறையிலே உயிரானது அறிவற்றுக் கிடப்ப,அதற்குக் காலம், நியதி என்ற தத்துவங்களைச் சேர்த்து மூலாதாரத்திற்கு மேற்பட்ட அறையாகிய உந்தியிலே பிராணனோடு, கலை, வித்தை, அராகமென்னும் தத்துவங்களின் துணையாற் செயலறிவு இச்சைகள் சற்று விளங்கப்பெற்று, மூலப் பகுதியி லுதித்த முக்குணங்களோடு கலப்புற்றுத்திரி புணர்ச்சி யெய்தி, நெஞ்சமாகிய சுழுத்திநிலையிலே சித் தத்தோடு சேர்ந்து அதன் வாயிலாகக் கண்ட பொருள் இன்னதென் றறியாது நின்று, கனவு நிலையாகிய கழுத்திலே

அறிவுப்பொறியைந்து வினைப்பொறியைந்து ஆகிய பத்து மொழிந்த பிறகருவிகளோடியைந்து, கனவிலே துய்க்க வேண்டிய இருவினைப் பயன்களாகிய இன்ப துன்பங்களை நுகரு முறையாக நுகர்ந்து பின்னர், நனவு நிலையாய நெற்றி யென்னுங் கொலுமண்டபத்தில் எல்லாக் கருவிகளோடு மியைந்து உயிர் நிற்ப, வீட்டில் விளக்கு வைத்தாற்போல இருண்மலம் மூடாதவாறு நுட்பமான நால்வகை வாக்கு களை இயைத்து, உயிர் மாயா காரியங்களை அறிந்து தொழில் செய்யுமாறு பணித்த அறவடிவாய பிரான் நம்மைக் காக்க.

இறைவன் நமக்குச் செய்யும் பேருதவியினை யறியாது, ஒருகாலும், முற்றுக-அவியாத பசிப்பெருந்தீயைத் தணித்தற் பொருட்டு, அவாவுதற்குரிய உணவுகளின் பொருட்டுப் பல்லுயிர்களும் தமது அறிவாற்றலுக்கேற்ற பல்வகைத் தொழில் புரியுமாறு, அவற்றை ஆட்டுவித்து, அவர்கள் செய்தவினை, செய்யும்வினை, வருவினை யென்ற மூன்றிற்கும் ஒழுங்கான கணக்கு எழுதி, வினைப்பயனைத் துய்ப்பிக்கு முறை நம்மைக் காப்பதாக.

இருவினைப்பயன் துய்த்தல் மக்கட்கேயன்றிப் பிற எல்லா உயிர்களுக்கும் ஒரு சட்டமேயாம்படி அமைத்து, உயிர்கள் உடம்பினை நீங்குதற்குரிய கால எல்லை வந்தபோது, உடம்பினை விட்டு அவைகளைப் பிரித்து, சிறந்த நல்வினைப் பயனூட்டுவான், மால், அயன், இந்திரன் முதலிய இறைய வர் பதங்களைப் பலவகையாக நுகர்வித்தும் தீவினைப்பயனை ஊட்டுவான், யமதூதர் உடம்பிற் பிரிந்த உயிரைத் தமது வெம்மைமிக்க தலைவன்பா லுய்ப்பிக்க அவன், அவ்வுயிர்கள் வீடுபேற்றை விரும்பாது தீமையிற் பயில்வதைக் கண்டிரங்கி அறிவுரை பகர்ந்தபின், தமது ஏவலாளரை அவர்கட்குத்

தீவினைப்பயனை ஊட்டும்படியளிக்க அன்னோர் பாவஞ் செய்த
உயிர்களைத் துன்புறு முடலிற் புகுத்திச் செக்கிலிட்டுஅரைத்
தும், நெருப்பிலிட்டு எரித்தும், எரியுந்தூணைத் தழுவுவித்
தும், இருப்புக் கோலைக் காய்ச்சிச் செவியில் மடுத்தும்,
நாக்கினை அரிந்தும் தன் தசையை அரிந்து தின்பித்தும்,
ஆழ்ந்த நிரயத்திலே அழுத்துவித்தும், பின்னும் பெருஞ்
சினத்தோடு நெடு நாளாகக் கடு நரகிலிட்டும், உயிர்கள்
திருந்துமாறு செய்யும் பணிகொண்டு, பெருநோய்கள் பலவு
முற்ற மக்களுக்கு அந்நோயை நீக்குவான், நெருப்பிற்
காய்ச்சிய கோலிடவும், சத்திரமிட் டறுக்கவும், கண்ணிற்
படலத்தை உரிக்கவும், மருத்துவர்க்கு இடங்கொடுத்து,
நோய் தீர்ந்தமை கண்டு மகிழ்ந்து அக்கடுந்தொழில் செய்தார்க்
குப் பரிசு ஈயும் பெற்றோரைப் போலவும், ஆவின் கன்றைக்
கொன்ற மகனைத் தேர்க்காலிலூர்ந்த மனுவின் முறைபோல
வும், உயிர்களைத் துன்புறுத்தி உய்யக் கொள்ளும் மறக்
கருணை நம்மைக் காப்பதாக.

உயிர்கள் இவ்வகையாக இருவினைப் பயனை நுகர்ந்து
எல்லாவுலகிலும் பல்பிறவியெடுத்துழன்று பிறவியில் வெறுப்
புக்கொண்டு நரகஞ்செல்லாத நல்லநெறியடையுங்காலம்
வரும்போது, அவர்கட்குத் தனது அன்பரை வணங்கி
வழிபட்டின்புறும் நெறியைத் தோற்றுவித்து, தேன் பொருந்
திய நன்மலர் மலர்வதற்குமுன் மொட்டாக இருக்குந்தன்மை
போன்ற நல்ல தவமாற்றும் பிறவியைக் கொடுத்து இரு
வினைப்பயனிலும் ஒத்த உவர்ப்புத் தோன்றும் பருவமுற்ற
போது பல பிறவிக்கும் முடிவைச் செய்தற்குரிய பக்குவம்
பார்த்து, அப்பக்குவத்திற்கேற்றபடி அருட்சத்தியை உயி
ரின்கண் பதிப்பிக்கும் வரிசைமுறை நம்மைக் காப்பதாக.

பக்குவப்பட்ட உயிர்களுக்கு வீடளித்தற் பொருட்டு, ஒரு மலமுடையார்க்கு உண்ணின்றுணர்த்தியே பாசநீக்கமியற்றுதலும், இருமலமுடையார்க்குத் தெய்வ வடிவங் கொண்டு தோன்றிப் பாசமறுத்தலும், மும்மலமுடையார்க்கு மக்கள்போல ஆசானை அதிட்டித்துப் பாச நீக்கமுண்டாக்குதலும், இறைவனுக்கு ஆகியாய தன்மையாதலின், திருநடத்தொழிலும், ஒளிமிக்க மணிமிடறும், பாதி மாதொடுங் கூடிய வடிவமும், பவளமன்ன ஒளிருந் திருச்சடைமேல் வைத்த கங்கையும், பிறையும், பாம்பும் நெற்றிக்கண்ணின் அனலும், திருக்கரங்களிற் கொண்டுள்ள தமருகமும், எரி விளக்கும், அரவக்கச்சையும் புலித்தோலும், வீட்டின்ப நல்குந் திருவடிக்கண்ணுள்ள சிலம்பொலியும் வினையை வென்று பிறப்பையறுப்பான் சாத்திய வீரக் கழலும் ஆகிய இவை ஒன்றுந் தோன்றாதவாறு, பிறவாத முதல்வன், இறவாத இன்பத்தில் அடியோமை இருத்தக் கருதிப் பெயரொன்றுந் தனக்கிலாதிருந்தும், நானிலத்தே மறைஞான சம்பந்த நாதனென்ற திருப்பெயரைப் புனைந்துதோன்றி, உலகர்போல, உணவு, உறக்கம், அச்சம், இன்பம் முதலியவற்றை உடையானாய் மகிழ்ந்த அவனது நற்றன்மை நம்மைக் காக்க.

புறச் சமயங்களாயுள்ள அறுவகைச் சமயக்கருத்துக்களை எங்களுக்கு அறிவுறுத்தி அவற்றால் உயர்ந்த வீடு பேற்றின்மையை எங்களுக்கு உணர்வித்து எங்களது மயல் கொண்ட சித்தமானது தெளியும் வண்ணம் திருமேனி காட்டியருளியதோடமையாமல், ஞான நெறியாகிய சைவத்திலே சமய முதலிய தீக்கைகள் செய்வித்து, ஆசிரியத் திருமுழுக்கு மருளித் திருக்கண் நோக்கினால், பிறப்பாற் பட்ட தழும்

பும், இருவினையும் ஒழியும்படி, அழகிய திருக் கரத்தை எங்கள் சென்னியில் வைத்துத் தமது நினைவாற்றலால், எங்கள் நெஞ்சை உருக்கி, உண்மைப் பொருள்களையெல்லாம் விரித்தோதி விளக்கி, கதிரவன்முன் வானில் இருள் அடங்கிக் காணப்படாது நிற்றல்போல, என்னைப் பற்றிய ஆணவ மலம் தனது நித்தியங் கெடாமலும் என்னைப் பற்றாமலும், இருக்கும்படி நிறுத்திய நிலை நம்மைக்காக்க.

சிறந்தோர்ப்பிலுஞ் சரியை கிரியை யோகங்களுக்குரிய பத முத்திகளை அவர்களுக்குக் கொடுத்து, மெய்ப் பேரன்பால் தன்னைக் காண விரும்புவார் தம்மைக் கண்டு, காணு முன்னுள்ள தமது தற்போத நிலை யுணர்ந்து நாணுமாறு நல்கும் ஞான நன்னெறியைத் தகுதியில்லாத எனக்குத் தரக் கருதி, எல்லாப் பொருள்கட்கும், மனத்திற்கும், மாலயன் முதலிய விண்ணவர்க்குந் தூரமாய், அன்பர்க்கு அணித்தாய செவ்விய திருவடிகளை என் தலைமேல் வைத்த பேராளன், கொடுத்த பொருள் யாதெனில், தான் வேறு, நான் வேறு என்ற வழக்கில்லாமையே. எனக்கு வெளிப்படா முன்னம், என்னுள்ளத்திலே யொளித்திருந்து இப்போது தோன்றுந் தந்திரத்தை யுணர்த்திய திருவடி நம்மைக்காக்க.

மிக்க கருணையால், தன்னை எனக்குணர்த்தித் தனது திருவடிக்கீழ்க் கிடந்த என்னையுணர்த்தியவிடத்தே, ஒளியுள்ள வடிவமும், முக்குணமும், மூலப் பகுதியால் வருந் திரிபுணர்ச்சியும், கலை, கால முதலிய தத்துவங்களின் புணர்ப்பும் எனக்குத் தனி நிலையில் இல்லாமையும், பின், கலப்பு நிலையில் அவை என்னொடு புணர்ந்திருந்தமையும், இனிமேல் அவற்றொடு சேராத தூய நிலையும், எனக்குக் காட்டியருளுந் திருவருட் செயல் நம்மைக் காக்க.

எல்லாப் பொருளையும் விட்டுத் தம்மை யறிந்தவராய், தாமே மெய்ப்பொருள் எனக் கொண்டு, சைவ சித்தாந்திகளைப் புறங்கூறி இழித்துரைத்து, முதல்வனுக்குப்போலத் தமக்கும் விகாரமின்மை பேசும் அகம் பிரமவாதியராகு வெளிப்படையான் இருள் நெறியில் என்னை விடாமல், அறிவாய்த் தான் நிற்குநிலை புணர்த்தி, உயிர்க்குத் தலைவனின் இன்றியமையாமையை அறிவுறுத்தி, இறைவனோடு தன்னைச் சமமாகக் கூறித் தம்மையுஞ் சிவமெனக்கொண்டு, இப்பிறவியிலேயே தமது இன்பின் வேறாய சிவப் பேரின்பந் துய்யாத சிவசமவாதக் கீழ்மக்களோடு ஒன்றாகாவண்ணம் எல்லாவிடத்தும் நின் திருவருட் காட்சிதந்து, சிவபோகம் விளையும் பொற்றிருவடிக் கமலங்களின்கீழ் என்னைப் புகுவித்து, இறைவனுடன் கலந்து நிற்குமுறைமை இந்நிலையேயென அறிவித்து எங்கும் நிறைந்த தனது பேரறிவினுள் எனதறிவு அடங்குவது காட்டி, மேலாய என்றும் நிலைத்த பேரின்பக்கடலில் உளதாம் அமுதத்தைத் தானே எனக்கு வந்து நல்கி என்னைக் காத்தருள் செய்யுந் தகுதியுடைமையோடு, உடம்பு, உயிர் முதலியவற்றைப் பொருளெனக் கண்டு கட்டுற்ற நிலையினும் என்னை நீங்காத முன்னோனை எவ்வாறு காப்புக்கூறிப் புகழ வல்லேன்.

போற்றிப் பஃறொடை முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# கொடிக்கவி

# கொடிக் கவி

ஒளியாகிய ஞானத்திற்கும் இருளாகிய மலத்திற்கும் உயிராகிய இடம் ஒன்றே. ஒன்று மிகுந்தகாலை மற்றொன்று மறையும். என்றாலும் இருண்மலந் தாக்காதவாறு உயிர்க்குயிராய் நின்று இறைவன் தெளிவுற விளக்கும் உண்மையறிவு விளங்கியபோதும் வாசனைபற்றி மும்மலத்தே சூழ்கின்ற உயிர்கள் திருவருளைக் கூடும்படி கொடி கட்டினேன்.

அருட் பெருந்தகையே, மெய்ப்பொருளாய நீ யார்? உனது அருட் சத்தியாது? கண் போன்ற உயிர் யாது? இருண்மலம் யாது? சகல நிலை யாது? தனிநிலை யாதென உயிர்கள் எவ்வாறறிதல் கூடும்? நீ பாதுகாவாத உலகம் எங்குளது? நீயே எல்லாமாயிருந்து எல்லாவற்றிற்குஞ் சாட்சியாக இருப்பதால், நீ காண உன் கோபுர வாசலிற் கொடி கட்டினேன்.

சொல்லாலும் அதிற் சிறந்த நினைவாலும், எக்காலத்தும் எட்டப்படாதானும், உயிரறிவாலறிதற்கரிய தன்மையுடைய பெருமானை உயிரின் வேறாக ஆய்ந்தறிந்து உயிரறிவிற் பிரியாவகை அனுபூதியிற் கலந்து அக்கலப்பிலே நிலைபெறும் அருளினை அவன் நல்கும்படி கொடியேற்றம் நிகழ்கின்றது.

சிவாயநம என்கிற திருவைந் தெழுத்தும், ஓம் ஆம் ஔம் சிவாயநம என்கிற எட்டெழுத்தும், ஓம் நமசிவாய என்

கிற ஆறெழுத்தும், ஓம் சிவாய என்கிற நாலெழுத்தும், பிஞ்செழுத்தென்னுஞ் சத்தி யெழுத்தாகிய வகார எழுத்தும், அதற்கு முற்பட்ட பேருளெழுத்தாகிய சிகாரமும், நெஞ்சிலே பதிவித்தபோது, பேசுமெழுத்தாகிய அருட்சத்தி பேசாத எழுத்தின் பொருளாய சிவத்தினை விரைவில் தெளிவாகக் காட்டுவதனையே கொடியானது குறிப்பதாகும்.

கோடிக் கவி முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# நெஞ்சுவிடு தூது

# நெஞ்சுவிடு தூது

பூவினைப் போன்ற உந்தியினையுடைய கார்மேக நிற முடைய திருமாலும், நாவிற் பொருந்திய கலைமகளையுடைய நான்முகனும், முறையே பன்றியுருக்கொண்டும் அன்னவடிவு கொண்டும் நிலத்தை அகழ்ந்தும் விண்ணிற் பறந்தும் தேடி யாதுமறியா இயல்பினையுடையான்; இந்திரனும் வானவரும் பிறரும் எவ்வுலகினரும், மந்தர வெற்பிலுள்ளாரும், கடலிடைவாழ்வாரும், மந்திரங்கள், பொதுநூல்கள், ஞானநூல்கள், விந்து தத்துவம், நாத தத்துவம் என்னுமிவற்றின் தலைவர்களும் அறியாத பெருநன்மையினை உடையான்; சொல்லாற் கூறுதற்கரியவன், அன்பர்க்கெளியான், அளவு கடந்துநின்ற பெரியான்; உயிர்தொறும் ஒளித்த நுண்ணியான், உமையொருபாகன், அறியப்படாத அருவன், உருவன், அருவுருவன், அவ்வடிவு யாதுமிலான், இறப்பிலான், நினைப்பார் மனத்துளான், அன்பினையுடைய மெய்யர்க்கு மெய்யானவன், எல்லாச் செயலுக்கும் ஆதியாய செயலுடையான், பொய்யர்க்குப் பயனளியாது தோன்றாப் பொருளாய் நிற்பவன், எவற்றிற்கு மிறைவன், படமுடைய பாம்பினை அணிந்த பரமன், உயிர்களினிடமாய் நின்ற முதல்வன், சோதியாய்த் திகழ்பவன் ஆகிய கடவுள் என்று இருக்கின்றானன்றே யானும் இருக்கிறேன் எனினும், எனது உண்மை நிலையில் நிலைபெற்று நில்லாமல், சென்று சென்று, முட்டை, வியர்வை, வித்து, கருப்பை என்பவற்றின் வாயி

லாகத் தோன்றும் எல்லாப் பிறப்பும் பிறந்தும், இறந்தும், இருவினைப் பயனை பொல்லாங்கினை நுகரும் அறிவிலி யானேன்.

கல்வி நலமற்ற தீயவுணர்வின் மிகுதியால், உலகாய தனைச்சேர்ந்து வாழும் புல்லறிவு பூண்டு, அம்பினும் விரைந்து சென்று குடும்பத்திற்குப் பழிசெய்து, உலகிலே, கொலை, களவு, காமம் என்பவற்றை நாடி அவற்றிலே யுழன்று, தெரியவேண்டிய பரம்பொருளைத் தெரியாமல், வாடிச் சலித்துப்போகிற மனத்திற்கும், விரும்பிய வழியே துணிவு கொள்ளும் புத்திக்கும், புத்தியுடன் சென்று செயற்றிறன் விளக்கும் அகங்காரத்திற்கும் ஆட்பட்டு உடல் தளரத் தளர்ந்து: அழிய அழியும் உயிரின் துயரத்தை யான் கூறவியலாதேன். உறுதியான பகைகொண்ட காமம், கோபம், மோகம், செருக்கு, பொறாமை என்பார்க்கும், மிக்கவலிமை வாய்ந்த பொறிகள் பத்திற்கும், அவற்றிற்குப் புலனாய இருவகையான தன்மாத்திரைகள் ஐந்திற்கும் எல்லை யில்லாத ஐம்பூதத்திற்கும், சித்தத்தைக் கவர்ந்துள்ள காம வெகுளி மயக்கமென்ற முக்குற்றத்திற்கும், முக்குணத்திற்கும், மும்மலத்திற்கும், மூன்றவத்தைக்கும், எவற்றையும் ஏற்றுச் செய்யும் இருவினைக்கும், கட்டுலனாகாத வாயுக்கள் பத்திற்கும், வினைப்பயன் வடிவமாய கிளைஞர்க்கும், கிடைத்தற்கரிய செல்வத்திற்கும் ஈடுபட்டு அவற்றை விருப்பமாய்ப் பொருந்தும் அறிவு செயல்களை யுடையோனாய், அளவில்லாத அச்சம் கொடுமை முதலிய குறைகளை யுடையோனாய் அரவக் கச்சுடைய பெருமானை யுடையும் பெருநெறி நில்லாமல், உலகில் என்னை அலைக்கழிக்குங் கருவிக்கூட்டங்களாகிய கடலிடைப் பட்டு மயங்கினேன்.

ஆராயுமிடத்து, முழுமுதற் றலைவனை யொழிய வேறு துணையில்லை யென்னு முண்மையையும் உயிரறிவையும் அவ் வறிவுக்கறிவாய பரம் பொருளையும், முன்னதாகக் கைவரப் பெற்றாரே, உலகை முற்றுந் துறந்தோராவர்; மற்றவர்கள் திரிபுணர்ச்சியால் உலகவலையிற் பட்டோராவர் என்னும் நிலைத்தமிழின் தெய்வப் புலமைத் திருவள்ளுவருரைத்த மெய்ம்மொழியைப் பேணவேண்டும். அங்ஙனம் பேணாது, ஐம்பொறி நுகர்விற்கு வேண்டுவனவேசெய்து அவ்வழியே தப்பாதொழுகிப் பாவமாகிய பெரிய கடலினுளழுந்தி மாதர் கண்களாகிய வலையிற்பட்டுப் புணர்ச்சித் திறன்களிற் பயின்று, மெய்புணர்ச்சி யாதுமின்றி, மனச்செருக்கினால், கொடிய சொற்களைக்கூறி எப்போதும் பிறப்பிறப்பிலீடுபட்டு, உயிர் சிரழிந்து நிற்கிற நிலையை நெஞ்சமே, நீ உற்று நோக்குக, முறைமையாக யான்கூறும் வகையை நன்கு கேட்பாயாக.

வெள்ளி மலையிலே அன்பர்க்கருளுதற்பொருட்டு எழுந் தருளிய பெருமான் தன்னை மதியாத முப்புரத்தார் கோட் டைகளைத் தழலாலெரித்தற் பொருட்டுப் புன்னகை செய்த வன், எல்லையற்ற கலைகளின் முடிவாயுள்ள நால்வகைச் சொல் லிற் காதியாய நாத தத்துவத்திற் சோதியாய் விளங்குபவன், எல்லாவற்றிற்கும் ஆதியானவன், குற்றமற்றவன், களங்க மற்றவன், திருவருளினாற் கிடைத்த அறிவினால் ஞானிகள் அறியும் பேரறிவன், அவர்கள் உள்ளத்திற் புகும் நண்பன், பூதவானுக்கு ஆதியாயுள்ள மூலப்பகுதிக்கு ஆதியாயுள்ள தலைவடிவினன்.

சுத்த வித்தையிற்றோன்றும் ஞானத்திற்கும் அதற் கப்பாற்பட்ட ஆதிவாக்காகிய சூக்குமைக்கும் அடிப்படை

யாய ஒளிவடிவன்; அபரநாத தத்துவத்திற்கும் பரநாத தத்துவத்திற்கும் அப்பாற்பட்ட பராசத்தி வடிவன்; கருணையால் அளவு கடந்த பரஞானத்திற்குத் தோன்றும் அளவினை யுடையான்; அளவைகளெல்லாம் கடந்து நின்றவன்; எல்லாப் பொருளிலும் நிறைந்தவன்; அன்பால் நினைவார் தம் உள்ளத்தே விரைந்து செல்பவன்; உயிரறிவால் தெரியமுயன்ற காலை வெளிப்படாதவன்; குறையாத ஒளியாய் நிறைந்த வியாபக அறிவன்; விண்ணிலே திரியுங் கதிரவன் முதலிய சோதிகள்போலன்றி அசைவின்றி நின்ற பெருஞ்சோதி யானவன்; உள்ளக்கண்ணிற் கல்லாது புலனாகாத அமலன்; உலகெங்குந் தான் நிற்பது தோன்றாமல் நின்ற நிலையுடையான்; அருள் நூல்களிலுள்ள அவன் பெருமையினை யான் சொல்லக்கூடிய அளவு சொல்வதை விரும்பிக்கேள்.

அவன் இயல்பாகவே பல்வகைப் பாசங்களையுங் கடந்து அருள் முறைமையால் உலகினைப்பற்றி விளங்கும் நன்மை வெற்றை யுடையான். அவன் ஆனந்தம் என்னும் ஒப்பற்ற ஆற்றினையுடையான். அது செம்மையாய பேரறமென்னும் விளக்கமான வளமிக்க பெரிய மலைநின்றிழிந்து, உலகினர் மகிழும் எழுச்சியுடன் சென்று ஐயம், களவு, அச்சம், காமம், கொலை, கோபம் என்பவற்றை வெட்டியெறிந்து, அளவற்ற வினைகளையெல்லாம் அழித்து, ஓங்கார ஒலியை முழக்கி, மறையாகமங்களென்னும் வழிகளிலோடி, மும்மலக்காடு முற்றும் வேரறக் களைந்து, கல்வியாய கரையைக் கடந்து, பல பூத உணர்வுகளை யழித்து, ஐம்பொறி அவாவினை அழித்து, வினைப் பொறியின் செயலொழித்துப் பெருவெள்ளமாய்ப் பாய்ந்து நீங்குதற்கரிய கட்டென்னும் காட்டைக் களைந்து எங்கும் பரவி, வருத்தம் விளைக்கும் மனம், புத்தி, அகங்

காரம், சித்தமென்ற அந்தக்கரண மென்பவைகளை மோதி யொழிக்கும் அருட்டன்மை யுடையது. மேலும், அது முக் குணத்தைத் தொலைத்து, மயிர்க்கூச்செறிந்து விதிர்விதிர்ப் பெய்தும்படி ஐம்புல மயக்க மொழித்து, பற்றின்மைவய லுள் நிறைந்து, மாதர் மயல் ஒழித்து, ஞாயிறு, திங்கள், நெருப்பு என்ற மூன்று மண்டலங்களையுஞ் சுத்தி செய்து, ஆறுதாரத்தைப் பொருந்தி நின்று, வலிமிக்க பத்து வாயுக் களுக்கும் மேற்பட்ட வெளியிற் பரவி, அவற்றைக் கடந்து, ஐம்பூதங்களையுமுள்ளடக்கி, அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன், என்பார்க்குரிய தத்துவங்களையும், அவற்றிற் காதாரமாய விந்துநாத தத்துவங்களையுங் கடந்து, அப்பாற் பட்ட வெட்டவெளியிடத்தே சென்று, அப் பாழ்நிலத்தைக் கீழ்ப்படுத்தி, அப்பாற் புலனுவதாய அருளுணர்ச்சியையுங் கடந்து கணக்கற்ற யாவற்றையு முட்கொண்டு, சிவப்பேரறி வோடொன்றாய் மயக்கமற்ற எல்லா அறிவுந் தன்னகத்துப் பெற்ற வீட்டினை நல்கி உடலிற் பிரியா உயிர்போல, எவ் வுயிரும் உடம்பாகப்பெற் றுள்புகுந்து, உடம்பினுள தாம் ஐந்தவத்தையுங் கடந்து அப்பாற்பட்ட பேரொளிக்கே அடைக்கலமெனப் போயடைந்து அந்தமிலாத் தண்ணரு ளால் வளர்ந்தோங்குந் தன்மையது.

பேரின்பத்தைக் கருதி மறை, ஆகமங்கள் முதலியன கற்று, அக்கல்வி யறிவாற் சென்றடைதற்கரிய நாட்டினை யுடையான் நமது தலைவன். அறுபத்து நான்கு கலைகளையு மறிந்து மனமற்ற நிலையிலே பற்றெல்லா மற்று, ஒப்பற்ற சிவ ஞான நிட்டையால் சிந்தையானது தேடி யலைதலொழிந்து, நிறைவுற்ற உயிர்கள் வீற்றிருக்கும் ஊரினை யுடையான் நமது தலைவன். அன்பினலே கண்களிலே தெள்ளிய நீரருவி

ததும்பி விழ மயிர்ப் புளகங்கொண்டு நிலையாதனவற்றைப் பொருந்தாமல் மெய்மையை நாடி அளவற்ற பெருமயல்கொண்ட மெய்யடியார் மனத்தைக் கவரும் பேரருள் நன்கு விளங்கு மாலை புனைந்த திருமேனியான், நமது தலைவன். சுத்த மாயை முதலிய வானும் புவனங்களும், மலைகளும், கடல் களும், கீழுலகங்களும், உடம்புகளும், ஐந்து பூதங்களும், உயிரும், அவற்றினுணர்ச்சியும் ஆகிய எல்லாவற்றையு மொற் றித்து அறியும் அறிவாய், எல்லாமாய் அவற்றின் வேறு கியும் நினைப்பார் மனத்துள் தோன்றுது நிற்கும் குறிகை யினை யுடையான் தலைவன்.

அருள் நூல்களில் பேசப்படும் பாதாள முதலிய கீழே ழுலகங்களை யூடுருவி மேலுலகேழிற்கும் நானிலத்திற்கும் ஆதாரமாயிருப்பதாய், அளவிறந்த உலகெலாம் நிறைந்து சொல்லுதற்கரியதாய், அருளாலுணர்வார்க் கெளிதாய், மறை யாகமம் அங்கம் ஆகிய நூல்வடிவாய், உயிரொடு உயிராய்க் கலந்து அறிவாய்ப் பெரிய கொடிய துயர் விளைக்கும் பாசத்தை முற்றிலுந் தொலைத்து, பிறவிக் கடலைக் கலக்கி வற்றுவித்துப் புழுதி யெழும்படி செய்து அலைவினைச் செய் யும் விருப்பம், சினம், செருக்கு, பொறாமை முதலியவற்றை வெகுண்டுதாக்கிப் பிறப்பிறப்பிற் கேதுவாய செயல்களை மிதித்தடக்கிப் பலபெயர் கொண்டு மெய்யறியாது பிதற் றுஞ் சமயக் கணக்கரின் கட்டுப்பாடுகளையழித்து, அச்சம், கொலை முதலியவற்றை நீக்கி உயிர்கள்மீதூர்ந்துவரும் உலக பாசத்தைத் தலையெடா தடித்து பெண்டிர் வேட்கையை அறவே களைந்து அன்பின்விரைவுடன் அருண் மதம் பொழிந்து உடம்பாகப் பொருந்திய தத்துவச் சோலைபுட் புகுந்து, ஆனந்தமாய தேனைப்பருகிச் சிறப்பாகப் பேசப்படும்

நான்பற்றயாகிய, 'நான்கு கொம்புகளைப் பொருந்தி விளங்கு கின்ற ஞானமாகிய ஆனையை யுடையான்.

அறுவகைச் சமயத்தையுங் கடந்து உலகத் துயரமாகிய சுமையை யொழிக்கும் ஒப்பற்ற கொடியை யுடையான்.

புலன் அடக்கமுற்றுத் தம்மை மறந்து சோதிவடிவாய முதல்வனை இதயத்தே தொழுது இம்மை மறுமை என்ப தில்லாம லிருத்தற் பொருட்டுச் செவ்விதாகப் பிராண வாயுவை யோக முறையால் வெளியே மிகச் செல்லாது நிறுத்தி வெளியே உலவும் வாயுவினை உள் வாங்காது புறத்தே நிறுத்திச் சுழிமுனை வாயிலாகச் செல்லும் மூலாதார நெருப்பு நெற்றியிலுள்ள மதிமண்டலத்தைத் தாக்கி அமுதம் பொழி வதால், எப்போதும் ஒரு தன்மையாயிருக்கும் இன்ப அரு ளானது யோகியர் மேனியின்கண் முழக்கும் நாத முரசினை யுடையோன். படைப்புக் கடவுளும், காத்தற் கடவுளும், படைத்துக் காக்கும் உலகங்களினும், அவற்றிற் கப்பாற் பட்டதாய்தன்மாயைப் புவனங்களினும், அவற்றிற் கப்பா லுள்ள தூய புவனங்களினும், உலகமெல்லாம் கடந்த அருள் வெளியாய பேரூரின்கண்ணும் நடைபெறும் உயர்ந்த கட் டளையு முடையான்.

அளவிறந்த காட்சியான்; காட்சிக்குப் புலனாகாத கலைஞானத்தை ஆளும் ஆட்சியான்; நுட்பமாய சூட்சி யான்; உலகமும் எண்திசையும் ஒளியாக நிறைந்தவன்; முதலுமுடிவில்லாத அண்ணல்; எல்லாவற்றிற்கும் வேறாகி நின்று, அவற்றிற்கு வித்தாகவுமிருந்து முளையாகி, ஒலி முதலிய நுட்பமுதல்களாகி அபரவிந்து, அபரநாதம், பரவிந்து; பரநாதம், மாயை யென்பவையாய், அப்பா லொன்றுமில்லாத பாழ் நிலையாய்; அப் பாழ்நிலைக் கப்பாற்

பட்ட பெரும் பொருளாய் நின்ற ஒருவன், அறிவிலா என்னை வெய்ய பிறவிக்கடலில் விழாமல் வீடு நல்கிய மறைஞான சம்பந்த மா முனிவனென்ற எனது பெருமான் உலகினர் போற்றுந் திருவடியை எனது புல்லிய சென்னி மேல் வைத்தோன்; விடைமேற்கொண்ட எம் முதல்வன் புகழ்வார் புகழும் எப்பொருளுமாவான்; ஒப்பற்ற ஆண்டவன்; தன் னின்ப நிறைவால், பிற ரின்பம் நாடாப் பெரொளியான்; வழுத்துதற் குரிய குரு வடிவு கொண்டு குணங் குறியில்லாத பெருவெடமாய் நிறைந்த பெருமான்; பிறவிக்குக் காரணமாய மாயை வினை யென்பவைகளைத் தொலைத்தவன்; மெய்ந்நூல் கற்றவர் வாழ்கின்ற தில்லைப்பதி யுறைவான்; தமது அறிவால் எட்டக் கருதுவார்க் கெட்டாத தன்மையான்; தேன்ததும்புந் தாரினையுடைய அத்தேவன் பவனி வருதல் கண்டு எல்லாரும் வணங்க யானும் வணங்கினேன். அவன் என்னைப்பார்த்து, ஐவகைப்பாசங்களையு மகற்றினன், என் எண்ணத்தை வேருக்கினன், சொல்லுதற்கரிய தொண்ணூற்ருறு கருவிகள் கூடிய வீட்டிற் கட்டுண்டு முயங்கும் மயக்கத்தை அறுத்தான், உள்ளே ஊறுகின்ற சிவானந்தத் தேனமுதினைக்காட்டினன். திருவெண்ணீறும், திருவேடமும் வழிபாடுமே மெய்ச்சாதன மென்ருன், செல்வமு மனை வாழ்க்கையும் (நிலையாமையாற்) பொய்யென்ருன், அறிதற் கரிய திருவைந்தெழுத்தின் உட்கருத்தை அறிவித்தான். அதன் கருத்தை நெஞ்சிலிருத்தி அன்புமிகுதியால், அதனை எண்ணும் தொடர்பினை அறிவித்து, எண்ணுதற் கேதுவாயமைந்துள்ள எழுத்துக்களின் கருத்துமுறையும் எனக்குக் காட்டினன். கலக்கமின்றி உள்நோக்கி அறிவினைத்திட்பமாகவைத்து அருட்சுடரிற் கலந்து அதன் உள்ளொளியாய் நின்ற பேரொளியின்கண் ஆனந்தத்தேனை யுள்ளடக்கிய மலர்

போலச் சிவந்தைக்கருதி அதனைக்காட்டுவான் உருவற்ற திரு வருளை விளக்கக் பொருந்தி, பண்பும் அடையாளமுந் தோற்றாத நிலையிலே இளைப்பாறும்படி செய்து, அங்கே மோன நிலையுறுங்கால், உயிரறிவு, உடல்முதலிய என்னைப் பொருந்தியன யாவையும் தன்பாற் கொள்ளப்பேரருட் பெருக்கந்தந்து என்னோடு கலந்தான். எனது வஞ்சத் தன்மையை மறப்பித்தான். என்னைச் சிவானந்தத்தோடு கலப்பித்து, மன அறிவெல்லா மிழப்பித்தான், என் பிறவி யைப் பிளந்தொழித்தான். அவன் மூலவாக்குகட்கெட்டாத முதல்வன், யாரும் நினைப்பால் அளத்தற்கரியான்; எண் குணத்தான்; சுட்டறிவிற் கேதுவாய ஓரெழுத்தினைத் தோற்றுவித்தவன்.

இச்சியளவிற்கேற்ப நடனம் புரிபவரும் நற்குண மில்லாதவரொடு பயிலாதவரும் அபிநயத்திற்கேற்ற ஆட்டத் தினரும் வாழும் பெரும்பதியாய கூடல்மா நகரினர் ஊனக் கண்ணால் பார்த்தற்கரியனாய் வைகும்பெருமான்; மெய்யறி வாற் பார்ப்பார்க்கு விளங்குபவன்; பாணரது இசைக்கருவிக் குக் குளிர்ச்சி தட்டாமற் பலகையினைத் திருவருளாலுதவி னவன்; அந்திவானத்தினு மழகிய செந்திரு மேனியான், திருமாலுக்குமரியான், எல்லா அண்டங்களினும் அழகுரு வாய் விளங்கும் அண்ணல், காற்றூடி; சுழல்காற்று, சுற்றும் வண்டு, சுழற்றுகொள்ளிக்கட்டை முதலியவற்றின் றன்மை யனவாகிய எனது பிறவிச் சுழற்சியைத் தனது கைம் மாறற்ற பெருங்கருணையால் நீக்கியொழித்தான்.

அவன் திருநீறணிந்த திருமேனியன்; தூயவன்; இயல் பாகவே பாசமிலான்; அருள்வீடளிக்கும் தலைவன்; உயிரின் அறிவுக்கறிவாய்த் திகழ்ந்தவன், பொய்யர்க்குப் பொய்யாய்

மறைந்திருப்பவன், தனது மெய்ப்புகழ் விரும்பிப் புகழ்வார மனதிலே மெய்யாய்த்திகழும் பெருமான். கையில் மழுவா ளேந்தினவன்; எனது ஐயன்; ஆகியவனிடத்தே நெஞ் சமே! நீ சென்றடையவேண்டும். நான் சொல்வதைக்கேள். எந்நாளும் மணப்பொருள்களைப்பூசி, மலர்களை முடித்து, சுவையான உணவையுண்டு, நல்ல ஆடைகளை உடுத்துப் பூங்குழலாளைச் சேருமவாவிலீடுபட்டுச் சிற்றின்பக் கடற்குள் அழுந்துஞ் செயலே முத்தியாகும், பிற இன்ப முத்தி வேறில்லை யென்று இருட்பேய்போல முரண்பாடு பேசும் உலகாயதன்பாற் செல்லாதே. பரம் பொருளைத் தாம் கண்டதுபோலக்கூறி உண்மையில் தம்மையேகண்டு நானே பிரமமெனப் பிதற்றுவார்பாற் செல்லாதே. கொன்றதை உண்டாற் குற்றமில்லை யென்றுகூறி அறமே தெய்வம் பொறையே யொழுக்க மென்னும் புத்தர் சொல்லிலகப் படாதே.

மன நிறைவுற்று வாழ்வார்போல, மயிரைப் பறித்து உடையின்றி உழன்று, ஐம்பொறியடக்கமே முத்தி யென் னுஞ் சமணர் இடத்தைக் கருதாதே. நல்ல சொல்லாலமைந்த பழமறை யோதிப் பொருள் யாதுமறியாத வேதியர் சொல்லை விரும்பிப் பற்றாதே. இறைவனணிந்த திருநீற்றையும் இறை வனிருக்கையாய சிவன் கோயிலையும் உள்ளத்திலே வெறுத்த சிழ்மக்கள்பாற் செல்லாதே.

பயன்கருதாது செய்யுந் தவத்தினைக்குறிக்கும் திரு வேடமும் வழிபாடும் மெய்யறிவு மிரக்கமுமில்லாத மூட ருடன்கூடிப் பழகாதே. மீண்டு மீண்டும் பிறக்குந் தெய்வங் களை மதித்துப் பிறப்பிலா அரனைப் பழித்துத் திரிவாரைப் பாராதே. எந்தலைவன் வீற்றிருக்கும் திருவோலக்க மாளி

கையை எய்தி, அவன் திருவடியிலே வீழ்ந்திறைஞ்சி, காக்க வெற்றியேற்றோனே! காக்க என்றலறி, எதிர்த்து முழங்கிய யானையின் தோலுரித்தாய், உனது பவனிகண்டு அன்பு செய்வாரெல்லாம் காமன்கணை பட்டழிவரோ, உண்மை நிலை நில்லாது இல்லாதனவற்றைக் கருதி நிரயம் புகுவரோ, புறச்சமயக் கூட்டத்தி லகப்படுவரோ, மனத் திகைப்புடையராவரோ, மங்கையரை மருவி நுகருமின்பத்தில் மயங்குவரோ, இரவு பகல், இருபத்தேழு விண்மீன்கள், ஒன்பது கோள்கள், இவற்றின் பலனைக் கருதிக் குறிப்பெழுதுவரோ, காமனை யெரித்த கண்ணுதலோய்! உனது இன்பக்கடலிலே நிலைத்துத் தன்னை மறந்த தையலின் வருத்தத்தைத் தீர்ப்பாயாக என்று கூறி அவளுக்கு உனது செவ்விய கமலச்சேவடி தந்தருள்க, எனவேண்டிப் பன்முறை வணங்கி, அதற்கு அறிகுறியாக அவனது அழகுமிக்க கொன்றைப் பூமாலையைப் பெற்றுக் கொண்டு அவனை வாழ்த்தி விடைபெற்று என்னோடு கலந்திருக்க இப்பொழுதே வருவாயாக.

நெஞ்சுவிடு தூது முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# உண்மை நெறி விளக்கம்

# உண்மை நெறி விளக்கம்

நிலமுதற்கொண்டு சிவமுதல் முடிவாக உள்ள முதல்கள் முப்பத்தாறின் வடிவினை அறிவதே தத்துவ ரூபமெனப்படும். முதல் வடிவு என்பது வுமது.

அம்முப்பத்தாறு தத்துவமும் கட்டினை விளைப்பதாய்ச் சடமாயுள்ளதென் றறிவதே தத்துவ தரிசனம் (முதலின் காட்சி;) இம்முப்பத்தாறு தத்துவங்களில் ஒன்றையும் நான் பற்றி நில்லாமல் இறையருளால், அவற்றை விட்டு நீங்குதலே தத்துவ சுத்தி எனப்படும். முதல் நீக்கம்.

இருண்மலம் நீங்கப் பெற்றுச் சிவஞானத்தைத் தனதறிவின்கண் காணுதல் ஆன்ம ரூப மெனப்படும் உயிர் வடிவு. உயிர் செயலற்று நிற்பதே உயிர்க்காட்சி (ஆன்ம தரிசனம்) யிருக்கும். உயிர் தனது சுட்டறிவு நீங்கப் பெற்றுச் சிவத்திலடங்கித் தானென்றற நிலையிலிருப்பது உயிர்நீக்கம் (ஆன்ம சுத்தி) எனப்படும்.

நிற்பது நடப்பதுமாய எல்லாப் பொருள்களோடும் இரண்டறக் கலந்து நின்று எழுச்சிமிக்க பராசத்தியையே தனது வடிவாகக்கொண்டு இருண் மலத்தால் விழுங்கப்பட்ட உயிர்களின் பொருட்டே தோற்றம் ஒடுக்கங்களை யியற்றி உயிர்களுக்குப் பிறவி நீக்கமும் பேறுபேறு மருளிச் செய்து, அவர்கட்குத் தன்னை விளக்குவான் சிவன் ஒருவனே என்பதை நேராகத் தனதறிவிற் காண்டலே சிவவடிவு (சிவரூபம்) எனப்படும்.

பராசத்தி, யானெனதென்னுஞ் செருக்கறும்படி உயிரின்கட் பொருந்தல் திருவடியாகும், பார்க்கின்ற இடமெல்லாம் சிவமே தோன்றல் இறைவன் திருமுகமாம், சொல்லைக் கடந்த பேரின்பமே திருமுடியாம், என்ற உண்மையைத்

தெளிந்து எங்கும் அப்பொருளே தோன்றுவதை அனுபவத் திற்கண்டு தத்துவங்கள் கூடிய சகல நிலையையும், தனி நிலையையுங் கடந்து அருளினை யெய்தி அப்பாற் பட்டுத் தனது செய்தி சிவஞானச் செய்தியிலடங்கப் பெற்றுத் தெரிவதற்கரிய சிவஞானத்தை அடைதல் சிவக்காட்சி (சிவதரிசனம்) எனப்படும்.

உலகில் வாழுங்கால், எப்பொருள் எதிர்ப்பட்டாலும் அப்பொருளின் உண்மை யறிந்து, அதனைப்பற்று முயிரியல்பு கண்டு, அவ்வுயிர்க்கு மேலாகிய அருளினைக் கண்டு, அப்பாற்பட்ட சிவத்தினுண்மைத் தன்மை யுணர்ந்து, அச் சிவத்தொடர்பு பற்றியே, உற்ற பொருளெல்லாங்கண்டு குற்றம், குணம், உணர்வு, புசிப்பு முதலிய எல்லாவற்றிற்கும் அதுவே காரணமெனக் கண்டு அப்பொருளில்லாமல் ஒன்றிற் குஞ் செயலில்லை யென்ற உணர்ச்சியால் அச்சிவத்தோடு கலப்பதே சிவப்பற்று (சிவயோகம்) எனப்படும்.

சிவத்தோடு கலந்த பெரியோர் ஊழ்வினைப் போக்கால், தஞ்செயலற்றுப் பாதகமாகத் தோற்றுபவைகளைச் செய்தாலும், கொலை, களவு, கள்ளுண்ணல் முதலியவற்றைப் பழகினும், தீய நெறியிற் பயின்றாலும், குலமுறை தப்பி நடப்பினும் பிற தவறுகள் அவர்களால் நேர்ந்தாலும் அவர்கள் சிவத்தோடிசைந்து நிற்பதால், இறைவன் அவர்களது உடலின் கண் விளங்கி உயிரோடு கலந்து உண்டல், உறங்கல், நடத்தல் முதலிய பல்வகை நுகர்வுகளையும் தன் மயமான இன்பவடிவாக இயற்றித் தன்னொடு வேறற நிற்குமவர்களைத் தன்மயமாக்கி விடுவன். எல்லாமே சிவபோகமாகப் பெற்ற பெருநெறியே சிவபோக வளர்ச்சி யெனப்படும்.

உண்மை நெறி விளக்கம் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# சிவஞான சித்தியார்

(பரபக்கம்)

# சிவஞான சித்தியார்

## பரபக்கம்

---

இதன் பாயிரத்துள் கணபதி காப்பும், சிவன், சத்தி, விநாயகர், முருகர், என்னுங் கடவுளர்க்குரிய துதியும் இயம்பிய பின்னர், ஆசிரியர் அருணந்தி சிவம் மெய்கண்டதேவ நாயனார்க்கு வணக்கங் கூறுகின்றார். அது வருமாறு:—

பண்டைமறை வண்டு அரற்றப்பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இருதய கமலமுகைகளெல்லாங் கண்திறப்பக்
காசினிமேல் வந்த அருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணெய்மேவு
மெய்கண்டதேவன் மிகுசைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தேவாழும் பொற்பாதம்
எப்போதும் போற்றல் செய்வாம்.

---

பழைய மறைகளாகிய வண்டுகள் ஒலிட, புதியதேனாகிய சிவஞானம் ததும்பி யொழுகச் சிவமணம் விரிந்து கமழ உயிர்களின் அகத்தாமரை மொட்டுக்களெல்லாம் மலரும்படியாக இவ்வுலகிலே உதித்த அருட்கதிரவன் யாரெனில், திருவெண்ணெய் நல்லூரிலெழுந்தருளிய மெய்கண்டதேவரென்னுஞ் சித்தாந்தத் தலைவரே. கமலத்தையும் அழகில் வென்ற அவரது திருவடிமலர்கள் எமது சென்னியில் எப்போதும் வாழும். அவற்றைப் போற்றித் துதிப்போமாக. என்றவாறு.

அவையடக்கங் கூறிய ஆசிரியர் தமது நூலுக்கு முதல் நூல் யாதென்று கூறுமிடத்து, அவர் கடைக்குறிவுறுத்தும் வரலாறு உற்று நோக்கத்தக்கது. மிகுந்த நல்லறிவும் அறியாமையும் இலராய் நடுத்தன்மையுடைய வழியாதென்று வினவும் நடுத்திருந்தினர் அறியற்பாலனவாய உண்மைகளை முற்காலத்திலே இறைவன் நந்தி பெருமானுக்கியம்ப, நந்தி பெருமான் தாங்கேட்டதைத் தமது மாணவராகிய சனற் குமாரர்க்குக் கூற அவ்வழியைக் கடைப்பிடித்து எமது குருநாதன் குற்றம் நீங்க எமக்குக் கூறிய சிவஞான போதத் தின் பொருளைத் தெரிந்துச் சிவஞான சித்தியென்ற நூலையுரைப்பன் என்றது காண்க. ஈண்டு இறைவன் சிவஞான போதநூலினை இரௌரவாகமத்தினின் றெடுத்துக் காட்டினதாக ஆசிரியர் இயம்பாமை காண்க.

இந்நூலுள் முதற்கண் விதந்தோதி மறுக்கப்படும் சமயம் உலகாயதன் கொள்கையாகும். உலகாயதமதமென்பது இந்நிலவுலகில் எப்போது தோன்றியதென்று நன்கு விளங்கவில்லை. கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலேயே மணிவாசகனார் உலகாயதத்தைத் தமது நூலுட்குறித்தனர். 'உலகாயதமென்னும் ஒண்டிறற்பாம்பின் கலாபேதத்தகடு விடமெய்தி' என்றதனைக் காண்க. கி. பி. ௨வது நூற்றாண்டு நூலாகிய மணிமேகலையுள் 'பூதவாதி' யென்பாரும், உலகாயதரேபோலும். புத்தர் பூதவாதி கொள்கையைக் கடிவோராதலின், புத்த சமயந்தோன்று முன்னரே உலகாயதந்தோன்றிய தென்பாருமுளர். உலகாயதன் என்பானொருவன், வியாழபகவான் விண்ணவர் கோமானுக்குச் சூழ்ச்சியாக உரைத்த நாத்திகநூலினை மெய்யெனக்கொண்டு, நாத்திக மதத்தை உலகிற் பரப்பினனென்று சித்தியார் கூறுகின்றது.

தேவகுருவின் நூல் இந்நிலவுலகத்தே எவ்வாறு எக்காலத்தே உலகாயதன் அறிவிற்குப் புலனாயிற்றென்பது விளங்கவில்லை.

உலகாயதன் கொள்கை வருமாறு:- பொருள்களை யறிவதற்குக் காட்சியே கருவி. அக்காட்சியானது, ஐயக்காட்சி, வாயிற்காட்சி, விகற்பக்காட்சி, பூர்வக்காட்சி, திரிவுகாட்சி, எதிர்மறைக்காட்சியென அறுவகைப்படும். கயிற்றை அரவோ வென்றையுறுதல் ஐயக்காட்சி. இதனை மனக்காட்சியென்றுங் கூறுப. பொறிகளாற் பொருள்களை யறிதல், வாயிற்காட்சி. பொருள்களின் பெயர், இனம், குணம், தொழில், பயன் என்பவற்றை யறிதல் விகற்பக்காட்சி. புகையால் அனலுண்டென்றறிவது பூர்வக்காட்சி. கயிற்றை அரவாகக் கருதுதல் திரிவுகாட்சி. குளிர்ச்சியிருப்பதால், தீ இல்லை யென்றறிதல் எதிர்மறைக்காட்சி.

காட்சியின் வேறாக உரை, கருதல் என்னும் அளவைகள் பொருளாராய்ச்சிக்கு வேண்டப்படாதன. காட்சியாலறிந்தபொருள்கள் நிலம், நீர், தீ காற்று என்னும் நான்கே. நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்யது, காற்று இயங்குவது. காற்றினைத் துணையாகக் கொண்டு பிறமூன்று பூதங்களும் தம்மிற் கூடும். அப்படிக் கூடுவதால், நாற்றம், சுவை, ஒளி, ஊறு என்னுங் குணங்கள் உண்டாகின்றன. மண்ணில் நின்று பல்வகைப் பாத்திரங்கள் உண்டாதல்போல, இப்பூதங்கள் தம்மிலொத்துக் கூடும் புணர்ப்பினால், பல்வகை உருவுகள் தோன்றும். நீர்க்குமிழி யெழுவதுபோல, அவ்வுருவுகளிலே, புத்தி, குணம், பொறி முதலிய எல்லாம் எழும். பூதக்கூட்டத்தினின்று நாலாவதாகிய காற்றுப் பிரியவே அறிவு மாளும். பின் பிறபூதங்களும் பிரிந்து விலகித் தமது குணங்களற்றுத் தனி நிலையடையும். ஆகவே, நால்

வகைப் பூதப்புணர்ப்பே, எப்பொருளின் தோற்றத்திற்குங் காரணம். அவை தனிநிலையில், என்றும் அழியா வியல்புடையன. இவ்வாறு பூதவியல்பினை அறிவதே நற்கதிக்குரிய ஞானமாம். இப்பூதங்கட்கு வேறாகக் கடவுள், உயிர், வினையெனச் சமயிகள் உரைப்பன பொய். அவர்கள் அங்ஙனஞ் செப்பி உலகை ஏமாறச் செய்தற்பொருட்டு உலகத்தார் அவர்களுக் கிழைத்ததீங்கியாது? அவர்கள் கோட்பாடு, உவமையில்லாத மலடிமகனொருவன் முயற்கொம்பிலேறி ஆகாயப் பூவைத் தவறாது பறித்தானென்றுரைப்பதாகும்.

வினைகள் செய்த உடம்போடு அழிவனவாகலின், அவை மற்றொரு பிறவிக்கு வித்தாவது யாங்ஙனம்? அவை நுட்பமாக நிலவுமென்றால், திரியில் நின்ற விளக்கொளி திரியை நீங்கித் தனியே எவ்வாறு நிலைபெறும்? வயலிற் பயிர்க்கு உரமாக இட்ட வைக்கோலுந் தழையும் அழிந்து உருமாறிப் பயிர்க்கு நன்மை செய்வதுபோல, வினை தோன்றாமல் மறைந்து பின் உயிர்க்கு நுகர்ச்சியாக வந்து பொருந்து மென்றால், வைக்கோலுந் தழையும் இட்ட இடத்திலே பயன் கொடுப்பன அன்றி வேறிடத்திற் பயன்படா. வினை கெட்டுப் பயன் கொடுக்குமென்பது உணவு கெட்டு மலமா யொழிந்தபின், அது உடற்குப் பயன்தருமென்பது போலாம். பல்வேறு உயிர்களின் உருவுஞ் செயலும் வெவ்வேறு தன்மையனவாய்த் தம்முள் ஒவ்வாமைக்குக் காரணம், பூதங்கள் மிகுந்துங் குறைந்துங் கூடி யியைபுற்றமையே யாம்.

இன்பதுன்பங்கள் கன்மத்தால் வருமென்பது தவறு. நீரானது சந்தனத்தோடு கூடி நாற்றமுறவும், தீயின் சார்பால், ஆவியாய் மாறவும் என்ன நன்மை தீமை செய்தது?

இச்செயல்கள் நீரின் றன்மையே. தோல், நெருப்பைக் கண்டாற் சுருண்டும், நீர் சேர்ந்தவிடத்து நெகிழ்ந்து மிருந் தல் அப்பொருளியல்பினையே காட்டும். யாவும் பதார்த்த வியல்பாலன்றி, வினையால் நிகழ்வனவல்ல.

உயிரென்பது உடலின் வேறாக யாதுமில்லை. பாக்குஞ் சுண்ணும்பும் வெற்றிலையும் விரவியகாலை, முன்னில்லாத சிவப் பொன்று உண்டாவதுபோல, பூதப் புணர்ப்பால் உடம்பு உண்டாயபோது, அதன் குணமொன்று அறிவென்பதாகும். உடம்பின் வேறாய உயிர் எவ்வகைத்தாய காட்சிக்கும் புலனுவ தில்லை. ஆதலின், அத்தகைய உயிரினைப்பற்றி விரித்துரைத் தல், முயற்குக் கொம்பிருப்பதாகக் கூறி அக் கொம்பின் அள வினையும் வடிவினையும்பற்றிப் பேசுவதுபோலாம்.

உடம்பின் குணமாக அறிவுண்டாவதால், கடவுளென் ருெரு பொருள் அருவாயிருப்பதென்ருல், அது அறிவில் தாய் ஆகாயம் போன்ற சூனியப்பொருள் என்பது முடியும். அது உருவுடைத்தென்னில், பூதக் கூட்டத்திலுளாய பொருள்களுள் அது ஒன்ருகவேண்டும். அருவுருவென் னில் அருவாகிய வானிலெறிந்த உருவுடையக் கல் நில்லாமை போல அருவமு முருவமுங் கூடிநில்லா. ஆதலாற் கடவுள் உடம்போடுள்ள உயிரின் வேருக உள்ள பொருளன்று. பூதக் கலப்பால், உணவுண்டாகி உடம்பின் விருத்தியாற் புத்தியுண்டாம். புத்தியிலே சஞ்சலமுற்ற மனம் உண் டாய், உடம்பு, புத்தி, மனமென வெவ்வேறு பொருள்கள் உளவாயினவென்று உலகாயத வேதங் கூறவும், உலகத்தார் அவ் வேத வுண்மை உணராது வழியல்லா வழி வீழ்ந்து துன்பப் படுதல் எதனுலோ? இவ் வுலகிலே உள்ள போகத் தைக் கைவிட்டு விண்ணுலகிற் போய்ப் பிறிதொரு பிறவி

யிற் பெரும் போகம் பெறலாமென்று நம்பி யொழுகுவது தாகம் எழுந்தபோது அருகிலுள்ள நீர் நிலையிலுள்ள நல்ல தண்ணீரைப் பருகாமல், ஒருவன் நெடுந்தூரத்திற்கப்பால் தீம்புனல் உண்டென்று கூறுவதைக் கேட்டுச் சேய்மையிற் போயொன்றுங் காணாது வருந்துவதுபோலாம்.

வாம மதத்திலே, கள்ளும் ஊனு முண்டு போகங்களை நுகர்வது பேசப்படுதலின், அம் மதவாதியை நோக்கி உலகாயதன் தனக்கு வலக்கை தரும்படி அழைக்கிறான். "என் உயிர்க்குத் தோழன் உன்போல்வார் யாருமில்லை. 'கொலை முதலியவற்றிற் கஞ்சாது பெண்டிர் நடுவுட் சோதிபோல் விளங்கு மன்பனாகிய நீயே சிறந்தவன். 16 ஈசன், மால், அயன், இந்திரன், . என்ற தேவர்கள் மாதரை விழைந்து அவர் விரும்பின செய்தன்றோ மேன்மையுடையரானார். 17 அவர்போல நாமும் பெரியராகவேண்டுமாயின், பெண்டிரோடு கலந்து வாழவேண்டும். ஊடியும் கூடியும் உறுவன செய்தும், மகளிரை மகிழ்வித்துத் தாமும் மகிழ்ச்சி யெய்தாத மாந்தர், பொய்ந்நெறி புகுந் தொழிகின்றனராவர். 18 மெல்லியலார் போகத்திற் றலைசிறந்தவரே மெய்யான முத்திப் பேரின்ப முடையார். 21 அதற்கு வேறாக, முத்தி யென்பதொன்றைக் கண்டாரும், கேட்டாரும், காட்டினாரும் இல்லை." நாட்டிலே அரசன் ஆணைக்கு அடங்கி நடந்து, வணிகம், உழவு, கைத்தொழில் முதலியவற்றைப் பேணிப் பொருளீட்டி மகளிர் இன்பந்துய்ப்பதே உலகவர் கடமையாகும். ஆதலின் அதனை யாவரும் நண்ணுக. இஃதே உலகாயத முடிவு.

## உலகாயத மத மறுப்பு.

காட்சி யளவையே பிரமாணம். கருதல், உரை முதலி யன வேண்டாவென்னில், கருதலளவை அனுபவத்தில்

யார்க்கு முளதாகும். ஒருவன் பிறந்தவுடன், அவனது பெற்றோர் இறந்தொழிந்தால், அவன் அறிவு நிகழப்பெற்றபின் தனக்குப் பெற்றோ ரிருந்தன ரென்றறிதல் கருதலளவை யன்றோ?

பூர்வக் காட்சி யென்பது அனுமானத்தின் சார்புடையதே. மேகம் இடித்து மின்னி யிருண்டபோது மழை பெய்யு மென்ற நினைப்புண்டாவதும், அகில், சந்தன முதலிய மலைப் பொருள்களை ஆற்று வெள்ளம் கொண்டுவரப் பார்த்தபோது, மலையில் மழை பெய்ததென்று துணிதலும், கருதல்தானே? பூதங்கள் சேர்ந்து இவ்வுடம்பு உண்டாவதைப் பார்த்தவர் யார்? பூதக்கூட்டுறவினாலே உடம்பினுள் அறிவுண்டாவதைப் பார்த்தவர் யார்? பூதங்களாகிய உருவுகளைப் பார்க்கின்றோமே யொழியக் காரண நிலையாய தனிநிலையிலுள்ள பூதங்களைப் பார்த்தவர் யார்? பூதங்கள் அழிவில்லாதன வென்று கூறுவது எதனால்? அனுமானத்தினாற்றானே? ஆதலாற் கருதலளவை உலகாயதக் கொள்கைக்குந் துணைசெய்வதால், காட்சியளவை மட்டுமே பிரமாண மென்றல் தவறு.

இனி, உரையளவையும் பொருளாராய்ச்சிக்கு வேண்டப்படுமென்பது சிறிது காட்டுதும். சோதிட நூலோர் எதிர்காலத்து நிகழ்வதைத் தவறுமற் சிறுபான்மையாவது சொல்ல எது என்னை? நூல் வாயிலாகப் பூமியின் மறைந்து கிடக்கும் பொருள்கள் எடுக்கப்படுகின்றன. மணிகளை அகழ்ந்தெடுத்தல் முதலியன நூலின் உதவிகொண்டு நிகழ்கின்றனவே. முன் நேரே நாம் பார்த்ததைச் சிலர் பார்த் தெழுதியதே உரையென்னில், அவ்வாறே நாம் பாராத புவனங்களையும் பொருள்களையும் அறிந்தெழுதியனவே, உரைப் பிரமாணமாதலின், அதுபற்றி மாறுபாடு யாதுளது? எவ்வகையி

லாவது உரையைக் கொள்ளலாமாயின், அது வேண்டா மென்பது தவறன்றோ?

இனி, மண்ணில் நின்று குட முதலியன தாமாகத் தோன்றக் கண்டிலம். அவை குயவனாலே உண்டாக்கப்படு கின்றன. அதுபோலப் பூத வடிவங்களும் தோன்றுவது ஒரு முதல்வனாலாதல்வேண்டும். அது இயற்கையெனின், அதற்கு மறுதலையாய ஒடுக்கமுங் காணப்படுதலின், இரு வேறு செயல்கள் இயற்கையாகாவாதலின், முதல்வன் அவற் றைத் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் வேண்டும். பூதங்கள் தாமே தம்மிற் கூடுதற்கு இடமில்லை. ஏனென்றால், அவை ஒன்றோடொன்று மாறுபாடுடையன. நீருந் தீயும் ஓரிடத் திற் கூடி நின்றதை யாராவது பார்த்ததுண்டா? அவற் றைக் கூட்டு முறைமையால் அறிவுடைய ஒருவன் கூட்டினா லன்றி அவை தாமே முரண்பாடின்றிக் கூடா. நிலமுதல் பழமையுடையதாகலின், அது முதற்கண்ணும் அதற்குமேல் அதைவிட எளிதான நீரும், அதற்குமேல் நெருப்பும், நான்காவதாக வாயுவுங் கூடும். நீரும் நெருப்பும் முரண் பட்டு ஒன்றை மற்றொன்று அழித்துவிடும். நீரிற்கும் நெருப்பிற்கும் நடுவே மண் தானே போய் நின்றுவிடாது. நீரை அனலாற் கொதிப்பிக்க விரும்புகிறவன், மண்ணாலாய பானையில் நீரை ஊற்றி அனல்மேலே பானையை வைத்தா லன்றி, இரண்டு பூதமும் பயனுறும் வழியிற் றொழிற்படா. அதுபோலப் பூதக் கூட்டத்தாற் பொருள்களுளவாதற்குத் தக்க முறையில் அவற்றைச் சேர்ப்பிக்குங் கடவுள் ஒருவன் வேண்டுமென்றறிக.

நீரிற்குமிழி எழுவது காற்றினால். நீரிலெழுங்குமிழி நீராதல்போலப் பூதங்களிற் றோன்றுவது பூதமாமேயன்றி

அறிவாகாது. அறிவென்பது பூதகுணம் என்னில், மண், நீர், அனல், காற்று இவைகளிலே அறிவு காணப்படவில்லையே. இவற்றின் கலப்பிலே அறிவு காணப்படுமென்னில், அவை கலப்புற்றிருக்கும் பிணத்திலே அறிவு ஏன் காணப்படவில்லை? காற்று பிரிந்துபோவதால், அறிவு தோன்றவில்லையெனில், அது பிரியாது நிற்கும் உறக்கத்திலே அறிவு விளங்காமைக் கேதுவென்னை? வெற்றிலை பாக்குச் சுண்ணாம்பு மூன்றுங்கூடிய விடத்துண்டாகிய சிகப்பு நிறம், அம்மூன்றின் கலவையை விட்டுப்பிரிதல் இல்லை. உடம்பெழும் அறிவு மறைந்தொழிய, உடம்பு கிடக்கக்காண்கின்றோமே. அறிவு உடம்பின் தன்மையானால், அது உடம்பு உருமாறியழியும்வரை அதனை விட்டுப் பிரியாதிருத்தல் வேண்டும். அறிவு பிரிந்த பின்னன்றோ உடம்பு அழிகிறது. மேலும், வெற்றிலைக் கலவைக்கண் சிவப்பு நிறம் ஒருபடித்தாயது. உடம்பிலே வெவ்வேறு பொறிகளும், பண்புகளும், செயல்களும் தோன்றுகின்றனவே. அவை எவ்வாறு தோன்றின? அவையனைத்தும், உடம்பின்குணமாமோ? சிவப்புநிற முண்டாதற் பொருட்டு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்ற மூன்றையும் ஒருவன் சேர்த்தல் இன்றியமையாமைபோல், பூதங்களைக் கூட்டித் தொழிற்படுத்தற்கும் ஒருவன் வேண்டுமென்றறிக.

அறிவு, உடலின் குணமென்னில், பெரிய உடலுக்கு அறிவு பெரிதாயும் சிறிய உடலுக்கு அறிவு சிறியதாயுமிருக்கும். பெரிய உடலுடைய யானையைப் பார்க்கிலும் சிறிய உடலுடைய மனிதன் அறிவு மிகுதிப்பட்டவனாயிருப்பது எதனால்? அறிவு சூடுபோலப் பரவியிருப்பதென்னில், எறும்பிற்கு அறிவு மிகுந்தும், யானைக்கு அறிவு குறைந்துமிருக்கிறதா?

பூதமானவை கூடுங்காலத்து ஒரோவொரு பூத மிகுதிப் பாட்டால், பெரிய உடம்பும், அத்தகைய பூதக் குறைவு பாட்டால், சிறிய உடம்பும் உண்டாகின்றன வென்றால், அறிவு மிகுதிப்படுதற்குங் குறைவுபடுதற்குங் காரணம் யாது? எப்பூதத்தின் மிகுதி குறைவு அதற்குக் காரணம்? ஏதாவது ஒரு பூதமென்றால், அப்பூதத்தின்கண் அத்தன்மையிருப் பதைக் கண்டதார்? ஒரு காலத்திற் பெரிதாயிருந்தவுடலே மற்றொரு காலத்திற் சிறுத்தும், மாற்றமடைந்தும் நிலவுவ தாலும், அக்காரணம் பற்றி அறிவு தேய்தலும், மாறுதலுங் காணாமையின், உடலுக்கும் அறிவுக்கும் குணகுணித் தொடர்பு எவ்வாறுளதோ? கூறுக. ஒருவகைப் பூதக்கூட் டத்தினால் அறிவுமிகுதியும், மற்றொருவகைப் பூதக்கலப்பால் அறிவின் குறைவும் ஏற்படுமாயின் உடல் தோன்றிய காலங் கொட்டு அறிவின் மிகுதியோ, குறைவோ மாற்றமின்றி அவ் வுடல் அழியும்வரை இருக்கவேண்டும். அங்ஙனமில்லாமை தெளிவு. ஆதலால் உடற்கு அறிவு குணமென்றல் எவ்வாற்றா னும் பொருந்தாமையோர்க.

காமம், வெகுளி முதலிய பண்புகளும், ஐம்பொறி யுணர்வு, நினைவு, பகுத்தறிவு, கடைப்பிடி, முதலிய அறிவு வகைகளும், துயிலுதல், உண்டல், அஞ்சுதல் முதலிய செயல் களும் உடம்பின்றன்மைகளாயின், அவை உடம்பகத்தே எக்காலத்தும் உள்ளனவா? பூதத்தின்றன்மைகள் விளக்க மானசிலவே. அவற்றின் கூட்டத்தின்றன்மைகளும் அவ் வாறே. அவை ஆண், பெண், அலியென்ற பகுப்பிற்கும் அள விறந்த பிறப்பு வேறுபாடுகளுக்குங் காரணமாதல் யாங்ஙனம்? அவை பூத இயற்கைகளெனின், மாறுபட்டபல கோடி தன்மை கள் இயற்கையாதல் எப்படி?

ஆணும் பெண்ணுங் கூடுதல் இயற்கையோ? செயற்கையோ? பூதங்கள் தாமே கூடி ஆணையும் பெண்ணையும் ஆக்குதலைப் பார்த்ததார்? அப்படைப்பு எங்காவது நிகழ்கின்றதா? பூதச் சேர்க்கையே, ஆண் பெண்ணிற்குக் காரணமாயின், காதலிருவர் சேர்க்கையால் அவை உருப்படுவானேன்? பூதச் சேர்க்கை ஆதிகாரணமென்னின், ஆதி பூதச் சேர்க்கை, ஆணும் பெண்ணும் உண்டாக்குமாயின், இப்போது அத்தகைய சேர்க்கை நிகழாமைக் கேதுவென்னை? உரை, கருதல், காட்சி யொன்றிற்கும் பொருத்தமில்லா நின் கொள்கை நிலை பெறுதன்றோ?

கன்மத்தை நீர் மணமும் வெப்பமும் எய்துவதற் கொப்பாக நீ கூறினாய். இன்ப துன்பங்கள் உடலுக்காயின் நீ சொன்ன உவமை பொருந்துதல் கூடும். நீர் மணத்தையும் வெப்பத்தையுஞ் சேர்ந்ததாலே அவற்றை எய்துதல்போல உடலெடுத்த உயிர் நல்வினையைச் செய்வதனாலும் தீவினையைச் செய்வதனாலும் அவற்றின் பயனை நுகரு மென்பது பொருத்தம். இன்பம் நுகர்வது இயற்கையோ, துன்பம் நுகர்வது இயற்கையோ? இன்பம் நுகர்வது இயற்கையாயின் துன்பம் வரக் காரணமென்ன?

அதனை நுணுக்கமாக ஆராயப்புகின், அது வினை யென்பது முடியும். (அதனைச் சுபக்கம் இரண்டாஞ் சூத்திரத்தில் காண்க) வினை இன்ப துன்பத்துக்குக் காரணமாயின், கடவுள் அவற்றைத் தருவாரென்பது எப்படி என்னில், வினை தானே உயிருக்கு உடம்பினைக் கொடாது. உடம்பு தானே உயிரைச் சென்றடையாது. ஆதலால் உடம்பை உயிரோடு கூட்டுவிப்பாரொருவன் வேண்டுமென்றறிக.

புறக் கருவிகளாய ஐம்பொறிகளாலுயிர் அறியப்படாமையின், உயிர் என்பது ஒன்று இல்லையெனில், உடம்பானது தன்னைக் கண்ட கண்ணைக் காணாமையாற் கண் என்பதில்லை யென்பது தவறுமன்றோ? உறுப்புகளுள் கண்ணுக்குத்தான் காணுந்தொழில் அமைந்துள்ளது. உயிரும் அத்தன்மையதே. உயிர் கருவிகளை யறிந்து தொழிற்படுத்தும். கருவிகள் உயிரை அறியமாட்டா. நெருப்பானது ஒன்றைப் பற்றி நின்றே தன் வடிவைக் காட்டும். அதுபோல உயிரும் ஒன்றைப் பற்றி நின்றன்றி விளங்காது. தகழியிலுள்ள எண்ணெயைக் கொண்டு விளக்கு எரிவதுபோல உடல் ஒழிவிலாக நுகரவேண்டிய வினைப் பயனை உயிரானது நுகர்ந்தியங்கும்.

அறிவு உயிர்க்குணமாயின், அது எப்போதும் அறிவொழியாமல் அறியாமையுமுண்டமை எவ்வாறு பொருந்துமெனின், அறியாமைக் கேதுவாயது மயக்கம். அஃதுண்மை உனக்கும் உடன்பாடாகுமாறு ஒரு உதாரணம் காட்டுதும். கனவு காணும்போது, அதனை நனவாக நீ கருதுவதும், தாய் வயிற்றிலிருந்ததைப் பிறந்தபின் மறப்பதற்கும் காரணமென்னை? கனவிலே அறிவு விளங்கினும் தாய் வயிற்றிலே அறிவுளதாயினும், அவ் வறிவு மாறுபடுவதற் கேது வென்னென்று ஆராயின் உயிரை மயக்குவ தொன்றுளதென்பது விளங்கும்.

இறந்திடு மறிவே பிறந்திடுமென்ப தெவ்வாறெனில், துயிலுமுன் உள்ள அறிவே துயிலெறபோது மறைந்திருந்து விழித்த விடத்துப் புலனாவது போலவென்க. முற்பிறப் புணர்ச்சி யில்லையே யெனில் அது நனவான்து கனவிலே மறைந்தொழியக் கனவே நனவாக இருப்பதுபோல

வென்க. கனவிலே வேறுடம்பு தோன்றுதலுங் காண்க. அந்தக்கரணங்கள் இறக்கும்போது மறைந்தொழிந்து பின் அவை தோன்றுத லெவ்வாறெனில் ஒருவன் மூர்ச்சித்த விடத்து அவனது பொறிகள் ஒடுங்கி மூர்ச்சை தெளிந்த விடத்து அவை புலனுவது போலாமென்க. மதியின் கலைகள் மறைந்து ஒவ்வொன்றாய் நாடோறுந் தோன்றுவதையும் அதற்குக் காட்டாகக் கூறுப.

இதுவரை வழக்கிட்டு முறையாற் கூறியதன்மேல், இனி நீ அறியவேண்டியவற்றைச் சுருக்கமாக உரைப்பாம்.

நீ அழியாதனவென்று கூறும் பூதங்களும் அழியுந் தன்மையனவே. ஆதலால் அவற்றை முற்றொழிப்படுத்தும் முதல்வன் ஒருவன் உளன் என்றறிக. நீ விரும்புகின்ற போகமும் இறைவனைத் தளராஅன்போடு வழிபட்டால் இம்மையே இயலுதலுங்கூடும்.

பொன்னும் மணியும் விரவியமைத்த அணிகள் மலத்திலே விழுந்தால் அவற்றைக் கைபினெடுத்தல் கூடாமைபோல, நாற்றமும் அழுக்கு மிகுந்த உடம்பினிலுள்ள உயிரைத்தழுவ விரும்புதல் நன்றன்று. அது பன்றிகள் அழுக்கிலும் மலத்திலுங் கிடந்தின்புறுதல் போலாகும். இறைவன் தரு மின்பம் குற்றமற்ற அழியாத வளமிக்க பேரின்பம். அவனுக்கு அடிமை யாகுக. வெகுளியே தமக் கியல்பாகப் பெற்றவர்கள் பொறுமையின் நலத்தினை யறியமாட்டார்கள். ஆசையுற்றவர்கள், ஆசையற்றவர்கள் பெறு மின்பத்தை அறியமாட்டார்கள்.

சிற்றின்பத்தை விழைவு மியல்பினர் பேரின்ப இயல் பறியார். நீ விரும்புஞ் சிற்றின்பம், குளிர்காலத்திலே நெருப்

பின் அண்மையும், வேனிற் காலத்திலே பொய்கையின் நட்பமும்போல நிலைபெறா வியல்பின. நிலைத்த சிவனடிப் பேரின்பம் விழைக. அதற்குரிய நெறியை யடைக. கற்றற்குரிய சிவ நூல்களைக் கற்க. செய்தற்குரியது, இறைவழிபாடே. விடுத்தற்குரியன காம, வெகுளி, மயக்கங்கள். வேண்டும் பொருள் திருவருளே. மும்மலம் நீத்து நின்மலனோடு நின்றிடல் முத்தியென்றோர்க.

## புத்த சமயம்.

புத்த சமயத்தின் பிரிவுகள் நான்கெனச் சிவஞான சித்தியார் செப்பும். அவை, சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்தியமிகன், வைபாடிகன், என்போர் கொள்கைகளே. வடநாட்டிலே 'பெருவழி' (மகாயானம்) 'சிறுவழி' (ஈனயானம்) என்று இருபிரிவுகள் கேட்கப்படுகின்றன. ஈனயானமே தென்னாட்டிற் பரவியது போலும், அதன் கொள்கைகள் சௌத்திராந்திர மதத்துட் காணப்படுவனபோலும். 'பெருவழி' என்பதிலே சாத்தேயமதக் கொள்கைகளும் வழக்கங்களும் கலந்துள்ளன.

ஆதிபுத்தராகிய சமயத்தலைவர், தமது மாணாக்கர்கட்குச் சில அறவுரை பகர்ந்தனரே யொழிய ஒரு நூலும் எழுதியதாகத் தெரியவில்லை. அவர்க்குப்பின் வந்தோர் சங்கங்கள் கூட்டித் தொகுத்தமைத்துக்கொண்ட நூலே திரிபிடகமென்பதாயிற்று. பிடகமென்னுஞ்சொல் பெட்டியென்னும் பொருளுடையது. மூன்று தொகுதிகளாகத் தமது சமய நூலை அமைத்துக் கொண்டமையால் அப்பெயர் எழுந்தது போலும்.

## சௌத்திராந்திக மதம்.

சௌத்திராந்திக மதம் தமிழ் நாட்டிலே பெருவழக் கிற்றாய்த் திகழ்ந்தமையால், அதனை ஆசிரியர் சிறப்பாக எடுத்தோதி மறுத்தனரென்க.

எல்லாவற்றையு மறிந்து உலகிலே கொலை, களவு, கள், காமம், பொய்யென்பவற்றை வெறுத்துக் குற்றமற்ற கருணை யாலே எவ்வுயிர்த்துன்பமுந் தன்னுயிர்க்கிடர்போலக் கருதி விண்ணவரும் வழுத்தும்படியாகப் பிடகநூல் உண்மைகளைப் புகன்ற புத்த முனிவரே மன்னுயிர்க்குத் தலைவராவர்.

பிடகநூலிற் கூறப்பட்ட அளவைகள் காட்சியுங் கருதலுமாம். இவற்றால் விளங்குவன அறிவும் அறியப்படும் பொருளுமாம். அவை கணந்தோறும் தோன்றியழியும். அவை உருவு, அருவு, வீடு, வழக்கு என நால்வகைப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் இருதிறப்படுதலின், அறியுற் பாலன எட்டுவகை யென்றுணர்க. பூதங்களாலாய வடி வமும் அதற்குப் பற்றுக்கோடாய வடிவமுமென உரு, இரு வகைப்படும். பற்றப்படுவதை வடநூலார் உபாதாயமென் பர். அருவமென்பது சித்த அருவு, வினையருவு என இரு வகைப்படும். வீடு, கந்தம், குற்றம் என இருதிறப்படும். வழக்கு, உள்ளது, இல்லது என இரண்டாகும்.

மண், நீர், தீ, காற்று என்னும் நான்கும் பூதமாம். வலிமை, சுவை, நிறம், நாற்றம், என்பன உபாதாயமாம். இவையெட்டுங் கூடி யுண்டாகின்ற பொருள் உருவமாம். புறத்திலுள்ள உருவப்பொருள்கள் பொறிவாயிலாக அறி

விலே தமது வடிவை வைத்திட்டழிய, அவ்வடிவைக் காண்பது சித்தம். ஒன்று நன்று அல்லது தீதென்றறிதற்கேதுவாயது வினை. குற்ற வீடென்பது குற்றங்கட்கேதுவாய காமம் வெகுளி மயக்கத்தை விடுதல். கந்த வீடென்பது உள்ளே காணப்படும் உருவக்கந்தம், குறிக்கந்தம், அறிவுக்கந்தம், வேதனைக் கந்தம், வாசனைக்கந்தமென்ற ஐந்து கந்தங்களும் அற்றொழியப் பெறுதல். கந்தம் என்ற சொல் கூட்டமென்னும் பொருளுடையது, உருவக் கந்தம், அகத்தே காணப்படும் பொருள்களின் உருவக்கூட்டம். அதனையறியும் அறிவு ஞானக்கந்தம்; அவ்வறிவாற்றோன்றும் இன்பதுன்பங்கள் வேதனைக்கந்தம்; பொருள்களின் பெயர்த்தொகுதி குறிக்கந்தமெனப்படும். செய்கைகளின் தொகுதி வாசனைக்கந்தமெனப்படும்.

வழக்கிரண்டும் தனித்தனியே தொகை, தொடர்ச்சி மிகுத்துரை யென மூவகைப்படும். மிகுத்துரையென்பது தோற்றமறைவு. ஒருவன் என்று பேசப்பட்டவன் உருவக்கந்த முதலிய ஐந்து கந்தமுங்கூடி வருபவன் என்று சொல்லுதல் தொகையுண்மை வழக்கு. உருவமுதலிய ஐந்தையும் அவற்றினைச் சாராத ஒருவன் உண்டாக்குவானென்றல் தொகையின்மை வழக்கு. காரண காரியத்தொடர்ச்சியாய்ப் பொருள்கள் எப்போதும் அழிந்து தோன்றுவனவென்று கூறுதல் தொடர்ச்சியுண்மை வழக்கு. ஒருவனே முக்காலத்திலும் உள்ளானென்று கூறுதல்தொடர்ச்சியின்மை வழக்கு. தோன்றிய பொருள்களெல்லாம் அழியுமென்று கூறுதல் மிகுத்துரையுண்மை வழக்கு. தோன்றி நின்ற பொருள்கள் காரிய வடிவங்கெட்டுக் காரணமாய் நிற்பனவென்று கூறுதல் மிகுத்துரையின்மை வழக்கு.

இன்னும் வழக்கென்பது உள் வழக்கு, இல்வழக்கு, உள்ளது சார்ந்த உள் வழக்கு, உள்ளது சார்ந்த இல்வழக்கு, இன்மை சார்ந்த உள்வழக்கு, இன்மை சார்ந்த இல்வழக்கு என அறுவகைப்படும். உள்ளதை உண்டென்றுரைப்பது உள்வழக்கு. இல்லதை யில்லையென்றல் இல்வழக்கு. யானைக்கு மருப்புண்டென்பது உள்வழக்கு. முயலுக்குக் கொம்பில்லையென்பது இல்வழக்கு. அறிவைச்சார்ந்து அறிவுண்டாமென்பது, உள்ளது சார்ந்த உள்வழக்கு. அறிவு கெட்டாற் பின் அறிவுண்டாகாது என்பது உள்ளது சார்ந்த இல்வழக்கு. அறிவு முன்பு இல்லாததாய்ப் பின் உண்டாமென்பது இல்லது சார்ந்த உள்வழக்கு. உள்ளங்கையில் உண்டாய மயிராற் கயிறு செய்யப்பட்டதென்பது இல்லது சார்ந்த இல்வழக்கு.

இங்கே கூறிய உரு, அரு, வீடு, வழக்கு என்பதற்கு வேறாக வான் என்ற ஒரு பூதம் உண்டு, உயிர், காலம், திக்கு, கடவுள் என்பவை உள்ளன, என்றல் பித்துரை.

மண் முதலிய நான்கு பூதங்களுந் தொழிற்படக் காண்கின்றோம். வானென்பது தொழிற்படுமாறில்லை. அது பூத நான்கினையும் தாங்குமென்னில், அது அருவமாதலாற் றாங்காது. அது ஒலி தோன்றுதற்கிடமென்னில், ஒலியென்பது உருவெடுத்த பொருள்களின் சேர்க்கையால் தோன்றுவதன்றி அவற்றின் வேறாகத் தோன்றுமாறில்லை. அது எங்கும் நிறைந்ததென்றால், அது எங்குமில்லையென்றுஞ் சொல்லலாம், அது இருப்பதைக் காட்டுவதுயாதுமின்மையின்.

அறிவுடைய பொருள் உயிரென்னில், ஐம்பொறி, ஐம்புலன், நூல் முதலியவற்றைக் கொண்டு அறிவானேன்?

ஐம்பொறி வாயிலாக ஐம்புலன்களை யுணர்ந்தும், நூல்களைப் பொருந்தி நின்றும், உயிர் அறியுமென்னில், இரவிலே பச்சையுஞ் சிகப்புங் கலந்து நின்றபோது, அவற்றின் வேறுபாட்டைத்துணிவாக அறியமுடியாமல் ஐயுற்று வருந்துவானேன்? பொறிகளில்லையாயின், உயிர்கள் ஒன்றையு மறிந்திடா. பொறிகட்கறிவின்மையால், அவற்றைப்பற்றி நின்று உயிர் அறியுமென்னில், ஐம்பொறியும் ஒரு தன்மையான அறிவுடன் பயிலவேண்டும். ஒவ்வொரு பொறிக்கும் புலனுருங்குணம் வேறு ஆதலின், அவற்றைச் சார்ந்து வெவ்வேறு புலன்களை உயிர் அறியுமென்னில், அது தானே புத்தனுங் கூறுவது. ஐம்புலனைச் சார்ந்து ஐவகை அறிவுண்டாமென்பது புத்தர் கொள்கை. அங்ஙனமாயின், அறிவுண்டென்பது பெறப்படுமே யொழிய, உயிர் என்பதொன்றுண்டெனக் கொள்ள இடமில்லை. அறிவும், அறியப்படு பொருளுமாகிய இரண்டின் வேறாக, அறியும் பொருளுண்டென்னில், அது தன்னியல்பில், அறிவுள்ளதா? அறிவில்லதா? அறிவில்லதாயின், மண்போற் சடமாம். அப்போது, பூதங்களின் வேறாக உயிர் உண்டென்ன இடமில்லை. அறிவுள்ளதாயின், அறிவு தானே, அஃதாம். அறிவிற்கும் உயிர்க்கும் வேறுபாடியாது? பருப்பினாலமைந்த துணையுணவு என்றாலும், பருப்புக்கறி யென்றாலும் பொருளொன்றுதானே.

அறிவின் வேறாயிருப்பதாகக் கூறப்படும் உயிரென்பது அருவப்பொருளா? உருவப்பொருளா? அது அருவமென்றால், உருவமாகிய உடம்போடு அது எவ்வாறு பொருந்தி நிற்கும்? உருவமாயின், ஒருருவம் மற்றோருருவிலடங்காது. உயிரினை அணுவென்று கூறின், அது எத்துணையோ துவாரங்களுள்ள உடம்பில் நில்லாது. உயிர் நித்தப் பொருள் என்றால் அறி

வும் நித்தப்பொருளாக வேண்டும். அங்ஙனமாயின் அது தோற்றக்கேடில்லாததாக வேண்டும். அறிவு கணந்தோறு மாறுதலின், அது நித்தமன்று, ஆதலால் உயிரும் நித்தப் பொருளன்று. ஓருயிர் எங்கும் நிறைந்ததென்னில், உடல் தோறும் பல்வகையான வேற்றுமை காணப்படுதலின், ஒரு யிர் எல்லா வுடலிலும் நிற்பதென்றல் பொருந்தாது. ஒவ் வொரு உயிரும் தத்தமுடன் முழுவதும் நிறைந்து நிற்ப தென்னில், உடல் கெடும்போது அதுவுங் கெட்டொழியும். உடம்பில் ஓரிடத்தில் அது நிற்பதென்னில் உடம்பிலே அடி முதல் முடிவரையுள்ளதை அது அறியமுடியாது. ஆத லால் அறிவென்பதே யுண்டு. அறியும் பொருளாய உயி ரென்பதில்லை.

காலமென்று கூறப்படுவதியாது? பொருள்கள் தோன்றி நின்றழிவதை வரையறைப்படுத்துவது காலம் என்றால், அது தோன்றும் பொருளொடும் நிற்கும் பொருளொடும் அழியும் பொருளொடுங் கலந்து நிற்பதாகும். பொருள்கெட்டாற் கால முங் கெட்டொழியும். பொருளினியல்பு மூவகைத்தென்று கூறாது காலம் மூவகைத்தென்றல் தவறு. பொருளின் வேறாகக் காலங் காணப்படுமாறில்லை.

அவ்வாறே திசையுமாம். நீ எனக்குக் கிழக்கே இருந்தா யானால், என்னை மேற்கிலிருந்ததாக நீ கூறுவாய். எனக்கு மேற்கே யிருப்பவன் யானிருக்குமிடத்தைக்கிழக்கென்பான். நீ கூறிய கிழக்கையோ அவன் கூறிய மேற்கையோ இன்ன திசையென உறுதியாய்க்கூற முடியுமா? முடியாதாகலின், திசையென்பது ஒன்று தனியாக அறியப்படுமாறில்லை.

உலகத்தைப் படைத்தவன் ஒருவன் உண்டெனில், இவ் வுலகம், முன்புள்ளதோ? இல்லதோ? கூறவேண்டும். முன்

புள்ளதாயின் அதனைக் கடவுள் படைக்க வேண்டியதில்லை. இல்லையாயின் அதனைப் படைக்க முடியாது. உலகம் காரண நிலையில் நின்றதைக் காரியப்படுத்துவதே படைப்பாமென்னில், காரண நிலை யென்பது புலனாகாத நிலை. அது இலதாய நிலை. ஒருபொருட்குக் காரணமென்ற தோன்றா நிலையும், காரியமென்ற தோன்றும் நிலையும் உண்டென்று கூறுதல், அது இலதாயும் உளதாயு மிருப்பதென்று பகர்வதாகும். உள்ளது மிலதுமாய ஒருபொருள் உலகத்திலுண்டா?

மண்ணில் நின்று குடமுதலியவைகளைக் குயவன் உண்டாக்குவதுபோலக் கடவுள் உலகத்தை அதன் மூல காரணத்தினின்று படைத்தான் என்னில், அவன் எங்கே நின்று இவ் வுலகைப் படைத்தான்? உலகத்தினின்று அவன் படைத்தான் என்னில், அவன் படைப்பதின் முன் உலகம் உண்டென்பது போதரும். அவன் உலகில் நில்லாது எங்கும் நிறைந்து நின்று படைத்தான் என்னில், 'எங்கும்' என்ற சொல் இடத்தைக்குறிக்கும். அந்த இடம், முன்னே ஏற்பட்டுப் பின்னே கடவுள் தோன்றினரென்பது போதரும். அந்த இடந்தானே யுண்மைபோல உலகமுந்தானே யுண்மையறிக.

கடவுள் உருவுடையானென்னில், அவ்வுருவை முன்பு படைத்ததார்? அவன் விருப்பப்படி உருவங்கொண்டான் என்றால், உலகத்திலுள்ளோரும் அவர்கள் விருப்பப்படி உருவங்கொண்டாரென்று ஏன் கூறுதல் கூடாது? உயிர்களின் உருவுக்கு வினை காரணமென்னில், எல்லா உருவுகட்கும் வினையே காரணமென்றாது, கடவுளுருவுக்குக் காரணம்வேறு கூறுதல் பொருந்தாது.

கடவுள் அருவமாயிருப்பவன் என்னில், வான்போல அவனுக்குத் தொழிற்பாடு இல்லையென்பது முடியும். ஆகவே,

உயிர்களைப் பவக்கடல் நின்று அவன் எடுத்திடமாட்டான். அவன் நிழல்போலப் பயன்படுவன் என்னில், நிழல் தன்னடைந்தார்க் கின்பங் கொடுப்பதுபோல அவனைச் சென்றடைந்தார்க்கின்பமீவன், வியாபகமுடையனல்லன் என்பது முடியும். அவன் பேரறிவுடையனாதலின், எல்லாம் அறிவன் என்னின், அவன் உயிர்க்குற்றதையறிய அவன் உருவமுடையனாதல்வேண்டும். உருவமில்லையாயின் அறிதலுமில்லை. அருள் நூல்களாற் கடவுள் உண்டென்பதை அறிந்தோம் என்னில், அந்நூல்கள் அநாதியா? ஒருவனாலாக்கப் பட்டனவா? சொல்லுவாரின்றி நூல் உண்டா? சொன்னவன் கடவுள் என்னில், கடவுளையறிந்து அவன் சொன்னது நூலென்றறியப்பட்டதா? நூலினைக்கொண்டு கடவுள் உண்டென்றறியப்பட்டதா? பின்னது உண்மையின் கடவுள் நூலினாலுண்மை அறிவித்தானென்பது எவ்வாறு பொருந்தும்? பொருந்தாமையின் கடவுளுண்மைக்கு நூல் ஆதாரமாகாது.

உடம்பிற்கு நகம், கொம்பு, மயிர் முதலியன உண்டாதல்போலப் பூமியின்கண் புல், செடி, கொடி, மரமுதலியன உண்டாகின்றன, உண்டாய்க்கெடுகின்றன. இவை பூதவடிவங்களேயன்றி உயிருள்ளனவல்ல. மற்றப் பிறப்புவகைகட்கு இவை பயன்படுகின்றன.

ஓருயிரைக்கொல்லுதல் பாவம். ஒருவன் கொன்றதனை மற்றொருவன் தின்றால், தின்றவனுக்குப் பாவம் இல்லை. செத்தவையெல்லாம் மண்ணோடொத்த இயல்புடையன. நறுமணநீர்ப்பந்தர் வைத்தவனுக்கோ அந்நீரைப் பருகினவனுக்கோ, புண்ணியம்? அது வைத்தவனுக்கேயாம். அது

போல, உயிரைக்கொன்றவனுக்கே பாவம். கொன்றதைத் தின்பவனுக்குப் பாவமில்லை.

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் என்ற ஐந்து கந்தமும் காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கெட்டுத் தோன்றுவன. அவை பிறப்பிற்குக் காரணமாய கட்டுக்களாம். அவற்றாற்றுன்பமுண்டாம். அவை ஒருங்கே கெட்டொழிந்துபோதல் வீட்டின்பமாம்.

காமம், வெகுளி முதலிய தீக்குணங்களை அகற்றி நல்லறங்களை யினிது முற்றிலும் ஆற்றி, ஐம்பொறியடக்க முடையனாய் இன்பதுன்பவுணர்ச்சியை யொழித்துக் குற்றமற்ற நல்வாழ்க்கைக்குரிய எண்பண்புகளையும் பயின்று, அவற்றிற்கு மாறானவை யெல்லாம் ஒழித்திடுகின்ற ஞான நிலையே உறுதியான சமாதி யெனப்படும். எண்பண்பாவன:- நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடைப்பிடி, நல்லுளத்தோர் தலைப்பாடு என்பன.

---

## சௌத்திராந்திகன் மதமறுப்பு.

---

புத்தனே! உருவெடுத்து ஓரிடத்து வாழ்ந்நின் கடவுள் அளவில்லாததாகிய உலகமுழுதையும் எவ்வாறு அறிதல் கூடும்? ஒவ்வொன்றாக எல்லாவற்றையு முணர்ந்தான் என்னையாயின், அவ்வாறறியுமிடத்து ஒவ்வொன்றின் தோற்றத்தையும் அழிவையும் பிறவற்றோடுள்ள தொடர்பையுமறிய வேண்டும். அப்படி யறிதல் முழுதுமாய உலகத்தினை அறிந்ததாகாது. அது சுட்டறிவாலறியுமுறையாமன்றிச் சுட்டிறந்த

அறிவாலறியுமறிவாகாது. உன்குருவினுடைய அறிவு அளவிறந்ததின் தன்மையாயின், கணந்தோறுந் தோன்றியழியுமறிவு அத்தகையதாகாது. ஏனெனில் அழியுமறிவு என்றும் நிலைபெறாது ஒருகாலெல்லையில் தோன்றுதலும் அழிதலுமுடையது.

நின் தலைவன் உலகிலுள்ள சில பொருள்களை யறிந்து அவற்றோடொட்டிப் பல பொருள்களையும் அறிந்தனனென்னின் முரணுடைய பல்வேறு பொருள்கள் உலகிற் காரணப்படுவதாலும் அனைய பொருள்களும் எண்ணிறந்தனவாதலாலும் சிலவற்றை வைத்துப் பலவற்றை யறிதல் யாங்ஙனம்? ஒரு பொருளை யறியுமிடத்தே அதனை யுற்றுநோக்கிச் சிந்தித்துத் தெளிதல் வேண்டும். ஆதலால் அறிவே பல பகுதிப்படும். அப் பல பகுதிகளையுஞ் சேர்த்து ஒன்றை அறிவதற்கு நீ சொல்லுங் கணபங்கவாதம் இடர்ப்பாடு விளைக்கும். ஏனென்றால் ஒரு பகுதி தோன்றுமுன் அதற்கு முந்திய பகுதி அழிந்துபோம். ஒரு பொருளை அறிந்த அறிவை மற்றப் பொருளை அறிந்த அறிவோடு சேர்த்துணர்தற்கு இடமில்லை.

வீட்டியல்பினை யறிந்து உன் கடவுள் நூலினைக் கூறினனென்றால், அறிவு கெட்ட பின்னன்றோ முத்தி கைகூடும்: அது கெட்டு முத்தியுற்றவன், பின்னும் வந்து தோன்றி அறநூல் இயற்றினனென்பது தேனும் நெய்யுந் தவறுகக் கூட்டியுண்டிறந்தவன், மீண்டுவந்து, அக்கலவை தீதென்றுரைத்தானென்பதோடொக்கும். அற முதலியவற்றைக் கூறியபின் முத்தியுற்றனனென்னில், முத்தியினியல்பறியாது நூல் கூறினேனுவன். அத்தகையவன் முத்தி நூல் கூறுதல் ஆற்றுவெள்ளத்தி னளவறியாதா னொருவன் இக்கரையி

ளுள்ளாரை அக்கரைக்குச் செலுத்துவேனென்று ஆரைப் படுதல் போலாம்.

பிறவியிலகப்பட்ட உயிர்களைக் காக்குமொருவன், தான் பிறவியெடுத்தானென்பது, பல கலைமான்கள் வலையிற் சிக்குண்டதைக் கண்ட ஒரு கலைமான், வலையிலகப்பட்டவற்றை விடுவிக்கவேண்டித் தானும் வலையிலோடிப் புக்கதென்றாற் போலும். அறத்தை ஆக்குதற்கே புத்தன் பிறந்தானென்னில், எல்லா உயிர்களும் அறத்தை ஆக்கவே பிறந்தார்களென்னலாம். அவைகள் உடலெடுப்பதற்கு வினை காரணமென்னில், அது நின் தலைவனுக்கும் உண்டென்பதாம். அவன் தன் விருப்பப்படி பிறந்தானென்னில், பிற உயிர்களும் அவ்வாறே பிறந்தன வென்னலாம். நின் கடவுள் தாயின் வயிற்றிற் றங்கவில்லையெனில், பிறக்கும்போதே தாயைக் கொன்று வெளிவந்தவன் கூறும் அறம் நன்று நன்று.

(புத்தர், தாயின் விலாவின் வழியாகப் பிறக்கத் தாய் குழந்தை பெற்று எழு நாளாயினவுடன் உயிர் நீத்தன ளென்ப). புத்தன் பல பிறவிகள் எடுத்துழன்றான் என்பையாயின், சிங்கம், புலி முதலிய கொடிய விலங்குகளாகப் பிறந்தானோ? பிறந்தானேல், பிறஉயிர்களைக் கொன்றுதானே உயிர் பிழைத்திருக்கவேண்டும். அங்ஙனம் பிற உயிர்கட்கு இடுக்கண் விளைத்தமை அறமாமா? அங்ஙனம் உயிர்க்கொலை யியற்றவில்லையாயின், அப்பிறவிகளிலே அவன் எதை அருந்தினான்? எல்லாருடைய துயரத்திற்கும் அவன் கருணையுடையானென்னில், குற்றஞ் செய்து தண்டனைக்குரியார் தண்டனைப்படுங் காலத்திலே அவர்கட்கு இரங்கி அத்தண்டனையை விலக்குவனோ? விலக்கின், அது அறமாமா?

ஒரு பொருளையாய்ந்தறிந்து அதற்குள்ள சொல்லையுந் தெரிந்து, அப்பொருளையுரைப்பதன் முன்னே, முற் கணைத் தறிவு கெட்டுவிடுமாயின், நூல் எவ்வாறியற்றமுடியும்? முன்னறிவின் தொடர்ச்சி பின்னறிவென்னின், முன் சொன்ன சொல்லே பின்னுமுரைக்கப்படவேண்டும். முன்னறிவு கெட்டுப் பின் தோன்றுமறிவு சிறந்த அறிவா மென்னில், அதுவும் ஒரு கணத்திற் கெட்டொழிதலால், முன்னினும் அது சிறந்ததென்பதற்கேதுவென்னை? பித்தர் சொன்னதை யறியாது பேதை சொன்னதொன்றை நூல் தெரிவிக்குமென்று கூறியவாறாம். முதல், நடு, இறுதி மூன்று முரண்படாது உன் நூலமைவது எவ்வாறு? முதலில் உண்டான அறிவு நடுவிலொன்று கூறுமுன் அழிந்திடும். இறுதிப் பகுதியை யிடம்புமுன், நடுவிலுண்டாய அறிவு அழியும். ஆகவே, மாறுபாடில்லாத நூல், உன் கொள்கைப் படி எவ்வாறு அமைதல் கூடும்?

உன்கடவுள் பலவறங்களைச்செய்து முழுதுணர்ந்து பின் பிடகநூல் செய்தான் என்றால், பிடகநூலியற்று முன் செய் யப்பட்ட அறங்களை உன்கடவுள் யார்பாலறிந்து செய்தான்? அவ்வறங்களை முன் ஒருவன் கூறினனென்றால், அவற்றைக் கூறினேனுக்கு அவற்றைச் செப்பினேன் யாவன் என்று கேள்வியானது வரம்பிகந்தோடுமென்றறிக. உன் பள்ளியிற் றொழப்படும் கடவுள் யார்? புத்தன் என்னில், அவனுடைய ஆசிரியன் யார்? என்ற மேற்கூறிய கேள்வி இதற்கு மொக்கு மாதலின், உண்மையையாய்ந்தால் அறங்களையறிவித்தோன் பிறவாமுதல்வனென்பது முடியும். உன்சமயநூல், முத னூலா? வழிநூலா? சார்புநூலா? அது முதனூலெனின், மேல் அக்கொள்கை மறுக்கப்பட்டது. பிற இருவகை நூலுள்

எவ்வகைத்து அது என்னின் நீ மற்றொரு நூலின் வழித்தென அதனைக்கூறமாட்டாய். ஆகவே மூவகை நூலுள் அது எவ்வகையினுமடங்காது போலும்.

புத்தனென்றவன், முத்தியடைந்தபோதே கெட்டொழிந்தானென்பது உனது கொள்கையாயின், இப்பொழுது புத்தனுக்குப்பிரியமென்று நீ கருதி வழிபடுவதுயாரை? இறந்தவர்க்கு நாட்கடன்முதலியன செய்தல், இருந்தவர்க்குப் புண்ணியமன்றே யெனின், உயிர்நித்தப்பொருளென்றும், இறந்த உயிரைக்கருதிச்செய்யுங் கிரியைக்குப்பயன் கொடுக்கு முதல்வன் ஒருவன் உளனென்றுங்கூறுங் கொள்கையர்க்கு அது பொருந்துவதன்றி உனக்கு அக்கொள்கை பொருந்தாது. அணைந்த விளக்கிற்கு நெய்யுந்திரியு மிடுவது போலும் நீ செய்யும் வழிபாடென்றறிக.

நீ, அளவைகளுள்; காட்சியையும் அனுமானத்தையுமே கொண்டனை. நாலிற் சொன்ன பொருளெல்லாம் அனுமானத்தாலறியற்பாலவென்பதால் உரையினைக்கொண்டாயில்லை. பரலோகத்தையும், பாதாள லோகத்தையும் பற்றிய விவரங்கள் அனுமானத்தாலறியக் கூடியனவா? கூடாதனவாயின், அவற்றைப்பற்றித் திரிபிடகங் கூறுமுறைகள் உனக்கு எவ்வாறு பிரமாணமாம்? உரையளவை வேண்டாத உனக்கு உன்சமய நூலே பிரமாணமன்றென்பது முடியும்.

எப்பொருளும் அநித்தமென்றனை. நீ சொன்னது உள்ள பொருளோ? இல்லாத பொருளோ? உள்ளது மில்லது மாய பொருளோ? கூறுக. உள்ளபொருள் சூனியமாகாது. இல்லாத பொருள் உண்டாகாது, உளது மிலதுமான பொருள் இல்லாத தாகாது. ஆதலால், நீ கூறுங் கருத்தினை விளக்குக. அநித்த மில்லாத பொருளைக் காட்டுக வென்று கேட்பை

யாயின், தோன்றுகின்ற பொருள் நின்று மறைதலால், அது அநித்தமா மென்றறிக, தோன்றும்பொருள் மறைதல் பற்றி அநித்த மெனப்பட்டாலும், அது அழிந்து சூனியமாகாமை யின், நீ கூறும் அநித்தப்பொருள் யாதுமில்லை.

வயலில் விதைத்த வித்துக்கெட்டு முளையுண்டாதல் போல எப்பொருளுங்கெட்டுப் பின் அவ்வழியே தோன்று மென்னில் அவ்வாறு ஒரு பொருட்கு ஆக்கக்கேடு கூறுதல் ஆருகமதத்தார் கொள்கையாமன்றிப் புத்தர் கொள்கை யாகாது.

முளையானது இலையுமரமுமாய் வளர்ந்தபின் வளர்ந்த வாறே நில்லாது வளர்ச்சி குன்றிக் கெட்டொழிவானே னென்னில், வளர்ந்து பின் தேய்ந்து கெடுவது காரியப்பட்ட பகுதியே; காரண நிலையில், அது சூனியமாவதில்லை யென் றறிக.

உடலானது பூதக்கூட்டுறவாலாய உருவமென்னில், பூதங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட குணமுடைமையால் அவைதாமே தம்மிற்கூடி உருக்களாகமாட்டா. ஆண் பெண் சந்துக்களின் கலப்பால், உடல் உண்டாவதானால், மரத்தி லுள்ள உளுவும் கல்லிடமாகத் தோன்றுந் தவளையும், மக்க ளுடம்புபோல உண்டாவனவா? வினைதான் உடலாக வந்த தென்றால், இருவினைகள் தாமேகூடி உருவாதல் கூடுமா? அன்னமே உடல் ஆவதென்றால், வயதுகாலத்தில் அன் னத்தை உண்டாலும், உடம்பு வளராமல் தேய்வதற்கேது வென்னை? அறிவுதானே உடம்பாய் உருப்படுகிறதென்றால், அருவாயுள்ள அறிவு சடமாய உருவாதல் யாங்ஙனம்? உடம்பு என்பது புதிதாய் உளதாகுமென்னில், இல்லாத தொன்று

உளதாகாது. வித்தில் நின்று முன் இல்லாத மரம் வருவது போல, இல்லாததினின்று உள்ளது உண்டாமென்னில், மரம் வித்திலே நுட்பமாய் அடங்கிநின்று வெளிப்பட்டுத் தோன்றுவதன்றி வித்திலே இல்லாதது புதிதாக உண்டாகவில்லை. வித்தினில் மரம் காணப்படவில்லையென்னில், நெல்லின் வித்தில் நின்று நெல்உண்டாவதன்றிக் கமுகு உண்டாவதில்லையே. ஆதலால் நெல்லின் காரணவடிவு அதன் வித்திற்கிடக்கின்றதென்பதே தேற்றம்.

மதியுங்கலையும்போலக் கந்தமைந்துங் கூடி உருவம் தோன்றுமென்ற கொள்கையும் சௌத்திராந்திக மதத்தின்தே. அதற்குமாறாகச் சூனியத்தில் நின்று உருவந் தோன்றுமென்று நீ கூறுவதெப்படிப் பொருந்தும்?

உருவங்களெல்லாம் பூதநான்கும் உபாதாய நான்குங் கூடிய கூட்டத்தின் பயனாகவருவன வென்னில், அவை யெட்டும் ஒன்றோடொன்று கூடமாட்டா.

காற்றின்கண், அனல், நீர், மண் என்ற பூதங்களும், நிறம், சுவை, மணம் என்ற உபாதாயங்களும் பொருந்துமாறில்லை. நெருப்பினோடு, காற்று, நீர், மண் என்பனவும், சுவை, மணம், என்பனவுங் கூடமாட்டா. நீரின்கண் நெருப்பு, காற்று, மண் என்பனவும், மணமுமில்லை. நிலத்தோடு, நீர், தீ, காற்று என்பன ஒருமே கலப்புறுவதில்லை. பூதவணுக்களைப்பற்றி நீ பேசுவதன்றி, தன்மாத்திரைகளியல்பினை நீ அறியாய். ஆதலால், அவற்றைப்பற்றிப் பேச இடமில்லை.

மருந்தெண்ணெயில் மருந்து கரைந்து நுட்பமாய்க் கலந்திருப்பது போல, மேற்கூறிய எட்டும், மறைந்து நுட்பமாய்க்கலந்திருக்குமென்னில், மருந்தினையும் எண்ணெயையுந்

சேருமுறையிற்சேர்க்கு மருத்துவன்போல, நீகூறிய எட்டினையுஞ் சேர்க்க ஒரு முதல்வன் வேண்டும். எட்டுமே கூடி எல்லாப் பொருளையுந்தருவன வென்னில், எல்லாப் பொருளும் ஒரு தன்மையனவாகவேண்டும். அவ்வாறின்றி, ஒன்றின் குணம், மற்றொன்றிற் காணப்படவில்லை.

பூதவுருவையும், உபாதாய உருவையுந் தனித்தனி காட்ட முடியுமா? உபாதாய மென்பது பூதத்தின் குணம். குணமானது குணியோடு பிரிப்பின்றியிருப்பது. அது குணியின் வேறாய்த் தனித்து இருப்பதை யாண்டுங் காணுமாறில்லை.

உள்ள அறிவு கெட்டுப் புதிய அறிவைத் தோற்றுவிக்குமென்கின்றாய். அழிந்து போன அறிவு இல்பொருளாயபின், புதிய ஒரு அறிவை அது எவ்வாறுண்டாக்கும்? ஒருகாலத்து அறிவு அழிந்து போகவே, அவ்வறிவினாலறிந்த பொருளும், அதுகொண்டு செய்த செய்கையும் புதியதாய்வரும் அறிவில் எவ்வாறு பொருந்தும்? அழியு மறிவு, பின்னறிவை யுண்டாக்கிய பின் அழியுமென்னில், முன்னறிவும் பின்னறிவும் ஒரு கணத்தில் நிலைபெறு மென்பது முடியும். இரண்டறிவு ஒரு கணத்தில் நிலை பெறமாட்டா; நிலைபெறுவது ஓரறிவே யென்பது தெளியப்படும்.

முன்னறிவு முற்றிலுங் கெடாமல், ஒருபகுதி கெட்டு நிற்ப, கெடாத பகுதியில் நின்று பின்னறிவு உண்டாமென்னில், கெடாத பகுதி பின்னறிவாய்ப் பரிணமித்து நிலைத்தலின் அறிவு நித்த அநித்தப் பொருளாமே யன்றி, அநித்தப் பொருளாகாது. வயலில் உரமாக இட்ட எருவும் வைக்கோலும் கெட்டுப்பயிரையுண்டாக்குவது போல, அழியு மறிவு புதிய அறிவை உதிப்பிக்கு மென்னில், எருவும் வைக்கோலும்

தமது காரிய வடிவை யிழப்பனவே யன்றித் தமது சத்தி கெடப்பெறுவாதலின், அவை நீ கூறுமாறு அழிவனவல்ல. ஆதலால் அவை அநித்தமாகா, உணர்வு கெடினும் அதன் றொடர்ச்சி கெடுதலில்லாதிருப்ப, அத்தொடர்ச்சியால், புதிய உணர்வு உதிக்கு மென்றால், அத்தொர்டர்ச்சியே நித்தமாகும்.

ஆற்றிலே முன்னே ஓடும் நீர் சென்றொழியப் பின்னே வரும்நீர் தொடர்தல்போல, முன்னுணர்வு கெட்ப் பின்னு ணர்வு தோன்றுமென்னில், முன் ஒழுகிய நீரிலிட்ட தெல்லாம் அதனோடு சென்றொழிவதன்றிப் பின்வரும் நீரினைப்பற்றாமை போல, முன்னறிவிற்றேடிய சீலம், பாவனை, குறி, சிறப் புணர்ச்சி முதலியவெல்லாம் பின்னறிவிற் பொருந்தா. முன் னீரும் பின்னீரும் ஒரொழுக்காகச் செல்லுதற்கேதுவாய தொடர்புபோல அறிவு நிகழும் என்னில், அத்தகைய அறிவு நித்தமாமன்றி அநித்தமாகாது.

நீ கூறும் தொடர்ச்சியென்பது காரணமாயிருப்பதோ? காரியமாயிருப்பதோ? காரணகாரியமாயிருப்பதோ? சொல்லுக. அது காரணமாயின், நித்தப்பொருளே; அதுகாரியமென்று லும் நித்தப்பொருளே; காரியப்பொருளெல்லாம், காரியப் படாதநிலையில், காரணமாய் நிற்பனவேயாகலான், காரண காரியமெனினும், நித்தம் என்பதற்கிழுக்கில்லை. முன்னறி வையும் பின்னறிவையுஞ்சேர்ப்பதே தொடர்ச்சியென்னில், தோற்றக் கேடுடைய பிறபொருளுக்கு யாங்கூறியது அதற்கு மொக்குமாகலின், அதுவும் நித்தமென்பதே முடியும். அத் தொடர்ச்சி நீ கூறும் அறிவாதல்வேண்டும் அல்லது அறியப் படும் ஐங்கந்தங்களுள் ஒன்றாதல்வேண்டும். அது இரண்டி லுஞ் சாராததொரு பொருளாயின், அது அறிவுகளை ஒழுங்

காகச் சேர்க்கமாட்டாது. அறிவுகள்சிதறி முன் பின்னாகப் பின் முன்னாகத்திரிந்தொழியு மென்றறிக.

ஒரு கணத்திலேயே அறிவுகெடுதலும் தோன்றுதலும் நிகழுமென்னில், படைப்பும் அழிப்பும் ஒருதொழிலாகவேண்டும். பொருள்களின் மாறுதல்களே காலமாமெனில், வருங்காலம், நிகழ்காலம், கழிகாலமென்ற வழக்கிற்கேதுவென்னை? பொருள்களின்வரவு, நிலை, கழிவு என்னு மூன்றுமே முக்காலமெனப்பட்டனவெனில், காலமென்பதை வைத்துத்தானே செயல் மூன்றாகப்பேசப்படும். காலமில்லையாயின், செயல் ஒன்றே எப்பொருளுக்குமுரியதாகும். முச்செயலும் ஒரு கணத்தே நிகழுமென்னில், ஒரு கணத்திலே காலமூன்றுண்மை காட்டுதும். தாமரை யிதழ் நூற்றினை ஒரு ஊசி ஊடுருவுங்காலமே கணமாம். தாமரையிதழிற் செலுத்தப்பட்ட ஊசி, இதழைப்பற்றுதல், உருவுதல், கழிதல் என்று முச்செயலும் வெவ்வேறாக உடைமையால், காலமூன்றும் ஒருகணத்துளமைதல் காண்க.

அறிவு அழியுமென்று நீ செப்புவதால், பின்னறிவுக்கு முன்னறிவு காரணமாகாது. அறிவு தொடர்ந்து நிகழுங்காலத்தே, தொடர்ச்சி அறுமாயின் அது அற்றபின் தோன்றுமறிவுக்கு தொடர்ந்துவந்த அறிவு காரணமாகாது. உணர்வுண்டாவதற்கு உடம்பே முதற்காரணமென்னில், உடம்பில் நின்று உணர்வு எப்போதும் உதிக்கவேண்டும். தூங்கும் போது உடம்பினுணர்வு எழக்கண்டிலம். தூங்கும்போது உடல் அறியுஞ்செயலைச் செய்யமாட்டாது. உடல் அறியுந் தொழிலைச் செய்வதினின்று அறிவுண்டாமெனின், உடல் அறியுந்தொழிலைச் செய்யுமாயின், உடலுள்ளபோதெல்லாம் அத்தொழில் நிகழவேண்டுமேயொழிய, அத்தொழில் அவ்

வாறு நிகழாமைக்கேதுவென்னை? அறிவுந்தொழிலே அறிவைத்தருமாயின், அறிவுக்குஞ் செயற்கும் வேறுபாடில்லை போலும். செயல்தானே அறிவாம். அறிவு செயலுக்குக் காரணமென்பதில்லையாம்.

வினை அறிவைத்தரும், அறிவு வினையைத்தரும் என்றால் அறிவுக்கு நினைவுண்டு, செயலுக்குநினைவென்பதில்லை. ஆதலால் ஒன்று மற்றொன்றிற்கு முதற்காரணமாகாது. மேலும், அறிவும் செயலுமே அழிவனவென்று நீ கூறுவதால், ஒன்று மற்றொன்றை யுண்டாக்கவல்லதன்று. நெருப்பானது விறகிற் பிறந்து அவ்விறகை எரித்துவிடுதல்போல வினையிற்பிறந்த அறிவு, அவ்வினையை யழித்துவிடுமென்னில், அறிவு பிறந்தவுடனே வினையை யழிக்கும். அவ்வினை கெட்டொழியவே, அது பின்னறிவை யுண்டாக்காது. நெருப்பு விறகை யழிப்பதேயன்றிப் புதிதாக விறகையுண்டாக்காமைபோல் அறிவும் வினையை யழிப்பதேயன்றிப் புதுவினையை யுண்டாக்கமாட்டாதென்பது முடியும். ஆதலால் வினை அறிவைத்தருமென்பதும், அறிவு வினையைத்தருமென்பதுமாய நினதுகொள்கை பொருந்தாமை காண்க.

பேயும் நரகரும் தேவரும் பிரமரும் தாய் தந்தையரின்றி உடம்பெடுத்து வருவரென்பாய். உடம்பென்பது காரியப் பொருளாயிருத்தலின், அதற்குக் காரணமிருக்கவேண்டும். அத்தகைய காரணம், ஆயுமறிவா? பூதமு முபாதாயமுமாக நீ கூறும் எண்பொருளா? வினையா? உடம்பை யுண்டாக்கிவைத்தவரார்? ஆராய்ந்துணர்க. ஆராயில் உலகிற்குக்காரணம், முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணமென மூன்றுளவென்பது புலனாம்.

உருவக்கந்த முதலிய ஐந்துகந்தங்களின் கூட்டமே உயிரெனப்படுமன்றித் தனியே உயிரென்பதில்லை யென்றனை. உருவக்கந்த முதலியவற்றை அறிவது யாதெனில்; விஞ்ஞானமென்றாய், விஞ்ஞானத்தை யறிந்தது யாரென்னில், விளக்கு பிறபொருளையுந் தன்னையுமுணர்த்துதல்போல விஞ்ஞானம் பிறவற்றையுந் தன்னையு முணர்த்து மென்றனை. விளக்கிற்கும் பிற பொருள்களுக்கும் வேறாக அவற்றை யறியுங் கண்ணிருத்தல் போல, விஞ்ஞானத்திற்கும் பிறவற்றிற்கும் வேறாக விஞ்ஞானத்தையுடையா னொருவனுளனென அறிக; அறிவும் அறிபவனும் வேறென முன்னே தெரிக்கப்பட்டது.

உடம்பு, பொறி, மனமுதலியவற்றை நானென்று கருதுவை. உடம்பு தூக்கத்திலொன்றையு மறியாது. பொறிகளோரொன்றறிந்ததை மற்றொன்றறியாது. மனம், கணந்தோறுங் கெடுதலால், கால மூன்றையு மறியமாட்டாது. ஆதலால் ஒவ்வொன்றையும் ஆராயு மறிவுடையதாய் உடல், பொறி, மனம், என்ற மூன்றையுமறிந்து, அவை தானல்லனென அறிந்து மனத்தால் ஒன்றை நினைந்து பொறியாற்கண்டு உடம்பாற் செயலாற்றும் உயிர்வேறுண்டென அறிக.

முன் ஒன்றையறிந்த உணர்வுதானே, பின் அதனை யானறிந்தேன் என்றுணருமாதலின், உணர்வுக்குவேறாக உயிரொன்றில்லையெனில்; முன்னே ஒன்றைச்சொன்னேன் என்றவிடத்து வாய் அவ்வாறுசொல்லியதோ? வாய்க்கு வேறாயுள்ள ஒருவன் சொல்லியதோ? அது வாயையுடைய ஒருவன் சொல்லியதெனத் துணிதல்போல, மனத்தால் அறிவனவெல்லாமறிந்து நான் அறிந்தேனென்றது எதுவோ அதுவே உயிராகும். வாயால் ஒன்றை மொழிந்ததும், காயத்தால் ஒன்

றைச்செய்ததும் அவ்வுயிரேயென அறிக. அவ்வுயிரே அறிவுக்கு ஆதாரமாயுள்ளது.

பொறிகளாலுளதாம் அறிவு, மனத்தாலுண்டாகுமறிவு என்ற இரண்டினும் ஒன்றுகெட்டு மற்றொன்றுதிக்கும் என்றால், நனவின்கண் பொறிகளாலறிந்த ஒன்றும் கனவிற் புலப்படாது. மனவறிவு மாத்திரம் நிகழுங்கனவிற் கண்ட தொன்றும் நனவில் விளங்காது. அது எவ்வாறெனில் பிறவிக் குருடன் புறத்தேயுள்ள வடிவங்களையும் நிறங்களையும் அறிந்திடாமை போலென்க. பொறியுணர்வு நிகழும் நனவும், மனவறிவு நிகழுங் கனவும், ஒழிந்து தூக்கம் ஏற்பட்டவிடத்து இரண்டின் தொடர்பு மற்றுப்போதலின், அவை மீண்டு தோன்றுதற்கு இயைபில்லையாம். ஆனால், நமது அனுபவத்திலே உணர்வு மீண்டு முதிக்கக்காண்டலின், நனவினையுங் கனவினையுமுணரு முணர்விற்கு ஆதாரமாய உயிர் உண்டென்றறிக.

ஒரு பொழுதிலே, ஒரு பொறியிடத்திலே ஒருணர்வு நிகழுமென்றனை. செவிப்பொறி யென்பது இரண்டுசெவியின் கண்ணுமுண்மையால், இரண்டுசெவியுஞ் சேர்ந்தே ஓரோசையைக் கேட்டல் இயலுமென்பது முடியும். ஒருசெவியாலேயே ஓசையைக்கேட்டல் இயல்வதொன்றாகலின் அக்கருத்துத் தவறுதல்காண்க.

ஒரு காலத்திலேயே ஒருவனை இருகண்களுள் ஒவ்வொரு கண்ணாலும் பார்த்தும், இருகாதினுள், ஒவ்வொருகாதாலும் பிறர்சொல்லைக்கேட்டும், மனம் செய்தியை யறிகின்றது. மனங்கூடாமல், ஐம்பொறிகள் தாமே ஒருங்குகூடி ஒன்றை அறிவதில்லை. ஐம்பொறிகளுள் ஒன்று அறியக்கூடியதை மற்றொன்று அறியாது. கண்பார்க்கும், காதுகேட்கும், பார்த்

தலையுங் கேட்டலையும் உடனிகழ்த்துவதற்கு மனம் அவற்றோடு கூடவேண்டும். மனந்தானும், ஐம்பொறிகளுள், ஒவ்வொன்றோடு கலந்து, அது அறியக்கூடியதை யறியும். மனத்திற்குப் பார்த்தல், கேட்டல், முதலிய பலவகையறிவும் இயலும். அம்மனந்தானும் ஒரு பொறியோடு கூடி ஒன்றை யறியும்போது, பிறிதொருபொறியோடு கூடிப் பிறிதொன்றனை யறியாது. அம்மனத்தைக்கொண்டு எல்லாவற்றையும் அறிவது உயிர் என்றறிக. மனமும் ஐம்பொறிகளும், கணந்தோறும் அழிந்து தோன்றுவனவாயின், அவை அகத்தே நிலவுமேயொழிய, அவை தங்குமுருவமும், வயதுக்கேற்ற மாறுதல்களும் ஏற்படக்காரணமில்லை.

தூங்குகிற ஒருவனை எழுப்பின், அதனையறிந்தெழுந்து வருதற்கேதுவாய உணர்வு எவ்விடத்துள்ளது? அது நெஞ்சில் உள்ளதென்னில், பொறியின்கண் நிகழுஞ்செயலையறிந்து எழுவதற்கு நெஞ்சத்தில் மனம் இருக்கவேண்டும். மனம் அழிந்துபோயின், அது எப்படி உண்டாகும்? திரியைப்பற்றி நின்ற ஒளி, திரிமாய்ந்தவுடன் மாய்வதன்றித் தகழியைப் பற்றி நிற்பதில்லை. துயிலின்கண் பொறிகளிற் பற்றிய அறிவு அடங்கி யழிந்திடின், பின் அது நிற்குநிலை யாதெனக்கூறுக.

விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம்; தொழிலியற்றுதல், முதலியன அறிவிற்கில்லை. அவற்றையுடையது உயிரென அறிக. ஒருகாலத்திலே ஒருபழத்தைத்தின்றவன் அதன்சுவையை மீட்டும் அத்தகைய பழத்தைக்கண்டபோது நினைத்தல் தெளிவு. வெறுப்பு முதலிய குணங்களும் அத்தன்மையனவே. இவற்றை முன்பின் உணரும் ஒருபொருள் உயிரெனத் துணிக.

எல்லாப்பொருள்களுக்கும் போக்குவரவு செய்வதற்கு வழியாய் இடங்கொடுத்து அவற்றை நீங்காது இருளுக்கும் ஒளிக்கும் இடமாய், அவையாகாதிருப்பது வான். அதன் குணம் ஓசை. அதுபிற பூதங்கள் நான்குந் தோன்றி யொடுங்குதற்கு ஆதாரமாயுள்ளது. காலமென்பது, பொழுது, நாள், திங்கள் முதலிய பலவடிவுடையதாய், மூவகைத்தாய் நன்மை தீமைசெய்வதற்குத் துணையாயுள்ளது. திக்கென்பது, கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு முதலிய பிரிவுகளுற்று மாற்றமில்லாதிருந்து செயற்குரிய பயனைப் பெறுதற்குத் துணைபுரியும்.

உலகமெல்லாம் காரியப்பொருளாயிருத்தலாலே, குட முதலிய கலன்களை வனைதற்குக் குயவன் வேண்டுமாறுபோல உலகினைக் காரியப்படுத்தும் ஒருவினைமுதல் வேண்டும். சிறந்த அறம், பொருள், இன்பம், வீடென்பவற்றைக் கூறி உயிர்கட்கு நல்லறமும் நற்செயலுமளிப்பது நூல். அந்நூலினைக் கூர்ந்த அறிவுடைய பெரியோர் பரம்பரையாக ஓதி வருதலால், குற்றமற்ற முறையில் அவற்றைச்செப்பிய பேரறிவுடையோன் ஒருவன் இருத்தல்வேண்டும். நூலிற்கட்டளை யிட்டவாறு நடப்பதைஅறிந்து பயனளிக்குஞ் சான்றுவான் ஒருவன்வேண்டும். உலக முதல்வனும் மெய்யறிவு நல்கியவனும், எவ்வுயிரின் செயலுக்குந்தக்கவாறு பயனளிப்பவனையும் உள்ளவனே சிவனென் அறிக.

மரங்கள் உயிருள்ளனவல்ல வென்றனை. அவை வாடுதலானும் வளர்தலானும் உயிருள்ளனவே. உணவுபெற்றால், உயிருள்ளன வளர்தலும், உணவுபெறாவிடில் வாடுதலுஞ் செய்யும். பட்டமரம் உயிரற்றதாகலின், அதற்கு நீர் விட்டாலுந் தளிர்த்து வளராது.

மரத்திற்குப்பொறிகள் இல்லையெனில், உயிரையுள்ளடக்கிய கருப்பை, முட்டை, முதலியவற்றிற்கு அவை வெளிப்படாமைபோல, மரத்திற்குமாமென அறிக. முதிர்ச்சிக்கண் அவை வெளிப்படும். மரங்கட்குப் பூத்தலும் காய்த்தலும் வளர்தலு முளவாகலின், அச்செயற்குரிய பொறிகள் உளவெனக்கொள்க.

ஒருமரத்தின் கொம்பைப்பிடுங்கிப் பிறிதோரிடத்தே நட்டபோது, அதுவும் பிறிதொரு மரமாய்க்கிளைத்தலின், ஓருயிர் பலவுயிராயிற்றேன்னில், வித்து, வேர், கொம்பு, கொடி, கிழங்கு என்பவற்றைக் கருப்பமாகக்கொண்டு உயிர்கள் பிறக்கும். கருப்பையிற் பிறப்பதுபோல, முட்டையிலும் வியர்வையிலும் உயிர்கள்பிறக்கக் காண்கின்றோமல்லவா? மர முதலியன நடவாவென்னில், மக்களுட் காலில்லாதவர்கள் நடக்கின்றார்களா? அதுபோலப்படைப்புப் பலவிதமென்றறிக.

செத்ததைத்தின்றாற் குற்றமில்லை யென்றனை. நீ புலால் புசித்தற்பொருட்டு ஒருவன் ஓருயிரைக்கொன்றால், உன்னாலே அவனுக்குப் பாவமுண்டாதலின், நீ பாவகாரணனாகிற பாவஞ் செய்திலையோ? பாவஞ்செய்வித்தல் தவமாமோ? நீ உன் கடவுட்குப் புலாலிடுவையாயின், அது உன் குற்றமாகாதோ? மேலும், ஊன் உடலையே அசுத்தமானதென்று வெறுக்கின்ற நீ பிறிதோருடலின் அசுத்தத்தை யுணராது எங்ஙனம் புலால் புசிக்கின்றாய்?

இப்போதுள்ள உடம்பானது குடையைப்போலுமெனின், பிறிதோருடம்பு அதன்சாயைபோலும். அவ்வாறே பிறிதோருடம்பைக் கண்ணாடியிற்றோன்றும் வடிவத்திற்கு மொப்பிடுதல்கூடும். அத்தகைய உடம்பை அறிவுபற்றுதலே

பிறப்புக் கொள்ளுதலாகுமென்னில், குடையும் கண்ணாடியிற் காட்டிய உருவமு மில்லையாயின், அவற்றின் நிழல் இல்லாத வாறுபோலக் கந்தங்களைந்தும் கெட்டொழிந்த விடத்தே, அவற்றின் நிழலுமில்லையாகவே, பிறிதோருடம்புமில்லையாம். கந்தங்களைந்துங் கெடுமிடத்தே அறிவுங் கெடுதலின், முத்தியையடையும் அறிவு வேறியாதுளது ?

கனவின்கண், உள்ளவுணர்வு, பொறி யுணர்வாலுற் போல, வினைக்கீடாக எழுமறிவு முத்தியடையுமென்னில், செயலில்லாத உறுப்புக்களுடைய உடம்பு, முட்டை, குருட்டுப்பிறவி யென்னுமிவற்றை உயிர் நீத்தவிடத்தே, எத்தகைய அறிவு கதியடைய வுளது ? மேலும், வினைபற்றியெழு முணர்வு, பிறப்பிற்கேதுவாய் உடல்பற்றி நிற்பதன்றி முத்திக்கேதுவாதலில்லை.

கந்தங்களைந்தும் தொடர்ந்து செல்வன. அவை தொடர்ச்சிகெட்டுத் தொழிலறுதல், கட்டுக்கேதுவாய துய ரென்றும், அவைமுற்றுமழிந்தொழிதல் முத்தியின்பமென் றுங்கூறிஞய். முற்றுமழிந்தவிடத்து அறிவுமழியவே, முத்தி யடைவது எது? கந்தங்கள் ஐந்தினுந்தோன்றுமறிவு முத்தி யெய்துமென்னில், அவ்வறிவு நிலைத்தபோது, கந்தங்களும் உள்ளன. அவை கெடாவாகவே, முத்தி என்றுமில்லையென படுதேமுடியும். ஆதலால் நின்கொள்கை தவறு.

கடவுள் ஒருவனே உயிரினைப் பிறவிக்கடலில் நின்றெடுத்து முத்தி சேர்ப்பனென அறிக.

## யோகாசாரன் மதம்.

அறிவே உள்ளபொருள். அதுவே காணும் பொருள் களாய்த் தோன்றுவது. அறிவு பொறிகளினுணர்ச்சியாற்

றிரண்டெழுவது. அது வடிவில்லாதது. (அருவமானது.) ஆதலால் வடிவொடு தோன்றும் புறவுலகம் கனவு போல்வது. அறிவே நிலையாக வுள்ளது.

## யோகாசாரன் மதமறுதலை

போதம், வாசனையென இரண்டு உள்ளன என்கின்றாய். வாசனை யென்பது, விருப்பத்தோடு ஒருபொருளிலே அறிவு பற்ற, அப்பற்றுக்காரணமாக எழுங்கருத்தாமாதலின், புறப் பொருளின்றி வாசனையில்லை. கனவென்பது, நனவிற்கண்ட பொருளிற்பற்றிய கருத்தால் நிகழ்வதாகலின், நனவைக் கனவென்றால் அந்நனவிற்கு வேறாக நனவு ஒன்று உண்டென் பது முடியும். முடியவே, அறிவிற்கு வேறாகப் புறவுலக முண்டென்பது தெளிவு.

அறிவே காணப்படும் பொருள் எனின், நானென்பது உடம்பென்னவேண்டும். உடம்பின் வேறாய் அறிவு இன்றெ னின், உடம்பே உள் பொருள். அறிவென்பதில்லை யென்ன லாம். உருவப் பொருளின் வேறாய் அறிவு அருவமாயுள்ள தென்பது நின்கொள்கை. அறிவுள் உருத்தோன்றுதற்குக் காரணம், அறிவு தான்பற்றிய பொருள் உருவமுடையதாயின் தானும் அவ்வுருவின் மயமாய் நிற்பதே. அது பளிங்கானது தன்னைச்சார்ந்த வுருவின் றன்மையை அடைவது போலாம். உண்மையை ஆராயுமிடத்து அறிவும் அறியப்படுபொருளும் வேறென வுணர்க.

## மாத்தியமிகன் மதம்

பொருளாகத்தோன்றுவது அதன் அங்கங்களே. பொருளைப் பிரித்துப்பிரித்துப் பார்த்தால், அதன்உறுப்புக்கள் தவிர, அவற்றையெல்லா முடையதொன்றைக் காணு மாறில்லை. ஆதலால் உறுப்புக்களொழிந்தவிடத்துப் பொரு

ளென்பது அவற்றின் வேறாகயாதுமில்லை. ஆகலாற் பொருள்கள் என்பன தோற்றங்களே யன்றி உள்ளன வல்ல. பொருள்களை யறிவது அறிவெனில், பொருள்களில்லாத போது அறிவென்பது மில்லையென்பதே முடியும். ஆதலால், உண்மையில் எல்லாஞ் சூனியமே.

## மாத்தியமிகன் மதமறுப்பு.

நாலினாலாயது வேறு, மண்ணினாலாயது வேறு. ஆடை, குடம், என்ற இண்டினுள், ஆடையிலே குடத்தினவயவ மில்லை. குடத்திலே ஆடையினவயவமில்லை. தோன்றுவன அவயவங்களெனின், அவயவங்கள்பல்வேறு தொகுதிகளாகக் காணப்படுமிடத்து, ஒரு தொகுதியினவய்வங்கள், பிறிதொரு தொகுதியிற் காணப்படாமைக் கேதுவாக அவ்வத்தொகுதி களைத் தொகுத்தொருமைப்படுத்திநிற்கும் அவயவிகள் உள் ளன வென்றறிக.

அவயவமும் அவயவியுங் கூடியதே பொருள். பொரு ளுண்மை கூறவே, பொருளையறியும் அறிவுண்மையும் பெறப் படும். புறப்பொருள்களும் அவற்றையறிதற்குக் கருவியாய பொறிகளும், அவற்றையாயும் மனமும் ஒருங்கிருப்பினும், உயிராகிய பொருள் அவற்றைக் கூடாவிடத்து, அறிவு நிகழ் வதில்லை. உயிர் உள்ளபோது அறிவு நிகழும். ஆதலால், அறி வும் அதனையுடைய பொருளாய உயிரும் உண்டென அறிக.

## வைபாடிகன் மதம்.

மஞ்சளுஞ்சுண்ணும்புங் கூடியகாலை, சிவப்புநிறம் உண் டாவது போல, புறப்பொருளும் அறிவுங் கூடியே உலகமாம். இதனையறிதலே ஞானம். இஞ்ஞானம் வீடுபயக்கும். இக் கொள்கையுடையோரே தேரர் எனப்பட்டார் போலும்.

மஞ்சளுஞ் சுண்ணும்பும் போல இவைகளொன்றாதற்குப் புறப்பொருளும் அறிவும் ஓரினத்தன வல்ல, பொருள் புறத்தேயுள்ளது. அறிவு அகத்தேயுள்ளது. அறிவு அருவம். அறியப்படுவது உருவமுடைத்து. ஆதலால் இவைதம்முட் கூடாவெனத் தெரியின், வைபாடிகர் கொள்கை நிலையாது. இதுகாறும், சௌத்திராந்திகன், யோகாசாரன், மாத்திய மிகன், வைபாடிகன் என்ற நால்வகைப் புத்தமதக் கொள்கைகளும் ஓதப்பெற்று மறுக்கப்பட்டன. இனி, அருகசமயத்தாருள் நிகண்ட வாதி, ஆசீவகனென்ற இரு கொள்கையினருளர். அவர்கள் மதங்கள் ஆராயப்படுகின்றன.

## நிகண்டவாதி மதம்

கண்டம் = உடை. நிகண்டம் = உடையின்மை. அசோக மரத்தைப்பேணி, ஆடையை யொழித்து முழுகாது மாசடைந்து இல்லற வாழ்க்கையை விட்டு, மறைமுறை பேணுது, வயிறார உண்டு, பாயுடுத்து மயிற்பீலியினைக் கையிற்பிடித்துக் கொல்லா விரதம் பூண்ட நிகண்டவாதி மதம் வருமாறு:—

கேடற்ற கடையிலாஞானம், கடையிலாக்காட்சி, கடையிலாவீரம், கடையிலாவின்பம், பெயரின்மை, குடிவழியின்மை, வயதின்மை, அழியாத் தன்மையாகிய எண்குணங்களையும், மதிக்குத் தண்மை இயற்கையாயிருத்தல்போலத் தனக்கு இயற்கையாகப் பெற்றவனும், அறிவு மறைப்பு முதலிய தீக்குணமெட்டு மிலனும் விண்ணவர் போற்றும் பெருமையுடையவனும அருகதேவனே இறைவன்.

அவன், பொறிகளாலே, பொருள்களையுணருங்கட்டுப்பாடொழிந்து, முக்காலத்திலும் நிகழ்வனவற்றை, ஒருகணத்திலே யறியும் பெருந்தவக் கடவுள். தன்னை வழிபட்டவர்க்

கும், தன்னொடு மாறு பட்டவர்க்கும் ஒரு தன்மையை யுடைய தலைவன்.

பசி, தாகம், பயம், செற்றம், ஆசை மயக்கம், கவலை, பழி, நோய், சாவு, வியர்வை, துன்பம், செருக்கு, புசிப்பு, பிறப்பு, உறக்கம், என்பவற்றை விட்டு, எண்குண வடிவனைப் பொன்னெயில் வட்டத்திருந்த அருகன், சித்தபரமேட்டி கேட்ட கேள்விக்கு ஒரு மொழியால் விடையளித்தான். அவ்வொரு மெய்ம்மொழியை அடிப்படையாகக் கொண்டு, சித்த பரமேட்டி, சரண முதலியவை பொருந்திய யோக முதனூலை, உலகினர் மயங்காத வகை இயற்றினன்.

அதன்படி, காலம், உயிர், அறம், மறம், அறப்பயன், மறப்பயன், வான், புற்கலம், கட்டு, வீடு, என்ற பத்தும் என்று முள்ளன; அவை படைக்கப் படாதன.

காலமானது, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப் பட்டு, ஒரு கணப்பொழுதிலே முக்காலச் செயலு முள்ள வாறு நிகழ்தற்கேதுவாயது. அக்கால வெல்லையுட்பட்டு வாழு முயிர்கள் எடுத்த உடம்பு முழுதிலும் நிறைந்து உடம் பிற்குரிய அவத்தைகளை யுடையதாய், அவ்வவத்தைக் கேற்ற அறிவு பெற்று விளங்குந்தன்மையன. அறத்தாலெடுத்த வுடம்பு, பூதவுடம்பிற்கு அழிவு செய்து, பிறப்பறுக்கத் துணை புரியும். மறத்தாலெடுத்த உடம்பு, பூதவுடம்பை நிலைபெறுத் திப் பிறப்பிற் கேதுவாகும்.

அறப்பயன், முன்னதைத்தரும் நன்மையாம். மறப்பயன் பின்னதைத்தரும் தீமையாம். எல்லாப் பொருட்கு மிடங் கொடுத்துநிற்பது, வான். வலியுடைய அணுக்கள்பலதிரண்டு, இரும்பு, கல், மரம் முதலிய உருவங்களைக் கொள்ளுவன. அவை புற்கலமாம். அறுவகைத் தொழில்களை கட்டாவன.

காமம், வெகுளி, மயக்கம், உலோபம், செருக்கு, பொறாமை என்பனவே, கட்டிற் கேதுவாவன. வினைப்பயனுகர்ந்து வினை அறவே ஒழியப் பெறுதல், வீடாகும்.

அறுபகைகளையுஞ் செற்றுத் தவநெறி நிற்பதால் இருவினைப்பயன் மாட்டு உவர்ப்பெய்தி வீடு எய்துதல் கூடும். உயிர்கள், தேவகதி, மனிதகதி, நரககதி, விலங்குகதியென்ற நாற்கதியிற் பிறந்துழலும். இவற்றின் வேறுபினவே புற்கலமென்பன. அவை உயிரில்லாதன. உயிர்போல்வன. பறவைகள் விலங்கினுளடங்கும். இது சமணர் கொள்கை.

## நிகண்டவாதி மதமறுதலை

நீ உன் கடவுளுக்குக்கூறுஞ் சிறந்த எண்குணங்கள் இடையே வந்தன. எனெனில், தீக்குணங்களை நீக்கியே, அவன் நற்குணங்களுடையனானன். அங்ஙனஞ்செய்தல் உயிரினியல்பே, கடவுளியல்பன்று. அவன் முதலில் தீக்குணங்களுடையனா யிருந்தானென்பது பெறப்படுதலின், அவனை நல்லறத்தில் மன்னுவித்தவன் ஒருத்தன் வேண்டும். அவன் யார்? அங்ஙனமன்னுவித்தவனைக் கடவுளென்றல் சாலுமா? மன்னினனைக் கடவுளென்றல் தக்கதோ? கூறுக.

உன்கடவுள் கருவிகளின் உதவியின்றியே எல்லாவற்றையும் அறிய வல்லனாயின், அவன் உடலெடுத்தனனென்பது எதனால்? உடல் எடுத்தால், கட்டுப்பட்டு, மன முதலிய கருவியின் உதவிகொண்டுதான் பொருள்களையறிதல் கூடும். முக்காலத்தையும் ஒரு கணத்திலறிய முடியாது. கருவிகள் நீங்கிய போது, பொருளொன்றையுமறிதல் கூடாது. (ஆதலாற் கடவுளுக்குப் பிறவியில்லை யென்றறிக.)

விருப்பு வெறுப்பெய்தி அவற்றை நீக்கினவர்கட்கெல்லாம் அருகபரமனைச் சேர்தல் இயலாது. என்னை? அவனே

உடம்பெடுத்தனனாதலானும், உடம்பெடுத்தபோது அவன் கட்டுற்றவனாகலானு மென்க. அரசர்போல உயிர்க்கு நன்மை செய்தற் பொருட்டு, உன்கடவுள் உடம்பெடுத்தானென்னில், அன்னோர் போலவே உலகிலே நீதிசெலுத்து மன்னனா யிராது பொன்னெயில் வட்டத்திற் போயிருப்பானேன்? பகைவரையும் நண்பரையும் ஒப்பாக நோக்கின், நீதி செலுத்துதல் எவ்வாறு?

சகலாத்தனாகிய அருகன் சொன்ன ஒருமொழி கொண்டு, இகலாத்தனாகிய சித்தபரமேட்டி நூலியற்றினனென்றனை. இருவருக்கு மன முதலிய கருவிகளில்லையாயின், இயம்பலுங் கேட்டலும் எவ்வாறியலும்? அது ஊமன் சொன்னதை ஊமன் கேட்டானென்பதை யொக்கும். இன்பபூமியிலிருக்கு மாறில்லாத தலைவனுக்கு இவ்வுலகின்கணுள்ள துன்பமறி தல் கூடாமையானும், அவன் மனமுதலிய கருவிகளில்லாத வனாதலானும், அவன் இவ்வுலகிலுண்டானவற்றைப் பற்றிச் சொல்ல வல்லனல்லன். அவன் இன்ப நிலத்தேயிருந்து கொண்டே, உலகத்துன்ப மனைத்து முணர வல்லனாயின், அவன் இருக்குமிடம் இன்ப நிலமாவதியாங்ஙனம்?

உடம்பில் உயிர், நீர்போல நிறைந்து நின்றதாயின் உடம்பு தேய்வுற்றால் உயிருந்தேய்ந்து அறிவு குறையப் பெறும். குடம் உடைந்தால் அதிலுள்ள நீர் சிந்திக்கெடுதல் போல உடம்பு இறந்தால் உயிரும் சிந்திய நீர் போலாகு மென்பதூஉ முடியும்.

புண்ணியத்தாலே அறவுடம்பினை உயிரெடுத்துக் கொண்டுமேற்செல்லும், பாவத்தாலே மறவுடம்பெடுத்துக் கொண்டு கீழ்ச்செல்லுமென்றனை. தூல வுடம்பு அவ்விரு வுடம்பாத மாறுமா? ஒரேகாலத்தில் அது இருவகை மாற்ற

மடைதல் எப்படி? மயிர்க்குட்டிப்புழு, வண்டாகுற்போலவும் புழு, குளவியாகுற்போலவும், அதுமாற்றமடையுமெனில், அம்மாற்றங்கள் ஒரேகாலத்தில் ஏற்படுவனவல்லவே.

புண்ணியபாவங்கள் செய்தோர் விண்ணிற்கும் நிரயத்திற்குந் தாமேசெல்வது எங்ஙனம்? அவர்களைச்செலுத்துவானில்லையென்று நீ கூறுகின்ருயே. விரைந்துசெல்லும் அம்பு குறித்த இலக்கினைப்பொருந்துமாறுபோல அவைகள் சென்றடையுமென்னின், அம்பைக்குறிப்பறிந்து எய்கின்றவன் அதனைச்செலுத்த வேண்டுமாகுதல்போல, உயிர்களை வினைப்பயன்களிற் செலுத்துதற்கு ஒருமுதல்வன் வேண்டுமென்றறிக.

வலிமையொன்று புற்கலத்தைப் பொருந்துமென்னில், புற்கலங்கெட்டபோது அச்சத்தியினழிவும், அது உண்டாம்போது அதன்புணர்ப்பும் ஏற்படவேண்டும். உயிரின்வேருக, அத்தகைய சடசத்தியொன்றிருப்பதாகத் தெரியவில்லை. நிகண்டவாதியாய நீதான் அத்தகைய சத்தியைப்பற்றிப்பேசி அணுவாதங் கூறுகின்ருய்; பிறர்யாரும் இவ்வாறு கூறிற்றிலர். அறிவு, கைத்தொழில், வரைவு, வணிகம், கற்றல், சிற்பம் என்னும் அறுவகைத்தொழில் நீக்கவே தவமுளதாம் எனில், பண்டமாற்றிலே, இருக்கிற சரக்கைக்கொடுத்து வேறுசரக்குக் கொள்ளாவிடத்து, வியாபாரத்திற்கும் ஊதியத்திற்கும் இடமில்லை. ஊழ்வினையாலே தவம் வருமெனின், அறுதொழில் நீக்கமும் ஊழ்வினையால் வருமெனக் கூறவேண்டும். அங்ஙனமாயின், அவற்ருலாய கட்டினை நீக்க முயற்சிவேண்டியதில்லை. தவமுயற்சி யில்லாதவிடத்து, வீடடைதலுமில்லை.

உடல் வருந்துவதே தவமென்னில், நோயினுல் வருந்துகிறவர்கள் பொன்னெயில் வட்டஞ்சேர்வரென்று கூறுவாயா?

முத்தி யின்பமடையக்கருதி உடலை வருத்துதல் நலமெனின் அதனைக்கருதி உன்முழுக்கை அரிந்து கொள்ளுக.

முன்வினைப்பயனை முற்றிலும் நுகர்ந்த பின்னர்த்தான் பொன்னெயில் வட்டமடைதல் கூடுமெனின், அதனை அளவிடுதல் முடியாது. வினைப்பயனை முற்றிலும் புசித்துத்தொலைத்த பின், பொறிகள் புலன்களையறிய மாட்டா. தவஞ்செய்யவு முடியாது. அது கடல்நீர் வற்றியபின், அங்குள்ள மீனைத் தின்னலாமென்று ஒருபூனை நினைந்ததுபோலாம். நீ பிறவிக் கடலில் நின்று ஒரு கடவுளுதவியின்றிப் பொன்னெயில் வட்டத்திற்கேறுவேனென்றல், கிணற்றினுட் கிடக்கின்றகுடம் தானே கரை யேறலுற்றாற்போலும். ஒருவன் எடுக்கவே, குடம் கரைசேர்வதொப்ப, சிவன் எடுக்கவே, பிறவிக்கடல் நின்று உயிர் கரையேறுமென்றறிக.

## ஆசீவகன்மதம்.

சமணருள், ஆசீவகன் என்பான், என்னுயிர்க்குப்போல, எவ்வுயிர்க்கும் இரங்குவனென்று சொல்லித் தன்னுயிர் வருந்தும்படி தன்தலைமயிரைப்பறித்துப் பிறவுயிர்களும் அவ்வாறு வருந்தவே அறங்க ளியம்புவான்.

எல்லையில்லா அறிவுடையனுப அருகபரமன், ஆதியிலே இயற்றிய நூலிற்கூறிய அணுக்கள் ஐந்துவகைப்படும். நிலம் நீர், தீ, காற்று, உயிர்என்பன அவை. நிலம்வன்மையுடையது; நீர் தண்மையுடையது, நெருப்புச்சூடுடையது, காற்று இயங்குந்தன்மையது, உயிர் அறிவுடையது. நிலமும் நீரும் கீழே பரவும். நெருப்பும் காற்றும், மேல்நோக்கிச்செல்லும். உயிரானது உடம்பினைச்சேர்ந்திருக்கும். அது நீங்கப் பெற்றால், பிற நால்வகையணுக்களோடும் உயிர்சேரும். அவற்றைச்

சார்ந்து, சார்ந்த தன்மையதாய் நிற்கும். உயிரொழிந்த பிற வணுக்கள், அறிவுடையனவல்ல. ஒரு அணுக்கெட்டு மற்றொரு அணுவாகமாறாது. ஒன்று மற்றொன்றிலே புகுதலுமில்லை. ஆனாலும் அவை உடம்பிலே பொருந்திவாழும். இவை தம்முட் கூடுவனவன்றி இவற்றோடு புதிதாகவந்து கூடுவதியாதுமில்லை. பழமையான இவற்றின் கூட்டம் ஒழிவதுமில்லை. இவை ஒருங்கு கூடுவதன்றி ஒவ்வொன்றாய்க் கூடுவதில்லை. இவற்றின் செய்தி ஒருகாலத்து மாறுவதில்லை.

அணுக்களை விரித்தல், நீட்டல், குறுக்கல், குவித்தல் அமுக்குதல், உண்டுதின்றொழித்தல், மீட்டுமுளதாக்குதல், உடைத்திடல் ஆகிய ஒன்றுஞ் செய்யமுடியாது. அவை உடம்பிற்குப் புறத்தும் உள்ளும் நிலவுவன; எங்கும்பரவி, பண்டும், இன்றும் என்றும் ஒருதன்மையனவாயுள்ளன.

உயிரென்கின்ற அணுவானது, கட்புலனாகாதது. வினையினாற் பிறந்து விரும்பும்பல உருவங்களையுந் நிற்கும். அதனைப் பொன்னனையில் வட்டத்துள்ள தேவரேயறிவர். அது பிறநான்கணுக்களாலாய பொருள்களி லெல்லாம் பொருந்தும்.

உயிரணு வொழித்தொழிந்த நான்கு அணுக்களும் ஒருங்கு கலந்திருப்பதேயன்றி மும்மூன்றாகவும், ஈரிரண்டாகவும் கூடுவதில்லை. நிலம், நான்கு குணமுடையது. நீர், மூன்று குணமுடையது. அழல் இரண்டு குணமுடையது, காற்று ஒருகுணமுடையது. இவற்றின் நான்கு குணங்களும் கூடி நிற்கும். அவை நாற்றம், சுவை, ஒளி, ஊறு என்பன. வெண்மையும், பொன்மையும், செம்மையும், நீலமும், பச்சையும், மிக்க வெண்மையுமாய ஆறுநிறங்களுள், மிக்க வெண்மை

யென்பது பொன்னெயில் வட்டத்தின் நிறமாம். ஒழிந்த நிறங்கள், நான்கணுக்களாலாய உருவங்களைப்பற்றி நிற்கும். உயிரணு அவற்றைத் தொடுதல், ஒட்டுதல், கலத்தலென்ப வற்றாலறியும்.

செல்வம், வறுமை, இன்பம், துன்பம், உடல்நிலைபேறு, மரணம், பிறநாட்டிற்கேகுதல், மூப்பு என்னு மெட்டும் கருவில் அமைந்து கிடப்பன. முன்னைவினையி லகப்பட்டு, அதன்முறைப்படி இவ்வுலகம் நடைபெறும்.

புண்ணிய பாவமென்னு மிரண்டோடு ஐவகையணுக் களுங்கூட்டவே, பொருள்கள் ஏழு ஆதலையறிந்து அறிவுடையோர் வீடடைவர்.

---

## ஆசீவகன் மத மறுதலை

வீடானது மீண்டு வாராவழியாமெனின், வீடெய்தின வன் மண்ணுலகத்தார்க்கு நூலினை எவ்வாறளிப்பன்? நூல் தானே உண்டாகாது. நிலவணு நீரணுவென்பன கீழ் நோக்கிய இயல்புடையனவாகலான், ஒப்பற்ற இடமாகிய பொன்னெயில் வட்டத்திலே அணுவைந்தும் ஒருங்குசேர மாட்டா. ஆதலால், அருகனுக்கு உடம்பெடுத்தல் இயலாது. எல்லா அணுக்களையு மொருங்குதிரட்டியறிய இயலாமையின் என்க. அருகன் உலகப்பொருளொன்றையும் அறியமுடியாது.

அருகபரமர், மிக்க அறிவுடைய கெம்போதகர், மண்டலர், எனஇருபகுதிப்படுவர். அவருள் மண்டலர் நிலவுலகில் வந்து அணுக்களினியின் செய்தியறிந்து நூலியற்றுவர் எனின், அவர் மக்களுள் ஒருபகுதியினராவரேயன்றி, ஒரே

காலத்தில் மக்களுடம்புந் தேவருடம்புமுடையவராகார். ஆத லால், நாலியற்றுவது மக்களுட் சிறந்தார் தொழிலென்பது முடியும். முடியவே அருகபரமர் தந்த நூலில்லை யென்றறிக.

உயிர்கள் உடல்களைப்பற்றியும் ஒட்டியுங் கலந்தும் பயின்றறிவெய்து மென்பது, துயில்வார்க்கும் குழந்தைகட் கும் பொருந்தாமையறிக. அணுவானவை கீழ்நோக்கியும், மேல்நோக்கியு மிருக்குமாயின், அவைதம்முள் ஒருங் கிணைந்து உறுப்புக்களாய் உடம்பிற்பொருந்தமாட்டா வென் பது முடியும். உடம்பின் உறுப்புக்களாய் அணுக்கள்கூடி யுருவெடுப்பின், அவ்வுறுப்புக்கள் அழிதல் கண்கூடாதலின் அவ்வணுக்கள் மாறாத நித்தியப் பொருளாய் உடம்புள் நிலவு மென்பது பொய். உடம்பில் அவைகூடி உறுப்புக்களாகா வெனின், அவற்றின் குணங்களையுடைய குருதி, தசை முதலியன கலந்திரா. பலபலபகுதியாய்ப்பிரிவுற்று நிற்கும். அவ்வாறு நிற்பின் உடம்பென்றவொரு பிழம்பு இல்லையாம்.

உயிரென்ற அணு உண்மையால் பல்வகைப் பிறப்புக் களும் ஏற்படுகின்றன வென்னில், அவ்வணு அறியுந்தன்மை யுடையதேயன்றித் தம்முட்கூடு மியல்பில்லாதவற்றைக் கூட்டுவிக்கு மியல்புடையதன்று. நால்வகை யணுக்கள் கூடாவியல்பினவாயின், அவற்றைக் கூட்டவும் இயலாது. ஆயிரம் கோல்களைச் சேர்த்தாலும் அவை ஒருதூணாகுமா?

வினைக்கேற்றபடி, உடல் உயிர்க்கு ஏற்படவேண்டும். அணுக்கள் அறிவில்லனவாகலான், தாமே அவற்றிற்கேற்ற வாறு கூடா. காற்றணு, பிறபூதங்களைக் கூட்டுமென்னில், அது வினைசெய்யுமுயிரை யறியமாட்டாது. வினைதானும் அணுக்களைக் கூட்டும் அறிவுடையதன்று. ஆதலால் வினைக்

கேற்ற உடம்பை உயிர்க்குக் கூட்டுவிக்கு முதல்வன் ஒருவ னுளனென அறிக.

---

## பட்டாசாரியன் மதம்

வேதத்தையே பெரிதாகப்பேசிக் கடவுளில்லை யென்று மொழிந்து, விண்ணுலக மெய்துவதற்குப் பொருளிழப்பு முதலியன விளக்குங் கருமங்களைச் செப்பும் சைமினி முனி வன் கூறிய மீமாஞ்சை நூலின் கருத்தைத் தழுவிப் பட்டா சாரியன் இயம்பிய கொள்கையாவது:—

உயிர்கட்குக் காமம், வெகுளி, முதலிய குணங்கள் பொருந்தும். அவை மிகுதிப்படுமாயின், வேதம் கூறும் மெய்ந்நிலை அமையாது. கற்ற நூலின் அளவே அறிவு விளங்கும். கல்வியில்லாவிடத்து மக்கள் பாலரையும் ஊமரையுமொப்பர்.

வேதத்தைச் சொல்லிய கடவுள் ஒருவன் உண்டென் னில், அவன் உருவமில்லாது நூலியற்ற முடியாது. உரு வங்கொண்டு நூல் கூறின், அவன் கற்றவளவே அவனுடைய அறிவு உள்ளதாம். அவன் இயம்பும் நூல் வேதப்பெரு நூலாகாது. ஆதலால் வேதம் தானாக உண்டானதே. தேவ ரும் முனிவரும் சித்தரும் நரரும் பிறரும் வேதமியம்பின ரின்னாரென்று அறிய முடியவில்லையென்றே சொல்லுகிறார் கள். பாரம்பரையாக வேதநூல் ஓதப்பட்டும் வருகிறது. கிணற்று நீர்போலச் சுரப்பதென்றும் அதனைக் கூறுதல் தவறு. கிணறு ஒருவனாற் றோண்டப்பட்டது. வேதம் சுயம்பாகவுள்ளது. மறுமையைக் குறிப்பதாலே, இம்மை யிலே ஒருவனாற் செய்யப்பட்டது மன்று.

வேதமானது ஆறங்கங்களையும், ஆயுர்வேதம், தனுர் வேதம், காந்தருவவேதமென்று மூன்று துணைவேதங்களையும் கொண்டுள்ளதாய் எப்பொருளுந் தன்னகத்தே அடங்கப் பெற்றதாய், ஆதியுமந்தமுமின்றி நித்தமா யோரியல்புடையதாய் இருப்பது.

படைப்பு முதலிய செயல்களும் செயன்முறைகளும், அவற்றைச் செய்யுந் தெய்வங்களும் பொருள்களும் பலதிறப் பட்டன. அவற்றின் பல்லியல்புகளையும் வேதம் கூறும்.

காலமூன்றினையு மக்களறிவதற்கு முன் அருவமாய் நின்ற வேதம், அவற்றையறிந்த மக்கள் நெஞ்சிற் பொருந்தி உருவப்பட்டு உலகிலே வழங்கும். அங்ஙனம் வழங்குங் காலே, பகுதி, விகுதி முதலிய உறுப்புக்களையுடைய பகுபதங் களாயும் பகாப்பதங்களாயும் தொடர்ந்து விதிகளையும் உண்மைகளையும் இயம்பும். வேதம் விதித்தபடி ஒழுகினால், பாதுகாப்புப் பெருஞ்செல்வமாகிய வீடு அடைதல்கூடும். பாசத்தையும் நீக்கலாம்.

கிளர்ச்சியுடைய இவ்வுலகமானது ஒருகாலத்திலும் ஒடுங்குவதாவது, மீளஉள்தாதலாவது உடையதன்று. படைப்பானொருவனை யுடையதன்று. அநாதியே உயிர்களின் தொடர்புற்று, நீக்குதற்கரிய வினைக்கேற்ப இயைந்து நின்று, நில முதலிய பூதங்களாக விரிந்து என்று முளதாயிருப் பதே உலகம்.

உயிரானது அழிவற்றதாய், வியாபகமுடையதாய், அறிவுவடிவாய், புத்தி முதலிய கருவிகளின் வேறாய், அழுக் கற்றதாய், அருவமாய்ப் பண்டை வினைக்கேற்ற உருவெடுப்ப தாய், ஐம்பொறிகளாற் பொருள்களை யறிந்து நிற்பது.

செய்யும் வினைகள் மறைந்து சிந்தையிற் பொருந்தி நின்று, உரிய காலத்திற் பயனைத்தரும். அது வைக்கோல், தழை முதலியன கெட்டொழிந்தபின், அவற்றின் சத்தி நின்று வயற்பயிருக்கு நன்மையைக்கொடுப்பது போலாம்.

முறைபான நித்திய கருமங்களைச்செய்யச் சுகம் நீங்காதுளதாகும். குற்றமற்ற காமியப்பயனுக்குரிய கருமங்களைத் தழலோம்புதல் வாயிலாகச் செய்யின் விரும்பிய எல்லாம் அடையலாம். பயன்கருதாது, அவாவற்றுச் சோமயாக முதலியவைகளைச் செய்தலின் பயன் வீடடைதலே. வேதம் சுயம்பு என்ற அறிவையும் அது விதிக்குங் கருமத்தையும் இரண்டுகாலாகக்கொண்டு வீடடைதல் கூடும். ஞானமே போதும், கருமம் வேண்டாமென்பவன் வேதத்திற்குப் புறம்பாவான். அவனை நற்கதியிலுய்க்கும் வழியேயில்லை. ஆதலிற் கருமமே பிரதானம். யாகபசுவைக்கட்டி யாகஞ்செய்தல் புண்ணியம். நான்மறைகள் சொன்ன முறைப்படி, கெடுதலில்லாத மந்திரங்களைச் செபிப்பதால் இன்பமுண்டாகும். அது பசியுள்ளவன் உண்டால் பசிதீர்ந்தின்புறுதல் போலாம்.

## பட்டாசாரியன் மத மறுதலை.

வேதம் சுயம்பு என்றனை. அங்ஙனம் வேதம் தன்னைச் சொல்லியிருக்கின்றதா? அல்லது வேறு பிரமாணம் ஏதாவதுளதா? ஐந்தாம் வேதமென்று சொல்லப்படுகிற பாரதம் வியாசராலே யியம்பப்பெற்றமைபோல, நான்கு வேதமும் சொல் வடிவாய் வருகையால், குடம், உடை முதலியன செய்வாரின்றி யுண்டாகாமைபோல, வேதமானது அதைச் சொல்வாரொருவனின்றி யுளதாகாது. அந்தரங்கமாகப் பரம்

பரையில் வந்தவேவ்று மெய்ம்மொழிகளும் இறைவனுடை யனவே.

வேதம் தானே உண்டானதன்றி ஒருவன் சொல்லன்று என்றாய், வானிடத்தே யெழுந்த ஓசையினால் அது அமைந்த தாமெனில், அது எழுத்தோசையன்மையின், சொல்லும் பொருளும் விளங்காத கீழ்ப்பட்ட ஒலிக்குழுவாதல் வேண்டும்.

வேதம் பிறபொருளை விளக்கித் தன்னையும் விளக்குந் தன்மையதென்னில், வானிலுதித்த மறை வானிற்குட்பட்ட வற்றையே விளக்குவதாய், அதற்கு மேலுள்ளவற்றை விளக் காததாய், ஒரெல்லைக்குட்பட்டதாம். அக்கருத்து நிரீச்சுர சாங்கிய நூலியற்றிய கபில முனிவரின் கூற்றாக முடியும்.

வேதம் அருவாதலும் உருவாதலும் எவ்வாறறிய முடி யும்? எது கொண்டு வேதம் அத்தகையதாகின்றதென்று நீ தெரிந்தனை? உனக்குத் தோன்றியபடி நீ சொல்லுவது பிரமாணமாகாது.

வேதம் யாதாவது ஒலி வடிவை எடுத்து வருமென்னில் தேரையின் சத்தத்திலும் உன் வேதம் உருவெடுக்கலாம். வேதம் தன்னைச் சொன்னவன் இன்னனென்று கூறாமை யாலே, வேதம் தானே வேண்டிய உருவொன்றினை நாடி அதனை மேற்கொண்டு வருமெனின், பலவளங்களுமுள்ள ஒரு தீவின்கண், பல நிற ஆடைகளைக் கண்டபோது அவற்றை ஒரு கைக்கோளன் நெய்தானென்னில், ஒருவனை யுந் தீவின்கட் காணாமையால், அவை தாமே உருவெடுத்து வந்தன என்பாயா?

நாற்றிசையிலுள்ளாரும் ஒரு தன்மையாக் வேதத்தை யோதி வருதலால், அது என்று மொருபடித்தாய் நிறை வுடையதென்றால், எல்லாவிடத்திலும் மட்கலன்கள் பல உளவாயிருத்தல்பற்றி, அவை தாமாக எங்குமுண்டாயின என்று கருதாது, அவற்றைச் செய்தானொரு குயவனுள னென்று கருதல்போல, குற்றமற்ற நன்மொழிகளை யியைத்து நூலியற்றுவானொருவன் வேண்டுமென்றறிக.

மாலை கட்டுதற்குரிய மணமலர் முன்னே யுள்ளது. அவ்வாறே பொருட்சொற்கள் முன்னே யுள்ளன. அவற்றைத் தொடுத்துரைப்பதே உயிர்கள் செயலாமென்னில்; அத்தகைய பொருட்பேறுடைய சொல்லொலிகள் தனியே காணப்படுமாறில்லை. கடலொலி போன்றனவே இயற்கையா யுள்ளன. அவைபோல நின்வேதமுங் கருதப்படலாமா?

உடலில் நின்று உயிர்களாகிய நாம் உணர்வது போல, உலகங்களை யெல்லாந் திருமேனியாக உடைய முதல்வன் இயம்பிய வாய்மொழியைத் துணையாகக் கொண்டு உலகர் தங்கடமைகளை யாற்றுவர். முதல்வன் சுயம்பாதலினாலும் அநாதியாதலினாலும், அவன் மொழியும் சுயம்பென்றும் அநாதியென்றுங் கூறப்படுகின்றது. இது உபசாரம். அது, அரசனை மதிக்குங் குடிகள் அரசன் கட்டளை வரைந்தனுப்பிய வோலையைத் திருமுகமென்று கூறுதலை யொக்கும்.

ஆரிய வேதமானது வேதியர் முதலிய முதன் மூன்று வருணத்தாராலோதப்படுவதெனின், சோதிட முதலிய அங்க நூல்கள் எல்லார்க்கும் பொதுவானவையல்லவோ? வட பாகத்திலே சாதி வேற்றுமை கருதாது, எல்லாரும் ஒப்பவே யோதுவது எது? அதுவும் இந்த வேதந்தானே. ஆதலால் வேதமென்பது யாவர்க்கும் பொதுவாகவே கருதப்பட

வேண்டும். "அதற்கு மூல ஆசிரியனில்லையென்று கூறுதல், பிறந்த பிள்ளைக்குத் தந்தையில்லை யென்றியம்புவது போலாம்.

அறிபுந்தன்மை உடம்பினுறுப்புக்களுக்குளதாயின், அவையழியும்போது அவற்றோடு சார்புற்ற உயிர்களும் அழிந்துபோம். உயிர் வந்து உடம்பைப் பொருந்துவதில்லையென்பது நின் கொள்கையாயின், இரண்டையுங் கூட்டவல்லானொருவன், கூட்டுங் குறிப்போடு கூட்டினாலன்றி, உடம்பு உயிரைச் சென்றடையமாட்டாது. கார் காலத்திலே வித்தில் நின்று முளைப்பதெல்லாம் வேனிற் காலத்தே ஒருங்கு அழிந்து விடும். அது போலக் காலத்தால் முத்தொழிற்படுகின்ற உலகம் தோன்றிப் பொடுங்குந்தன்மைத்து; அது என்றும் ஒரு தன்மையதாய் நிலைப்பதன்று.

உயிர் எங்கும் நிறைந்திருப்பதாயின் நித்திய கன்ம நெறியிலே நின்று விண்ணுலக முதலிய இடங்கட்குப் போய் வரவேண்டியதில்லை. பூவின் மணம்போல உடலிலே உயிர் நிறைந்திருக்குமாயின், பூ அழிந்தால் மணமுமொழியும். மணம் தனியே நில்லாது. நீ சொன்ன உவமை பொருத்தமாயின், உடம்பை நீத்த உயிர் தனியே நிற்றல் எவ்வாறு? பெருஞ்சித்தி வல்லார் கூடுவிட்டுக் கூடுபாய்வதை அறியாயா? மறை கூறிய உண்மையை நன்கறியாமையின், உன் சொல் உலகினர்க்கு மலைவினை விளைப்பதாயிற்று.

உடலுடன் செய்கின்ற வினை அழிந்தொழியின், அது மேற்பிறவிக்கு வித்தாவது எப்படி? வயலிலிட்ட உரம் கெட்டு அதன் சத்தி நுட்பமாய்ப் பயிரிற் பொருந்திப் பயன் தருதல் போல, வினை, தூலமாய் உடலோடு கெடினும், நுட்பமாய் உயிருடன் பொருந்தி நிற்குமெனில், அது உண்ட உணவே

தூலமாய்க்கெட்டு, நுட்பமாய உயிருடன் பொருந்தி, மீள உணவாய் வருமென்பது போலாம். வினை உடம்பொடு கழிவதால், உயிரை யறிந்து சேரமாட்டாது. அது சேரும்படி, வேலையாளர்க்குக் கூலியுதவுந் தலைவன்போல, வினைப்பயன்களை அறிந்து செலுத்துதல் இறைவன்றொழிலென அறிக.

ஞானம் கருமத்தோடு கூடியே வீடெய்துவிக்குமென்றனை. கருமம், பொருள் முதலிய உதவியை இன்றியமையாதது. அது, விருப்பு, வெறுப்பு முதலியவற்றை விளைவிக்கும். அவற்றால் ஞானம் நிலைபெறாது. வீடும் கிட்டாது. பொருளினாற் போகத்தை நுகர்ந்தோன் பொருளற்றவுடனே மீட்டும் பொருள் நாடி அலைதல்போல, செய்யும் நல்வினையின் பயனுக்குப் போகம் நுகர்ந்து தொலையவே, மீட்டும் போகத்தை விரும்பி வினை செய்யத் தூண்டுவதே, உன் கொள்கையினியல்பாம்.

---

## பிரபாகரன் மதம்

பட்டாசாரியன் சொன்ன முறையிற் சிறிது மாறுபட்டுப் பிரபாகரன் என்பவன் சைமினியின் மீமாஞ்சை நூலுக்கு விளக்கங் கூறினான். ஒரு வினை செய்து முடிந்த பின் அபூர்வமென்பது தோன்றி அவ்வினைக்குரிய பயனைத் தரும் என்றும், அறிவுஞ் செயலுமற்று, மண் போலவும் கல்லுப் போலவுங் கிடத்தலே முத்தியென்றுங் கூறுவது பிரபாகரன் மதம்.

---

## பிரபாகரன் மதமறுதலை

வினைக்குத் தக்க பயன் வினையால் விளைவதென்று வேதங்கள் கூறவும், அபூர்வமென்பது பயன் கொடுக்கு

மென்றல் வேதக் கருத்திற்கு மாறுமன்றோ? அது, ஆகாயப் பூவுக்கு இயற்கையிலில்லாத மணம் தலையில் வைத்தபின் ஏற்பட்டதென்று செப்புவதனோடொக்கும். ஆனந்த நுகர்ச்சியே வீடென்று வேதம் விளம்பவும், அறிவு கெட்டுக் கிடப்பதே முத்தியென்கின்றாய். அங்ஙனமாயின், மூர்ச்சை யெய்தி உணர்விழந்தார்க்கு உயர்வான முத்தி கிடைக்கவேண்டும். நெருப்பின் நிறங்கெட்ட விடத்து நெருப்பு நிலைபெறுமாறின்மை போல, அறிவு கெட்டவிடத்தே உயிர் நிலைபெறாதாகலின், உயிர் முத்தியின்ப நுகருமென்றல் தவறு.

வைதிக சமயங்களுள், பட்டன், பிரபாகரன் என்ற இருவரும் மீமாஞ்ச மதத்தைத் தழுவினோர். இவர்கள் கொள்கையை மறுப்பதால், சைமினியின் பூர்வ மீமாஞ்சக மதம் மறுக்கப்பட்டது. தார்க்கிகர் கூறும் பாடாண வாதம், பிரபாகர மதமறுப்பால், கண்டிக்கப்பட்டது.

நிரீச்சுர சாங்கிய மதம், மீமாஞ்சக மதம்போல், நாத்திக வாத முடைத்தாதலின், அதன் கொள்கையையும், மறுதலையையும், ஈண்டாராய்வாம்.

இயற்கை யென்னும் பிரகிருதி மாயையானது மூலம், புரியட்டகம், விகிர்தியென மூவகைப்பட்டு, முறையே பரமாயும், நுட்பமாயும், வெளிப்படையாயும் நிற்கும். குண முதலே மூலமெனப்படும். அந்தக் கரணங்களும் தன்மாத்திரைகளும் கூடிய வுடம்பே, புரியட்டகமாம். பருவுடம்பும், ஐம்பூதங்களாலாய உலகமும், விகிர்தியாய வெளிப் படைப்பகுப்பாம். பிரகிருதி தாயபுருடனாகிய உயிர்முன் குழந்தைபோலப் பலசெயல்கள் புரிந்து பலகோடி பிறப்பு வகையாய் விரிந்து ஒடுங்குமியல்பிற்று. பிரகிருதியின் சார்

பால், உயிர் அறியாமையுறும். உலகச்செயல்களெல்லாம், பிரகிருதிக்குரியன, தனக்குள்ளனவல்லவென்று அறிந்து உயிர் தன்னிலே தெளியுமாயின், அஃதே வீடாம்.

---

## மறுதலை

உயிர் தூயதெனவே அது குற்றமற்றதாயும் அறிவுடையதாயும் இருப்பதென்பது பெறப்படும். உயிர் அவ்வாறிருப்பின், அதனைப் பிரகிருதி சுற்றிப்பற்றுவதெப்படி? உயிர்முத்தியடைவதற்கு முன்னம் அறியாமை பிரகிருதிக்கே யெனின், கட்டுநிலைக்கும் வீட்டு நிலைக்கும் வேறுபாடின்மையாலும், பிரகிருதியாற் பற்றப்படுந் தன்மையதாய் உயிர் நிற்பதாலும் கட்டு நீங்கினும், உயிர் என்றுங் கட்டிற்குட்பட்டதே. உயிர்க்கு வேறாய பரம்பொருளின் பேரறிவாலே அதுபுனிதமடையும். பிரகிருதியைக் கடக்கமாட்டாத விடத்து, உயிர் வீடடைந்ததாகாது. இயற்கையாகத் தூயவனாயிருப்பானுக்குப் பிரகிருதித் தொடர்பு என்று மிலதாகும்.

உண்மை யாதெனிற் கூறுதும். உயிரானது பிரகிருதியின் சார்பால், உலகினை யறியுந்தன்மை பெற்று, குருடன் முதுகில் முடவன் ஏறிச் சென்றாற்போல இயங்குந் தன்மைத்து. பிரகிருதியையும் புருடனையும் வினைக்கீடாக இயைத்துச் செலுத்திச் செயலறிந்து பயனளிப்பவன் குற்றமற்ற கடவுளென்றறிக.

புருடனாய உயிர் தானாக ஒன்றையு மறியான். பிரகிருதியோ, சடம். ஆதலால் இவ்விரண்டினையும் காரியப்படுத்துவதற்குத் தலைவன் ஒருவன் உளன் என்றறிக. வீடு ஞானத்தாலெனின், கட்டு நீங்கியே, ஞானம் பெறற்பாலது.

கட்டு நீக்குவோன் யாரெனில், உலகத் தொடர்பாய கட்டுண்டாக்கிய முதல்வனே. அவன் பணியாற்றலாகிய நெறியில் நின்று தொண்டு செய்து உன் பாசத்தை இறைவனருளால் நீக்கிக்கொள்ளுக.

---

## பாஞ்சராத்திரி மதம்.

---

இதுகாறும் விதந்தோதி மறுக்கப்பட்ட மதங்கள் கடவுளுண்மையை மேற்கொள்ளாதன. பாஞ்சராத்திரிமதம் கடவுளுண்மையை மேற்கொள்ளினும், கடவுள் இலக்கணத்தை நன்கறியாததாகும். பாஞ்சராத்திரி மதத்திற் கூறிய வைணவமே சித்தாந்த நூலுள் விதந்தோதி மறுக்கப்பட்டது. அதன் கொள்கை வருமாறு:— எவற்றிற்கும் ஆதியாய் அருவமாகிய அளவிறந்த முழுமுதலாய், ஞானச் சோதியாய் நின்ற திருமால், உயிர்களைக் காத்தல் கருதித் தன் விருப்பப்படியே மீன் முதலிய திருமேனிகளை யெடுத்ததும், நீதி மிக்க கருணை காரணமாகத் திருப்பாற் கடலிலே பள்ளி கொண்டதுந் தவிர, வேதத்தையு மருளிச் செய்தான்.

தனது உந்திக் கமலத்திலே அயனைப்பெற்று, அயனாலே உலகங்களைப் படைப்பித்து, படைத்த உலகை அழிப்பதற்கு அரனையும் படைத்துக் காத்தற் கடவுள் தானேயாய் முத்தொழின் முதல்வனுய் விளங்குகின்றான். உலகப் பாதுகாப்பின்பொருட்டு, அவன் மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், தசரதராமன், பலராமன், கண்ணன் என்னும் பல அவதாரங்கள் எடுத்தனன். இனிக் கலியுகத்திலே, குதிரை யவதாரமு மெடுப்பன். இவ்வவதாரங்

களை யெடுக்குங் காலத்தும் தேவர் தேவனாய்த் திகழ்பவன் அவனே. மீன் வடிவங்கொண்டபோது, எழு கடல்களையும் ஓர் செதிளிலே அடக்கியும், ஆமை வடிவு கொண்டபோது மகாமேருவை முதுகிற் றாங்கியும், பிரளயத்திலே தாழ்ந்து போன ஞாலத்தை வராக வடிவாய்ச் சென்று மேலே எடுத்தும், நரசிங்க வடிவாய் இரணியனுடலைப் பிளந்தும், வாமன வடிவாய் உலகளந்தும், அரசர்க்கரசராய இராமர் மூவராய்த் திகழ்ந்து, அசுரர் மாயைகளைச் சிதறி யொழித்தும் உலகத்தைப் பாதுகாத்தனன். ஒரு பொய்கையிலே முதலையின் வாயில் அகப்பட்ட யானையானது கரையேற முடியாமல் ஐயனே! நாதனே! ஆதிமூலமே யென்றழைப்பத் திருமால் அபயங்கொடுத்து முதலை வாயினின்று யானையை மீட்பித்து அதற்கும் வீடளித்தனன்.

திருப்பாற்கடலைக் கடைந்து வானோர்க் கமுதமீந்தும், கொலைத்தொழிலிற்றலை நின்ற அசுரரைக் கொன்று உலகங்களைக் காத்தும், அன்பர்களுக்கு நாற்பொரு ளுணர்த்தியும், எஞ்ஞான்றும் உயிர்களுக்குத் தலைவனா யிருப்பவன் மாயவனே.

படைப்புக் காலத்தே மாயையாகியும், உயிராகியும், மாயா காரியமாய உலகமாகவும், வடிவுற்று நிலைபெற்று, மாயையினாலே உயிர்களுக்குக் கட்டுண்டாக்கி, அதனைப் பின் நீக்குவன். மாயனது அருளில்லாமல், உலக மாயையை வெல்லுதல் கூடாதென்றறிந்து அவனது திருவடியைத் தொழுதால், மாயா பந்தம் நீங்கும். அது நீங்கவே, திருமால் நம்மை வைகுண்டத்திருத்துவான்.

---

## பாஞ்சராத்திரி மத மறுப்பு.

முதல்வனை ஆதி என்றல் போதாது. அவன் ஆதியுமந்தமு மில்லாதவனென்று நூல்கள் கூறும். இறைவன் அறிவு வடிவினனாய் அருவனாய் முழுமுதன்மையுடையனாய் நிற்பின் அவன் மாயையிற் றுவக்குண்டு மாயாவடிவமாகான். அவன் எடுத்துக்கொண்ட திருமேனிகள் ஞானவடிவமேயென்னில் ஞான வடிவத்திற்கு எழுவகைத் தாதுக்கள் கிடையா. ஆனால் திருமாலின் வடிவங்கள், தோன்றி நின்றழிவுற்றமையால் அவற்றை ஞான வடிவங்களென்றல் தவறு. உருத்திரன் விண்டுபாற் சென்றிருந்தகாலை அவனது பாத்திரத்தை நிறைப்பேனென்று, தனது நெற்றி நரம்பைத்திறந்து விட, உதிரம் பெருகியது. விண்டுவும் மூர்ச்சித்து விழவே, தேவர்கள் உருத்திரனைவேண்ட, அப் பெருமான் விண்டுவை யெழுப்பினானென்ற வரலாறு கேட்கப்படுதலின், விண்டுவின் திருமேனிக்கு உதிரமாகிய தாதுண்மை தெளிக.

திருமால் தன் விருப்பப்படியே திருவுருக்கொள்ளவல்லனெனில் தக்கன் வேள்வியிலே வீரபத்திரரால் அவன் தலையிழந்த ஞான்று, தலையை மீட்டும் தனக்கு உண்டாக்கிக் கொள்ள இயலாதவனானான். பின், தேவர்கள் வேண்டப் பரமசிவன் அவனுக்குத் தலையை மீண்டும் நல்கினனென்பது கேட்கப்படுகிறது.

உலகிற்கு வேதமருளி அதன் பொருள் விளங்க ஆகம நூலு மருளிச்செய்தவன், ஆலின்கீழ் வீற்றிருந்த அரனென்று நூல்களெல்லாம் நுவல்வதற்கு மாறாக, விண்டுவேத மியற்றினானென்றல் மெய்யாகாது.

திருமால் அயனைப் பயந்தானென்றாய். அவனது தலை யொன்றினைப் பரமன் கிள்ளியபோது, அதனை மீட்டும் விண்டு படைத்திலனே. அயனது தலையைக் கிள்ளவல்ல அரனை அயன் படைத்தானென்றல் எவ்வாறு பொருந்தும்? இச் செய்திகளால் எல்லாஞ் சிவன் செயலென்று தெளிக.

சீவர்கள் பிறப்பதுபோலச் சீவர் வயிற்றிலுதித்த திரு மாலைச் சுயேச்சையாலுருவு கொள்வானென்றல் பொருந்தாது. அயன் உலகைப்படைக்க அறியாது இறைவனை வேண்டிய காலை, அயனுக்குப் படைப்புத் தொழிலை அறிவுறுத்தற் பொருட்டு அவனது தியானத்தானமாகிய நெற்றியிற் றோன்றியருளிய பெருமானை அயன் படைத்தான் என்றல் பொருந்தவறு. அயன் அரியையீன்றதாகவும் அரி அயனை யீன்றதாகவும் புராணங்கூறும். இருவரும் ஒருவரை யொரு வர் தோற்றுவிப்பதற்கு மூலகாரணம் அரனே; அரன் மேனி யில் விண்டு வலப்பக்கத்திலும் நான்முகன் இடப்பக்கத்திலுந் தோன்றிமை பகரும் புராணமுங்காண்க.

அரியின் ஏவலான் அரன் அழிப்பனுபின் அரன் இறுதிக் காலத்தே எல்லாவற்றையும் ஒடுக்கும்போது, அயனரி யையும் ஒடுக்குதல் யாங்ஙனம்? அங்ஙனம் ஒடுங்குதல் தெளிவு. ஆதலால் அழித்தற்றொழில் அரியின் ஏவலால் நடை பெறுவதன்று. ஒடுங்கியவிடத்தில் நின்று உலகம் மீள வுளதாமாகலின், அழித்தற் கடவுளே படைப்பிற்கும் மூல காரணனென்றறிக.

சலந்தராசுரனைக் கொன்ற சக்கரத்தை உருத்திரன்பாற் பெறவிரும்பி விண்டு தவங்கிடந்து, சிவபூசனையிலே தனது கண்ணை இடந்து சாத்தினமை புராணங்களெவற்றினுங்

காணப்படுதலின் காத்தற்றொழிற்கு முதல்வன் சிவனே என்று தெளிக.

திருமால், மீன்வடிவங்கொண்டு எழுகடலையும் தனது ஒருசெதிளுள் அடக்கியகாலைத் தானே ஒடுக்கு முதல்வனென்று செருக்குக்கொள்ள, சிவனார் அம்மீனின் செதிளினையுங் கண்ணினையும்பிடுங்கித் தமது சூலத்திற் குத்தி வைத்தாரென்று புராணம் விளம்புகிறது.

திருமால், ஆமையாக மேருவைத்தாங்கி நின்றபோது தானே எவற்றிற்கும் ஆதாரமானவனென்று செருக்குக் கொள்ளவே, ஒன்றும்பேசாது, ஆமையைத்தகர்த்து அதன் ஓட்டைப்பறித்துத் தனது எலும்புமாலையோடு இறைவன் அணிந்துகொண்டனன்.

அவ்வாறே, வராக வடிவங்கொண்டு நிலத்தைப் பாதலத்தினின்று எடுத்தகாலை, செருக்குக்கொண்ட விண்டுவை பொறுத்தற்பொருட்டு, வராகமேனியின் கோட்டைப்பறித்து இறைவன் மார்பிலணிந்து கொண்டனன்.

இரணியனைக்கொன்று அவன் உதிரங்குடித்த நரசிங்கத்தின் செருக்கை அடக்குவான், இறைவன் சிம்புள் வடிவங் கொண்டு நரசிங்கத்தைக்கொன்று அதன் தோலைத்தனக்கு இருக்கையாக்கிக்கொண்டனன்.

தான் இரந்தகாலை தனக்கு நிலம் உதவிய மாபலியைச் சிறையிலிட்டமை நன்றிகொன்றதாகு மன்றோ?

மாரீசன் விட்டமானைப் பொய்மானென்றறியாது அதன் பின் சென்றமை முற்றறிவுடைமைக்கு இழுக்காமன்றோ? இராவணனைக்கொன்ற பாவந்தீர, இராமேசுரத்தில் இறை

வனைப்பூசித்தவன் கடவுளா? பூசையேற்றருளிய பெருமான் கடவுளா?

பரசுராமன் பரமசிவனைநோக்கித் தவம்புரிந்தமையும் பலராமன் சிவனுரை நினைந்து யோகிருந்தமையும் நூல்களாற் றெள்ளிதிற் கூறப்பட்டனவன்றோ?

கண்ணன் உபமந்யு முனிவரிடம் சிவதீக்கைபெற்று அவருக்குத்தனது உடல், பொருள், ஆவி மூன்றுங்கொடுத் தமை உலகறிந்ததாமே. இனிக்குதிரையாய் விண்டுதிப்பி னும், அப்பிறப்பும், முதல்வன் பெருமையே விளக்குதல் கூடும்.

அரசனை யென்றொருவன் அழைத்தால், அரசன் நேரே அழைத்தவன்பால் ஓடிச்செல்லவேண்டுமோ? அரசன் அமைத்த காவலாளன் அழைத்தான்பாற்சென்று உதவி புரிந்தானுல், காவலாளன் அரசனுவனே? அதுபோலக் காத்தற் கடவுளாய விண்டு, யானையை முதலைவாயிற் றப்புவித் தால் அதுபற்றி அவனே தலைவனென்றல் பொருந்துமாறியாங் ஙனம்? உனக்கடிமைபாயுள்ளான், உன்னை ஆண்டவனே யென்றழைத்த காரணம்பற்றி நீ மெய்யான கடவுளாய் விடு வையோ? அதுபோல, விண்டுவழிபாட்டிற்சிறந்த யானை ஆதிமூலமேயென அழைத்தமையானே, விண்டு எல்லாவற் றிற்கும் ஆதியாவனென்பது எவ்வாறு பொருந்தும்?

திருப்பாற்கடல் கடைந்தகாலை எழுந்த நஞ்சினை உட கொண்ட இறைவன் அதனைக்கண்டத்தில் அமைக்கவில்லையா யின், விண்டுமுதலிய தேவரெல்லாம் உயிர்பிழைத்து அமு துண்டிருத்தல் கூடுமோ?

சூரபன்மனுக்கு அஞ்சித் திருமால் திருப்பாற்கடலை விட்டுப் பரமசிவன்பால் அடைக்கலம் புகுந்தபோது முருகப் பிரானால், அவனைக்கொல்வித்தும், விண்டு முதலிய தேவர்கள் தாரகனுக்கு அஞ்சியகாலை, காளியினால், அவ்வசுரனைச் சேதிப்பித்தும், திரிபுரத்தசுரர், சலந்தரன் முதலியோர்களைத் தாமே வென்றடக்கியும், இறைவனே விண்டுவினுஞ் சிறப்பாக உலகங்காத்தன னென்றறிக.

பார்த்தன் தனது உறவினரைக் கொல்லமாட்டே னென்றபோது, அவனைச்சூழ்ச்சியாற் போர்க்கு இசைவிக்கக் கருதித் தன்னைப்பரம்பொருளாகக் கண்ணன் கூறினமை பற்றி, அவன் முதல்வனுவனெனின், திரிபுரத்தசுரர்களை வஞ்சிப்பான், விண்டு நாத்திகநூலை அவர்களுக்குச்செப்பியதாகப் புராணங்கூறுகின்றது. அங்ஙனமாயின், விண்டுசெப்பிய காரணம்பற்றி, அந்த நாத்திக நூலை நீ கைக்கொள்ளுவாயாக.

மாயையானது உயிர்களாக மாட்டாது. உயிர்கள் மாயையாகமாட்டா. இறைவன் இவ்விரண்டுமாகான். விண்டு இறைவனுயின் மாயையாகவும் உயிர்களாகவும் திரிபுறமாட்டான்.

அவற்ரோடு இறைவன் இரண்டறக்கலந்து நிற்றல்பற்றி, அவையாகத்திரிபுற்றனென்று கூறுதல் தவறு. பாசத்தை விட்டுப்பதியை அடைதல் முத்தியென்று அருள்நூல்கள் கூறவும், அஞ்ஞானமாகிய பாசமாகவும், அதனோடுகூடிய பசுவாகவும்; தூயதன்மையனை முதல்வன் ஆவானென்று கூறுதல் பிழைபாடுடையதென்றறிக.

அரியும் அயனும் அடிமுடி தேடியறிதற்கரிய இறைவனை முதல்வனென்று கொள்ளாது, தேடிய இருவருள் ஒருவரைக்கடவுளென்றல் எவ்வாறு பொருந்தும்?

விண்டுவானவர், ததீசி முனிவனுடன் பொருதகாலை, முனிவர் அவரது சக்கரத்தை முறித்துத் தான் தருப்பையா லாக்கிய ஆயுதத்தால் அவரைவென்ற கதையை, நீ அறி யாய்போ? துருவாச முனிவரான் மார்பிலே மிதிக்கப்பட்டுத் தழும்புற்று அதனாற் றிருமறுமார்பனென்ற பெயரையுடைய ராய்ப் பெரியவர் திருவடி பட்ட இடம் புனிதமென்று தமது மார்பிலே திருமகளை விண்டு வைத்துக்கொண்டமையு மறி யாயோ? அத்துருவாசர் சிவனடித்தொண்டரல்லரோ?

பிருகு முனிவன் மனைவியைப் புணர்ந்தமைக்காக, அம் முனிவரால் பத்துப்பிறவி யெய்துமாறு விண்டு வெஞ்சொற் பெற்றமையை அறிகின்றிலாய். பிருகு முனிவன் வெஞ் சொற்கஞ்சி, திருமால் சிவனைப்பணிய, அப்பெருமான் பிறவி பத்தினும் விண்டுவை ஆட்கொள்ளுவதாகக்கூறி அவ்வாறே அத்தேவரை ஆட்கொண்டமையறிந்து, பிறப்பற்ற முதல் வனே பரம்பொருளென்று கடைப்பிடிக்க.

## பாற்கரியன்மதம்.

அறிவாகிய பிரமமே உலகமாயும் உயிராயும் திரிபுற்று விளங்குதலின், எல்லாம்பிரமமே. வீடு அடைதற்குரிய ஞான வுண்மைகளை மாமறைகள் கூறும். அவைசொன்ன முறையில் ஒழுகிவந்தால், உயிர்த்தன்மை கெட்டுப் பிரமமாதல் கூடும்.

மறுதலை:— நீ சொல்லுஞ் சித்துப்பொருள் உலகமாக மாட்டாது. சடமல்லாத பொருளே சித்து,—சித்தாயிருந்து கொண்டே அது எவ்வாறு சடமாய் உலகமாதல் கூடும். உப் பானது நீரிற் பரவியிருத்தல் போல என்னில், நீரோடு ஒரு தன்மைப்பட்டு நிற்கும் உப்புப்போலப் பிரமம் இருத்தல் செய்யாது; ஒன்றே அறிவும் அறியப்படும் பொருளுமாய இருவேறு தன்மையுடையதாதல் எப்படி?

பிரமத்தின் ஒரு சிறு பகுதி சடவுலகமாயிற்றெனில், உலகம், மாயையிலே தோன்றி நின்று மாயையிலே ஒடுங்கும்: மாயை பிரமமாகாது. பிரமத்திலே அவ்வுலகு ஒடுங்கித் தோற்றுமென்னில், பிரமத்தின் ஓர் பகுதி சடமென்பது முடியும்; பிரமமாகிய நீயுஞ் சடமென்பதாம்; ஆகவே உயிரு முலகமும் நிலையாத சடமென்பது முடியும்.

வித்தினிடத்தில் மரந்தோன்றி வளருதல் போலப் பிரமத்தினிடத்தில் உலகம் உண்டாகுமெனில், மரந்தோன்றுமாறு தான்கெட்டு மீளவுமரத்திற் றோன்றும் வித்துப்போல, பிரமத்தில் உலகமுண்டாக, மீண்டும் உலகத்திற் பிரமமுண்டாமெனக் கருத இடமுண்டாம். அங்ஙனங் கூறுமிடத்து உலகத்திற்குரிய தோற்றக் கேடுகள் பிரமத்திற்குங் கூறப்படும். மேலும், வித்தும் மரமும் முளைப்பதற்கு ஆதாரமாகிய நிலம்போலப் பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் ஆதாரமாகவுள்ள அடிப்படையாது?

பொன்னானது சூடகம், கடகம், மோதிரம், சவடி, தொடர், ஆரம், முடி, அரைஞாண் முதலிய பல அணிகலன்களாக மாறியும், தன்றன்மை கெடாதவாறுபோலப் பல வகைப்பட்ட உலகப் பகுதிகளாகப் பிரமப் பொருள் திரிபுற்றாலும், அது தன்றன்மையிற் கெடாதென்னில், பல பணிகளாகிய பொன்னே அப்பணிகளைச் செய்தோராகவும் அணிவோராகவுந் திரிபுற்று நிற்குமா? உலகத்தைப் படைப்போனும் நடத்துவோனும் உலகின் வேறாகவுளனென்றறிக.

அறிவுஞ்செயலு மாற்றமடைந்தால், வீட்டைதல் முடியாது. அவையிரண்டினும் பிரமத்தை அடையுமிடத்து, உயிர்கெடும் என்றாய். அறிவுஞ் செயலும் இல்லையாயின், உயிரும் இல்லையாம். அப்போது பிரமத்தைக் கூடுவதுயாது?

அறிவுஞ்செயலும் பிரமத்திற் கொத்த முறையில் உயிர்க்குமுளவாயின், உயிரானது பிரமத்திற் பிரிந்து உடம்பிற் புகுந்து அவத்தை யுறுவது எதனால்? இதனாற் பிரமத்தின் வேறாக உயிர் உண்டெனா அறிக.

## சத்தப்பிரமவாதி மதம்.

ஒலியானது மயக்கத்தினாலே உலகமாக மாறிற்று. அறிவிலார் ஒலிக்கு வேறாகப் பொருள் உண்டென்று கருதுவது மெய்யன்று. எல்லாம் ஒலிப்பிரமமே யென்றறிவது வீட்டிற் கேதுவாம் என்று சத்தப் பிரமவாதி பொருட்கும் ஒலிக்குமுள்ள வேற்றுமை யறியாது முடிவுகட்டினான்.

பால் தயிரானாற் போலுந் தோற்றத்தையும், (பரிணாமம்) இப்பியில் வெள்ளி போலுமியல்பையும், (விவர்த்தனம்) கானல்நீர்போன்ற மாயத்தையு முடையதாய் உண்டாகு முலகப் பொருள்கள் யாவும் உள்ளபடி ஒலியே. பொருளென்பது சொல்லின் விருத்தியே. ஒலியாகிய சொல்லில்லாமல் ஒருபொருளும் உண்டாவதில்லை. சொல்லின்பயனே பொருளெனவுணர்க.

பூ, மா, என்றபோது அச்சொற்களும் அவை குறிக்கும் பொருள்களும் பெறப்படும். மலரென்பதும், திருமகளென்பதும் அவற்றின் பொருளாம். சொல்லைக்கூறிய அளவிலே ஒலிமாத்திரமாய் அது நின்றுவிட வில்லை. பொருளையுங் குறிக்கின்றது. ஆதலின், சொல்லினின்றே அவை குறிக்கும் பொருள்கள் உண்டாயின. பூ, மா, என்ற சொற்கள், பூமி, விலங்கு என்னும் பொருள்படு மெனின், நாம் எந்தக் கருத்தோடு சொல்லுகின்றேமோ, அந்தக்கருத்திற்கு அச்சொற்கள் அடிப்படையாகின்றன. அவைகளினின்று பொருள் தோன்றுவது நெல்லில் நின்று பொரிதோன்றுவது போலாம்.

நெல்லினின்று அரிசி தோன்றுவதோடு, நிறத்தாலுந் தன்மையாலும் வேறுபட்ட பொரியுந் தோன்றுவது போல, ஒரு சொல்லினின்றே பல பொருள்களுந் தோன்றுதல் கூடும். சொல்லைக் கூறியவுடனே பொருளும் புலனாவதால், சொல்லே பொருளென்று துணிக. சொல்லும் பொருளும் ஒருங்கு புலனாவன வெனில், சொல்லில்லாமற் புலனாவதாய்ச் சொல்லிற்கு வேறாயுள்ள பொருள் யாது மில்லை.

## சத்தப்பிரமவாதி மதமறுதலை.

ஒலியானது மயக்கத்தால் உலகமாயிற் றென்றால், எல்லாம் ஒலிநின்று வந்தன வென்றதற் கேற்ப, மயக்கமும் அவ்வொலி நின்றே யெழுந்ததா? ஒலிக்கு வேறாயுளதா? பொருளுக்கும் சொல்லிற்கும் வேறுபாடுணராத நீ கூறுங் கொள்கை, சொல்லுலகம்வேறு பொருளுலகம் வேறெனக் கூறும் வேதக்கருத்திற்கு மாறாகும். அங்ஙனமாயின் நினக்கு வேதம் பிரமாணமாதல் எப்படி?

சொல்லானது அருவமாயிருப்பது. அது உருவாய்த் திரிபுறுதற்குக் காரணம் நினையாது. பால், கட்டித்தயிராயினாற் போல, சொல், திண்ணிய பொருளாமெனின், தயிர் பாலாக மாறாமை போலச் சொல்லானது பொருள்வடிவடைந்தபின், அப் பொருள் மீட்டுஞ் சொற்றன்மை யடையாது, பொருளாகவே நின்றழியும்.

சொல், திரண்டு திரிபுற்றாலும், பொருளாகத் தோன்றினும், தன்றன்மை யழியப்பெறுவதாமென்று கூறுக. எந்த இடத்திலும் பொருள் காணப்படுதலின், எங்குஞ் சொல் அழிவுடைத்தாம். உண்மையாக நோக்கின், தீயென்றவுடன், தீப் புதிதாக உண்டாய்விடுவதில்லை. ஆதலால், சொல்பொருளாய்ப் பரிணமிப்பதில்லை. சொல், பொருளாகத் தோன்றுமெனின்,

தீயென்றவுடனே வாயில் நெருப்புத் தோன்றி, வாய் வேக வேண்டும். இரண்டுமின்மையின், பொருளைக் குறித்தற்குரிய பெயராகச் சொல்வழங்குவதென அறிக.

சொல்லைப்போல அதன் பொருளுக்கும் உருவமில்லையென்ற காரணம்பற்றிச் சொல்லே பொருளாமெனின் அரியென்ற சொல், குரங்கிற்கும் திருமாலுக்கும் பொதுவான சொல்லாதல்பற்றித் திருமாலைக் குரங்கென்பையா? நெல், நெருப்பின் சார்பாற் பொரியாகும். தானாகவே பொரியாகாது. ஆதலால், அது சொல், பொருளாக மாறுதற்குவமையாகாது. சொல்லின் பல பொருள்களை யறிவது கல்வித்திறமாகும். அறிவாற் பொருளறியப்படுதலின், சொல்லினும் பொருளே சிறப்புடைத்து.

அறிவாலறியப்பட்ட பொருளுக்கே சொல்லாகிய பெயர் ஏற்படுகிறது. அப் பெயரினாலே பின் காணப்பட்ட பொருளை அறிகிறோம். நன்றாய்க் காணப்பட்ட பொருளினும் அவ்வப்போது பேசப்படுகிற ஒலியாகிய சொல்லே அழிவுடைத்து. சொல் காரியம் போல்வது. பொருள் காரணம் போல்வது. காரியத்திற்கு அழிவு கூறுதலுண்டேயன்றிக் காரணத்திற்கு அழிவு பகர்வதில்லை.

ஒரு பொருளை உயிரறியும்போது அறி பொருள், பொறி, கரணம், மூலப்பகுதி, மறைப்புச் சிவசத்தி என்னுமிவை கூடி அறிவு நிகழ்கின்றது. அப்போது பொருளா தோன்றுமேயன்றிப் பெயர் புலனாவதில்லை.

இருளிற் பொருளைத் தெரிவதற்குத் துணையாயுள்ள கைவிளக்குப்போலச் சொல்லும் பொருளையறிதற்குத் துணை புரியும். அது பேச்சளவில் நின்று மறைவது. நிலையில்லாதது. அது இறைவனாலே ஆக்கப்பட்டவற்றுளொன்று.

சிவஞான சித்தியார் பரபக்கம் முற்றிற்று.

மெய்கண்ட நூல்கள்

# சங்கற்ப நிராகரணம்

# சங்கற்ப நிராகரணம்

இந்நூல் இயற்றியருளிய உமாபதிசிவம், இந்நூற் காரணமுங் காலமும் தெரித்தருளியவாறு வருமாறு:— சிவபெருமான், குழந்தைகளுக்கு அவ்வப்பருவங்களுக்குத் தக்க அறிவைப் புகட்டும் பெற்றோர் போல, மாணாக்கர்கள் அறிவின் எல்லைகளுக்குத் தக்கவாறு அருளிய நூல்கள் எண்ணிறந்தன. அவை பலப் பல சமயங்கட்குரியன. ஒவ்வொரு சமயத்தாரும் தத்தங் கொள்கையே சிறந்ததெனவாதிக்குங்காலை, அவை திருவருள் பெறாத மக்கட்கு மயக்கம் விளைக்கும். அவை ஒரு புறம் இருப்ப, உட் சமயங்களாறும் தனித்தனி சிறப்புடையன. சைவத்திற்கே சிறப்பாக இறைவன் அருளிய அருள் நூல்களும் பலவே. அவையெல்லாம், ஆடகம், தமனியம் முதலிய வெவ்வேறு பெயர் பெற்றும் பொன் ஒன்றேயாதல்போல, ஒரு தன்மையனவாய்ப் பதி பசு பாசம் விளக்குவனவே. இவ்வாகமங்களைக் கற்றுணர்ந்த ஆசிரியர்கள் எண்மர், சாலிவாகன சகாப்தம் 1235ம் ஆண்டிலே, தில்லையிலே ஆனித் திருவிழா ஆறும் நாள் தேர் மண்டபத்தில் வரிசையாயிருப்பவும், மாயா வாதி ஒரு புறம் இருப்ப, ஆசிரியர் மெய்கண்டாரருள் பெற்ற ஒருவர் அருகிலே வீற்றிருப்ப, கதியடையக் கருதிய ஒருவன் வீட்டிற்கு நன்னெறி யாதென்று வினவ, மாயாவாதி தன் மதம் நாட்ட, அவனை மறுத்து எண்மருள் ஒருவர் தம்மதம் நாட்ட, அவர் கொள்கையைப் பிறர் மறுக்க, இவ்வாறே மாயாவாதியும் எண்மரும் இயற்றிய வாதத்தைக் கேட்ட ஆசிரியர் மெய்கண்டார் மாணவர் அவர்களது கொள்கையின் குற்றங்

களைக் காட்டி; உண்மை தெரித்தருளிய முன்றுறையை உணர்த்துவான் பிரமாணப் பொருள் விளக்கம், பிறர் கொள்கை மறுத்துத் தமமதம் நாட்டல், பிறர் கோள் மறுத்தல், எதுக்கூறல், உவமையால் விளக்கம் என்பனவற்றிற்கிணங்க 'அருள் சேர்மாந்தர்க்கு மருள் சேராமல்' இந்நூலியற்றப்பட்டது.

---

## மாயாவாதி மதம்

---

அறிவாய், உலக காரணமாய், எல்லையில்லாத இன்பமாய், அருவப் பொருளாய், எங்கும் நிறைந்த நித்தப் பொருளாய், குறிகுணங்களற்றதாய், நூலாலறியப்படாததாய், எவையுந் தானாய், அறியாமையாற் பற்றப்படாததாய், கரும்புக்குத் தன் சுவை தோற்றாமை போலத் தன்னில் இன்பம் பிறப்பதை நோக்காத வியல்பாய், வேதாந்தத் தலையினை எல்லையாகவுடைய பரம்பொருளாய், என்றும் இன்ப நுகர்ச்சி யுடையதாயிருப்பது பிரமம்.

ஒரு பகலவன் பல பானைகளில் நிறைந்துள்ள நீரின் கண் நிழலிட்டபோது பல ஞாயிறுகளாகத் தோன்றுமாறு போல, ஒன்றாகிய பிரமம், பல உடல்களிற் பலவாய்த் தோன்றும். ஞாயிறொன்று, நீருட் பலபடத் தோன்றினும், உண்மையாக அந்நீருள் இராமல், வானிலே நிலைத்தல்போல, பிரமம் உடம்பின்கண் தோன்றினும், ஐம்பொறிகட்கும், மனதிற்கும் எட்டா நிலையினது. ஆதலின், காண்டல், கருதல், உரை, உவமை, குறிப்பு இன்மையென்ற அளவைகளாலளக்கப்படாதது.

பொன்னானது பல அணிகளாய் நிலவிய தன்மைபோல, பிரமம், ஐம்பூதம், அறுவகைத்தாது, ஐங்கோசம், முதலிய யாக்கைப் பகுதிகளாகத் தோன்றும். தூயசிப்பியானது வெள்ளிபோல் மினுங்கும். அதுபோலத் தோற்றமாய உலகம் நிலைபெற்றதாகப் புலனும். இருள் நிறைந்த இரவில், ஒரு புற்றருகே கிடக்குங் கயிறு பாம்பெனத் தோன்றும். ஞாயிறு உதித்தவுடன் பாம்பென்பது இல்லையாகக் கயிறென்பது விளங்கும். அதுபோல மயக்கத்தால் உலகமானது நிலைபெற்ற பொருளாய்த் தோன்றும்; குற்றமற்ற ஞானம் உதித்தபோது, அறிவுப்பொருளாய பிரமமே உண்மைப் பொருளென்பதும், உலகச்செயலெல்லாம் பொய்யென்பதும் புலனும். சிப்பியையும் வெள்ளியையும் நெருப்பிலிட்டால், சிப்பி எரிந்தொழிய வெள்ளி நிலைபெறும். ஞானம் உதித்த போது ஞாலம் பொய்யாயொழிய, பிரமமே நிலைபெறும். உலகம் பிரமமே யென்னுந்தன்மைத்து; எதனாலெனின், உலகிற்கு முதற்காரணம் சொல்லொணாத பிரமமே. உலகம் தானாக உளதாயின் நிலைபெறும், முழுதும் இல்பொருளாயிற் றோன்றாது. அதற்கு ஒருமுதற்காரணம் வேண்டும். உள்பொருள் பிரமமொன்றே. ஆதலால் அதன்கணின்றே உலக முதிப்பதாம். உலகிற்கும் பிரமத்திற்கும் வேறுபாடியாதெனில், சிலந்திப்பூச்சியானது நாலினைத் தன்பாலுளதாக்கி வைத்துக்காப்பாற்றிப் பின்பு அந்நாலழியும்படி நீங்குவது போல், பிரமமும் உலகைத் தன்னிடத்தில் நின்றுந் தோற்றுவித்துக் காத்து முடிவில் அதனை இலதாக்கும். ஆதலால் உலகத்தின் அமைவு பிரமத்தினின்றுமயதே. சிலந்திப் பூச்சியின் நூல் ஒரு தன்மைத்து, உலகம் பலவகைத்தெனின், இலை, கனி, பூ, தோல், நார், காழ்ப்பு, முதலியவெல்லாம்

மரத்தின் பகுதியாதல் போலவும், திரை, நுரை, திவலை, குமிழி முதலியன நீரின் பகுதியாதல் போலவும், ஒன்றே பலவகைத்தா மென்க. பிரமமாகிய அறிவுப் பொருள் அறிவிலதாய உலகினைத்தராது என்றால், நெல்லானது பதரையும் வைக்கோலையுந் தருதல்போல இருவகை யுலகை யும் பிரமந் தருதல் கூடும். இது பிரமத்தினியல்பான செயலென்றும், அச்செயலால் தொடக்குறுது என்ற கருத்தால், அது பிரமத்தின் விளையாட்டென்றும் மறைகள் கூறுகின் றன. பிரமமும் பல வுடலிற் றோன்றுவதாற் பல்லுயிர்க ளாமோ வென்னின், பலநிற மணிகளைக் கோத்துள்ள நூலா னது, அம் மணிகளின் சார்பாற் பன்னிற முடையதாகத் தோன்றினும் உண்மையில் ஒரு தன்மையதாதல் போலவும், பசுக்கள் பன்னிறமுடையன வெனினும் அவற்றின் பால் ஒரு நிற முடையவைபோலவும், கலங்கள் பல வடிவினவா யிருப்பினும், அவற்றில் நிழலிடுங் கதிரவன் ஒன்றேயாதல் போலவும், குளம், கூவல், குழி, வாய்க்கால் முதலியன பலவாயினும், அவை எல்லாவற்றினும் உள்ள நீர் நீரேயாதல் போலவும், பிறப்புவகைகள் பலகோடியாயினும், அறிவொன்றே அவையெல்லாவற்றினுங் கூடி நிற்கும். அவ்வறிவாய பிரமம் போகபோக்கியங்களிற் கூடி நிற்பது போலத் தோன்றினும், கண்ணாடியில் நிழல் தோய்வற நிற்பதுபோல உடம்பிற் பிரமமானது பற்றித்தொடக்குறுது.

பிரமம் உடலிற் பற்றுது நிற்பின் உடல் காரியப்படுவ தெப்படியெனில் காந்தம் அசைவற நிற்ப, அதன்முன், இரும்பு தொழிற்படுவதுபோல வென்க. உடம்பிலுள்ள உயிர் இன்பதுன்ப நுகர்வது போற்றோன்றுவது, கனவில் யானை தன்னைப் பிடித்ததாகக் கண்டவன் விழித்தவுடன்

அதனைப் பொய்யாகக் காணுதல் போலவும், கானல், நீர்போற் றோன்றி நெருங்கினவுடன், நீரென்பது பொய்யாவது போல வும் என்க. உண்மை யறிந்தவுடன் அவை பொய்யாயொழி யும்.

பிரமந்தன்னிலே வானும், வானில் வளியும், வளியின் கண் அனலும், அனலிற் புனலும், புனலில் நிலமுந் தோன் றும். நிலத்திலே மருந்துகளும், மருந்தில் உணவும், உண விலே தோல், எலும்பு, நரம்பு, மச்சை, குருதி, வெண்ணீர் என்னும் ஆறு தாதுக்களும் தோன்றுவன. ஆறு தாதுக் களுங்கூடியுண்டான பிண்டம் அன்னமய கோசமெனப்படும். அன்னமய கோசத்திலே பிராணமயகோசமும், அதன் கண் மனோமயகோசமும், அதிலே ஐம்பொறியுணர்விற் கிடமா யிருப்பதாய விஞ்ஞானமய கோசமும் அதன் கண், வினைப் பொறிக்கிடமாயிருக்கும் ஆனந்தமய கோசமுமுள்ளன. பல பெயர்களையுங் ஒரே ஆன்மாப் பொருந்தி நனவு, கனவு, சுழுத்தி, துரியமென்னும் உணர்ச்சி நிலைகளை யடையும். அறிபொறிகளும் வினைப்பொறிகளும் அந்தக்கரணமுமாகப் பதினொன்று கருவிகளோடு நனவும், அந்தக் கரணங்கள் நான் கொடு கனவும், சித்தமொன்றோடு கூடிச் சுழுத்தியும், நிகழ் வன. துரியத்தில், எல்லாக் கருவிகளும் நீங்கி யொழிவதாற் புண்ணிய பாவத்தொடர்பு மில்லையாம். கண்ணாடியிற்றோன் றும் உருவநிழல் கண்ணாடியுடைந்த காலை மாறுபடினும், உருவத்திற்கு ஊறு யாதுமின்மை போலத் துரிய நிலையில் ஆன்மாவிற்கியாதொரு இடர்ப்பாடுமில்லை. கருவிகளையெல் லாம் தானென்று கருதி நிற்றல் பந்தமாம். அக்கருத்தை யொழித்துத் துரிய நிலையில் நிற்றலால் முத்தி உண்டாகும். பந்தத்துக்கு வித்து மூலப்பகுதி. அதன் செயலால், மாயா

காரியங்களாகிய இன்பதுன்பங்கள் பொருந்தும். அறியாமை நீங்கவே மாயை நீங்கும்; ஞான முதிக்கும்; அதனால் வேற்றுமையறிவு கெடும். தானே பிரமமென்ற வுணர்வு உண்டாம். வானிலே முகிற்படலமானது இருளையுளதாக்க, அம்முகில்களைச் சிதற அடிக்குங் காற்றைப்போல, பிரமத்திலே ஞானந்தோன்றிக் கருவி களைதற்கேதுவாம். ஒரு வீட்டின் பகுதிகளாய கட்டை, ஓடு, முதலியவற்றைப் பிரித்தெறியவே வீடில்லாமை போலவும், ஒருஆடையின் நூலிழைகளைப் பிரித்தொழிக்கவே ஆடையில்லாமை போலவும், உலகப் பகுதிகளை நானல்ல, நானல்லவென்று கழித்தொழிக்கவே, உலகமென்பது தானல்லவென்பது விளங்கும். விளங்கவே, தானே பிரமமென்று கண்டு, அக்காட்சியாலுளதாம் தன் ஆனந்தத்தை நுகர்தலே ஞானமுடிவாம். பழிப்பில்லாத தத்துவ மசி யென்ற மகா வாக்கியப் பொருளுணர்ச்சியால் நானே பிரமமாயினேன் என்றறிந்து சற்றும் அசைவிலனாகிப் பிரமம் உபாதிகளோடு சேர்ந்து புலன்களிற் செல்லுதல், ஒரு பாத்திரத்தில் உள்ள நீரில் தோன்றுஞ் சந்திரன் நீரோடு அசைந்தாலும் உண்மைச் சந்திரன் அசையாதிருத்தல்போலுமென்று தெளிதல் வேண்டும். உடல் நீங்கியவுடன் பரமுத்தியடைதல், குடம் உடைந்த இடத்து அதன் கண் உள்ள ஆகாயம் வெளியாகாயத்தோடொன்றுபடுது போல்வது என்றறிக. இங்ஙனம் பிரமஞானம் பெற்று, செய்யுங்கருமங்களைக் கைவிடமாட்டாத அபக்குவர்கள் அந்தப்பிரம ஞானந்தோன்றுதற்கேதுவாகிய கடமைகளை வழக்கமாய்ச் செய்து வந்தால் சிறப்பான அறிவு உண்டாகும். அரணியிற் கோலினாற் கடைந்த தீயானது அரணியையுங் கோலினையும் அழித்தாற்போல, சிறப்பான அறிவானது செய்யுங் கருமங்களை

அழிந்துவிடும். அவ்வாறு கருமங்களொழிந்த நிலையில் சிறந்த பிரமஞானத்துடன் நின்று விடுவதே முத்தி.

## மாயாவாத மறுப்பு.

'பிரமம் ஒன்றேயுண்டு' என்ற கொள்கைக்குப் பிரமாணம் வேதம் என்றால், அவ்வேதம் சீவன், பரம் என்ற இரண்டு பொருள்களைப் பற்றிப் பேசுதல் எவ்வாறு பொருந்தும்? அவ்விரு பொருளும் அபேதமாதலின், வேதம் அவற்றைப் பற்றிப் பேசியதென்னில், வேதம் அபேதமாத்திரமே பேசாது பேதத்தையும் பேசுவதற்குக் காரணம் யாது? வேதமானது, பேதம், அபேதம், பேதாபேதம் என்ற மூவகையாகப் பேசினும் எல்லாம் ஒன்றையே குறிக்கும் என்னில், வேதம் முரண்பாடுடையது என்பதாய் முடியும். எனவே வேதப் பிரமாணத்தை நீயிகழ்ந்தவனாவாய். பெத்த நிலையில், பேதமும், முத்திநிலையில் அபேதமும் வேதங் கூறியது என்னில், மாறிக்கொண்டால் தவறு என்னை? என்ற வினாவிற்கு விடையிறுக்கும் வகையிலாது வரம்பில்லாது சொல்லுதலாகிய குற்றம் உனது பிரமாணத்திற்கு உண்டாம். அங்ஙனம் கூறுதல் பொருந்தாது. பெத்தநிலைதான் பேதம் உண்டு. முத்தியிற் பேதமில்லையாது என்னில், உண்மையிற் பேதமாயிருப்பது ஒரு காலத்திலும் அபேதமாகாதென்பதே ஆராய்ச்சியாற் புலனாம். நீ சொல்லுவது தவறென முடியும்.

இனி, வேதம் யாராலே சொல்லப்பட்டது? அது சுயம்பாக உள்ளது; ஒருவராலுஞ் சொல்லப்படவில்லை யென்னின், நீ ஒரு பொருள்தான் உண்டென்று சொல்லுவதொழிந்து, பிரமம் ஒன்று, வேதம் ஒன்று ஆகப் பலபொருள் உண்டென்று கூறினாயாவை. மேலும், வேதம் சத்த வடிவானது;

ஒருவன் உச்சரியாமல் சத்தம் உண்டாவதில்லை. ஆகாயத்திலே சத்தம் தானாக உண்டாகிறது என்னில், அங்கே காற்றைத் துணையாகக்கொண்டே ஓசை தோன்றுவதன்றித் தானாகத் தோன்றுவதில்லை. அன்றியும், சொல், சொல்லமைப்பு, வாக்கியம் முதலிய வேறுபாடுகளில்லாமல் ஆகாயத்தில் ஓசை உண்டாகிறது. வேத வொலி அத்தகையதல்ல, மேலும் வானில்எழும் ஓசை அறிவற்றது. வேதம் அறிவைப் பிறப்பிக்கும் ஒலி வடிவாயது. ஆதலால் வேதவொலிக்கு ஆகாய ஓசை உவமையாகாது. உடம்பு வேதவொலியைத் தோற்றுவிப்பதென்னில், உடம்பிற்கு அறிவில்லாமையால் அது வேதப் பொருளை யறியவுஞ் சொல்லவும் இயலாததொன்று. சுட்டியறியப்படாத பிரமத்தில் அது உண்டாயிற்றென்னில், அது இது என்று பொருள்களை வேதத்திற் சுட்டிக்கூறு முறை அகண்டப் பொருளுக்கியலாமையால், அகண்டத்தில் வேதம் எவ்வாறு உதிக்கவல்லது? பிரமம் அதைக் கூறியதென்னில், பிரமத்திற்குப் பல், நாவு, முதலியன கிடையா. பேய் ஒருடம்பைப் பொருந்திநின்று பேசுதல் போலப் பிரமமும் ஒருவருடலைப் பொருந்தி நின்று வேதத்தைக்கூறுமென்னில், சாரப்பட்டவருடைய வாக்காக வேதம் வருதலாலே, அது பிரம் வாக்கியம் என்றறிவது எப்படி? அது பசுவாக்கியமாயின், குற்றமற்றதாகாது. வேதத்தைச் சுயம்புவென்பதற்குக் காரணம், அது தானாக உள்ள இறைவனாலியற்றப் பட்டமையே என்க.

அங்ஙனமாயின், வேதத்தை யோதிய முதல்வன் தனக்குக் கீழ்ப்பட்ட தெய்வங்களைத் தொழுதுகூறிய சொற்கள் வேதத்துட் காணப்படுதல் எதனாலெனின், அரசனது குடிகள் அமைச்சர் முதலிய அதிகாரிகளை வழிபட்

டுக் காரியம் நடத்திக்கொள்வதுபோல நாமும் இறைவனுக்குக் கீழ்ப்பட்ட அதிகாரத் தெய்வங்களை வழிபடு முறையை இறைவன் அத்தகைய சொற்களால் அறிவுறுத்தினன் என்றறிக. இறைவன் பிறரைத் துதிப்பது கனவிலுங் கிடையாது. அவன் தன்னை வேதத்துள் துதித்தல் எவ்வாறெனில், பக்குவப்பட்டவர்களுக்குத் தன்னை வழிபடும் முறையை அது காட்டினதாகும் என்றறிக. மேலும், இறைவன் தன்னைப் பற்றித் தனக்குச் சொல்லவேண்டியதில்லை. உடம்பிற்குச் சொல்லுதல் பயனிலாதது. ஆதலால் பிறருக்காகவே அவன் தன் பெருமையை விளக்கினான் என்பது முடியும். முடியவே, நூலளவை, முதல்வனாகிய அறியப்படுபொருள், உயிராகிய அறிபொருள், உயிர்அறிவாகிய கருவியெனப் பொருள் நான்காதல் பெறப்படும். படவே நீ பொருள் ஒன்றேயுண்டென்றது நிலை பெறாது. இதனால் வேதம் ஒன்றுதான் உள்ளது; பிரமம்ஒன்றுதான் உளது என்ற கொள்கைகள் நில்லாதொழியும்.

இனி, கரும்பின்சுவை கரும்புக்கு வேறாக இருப்பதில்லை. அதுபோல, பிரமமும் தன் ஆனந்தத்தைத் தனக்கு வேறாக உணர்வதில்லை யென்றாய். சுவைபிழப்பையும் சுவையமைவையும் பகுத்தறியமுடியாத சடப்பொருளை அறிவுப்பொருளாகிய பிரமத்திற்கு எவ்வாறு உவமை கூறுதல் பொருந்தும்?

பிரமம் உலகமாகக் காரியப்படுவது பொன்பணியாற்போல என்னில், பொன்தானே பணியாகாது. அதுபோல பிரமமும் தானே உலகம்ஆகாதென்பது முடியும். செய்வோனைப்போலச் செய்யப்படுகின்ற பொருள் இருக்கமாட்டாது. குயவனைப்போலப் பாண்டங்கள் இருப்பதில்லை யென்னில்,

பாண்டங்களுக்கு முதற்காரணம் மண் ஆகுமேயன்றிக் குயவ னில்லை. அதுபோல உலகிற்கு முதற்காரணம் பிரமத்திற்கு வேறாக உண்டென்பது கருதப்படும்.

அந்த முதற்காரணமே உலகத் தோற்றத்திற்குப் போதும், முதல்வன் வேண்டியதில்லை யென்னில், செய்வோ ரில்லாமல் எப்பொருளும் செய்யப்படுவதில்லை யென்னும் உண்மைக்கு நீ கூறுவது முரணாம். சிப்பி வெள்ளியாகத் தோன்றுவதுபோல உலகம் தோற்றமாத்திரம் உடையதே யென்னில், அப்போது உலகப் படைப்பைப்பற்றிப் பேச வேண்டியதில்லை. பிரமமான சத்து உலகமாயிற்றென்றலும் பொருந்தாது. பிரமம் உலகமாயிற்று, அல்லது உலகைத் தோற்றுவித்த தென்று நீ கூறுவாயானால், உலகம் பொய்த் தோற்றமே (மித்தை) என்று நீ கூறுவது பொருந்தாது. உன் சம்பிரதாயத்தை நீ மறந்தவனாதல் வேண்டும்.

பிரமம் உபாதிகள் வசப்பட்டுத் தன்னைச் சீவனென்று கருதி நிற்கும் விவகார நிலையில் உலகம் உள்ளதே; பிரமம் தன்னைப் பிரமம் என்றறிந்த பாரமார்த்த நிலையில் உலகம் இல்லதே என்னில், பாரமார்த்தமாயுள்ள பிரமத்தில் உண் டாகிய உலகமும் பாரமார்த்தமாகவேண்டும். அன்றெனில் உலகம் பிரமத்தில் தோன்றியதென்பதை நீ ஒழித்துவிட வேண்டும். விட்டால் உலகம் எதன்கணின்று தோன்றியது என்று நீ காட்டவேண்டும்.

இனி, பாரமார்த்த நிலையிலுள்ள பிரமம் நீ யென்பது உன்மதம். நீ பிரமமானால், உபாதிகளின்மேல் நீ அறியாமை யுறுகின்றாய். ஆதலால், பிரமமும் அறியாமை யுடையதாக

வேண்டும். பிரமமும் அத்தகையதே யென்று நீ சொன்னால், பிரமம் அறிவாயிருப்பதென்ற மறையுரையை நீ கைவிட்டவனாவை. மேலும் நீ, காட்சி, கருதல், உரை என்னும் பிரமாணங்களாற் பொருள்களை அறிவதுபோலப் பிரமமும் அவைகளாற் பொருளை யறியும் என்பது முடியும். முடியுமேல் பிரமம் வாக்கு மனத்திற்கப்பாற்பட்டது என்ற கொள்கை எவ்வாறு பொருந்தும்?

இனி, பொன்பணியான் இடத்து, பணியிலே பொன்னின்மாற்று ஒருபடித்தாய் நிற்பதுபோல, பிரமம் உலகமானவிடத்து, உலகத்தில் பிரமத்தன்மை எவ்வாறு நிலைபெறுமென்னில், அது சித்தாகிய சிலந்திப்பூச்சி சடமாயுள்ள நூலைத் தன்னில் உண்டாக்கியதுபோல, சித்தாகிய பிரமம் சடமாய உலகைத் தன்னிற் றோற்றுவித்ததென்றாய்.

சிலந்தியின் றொழில், நூலைத்தோற்றுவித்தலே. அது அந்நூலை ஒடுக்குவதில்லை. உலகம் ஒருகாற்றோன்றி யொருகாலொடுங்குதலின் பிரமம் தோற்றுவித்தலை மாத்திரஞ் செய்வதில்லையாகலின், சிலந்தியுவமை பொருத்தமற்றதாகும். பிரமம் ஒரு தன்மையதாயிருக்க, பிரமத்தினாற் றோன்றிய உலகம் பல்வேறு தன்மையதாயிருப்பானேன் என்னில், ஒருமரத்திற் றோன்றிய பூ, இலை, காய், பழம் என்பன வெவ்வேறியல்பினவாதலும், நீரில் திவலை, நுரை, திரை, குமிழி வெவ்வேறு வடிவினவாதலும் போல்வது அது என்றாய். அவைகள் சடத்தினின்று சடப்பொருள் விகற்பங்கள் தோன்றுதற்குதாரணமாவனவன்றி, சித்தினின்று சடவிகற்பங்கள் தோன்றுதற்கு உவமையாகமாட்டா. வித்தில் நின்று இலை, பழம், விழுது முதலியனவுடைய ஆலமரம் தோன்றினாற்போல, ஒரு நுட்பமான சடமூலத்தினின்றே

உலகம் தோன்றியதென்று அறியத்தக்கது. நெல்லிலே வைக்கோலும் பதரும் தோன்றினாற்போலச் சித்தினிடமிருந்து சடவுலகந் தோன்று மென்பதும் பொருந்தாது. ஏனெனில் நெல்லுஞ் சடம். வைக்கோல், பதர் முதலியனவும் சடம். சடநுட்பத்தில் நின்று வெளிப்படையான சடப் பொருள் தோன்றுவதியற்கை. ஒருகாரியம் தோன்றுவதற்கு அதனோடு ஒத்த இயல்புடைய காரணம் வேண்டப்படும். அஃதில்லையானால், மண்ணில் நின்று பருத்தி ஆடை நெய்யப் படவேண்டும்.

எல்லையற்ற பிரமம் அவித்தையோடு சேர்ந்தே உலகத்தோற்றத்திற்குக் காரணமெனில், சித்தாகிய பிரமம் அவித்தையொடு கூடுதற்குக் காரணம் வேண்டும். அது பிரமத்தினியல்பென்னில், நெருப்புக்குச் சூடு இயற்கையானாற்போல, பிரமத்தின் இயற்கையிற் றோன்றும் உலகமும் பிரமம்போலச் சத்துப்பொருளாய் நிலைமாறாதிருக்கவேண்டும். உலகம் நிலையில்லாததே யென்னில் அது பிரமஇயற்கையினின்றதென்ற கொள்கையை விட்டொழிக. சித்தாகிய பிரமத்திற்குச் சடமாகிய உலகம் இயல்பென்பது விளக்கு ஒளிக்கு அதனைச் சூழ்கின்ற இருள் இயல்பென்பது போலாம்; பெரிய விளக்கில் கறுத்த மை உண்டாவது போலப் பிரமத்தில் நின்று உலகம் தோன்றும் என்னில், ஒளியில் நின்று மைதோன்றுவது இல்லை. ஒளிக்கு இடமான நெய், திரிமுதலியவற்றில் நின்றே மைதோன்றும். உலகம் பிரமத்தில் ஒடுங்குவதுபோல, மையானது ஒளியில் ஒடுங்குவதில்லை. மேலும் சுத்தமான பிரமம் அசுத்தமான அவித்தையைச்சாரக் காரணம் வேண்டும். பிரமம் இருந்தவாறிருக்க அதனை மாயா உபாதிகள் சென்றடைகின்றன வென்னில்,

அவை பிரமத்தைச்சேர்தற்கு ஏது என்னை? ஆகாயத்தில் மேகங்கள் வந்து பொருந்தல் இயற்கையாதல்போல் என்னில், இயற்கையாக அவை மீட்டுமீட்டும்வந்து பொருந்துமாகலின், நிலையான முத்தி உண்டென்று பேசஇடமில்லை. உபாதிகள் நீங்கப்பெற்றவர்களிடத்தும் அவை மீளவும் வந்தடையும்.

மாயா உபாதிகளைப் பொருந்துதல் பிரமத்தின் விளையாட்டு என்னில்; விளையாட்டுப்பொருள் விளையாடுபவனுக்கு வேறாதல்போல, மாயாஉபாதிகள் பிரமத்துக்கு வேறாக உள்ளனவாகும். அவ்வாறாயின் அவை பிரமத்திற்றோன்றும் என்று கூறிய கொள்கையை நீ மறந்தவனாக வேண்டும். அல்லது சிலந்திதான் நூற்றநூற்கூட்டிற் சிக்கி வெளியே வர இயலாமைபோல நீ கூறுகின்ற பிரமமும் மாயா உபாதிகளுட்பட்டு வெளிவர இயலாது தலைமையும் அறிவும் இழந்ததென்று சொல்வாயாக. அவ்வாறாயின் மாயாபந்தத்துள் அகப்பட்டபிரமத்தை அதன்கண் நின்றெடுத்தாட்கொள்ளும் ஆற்றலுடையவர் அப்பிரமத்தின் வேறாவரென்பது முடியும். தாமிரத்தின் களிம்பை அதனோடு சேருங் குளிகை நீக்கினாற்போலப் பிரமத்தின் சிறந்த அறிவானது அதன் உபாதியைப் போக்குமென்னில், உபாதியுட்படும் பிரமத்தை சத்துத் தன்மையும் தூய்மையும் அறிவும் உடையதென்று நீ முன் கூறியது எவ்வாறு பொருந்தும்? மேலும், செம்பிற்கு வேறாகிய குளிகைபோலப் பிரமத்துக்கு வேறாகவே சிறந்த ஞானம் வந்துகூடும் என்று சொல்லவேண்டும். அவ்வாறாயின் நம்மைப் போல் ஒருவனை நீ கூறும் பிரமம் என்று சொல்ல வேண்டும். அப்படியானால் சைவக்கொள்கையை மிகுதியும் நீ உடையாய் என்பது முடியும்.

இனி, பலவகை மணிகளினூடுசென்று அவற்றைக் கோத்து நிற்கும் நூல் ஒன்றாதற்போலவும், பலநிறப்பசுக் களின் பால் ஒருதன்மையாதல் போலவும், பல தண்ணீர்ப் பாத்திரங்களிற் காணப்படுங் கதிரவன் கதிர் ஒன்றுதல் போலவும் பல்நீர் நிலையிலுள்ள நீர் ஒன்றேயாதல்போலவும், உடல்களும் உணர்வும் ஆவனவென்று நீ கூறினாய். பல வகைமணிகளும் சரடும் தாமாகக்கூடவில்லை. அவற்றை ஒரு வன் கோத்தாற்போல, உன்னுடைய பிரமத்தையும் உடல் களையும் பொருத்தினவன் வேறொருவனாதல் வேண்டும். பால் அறிவிலாததுபோலப் பிரமம் அறிவிலாததாயும் பசுக்கள் அறிவுடையனபோல, உடல் முதலியன்வைகள் அறிவுடையன வாகவும் இருந்தால் நீ சொன்ன பாலும் பசுவும் என்ற உவமை யொக்கும். பாத்திரங்களிற் பின்னம் ஏற்பட்டாலும் நீரிற் பின்னமில்லை யென்று நீ கண்டு சொல்லுவதுபோல, பிரமத்தையும் உடலையும் வெவ்வேறாகக் கண்டு சொல்லுபவர் இல்லாதபோது, நீ கூறும் உவமைபாற்பயன் என்?

கண்ணாடியில் நிழல்படுதல்போல, உடம்பில் பிரமம் பிரதிபலிக்குமென்னில், கண்ணாடியிற்படும் நிழலினாற் கண் ணாடி அசைவுறுவதாயின், பிரமத்தின் நிழல்காரணமாக உடம்புவந்துபோதல் பொருந்தும். நிழலாற்கண்ணாடி சலிப்ப தில்லை. ஆதலால் அவ்வுவமை பொருந்தாது.

இனி, காந்தத்தின் முன்பாக இரும்பு தொழிற்படுதல் போல, பிரமத்தின் சந்நிதியில் உடம்பு தொழிற்படும் என் னில்; பிரமம் அகண்டாகாரமாய் இருத்தலின் அதன் சந்நிதியிலுள்ள அறிவுடைப்பொருள், அறிவில் பொருள் ஆகிய எல்லாம் ஒருங்குதொழிற்பட வேண்டும். ஆனால் உடல்கள் தொழிற்படுவதுபோலக் குடம், ஆடை முதலியன

தொழிற்படாமைகாண்க. மேலும், காந்தத்தையும் இரும்பையும் ஒருவன் நேர்முகப்படுத்திய காலத்திற்றான், இரும்பு காந்தத்தைச் சேர்ந்திடும் ஆதலின், பிரமத்தையும் உடலையும் இணைத்துக் காரியப்படுத்த ஒருவன் வேண்டுமென்பது முடியும். காந்தம் இரும்பைத்தன்பால் இழுப்பதேயன்றி விலக்க ஆற்றலுடையதன்று. பிரமத்தின் சந்நிதியில் உடல் கூடியும் பிரிந்து மியல்வதால், நீ சொன்ன உவமை பொருந்தாது.

இனி, கனவில் துயர்முடையவன் விழித்தபோது, அத்துயரத்தைப் பொய்யாகக்கண்டது போலவும், புற்றினருகே கிடந்த கயிறு இருளிற் பாம்பெனத் தோன்றியது போலவும், துன்பங்கள் பிரமத்திற்குத் தோற்றமாவனவன்றி உண்மையிலில்லை என்பாய். கனவில் அனுபவிப்பதும் நனவில் அனுபவிப்பதும் வினையின் பயன்களே. அவை நிலையிலா திருத்தல் பற்றி அவை பொய்யென்று கூற இடமில்லை. நனவில் தூலவுடம்பினால் வினைப்பயனை நுகரும் உயிர், கனவில் நுண்ணுடம்புகொண்டு அதனை அனுபவிக்கும் என்றறிக. மேலும், அறிவாகிய பிரமம், கயிற்றைக் கயிறென்றறியாது பாம்பென்று மயங்குதற்குக் காரணம்யாது? அத்தகைய பிரமத்தை முதல்வன் என்பதெப்படி? மேலும் கனவிற் காணப்படுவது பொய்யென்றும், கயிறு அஞ்சத்தக்கதன்றென்றுந் தெரிந்திருந்தும், கனவு கண்டாலும் இருளிற் போனாலும் அச்சமடையும் பிரமம் எத்தன்மையது? அங்ஙனம் மயங்குவதொன்றைப் பிரமம் என்பது எப்படி?

சிவந்தபூவொடு சேர்ந்தபளிங்கு செந்நிறம் காட்டினாலும் தன்றன்மையை இழவாமைபோல, பிரமமும் வினையை நுகர்ந்தாலும், தன்றன்மை மாறாதிருக்குமென்னில், வினைப்

பயன்கள் பலவாதலால் பிரமமும் புண்ணிய பாவங்கள்முதலியவற்றையும் அனுபவிக்க வேண்டுமென்பது முடியும். அங்ஙனமாயின், பிரமத்திற்கு அறியாமையும், இருவினையும், அவற்றின்காரணமாக உடம்புங் கூறியவாறாகும். இங்ஙனமாயின், கள்வரைப்பிடித்துச் சிறைசெய்வதற்கு அரசன் ஆணை இருப்பதுபோல, இருவினைப்பயனை ஊட்டுவதற்கு இறைவன் வேண்டுமென்பது முடியும்.

உடலில் மூன்று வகையான அவத்தைகள் ஏற்படுமென்றாய். அவற்றை யனுபவிப்பது யார்? பரப்பிரமம் அளவற்றதாகலின், அது உடம்பிற் கட்டுண்டு அவத்தைப்படுவதற்கிடமில்லை. உடல் சடமாயிருப்பதால் உடல் அவத்தைப்படும் என்று சொல்வதற்கிடமில்லை. அந்தக்கரணங்கள் பிரிந்த இடத்துண்டாகிய மயக்கமே அவத்தையெனப்படும் என்றால் உடம்பில் முதன்மை பெற்றிருப்பது, அந்தக்கரணங்களோ? பரப்பிரமமோ? பரப்பிரமம் முதன்மை பெற்றிருந்தால், அவ்வறிவுடைப்பொருள்முன், அந்தக்கரணங்கள் மாறாட்டம் அடைதற்கிடனில்லை; அதனால் அவத்தைகள் நிகழமாட்டா.

உடம்பில் முதன்மையுடையன அந்தக்கரணங்களே என்னில், பரப்பிரமத்தின் சந்நிதியில் உடலியங்குவதென்று நீர் சொல்லியது தவறாகும்.

உடலில்அகப்பட்டு நிற்கும் பிரமமே அவத்தைப்படுமென்னில், அவ்வாறு பிரமம்கண்டிதப்பட்டு நிற்குமா? பலகணிவழியாக நீட்டியவிரலில் ஒரு வண்டு கொட்டினால் அதனால் உண்டாகியகடுப்பு நீட்டியபகுதியளவிலே நின்றுவிடுமானால் நீ சொல்லியது பொருந்தும். அப்படியன்றிக் கடுப்பு

உடம்பு முற்றிலும் பரவுதலின், உடலிற்படும் அவத்தை பிரமமுழுதும் பரவுதல் வேண்டும். அங்ஙனமாயின், உடலிற்பொருந்தும் பிரமமே அவத்தைப்படும் என்று நீ கூறுதல் பொருந்தாது.

கண்ணாடியிற் பிரதிபலித்த வடிவத்தின்கண்ணில் ஒரு குச்சியைக்கொண்டு குத்தினால் கண்ணாடிக்குக் கேடுவருமே யொழிய, உண்மைக் கண்ணிற்குக்கேடு வாராமை போல, உடம்பிற் பிரதிபலிக்கும் பிரமத்தின் பிம்பத்திற்குவருஞ் சுகதுக்கங்கள் உடற்கே ஏற்படுவன அன்றிப் பிரமத்திற் கில்லையெனின், முன்னை சுகதுக்கங்களை அறிவு அனுப விப்பதென்று நீ சொன்னதற்கு மாறாக, இப்பொழுது, உடலேஅவற்றை அனுபவிக்கும் என்கின்றாய். அதுவன்றி யும், அறிவே சுகதுக்கங்களை அனுபவிப்பது காட்சிப் பிர மாணத்தால் அறியப்படும். அதற்கு மாறாக, உடம்புஅனு பவிக்கும் என்று நீ கூறுதல் சுருதிக்கும், அனுபவத்திற்கும் விரோதமானதால் அது முற்றிலும்தவறாகும். "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லியவண்ணஞ்செயல்" என்னுந் திருக்குறளை நீ புதுக்கினாகல் வேண்டும். அளவுகடந்த பரப்பிரமத்திற்கு நீ மாயாவுபாதிகள் உண் டென்பது, ஆகாயத்தில் வீசுங் காற்றினைப்பிடித்து, அதற்கு விலங்கிட்டதுபோலும்.

இனி, சிறந்தஅறிவால் பிரமத்திற்கு மாயாபக்கம் நீங் குதல் ஆகாயத்திலுள்ள மேகங்களை ஒரு வகைக்காற்றுத் தோன்றிச்சிதறடிப்பது போல்வதென்றாய். ஆகாயத்திலே காற்றிருப்பதுபோலப் பிரமத்திலேயே சிறந்தஅறிவு முன் னமேஇருக்குமாயின், இடையிலே மயக்கம் ஏற்படக்காரண மில்லை; அச்சிறந்தஅறிவு, இடையிலே உண்டாவது என்

ணில்; முன்னமேயில்லாதது பின்னை உண்டாகாது. இடையிலே அவ்வறிவு உண்டாகுமென்பது ஆகாயத்திலே முன்னில்லாத பூ பின்உண்டாயிற்றென்பது போலாம். விறகில் முன்னில்லாத நெருப்பு, அரணியினாற் கடைந்தகாலை உண்டாவதுபோலப் பிரமத்தில் சிறந்த அறிவு தோன்றும் என்னில், அரணியை விறகில்வைத்துக்கடைவதால் நெருப்பு உண்டாவதுபோல, நீ கூறும் பிரமத்திலும் வேறொருவன் ஞானத்தைத்தோற்றுவிக்க வேண்டும். தானாக அது தோன்றாதென்பதுமுடியும். விறகில் தீ தோன்றுவது அவித்தையில் வித்தை தோன்றுவதற்குவமையாம் என்னில், ஞானந்தோன்றியது விறகுபோன்ற அவித்தையிலேதான், பிரமத்திலன்று என்பதுமுடியும்.

இனி, ஒரு வைக்கோல் வேய்ந்தவீட்டின் வைக்கோல், கழி, முதலிய அதன் உறுப்புகளெல்லாவற்றையும் பிடுங்கிக்களைந்தால், வீடென்பது இல்லையாதல் போலவும், ஒரு சீலையிலுள்ள ஒவ்வொரு இழையையும் பிரித்தெறிந்தால் சீலை யென்பதில்லையாதற் போலவும், எல்லாஉபாதிகளையும் இதுநான் அல்லேன், இதுநான் அல்லேன் என்று கழித்தால், பிரமந்தானே சீவனாயிருந்ததென்பது விளங்கும் என்றாய்.

அறிவாகிய பிரமத்தின்முன், அறியாமையாகிய உலகம் நில்லாது. அறியாமைநிலைத்தவிடத்து அறிவு விளங்காது. அது சூரியனது ஒளிமுன் இருள் இல்லாததுபோலவென்றறிக. இருளுக்கு ஒளியாற்பயனில்லை; ஒளிக்கு இருளாற் பயனில்லை. ஆதலால், உபாதிகளும் பிரமமும் ஓரிடத்திற் கலந்து இருப்பனஎனவும், பிரமத்தைச்சார்ந்த உபாதிகளைப் பிரித்த விடத்துப் பிரமஞானம் விளங்கும் என்வும் கூறுதல்

பொருந்தாது. ஒளியோடுகூடி ஒளியையும் இருளோடுகூடி இருளையும் அனுபவித்து இரண்டுமாகாத கண்போல ஒன்றுளது. அறிவாகிய பதியோடு சேர்வதாகியும், அறியாமையுடைய பாசத்தோடு சேர்வதாகியுமுள்ள பசுவே அது என்றறிக.

பிரமத்தின் வேறாகவொன்றில்லை; பிரமமே பிரமமாயிற்றென்னிற் பயன்யாது? பிரமம் தன்னிடத்திலே தன்னைக் காணுமாயின், அது கண்ணானது தன்னிடத்தில் தன்வடிவைக்காணும் என்பதுபோலும். கண் தன்னையே தன்னிற்காணாமை போலப் பிரமம் தன்னிற்றன்னைக் காணாதென்பதேமுடியும்.

பிரமம் தன் ஆனந்தத்தைத் தானே அனுபவிக்கும் என்றாய், பிரமம் உபாதிகளோடு கூடுமுன் தன் இன்பத்தைத் தானுகரவில்லையா என்ற வினாவிற்கு, கரும்புதன் சுவையைத் தானறியாதது போலப் பிரமமும் தன்னன்மையைத்தான் அறியவில்லை என்றாய். அதனோடு இதுமுரணுமல்லவா? உண்மையில், பிரமஞானத்தாற் பசுவாகியஉனக்கு முன்னில்லாத இன்பம் வந்தெய்தும் என்றறிக.

அது நீ ஆகின்றாய் என்ற மகாவாக்கியத்தின் கருத்து, பொருளொன்றே என்பதன்று. நீ ஆற்றல்பற்றிப் புலியாயினையென்றால் நீ புலியே; புலியின்வேறாக நீ இல்லையென்பது கருத்தாகாது. அவ்வாக்கியத்தில் ஆயினை யென்றது உவமையே குறிப்பது. ஒருவன் நான் நோயாய்க்கிடந்தேன் என்றால், அவன் நோயின் வேறல்லன் என்பது கருத்தாகாது. நானேபிரமம் என்றால், பிரமத்தோடு இரண்டறக் கலந்து நான் அதனின் வேறலாது நிற்கின்றேன் என்பது கருத்து.

நமக்கு அசைவில்லை, உடம்பிற்கே அசைவுண்டு, நீரிற் காணுஞ் சந்திரனது பிரதிபிம்பம் நீரோடு அசைந்தாலும் சந்திரன் அவ்வாறு அசையாமைபோல என்றாய். தனக்கு அசைவில்லை என்று சந்திரன்தானே தெரிவதில்லை. சந்திரனையும் அதன் பிரதிபிம்பத்தையும் வேறொருவன் பார்த்தே அவற்றின் நிலைமை கூறுவதுபோல, உடற்கே அசைவு, பிரமத்திற்கசைவு இல்லை யென்று அறிந்துசொல்பவன் பிரமத்திற்கு வேறாகவுள்ளன் என்பதே முடியும். ஆதலால் பிரமம் ஒருபொருள்தான் உளது என்பது தவறாகும்.

இனி, குடம்உடைந்தபோது குடத்திலுள்ள ஆகாயம், வெளி ஆகாயத்திற் கலப்பதுபோல, உடல்விட்ட பிரமம் அகண்டப்பிரமத்தோடு ஒன்றாகும் என்றாய். ஆகாயமானது குடத்திலுள்ளபோது ஒரு துன்பத்தையும் அநுபவிக்கவில்லை. வெளிப்போந்தபோது அது ஒரு இன்பத்தைநுகரவுமில்லை. உடலிலிருக்கும்போது துன்பமும், அதைவிட்டபோது இன்பமும் அடையும் பிரமத்திற்கு, இவ்வுவமை பொருந்துவதில்லை. நான் பிரமமென்றபோது ஒருவனே எல்லாஅறிவும் உடையபிரமமாயின், அவ்வாறுணர்ந்த காலே உலகிலுள்ள எல்லாரும் முத்திஇன்பம் அடையவேண்டும். அவ்வாறில்லையாதலின், அறிந்தோர், அறியாதார் என்ற இருவகைச் சீவான்மாக்கள் இருப்பன என்பது முடியும்.

கருமங்களைச்செய்வதாற் சிறந்த அறிவு உதிக்குமென்னில், பிரமத்தை அவித்தைவந்து பொருந்துதற்கு ஏது நீயாதுங் கூறவில்லை. அதுபோலச்சிறந்த அறிவு உண்டாவதற்குச்சாதனமாகக் கருமங்கள் வேண்டுமென்பதில்லை. அறியாமை காரணமில்லாமல் வந்து பிரமத்தைப் பொருந்துவதுபோல, அறிவுந்தானே உளதாம் என்றாற்போதுமே.

சிறந்த பிரமஞானம் உண்டானபோது கருமங்கள் அழிவெய்தும் என்றாய். பிரமஞானம்பெறாமல் அதுபெற்றேம் எனநினைந்து ஒழுக்கத்தைக்கைவிட்டு நடப்பவர்கள் அவ்வாறு நடப்பதற்குக்காரணம் அவர்கள் தலைவிதியோ, அறியாமையோ எனக்கூறுக. மனிதப்பிறப்பு எடுத்தபோது செய்யவேண்டிய கடமைகளை விட்டுவிடுவது நன்றிகொன்ற குற்றமாகும் அல்லவா? பிரமஞானம் இல்லாமலே, பாலர், பித்தர், குடியர், பேயர், துயில்வோர் முதலியவர்கள் போல் நடப்பது, கடமைத்தவறால் வரும் நரகத்துன்பத்தை நாடுவதாகும்.

பிரமஞானத்தைப்பெறுவது உயிர்வாழும் போதோ இறந்தபின்னோ? அலைவதாலும் வாழ்ந்தாலும் அறிந்தாலும் அணைந்தாலும் ஒரு தன்மையாயிருக்கும் நிலை எப்போது உண்டாகும்?

உடலுள்ளபோதே உய்திகூட முயலாமல், நானே பிரமம், நானே எல்லாத்தேவரும் ஆயினேன், நான் பிரமஞானங்கற்பிக்கிறேன் என்று, வீண்விவகாரஞ்செய்து வயிற்றுப்பாட்டைப் பார்த்துக்கொண்டு திரியும் மாயாவாதியே, நீ உனது சின்னாள் வாழ்வின்முடிவில் உன்னைக்காப்பதற்கு எத்தெய்வமும் இல்லையாகும். தேவரெல்லாம் நினதுபிதற்றலைக்கேட்டுச் சீற்றங்கொண்டு அவர்வாழ்கின்ற நாள்வரை உன்னை நரகத்துன்பத்தில் ஆழ்த்துவர். தேவருள் ஒருவர் உள்ளவரையும், நீ நரகிலிருந்து தப்பமாட்டாய்.

## ஐக்கியவாதி சங்கற்பம்

திருமாலறியாப் பெரியோனாகிய பரமசிவன் கூறிய பதிபசுபாச உண்மையை உள்ளபடி சொல்லுவாம்:—பதி ஒருவன், பசுக்கள் கணக்கற்றவர்கள்; பாசமானது மாயை,

வினை என்றிருவகைப்படும். அம்மையப்பன் உயிர்களுக்கு இருவினைக்கீடாகத் தனது அருளால் மாயையினின்று உடம்புகளைப் படைத்துக்கொடுப்பன். கதிரவனிடத்தே மேகஞ் சேர்ந்தபோது அதன் ஒளி குன்றினாற்போல, சுத்த அறிவுடைய ஆன்மாவை உடம்புபொருந்தி அவ்வறிவு குன்றும்படி நிற்கும்.

இருவினைப்பயன்களை உடம்புவாயிலாக உயிர்க்குக் கடவுள் புசிப்பிப்பன். புண்ணியபாவப்பயன்களின் அனுபவம் சமமாக, அவைமுற்றிலும் புசித்து ஒழிக்கத்தக்க நிலை வந்தபோது, அருள் வீழ்ச்சியுண்டாகும். இறைவன் திருவருட்டிருமேனிகொண்டு யாவருங்காண எழுந்தருளி, அழுக்குப் புடவையைத் தூயதாக்குதல் போல ஆன்மாவைச்சுத்தப் படுத்தி அறிவளிப்பன். ஆன்மாவானது குற்றங்களெல்லாம் நீங்கப்பெற்று நீரும் நீரும் சேர்ந்தாற்போலச் சிவனறிவோடு தன்னறிவுகூடப்பெறும். அதுவே அறிஞர் முத்தியாமென்ப.

## மறுப்பு

சுத்தமாயிருக்கும் உயிரின் அறிவைப் பாசம் எவ்வாறு பொருந்தும்? மாயையினாலாகிய உடம்பு புண்ணியபாவங்களுக்கீடாக அமைவதாயின் புண்ணியபாவங்கள் உடம்பில்லாமல் எவ்வாறு செய்யப்படும்? ஆதலால், மாயாமலம் முன் ஏற்பட்டதா? கன்மமலம் முன்னேற்பட்டதா? அவைகள் உயிரைச்சேர்வதற்குக் காரணம் வேண்டும். வெள்ளையுடையில் அழுக்கேறினாற்போல;இயல்பாகவேபாசங்கள் உயிரைப் பொருந்து மென்னில், முத்திபெற்றவரையும் பாசங்கள் போய்ப் பொருந்தவேண்டும். அப்போது முத்தியாற் பயன்யாது?

உடம்பும், மனமுதலிய கருவிகளும் உயிரைப்பிரிந்த இடத்து உயிர் ஒன்றையும் அறியாது கிடப்பதையும் அவைகொண்டே உயிர் பொருள்களை அறிவதையும் நீ கண்டிருக்கிறாயல்லவா? நன்றாக அயர்ந்து தூங்கும்போது, அருகே பாம்புக்கூட்டங்கிடந்தால் அஞ்சாதும், நவமணிக்குவியல் கல்கிடந்தால் விரும்பாதும் உயிர் இருந்ததற்குக்காரணம் யாது?

ஒருவனிடத்தில் ஒரு மோதிரத்தைக்கொடுத்து மீளவாங்கிக்கொண்டபின்னும், அதனைமறந்து மோதிரக்காரன், அதனை வாங்கி மீளக்கொடுத்தவனிடம் மோதிரம் எங்கேயென்று கேட்பதற்குக்காரணம்யாது? இவற்றிற்கெல்லாம் காரணம் அறியாமையென்னில், அவ்வறியாமையை எது விளைக்கிறதோ அது ஆணவமலம் என்றறிவாயாக.

இனி, முத்திநிலையில், உயிர்தானே அறிவுவடிவாயிருப்பின், வேறோரறிவோடு அது கூடவேண்டியது எதற்கு? ஒளியும் ஒளியும் கூடினால் மிகுந்த பிரகாசமுண்டாதல்போலன்றில், உயிரினறிவும் இறையறிவும் நீரும் நீரும்போல் ஒருதன்மையன என்று அறிஞர்கூறவில்லையே. இறை தானேயெல்லாம் அறியும், இறை அறிவிக்கவே உயிர் சார்ந்ததின்று ஒரு பொருளைப்பற்றியும். மாயையும் வினையுங்கூடுவதன்முன் சுத்த அறிவாயிருப்பதென்ற உயிர் ஏன் இறையைக்கூடி இன்புறவில்லை. நீரும் நீரும் கூடும்உவமை குடாகாயமும் மகாஆகாயமுங் கூடுவதுபோலுமென்ற மாயாவாதியின் கருத்துடையது. நீயும் மாயாவாதியாவாய் ஆதலால், அக்கருத்தை விடுத்து உண்மைதெளிக.

## பாடாணவாதி சங்கற்பம்.

உயிர்களின் மூலமலமாகிய ஆணவ மலத்தைப் போக்குவதற்கு மாயை அவற்றைப் பொருந்தும். உயிரின் வினைக்கேற்றபடி உடம்பை இறைவன் உயிர்க்குக் கொடுப்பன். உடம்பைப் பொருந்தி உயிர்கள் இருவினைப்பயன்களை அனுபவிக்கும். அனுபவிக்குமிடத்து ஆணவமல மறைப்பால் உயிர்கள் துன்புறும். கண் பார்வையைக் காசநோய் மறைத்தாற்போல ஆணவம் உயிரறிவினை மறைக்கும். அதனாற் பிறவித்துன்பம் மேன்மேலுளதாகும். அத் துன்பம் நீங்கித் தூக்கத்தில் மக்கள் துயரற்றுக் கிடப்பதுபோல, உயிரானது சுட்டிக்காணும் அறிவு யாதுமில்லாமல் இன்ப துன்ப நுகர்ச்சியில்லாது கிடக்கும் நிலையே முத்தியாகும்.

### மறுப்பு.

பாடாணவாதியே, நீ கூறுமுத்தி ஆணவ மலத்தோடு கிடக்குங் கேவல நிலை போல்வது. ஐம்பொறி முதலிய கருவிகள் உயிரறிவுக்கு விளக்கந் தருவதால், உயிர்கள் கருவிகளோடு கூடியபோது ஆணவமல மறைப்பு எவ்வாறுளதாமென்று, நீ விளக்கவில்லை. கருவிகள் நீங்கியபோது உண்டாகும் துன்பமும் நல்லதென்னலாம். கண்ணிற் படலத்தை மருந்தினால் நீக்கியகாலை, சுகம் உண்டாகலின் என்க. கருவிகளை மீட்டுங் கூடிய காலை உண்டாகும் இன்பம் அதுபோல்வது. காட்சியில்லா நிலையும், இன்பதுன்பங்களில்லா நிலையும் முத்தி நிலையாம் என்னில், மரணமடைந்தோரும் கருவையடைந்தோரும் மரமாக நிற்கப்பெற்றோரும், முத்தியடைந்தவராதல் வேண்டும். அத்தகைய முத்தி பெறுவிப்பதற்கு ஆசிரியன் வேண்டியதில்லை. ஆணவத்தோடு கூடிய கேவல

நிலையில் அறிவு விளங்கப்பெறாத துயரம் உள்ளதாகும். அது போலக் கல்லுப்போலக் கிடக்கும் நிலையிலும் அத் துன்பம் உண்டென்றறிக.

---

## பேதவாதி சங்கற்பம்.

---

செம்பின் களிம்பு இரத குளிகையினால் நீங்கிப் பொன் தன்மை ஏற்பட்டாற்போல, தம்மைப் பற்றிய பாசங்கள் இறையருளால் நீங்கப்பெற்று, உயிர்கள் அழியாத, தூய முத்திநிலையை யடைவர். உயிர் பெறுவானும் முத்தி பேறுமாக இருக்கும்.

### மறுப்பு.

எல்லா நூல்களும் பதி, பசு, பாசம் அழிவில்லாதன வென்று கூறிய உண்மையை மறந்து, பாச நீக்கம் செம்பிற் களிம்பு நீங்குவது போல்வதென்று கூறுவது, சுருதிக்கு மாறுகும். இரத குளிகையாற் செம்பு தன்னிலே கெடுமிடத்தே செம்பு அழிந்து பொன் தன்மை புதிதாக ஏற்படுமாயின் பசு என்னுந் தன்மை கெட்டுப் புதியதொரு தன்மை உண்டாகவேண்டும். அது உனக்கும் உடன்பாடன்று. செம்பு குளிகையும் ஆகாமல், தன்றன்மை கெட்டுப் பொன்னுந் தன்மை போல, பசுவுந் தன்னைச் சுத்தமாக்கிய சிவ சொரூபம் ஆகாமல் தன்றன்மைகெட்டு வேறொரு தன்மையடைய வேண்டும். உண்மை அவ்வாறின்மையின், உன் கொள்கை பொருந்தாது.

---

## சிவசமவாதி சங்கற்பம்.

பதி, பசு, பாசம், என்ற மூன்றிற்கும் பதிஞானம், பசுஞானம், பாசஞானம், என்ற மூவகையறிவு எக்காலத்தும் உண்டு. பாசஞானம் ஐம்பொறிகளின் அறிவு. அது உயிர்க்குப் பொருள்களை அறிவிக்கும். பசுஞானம் அவ்வறிவுகொண்டு பொருள்களை நுகரும். பாசஞானமும் பதிஞானமும் கூடாத போது, கொழுந்துவிட்டெரியாமல் அனலாய்க்கிடக்குந் தீயைப்போலப் பசுஞானம் ஒன்றையும் அறியாதுகிடக்கும். உயிர்கள் பாசத்தோடுகூடிக் கலப்புநிலையும் அது கூடாத கேவல நிலையையும்பெற்று நடக்குமிடத்துப் பக்குவம் வந்த போது, வண்டானது பச்சைப்புழுவைக் கவர்ந்தாற்போலப் பதி ஞானம் உயிரைக்கவர்ந்து கொள்ளும். அப்புழு வண்டை நினைந்து அதன் வடிவமடைந்தாற்போல, பசுவும் பதியை நினைந்து பதிவடிவடைந்து, முற்றறிவுற்று வண்டுவடிவடைந்த புழு வண்டின் தொழிலைச்செய்தாற்போல, இறைவனைப்போல ஐந்தொழில் செய்யவல்லதாம். அத்தகைய முத்தர்ன்மாக்கள் கூட்டத்தில் முத்திபெற்ற உயிர் நிலைபெறும்.

## மறுப்பு.

மூவகை ஞானமுங் கூடியே ஒன்றை உயிர் அறிய வேண்டுமாயின், கண் ஒன்றைப் பார்க்க வேண்டுமிடத்துச் சூரியனும் சந்திரனும் விளக்கும் ஆகிய மூன்றும் வேண்டுவனவாகும். உண்மையில் அவற்றுள் ஏதாவது ஒன்றே பொருள்களைக் கண்ணுக்குக் காட்டுகின்றது. மூவகை ஞானமுஞ்சேர்ந்து ஒன்றை யறியுமென்பதற்குவமை யாதுமில்லை. ஒவ்வொன்றும் தனித்தனிப் பொருள்களை அறியும் என்னில், உயிர்க்கு வேறாகவே சடப்பொருள்கள் இருப்பதால், உயிர்

அவற்றைக் கருவிகளின் உதவியின்றித் தானாக அறியமாட்டாது. ஐம்பொறிகள் சடமாகையால், அவை எதனையுந்தாமாக அறியமாட்டாதனவே. பதிஞானம் பேரறிவாகையால் எதனையுஞ் சுட்டியறிய வேண்டியதில்லை. கருவிகள் நீங்கிய இடத்து, உயிர் செந்தழலை யொத்திருப்பின், தன்னோடுள்ள முதல்வனை அது அந்நிலையில் அறியாதிருப்பதற்குக் காரணம் யாதுமில்லை.

இனி, முத்தியை நாடும் உயிர்க்கு ஒன்றுமறியாமற் கிடந்த பச்சைப் புழுவை உவமை கூறுதலும், ஞானோபதேசஞ் செய்யுங் குருவுக்கு அத்தகைய உரையொன்றும் நிகழ்த்தாத வேட்டுவனை உவமை கூறுதலும் பொருந்துமாறில்லை. வேட்டுவன் எடுப்பதே உபதேசம் என்னில், உபதேசங் காரணமாக உயிர் ஞானம் பெற்றுச் சிவசொரூபம் உற்றாற் போல, வேட்டுவன் எடுத்த காரணத்தால் மயிர்க்குட்டிப்புழு வேட்டுவனைப் போலப் பறவையாய் விட்டதென்று சொல்வாரில்லையே. புழு வண்டாதல் அச்சுமாறிப் பிறத்தற்கு உவமையாகுமன்றி உயிர் முத்தியடைதற்கு அது உவமையாகாது. புழு நினைவாற்றலால் வண்டாயிற்றென்பது சாரூபப் பயன்தரும் யோகத்திற்கு உவமையாயினும் அது ஞானத்திற்கு உவமையாகாது. சிவசொரூபமடைதல் ஞானப் பயனென்று என்சொல்லுதல் கூடாதெனில், உயிருஞ் சிவமுமொன்றுபட்டிருப்பது ஞானமாமேயன்றி வேறுபட்டிருத்தல் ஞானநிலையாகாது. நீ சொல்லும் உவமையால் முத்தியில் ஒரு உடம்பு உண்டென்பது பெறப்படும். அப்போது உயிர் சிவத்தோடு கூடாதிருப்பதோடு, புழு உண்டானபின் அதற்கு முன்னுணர்ச்சியில்லாமையால் உயிர்க்கும் அறிவு மாறுபடும் என்பது பெறப்படும். அது ஞானத்திற்கு மாறாகும்.

இனி, இறைவனுக்கியல்பாயுள்ள ஐந்தொழிலை அருள் பெற்ற உயிர் இயற்றுமென்று சொல்லுவது குற்றமென்று பெரிய நுண்ணிய நூல்கள் இயம்புதலின், அவ்வாறு நீ கூறுதல் தகாது. திருநாவலூரர் முதலைபுண்டபாலனை அழைத்தாரென்னில், அவர், இறைவனைப் பிள்ளை தரும்படி வேண்டினரேயன்றித் தானாக யாதுஞ் செய்யாமை அறிக; 'கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே' என்றது காண்க. முதல்வனது தன்மையை அடைந்தவரே ஐந்தொழில் செய்வர்; இரும்பு தீயைப்பொருந்தி அதன் வடிவுற்று அதன் தொழிலையுஞ் செய்வது காண்க என்னில், தண்ணீர் தீயொடு பொருந்தி வெம்மையுற்றாலும், வைக்கோல் முதலியவற்றைத் தீப்போல, வெந்நீர் சுட்டெரியாமைக்குக் காரணம் என்னை? தீ தனித்துநின்றாற் சுடும் என்னில், அது தனித்து நிற்பது எங்கே காணப்படும்? தீ ஒன்றைச் சார்ந்து நில்லாது தன்றொழில் நடத்துவதில்லை. தீயானது இரும்பைப் பற்றி நின்று தன்றொழில் செய்யா நிற்கவும், தீயின் தொழிலை இரும்பின் றொழில் என்பது எவ்வாறு பொருந்தும்?

பேய் ஒருவனைப் பிடித்தபோது பேயின் செயல் பிடிபட்டவன் செயலாமல்லவா என்னில், பிடிபட்டவன் மூலமாகப் பேயின் செயலே நிகழ்தல் போல, சிவம் ஆன்மாவிற் கலந்து செய்யுந் தொழில்கள் சிவத்தின் செயலாமன்றி ஆன்மாவின் செயலாகாதென்றறிக. சிவன் செயல் நிகழ்தற்கு முத்தியுற்ற உயிர் உரியவாயிலாம் என்னில், பேய் நீங்கியபோது, விடுபட்டவன் செய்யுஞ் செயல் பேய்ச் செயலாவதில்லை. ஆதலால் முத்தியுற்ற உயிரின் செயலெல்லாம் சிவன் செயலே யென்பதெவ்வாறு? பேய் பிடித்தபோது,

நிகழும் பேய்ச் செயலைப் பிடியுண்டவன் தன் செயலென் அறிவதில்லையாயின், வைக்கோலினிடத்திற் பற்றிய தீயின் தொழில், தீயினதேயன்றி வைக்கோலினதாவதில்லை. அது போல உயிரிற்கலந்த சிவன் செயலுமாமென அறிக. மேலும், என்றும் பாசபந்தத்துட்படாத இறைவன் செயலைப் பந்தத்தினின்று விடுபட்ட உயிர் எப்போதுஞ் செய்ய வல்லதா?

இனி, முதல்வனைப்போல உயிர்கள் முற்றறிவுடையனவென்னில், உயிர்கள் சிற்றறிவுடையன என நூல்கள் கூறுவது தவறாகும். பேயின் தன்மை பிடிபட்டவனுக்கு உண்டாமென்னில், பேசும் வன்மையும் கண் பார்வையுமில்லாத ஒருவனை அவற்றையுடைய பேய் பிடித்தபோது, அப்பேய் அவனைப் பேசவும் பார்க்கவுஞ் செய்ய வல்லதா? பேய் அவ்வாறு செய்யாவிடில், பேயின் தன்மை முழுவதும் பிடிபட்டவனுக்கு உண்டென்பதெவ்வாறு? நாழியைக் கடலில் எவ்வளவு அமிழ்த்தினாலும் கடல் நீர் முழுவதையும் நாழி முகந்து கொள்ள முடியுமா? ஆதலால் உயிர்க்கு உள்ள அறிவே திருவருளால் விளக்கம் அடைவதன்றி, உயிர் முதல்வனது முற்றறிவைப் பெற்றுவிடும் என்பது பொருந்தாது.

இனி, உயிர் முத்தி நிலையிற் சிவனோடு ஒன்றுவதில்லாமல் உடலோடு சீவன் முத்தி மாத்திரம் உடையதென்னில், அது சிவத்திற்கு ஒத்த நிலையாவதில்லையே. அடியார் கூட்டத்திருத்தல் சாலோகமோ, சாயுச்சியமோ? அது சாயுச்சியம் என்பையாயின், பந்தம் நீங்கிய உயிர் சிவத்தோடு நீங்காதிருப்பது சாயுச்சியமாதலின், அவ்வாறு அறிவுக்கறிவாய சிவத்தோடு உயிர் கலவாமல், முத்திபெற்ற பெரியாரோடிருப்பதற்கு உடலினை உயிர் அவாவி நிற்கும். உடலோடிருத்தல் சீவன் முத்தி; உடலின் நீங்கிய நிலையே மேலான பரமுத்தி

யென்று நூல்கள் கூறவும், நீ சிவன் முத்தியே மேலான முத்தியென்றல் எப்படிப் பொருந்தும்? முத்திபெற்ற உயிர்களின் உடல் சுத்தமாயா சம்பந்தமுடையது, மயக்கந்தரும் அசுத்த மாயா சம்பந்தமுடையதன்றெனில், நீ சொல்வது வேப்பமரத்தின் அடிக்கட்டை கசக்கும்; அதன் கொம்பு நுனித்தளிர் கசப்பதில்லையென்று கூறுவது போலும். முத்தர் தாம் விரும்பிய உடம்பை எடுத்துக் கொள்ளுவர் எனில், அவ்வுடம்பெடுத்தற்கேதுவாய மலமாயா கன்மங்கள் முத்தரை விட்டு ஒருக்காலும் நீங்குவதில்லையென்பது கருத்தாகும். நீ சொல்லு முத்தி பதமுத்தியே, பரமுத்தியாகாது என்றறிக.

---

## சிவசங்கிராந்த வாதம்.

உயிரானது நீங்காத ஒளியுடைய விளக்குப்போல உள்ளது. அதற்குச் சுட்டியறியும் அறிவு கிடையாது. இறைவன் தனக்கென ஒன்றையும் அறியவேண்டிய காரணம் இல்லை. காந்தம் விகாரமில்லாது நிற்க, அதன் முன் இரும்பு தொழிற்படுதல்போல, விகாரமில்லாத உயிர் முன்னிலையில் பிராணவாயு உடலைக் காரியப்படுத்தும். கிணற்றில் நீர் இறைக்கும் பூட்டையின் பலபகுதிகளும் தொழிற்பட்டாற் போல, ஐம்பொறிகள் தமக்குப் புலனாகின்றவற்றை அனுபவிக்கும். அவற்றிற்கு முன்பாகப் புலன்களை அகக்கருவிகள் உணரும். அகக்கருவிகளின் உதவியில்லாமல், ஐம்பொறிகள் புலன்களைப் பொருந்தமாட்டா. பிராணவாயு பிரிந்தால், உடல் தொழிலின்றிக் கிடக்கும். இவ்வாறு உயிர் முன் உடல் தொழிற்படுங் காலத்தில், ஆணவ மலம் நீங்குதற்குரிய பக்குவம் வந்தபோது, கண்ணாடியிற் பிரதி பிம்பந்

தோன்றுவதுபோல், இறைவனதுதிருவருள் உயிரினிடத்திற் பிரதிபலிக்கும். அப்போது விறகினிடத்தில் எழுந்தீயால், விறகு அழிவது போலவும், உப்பளத்திற் போட்ட புல்லும் வைக்கோலும் தந்தன்மை கெட்டொழிவது போலவும், உயிர் தன்தன்மை கெட்டு அருள் வடிவாய் விடும். அதனாற் பசு கரணங்கள் சிவ கரணங்களாக மாறி உயிரறிவு இறையறிவோடு கூடி ஒன்றாய் விடவே, உயிர்க்கு யான் எனது என்ற உணர்ச்சி இல்லையாகும்.

---

## சிவசங்கிராந்தவாத மறுப்பு.

உயிர் விளக்குப்போலொளிர்வதெனின், அதன் கண் அறியாமையேது? அது அறிவிலதெனின், ஒளியென்பதற் கேதுவென்னை?

பிராணவாயுவே (உயிர்க்காலே) உடம்பையியக்குமாயின், துயிலும்போது பிராணவாயு இயங்கியும் உடம்பு இயக்கம் பெறாமைக்குக் காரணமென்னை?

மனம், பொறி, புலன், இவற்றைத் தொடர்பு படுத்திக் காரியப்படுத்த உயிருஞ் சடத்தின்றன்மையை யுடையதாய்ச் செயலற்றுக் காந்தம்போலிருப்பதெனின், அறிவுப் பொருளின் தொடர்பே உடம்பிற்கு வேண்டியதின்றே.

பூட்டையானது அதிற் பூட்டப்பட்ட காளைகளால் தொழிற்படுதலால், நீ கூறும் உவமை செயலற்றிருக்கும் உயிர்க்குப் பொருந்தாது.

ஐம்பொறிகள் புலன்களை நுகருமாயின், ஐந்தும் ஒரே பொழுதிற் றத்தம் புலனை யொருங்கறியாமைக் கேது வென்னை? இலை, மலர், காய், கனியென்பன, ஒரு மரத்திலே

வெவ்வேறுகாலத் துளவாதல்போல, ஐம்பொறிகளும் ஒன் றொன்றாக ஒவ்வொருகாலத் தறியுமென்னில், ஒரு பொறி யறிந்ததன்பயனை மற்றொரு பொறி நுகராமையாலும், ஐம்பொறியுணர்வின் பயனை ஒருங்கு நுகரும் உயிர் வேறுண்மையின், ஐம்பொறிகள் நுகர்ச்சியுடையனவென்பது தவறு. மேலும், இருவருடைய ஓசையை இருகாதிலுங் கேட்டும், ஒருவர் செப்பியதை யறிந்தும் மற்றொருவர் செப்பியதை அறியாதுமிருத்தல் காணப்படுதலின், பொறி யினைச்சார்ந்தறிவது உயிரென்றுய்த்துணர்க.

இவ்வாறே அந்தக் கரணங்களின் றொழிலும் உயிரி னதே யெனத் தெளிக.

கண்ணாடியை உயிர்க்கு உவமைகூறல் பொருந்தாது. கொடுத்ததைக் கொள்ளுந் தன்மை உயிர்க்கில்லை. தீ விறகை எரித்துவிடுதல்போல திருவருள் உயிர்த் தன்மையைத் தொலைத்துவிடுதல் இல்லை. அங்ஙனமாயின் திருவருட்பேற் றிறற் பயனிலதாம். உப்பளத்துப் புல்லும் வைக்கோலும் உப்பின்றன்மை பெறுமேயன்றி ஒழிந்து கெடுவதில்லை. அங் ஙனம் கொடுத்ததைக் கொள்ளுந்தன்மை உயிர்க்கில்லை.

பசுவின் கரணங்களென்பன மாயையிலாய கருவிகள்; அவை திரிபுணர்ச்சி பயப்பன. அவை திருவருளின்றன் மையை எவ்வாறடைதல் கூடும்? சடமாயவுடம்பு தன்னின் வேறுபட்ட இயற்கையுடைய திருவருளின் றன்மையைப் பொருந்தாது. அருளுருவம், மாயா இருளுருவமாகாது. பொறிகளினுதவியின்றி உயிர் திருவருளை யறியாதென்பது தவறு. அது எவ்வாறெனில், அது ஞானம் பெற்றார்க்கு விளங்குமன்றிப் பிறர்க்கு விளங்காது. அது ஒருவனு

மொருத்திப்புங்கூடி நுகர்ந்த இன்பத்தை அலியாயுள்ளா ரறியாமைபோலுமென்க. "ஐம்புலன்காணவாராய்," "கரணங்களெல்லாங்கடந்து நின்ற கறைமிடற்றன்," "ஐயறிவின் அப்புறத்தானும்" என்ற திருவாக்குக்களின் பொருளை உற்று நோக்குக.

பசுகரணங்கள், சிவகரணங்களாக மாறினும், கரணங்கள் கொண்டறியப்படுவன மாயையின் காரியங்களை யன்றித் திருவருளாகாது.

அருளும் உயிருமாகிய இருவேறுமுதல் ஒரு முதலாயினன்றி அறிவு ஒன்றுகாது. அங்ஙனம் இருமுதல் ஒருமுதலாதல் சற்காரியவாதத்திற்கிழுக்காம்.

---

## ௧௯ அவிகாரவாதம்

பல துளைகளையுடைய குடத்துள் இருக்கும் விளக்குப்போல ஒன்பது வாயில்களுடைய உடம்பில் உயிர் அறிவாய் இலங்கும். ஐம்பொறிகளுள் ஒன்றறிந்ததை மற்றொன்றறியாமையின், அவ்வைம்பொறிகளைக் கலந்தே உயிர் விடயங்களை நுகரும். உயிரானது பொறியின் வாயிலாகவே ஒன்றை அறிந்து நுகரும்.

மலபரிபாகம் வந்தபோது, இருள் வீட்டிலுள்ள ஒரு பொருளை எடுத்தற்கு விளக்கினை முன்னர்க்கொண்டுபோவது போல, இறைவனது ஞானமாகிய விளக்கை அவனருளாற் பெற்று, நீர்போலவும் நிழல்போலவும் பொதுநிலையில் ஒருவன்பாலுஞ் சார்வின்றி நிற்கும் பரம்பொருளைத் தன்னையடைந்தார்க் கின்பங்கள்தருந் தலைவனை, வெயிலிற் சென்றோர் மரநிழலை அடைந்திருத்தல்போல, அடைந்து உயிர்கள் பேரின்பமெய்தும்.

## மறுப்பு

உயிரானது அறிவாய்த் திகழ்தற் பொருள்களை யறியப் பொறிகளினுதவி யெற்றிற்கு? அறிவுதானே விளங்கப்பெற்ற உயிர், பொறிகளினுதவியாற் பொருள்களை யறியுமென்பது, கண்தெரிபவன் கையாற்றடவிப் பொருள்களின் றன்மையறிந்து அவற்றின் பலபெயர்களைச் சொன்னானென்பதனோடொக்கும். புலனுக்கேற்ற பொறிகளைச் செலுத்தித் புணர்த்துப் பொருள்களை யறிதலின், ஆன்மா அறி[வு] திகழப்பெற்றதே யெனில், அதுகாரணமாக உயிரை அறிவு விளக்கமுடையதாகக் கூறுதல் தவறு. அது ஏதாவது ஒரு பொறியைக்கொண்டே வேண்டிய புலனை நுகரவேண்டும்.

காதினால் ஒலியை யறிதல் உலகத்திற் காணப்படுவதே யொழியக் காதினால் ஒருபொருளைக் காண்பார் யாருமில்லை யெனில், அறிவாய் விளங்கும் முதல்வன்மாட்டு அது திகழும். இறைவன் மன்மதனை யெரித்த காலத்தே, வைக்கோலை அவன் மீதிட்டுத் தீக்கொளுவவில்லை. கண்ணாற் பார்த்த மாத்திரத்தே அவன் எரிந்தொழிந்தான். நான்முகன் றலையை அரனார் வாள்கொண்டு வெட்டவில்லை.

இறைவனியல்பு அவ்வாறாயினும், உயிரினியல்பு அவ்வாறாகாமையின், உயிரும் இறைவனதருள் கொண்டே அருஞ்செயல் ஆற்றவல்லது. திருஞான சம்பந்தப்பெருமான் திருப்பதிகங்களை எழுதிய சம்பந்தசரணாலயர், திருப்பதிகப் பாட்டொன்றெழுதிய குறிப்பினை வீசிப் புத்தன் தலையை உருள்வித்தமைகாண்க. அதுபோல உயிர் ஒன்றை யறிவதுந் திருவருட்டுணைகொண்டே யென அறிக. பொறிகளின் துணைகொண்டறியுமறிவு, அவற்றின் எல்லையுட்பட்ட

தாகலின், குற்றமற்ற அகண்ட அறிவு திருவருளாலன்றி உயிர்க்கு அமைதலில்லை.

இருளில் விளக்கினைப்பயன் படுத்துவதுபோல, இறைவனது ஞானவொளி கொண்டு, உயிர்தானே உண்மையுணருமென்பது பொருந்தாது. கருவிகள் அறிவிலாதன; அவை யொழிந்த உயிர் துரிய நிலையில் நிற்பது. ஆதலின் அத்தகைய உயிர் முதல்வனது ஞானத்தைத்தானே யறிந்து பயன்படுத்துமென்றாய். அது குருடர் பலர்கூடிக்கதிரவனொளி கொண்டு பெருவழியிற் சென்றார்களென்பதனோடொக்கும். நீரையும் நிழலையும்போல இறைவன் இருப்பானென்னில், அறிவில் பொருள்களாய அவைபோல, இறைவன் வலிதில் நம்மையாட்கொள்ளாது தானிருந்தவா றிருப்பனென்பது போதரும். அங்ஙனம் அவனிருந்தால் நாம் உய்தல் அரிது; ஆதலால் நீ கூறுவது தவறு.

---

## சுத்தசைவமென்ற சைவவாதம்

சகலநிலையில் அறிவாயறியுமுயிர், கேவல நிலையில் அறிவற்றுக்கிடக்கும் ஆணவ மலத்தோடுள்ளது. இறைவன் கலை முதலிய கருவிகளைக் கண்ணுக்குக்காட்டாய விளக்குப்போல்; உயிர்க்குக்கூட்டுவன். அவைகளைப் பொருந்தி, உயிர் இருவினைப்பயனை நுகருங்கால், வரும் பிறவிக்கு வினையைத்தேடிக் கொள்ளும். பலபிறவிகளெடுத்து அலமருங்கால், மலபரிபாகமும் அருள் வீழ்ச்சியு முறும். அப்போது அருள்வடிவாய முதல்வன் தோன்றி உயிர் செல்லுநெறிக்கேற்றவாறு, சரியை, கிரியை, யோகங்களில் நிறுத்தி, அவைமுற்றித் தனி நிலையுங் கலப்பு நிலையும் நீங்கவே, நீங்காத உயர் ஞானத்தை நல்குவன். அப்போது தன்னையுந் தலைவனையும் அறிவையுந்

சுட்டியறியாது, உயிர் சிவத்தோடு கூடி ஒருமுதலாகி விருப்பும் வெறுப்பும் அற்ற நிலையே முடிந்தகதியா மென்பது.

---

## சுத்தசைவ மறுப்பு

அநாதியே உயிர் அறிவாயின் பொறிபுலனில்லா விடத்து உயிர் அறிதல்கூடுமா? அறிதல் கூடாதாயின், உயிரினியல்புயாது? பொறி முதலிய கருவிகளோடு கூடிய போதறிந்தும், கூடாதபோது அறிவற்று மிருப்பது உயிரி யல்பென்னின், பொறிகளின் புணர்ப்பாலறிவும் அஃதின்மை யாலறியாமையுங் கூறின், அறிவு தோன்றியழியும், மீண்டுந் தோன்றுமென்னுங் கணபங்கவாதம் உன்கொள்கையாமா?

அல்லது முன்னொடு பின்மலைவுறும் இருகருத்துக்களை நீ கூறியவனுவை. ஆணவமலம் இருள்போன்றது, இறைவன் பேரொளிமயன். உயிர் கருவிகளாலறிவது மயக்கவறிவு. அம் மயக்க அறிவு உயிர்க்கு நல்லறிவாக எவ்வாறிசையும்?

இனி, நீ கூறு முத்தியையாய்வாம். சத்திநிபாதமாய அருள் வீழ்ச்சி முந்தியதோ? மலபரிபாக முந்தியதோ? எது காரணம்? எது காரியம்? மலபரிபாகம், அருள்வீழ்ச்சிக்குக் காரணமென்னில், அம்மலபரிபாகம் வருவது எண்ணிறந்த உடம்புகளெடுத்து வருங்கால் இன்ன உடம்பு எடுத்த காலத்தில் வருமென்ற நியதிப்படியா? நல்வினை தீவினை துலை யொத்து நின்ற போதிலோ? உயிர்க்குப் பிறவித் துயர் தோன்றியபொழுதிலோ, இறைவன் அருள் புரியக் கருதிய வெல்லையிலோ? எப்போதெனக் கூறுக. இருவினையொப்பு ஏற்பட்டவிடத்து, மலபரிபாகம் வருமென்னில், இருவினை

யொத்தலாவதுயாது? அருவாய வினைகளை துலையினிருதட்டில் உலகப் பொருள்களை நிறுத்தல்போல, நிறுக்க முடியுமா? புண்ணியம், புண்ணியமாயும், பாவம், பாவமாயுமிருத்தலால், ஒரு செயலே இரு தன்மையுடையதாகாது. இருவினை யொப்பு யாதெனத் தெளிவாகக் கூறுக. இறைவன் அருள் வடிவமுடையானென்னில், அழியாத் திருமேனியுடையவன், மாயையினுய உடம்பினைப் பொருந்தான். உயிர்களைக் காக்கப் பொருந்துவானென்னில், உயிர்க்குழாத்தில் ஒருவனுக இறை வன் கருதப்படுவன்.

சரியை, கிரியை, யோகமென்பவற்றின் பயனுக ஞானம் உளதாமெனின், அவற்றாற் பதமுத்திகள் மூன்றுங் கிட்டு மென, அருள்நூல்கள் கூறும். தேவார முதல்வர் மூவரும், சரியை, கிரியை, யோகங்களில் நில்லாமே, ஞானம் பெற்றதற் கேது இறைவனேயன்றி அந் நெறிகள் காரணமாகாமை தெளிவு. ஞானம் உண்டாவதற்கு நிமித்தமாமன்றி, அவை கள் முதற் காரணமாகா.

கருவியும் மலமும் நீங்கவே, அருளொளி யுளதாமென் றனை. மலத்தொடு கூடிய கேவல நிலையில் அருளொளி யுண்டாகாது. கருவிகளொடு கலப்புற்ற நிலையிலும் அது உண்டாகாதெனின், பின் எப்போது உயிர்க்கு இறையொளி யுளதாம்? தெளிவாக உயிரின் அனுபவத்தில் உடல், கரணம், உலகம், நுகர் பொருளாகிய இவற்றையறியும் அறிவேயுள ளது. இவ்வறிவு நீங்க மேல்வரு மறிவியாது? அதுவும் இவற்றைக்காணு மறிவாயிருப்பின், வீடு சேர்ப்பிக்கும் ஞானத்திற்கும், மாயையினுய பொருளையறியும் ஞானத் திற்கும் வேறுபாடென்னை? இறை, உயிர், இறைஞான மென்ற மூன்றுங் கூடுமென்றனை. இறை, இறையறிவு

உயிர், உயிரறிவு, பாசம், பாச அறிவு எனப் பொருள் ஆறும். இவற்றுள் பாசம் நீங்கியது கூறினாய். உயிரறிவும், பாச அறிவும், எவ்வாறொழிந்தனவென்று நீ கூறவில்லை.

உயிரு முதல்வனும், முத்தியில் ஒரு முதலாமென்பது கொண்மவாதச் சார்புடைய கொள்கை. மேற்கூறிய ஆறு பொருள்களுள், பாசமும், பாசஞானமு மொழிந்தவிடத்துப் பொருள் நான்காம். பசுஞான மொழிய, நீ கூறிய மூன்றும் உள்ளன. பின்னர், பசு, பதியென இரண்டே நின்று, அந்தி விரக்கலப்பால் ஒருமைப்பட்ட தன்மையே, திருவாசகத்துள் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்' என்ற திருப்பாட்டிற்குறிக்கப்பட்டது.

சிவனும் சிவமுமொன்றாய வீடத்தே, உவப்பில்லையென்னில், இன்பம் பெறுவானில்லையென்பதே முடிவாம். அதனாற் போந்த பயன் யாது?

பின், வீட்டில் உயிருஞ் சிவமும் எவ்வாறிருப்பவென்னில், அதுவும் பிறவும், அறிய விரும்பின், சிவப்பிரகாசத்தினைத் திருவருளால் ஆய்ந்தறிக.

## நிமித்தகாரண பரிணாமவாதம்.

உலகம் யாவும் சிவவடிவமுஞ் சத்திவடிவமுமாமென்றறிக. (சிவம் அருவம், சத்தி உருவம்.) உலகத்திலே ஒன்றையுஞ் சடமென்று கூறுதற்கிடமில்லை. அறிவுடைப் பொருளும் அறிவில் பொருளும், அறிவுடைய உயிரின் நுகர்ச்சிக் கண் ஒரு தன்மையனவாயுள்ளன. இது வென்று சுட்டப்பட்ட தொன்றை நுகருங்கால், அறிவு அப்பொருளேயாய் நிற்றலின் ஆண்டு அறிவென்றும், அறிவிலாப் பொருள் என்றும் பகுக்கப்படுமாறில்லை. பொன்னுக்கும் பணிக்கும்

வேறுபாடுருத்தல்போல அறிவிற்கும் உலகிற்கும் வேற்றுமை ஒருவழியாகக் கூறுதலுண்டு. மாற்றின் தன்மை பொன்னுக்கும் பணிக்குமொன்றாதல்போல, இரண்டிற்கும் உண்மையில் ஒருதன்மையே யுண்டு. ஒன்று காரியப்பட்டது. மற்றொன்று காரியப்படாதது.

ஒன்றாகும், இன்னொன்று ஆகாது என்ற நினைவு உண்மை யுணராதோர்க்கே உளதாம்.

உண்மை தெரியாதோர் என்றமையால் உயிர்கள் பல வென்பது தோன்றுமாயினும், ஆராயுமிடத்து, அவை சிவமுதலின் வேறல்ல. பலவாகத்தோன்றும் வேற்றுமை நிலை உண்மையிலில்லை.

கண்ணிெனாளியைக் கண்ணிற்குரிய தென்று செப்பின், நிறைந்த இருளிலுள்ள பொருளினை இன்னதென்று கண் காட்ட வல்லதன்று. மின்மினியைப்போலு மென்று கண்ணைக் கூறமுடியாது. ஆதலாற் கண்ணின் வடிவும், அதிற்படுங் கதிரவனொளியும் சிவம்,சத்தி என்பாருடைய நாடகமே.

"தானொருவனுமே பலவாகி நின்றவா" "ஊனாகியுயிராகி அதனுள் நின்ற உணர்வாகிப் பிறவனைத்தும் நீயே யானாய்" "கண்ணே கண்ணிற் கருமணியே" "தாமே தாமாகச் செய்புமவன்", "நாமொழிந்து சிவமானவா," "காணரியபழமாகிப் பழத்துள் நின்ற விரதங்கள் நுகர்வானுந்தானேயாகி" "அறிவானுந்தானே அறிவிப்பான்றானே," "தாய் தலைப்பட்டங் குருகியொன்றாய்", "நான் கெட்ட", என்றின்ன திருவாக்குகள் பலவா மாதலின், கொடுக்கும் பொருள், கொள்ளும் பொருள், கொடுப்போன், கொள்வோன், ஆயஎல்லாம் ஒரு பொருளினியல்பென உணர்க. பொருள்களும் அவற்றை

நுகர்பவனும், சத்தி, சிவமென்னும் உணர்ச்சி கைவருதல் எளிதன்று. நான் உயிர் அவன் கடவுளென்னும் அறிவு இரட்டுற்ற பாவனை உண்டாக்குவதாற் குற்றமுடைத்து, தான் என்ற ஒரு முதல்அறச் சிவமாதல்சாயுச்சிய முடிவு.

அந்நிலையடையுமுன், முத்திக்கு வழியெனத் தானறிந்த ஒருவழியில் நின்று உடம்பையும் உயிரையும் கனவிலு நனவிலும் சிவத்தினிடத் தொருங்குவித்து ஒழுகுங்கால், கருவிகளின் ஏற்றத்தாழ்விற் கேற்றவாறு நனவு, கனவு, சுழுத்தி, துரியம் என்ற அவத்தைகளை உயிர் பொருந்தி நிற்கும். கருவிகளெல்லாம் கழன்றநிலை துரியாதீதம்.

ஆணவமலம் நீக்கமுறுங்கால், துரியாதீத நிலையிலுள்ள உயிர்க்குத்திருவருள் கருவிகளைக் கூட்டியபோது உயிரானது ஆணவம் நீங்கிக் கருவிகளோடுங்கூடி அறிவாய் நிற்கும். கருவி முப்பத்தாறோடுங்கூடிய நனவிலே அதீதத்தில் நிலை பெற்று நிற்பதே, சிவசத்தியாய சுத்தநிலையாம்.

நிராகரணம்.

உலகம்யாவுஞ் சிவமுஞ் சத்தியுமென்னில், முதல்வனே உலகிற்கு முதற்காரணமாக வேண்டும்.

அவனே நிமித்தகாரண மென்றுங் கூறுவாய், அவன தாற்றலே துணைக்காரண மெனின், இறைவன் ஒருவனே முதற்காரணமும் நிமித்தகாரணமும் துணைக்காரணமுமென நீ கூறின், அங்ஙனம் ஒரு பொருளே முக்காரணமுமாயிருப்பதை எங்கேயாவது கண்டதுண்டா?

இனி, முதல்வன் இயற்றும் ஐந்தொழில் தன் பொருட்டோ, பிறர்பொருட்டோ? வினைகவோ? என்ற வினாவிற்கு விடையாது பகர்வாய்? வினையின், முதல்வன் தலைமைக்கும்

முற்றறிவுக்கும், ஐந்தொழில் இழுக்காமல்லவா? ஒப்பற்ற அறிவுந் தலைமையுமுடைய முதல்வன், மின்போலத் தோன்றி மறையும் உலகவாழ்க்கையைத் தம்பொருட்டுச் செய்தா னென்றல் பழுது.

பிறர் பொருட்டு ஐந்தொழிலியற்றப் படுமென்னில், தனக்கு வேறாகப் பிறரும் அவர்க்கு வேண்டிய பொருளும் அப்பொருட்குரிய கருவியும், அக்கருவிக்கு முதற்காரணமும் செயற்பாடுமென ஐவகை கூறின், நீ சிவமே யாவுமென்ற கொள்கை எந்நிலை யடையும்?

இனி சித்தாகிய சிவம், அசித்தாகிய உலகத்தைத் தன்னிடத்தினின்றுந் தோற்றுவியாது. உலகமுஞ் சித்தே யென்னில், உலகில் அசித்து என்பதுதான் யாது? சித்தா யின், உலகிற்கு நிலையாமையில்லை யென்பதாம். உலகாய தரும், பூதக் கூட்டமானது நீர்க்குமிழி போல நிலையில்லாத தென்பர். நீ அத்துணை நிலையாமையுள்ள உலகத்தை நிலையாய தன்மையுடைய சித்தென்பாய். நீ கூறுவது உண்மை யன்று.

இனி, சீனர்; சாவகர் முதலியபிற மதத்தினரும், உடம்பில் ஓரறிவுண்டென்பர். அதனால் உயிருண்டென்பது போதரும். நீ உயிரின்றென்பதால், அவரினுமிழிந்த ஆராய்ச்சி யுடையாய். நீ கூறுவது காட்சிமுரண்.

நீ கூறுவதற்குச்சான்று பகர்வார் யாருளர்? சித்தின் சார்பால், உடம்புஞ்சித்தே யென்னில், சித்தாய சிவம் எங்கும் நிறைந்திருப்பவும், குடம், துணி முதலியனவும் உடம்பு போல்த்திரிந்தலைவதின்றி வைத்த இடத்திற் கிடப்பதேன்? உயிர், இயங்கியற்பொருளிற் செறிந்திருப்பது போல, நிலை

யியற் பொருளிற் செறியாமை ஏன்? சிவமும் உடம்பிற் செறிந்திருப்பதுபோல, குடம் படம் முதலியவைகளிற் செறிந்திருப்பதில்லையெனில், உயிருடையுடம்புக்கும், பிறவற்றிற்கும் வேற்றுமை கூறி உயிருண்மையை நீ ஒப்பினவனவை. அன்று, உவமைகூறின், உண்மை அஃதென முடிவுகட்டுதல் தவறும் எனின் உவமானமும் உவமேயமும் ஒருபொருளா யிருக்குமாயின் கொன்றை பொன்னைப்போலுமென்பார் இலராவர். பதியாகிய பரம்பொருள்எங்குநிறைந்து நிற்குங்கால், மக்கள் உடம்பின் கண், அது மர முதலியவற்றினும் அதிகமாகப்பற்றி நிற்பதற்கேது வென்னை? பூதக் கூட்டுறவின் பேதம் அதற்குக் காரணமெனின், அப்பேதத்திற்கேது வென்னையெனின், அதற்கு ஏது வினையெனில், வினையியற்றுவார் யார்? முதல்வனோ? முதல்வனெனின் அது பித்தர் கூற்றுமன்றோ? வினைசெய்வோன் கடவுளல்லன். உடல் சடமாகையால், வினையை வளர்க்கவும் வினைப்பயனை நுகரவுங்கூடாது. உடலில் நின்றுவினைப்பயனுகர்தலும் அவத்தை யுறுதலும் கடவுளுக்கியையாமையான் காணப்படும். பொருளிற்குங் கதிரவனுக்கும் வேறாகக் கண்ணிருத்தல் போலப் பலகருவிகளினுதவி கொண்டு பொருள்களை யறியும் உயிர் உண்டென அறிக.

இதுவென்ற ஒன்றற அதுவாய் நின்றறிதற் கேதுவாயது மாயையினியல்பு.

---

இறைநிலை அருவமு முருவமுமா மெனப்பெரியோர் கூறுதலின், உலகில் அருவமெல்லாம் சிவம், உருவமெல்லாம் சத்தியென்னில், இரண்டுமே மாயையின் காரியமேயெனத் தெளிகின்றாயில்லை. உலகிற்கு முதற்காரணம் மாயை யாதலின், உலகிலுள்ள அருவப்பொருள்களும் உருவப்பொருள்

களும் மாஞ்ய நின்றெழுந்தனவே. அருவமாய வடிவும் உருவமாயவடிவும், மாயாகாரியமே ஆகும். எதுவும் ஆகாதென்பதில்லை யென்ற கொள்கை உலகாயதனுடையது. அது ஞானிகளுக்கு ஆமெனில் கள், கொலை, களவு, வெகுளி, காமம், என்னுமிவற்றைத் தவிர வேண்டும் என்றுதாரிலர். ஆயின் ஞானிகளுக்கு இவற்றாற் குற்றம் ஏறாது என்னில், சோமபானம், சுராபானம், முதலிய செய்யலாமென்று எந்த நன்னூல் கூறுகின்றது? மறையோன் புலைச்சியை மருவலாமென்று சொல்லுவார் யார்? இவையெல்லாஞ்செயற்கைக் கட்டளையாமெனில் சாதிநீதி கொள்ளாவிடினும், இயற்கை விதிகளுள்ளனவே. எருமையைக்காளை விரும்பாது, பசுவையே அது விரும்பும். ஆதலால், ஞானிகளுக்குச் செயற்கைக்கட்டளையிலவாயினும் இயற்கையாகத் தீயவற்றை உள்ளம் நாடாதென்றறிக. அவர்களெல்லாஞ் செய்யலாமென்பது கருத்தன்று.

கண்ணினுருவும் கதிரொளியும் சிவன்சத்தி நாடகமென்னில், அதற்குக்காரணமும் பயனுங்கூறவேண்டும். நீ கூறுவது நான்மறைக்கும் உலகியலுக்கு மாறும். அறம், மறம், நன்மை, தீமை என்பதெல்லாம் பொய்யாம். சிவத்தின்வேறாக உயிரில்லையாயின், அவற்றாற் பயன்யாதுமில்லை

“ தானொருவனுமே பலவாகி ” என்றவிடத்து, ஆகியென்பது “ஆக்கி” என்றபொருளுடைத்தாதல் கூடும். அல்லது இறைவனது இரண்டறக்கலந்த நிலை கூறியவாறும். குயவன், குடம், சால்முதலிய எல்லாம் ஆயினனென்றாற் பொருள்யாது? குயவன் அவையாகான். அவை குயவனுகா. இரண்டறக்கலந்த நிலை கூறுமிடத்து, வேற்றுமையுந்தெரித்தவாறுகாண்க. வானைப், மண்ணைப், என்றவிடத்து, வானும், மண்ணும், வேறிருத்தலானே, அவற்றோடு கலப்

புக்கூறப்பட்டது. அவைதானே முதல்வனென்னிற் 'கலப்பினைப்பற்றிப் பேசவேண்டியதில்லை. உலகெலாம் இறைவன் திருமேனி யென்ற கருத்துங்காண்க, முதல்வனை யின்றி ஒன்றுமியங்காதென்பது கருத்து. வினைப்பயன் உளவாதலும் அது நுகரப்படுதலும் இறைவனலாதலின், "காயாகிப்பழமாகி" யென்ற சுருதி எழுந்தது. உலகமெல்லாவற்றையுந் தெளிவாக அறிவோனும், அறிதற்குரியார்க்கு அறிவிப்பவனும், அறிஞர்க்கறிவாய் நின்று அறிவானும், ஞானிகளால் அறியப்படும் பொருளாய் நிற்போனும், இறைவன் என்றறிக.

கொடுப்பானுங் கொள்வானு மொருவனேயென்னில்; நரகமென்பது கிடையாது, வேண்டும்போது புசிக்கலாம். நோயை நீக்கிக்கொள்ளலாம். அவ்வாறு உலகத்திற் காணப்படவில்லையே வேண்டியது வருவதில்லை, வேண்டாததை நுகரவேண்டியவிதி ஏற்படுகிறது. நோய்கள் விருப்பப்படி ஒழிவதில்லை. இவற்றால் வருந்துன்பத்தை உடையான்யார்? சிவமன்றெனில், உயிர்தானே அதனையுடையதாம்.

சத்தியுஞ்சிவமுந் தாம் எல்லாம் நுகர்வதென்ற உணர்ச்சி யார்க்குளதாம்? சத்தி சிவங்கட்கே அவ்வுணர்ச்சியுளதா? சத்தி சிவங்கள் உலகத்துன்பத்தை நுகருந்தன்மையுடையன வல்லவே, உலகை அறியுமிடத்துச் சுட்டியறியு மறிவு அவர்கட்கில்லையே.

எல்லாம் ஒன்றெனக்கூறும் நினக்கு நானென்னும் உயிரும், அவனென்னுஞ் சிவமும், நவையென்னுங் குற்றமும், நலன் என்னும் நன்மையும் உயிர்சிவனாகவேண்டுமென்பதும் இல்லை. சிவனொடுகலத்தலைச் சாயுச்சியமென்றல், முப்பொருளுண்மை கொள்ளுவார்க்கே பொருந்தும்

தான் அறிந்த நெறியில்நிற்றல் முத்திக்கேதுவாமெனில், வீடடைதல் அரியதாகாது, உலகாயதனும், சித்தாந்த முத்தியெய்தலாமே.

சுவரின்றிச்சித்திரம் எழுதமுடியாது. கருவிகள்கழன்ற இடத்து உயிர் அறிவைப் பெறுதல்யாங்ஙனம்? கருவி கழன்ற அதீதநிலையில் சிவன்திருஞானம் நல்குமென்றல், இருளிற் கிடக்குங்குருடர்க்குக் கண்ணுடையான் விளக்குக் கொடுத்துதவிய தென்பது போலாம். அங்ஙனம் அறிவை நல்குதற்கு, இறைவன் வகைதெரியாதவனல்லனே.

இனி, கருவிகளைக்கொண்டு அசத்தாய உலகினையறிந்து கொண்டிருப்பதைச் சிவஞானிகள் வேண்ட மாட்டார். அவர்களே அவ்வாறிருப்ப, கருவிகளைக் கொண்டறியுமறிவுஞ்சிவமே யென்றனை. மாயப்பொறிகள் உலகை யறியாவாகலின், அவற்றின் வாயிலாகப்புலனை யறிவது சிவமே யென்று நீகூறியது மாயாவாதிக்கு மொவ்வாது. எல்லாவற்றையுமறியும் பிரமம், கருவிகள்வாயிலாக அறிவதாக மாயாவாதி கூறுவதில்லை. மாயாவாதி பிரமத்தை அறிவென்றும் உலகம் நிலைபற்றதென்றுங் கூறினன். நீ எல்லாம் சித்தேயென்பாய். அவன் கருவிபதினான்கும், அவத்தை மூன்றுங்கூறினன். நீ, சைவனாதலின், இருபத்திரண்டு கருவியும் ஐந்தவத்தையும் மும்மலமும் கடவுளுமுயிருமுள வென்றுகொண்டாய். அவற்றையெல்லாம் விட்டு இப்போது எல்லாம் சிவமாயவொன்றே யென்று கூறுதல் தாயர், தங்கையர், தாதியர், தமக்கையர், ஆய எல்லாரும் விடயப் பார்வையாற் பெண்டிரே யெனக்காணுங் கழிகாமுகரகது கொடுந்தொழிலை யொக்கும். உயிர்க்கறிவில்லை, பொறிவாயி

லாக அறிவானுஞ் சிவனேயெனக்கூறிப் பொறிவழியொழுகலை ஒழுக்கமாகக்கொண்டு, கட்டுநிலையிலும், முத்திநிலையில் எண்மடங்கு அஞ்ஞானமுற்றாய். உன்னைக் குறைகூறாது உனது அறியாமையையே குறைகூற வேண்டும். உனது அறியாமை நீங்க உண்மை கேட்பாயாக.

சங்கற்ப நிராகரணம் முற்றிற்று.

இந் நூலாசிரியர்

திருநெல்வேலி

**கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்** M.A., M.L.,

எழுதிய

# பிற அரிய ஆராய்ச்சி நூல்கள்.

—o—◯—o—

| | | Wrapper. |
|---|---|---|
| திருஞான சம்பந்த சுவாமிகள் சரித்திரம் | | 1 4 0 |
| | கலிக்கோ 1 10 0 | |
| திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திரம் | | 0 14 0 |
| | கலிக்கோ 1 4 0 | |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம் | | 1 2 0 |
| | கலிக்கோ 1 8 0 | |
| மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் | | 0 14 0 |
| | கலிக்கோ 1 4 0 | |
| சேக்கிழார் சுவாமிகள் சரித்திரம் | | 1 0 0 |
| | கலிக்கோ 1 6 0 | |
| சந்தானாசாரியார் சரித்திரம் | | 0 8 0 |
| | கலிக்கோ 1 0 0 | |
| அறிவு விளக்க வாசகம் | | 0 6 0 |
| தாயுமானவர் வரலாறும், நூலாராய்ச்சியும் | | 1 0 0 |
| பட்டினத்தடிகள் ,, ,, | | 1 0 0 |

| | | | |
|---|---|---|---|
| குமரகுருபரர் வரலாறும் நூலாராய்ச்சியும் | 1 | 0 | 0 |
| சிவஞானமுனிவர் ,, ,, | 1 | 0 | 0 |
| மெய்கண்டாரும், சிவஞானபோதமும் | 1 | 0 | 0 |
| தமிழ் இலக்கிய வரலாறு | 2 | 8 | 0 |
| திருவாசகப் பொழிப்புரை (அச்சில்) | 3 | 0 | 0 |
| திருக்குறள் பொழிப்புரை (அச்சில்) | 1 | 4 | 0 |
| இந்து சமயங்களின் சுருக்கவரலாறு | 0 | 3 | 0 |
| சைவ சித்தாந்த விளக்கச்சுருக்கம் | 0 | 1 | 0 |
| சைவ சித்தாந்த உண்மை வரலாறு | 0 | 3 | 0 |
| திருஞான சம்பந்தர் தேவார இயற்கைப் பொருளழகு | 0 | 4 | 0 |
| முருகன் பெருமை | 0 | 3 | 0 |
| சரித மாலை. (செகப்பிரியரின் வரலாறும், நாடகக் கதைகளும் அடங்கியது) | 0 | 4 | 0 |
| இலக்கிய மாலை. சைவச்சடங்கு விளக்கம் | 0 | 4 | 0 |
| இந்தியச்சட்டக் கோவை. (பதிவுகட்டடம், இந்தியத் தண்டனைத் தொகுதி) | 0 | 4 | 0 |
| உலகியல் மாலை. (உடல்நூல், நோய் நீக்கம்) | 0 | 4 | 0 |
| Tamil Blooms (*Nature in Thevaram and Ancient Tamil Scripture*) | 0 | 4 | 0 |
| ஆண்டாள் வரலாறு | 0 | 2 | 0 |
| மணிமாலை முன் தொகுதி | 1 | 0 | 0 |
| மணிமாலை தொகுதி 12 புத்தகங்கள் | 5 | 0 | 0 |

குமரன் அச்சகம், காஞ்சீபுரம்.